# கடைசிகாலச் சம்பவங்கள்

எழுதியவர்

## திருமதி. எலன் ஜி. உவைட்

தமிழாக்கம்

திருமதி. கீதா தேவராஜ்

போதகர். தாஸ் குமார்

திரு. பீட்டர் மோசஸ்

மற்றும் சில சகோதரர்கள்

அருணோதயா அறக்கட்டளை

Chief Editor , typing & type setting : திரு. காலேப்

## நூல் விவரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : கடைசிகாலச் சம்பவங்கள் |
| பதிப்பு விவரம்: முதற் பதிப்பு | : 2011 |
| ஆசிரியர் | : பரிசுத்த ஆவியானவர் |
| எழுதியவர் | : திருமதி. எலன் ஜி. உவைட் |
| நிதியுதவி | : திரு. ஆன்ழ் ஆமோன் |
| வெளியிட்டோர் | : அருணோதயா டிரஸ்ட். |

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

இன்றைய சத்திய முழக்கம்,

தபால் பெட்டி எண்: 29.

கதிர்காமம்,

புதுச்சேரி – 605 009.

தொலைபேசி எண்: 98944 27066, 94432 06903.

# முன்னுரை

**கர்த்தருக்கு கனமும் மகிமையும் உண்டாவதாக!**

கிறிஸ்துவிற்குள் பிரியமான தேவனுடைய ஜனமே,

"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"–ஆமோஸ் 4:12.

கிறிஸ்துவின் சுவிசேஷமாகிய அவரின் இரண்டாம் வருகையானது, பாவத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் மனிதனுக்கு விடுதலையைக் கொடுக்கக் கூடியதாகவும், பாவ இருளில் தடவித்திரியும் மனிதனுக்கு நம்பிக்கை என்ற ஒளியைக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. இந்த உலக சரித்திரத்தின் முடிவு காலத்தின் இறுதியான நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஒரு உச்சக்கட்ட நிகழ்ச்சியாக இருக்கிறது. இவ்வுலகத்தின் துவக்கத்திலிருந்து நன்மைக்கும் தீமைக்கும் மத்தியில் நடந்துவருகின்ற மாபெரும் ஆன்மீக போராட்டம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் முடிவுபெற இருக்கின்றது.

ஆண்டவரது இரண்டாம் வருகைக்கு முன்பாக நடக்க இருக்கின்ற அடையாளங்கள், நிகழ்வுகள் மற்றும் ஆயத்தங்கள் அனைத்தையும் மக்களுக்குமுன்பாக வைக்கும்படி இப்புத்தகத்தை தமிழாக்கம் செய்திருக் கின்றோம். இந்தப் புத்தகத்தில், மாபெரும் ஆன்மீகப் போராட்டம் அதன் வரிசையிலும், அதன் ஒழுங்கிலும் தொகுக்கப்பட்டுள்ளது.

தனக்குக் கொஞ்சகாலம் மாத்திரம் உண்டென்று அறிந்த பிசாசானவன், தேவனுடைய பிரமாணங்களை உயர்த்திப்பிடிக்கும் தேவமக்களுக்கு எதிரான அவனது உபத்திரவம் மற்றும் அக்கிரமத்தின் இரகசியத்தை நிறைவேற்றும்படியாக திரைக்குப்பின்னாக செய்துகொண்டிருக்கிற மறைவான திட்டங்கள் மற்றும் செயல்கள், அதற்குரிய ஆயத்தங்கள்பற்றியும் இப்புத்தகம் கூறுகின்றது.

ஆவிக்குரிய உறக்கத்திலிருக்கும் அட்வெந்து பிள்ளைகளை விழித்தெழச்செய்து ஒரு எழுப்புதலைக் கொடுக்கக்கூடியதாகவும், காலத்தின் அவசியத்தையும், அவசரத்தையும் தீர்க்கதரிசன காலகட்டத்தின் முடிவையும் உணர்த்தக்கூடியவிதத்திலும் இப்புத்தகம் அமைந்திருக்கின்றது.

வரப்போகும் இக்கட்டுக்காலத்தைக்குறித்தும், அதற்குரிய ஆயத்தங்களைக்குறித்தும், மிகப்பயங்கரமான எதிர்கால நிகழ்வுகளைக்குறித்தும் கூறக்கூடிய மூன்று முக்கியமான புத்தகங்களாகிய மாபெரும் ஆன்மீகப் போராட்டம், கடைசிகாலச் சம்பவங்கள், மற்றும் மாரநாதா ஆகியவைகளோடு சேர்த்து, புதிய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷத்தையும், இந்த வருடத்திற்குள்ளாக படித்து முடிக்க முயற்சி செய்யுங்கள். பயத்தைத் தூண்டும் விதத்திலோ, உணர்ச்சியைத் தூண்டும் விதத்திலோ இதைப் படிக்காதிருப்பது நல்லது. மாறாக, உண்மையான பயபக்தியோடு தேவன்மீதுள்ள அன்பை அறிந்துணர்ந்து ஜெபத்தோடு படிப்பது சாலச்சிறந்ததாகும்.

ஏசுவின் அன்பிற்காகவும், நமது வாழ்க்கையை மாற்றும் அவரது உறவை விரும்புவதற்காகவும், வேறெதையும் நம் வாஞ்சையாக வைக்கக் கூடாது.

சவாலைச் சந்திக்க ஆயத்தப்படுங்கள்! கடினமான காலத்தைச் சந்திக்க மிகவும் கடினமாகப் பிரயாசப்படுங்கள்! விடாமுயற்சியோடுகூடிய விசுவாசத்துடன் ஜெயங்கொள்ளுங்கள்!

“நீ ஆயத்தப்படு, உன்னுடனேகூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து”–எசேக்கியேல் 38:7. மாரநாதா!

# பொருளடக்கம்

1 பூமியின் கடைசி நெருக்கடி 1

2 கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகைக்கான அடையாளங்கள் 9

3 "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?" 23

4 தேவனுடைய கடைசிக்கால திருச்சபை 35

5 மீதமானவர்களின் பக்திவாழ்க்கை 55

6 மீதமானவர்களின் வாழ்க்கை முறையும் செயல்பாடுகளும் 67

7 நாட்டுப்புற வாழ்க்கை 87

8 பட்டணங்கள் 103

9 ஞாயிறு ஆசரிப்புச் சட்டங்கள் 117

10 குறுகிய இக்கட்டுக்காலம் 137

11 சாத்தானுடைய கடைசிக்கால வஞ்சகங்கள் 149

12 அசைக்கப்படுதல் 165

13 பின்மாரி 175

14 உரத்த சத்தம் 187

15 தேவனுடைய முத்திரையும் மிருகத்தின் முத்திரையும் 203

16 கிருபையின் கால முடிவு 215

17 கடைசி ஏழு வாதைகளும் துன்மார்க்கரும் 225

18 கடைசி ஏழு வாதைகளும் நீதிமான்களும் 239

19 கிறிஸ்துவின் வருகை 257

20 பரிசுத்தவான்களின் சுதந்தரவீதம் 269

# 1

# பூமியின் கடைசி நெருக்கடி

## எதிர்காலத்தைக் குறித்த உலகளாவிய அச்சம்

உயிரோடிருக்கின்ற அனைவருக்கும் திணறடிக்கக்கூடிய அளவிற்கு கவனத்தைத் தூண்டுகின்ற ஒரு காலமாக நிகழ்காலம் இருக்கின்றது. ஆட்சியாளர்களும், அரசியல் மேதைகளும், நம்பிக்கையும் அதிகாரமுமிக்க பதவிகளை வகிக்கும் மனிதர்களும், அனைத்துத் தரப்பினரான ஆண் மற்றும் பெண் சிந்தனையாளர்களும், நம்மைச் சுற்றிலும் நடந்துகொண் டிருக்கின்ற சம்பவங்களின்மீது, தங்களது கவனத்தைப் பதித்திருக்கின்றனர். நாடுகளுக்கிடையே நிலவி வருகின்ற உறவு நிலைகளை, அவர்கள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றனர். பூமிக்குரிய எல்லா மூலப்பொருள் களை ஆட்கொண்டு வருகின்ற கடுமையான நிலையை அவர்கள் உற்று நோக்குகின்றனர்; ஒரு பிரமிக்கத்தக்க நெருக்கடி நிலையின் விளிம்பில் உலகம் இருக்கின்றது என்றும், ஏதோ ஒரு மாபெரும் முடிவான காரியம் நிகழ இருக்கின்றது என்றும், அவர்கள் அடையாளம் கண்டுகொள்கின்றனர்.—PK 537 (c. 1914).

நிலத்திலும் கடலிலும் ஏற்படுகின்ற பேரழிவுகள், சமுதாயத்தின் ஒழுக்கநிலைகுலைந்த தன்மை, யுத்தம் குறித்த எச்சரிப்புகள் போன்றவை, நிகழவிருக்கின்ற முக்கியமான ஏதோ ஒரு காரியத்திற்கு அடையாளங்களாக இருக்கின்றன. நெருங்கிவந்துகொண்டிருக்கின்ற சம்பவங்களின், மாபெரும் முக்கியத்துவத்தை அவைகள் முன்னறிவிக்கின்றன. தீமையின் ஏதுகரங்கள் தங்கள் வல்லமைகளை ஒன்றிணைத்து பெலப்பட்டு வருகின்றன. கடைசி மாபெரும் நெருக்கடிக்கு, அவைகள் பெலனடைந்து வருகின்றன. நமது உலகில், மாபெரும் மாற்றங்கள் சீக்கிரத்தில் நிகழவிருக்கின்றன. மேலும், இறுதியான நிகழ்வுகள் மிகவும் விரைவான ஒன்றாக இருக்கும்.—9T 11 (1909).

## விரைவில் வரவிருக்கின்ற இக்கட்டான காலங்கள்

முடிவுவரையிலும் அதிகரித்துக்கொண்டே இருக்கப்போகிற இக்கட்டுக் காலம் வெகுசமீபத்தில் இருக்கின்றது. இழப்பதற்கு நமக்கு நேரமில்லை.

யுத்த ஆவியினால் உலகம் தூண்டிவிடப்பட்டிருக்கின்றது. தானியேல் பதினோராவது அதிகாரத்தின் தீர்க்கதரிசனங்கள், ஏறக்குறைய அவற்றின் கடைசி நிறைவேறுதலை அடைந்துவிட்டன.—RH Nov. 24, 1904.

இக்கட்டுக்காலம்—யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் (தானி. 12:1)—நமக்குமுன் இருக்கின்றது. நாமோ, நித்திரைசெய்து கொண்டிருக்கின்ற கன்னிகைகளைப் போல இருக்கிறோம். நித்திரையினின்று விழித்து, கர்த்தராகிய இயேசு தமது நித்திய புயங்களின்கீழ் நம்மை வைத்துக்கொள்ளும்படியாகவும், நமக்கு முன்பாக இருக்கின்ற உபத்திரவ காலத்தின் ஊடாக நம்மை சுமந்து செல்லும்படியாகவும் அவரிடம் நாம் கேட்க வேண்டும்.—3MR 305 (1906).

உலகம் அதிகமதிகமாக அக்கிரமம் நிறைந்ததாக மாறிக்கொண்டிருக்கின்றது. விரைவில் மாபெரும் இக்கட்டு—இயேசு வரும்வரையில் நிறுத்தப்படாத இக்கட்டு நாடுகளுக்கிடையே எழும்பும். —RH Feb. 11, 1904.

இக்கட்டுக்காலத்தின் விளிம்பினிலே நாம் இருக்கின்றோம்; கனவிலும் நினைத்துப் பார்த்திராத குழப்பங்கள் நமக்கு முன்பாக இருக்கின்றன.—9T 43 (1909).

யுகங்களின் நெருக்கடியான வாசற்படியின்மீதாக நாம் நின்று கொண்டிருக்கின்றோம். தேவனுடைய நியாயத்தீர்ப்புகளாகிய—நெருப்பு, வெள்ளம், பூமியதிர்ச்சி, யுத்தம் மற்றும் இரத்தஞ்சிந்துதல் ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து மிகவேகமாக பின்தொடர இருக்கின்றன. —PK 278 (c. 1914).

கொந்தளிப்பான (இக்கட்டுக்) காலங்கள் நமக்கு முன்பாக காத்திருக்கின்றன. ஆயினும் நாம் அவிசுவாசமான அல்லது அதைரியமான ஒரு வார்த்தையையாகிலும் பேசாதிருப்போமாக.—ChS 136 (1905).

### வரப்போகின்ற நியாயத்தீர்ப்புகளைக்குறித்து தேவன் எப்பொழுதுமே எச்சரித்திருக்கின்றார்

வரப்போகின்ற நியாயத்தீர்ப்புகளைக்குறித்த எச்சரிக்கையை, தேவன் எப்பொழுதுமே மனிதர்களுக்குக் கொடுத்திருக்கின்றார். தங்களது காலத்திற்கான தேவனுடைய தூதில் விசுவாசமுள்ளவர்களாயும், அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து தங்களது விசுவாசத்தைச் செயலாற் றியும் இருந்தவர்கள் கீழ்ப்படியாதவர்களின்மீதும், விசுவாசியாதவர்களின்மீதும் விழுந்த நியாயத்தீர்ப்புகளிலிருந்து தப்பியிருக்கின்றனர்.

“நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்: இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்” என்னும்

வார்த்தை நோவாவிற்கு வந்தது. நோவா அதற்குக் கீழ்ப்படிந்தான்; அதனால் இரட்சிக்கப்பட்டான். "எழுந்து இந்த ஸ்தலத்தைவிட்டுப் புறப்படுங்கள்: கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப்போகின்றார்" என்னும் செய்தி லோத்துவுக்கு வந்தது (ஆதி. 7:1; 19:14). பரலோகத் தூதர்களின் பாதுகாவலின்கீழ் லோத்து தன்னை வைத்துக்கொண்டதினால் காப்பாற்றப்பட்டான். அவ்வாறே கிறிஸ்துவின் சீடர்களுக்கும், எருசலேமின் அழிவைப்பற்றிய எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருந்தது. வந்துகொண்டிருந்த அழிவிற்கான அடையாளத்தைக் கவனித்து எதிர்பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அந்த நகரத்தைவிட்டு ஓடிப்போய் அழிவிலிருந்து தப்பினார்கள். அவ்வாறே, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றியும், உலகத்தின்மீது விழப்போகின்ற அழிவைப்பற்றியும், நாம் இப்பொழுது எச்சரிக்கப்பட்டிருக்கின்றோம். எச்சரிப்பிற்குச் செவிகொடுப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்.—DA 634 (1898).

## நமது காலத்தில் எதிர்பார்க்க வேண்டியவை என்ன என்று தேவன் நமக்குச் சொல்லியிருக்கின்றார்

சிலுவையில் அடிக்கப்படுவதற்குமுன்பாக, தாம் மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்படவிருந்ததையும், மீண்டும் கல்லறையிலிருந்து உயிர்த்தெழவிருப்பதையுங்குறித்து, இரட்சகராகிய அவர் தமது சீடர்களுக்கு விளக்கின போது, அவர்களது மனங்களிலும் இருதயங்களிலும், அவரது வார்த்தையைப் பதியச்செய்ய தேவ தூதர்கள் அவ்விடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.[1] ஆனால் சீடர்களோ, ரோம ஆட்சியின் நுகத்திலிருந்து தற்காலிக விடுதலையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்; அவர்களது நம்பிக்கைகள் அனைத்திற்கும் மையமாக இருந்தவர் ஒரு அவமானமான மரணத்தைச் சந்திக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் நினைவுகூர்ந்து பார்க்கவேண்டிய அவரது வார்த்தைகள், அவர்களது உள்ளங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. சோதனையின் நேரம் வந்தபோது, அவர்கள் ஆயத்தம் இல்லாதவர்களாக இருப்பதை அது வெளிப்படுத்தியது. இயேசுவின் மரணம் அவர்களை முன்னதாகவே எச்சரிக்காததுபோல அவர்களது நம்பிக்கைகளை முழுவதுமாக அழித்திருந்தது.

சீடர்களுக்கு கிறிஸ்துவின் வார்த்தைகளினால் எவ்வாறு எதிர்காலம் தெளிவாக்கப்பட்டிருந்ததோ, அவ்வாறே அது தீர்க்கதரிசனங்களின்மூலம் நமக்கு முன்பாகவும் தெளிவாகத் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது. தவணையின் காலத்தின் முடிவுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களும், இக்கட்டுக் காலத்திற்கென்று செய்யவேண்டிய ஆயத்தவேலையும், தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. ஆயினும் திரளான மக்கள், அவை ஒருபோதும்

அவர்களுக்கு வெளிப்படுத்தப்படாததைப்போன்று, இந்த முக்கியமான சத்தியங்களைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர்.—GC 594 (1911).

## கடைசிகாலத் தீர்க்கதரிசனங்களின்மீது அவசியப்படுகிற நமது கவனம்

பின்பு நான் மூன்றாம் தூதனைக் கண்டேன் (வெளி. 14:9–11). "அவனது வேலை பயங்கரமானது. அவனது பணி பக்திவிநயமானது. களைகளினின்று கோதுமையைப் பிரித்தெடுத்து, அதை முத்திரையிட்டோ அல்லது கட்டியோ பரலோகக் களஞ்சியத்துக்கென்று சேர்க்கின்றவன் இந்த தூதனே. இந்தக் காரியங்களே நமது முழு மனதையும் முழு கவனத்தையும் ஆக்கிரமித்திருக்க வேண்டும்" என்று என்னுடனே வந்த தூதன் சொன்னான். —EW 118 (1854).

நமது விசுவாசத்திற்கான காரணங்களைத் தெரியப்படுத்தவும், தேவனுடைய பிரமாணத்துக்கு நாம் உண்மையாயிருப்பதற்கான பதிலை அளிக்கவும், நீதிபதிகளுக்குமுன்பாக நாம் நிற்க வேண்டியிருக்கும். வாலிபர்கள், இந்தக் காரியங்களைக்குறித்து கண்டிப்பாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

உலகத்தின் சரித்திரம் முடிவடைவதற்கு முன்பாக நிகழப்போகின்ற காரியங்களை, அவர்கள் கண்டிப்பாக அறிந்துகொள்ளவேண்டும். இந்தக் காரியங்கள் நமது நித்திய நலனோடு தொடர்புடையவை. ஆசிரியர்களும் மாணவர்களும், இவற்றின்மீது அதிக கவனம் செலுத்தவேண்டும்.—6T 128, 129 (1900).

நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற காலத்தைச் சுட்டிக்காட்டுகின்ற மாபெரும் அடையாளங்களை, நாம் கண்டிப்பாக ஆராய்ந்து படிக்க வேண்டும்.—4MR 163 (1895).

தேவனால் வழிகாட்டப்பட்டு வழிநடத்தப்படும்படியாக அவரது கட்டுப் பாட்டின்கீழ் தங்களை வைத்துக்கொள்கிறவர்கள், கண்டிப்பாக நடக்க விருக்கின்ற, அவரால் நியமிக்கப்பட்டதான சம்பவங்களின் உறுதியான நிறைவேறுதலை அறிந்துகொள்வார்கள்.—7T 14 (1902).

மாபெரும் சீர்திருத்த இயக்கங்களில் தெய்வீக செயல்பாடுகளைக் குறித்து ஆராய்வதற்கும், மாபெரும் போராட்டத்தின் கடைசி யுத்தத்துக்காக தேசங்களை ஒருங்கிணைக்க நடைபெறுகின்ற சம்பவங்களின் வளர்ச்சியைக் குறித்து புரிந்துகொள்வதற்கும், தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை வரலாற்றிலே பார்த்து கண்டுகொள்ளவேண்டும்.—8T 307 (1904).

## தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் புத்தகங்களை விசேஷமாக ஆராய்தல்

தேவனுடைய வார்த்தையை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து படிக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. முக்கியமாக தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் புத்தகங்கள், முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு கண்டிப்பாக கவனத்தைப் பெற்றிருக்க வேண்டும்... தேவனிடமிருந்து தானியேல் பெற்ற வெளிச்சம், முக்கியமாக இந்தக் கடைசி நாட்களுக்காகவே கொடுக்கப்பட்டது.—TM 112, 113 (1896).

தானியேல் பன்னிரெண்டாம் அதிகாரத்தை நாம் வாசித்து ஆராய்ந்து பார்ப்போமாக. அது, முடிவுகாலத்திற்குமுன்பாக நாம் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டிய ஒரு எச்சரிப்பாக இருக்கின்றது.—15MR 228 (1903).

புதிய ஏற்பாட்டு வேதவாக்கியங்களின் கடைசி புத்தகம், நாம் கட்டாயமாகப் புரிந்துகொள்ள வேண்டிய சத்தியம் நிறைந்ததாக இருக்கின்றது.—COL 133 (1900).

வெளிப்படுத்தல் புத்தகத்தில் சொல்லப்பட்டவற்றில், இன்னும் நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள் விரைவில் நிறைவேற இருக்கின்றன. இந்த தீர்க்கதரிசன புத்தகம், தேவனுடைய ஜனங்களால் இப்பொழுது ஜாக்கிரதையாக ஆராயப்பட்டு, தெளிவாகப் புரிந்துகொள்ளப்படவேண்டும். அது சத்தியத்தை மூடிமறைக்கவில்லை; மாறாக, எதிர்காலத்தில் என்ன நிகழும் என்பதை நமக்குக் கூறி, தெளிவாக முன்னெச்சரிக்கின்றது.—1NL 96 (1903).

வெளிப்படுத்தின விசேஷத்திலே, அவற்றின் வரிசைப்படி கொடுக்கப் பட்டிருக்கின்ற பக்திவிநயமான தூதுகள், தேவனுடைய ஜனங்களின் மனங்களிலே முதலிடத்தைப் பிடித்திருக்கவேண்டும்.—8T 302 (1904).

### ஜனங்களுக்கு முன்பாக வைக்கப்பட வேண்டிய தலைப்பு

இந்தக் கடைசிநாட்களுடன் சம்பந்தப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்ளாத அநேகர் இருக்கின்றனர். அவர்கள், இதைக்குறித்து கண்டிப்பாக அறிவுறுத்தப்படவேண்டும். காவற்காரர்களும் விசுவாசிகளும், எக்காளத்தின் ஒரு நிச்சயமான தொனியைக் கொடுக்க வேண்டியது அவர்களது கடமையாக இருக்கின்றது.—Ev 194, 195 (1875).

காவற்காரர்கள், இப்பொழுது தங்களது குரலை உயர்த்தி, இந்தக் காலத்திற்குரிய நிகழ்கால சத்தியம் என்னும் தூதைக் கொடுப்பார்களாக. தீர்க்கதரிசன வரலாற்றிலே நாம் எவ்விடத்தில் இருக்கின்றோம் என்பதை ஜனங்களுக்குக் காட்டுவோமாக.—5T 716 (1889).

இந்த உலகத்தின் வரலாற்றை முடிப்பதற்காக, தேவன் நியமித்திருக்கின்ற நாள் ஒன்று இருக்கின்றது: "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்." தீர்க்கதரிசனமானது, வேகமாக நிறைவேறி வருகின்றது. மிகப் பெரிதான முக்கியமானதான இந்த ஆய்வுப்பொருள் பற்றி அதிகமாக வெகு அதிகமாக சொல்லப்படவேண்டும். ஆத்துமாக்களின் நித்தியத்திற்கான முடிவை, நிலையாக நிர்ணயிக்கின்ற நாள் வெகு சமீபத்தில் இருக்கின்றது...

ஜனங்களுக்கு முன்பாக இந்த ஆய்வுப்பொருளை வைப்பதற்கு, மாபெரும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். கர்த்தருடைய நாள் சடுதியாய் எதிர்பாராத விதமாக வரும் என்ற பக்தி விநயமான உண்மை, உலக மக்களுக்குமுன்பாக மாத்திரமல்ல, நமது சொந்த சபைகளுக்கு முன்பாகவும் வைக்கப்பட வேண்டியதிருக்கின்றது. தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டுள்ள அச்சமூட்டுகின்ற எச்சரிப்பு ஒவ்வொரு ஆத்துமாவுக்காகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்போது, வியப்பில் ஆழ்த்தப்படும் ஆபத்திலிருந்து தான் பாதுகாப்பாயிருப்பதாக ஒருவனும் எண்ணாதிருக்கக்கடவன். இந்த மாபெரும் சம்பவம் மிகவும் அருகாமையில் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்தக்கூடிய சம்பவங்களின் அறிவைக் குறித்ததான உங்களது திட நம்பிக்கையை, எந்தவொரு நபரது தீர்க்கதரிசன வியாக்கியானமும் பறித்துவிடாதிருக்கட்டும்.—FE 335, 336 (1895).

**எதிர்கால சம்பவங்களைச் சரியான கண்ணோட்டத்தில் நோக்குதல்**

எதிர்காலத்தில் நமது உலகில் நடைபெற இருக்கின்ற காட்சிகளைத் துல்லியமாக விவரிப்பதற்கு, இப்பொழுது நம்மால் இயலவில்லை. ஆயினும், கர்த்தருடைய மகா பெரிய நாள் மிகவும் அருகாமையில் இருப்பதனால், நாம் கட்டாயம் விழித்திருந்து ஜெபிக்க வேண்டிய ஒரு காலம் இதுவே என்பதை மாத்திரம் நாம் அறிந்திருக்கின்றோம்.—2SM 35 (1901).

மிருகத்தின் முத்திரையென்று இதுவரையிலும் எது பறை சாற்றப்பட்டு வந்ததோ, அதுதான் துல்லியமாக மிருகத்தின் முத்திரையாக இருக்கின்றது. இந்தக் காரியத்தைக்குறித்த அனைத்தும், முழுவதுமாக இன்னும் நம்மால் புரிந்துகொள்ளப்படாதிருக்கின்றது; புஸ்தகங்கள் திறக்கப்படும்வரையிலும், அனைத்தையும் முழுவதுமாக புரிந்துகொள்ளவும் முடியாது.—6T 17 (1900).

அநேகர், தற்போதைய கடமைகள், தற்போதைய மகிழ்ச்சி மற்றும் ஆசீர்வாதங்களிலிருந்து கவனத்தைத் திருப்பி, எதிர்கால நெருக்கடியைக் குறித்தே சிந்தித்து, தங்களுக்கு தொல்லையை வருவித்துக்கொள்கின்றனர்.

இது இக்கட்டுக்காலத்தை முன்கூட்டியே உருவாக்கிக்கொள்வதற்கு ஒப்பாகும். இவ்வாறு, முன்னதாகவே எதிர்பார்த்து வரவழைத்துக்கொள்ளப்படும் இப்படிப்பட்ட உபத்திரவங்களுக்காக, நாம் தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளமாட்டோம்.—3SM 383, 384 (1884).

தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு இக்கட்டுக்காலம் வந்துகொண் டிருக்கின்றது. ஆயினும், ஜனங்களுக்கு முன்பாக அதையே தொடர்ச்சியாக வைத்து, காலத்திற்கு முன்னதாகவே ஒரு இக்கட்டுக்காலத்தை பெற்றுக் கொள்ளும் வகையில், நாம் அவர்களுக்குக் கடிவாளம் போடக்கூடாது. தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியில், ஒரு அசைக்கப்படுதல் வர இருக்கின்றது. ஆயினும், சபைகளுக்குக் கொண்டுசெல்லப்படவேண்டிய நிகழ்கால சத்தியம் இது அல்ல. (117 வருடங்களுக்கு முன்பாக இது நிகழ்காலச் சத்தியமாக இல்லை).—1SM 180 (1890). ★

[1] மாற்கு 8:31,32; 9:31; 10:32–34.

# 2

# கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகைக்கான அடையாளங்கள்

### நமது கர்த்தருடைய மாபெரும் தீர்க்கதரிசனம்

எருசலேமின் அழிவைக்குறித்தும், மனுஷகுமாரனுடைய வருகைக்கு முன் நிறைவேறவேண்டிய அடையாளங்களைக்குறித்தும் கிறிஸ்துவானவர் தமது சீடர்களை எச்சரித்திருந்தார். மத்தேயு இருபத்து நான்காம் அதிகாரம் முழுவதும், இச்சம்பவத்திற்குமுன் நிகழும் நிகழ்வுகளைப்பற்றிய ஒரு தீர்க்கதரிசனம் ஆகும். இவ்வுலகம் அக்கினியால் கடைசி மாபெரும் அழிவைச் சந்திக்கப்போவதைக் குறிப்பிட்டுக்காட்டும்படி, எருசலேமின் அழிவு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது.—Ms 77, 1899.

தமது இரண்டாம் வருகைக்கு முன்னதாக நிகழவேண்டிய பயங்கரமான நியாயத்தீர்ப்புகளைப்பற்றி, கிறிஸ்துவானவர் ஒலிவமலையின் மீதிருந்தபடி முன்னதாகவே சொல்லியிருந்தார்: “யுத்தங்களையும் யுத்தங் களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்… ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும், பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்” (மத். 24:6–8). இந்தத் தீர்க்கதரிசனங்கள் எருசலேமின் அழிவின்போது ஓரளவிற்கு நிறைவேறி யிருந்தாலும், கடைசிநாட்களில் முழுமையாக நிறைவேறும்போது, நேரடியாக அதிகம் பொருந்துவதாக இருக்கின்றது.—5T 753 (1899).

### வானத்திலே அடையாளங்கள்

போப்பு மார்க்கத்தினால் உண்டாகும் மாபெரும் உபத்திரவத்தின் முடிவின்போது, சூரியன் இருளடையும், சந்திரன் தன் ஒளியைக் கொடாதிருக்கும் என்றும், அதன் பின்பு வானத்திலிருந்து நட்சத்திரங்கள் விழவேண்டும் என்றும் கிறிஸ்து அறிவித்தார். மேலும் அவர்: “அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே

இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்" (மத். 24:32,33) என்று கூறுகின்றார்.

தமது வருகைக்கான அடையாளங்களைக் கிறிஸ்து கொடுத்திருக் கின்றார். அவர் சமீபமாய் வந்துவிட்டார், வாசலுக்கு அருகில் வந்துவிட்டார் என்பதைக்கூட நாம் அறிந்துகொள்ளலாம் என்று அவர் கூறியிருக்கின்றார். "இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்து போகாது" என்று இந்த அடையாளங்களை பார்ப்பவர்களைப்பற்றி அவர் கூறுகின்றார். இந்த அடையாளங்கள் நடை பெற்றுவிட்டன.[1] கர்த்தருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கிறதென்பதை, இப்பொழுது நாம் நிச்சயமாகவே அறிந்து கொள்ளலாம்.—DA 632 (1898).

### பூமியின் மீதான அடையாளங்கள்

"சூரியனிலும், சந்திரனிலும், நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்" (லூக். 21:25; மத். 24:29; மாற். 13:24–26; வெளி. 6:12–17) என்று இயேசு அறிவிக்கின்றார். அவரது வருகையின் இந்த முன்னடையாளங்களைக் காண்பவர்கள், "அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார்" (மத். 24:33) என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.—GC 37, 38 (1911).

நாடுகள் அமைதலின்றி இருக்கின்றன. குழப்பமான காலங்கள், நமக்கு முன்பாக இருக்கின்றன. பூமியின்மேல் வந்து கொண்டிருக்கின்ற ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால், மனுஷருடைய இருதயங்கள் சோர்ந்துபோய்க் கொண்டிருக்கின்றன. ஆயினும், தேவனை நம்புகிறவர்கள் புயலின் மத்தியிலும்: "நான்தான்; பயப்படாதிருங்கள்," என்று கூறும் அவரது சத்தத்தைக் கேட்பார்கள்.—ST Oct. 9, 1901.

தேவனுடைய மகாநாளுக்கு சற்றுமுன்னதாக விரைவாக நடைபெற வேண்டுமென கூறியறிவிக்கப்பட்டிருந்த நிகழ்வுகளாகிய—வியப்பூட்டக்கூடியதும், பரபரப்பூட்டும் சம்பவங்கள் நிறைந்ததுமான, சரித்திர நிகழ்வுகள் பரலோகத்தின் புத்தகங்களிலே பதிவு செய்யப்பட்டு வருகின்றன. உலகத்திலுள்ள அனைத்துக் காரியங்களும் ஒரு சீரற்ற நிலையில் இருக்கின்றன.—3MR 313 (1908).

### கள்ளத்தீர்க்கதரிசிகள்

எருசலேமின் அழிவிற்கான அடையாளங்களில் ஒன்றாக, "அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்" (மத். 24:11) என்று கிறிஸ்து கூறியிருந்தார். கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பி மக்களை வஞ்சித்துக்கொண்டும், பெரும் எண்ணிக்கையில் உள்ளவர்களை தவறான

விதமாக பாலைவனத்துக்குள் நடத்திக்கொண்டும் இருந்தனர். அற்புதமான வல்லமையைப் பெற்றிருப்பதாகக் கூறிக்கொண்டு, மந்திரவாதிகளும் சூனியக்காரர்களும், மக்களை அவர்களுக்குப் பின்னாக மலையின் தனிமையான இடங்களுக்கு இழுத்துச்சென்றிருந்தனர். ஆயினும், இந்த தீர்க்கதரிசனம் (அப்பொழுது மாத்திரமல்ல) கடைசி நாட்களுக்காகவுங்கூடக் கூறப்பட்டிருந்தது. இந்த அடையாளம், இயேசுவின் இரண்டாம் வருகைக்கான அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.—DA 631 (1898).

நாம் பொய்யான உரிமைபாராட்டுதல்களை சந்திக்க நேரிடும். கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்புவார்கள். பொய்யான சொப்பனங்களும் பொய்யான தரிசனங்களும் நிறைந்து காணப்படும். ஆயினும், வசனத்தைப் பிரசங்கியுங்கள்; தேவனுடைய வார்த்தையில் வெளிப்படும் அவரது சத்தத்திலிருந்து விலகிப்போகாதிருங்கள்.—2SM 49 (1894).

தேவனால் விசேஷமாக போதிக்கப்பட்டிருக்கின்றோம் என்று கூறிக் கொள்ளுகின்ற, மற்றவர்களை தவறான வழியில் நடத்திச் செல்வதற்கு முயற்சிக்கின்ற அநேகர் எனக்குக் காட்டப்பட்டார்கள். அவர்கள் தங்களது கடமையைக்குறித்த தவறான கருத்துடையவர்களாக இருப்பதினிமித்தம், தேவன் அவர்கள்மீது ஒருபோதும் சுமத்தியிராத ஒரு பணியை செயல்படுத்துவார்கள். குழப்பமே அதன் விளைவாக இருக்கும். ஆதலால், ஒவ்வொருவரும் தேவனுடைய சித்தத்தைத் தனிப்பட்டவிதத்தில் புரிந்துகொள்ளத்தக்கதாக, மிகுந்த ஊக்கத்துடன் அவரைத் தேடக்கடவோம். —2SM 72 (1893).

### ஒரு கள்ளத்தீர்க்கதரிசியுடன் ஏற்பட்ட அனுபவம்

கடந்த இரவில் எங்கள் அனைவருக்கும் அறிமுகம் இல்லாத ஒரு இளம் வாலிபன், (ஆஸ்திரேலியாவிலுள்ள) விக்டோரியா என்ற இடத்திலிருந்து வருவதாகக் கூறிக்கொண்டு, சகோதரி உவைட் அவர்களைக் காணவேண்டும் என்று எங்களிடம் கேட்டுக் கொண்டான். அது ஒரு மாலை நேரமாக இருந்தது. எனவே அவனைக் காண நான் மறுத்துவிட்டேன். ஆயினும், அன்று இரவு எங்களோடு தங்கவும், பிற்பாடு காலை உணவை உட்கொள்ளவும், அவனை நாங்கள் அழைப்பித்தோம். எங்களது வழக்கமான காலை ஆராதனைக்குப் பிறகு, எங்களுடைய பல்வேறுபட்ட அலுவல்களுக்குக் கடந்துபோக முற்பட்ட சமயத்தில், இந்த இளம் வாலிபன் எழுந்து நின்று, கட்டளைத் தோரணையுடன், எங்களை உட்காரும்படி கேட்டுக்கொண்டான். “உங்களிடம் ஏதாவது பாடல் புத்தகம் இருக்கின்றதா? நாம் ஒரு பாடலைப் பாடுவோம். பிறகு நான் ஒரு செய்தியை உங்களுக்குக் கொடுக்கவிருக்கின்றேன்” என்று கூறினான். “உன்னிடம்

ஒரு செய்தி இருக்குமானால் அதைத் தாமதமின்றிக் கொடு. எங்களுக்கு வேறு ஒரு அவசர வேலை இருப்பதனால் இழப்பதற்கு நேரமில்லை" என்று நான் கூறினேன். அப்போது அவன், தான் எழுதியிருந்த ஏதோ ஒன்றை எடுத்து, வாசிக்கத் தொடங்கினான். அதில் எழுதியிருந்த மற்ற காரியங்களுக்கு மத்தியில், உயிரோடிருக்கின்றவர்கள் மீதான நியாயத்தீர்ப்பு தற்போது துவங்கிவிட்டது என்று குறிப்பிட்டிருந்ததை அவன் வாசித்தான்...

அவன் சொல்லச்சொல்ல நான் கவனித்தேன். கடைசியாக: "என் சகோதரனே, நீ சரியான மனநிலையில் இல்லை. உன்னுடைய செய்தி எவ்வாறு எங்களுக்கு ஏற்றதாக இருக்கின்றது என்பதைத் தெளிவாகக் கூறு. தயவுசெய்து, உடனே எங்களுக்குத் தெரியப்படுத்து. உன் மனம் பதற்றத்தில் இருக்கின்றது. உன் வேலையை நீ தவறாகப் புரிந்துகொண்டிருக்கின்றாய். நீ கூறியவற்றில் அநேகக் காரியங்கள் வேதத்தோடு இசைந்திருக்கின்றன. அதின் ஒவ்வொரு வார்த்தையையும் நாங்கள் விசுவாசிக்கின்றோம். ஆயினும், நீ மட்டுமீறிய உற்சாகத்தில் இருக்கின்றாய். எங்களுக்காக நீ என்ன வைத்திருக்கின்றாய் என்பதை தயவுசெய்து கூறு" என்று நான் கூறினேன்.

நல்லது, நம் உடமைகளைக் கட்டிக்கொண்டு, உடனே பேட்டில் கிரீக்கிற்கு நாம் செல்லவேண்டும் என்று அவன் கூறினான். அதற்கான காரணங்களை அவனிடம் நான் கேட்டேன். "உயிரோடிருக்கின்றவர்கள் மீதான நியாயத்தீர்ப்பு துவங்கிவிட்டது என்ற இந்தத் தூதினைக் கொடுப்பதற்காக" என்று அவன் பதிலளித்தான். "நாங்கள் செய்யும்படியாக கர்த்தர் எங்களுக்குக் கொடுத்திருக்கின்ற வேலை இன்னும் முடிவடையவில்லை. இங்கு எங்கள் வேலை முடிவடையும்போது, எங்கள் கடமையைக்குறித்து உனக்கு தெரிவிப்பதற்குப்பதிலாக, பேட்டில் கிரீக்கிற்கு நாங்கள் இடம் பெயரவேண்டிய நேரம் இதுதான் என்று கர்த்தர் எங்களுக்குத் தெரியப்படுத்துவார் என்பதை நாங்கள் தெளிவாக அறிந்திருக்கின்றோம்" என்று நான் அவனுக்குப் பதிலளித்தேன்... சகோதரர் ஸ்டார் அவனோடு மேற்கொண்டு பேசட்டும் என்று விட்டுவிட்டு, எனது எழுத்துப்பணியைத் தொடருவதற்காக நான் சென்றுவிட்டேன்.

சகோதரி உவைட், தன்னிடம் மிகவும் கனிவோடும், அதே சமயத்தில் அத்தனை அதிகாரத்தோடும் பேசியபோதுதான், தான் ஒரு தவறு செய்துவிட்டதாகவும், தன்னை மிகவும் பலமாய் அசைத்திருந்த கருத்துக்கள், நிலையற்றவையாகவும் நியாயமற்றவையாகவும் இருந்தன என்பதை உணரத்தொடங்கியதாகவும், அவன் சகோதரர் ஸ்டாரிடம் கூறினான். பத்து அங்கத்தினர்கள் மட்டுமல்லாமல், அத்துடன் மூன்று

விருந்தினர்களையும் கொண்ட பெரிய குடும்பமாக எங்கள் குடும்பம் இருந்தபோதிலும், இந்த இளம் வாலிபன் சிலகாலம் எங்களுடன் தங்கட்டும் என்று நாங்கள் தீர்மானித்தோம். கடினமாய் நடத்தி, குற்றப்படுத்திவிடக்கூடிய ஜனங்களோடு அவனை அனுப்பிவிட நாங்கள் துணியவில்லை; தனது "வெளிப்பாடுகளை" அவன் திரும்பத்திரும்ப எடுத்துக்கூறுவதை நாங்கள் விரும்பவுமில்லை. அவனோடு பழகி, கூடுமானால் அவனை பாதுகாப்பான நிச்சயமான வழிகளில் நடத்துவதற்காக, சிலகாலம் அவனை எங்களுடன் தங்கவைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தோம்.—Letter 66, 1894.

## பெருந்திண்டியும் இச்சையடக்கமின்மையும்

பெருந்திண்டியும் இச்சையடக்கமின்மையும், நம்முடைய உலகில் ஒழுக்கநிலை பெருமளவில் சீர்கெட்டிருப்பதற்கு அடித்தளமாயிருக்கின்றன. சாத்தான் இதனை நன்கறிந்தவனானபடியால், உடல்நலத்தைப் பொருட் படுத்தாமல், ஏன் உயிரைக்கூட பொருட்படுத்தாதபடி, உணவின் ருசிக்கு ஆண்களையும் பெண்களையும் அடிமைப்படுத்திவிட, அவன் தொடர்ச்சியாக தூண்டிக்கொண்டே இருக்கின்றான். புசிப்பதும் குடிப்பதும் உடுத்துவதுமே, உலகத்திலே வாழ்வின் குறிக்கோளாக்கப்பட்டுவிட்டன. ஜலப்பிரளயத்துக்கு முன்பும் இதுபோன்ற நிலைதான் இருந்தது. ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையின் இந்த நிலையே, இப்பூமியின் வரலாறு விரைவாக முடிவடையப் போகின்றது என்பதற்கான குறிப்பிடத்தக்க ஆதாரங்களில் ஒன்றாக இருக்கின்றது.—Letter 34, 1875.

ஜலப்பிரளயத்துக்கு முந்தின உலகத்தைப்பற்றி ஆவியானவரின் ஏவுதலால் அருளப்பட்டிருக்கின்ற விவரங்கள், இன்றைய சமுதாயம் வெகுவேகமாய் அடையப்போகின்ற நிலையை, மிகத் துல்லியமாக விளக்கிக்காட்டுகிறதாய் இருக்கின்றன.—PP 102 (1890).

கர்த்தர் வெகுசீக்கிரமாய் வர இருக்கின்றார் என்று நாம் அறிந்திருக்கின்றோம். இன்றைய உலகம், நோவாவின் நாட்களில் இருந்ததைப்போல வேகமாய் மாறிக்கொண்டு வருகின்றது. சுயத்தைத் திருப்திப்படுத்துவதிலேயே அது மூழ்கியிருக்கின்றது. புசிப்பதும் குடிப்பதுமான காரியங்கள் மிதமிஞ்சிப் போய்க்கொண்டிருக்கின்றன. மனிதர்கள், தங்களைப் பைத்தியங்களாக மாற்றுகின்ற விஷம் நிறைந்த மதுபானத்தைக் குடித்துக்கொண்டிருக்கின்றார்கள்.—Letter 308, 1907.

## வன்முறைச் செயல்கள்

நோவாவின் நாட்களில், பெரும்பான்மையான கூட்டத்தார் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கின்றவர்களாகவும், பொய்களில் மகிழ்பவர்

களாகவும் காணப்பட்டனர். பூமி வன்முறையால் நிறைந்திருந்தது. யுத்தமும் குற்றமும் கொலையும் அன்றாட நிகழ்வாயிருந்தது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாகவும் அப்படியே இருக்கும்.—1BC 1090 (1891).

தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லையென்றால், தொழிற்சங்கங்கள் உடனடியாக வன்முறையைத் தூண்டிவிடுகின்றன. உலகத்தின் மக்கள் தேவனுடன் இசைந்து இல்லை என்பது மென்மேலும் தெள்ளத்தெளிவாகி வருகின்றது. சாத்தானுடைய தலைமையின் கீழுள்ள, தீய ஊழியர்களின் நிலையான அணிவகுப்பைப்பற்றி, எந்தவொரு விஞ்ஞானக் கொள்கையும் விளக்கம் தரவியலாது. ஒவ்வொரு ஒழுங்கீன கும்பலிலும் தீய தூதர்கள் கிரியைசெய்து, வன்முறைச் செயல்களை செய்யும்படியாக மனிதர்களைத் தூண்டிவிடுகின்றனர்...

மனிதர்களின் துணிகரமாகத் தவறுசெய்யும் தன்மையும் கொடூரத் தன்மையும், ஒரு குறிப்பிட்ட உச்சநிலையை அடையும்போது, தேவன் தமது மகத்துவத்தில் தம்மைத்தாமே வெளிப்படுத்துவார். வெகுசீக்கிரத்தில் உலகத்தின் அக்கிரம் அதன் வரம்பை வந்தடையும். அப்போது நோவாவின் நாட்களில் நடந்ததுபோல, தேவன் தமது நியாயத்தீர்ப்புகளை ஊற்றுவார். —UL 334 (1903).

கொலைகள், கொள்ளைகள், இரயில் விபத்துகள் மற்றும் வன்முறையான செயல்களைக்குறித்து நாம் கேள்விப்படுகின்ற பயங்கரமான செய்திகள், எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்ற உண்மையைத் தெரிவிக்கின்றன. இப்பொழுது, அதிலும் இப்பொழுதே, நாம் கர்த்தருடைய இரண்டாம் வருகைக்காக ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும்.—Letter 308, 1907.

### யுத்தங்களும் பேரழிவுகளும்

புயல் வந்துகொண்டிருக்கின்றது. தேவனிடத்தில் மனந்திரும்புவதன் மூலமாகவும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொள்ளுவதன்மூலமாகவும், அதன் உக்கிரத்தை சந்திக்க நாம் ஆயத்தப்படவேண்டும். பூமியை பயங்கரமாய் அசைக்கும்படியாக கர்த்தர் எழுந்தருள்வார். எல்லாப் பக்கங்களிலும் நாம் உபத்திரவங்களைக் காண்போம். ஆயிரக்கணக்கான கப்பல்கள் கடலின் ஆழங்களில் எறியுண்டுபோகும். கப்பற்படைகள் மூழ்கிப்போகும். இலட்சக்கணக்கில் மனித உயிர்கள் பலியாக்கப்படும். எதிர்பாராத விதத்தில் தீ விபத்துக்கள் நேரிடும். அவைகளை அணைக்க மனித முயற்சியால் கூடாமற்போகும். பூமியின் அரண்மனைகள் தீப்பொறிகளின் உக்கிரத்தால் ஒன்றுமில்லாமல்போகும்.

இரயில் பாதையில் அழிவுகள் அடிக்கடி வெகுசாதாரணமாக நடக்கும். பிரயாணத்தின் பெரும் பாதைகளில், எவ்வித நொடிப்பொழுது எச்சரிப்புமின்றி, குழப்பமும் மோதலும் மரணமும் ஏற்படும். முடிவு சமீபமாயிற்று. கிருபையின் காலம் முடிந்துகொண்டிருக்கின்றது. ஆ! கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுவோம்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுவோம்!—MYP 89, 90 (1890).

இந்த பூமிக்குரிய சரித்திரத்தின் கடைசிக் காட்சிகளில் யுத்தங்கள் சீறியெழும்பும். கொள்ளைநோயும் வாதையும் பஞ்சமும் உண்டாகும். ஆழத்தின் தண்ணீர்கள் தங்கள் எல்லைகளைக் கடந்து பாய்ந்தோடி வரும். உடைமையும் உயிரும் அக்கினியாலும் வெள்ளத்தாலும் அழிக்கப்பட்டுவிடும். கிறிஸ்து தம்மை நேசிக்கின்றவர்களுக்காக ஆயத்தம்பண்ண சென்றிருக்கின்ற வாசஸ்தலங்களுக்காக, நாம் ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும்.—Mar 174 (1897).

## மாபெரும் அக்கினிப் பந்துகள்

கடந்த வெள்ளிக்கிழமை காலையிலே, நான் விழித்தெழுவதற்கு சற்று முன்பாக, நெஞ்சைவிட்டு நீங்காத ஒரு காட்சி எனக்கு முன்பாகக் காட்டப்பட்டது. நான் நித்திரையிலிருந்து விழித்துவிட்டதுபோல் காணப் பட்டேன். ஆயினும் நான் என் வீட்டில் இல்லை. அகோரமாகப் பற்றியெரியும் நெருப்பை, ஜன்னல்கள் வழியே என்னால் காணமுடிந்தது. வீடுகளின்மீது மாபெரும் அக்கினிப் பந்துகள் விழுந்துகொண்டிருந்தன. இப்பந்து களிலிருந்து அக்கினிமயமான அம்புகள் எல்லாத் திசைகளிலும் சீறிப் பாய்ந்து கொண்டிருந்தன. கொழுந்துவிட்டு எரிந்த அந்நெருப்பை அமர்த்துவது இயலாததாயிருந்தது. அநேக இடங்கள் அழிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. மக்களுக்கு உண்டான பயங்கரம் விவரிக்க முடியாததாயிருந்தது. சிறிதுநேரம் கழித்து விழித்தபோது, நான் என் வீட்டிலே இருப்பதை உணர்ந்தேன்.—Ev 29 (1906).

மிகப்பெரிய ஒரு அக்கினிப் பந்து, அழகான சில மாளிகைகளுக்கிடையே விழுந்து, நொடிப்பொழுதில் அவைகளுக்கு அழிவு ஏற்படுத்துவதை நான் கண்டேன். “பூமியின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் வரவிருக்கின்றன என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். ஆயினும், அவைகள் இவ்வளவு சீக்கிரமாக வரும் என்பது எங்களுக்குத் தெரியாது” என்று யாரோ ஒருவர் கூறுவதை நான் கேட்டேன். “உங்களுக்குத்தான் தெரிந்திருந்ததே! பின்பு ஏன் நீங்கள் எங்களுக்குச் சொல்லவில்லை? நாங்கள் அறியாதிருந்தோமே!” என்று மற்றவர்கள் வேதனையான குரல்களில் கூறினர்.—9T 28 (1909).

**பூமியதிர்ச்சிகளும் வெள்ளங்களும்**

சத்துருவானவன் முன்பு கிரியை செய்திருந்தான், இப்பொழுது இன்னும் கிரியைசெய்துகொண்டு இருக்கின்றான். அவன் மாபெரும் வல்லமையுடன் கீழிறங்கியிருக்கின்றான். தேவனுடைய ஆவியானவரும் பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டுக்கொண்டு இருக்கின்றார். தேவனும் தமது கரத்தை பின்னிழுத்துக் கொண்டுவிட்டார். ஜான்ஸ் டவுன் (பென்ஸில்வேனியா) என்ற பட்டணத்தை மாத்திரம் நாம் பார்க்கவேண்டியதாய் இருக்கின்றது. பிசாசானவன் இம்முழு பட்டணத்தையும் இல்லாமல் போகுமளவுக்கு அழிப்பதிலிருந்து, தேவன் அவனைத் தடைசெய்யவில்லை.[2] இந்த உலகத்தினுடைய சரித்திரத்தின் கடைசிவரையிலும், இதே போன்ற காரியங்கள் அதிகமாகப் பெருகும்.—1SAT 109 (1889).

பூமியின் உட்பகுதிகளில் மறைந்திருக்கின்ற மூலப்பொருள்கள் வெடித்துச் சிதறினால், பூமியின் மேற்பரப்பு பிளவுண்டு போகும். ஒரு முறை இந்த மூலப்பொருள்கள் கட்டவிழ்க்கப்பட்டதேயானால், தங்களுக்குக் கீழாக பணியாற்றினவர்களுக்குக் குறைச்சலுண்டாகக் கூலிகொடுத்து, அதன் மூலம் பெரிய உடைமைகளைத் தக்கவைத்து, ஆண்டுகளாக தங்களுக்கு செல்வத்தைக் குவித்தோருடைய பொக்கிஷங்களையெல்லாம் அவை அழித்துப்போட்டுவிடும். எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருப்பதால், ஆவிக்குரிய உலகமும்கூட, பயங்கரமாக அசைக்கப்படவேண்டியதாக இருக்கின்றது.—3MR 208 (1891).

இந்த ஒரு நொடிப்பொழுது, நாம் திடமான பூமியின்மீது இருக்கலாம். ஆயினும் அடுத்த நொடிப்பொழுது, நமது பாதங்களின்கீழ் இருக்கின்ற பூமி நிலைமாறிப் போய்விடும் என்பது போன்ற நேரம் இப்பொழுது வந்திருக்கின்றது. எதிர்பாராத நேரங்களில் பூமியதிர்ச்சிகளம் உண்டாகும். —TM 421 (1896).

தீ விபத்துகள், வெள்ளங்கள், பூமியதிர்ச்சிகள், மகா ஆழத்தின் உக்கிர கொந்தளிப்பு, கடல் மற்றும் நிலத்தில் உண்டாகும் பேரழிவுகள் ஆகியவைகளின்மூலமாக, தேவனுடைய ஆவி என்றைக்கும் மனுஷரோடே போராடுவதில்லை என்ற எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது.—3MR 315 (1897).

மனுஷகுமாரன் வானத்து மேகங்களில் தோன்றும்முன்னதாக, இயற்கை உலகிலுள்ள அனைத்தும் அசைக்கப்படும். வானத்திலிருந்து வரக்கூடிய மின்னலுடன் பூமியின் அக்கினியும் இணைந்து, மலைகளைச் சூளையைப்போல எரியச்செய்து, அவைகளது எரிமலைக் குழம்பின் வெள்ளங்களை, கிராமங்கள் மற்றும் பட்டணங்களின்மீது ஊற்றிவிடும்.

பூமிக்குள் மறைந்திருக்கின்ற பொருட்கள், திடீர் எழுச்சியடைவதால் உருக்கி வார்க்கப்பட்ட பெரும்பாறைகள் நீருக்குள் வீசியெறியப்படும். அதன் காரணமாக நீர் கொந்தளித்து, பாறைகளையும் மண்ணையும் வெளியே அனுப்பும். மகா பயங்கரமான பூமியதிர்ச்சிகளும், மனித உயிர்களுக்கு மாபெரும் அழிவும் உண்டாகும்.—7BC 946 (1907).

### குற்றமும், பஞ்சங்களும், கொள்ளைநோயும்

காற்று மண்டலத்தில் சாத்தான் கிரியைசெய்துகொண்டிருக்கின்றான். காற்றுமண்டலத்தை அவன் விஷமாக்கிக் கொண்டிருக்கின்றான். ஆதலால், இங்கே நமது நிகழ்கால மற்றும் நித்தியகால வாழ்க்கைக்காக நாம் தேவனையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. நாம் இருக்கக்கூடிய இந்த நிலையில், மிகவும் விழிப்புடன் இருந்து, தேவனுக்கென்று முற்றிலும் பக்திகொண்டு, முற்றிலும் மனந்திரும்பி, முற்றிலும் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால் நாமோ, வாதநோய் தாக்கப்பட்டு அமர்ந்திருப்பவர்கள்போலக் காணப்படுகின்றோம். பரலோகத்தின் தேவனே, எங்களை எழுப்பிவிடும்!—2SM 52 (1890).

ஜீவனுக்கும் ஊட்டச்சத்துக்குமான ஆதாரங்களில் ஒன்றான காற்றைப் பாழ்ப்படுத்தி, நச்சுக்கலந்த காற்றாகச் செய்கின்ற அந்தகார சக்திகள், தங்களின் நாசகார வேலையை முன்னேற்றிச்செல்லவிடாதபடி, தேவன் அவைகளைத் தடைசெய்யவில்லை. தாவர வாழ்க்கை பாதிக்கப்பட்டது மட்டுமல்ல, மனிதனும் கொள்ளைநோயால் பாடுபட்டுவருகின்றான்... இவைகளெல்லாம், தேவனுடைய கோபாக்கினையின்[3] பாத்திரங்களிலிருந்து விழும் துளிகளாக, பூமியின்மீது தெளிக்கப்படுகின்றதால் ஏற்படும் விளைவுகளே ஆகும். ஆயினும் இவைகள், வெகுசீக்கிரத்தில் நிகழப்போகின்றவைகளுக்கு நிழலாட்டமான பிரதிபலிப்பாய் இருக்கின்றன.—3SM 391 (1891).

பஞ்சங்கள் அதிகரிக்கும். கொள்ளைநோய்கள், ஆயிரக்கணக்கானவர்களை வாரிக்கொண்டுபோகும். வெளியிலிருந்து வரும் வல்லமைகளினாலும், உள்ளிருந்து செயல்படும் சாத்தானின் கிரியைகளினாலும், நம் அனைவரைச் சுற்றிலும் ஆபத்துகள் நிறைந்திருக்கின்றன. ஆயினும், தேவனுடைய தடுத்தாட்கொள்ளும் வல்லமை இப்பொழுது கிரியைசெய்துகொண்டிருக்கின்றது.—19MR 382 (1897).

பூமியிலிருந்து கர்த்தருடைய ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்பட்டுக் கொண்டிருப்பது எனக்குக் காட்டப்பட்டது. தேவனுடைய கற்பனைகளைத் தொடர்ந்து அவமதிக்கும் அனைவருக்கும், அவரது காக்கும் வல்லமை சீக்கிரமாக மறுக்கப்பட்டுவிடும். ஏமாற்றிச் செய்யும் வியாபாரங்கள், கொலைகள் மற்றும் சகலவிதமான குற்றங்களைப்பற்றிய செய்திகள் நமக்கு

நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்றன. அக்கிரமம் என்பது ஒரு காலத்தில் உணர்வுகளை அதிர்ச்சியடையச் செய்கின்றதாக இருந்தாலும், இப்பொழுது ஒரு சர்வசாதாரணமான காரியமாக மாறிக்கொண்டிருக்கின்றது.—Letter 258, 1907.

### பேரழிவுகளில் தேவனுடைய நோக்கம்

ஒரு நொடிப்பொழுதின் எச்சரிக்கையின்றி கப்பல்கள் நித்தியத்திற்குள்ளாகக் கவிழ்ந்துபோகின்ற—கடலில் ஏற்படும் அச்சம் தரும் பேரழிவுகளின் அர்த்தம் என்ன? ஏழைகளை ஒடுக்கி மனிதர்களால் குவித்துவைக்கப்பட்ட பெரும்பகுதியான ஐசுவரியங்கள் அக்கினிக்கு இரையாகின்ற—பூமியின்மீது உண்டாகும் விபத்துக்களின் அர்த்தம் என்ன? கர்த்தருடைய பிரமாணத்தை மீறி, அவரது உடன்படிக்கையை உடைத்து, அவரது ஓய்வுநாளை மிதித்து, அதன் இடத்தில் ஒரு பொய்யான ஓய்வுநாளை ஏற்றுக்கொண்டிருப்போருடைய சம்பத்தைப் பாதுகாப்பதற்காக அவர் குறுக்கிடமாட்டார்.

தேவனுடைய வாதைகள் ஏற்கெனவே பூமியின்மீது விழுந்து கொண்டிருக்கின்றன. பரலோகத்திலிருந்து வரும் ஒரு அக்கினியின் மூச்சுக் காற்றைப் போன்று, மிகவும் விலைமதிப்புமிக்க கட்டிடங்களை அவை துடைத்தழித்துக் கொண்டிருக்கின்றன. கிறிஸ்தவர்கள் என்று தங்களை கூறிக் கொள்ளுகிறவர்களுக்கு இந்த நியாயத்தீர்ப்புகள் உணர்வைக் கொண்டுவராதா? உலகம் எச்சரிப்படையவும், பாவிகள் பயமடைந்து அவருக்கு முன்பாக நடுங்கவும், தேவன் அவைகளை வர அனுமதிக்கின்றார். —3MR 311 (1902).

இந்தப் பேரழிவுகளை நடைபெற அனுமதிப்பதில், தேவன் ஒரு நோக்கத்தைக் கொண்டிருக்கின்றார். அவைகள், தங்களது உணர்வுக்கு வரத்தக்கதாக ஆண்களையும் பெண்களையும் தேவன் அழைக்கும் வழிமுறைகளில் ஒன்றாக இருக்கின்றன. தேவன் தமது வார்த்தையில் தெளிவாக வெளிப்படுத்தியிருப்பதை சந்தேகிக்கும் மனித ஏதுகரங்களுக்கு, அவர் இயற்கையின்மூலமாகவும், வழக்கத்திற்கு மாறான செயல்பாடுகளின் மூலமாகவும், உணர்த்தி அறிவிக்கின்றார்.—19MR 279 (1902).

மாபெரும் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதத்துடன் கூடிய பூமியதிர்ச்சிகளையும், சூறாவளிகளையும், அக்கினி மற்றும் வெள்ளத்தால் ஏற்படும் அழிவையும், நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம் அல்லவா! இந்தப் பேரழிவுகள், இயற்கையின் ஒழுங்கற்ற கட்டுக்கடங்காத சக்திகளின் திடீர் எழுச்சி போன்றும், மனிதனின் கட்டுப்பாட்டுக்கு முற்றிலும் அப்பாற்பட்டது போன்றும் வெளிப்படையாய் தெரியலாம். ஆனால் அவையெல்லாவற்றிலும், தேவனுடைய நோக்கத்தை வாசித்துணர முடியும். அவைகள், ஆண்களையும்

பெண்களையும் அவர்களது ஆபத்து நிலையை உணர்த்தி எழுப்புவதற்கு அவர் பயன்படுத்தும் ஏதுகரங்களாக இருக்கின்றன.—PK 277 (c. 1914).

**வரப்போகும் சம்பவங்கள் கர்த்தருடைய கரங்களில் இருக்கின்றன**

ஒரு அதிபதியில்லாமல் இவ்வுலகம் இல்லை. வரப்போகும் சம்பவங்களின் நிகழ்ச்சிநிரல் கர்த்தருடைய கரங்களில் இருக்கின்றது. பரலோகத்தின் மகத்துவமானவர், தேசங்களின் முடிவையும் தமது சொந்தப் பொறுப்பில் உள்ள தமது திருச்சபையின்மீதான அக்கறையையும் உடையவராக இருக்கின்றார்.—5T 753 (1889).

அடையாளமாக சுட்டிக்காட்டப்படும் இத்தகைய காட்சிகள் (வனாந்தரத்தில் கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள்) ஒரு இரட்டை நோக்கத்தை அளிக்கின்றன. பூமியினுடைய இயற்கைச் சக்திகள் மாத்திரம் சிருஷ்டிகரின் கட்டுப்பாட்டின்கீழாக இருக்கவில்லை, தேசங்களின் மதரீதியான இயக்கங்களும்கூட அவரது கட்டுப்பாட்டின்கீழாகத்தான் இருக்கின்றன என்பதை, தேவனுடைய ஜனங்கள் அவைகளிடமிருந்து கற்றுக்கொள்கின்றனர். விசேஷமாக, ஞாயிறு ஆசரிப்பு வலியுறுத்தப்படுதல் தொடர்பான காரியத்தில், இது உண்மையாக இருக்கின்றது.—19MR 281 (1902).

மாபெரும் முடிவான வேளையில், எப்படி சமாளிக்கவேண்டும் என்று அறிந்திராத வகையில், குழப்பங்களை நாம் சந்திக்கநேரிடும். ஆயினும், பரலோகத்தின் முப்பெரும் வல்லமைகள் கிரியைசெய்துகொண்டிருக்கின்றன என்பதையும், தெய்வீகக்கரம் காலச்சக்கரத்தின்மேல் இருக்கின்றது என்பதையும், தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றி முடிப்பார் என்பதையும் நாம் மறக்காதிருப்போமாக!—Ev 65 (1902).

புதிரான அந்த சக்கரங்கள் எப்படி கேருபீன்களுடைய செட்டைகளுக்குக் கீழிருந்த கரத்தால் நடத்தப்பட்டதோ, அப்படியே மனித இனத்தினுடைய சம்பவங்களின் புதிரான காரியம் அனைத்தும், தெய்வீகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தேசங்களின் குழப்பங்கள் மற்றும் கலவரங்களுக்கு மத்தியிலும், கேருபீன்களுக்கு மேலாக வீற்றிருப்பவர், இந்தப் பூமியின் நடவடிக்கைகளை இன்னும் நடத்தி வருகின்றார்.[4]—Ed 178 (1903).

மனித சரித்திரத்தின் ஆண்டுகளிலே, தேசங்களின் வளர்ச்சியும், ராஜ்யங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும், மனிதனின் சித்தத்தையும் வீரத்தையும் சார்ந்திருப்பதுபோலவே தோன்றுகின்றன. சம்பவங்கள் நடைபெறும்விதம்,

பெரும்பாலும் மனிதனுடைய வல்லமையினாலும், இலட்சியத்தினாலும், நிலையற்ற மனநிலையினாலும்மாத்திரமே தீர்மானிக்கப்படுவதுபோல் தோன்றுகிறது. ஆனால், தேவனுடைய வார்த்தையிலே திரைச்சீலை புறம்பாக அகற்றப்பட, மனிதனின் விருப்பங்களிலும், வல்லமை மற்றும் உணர்வுகளின் அனைத்து நிகழ்வுகளிலும் எதிர்நிகழ்வுகளிலும், சர்வகிருபை பொருந்தினவருடைய ஏதுகரங்கள், அமைதியாகவும் பொறுமையாகவும் அவரது சொந்த சித்தத்தின் ஆலோசனைகளையே நிறைவேற்றி வருகின்றதை நாம் முன்பாகவும், பின்பாகவும், நெடுகிலுமாகக் காணலாம். —PK 499, 500 (c. 1914).

**பூமியின் நிகழ்வுகளைக் குறித்த பரலோகத்தின் அக்கறை**

முதல் கொலையாளியின் ஜீவனைத் தப்பவிட்டதன்மூலம், மாபெரும் போராட்டத்தைக் குறித்ததான ஒரு பாடத்தை, முழு உலகத்தின் முன்பாகவும் தேவன் எடுத்துக் காண்பித்தார்… அவரது நோக்கம், கலகத்தை வெறுமனே அடக்கிவிடுவதல்ல, மாறாக, கலகத்தின் தன்மையை அண்டசராசரத்திற்கு முன்பாக விளக்கிக் காட்டுவதாக இருந்தது… மற்ற உலகங்களின் பரிசுத்த குடிமக்கள், பூமியின்மீது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம்பவங்களை, ஆழ்ந்த ஆர்வத்துடன் கவனித்துப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்…

தேவனுடைய மாபெரும் திட்டம், அதனுடைய முழுமையான நிறைவேற்றத்தை நோக்கி படிப்படியாக முன்னேறிக்கொண்டிருக்கும்பொழுது, அவர், முழு அண்டசராசரத்தின் இரக்கத்தையும் அங்கீகாரத்தையும் தன்னுடன் எடுத்துச் செல்கின்றார்.—PP 78, 79 (1890).

மனிதனுடைய இரட்சிப்புக்காக மரித்த கிறிஸ்துவின் செயல், மனிதருக்குப் பரலோகத்தை எளிதில் அடையக்கூடியதாக்கியது மட்டுமல்லாமல், சாத்தானின் கலகத்துடனான அவர்களது அணுகுமுறையில், தேவனும் அவரது குமாரனும் நீதியுள்ளவர்கள் என்பதை அண்டசராசரத்திற்கு முன்பாகவும் அது காட்டுகின்றது.—PP 68, 69 (1890).

நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான மாபெரும் போராட்டத்தின் கடைசிக் காட்சிகளை, அண்டசராசரமும் சொல்லி முடியாத ஆர்வத்துடன் உற்றுநோக்கிக்கொண்டு இருக்கின்றது.—PK 148 (c. 1914).

நமது சிறு உலகம், பிரபஞ்சத்தின் பாடநூலாக இருக்கின்றது.—DA 19 (1898). ★

[1] பார்க்க GC. 306–308, 333–334.

[2] மே 31, 1889 அன்று ஜான்ஸ் டவுனில் அநேக நாட்களாகப் பெய்த பலத்த மழையினால் அணைக்கட்டு உடைந்து, கணக்கெடுப்பின்படி 2,200 பேர் உயிரிழந்தனர்.

[3] தேவன் தாம் அனுமதிப்பவைகளுக்கும் அல்லது தடைசெய்யாதவை களுக்கும் தாமே பொறுப்பெடுத்துக் கொள்கின்றார். பார்க்க: யாத். 7:3; 8:32; 1 நாளா. 10:4,13,14.

[4] பார்க்க: எசே. 1:4,26; 10:8; தானி. 4:17,25,32.

[5] விழுந்துபோகாத உலகங்களும், பரலோக தூதர்களும் கெத்செமனேயில் கிறிஸ்துவின் போராட்டத்தை, "தீவிரமான ஆர்வத்துடன்" கவனித்ததாக (DA 693) எலன் உவைட் கூறுகின்றார். சாத்தானுடனான கிறிஸ்துவினுடைய நாலாயிரம் ஆண்டு போராட்டம் மற்றும் சிலுவையில் அவரது இறுதிவெற்றிகுறித்து விவாதிக்கும்போது, "பரலோகப் பிரபஞ்சம் கண்டது;" "முழு பரலோகமும், விழுந்துபோகாத உலகங்களும் சாட்சிகளாக இருந்தன;" "அவர்கள் கேட்டனர்;" "அவர்கள் பார்த்தனர்;" "பரலோகம் பார்த்தது;" "பரலோகப் பிரபஞ்சத்திற்கு அது எப்படிப்பட்ட ஒரு காட்சியாக இருந்தது!" (DA. 693, 759, 760) என்பது போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றார்.

# 3

# “இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?”

**கிறிஸ்துவிடம் அவரது வருகையைக்குறித்து சீஷர்கள் விசாரித்தல்**

ஒரு பெரிய கூட்டமான ஜனங்கள் கேட்கும்விதமாக கிறிஸ்துவின் வார்த்தைகள் (மத். 24:2) பேசப்பட்டிருந்தன; ஆயினும் அவர் தனித்து ஒலிவ மலையின்மேல் அமர்ந்திருந்தபோது, பேதுருவும் யோவானும் யாக்கோபும் அந்திரேயாவும், அவரிடத்தில் வந்தனர். “இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும்” என்று அவர்கள் கேட்டனர்.

கிறிஸ்துவானவர், எருசலேமின் அழிவும், தன்னுடைய வருகையின் மகாநாளுமாகிய இரண்டையும், தனியாகப் பிரித்து சீஷர்களுக்குப் பதில் கூறவில்லை. அவர், இந்த இரு சம்பவங்களின் வர்ணனையையும் ஒன்றாகக் கலந்தே கூறினார். அவர் கண்டவிதமாக, எதிர்கால நிகழ்ச்சிகளை தம்முடைய சீடர்களுக்கு முன்பாகத் திறந்திருப்பாரானால், அந்தக் காட்சியை அவர்கள் தாங்கமுடியாதவர்களாக இருந்திருப்பார்கள். அவர்கள் மீதிருந்த இரக்கத்தினால், அந்த இரண்டு மாபெரும் நெருக்கடிகளின் வர்ணனைகளையும் ஒன்றுகலந்து, அவைகளின் பொருளை சீடர்கள் தங்களுக்கென்று தாங்களே ஆராய்ந்துகொள்ளும்படியாக விட்டுவிட்டார்.—DA 628 (1898).

**கிறிஸ்துவின் வருகையின் நேரம் அறியப்படவில்லை**

அட்வெண்டிஸ்ட் மக்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கின்ற அநேகர், நேரத்தை நிர்ணயிப்பவர்களாக இருந்திருக்கின்றனர். கிறிஸ்துவின் வருகைக்கென காலாகாலமாக நேரம் நிர்ணயிக்கப்பட்டிருந்திருக்கின்றது. ஆயினும், திரும்பத் திரும்ப தோல்விகளே விளைவாக இருந்திருக்கின்றன. நமது கர்த்தருடைய வருகையைப்பற்றிய துல்லியமான நேரம், அழிந்து போகக்கூடியவர்களின் அறிவுக்கு அப்பாற்பட்டு இருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கின்றது. இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகின்றவர்களுக்கு பணிவிடைச்

செய்கின்ற தூதர்களும்கூட, அந்த நாளையும் அந்த நாழிகையையும் அறியாதிருக்கின்றனர். “அந்த நாளையும் அந்த நாழிகையையும், என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.”—4T 307 (1879).

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுதல்பற்றிய நேரத்தையோ, அல்லது கிறிஸ்துவின் வருகையைப்பற்றிய துல்லியமான நேரத்தையோ, நாம் அறிந்துகொள்ள முற்படக்கூடாது... இதைப்பற்றின அறிவை தேவன் ஏன் நமக்கு அளிக்கவில்லை? அப்படி அவர் அதை நமக்கு அளித்திருந்திருப்பாரெனில், நாம் அதை சரியானவிதத்தில் பயன்படுத்தியிருக்கமாட்டோம். இந்த அறிவின் (கிறிஸ்துவின் வருகை எப்போது நடைபெறும் என்பதை அறிந்து கொள்வதின்) விளைவு, வரப்போகின்ற அந்த மாபெரும் நாளிற்காக, ஜனங்களை நிற்கச்செய்ய தேவன் ஆயத்தப்படுத்துகின்ற வேலைக்குப் பெரிதாகத் தடங்கல் ஏற்படுத்தக்கூடிய நிலைமையை, நம்முடைய சபை மக்களிடத்தில் ஏற்படுத்தும். ஆதலால் நேரத்தைக்குறித்த கிளர்ச்சியுடன் நாம் வாழக்கூடாது...

ஒன்று, இரண்டு அல்லது ஐந்து ஆண்டுகளில் அவர் வருவார் என்று உன்னால் கூறவும் முடியாது. அவரது வருகை பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு இருக்காது என்று கூறுவதன்மூலம் அதை உன்னால் தள்ளிப்போடவும் முடியாது.—RH March 22, 1892.

தேவனுடைய மாபெரும் நாளை நாம் நெருங்கிக் கொண்டிருக் கிறோம். அடையாளங்கள் நிறைவேறி வருகின்றன. ஆயினும், கிறிஸ்து தோன்றும் நாள் மற்றும் நாழிகையைக்குறித்து கூறுவதற்கு, நம்மிடம் ஒரு செய்தியும் இல்லை. வானத்து மேகங்களில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக நாம் எப்பொழுதும் எதிர்பார்த்து, ஆயத்தமான நிலையில் இருக்கவேண்டும் என்பதற்காக நம்மிடமிருந்து கர்த்தர் இதை ஞானமாக மறைத்துவைத்திருக்கின்றார்.—Letter 28, 1897.

மனுஷகுமாரனுடைய இரண்டாம் வருகையின் மிகச்சரியான நேரம் தேவ இரகசியமாக இருக்கின்றது.—DA 633 (1898).

### நமது தூது நேரத்தை நிர்ணயிக்கும் தூது அல்ல

இயேசுவானவர் வல்லமையோடும் மாபெரும் மகிமையோடும், இரண்டாவது முறையாக வருவதற்கு முன்பாக, மிகத்துல்லியமாக இவ்வளவு காலம் கடந்துசெல்ல வேண்டும் என்று, நாம் விளக்குகின்ற பிரிவினரைச் சேர்ந்தவர்கள் அல்ல. சிலர், ஒரு நேரத்தை நிர்ணயிக்கின்றார்கள். அது கடந்துபோகும்போது, அவர்களது துணிகரமான ஆவி கடிந்துகொள்ளுதலை

ஏற்க மறுத்துவிடுவதால் அவர்கள் வேறொரு நேரத்தை, மீண்டுமாக, மற்றுமொரு நேரத்தை நிர்ணயிக்கின்றார்கள். ஆயினும், இப்படிப்பட்ட அநேகத் தொடர்ச்சியான தோல்விகள், அவர்களைக் கள்ளத் தீர்க்கதரிசிகளாக முத்திரை குத்திவிடுகின்றன.—FE 335 (1895).

இந்த பூமியின் சரித்திரம் முடிவடைவதற்கு முன்னதாக, ஐந்து ஆண்டுகள் அல்லது பத்து ஆண்டுகள் அல்லது இருபது ஆண்டுகள் செல்லும் என்ற ஒரு தூதை, தேவன் எந்த ஒரு மனிதனுக்கும் கொடுக்கின்றதில்லை. அவரது வருகைக்காக ஆயத்தம் செய்வதில் தாமதப்படுத்துகின்ற, எந்த ஒரு ஆத்துமாவுக்கும் அவர் மன்னிப்பைக் கொடுக்கப்போகின்றதும் இல்லை. "என் ஆண்டவன் வர நாள் செல்லும்" என்று அந்த பொல்லாத ஊழியக்காரன் சொன்னதைப்போல, அவர் ஒருவரையும் சொல்லவிடமாட்டார். "என் ஆண்டவன் வர நாள் செல்லும்" என்ற சிந்தை, அந்த மாபெரும் நாளுக்கு நம்மை ஆயத்தப்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளையும் சிலாக்கியங்களையும், அக்கறையின்றி அலட்சியம்பண்ணுவதற்கு வழிநடத்தும்.—RH Nov. 27, 1900.

### நேரத்தை நிர்ணயம்பண்ணுதல் அவிசுவாசத்திற்கு வழிநடத்தும்

திரும்பத் திரும்ப நிர்ணயித்த நேரங்கள் கடந்துபோய் விட்டதால், கிறிஸ்துவின் சீக்கிர வருகையைக்குறித்த விஷயத்தில், உலகம் முன்பைவிட ஒரு மிகவும் தீர்மானிக்கப்பட்ட நம்பிக்கையின்மையின் நிலையில் இருக்கின்றது. உலக மக்கள் நேர நிர்ணயக்காரர்களின் தோல்விகளை அருவருப்புடன் நோக்குகின்றனர். மனிதர்கள் அதிகமாக வஞ்சிக்கப்பட்டுவிட்டபடியால் எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்ற தேவனுடைய வார்த்தையின் ஆதாரப்பூர்வமான சத்தியத்திலிருந்தும் திரும்பிச் சென்றுவிடுகின்றனர்.— 4வு 307 (1879).

கர்த்தர் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் வந்துவிடுவார் என்று சகோதரர் (E.P.) டேனியல்ஸ் முன்போலவே நேரத்தை நிர்ணயம் செய்து கூறியிருப்பதை நான் அறிந்திருக்கின்றேன். நாம் நேரத்தை நிர்ணயம் செய்கிறவர்கள் என்ற கருத்து வெகுதூரம் பரவி விடாது என்று நான் இப்பொழுது நம்பியிருக்கின்றேன். அப்படிப்பட்ட கருத்துக்கள் கூறப்பட வேண்டாம். அவைகள் எந்த நன்மையும் செய்யாது. அப்படிப்பட்ட எந்த ஒரு அடிப்படைகளின்மீதாகவும், ஒரு எழுப்புதலைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டாம். ஆயினும், கொள்கைவெறியர்கள் எதையாகிலும் பிடித்துக்கொண்டு, ஒரு கிளர்ச்சியை உருவாக்கி, கர்த்தருடைய ஆவியை துக்கப்படுத்திவிடாதபடிக்கு, பேசப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும் போதிய எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஜனங்களின் வெறி உணர்ச்சிகளை நாம் தூண்டிவிடவேண்டியதில்லை; அப்படிச் செய்வோமாயின் உணர்ச்சிகள் கிளர்ச்சியடையும்; கொள்கை தன் கட்டுப்பாட்டை இழக்கும்; தீங்கிழைப்பதில் ஒரு வல்லமையாக இருக்கின்ற தனது தந்திரங்களையும் மாய்மாலங்களையும், மெல்ல மெல்ல உட்புகுத்தி, தன்னால் இயன்றமட்டும் முழுமூச்சோடு சாத்தான் கிரியைசெய்து கொண்டிருப்பதால், நாம் எல்லாப் பக்கங்களிலும் காக்கப்பட்டிருக்கவேண்டியது அவசியம் என நான் உணருகின்றேன். உணர்ச்சியைத் தூண்டக்கூடிய எந்த ஒரு காரியமும் ஒரு தவறான அடிப்படையின்மீதாக ஒரு மன எழுச்சியை உண்டாக்கும். அப்படிப்பட்ட காரியங்களின் எதிர்விளைவு நிச்சயமாய் வரும் என்பதால், அதைக்குறித்து நாம் கண்டிப்பாக அச்சங்கொள்ள வேண்டும். —Letter 34, 1887.

தேவனால் நடத்தப்படுகின்றோம் என்று உரிமைப்பாராட்டிக்கொள்கின்ற, தாங்கள் அனுப்பப்படுவதற்கு முன்னதாகவே ஓடி, நிறைவேறாத தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்கான நாளையும் தேதியையும் குறிப்பாக அளிக்கக்கூடிய சபையிலுள்ள நபர்களால் உருவாக்கப்படும் பொய்யான மற்றும் கொள்கைத் தீவிரவாத இயக்கங்கள் எப்பொழுதும் இருக்கும். அவர்களது தொடர்ச்சியான தோல்விகளும், தவறான பாதைகளுக்குள் நடத்திச் செல்லுதலும், குழப்பத் தையும் அவிசுவாசத்தையும் ஏற்படுத்துவதால், அவர்களை அப்படிச் செய்யவைப்பதில் சத்துரு பிரியமாயிருக்கின்றான்.—2SM 84 (1897).

### 1844—க்குப் பின்பு கால தீர்க்கதரிசனம் இல்லை

இந்தக் கொள்கைத் தீவிரவாதமுடைய குழுக்கள், ஆத்துமாக்களின் எதிராளியானவனுடைய பணியைச் செய்து கொண்டிருந்தன என்று, ஜாக்சன் பட்டண முகாம் கூட்டத்தில் நான் தெளிவாய்க் குறிப்பிட்டேன். அவர்கள் இருளில் இருந்தனர்; கிருபையின் காலம் அக்டோபர் 1884—ல் முடிவடையும் என்ற மாபெரும் வெளிச்சத்தைப் பெற்றிருப்பதாக உரிமைபாராட்டிக் கொண்டனர். 1844 முதல் தேவனால் கொடுக்கப்பட்ட தூதில், குறிப்பிட்ட காலம் குறித்து (கால தீர்க்கதரிசனம் குறித்து) ஒன்றும் கிடையாது என்று கர்த்தர் எனக்குக் காண்பிக்கப் பிரியப்பட்டிருந்தார் என்பதை பகிரங்கமாக அங்கேயே நான் குறிப்பிட்டேன்.—2SM 73 (1885).

1844—ல் தீர்க்கதரிசன கால கட்டங்களின் முடிவிற்கும், நமது கர்த்தருடைய வருகையின் நேரத்திற்கும் இடையில், எந்த ஒரு கால நிர்ணய அறிவிப்பும் இடைபடாதபடிக்கு, காத்திருப்பதும் விழித்திருப்பதுமே, நமது நிலைப்பாடாக இருந்துகொண்டிருக்கின்றது.—10MR 270 (1888).

குறிப்பிட்ட காலத்தைக்குறித்த வேறொரு தூது ஜனங்களுக்கு இராது. 1842—ல் தொடங்கி 1844 வரையுள்ள இந்த கால கட்டத்திற்குப்

பிற்பாடு, (வெளி. 10:4–6) எந்த ஒரு குறிப்பிட்ட தீர்க்கதரிசன கால அளவும் இருக்கவியலாது. மிக நீண்ட காலக் கணக்கீடு, 1844–ன் இலையுதிர்க் காலத்துடன் முடிவடைகின்றது.—7BC 971 (1900).

### கிறிஸ்துவின் வருகையை தனது காலத்தில் எலன் உவைட் எதிர்பார்த்தார்

மாநாட்டிற்கு வந்திருந்த ஒரு குழு எனக்குக் காண்பிக்கப்பட்டது. “சிலர் புழுக்களுக்கு இரையாவார்கள், சிலர் கடைசி ஏழு வாதைகளில் பலியாவார்கள், சிலர் பூமியின்மீது உயிரோடிருந்து இயேசுயின் வருகையில் மறுரூபமாவதற்கு எஞ்சியிருப்பார்கள்” என்று தூதனானவன் கூறினான்.—1T 131, 132 (1856).

காலம் குறுகினதாயிருக்கின்றபடியால், நாம் ஜாக்கிரதையோடும் இருமடங்கு ஆற்றலோடும் வேலை செய்யவேண்டும். நமது பிள்ளைகள் கல்லூரிகளுக்குள் ஒருபோதும் நுழைய முடியாமற் போகலாம்.—3T 159 (1872).

இப்பொழுது பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதென்பது உண்மை யிலேயே ஞானமான காரியமல்ல. காலம் குறுகினதாயிருக்கின்றது. கடைசி நாட்களின் தீங்குகள் நம்மீது வரக் காத்திருக்கின்றன. சிறு பிள்ளைகள், இதற்கு முன்னதாக அதிக அளவில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.—Letter 48, 1876.

உலகத்தின் இந்த யுகத்தில், பூமிக்குரிய சரித்திரத்தின் காட்சிகள் விரைவில் முடிவடைகின்ற வேளையிலே, இதுவரை அப்படி ஒருபோதும் இருந்திராத இக்கட்டுக் காலத்திற்குள்ளாக நாம் நுழையவிருக்கும் நேரத்தில், ஒப்பந்தம் செய்யப்படுகின்ற திருமணங்கள் மிகவும் குறைந்துவிடுமானால், ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு சாராராகிய அனைவருக்கும் அது சாலச் சிறந்ததாயிருக்கும்.—5T 366 (1885).

குறிப்பிட்ட அந்த மணிநேரம் வரும்; அது வெகுதூரத்தில் இல்லை. அந்த மணி வேளையில், இப்பொழுது அதை விசுவாசிக்கின்ற நம்மில் சிலர், பூமியின்மீது உயிரோடிருந்து, முன்னுரைக்கப்பட்டது நிறைவேறுகின்றதைக் காண்பார்கள். மலை, சமவெளி, சமுத்திரத்திலிருந்தும், பூமியின் கடைமுனை யிலுள்ள பகுதிகளிலிருந்தும், எதிரொலிக்கின்ற பிரதான தூதனுடைய சத்தத்தையும் தேவ எக்காள சத்தத்தையும் அவர்கள் கேட்பார்கள்.—RH July 31, 1888.

பாவத்தை மன்னிக்கின்ற மீட்பராகிய கிறிஸ்துவினுடைய நீதியின் வெளிப்பாட்டிலே, மூன்றாம் தூதனுடைய உரத்த சத்தம் ஏற்கனவே

துவங்கிவிட்டபடியால், சோதனையின் காலம் இப்போதே நம்மீது வந்திருக்கின்றது.—1SM 363 (1892).

### தாமதம் விளக்கப்படுதல்

ஒருவேளை எஜமான் வருவாரென்றால், அநேகர் ஆயத்தமற்றவர் களாகக் காணப்படுவார்கள் என்பதனால், மனச்சோர்வான நீண்ட இரவு சோதித்துக்கொண்டிருந்தாலும், காலை நேரம் கிருபையாக தள்ளிபோடப் பட்டுக்கொண்டிருக்கின்றது.—2T 194 (1868).

1844–ல் ஏற்பட்ட மாபெரும் ஏமாற்றத்துக்குப்பிற்பாடு, அட்வென்டிஸ்டுகள் தங்களது விசுவாசத்தை உறுதியாய் காத்துக்கொண்டு, திறந்திருக்கின்ற தேவனுடைய வழிநடத்துதலை ஐக்கியத்துடன் தொடர்ந்து பின்பற்றி, மூன்றாம் தூதனின் தூதினைப் பெற்று, பரிசுத்த ஆவியின் வல்லமையோடு உலகத்திற்கு அதைக் கூறி அறிவித்திருந்திருப்பார்களானால், அவர்கள் தேவனுடைய இரட்சிப்பைக் கண்டிருந்திருப்பார்கள். கர்த்தரும் அவர்களது முயற்சிகளுடன் வல்லமையாக செயல்பட்டிருந்திருப்பார்;ஊழியமும் நிறைவடைந்திருந்திருக்கும். கிறிஸ்துவும் தமது ஜனங்களுக்கு அவர்களது பலனை அளித்து, அவர்களை அழைத்துச்செல்வதற்கு இதற்கு முன்னமே வந்திருந்திருப்பார்… கிறிஸ்துவின் வருகை, இப்படியாக தாமதமடைய வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாக இருக்கவில்லை…

பூர்வ இஸ்ரவேலரை, அவர்களது அவிசுவாசமும் முறுமுறுப்பும் கலகமும், நாற்பது ஆண்டுகளாக கானான் தேசத்திற்கு வெளியே அடைத்துப்போட்டது. அதே பாவங்கள்தான் இன்றைய ஆவிக்குரிய இஸ்ரவேலர்களை, பரலோகக் கானானுக்குள் நுழைய விடாதபடிக்குத் தாமதப்படுத்தியிருக்கின்றது. இவ்விரு காரியத்திலும், தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பொறுத்தமட்டில், எவ்வித குறையும் இருந்ததில்லை. கர்த்தருடைய ஜனங்கள் என்று கூறிக்கொள்ளுகிறவர்கள் மத்தியிலே காணப்படுகின்ற அவிசுவாசமும், உலகப்பற்றும், அர்ப்பணிக்காத நிலையும், பூசலுமே, நம்மை பாவமும் வருத்தமும் நிறைந்த இந்த உலகத்திலே அநேக வருடங்களாக இருக்கும்படியாகச் செய்துவிட்டது.—Ev 695, 696 (1883).

கிறிஸ்துவின் சபை, நியமிக்கப்பட்ட தனது பணியைக் கர்த்தர் அபிஷேகித்தவிதத்தில் செய்திருந்திருக்குமானால், இதற்கு முன்னதாகவே முழு உலகமும் எச்சரிக்கப்பட்டிருந்திருக்கும்; நமது கர்த்தராகிய இயேசுவும் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும், நமது பூமிக்கு வந்திருந்திருப்பார்.—DA 633, 634 (1898).

**தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிபந்தனைக்குட்பட்டவை**

தேவதூதர்கள், மனிதருக்கான தங்களது தூதுகளில், காலம் மிகவும் குறுகினதாயிருக்கின்றது என்றே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.[1] அப்படிப்போலவே, எனக்கும் அது எப்பொழுதும் காட்டப்பட்டிருக்கின்றது. இந்தத் தூதின் ஆரம்ப நாட்களில் நாம் எதிர்பார்த்ததைவிடவும், காலம் அதிகமாகவே நீண்டு கொண்டிருக்கின்றது என்பது மெய்தான். நாம் எதிர்பார்த்தவுடனேயே நமது இரட்சகர் வந்துவிடவில்லை. அப்படியானால், கர்த்தருடைய வார்த்தை பொய்த்துப்போய்விட்டதா? ஒருபோதும் இல்லை! தேவனுடைய வாக்குத்தத்தங்களும் எச்சரிப்புகளும், ஒன்றுபோலவே நிபந்தனைக்குட்பட்டவை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.[2]...

இஸ்ரவேல் புத்திரர் செய்ததுபோலவே, கீழ்ப்படியாமையினிமித்தம் நாமும் இந்த உலகத்திலே இன்னும் அநேக ஆண்டுகள் தொடர்ந்து இருக்கவேண்டியிருக்கலாம். ஆயினும், கிறிஸ்துவினிமித்தம் அவரது ஜனங்கள், தங்களது தொடர்ச்சியான சொந்தத் தவறான நடக்கையின் விளைவுகளைக்கொண்டு, தேவன்பேரில் குற்றஞ்சுமத்தி பாவத்தின்மேல் பாவத்தைக் கூட்டிக்கொள்ளக்கூடாது.—Ev 695, 696 (1901).

**கிறிஸ்து எதற்காகக் காத்திருக்கின்றார்**

கிறிஸ்துவாகிய தம்மை சபை வெளிப்படுத்தவேண்டும் என்று அவர் ஏக்கம் நிறைந்த ஆர்வத்துடன் காத்துக்கொண்டிருக்கின்றார். கிறிஸ்துவின் குணாதிசயம் அவரது ஜனங்களில் பரிபூரணமாய் பிரதிபலிக்கப்படும்போது மாத்திரமே, அவர்களைத் தம்முடையவர்களாக உரிமைபாராட்டிக்கொள்ள அவர் வருவார்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்திருப்பதுமட்டுமல்ல, அதைத் துரிதப்படுத்துவதும் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சிலாக்கியமாகவிருக்கின்றது. அவரது நாமத்தை அறிக்கையிடுகின்ற அனைவரும், அவரது மகிமைக்கென்று கனிகள் கொடுப்பார்களானால், எவ்வளவு சீக்கிரமாக உலகம் முழுவதிலும் சுவிசேஷ விதை விதைக்கப்படும். வெகுசீக்கிரத்தில் கடைசி மாபெரும் அறுவடை முதிர்ச்சியடையும்; கிறிஸ்துவும் தமது விலையேறப்பெற்ற தானியத்தைக் கூட்டிச்சேர்க்க வந்திடுவார்.—COL 69 (1900).

சுவிசேஷத்தை உலகத்திற்கு அளிப்பதின்மூலம், நமது கர்த்தருடைய வருகையை துரிதப்படுத்துவது நம்முடைய வல்லமைக்கு உட்பட்டதாக இருக்கின்றது. நாம் கர்த்தருடைய நாளை எதிர்பார்ப்பவர்களாக மட்டுமின்றி, அதைத் துரிதப்படுத்தவேண்டியவர்களாகவும் இருக்கிறோம். (2 பேது. 3:12).—DA 633 (1898).

அவருடன் சேர்ந்து ஒத்துழைப்பதின்மூலம், இந்த துன்பத்தின் காட்சியை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதை, நம்முடைய வல்லமையால் கூடும்படி அவர் செய்திருக்கின்றார்.—Ed 264 (1903).

**தேவனுடைய பொறுமைக்கும் ஒரு எல்லை**

முடிவில்லாதவராகிய தேவன், எல்லா தேசங்களுடனான தமது தவறேதுமற்ற துல்லியமான கணக்கை, இன்னமும் வைத்துக்கொண்டுதான் இருக்கின்றார். அவரது இரக்கம் மனந்திரும்புதலுக்கான அழைப்புகளுடன் மென்மையாக இருக்குமட்டும், இந்தக் கணக்கு திறந்ததாகவே நிலைத்திருக்கும். ஆனால், தேவன் குறித்திருக்கின்ற ஒரு குறிப்பிட்டத் தொகையை அந்த எண்கள் அடையும்போது, அவரது கோபாக்கினையின் வேலை துவங்கிவிடும்.—5T 208 (1882).

தேவன் நாடுகளைக் குறித்ததான ஒரு பதிவேட்டினை வைத்திருக்கிறார். பரலோகத்தின் புத்தகங்களிலே அவைகளுக்கெதிரான கணக்குகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. வாரத்தின் முதலாம் நாளை மீறினால் தண்டனையளிக்கப்படும் என்பது ஒரு சட்டமாக மாறும்போது, அவைகளின் பாத்திரம் நிரம்பிவிடும்.—7BC 910 (1886).

நாடுகளைக் குறித்ததான ஒரு கணக்கீட்டை தேவன் வைத்திருக் கிறார்... தேவனுடைய கிருபையின் தீர்மானிக்கப்பட்ட எல்லையை அக்கிரம் முழுமையாக எட்டுகின்ற காலம் நிறைவேறும்போது, அவரது பொறுமை முடிவடையும். பரலோகத்தின் பதிவேடுகளில் குவித்துவைக்கப்பட்ட எண்ணிக்கைகள் மீறுதலின் தொகையைப் பூர்த்தி செய்யும்போது, கோபாக்கினை வரும்.—5T 524 (1889).

பிரமாணத்தை மீறுபவனை தேவனுடைய இரக்கம் நீண்ட காலமாக பொறுத்துக்கொண்டிருக்கும் வேளையில், மனிதர்கள் மென்மேலும் பாவம் செய்துகொண்டே இராதபடிக்கு, அதற்கு அப்பால் ஒரு எல்லை இருக்கின்றது. அந்த எல்லை எட்டப்படும்பொழுது, இரக்கத்தின் ஈவுகள் விலக்கிக்கொள்ளப்பட்டு, பின்பு நியாயத்தீர்ப்பின் ஊழியம் துவங்கிவிடும்.—PP 162, 165 (1890).

மனிதர்கள் தங்களது ஏமாற்றுத்தனத்திலும், கர்வத்திலும் மென் மேலும் கடந்துபோகக் கர்த்தர் அவர்களை அனுமதிக்கமாட்டார் என்ற ஒரு நிலையை அடையக்கூடிய காலம் வந்துகொண்டிருக்கிறது. அப்போது, யேகோவாவின் சகிப்புத்தன்மைக்கும் ஒரு எல்லை உண்டு என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள்.—9T 13 (1909).

யேகோவாவின் நியாயத்தீர்ப்புகள் தாமதித்துக்கொண்டே இருப்பதில்லை. அதற்கும் ஒரு எல்லை இருக்கின்றது.—PK 417 (c. 1914).

**மீறுதல் ஏறக்குறைய அதன் எல்லையை எட்டிவிட்டது**

பூமியின் குடிகள் தங்களது அக்கிரமத்தின் பாத்திரத்தை நிரப்பும் வரைக்கும், இன்னும் ஒரு குறுகிய காலம் நீடித்திருக்கும். அதன் பின்பு, இத்தனை நீண்ட காலமாக உறங்கிக்கொண்டிருந்த தேவனுடைய கோபம் விழித்தெழும். இந்த ஒளியின் தேசம், கலப்பில்லாத அவரது கோபாக்கினையின் பாத்திரத்தைக் குடிக்கும்.—1T 363 (1863).

அக்கிரமத்தின் பாத்திரம் ஏறக்குறைய நிரம்பிவிட்டது. தேவனுடைய தண்டனையளிக்கும் நீதி குற்றமுள்ளவர்கள்மீது இறங்கிவர இருக்கின்றது. —4T 489 (1880).

உலகத்திலுள்ள குடிமக்களின் துன்மார்க்கம், அவர்களது அக்கிரமத்தின் அளவை ஏறக்குறைய நிரப்பிவிட்டது. அழிவுண்டாக்குகிறவன் தன் சித்தப்படி இப்பூமியின்மீது கிரியை செய்யத்தக்கதாக, தேவன் அவனை அனுமதித்துவிடுவார் என்ற நிலையை பூமி ஏறக்குறைய எட்டிவிட்டது.—7T 141 (1902).

மீறுதல் ஏறக்குறைய அதன் எல்லையை எட்டிவிட்டது. குழப்பமான சூழ்நிலை உலகத்தை நிரப்பியிருக்கின்றது. ஒரு மாபெரும் பயங்கரம் சீக்கிரமாக மனித இனத்தின்மீது வர இருக்கின்றது. முடிவு வெகு சமீபமாயிருக்கின்றது. உலகத்தின்மீது சீக்கிரத்தில் வரவிருக்கின்ற, மூழ்கடிக்கக்கூடிய எதிர்பாராத ஒரு அதிர்ச்சியான காரியத்திற்கு, சத்தியத்தை அறிந்தவர்களாகிய நாம் ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும்.—8T 28 (1904).

**தேவனுடைய மகாநாளை**
**நமது மனங்களுக்கு முன்பாக வைத்திருக்க வேண்டும்**

நமக்கு முன்பாக மிகச் சமீபமாய் இருக்கின்றதான நியாயத்தீர்ப்பின் மாபெரும் காட்சிகளைக்குறித்துச் சிந்தித்துப் பார்க்கும்படியாகவும் எண்ணிப்பார்க்கும்படியாகவும், கண்டிப்பாக நம்மை நாமே பயிற்றுவிக்க வேண்டும். அப்படியாக, அனைத்துமே வெளியரங்கமாக்கப்படப்போகும் தேவனுடைய மகாநாளின் காட்சிகளை நமக்கு முன்பாக வைக்கும்போது, அது நமது குணத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். “சகோதரி உவைட் அவர்களே, கர்த்தர் இன்னும் பத்து ஆண்டுகளில் வந்துவிடுவார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?” என்று ஒரு சகோதரர் என்னிடம் கேட்டார்.

“இரண்டு, நான்கு அல்லது பத்து ஆண்டுகளில் அவர் வருவாரெனில், அது உங்களுக்கு என்ன மாறுதலை ஏற்படுத்தப்போகின்றது?” என்று நான் கேட்டேன். “ஏன் ஏற்படுத்தாது? பத்து ஆண்டுகளில் கர்த்தர் வந்துவிடுவார் என்று அறிந்திருந்தேனானால், நான் இப்பொழுது செய்கின்றதைக்காட்டிலும் சில காரியங்களை இன்னும் வித்தியாசமாகச் செய்வேன் என்று நான் நினைக்கின்றேன்” என்றார் அவர்.

“நீங்கள் என்ன செய்வீர்கள்?” என்று நான் கேட்டேன்.

அவர்: “ஏன், நான் என்னுடைய சொத்துக்களை விற்று, தேவனுடைய வார்த்தையை ஆராயத் தொடங்குவேன்; ஜனங்களை எச்சரிக்க முயற்சித்து, அவருடைய வருகைக்கு அவர்களை ஆயத்தப்படுத்துவேன். நான் தேவனை சந்திக்க ஆயத்தநிலையில் இருக்கும்படி தேவனிடத்தில் கெஞ்சி மன்றாடுவேன்” என்றார்.

அப்பொழுது நான்: “ஒரு வேளை, கர்த்தர் இருபது ஆண்டுகளில் வரப்போகிறதில்லை என்று நீங்கள் அறிந்திருந்தால், நீங்கள் வித்தியாசமாக வாழ்ந்துகாட்டுவீர்களா?”என்று கேட்டேன். அவர்: “நான் வாழ்ந்துகாட்டுவேன் என நினைக்கின்றேன்”… என்றார்.

கர்த்தர் பத்து ஆண்டுகளில் வர இருக்கின்றார் என்பதை தான் அறிந்திருந்தால், ஒரு வித்தியாசமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதாக அவர் கூறும் வார்த்தை, எத்தனை சுயநலமுடையதாயிருக்கின்றது! ஏன், ஏனோக்கு 300 ஆண்டுகள் தேவனோடு சஞ்சரிக்கவில்லையா! ஒவ்வொரு நாளும் நாம் தேவனோடு நடக்க இயலும் என்பதும், நாம் விழித்திருந்து காத்திருக்கவில்லையென்றால் நமக்குப் பாதுகாப்பு கிடையாது என்பதும் நமக்கு ஒரு பாடமாக இருக்கின்றது.—Ms 10, 1886.

## காலம் குறுகியது

தேவனுடைய நோக்கத்திலும் ஊழியக்காரியத்திலும், தற்பொழுது அக்கறையற்று, சோம்பேறித்தனமாக இருக்கின்றவர்களுக்கு, இரவு பகலாக கர்த்தர் இளைப்பாறுதலைத் தராதிருப்பாராக. முடிவு சமீபமாயிருக்கின்றது. காலம் குறுகியதாயிருக்கின்றது என்பதை எப்பொழுதுமே நமக்கு முன்பாக வைத்திருக்க வேண்டும் என்று இயேசு நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.—Letter 97, 1886.

மீட்கப்பட்டோருடன் சேர்ந்து, பொற்சுரமண்டலங்களுடனும் மகிமை யின் கிரீடங்களுடனும், நமக்குமுன்பாக உள்ள அளவிட முடியாத நித்தியத் துடனும், கண்ணாடிக் கடலருகே நிற்கும்பொழுதுமாத்திரமே, காத்திருந்த

கிருபையின் கால அளவு எவ்வளவு குறுகினதாயிருந்தது என்பதை நாம் உணருவோம்.—10MR 266 (1886). ★

[1] ரோமர் 13:11,12; 1 கொரி. 7:29; 1 தெச. 4:15,17; எபி. 10:25; யாக். 5:8,9; 1 பேதுரு 4:7; வெளி. 22:6,7;

[2] எரே. 18:7–10; யோனா 3:4–10.

# 4

# தேவனுடைய கடைசிக்கால திருச்சபை

### தேவனுடைய ஜனங்கள் அவரது கற்பனைகளைக் கைக்கொள்வர்

தரையிலிட்டு மிதிக்கப்பட்ட பிரமாணத்தை உயர்த்தி பிடித்துக் கொண்டும், உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டியை உலகத்திற்குக் காண்பித்துக்கொண்டும் இருக்கின்ற ஒரு சபை பூமியிலே தேவனுக்காக இருக்கின்றது...

திறப்பிலே நின்றுகொண்டு, திறப்பானதை அடைத்து, பூர்வமுதல் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களை கட்டுகின்ற சபை நிகழ்காலத்தில் உலகத்திலே ஒன்றே ஒன்றுதான் இருக்கின்றது...

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, ஏசுவின் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுகின்ற மீதமான ஜனத்தைக்குறித்து கொடுக்கப்பட்டிருக்கின்ற வர்ணனையை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற, அந்த ஒரே ஜனத்துக்கு விரோதமான ஒரு கண்டனக்குரலை எழுப்பாதபடிக்கு நாம் அனைவரும் ஜாக்கிரதையாயிருப்போமாக... தேவனுடைய நியாயப் பிரமாணத்தை நிலைநாட்டுகிறதற்கும், சத்தியத்தைப் போதிப்பதற்கும், தங்களது திறமைகளில் வேறெதற்கும் இரண்டாவதாக ஒப்பிடப்படமுடியாத, எல்லாவற்றையும்விட மேம்பட்ட நிலையிலுள்ள ஒரு விசேஷித்த ஜனம், ஒரு சபை பூமியிலே தேவனுக்கென்று இருக்கின்றது. என் சகோதரனே, ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் திருச்சபைதான் பாபிலோன் என்று உபதேசித்துக் கொண்டிருப்பாயானால் நீ தவறிழைக்கின்றாய்.[1]—TM 50, 58, 59 (1893).

### அவர்கள் இயேசுவைப் பற்றின சாட்சியை உடையவர்கள்

முடிவு சமீபித்துக் கொண்டிருக்கும்போதும், உலகத்திற்கு கடைசி எச்சரிப்பைக் கொடுக்கும் பணி நீட்டிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போதும், தேவன் தமது வழிநடத்துதலினால், மூன்றாம் தூதனுடைய தூதின் பணியுடன்,

அதன் தொடக்கத்திலிருந்து இணைத்தே தந்துள்ள சாட்சியாகமங்களின் தன்மையையும் செல்வாக்கையும்பற்றியதான ஒரு தெளிவான அறிவை, நிகழ்கால சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் பெற்றிருக்கவேண்டியது அந்த அளவிற்கு மிகவும் முக்கியமானதாயிருக்கின்றது.—5T 654 (1889).

மனிதர்கள் திட்டத்தின்மேல் திட்டத்தை வகுக்கலாம். சத்தியத்திலிருந்து மனிதர்களைக் கவர்ந்துகொண்டுபோக சத்துருவானவன் நாடலாம். ஆயினும், சகோதரி உவைட் மூலம் கர்த்தர் பேசியிருக்கின்றார் என்றும், அவரிடத்தில் ஒரு தூதையும் கொடுத்திருக்கின்றார் என்றும் விசுவாசிக்கின்ற அனைவரும் இந்தக் கடைசி நாட்களில் வரப்போகின்ற அநேக வஞ்சகங்களிலிருந்தும் பாதுகாப்பாயிருப்பார்கள்.—3SM 83, 84 (1906).

தரிசனங்களைப் பெறுவதாக சொல்லிக்கொள்ளுகிறவர்கள் எழும்புவார்கள். தரிசனம் தன்னிடத்திலிருந்து வந்திருக்கிறதற்கான தெளிவான ஆதாரத்தை தேவன் உங்களுக்குக் கொடுக்கும்பொழுது அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அயல்நாடுகளிலும் அமெரிக்காவிலும், ஜனங்கள் அதிகமதிகமாக இதைக்குறித்து தவறான வழியில் நடத்தப்பட இருப்பதால், வேறு எந்த ஆதாரத்தின் அடிப்படையிலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டாம்… —2SM 72 (1905).

### அவர்களது “சிறப்பு அடையாளமான” வேதாகம உபதேசங்கள்

1844–ல் கடந்துபோய்க்கொண்டிருந்த நேரம், பரலோகத்தில் நிகழ்வுறுகின்ற பரிசுத்தஸ்தல சுத்திகரிப்பின் காரியமும், பூமியின்மீதுள்ள தேவனுடைய ஜனங்களின் உறவைத் தீர்மானிக்கின்ற காரியமும் திகைப்புற்ற நமது கண்களைத் திறக்கின்றதான மாபெரும் நிகழ்வுகளின் ஒரு காலகட்டமாயிருந்தது. அதனோடு, முதலாம் இரண்டாம் தூதர்களுடைய தூதுகளும், “தேவனுடைய கற்பனைகளும் இயேசுவின் விசுவாசமும்” என்று பொறிக்கப்பட்டிருந்ததான கொடியை விரித்துக் காண்பித்த மூன்றாம் தூதனுடைய தூதின் காரியமும்கூட, திகைப்புறச்செய்கின்ற நமது கண்களைத் திறக்கின்றதான மாபெரும் நிகழ்வுகளின் ஒரு காலகட்டமாயிருந்தது. அவரது சத்தியத்தை நேசிக்கும் ஜனங்களால் பரலோகத்தில் இருப்பதாகக் காணப்பட்ட தேவனுடைய ஆலயமும், தேவனுடைய பிரமாணம் அடங்கிய பெட்டியுமே, இந்தத் தூதின்கீழாக இருந்த சிறப்பு அடையாளங்களில் ஒன்றாக இருந்தது. நான்காம் பிரமாணமான ஓய்வுநாளின் வெளிச்சம், தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறவர்களின் பாதையில் தனது பலமான ஒளிக்கதிர்களை வீசியது. துன்மார்க்கரின் அழியும்தன்மை, ஒரு சிறப்பான பூர்வ அடையாளமாகும். பூர்வ சிறப்படையாளங்கள் என்ற தலைப்பின் கீழ் இதற்குமேலாக என்னால் வேறெதையும் நினைவிற்குக் கொண்டுவர

இயலவில்லை.—CW 30, 31 (1889).

### ஏழாம்நாள் அட்வென்டிஸ்டுகளின் தனித்தன்மைவாய்ந்த ஊழியம்

கர்த்தர் தமது பிரமாணத்தின் களஞ்சியங்களாக, நம்மை ஏற்படுத்தியிருக்கின்றார். உண்மையான எச்சரிப்புகளுடனும், கடிந்து கொள்ளுதலுடனும், ஊக்கத்துடனும், மற்றவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய புனிதமான நித்திய சத்தியத்தை அவர் நம்மிடம் ஒப்படைத்திருக்கின்றார். —5T 381 (1885).

ஏழாம்நாள் அட்வென்டிஸ்டுகள், தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு ஜனக் கூட்டமாக, உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்களாக, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றார்கள். சத்தியம் என்னும் மாபெரும் சம்மட்டியைக்கொண்டு, அவர்களை உலகமாகிய கல்சுரங்கத்திலிருந்து வெட்டியெடுத்து, தன்னுடனான தொடர்புக்குள்ளாக கொண்டுவந்திருக்கிறார். அவர்களைத் தமது பிரதிநிதிகளாக ஏற்படுத்தி, இரட்சிப்பின் கடைசி ஊழியத்தில் தமது தூதுவர்களாக இருக்கும்படி அவர் அழைத்திருக் கிறார். அழிவுக்குரியவர்களிடம் நம்பிக் கொடுக்கப்பட்டவைகளிலேயே மகா பெரிதான சத்தியத்தின் பொக்கிஷமும், தேவனால் மனிதனுக்கு அனுப்பப்பட்டவைகளிலேயே மிகவும் பக்திவிநயமான மற்றும் அஞ்சத் தகுந்ததுமான எச்சரிப்புகளும், உலகத்திற்குக் கொடுக்கப்படும்படி அவர்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.—7T 138 (1902).

விசேஷித்தவிதமாக ஏழாம்நாள் அட்வென்டிஸ்டுகள், உலகத்தில் காவற்காரர்களாகவும் ஒளிகாட்டுகிறவர்களாகவும் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். அழிந்துகொண்டிருக்கின்ற உலகத்திற்கான கடைசி எச்சரிப்பு, அவர்களிடம்தான் நம்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆச்சரியமான ஒளி, அவர்கள்மேல் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தூதர்களுடைய தூதுகளைப் பறைசாற்றவேண்டிய, மிகவும் பக்திவிநயமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒரு பணி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்த பணி வேறொன்றுமில்லை. அவர்களது கவனத்தைத் திசைதிருப்பக்கூடிய வேறொன்றையும் அவர்கள் அனுமதிக்கக்கூடாது.—9T 19 (1909).

### ஏழாம்நாள் அட்வென்டிஸ்ட் சபை நிறுவப்பட்டதற்கான காரணங்கள்

நமது எண்ணிக்கை அதிகரித்தபோது, ஸ்தாபனம் போன்றதொரு அமைப்பு இல்லாவிடில் அங்கு மாபெரும் குழப்பம் விளையும் என்பதும், ஊழியத்தை வெற்றிகரமாக முன்னோக்கிக் கொண்டுசெல்லமுடியாது

என்பதும் தெளிவான காரியமாகும். ஊழியத்திற்கு ஆதரவளித்து தாங்குவதற்கும், புதிய இடங்களில் பணியை முன்னேற்றிச் செல்வதற்கும், தகுதியற்ற அங்கத்தினர்களிடமிருந்து சபைகளையும் ஊழியத்தையும் பாதுகாப்பதற்கும், சபை சொத்துக்களை நிர்வகிப்பதற்கும், அச்சகத்தின்மூலம் சத்தியத்தை வெளியீடு செய்வதற்கும், மற்றும் பல நோக்கங்களுக்காகவும் ஸ்தாபனம் மிகவும் இன்றியமையாததாக இருந்தது…

சபையிலே ஒழுங்கும் முழுமையான கட்டுப்பாடும் இருக்க வேண்டியதற்கு, ஸ்தாபனம் அத்தியாவசியம் என்ற வெளிச்சம், தேவனுடைய ஆவியால் அருளப்பட்டிருந்தது. அண்டசராசரம் முழுவதிலுமுள்ள தேவனுடைய கிரியைகளிலெல்லாம், ஒழுங்கும் கிரமமும் வெளிப்படையாய்க் காணப்படுகின்றன. ஒழுங்கு என்பது பரலோகத்தின் பிரமாணம் ஆகும். பூமியிலுள்ள தேவனுடைய ஜனங்களின் பிரமாணமும் அதுவாகவே இருக்க வேண்டும்.—TM 26 (1902).

## ஸ்தாபனம் என்பது எப்பொழுதும் அத்தியாவசியமானதே

சபைகள் ஒழுங்கினைக் கடைபிடித்து, அதனை நடைமுறைப் படுத்தக்கூடிய வகையில் முறைப்படுத்தப்படவில்லையெனில், எதிர்காலத்தைக் குறித்து நம்புவதற்கான ஒன்றும் அவைகளுக்கு இருக்காது.—1T 270 (1862).

போலியான புரட்சிகளைத் தடுப்பதற்கும், தேவனுடைய வார்த்தையால் அங்கீகரிக்கப்படாத உரிமைகோருதல்களை தவறென்று நிரூபிப்பதற்கும், மாபெரும் வல்லமையாக விளங்கக்கூடிய ஒரு முழுமையான ஸ்தாபனம் அத்தியாவசியப்படுகின்ற வேளையில், இந்த ஜனங்களிடையே உட்புகுந்து, ஊழியத்தை சீர்குலைக்கின்ற தனது முயற்சிகளில் சாத்தான் வெற்றி பெறுவானானால், ஆ! அவன் எவ்வளவாய் மகிழ்ச்சியடைவான்! ஞானமாகவும் ஜாக்கிரதையான உழைப்பாலும், உருவாக்கப்பட்டிருக்கின்ற ஸ்தாபனத்தின் அமைப்பும் ஒழுங்கும் உருக்குலைந்துபோகாதபடிக்கு, அதன் கயிறுகளை நாம் சரியான அளவில் பிடித்திருக்கவேண்டியது அவசியமாயிருக்கின்றது. இப்போதைய காலத்திற்குரிய ஊழியத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள வாஞ்சிக்கின்ற ஒழுங்கற்ற சக்திகளுக்கு அனுமதி வழங்கப்படக்கூடாது.

முடிவுகாலத்தை நாம் நெருங்கும் வேளையில், ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் மதம்சார்ந்த எந்த ஸ்தாபனத்தையும் சாராமல் தன்னிச்சையாகச் செயல்படுவார்கள் என்ற கருத்தை சிலர் பரப்பியிருக்கின்றனர். ஆயினும், ஒவ்வொரு மனிதனும் தன்னிச்சையாகச் செயல்படுதல் என்னும் அப்படிப்பட்ட ஒரு காரியம், இந்தப் பணியில் கிடையாது என்று கர்த்தரால்

நான் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றேன்.[2]—9T 257, 258 (1909).

கடைசி நெருக்கடியை நாம் நெருங்கும்போது, செயலில் ஒத்திசைவு மற்றும் ஒழுங்கு காணப்பட வேண்டிய அவசியமில்லை என்று எண்ணுவதற்குப் பதிலாக, இதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் மிகவும் ஒழுங்கும் கிரமமுமாக நாம் காணப்பட வேண்டும்.—3SM 26 (1892).

## தேவனுடைய திருச்சபையின் விசேஷித்த அதிகாரம்

தேவன் தமது சபைக்கு, விசேஷித்த அதிகாரத்தையும் வல்லமை யையும் அளித்திருக்கின்றார். அதை அவமதிப்பதாலும் அலட்சியம் செய்வதாலும் ஒருவனும் நீதிமானாக்கப்படுவதில்லை. அப்படிச் செய்யும்போது அவர் தேவனுடைய சத்தத்தை அலட்சியம் செய்கிறார்.—3T 417 (1875).

வானத்தின் கீழே மிக உயர்ந்த வல்லமையை, தேவன் தமது திருச்சபைக்கு அளித்திருக்கின்றார். சபையில் அறிவுத்திறனுள்ள அவரது ஒருங்கிணைக்கப்பட்ட மக்களில் வெளிப்படுகின்ற தேவனுடைய சத்தமே மதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.—3T 451 (1875).

## ஆவிக்குரிய பெலவீனம் மற்றும் குருட்டாட்டத்தின் ஒரு காலம்

சபைகள் எங்கிலும் ஒரு சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று, மின்னப்பாலிஸ் கூட்டத்தில் நான் குறிப்பிட்டிருந்ததெல்லாவற்றிலும் உறுதியாயிருந்தேன். சபைகளில் சீர்திருத்தங்கள் கண்டிப்பாக செயலாற்றப்பட வேண்டும். ஏனெனில், மாபெரும் வெளிச்சத்தினாலும், விசேஷித்த வாய்ப்புகள் மற்றும் சிலாக்கியங்களினாலும், ஆசீர்வதிக்கப்பட்டிருந்த ஜனத்தின்மீது ஆவிக்குரிய பெலவீனமும் குருட்டாட்டமும் நிலவியிருந்தது. சீர்திருத்தவாதிகளைப்போல அவர்கள் ஸ்தாபனம் சார்ந்த சபைகளைவிட்டு வெளியே வந்திருந்தனர். ஆயினும், அவர்களது முந்தைய சபைகள் செயல்பட்டதற்கு ஒத்ததான ஒரு பகுதியை அவர்கள் இப்பொழுது செயல் படுத்தினர். இன்னொரு வெளியேற்றத்திற்கான[3] அவசியம் எழும்பாது என்று நாங்கள் நம்பினோம். சமாதானக் கட்டுகளினால் “ஆவியின் ஒருமையைக்” காத்துக்கொள்வதற்கு நாங்கள் ஜாக்கிரதையாயிருக்கும்போது, குருட்டுப் பிடிவாதத்திற்கு விரோதமாக எழுத்தால் அல்லது குரலால் எதிர்ப்பைத் தெரிவிப்பதை நாங்கள் நிறுத்தமாட்டோம்.—EGW'88 356, 357 (1889).

தங்களது வெளிச்சத்திற்காகப் பெருமைப்பட்டுக்கொண்டு, அதே வேளையில் அதில் நடக்கத் தவறுகின்றவர்களைப்பற்றி கிறிஸ்து கூறுவதாவது: “நியாயத்தீர்ப்பு நாளிலே உங்களுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும்

என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வானபரியந்தம் (சிலாக்கியத்தின் அடிப்படையில்) உயர்த்தப்பட்ட (மாபெரும் வெளிச்சத்தைப் பெற்றிருக்கிற ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் மக்களே)[4] கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள்வரைக்கும் நிலைத்திருக்கும்"—RH Aug. 1, 1893.

சபை லவோதிக்கேயா நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றது. தேவனுடைய பிரசன்னம் அவள் நடுவில் இல்லை.—1NL 99 (1898).

### சபைத் தலைமையகத்தில் அதிகார துஷ்பிரயோகம்

தவறான மனோபாவங்களினாலும் தவறான கொள்கைகளினாலும், ஜெனரல் கான்.்.பரன்சும் கறைபட்டதாக மாறிக்கொண்டு வருகின்றது…

மனிதர்கள் தங்களது ஆளுகையின்கீழ் இருக்கின்றவர்களைப் பாதகமான முறையில் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர். தனி நபர்களை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு உறுதிபூண்டவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள்; அவர்கள் ஆளுகை செய்வார்கள் அல்லது அழிப்பார்கள்…

பதவி மனிதர்களை தெய்வங்களாக்கிவிட்டதைப்போல நினைத்துக் கொண்டு, மற்றவர்களை அடக்கியாளக்கூடிய வகையில் உருவாகி யிருக்கின்ற வல்லமை, எனக்கு அச்சத்தைத் ஏற்படுத்துகின்றது; அச்சத்தை ஏற்படுத்தித்தான் ஆகவேண்டும். எவ்விடத்தில் எவரால் பயிற்சிக்கப்பட்டாலும், இது ஒரு சாபமே.—TM 359–361 (1895).

ஒரு சில மனிதருக்கு முற்றிலும் அளவுக்கதிகமான கனமான பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும், சிலர் தேவனைத் தங்கள் ஆலோசகராக ஏற்படுத்திக்கொள்வதில்லை. அயல்நாடுகளில் ஊழியத்தின் அவசியங்களைப்பற்றி இத்தகைய மனிதர்களுக்கு என்ன தெரியும்? தகவல் கேட்டு அவர்களிடம் வருகின்ற கேள்விகளுக்கு எப்படித் தீர்மானிப்பதென்று அவர்கள் எப்படி அறிவார்கள்? எழுதுவதில் தாமதமே இல்லாதிருந்தாலும், அயல் நாடுகளிலுள்ளவர்கள் தங்களது கேள்விகளுக்கான பதிலைப் பெறுவதற்கு மூன்று மாதங்கள் ஆகக்கூடும்.—TM 321 (1896).

தூர தேசங்களில் வசிக்கின்றவர்கள், பேட்டில் கிரீக்கிற்கு (அப்போதைய தலைமையகம்) முதலாவது எழுதி அனுமதி பெறாத பட்சத்தில், தங்கள் மனம் தங்களுக்குச் சரி என்று சொல்லுவதை செய்யமாட்டார்கள். முன்னேறிச் செல்வதற்கு முன்னதாக, அவ்விடத்திலிருந்து சரி அல்லது வேண்டாம் என்ற

பதிலைப் பெறுவதற்கு அவர்கள் காத்திருப்பார்கள்.—SpT-A(9) 32 (1896).

ஜெனரல் கான்.்.பரன்சின் தலைவராக இருப்பதற்கு, ஒரு மனிதனைத் தெரிந்துகொள்ளுவது ஞானமற்றதாகும். ஜெனரல் கான்.்.பரன்சின் பணி விரிவடைந்திருக்கின்றது. சில காரியங்கள் அவசியமில்லாமல் குழப்பத்துக் குள்ளாக்கப்பட்டிருக்கின்றன. பகுத்தறியும் காரியம் குறைவுபட்டிருப்பது எனக்குக் காண்பிக்கப்பட்டது. பணித்தளம் ஒவ்வொரு பிரிவாகப் பிரிக்கப்பட வேண்டும், அல்லது தற்போது நடைமுறையில் உள்ள காரியங்களில் மாற்றம் கொண்டு வருவதற்கு, வேறு ஏதாவது திட்டம் தீட்டப்பட வேண்டும்.[5]—TM 342 (1896).

### ஞானமற்ற தலைவர்கள் தேவனுக்காகப் பேசுவதில்லை

ஊழியம் எப்படி செய்யப்பட வேண்டும் என்று ஆலோசனையளிப்பதில், அதிகாரப் பூர்வமானதாகக் கருதப்பட்டு வந்திருந்த பேட்டில் கிரீக்கிலிருந்து வரும் சத்தம், இனி தேவனுடைய சத்தமாக இருக்கப்போவதில்லை.—17MR 185 (1896).

சில ஆண்டுகள் மட்டும்தான், ஜெனரல் கான்.்.பரன்சின் சத்தத்தை நான் தேவனுடைய சத்தமாக கருதியிருந்திருக்கின்றேன்.—17MR 216 (1898).

நமது தலைமையகமும் அதன் அதிகாரிகளும், பரிசுத்தமான இடத்தில் நின்று ஜனங்களுக்காகப் பேசுகின்ற தேவனுடைய சத்தமாக இருப்பார்கள் என்று, நாம் நம்பியிருந்ததெல்லாம் கடந்த கால நிலையாக இருக்கின்றது.—GCB April 3, 1901, p. 25.

### புதியதொரு ஸ்தாபனம் அவசியமில்லை

கிருபையின் கால முடிவையும், தேவனுடைய ஜனங்களிடையே ஏற்பட இருக்கின்ற அசைவையும்குறித்த, அநேக பத்திகளை சாட்சியாகமங் களிலிருந்து (Testimonies) எடுத்து, இந்த ஜனங்களிடமிருந்து வெளியே வருகின்ற தூய்மையும் பரிசுத்தமுமாக எழும்பக்கூடிய மக்களைக்குறித்து நீங்கள் பேசக்கூடும். ஆயினும், இப்படிப்பட்ட காரியங்கள் அனைத்தும், தற்போது சத்துருவானவனை களிப்படையச்செய்கின்றது… நீங்கள் ஊக்குவித்தக் கருத்துக்களை அநேகர் ஏற்றுக்கொண்டு, அதைக்குறித்துப் பேசி அதன்படி செயல்படுவார்களானால், ஏழாம் நாள் அட்வெண்டிஸ்ட் மக்கள் மத்தியிலே இதுவரை காணப்படாத மிகப்பெரிய சமயவெறிகொண்ட கிளர்ச்சிகளை நாம் காணலாம். இதைத்தான் சாத்தானும் விரும்புகின்றான்.—1SM 179 (1890).

ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் ஜனங்களை (சபையை) பாபிலோன் என்று அழைக்கவும், தேவனுடைய ஜனங்களை அதிலிருந்து வெளியே வரும்படிக்கு அழைக்கவும்தக்கதான ஒரு செய்தியையும் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கவில்லை. இதைக்குறித்து நீங்கள் கொடுக்கக்கூடிய அத்தனை காரணங்களும் எனக்கு மதிப்புள்ளதல்ல. ஏனெனில், இப்படிப்பட்ட செய்திக்கு எதிராக போதுமான வெளிச்சத்தை கர்த்தர் எனக்குக் கொடுத்திருக்கின்றார்…

கர்த்தர் தமது சபையை நேசிக்கின்றார் என்பதை நான் அறிவேன். இந்த சபை, ஒழுங்குமுறை குலைக்கப்படவோ அல்லது தனித்தனி இயக்கமாக சிதறடிக்கப்படவோ கூடாது. இதில் சிறிதளவுகூட எந்த ஒரு உடன்பாடும் இல்லை. அப்படி நடக்கும் என்பதற்கு, எந்த ஒரு சிறிதளவு ஆதாரமும் இனி இருக்கப்போவதும் இல்லை.—2SM 63, 68, 69 (1893).

என் சகோதரர்களே, நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தர் தமது வேலையைச் செய்வதற்கு ஒழுங்குபடுத்தப்பெற்ற அமைப்பு ஒன்றை தனக்கு வைத்திருக்கின்றார். தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகின்ற ஜனங்களாக ஒழுங்குபடுத்தப் பெற்றிருக்கும் அமைப்பிலிருந்து யாதொருவர் தங்களை விலக்கிக் கொள்ளும்போது, அப்படி அந்த நபர் தனது சொந்த மனுஷீக அளவுகோல்களால் சபையை அளக்க ஆரம்பித்து, அவர்களுக்கு விரோதமாக நியாயத்தீர்ப்பைக் கூற ஆரம்பிக்கும்போது, அவரை தேவன் வழிநடத்தவில்லை என்பதனை நீங்கள் அறிந்துகொள்ளலாம். அந்த நபர் தவறான வழியில் சென்று கொண்டிருக்கின்றார்.—3SM 17, 18 (1893).

## தேவன் அனைத்தையும் ஒழுங்குபடுத்துவார்

ஊழியம் வெற்றியடையாதோ என்று பயப்படவோ சந்தேகப்படவோ அவசியம் இல்லை. தேவன் ஊழியத்தின் தலைமை இடத்தில் இருக்கின்றார், அவர் அனைத்தையும் ஒழுங்குப்படுத்துவார். ஊழியத்தின் தலைமைப்பீடத்தில் சரிப்படுத்தப்பட வேண்டிய காரியங்கள் இருக்குமானால், தேவன் அதைக் கவனித்துக்கொள்வார். ஒவ்வொரு தவறையும் திருத்தும் கிரியையை அவர் செயல்படுத்துவார். தேவ ஜனத்தைச் சுமக்கின்ற சிறப்புவாய்ந்த கப்பலை தேவன் பத்திரமாக நடத்திச்சென்று, துறைமுகத்தினுள் கொண்டுசேர்ப்பார் என்று நாம் விசுவாசிப்போமாக.—2SM 390 (1892).

தேவனுக்கென்று ஜீவனுள்ள திருச்சபை எதுவும் இல்லையா? அவருக்கென்று ஒரு சபை இருக்கின்றது. ஆனால், அந்த சபை ஜெயம்பெற்றுவிட்ட சபையாக இல்லை; போராடிக்கொண்டிருக்கின்ற சபையாக இருக்கிறது. அதில் குறைபாடு நிறைந்த அங்கத்தினர்களும்,

கோதுமையின் மத்தியில் களைகளும் இருக்கிறதற்காக நாங்கள் வருந்துகின்றோம்.... தற்போது சபையில் தீமைகள் இருந்தாலும், உலகத்தின் முடிவுவரையிலும் காணப்பட்டாலும், பாவத்தினால் கறைபட்டும் சீர்கெட்டும் இருக்கின்ற இந்த உலகிற்கு, இந்தக் கடைசி நாட்களிலே சபைதான் ஒளியாக இருக்கவேண்டியதாகவிருக்கின்றது. பெலவீனப்பட்டும் குறைபாடுடையதாகவும் இருந்தாலும், கடிந்துகொள்ளப்பட்டு, எச்சரிக்கப்பட்டு, ஆலோசனை கொடுக்கப்படவேண்டிய அவசியமுடையதாயிருந்தாலும், சபைதான் பூமியின்மீது கிறிஸ்துவானவர் தமது மேலான கவனத்தைச் செலுத்தக்கூடிய ஒரே பொருளாக இருக்கின்றது.—TM 45, 49 (1893).

சாத்தானுடைய கோட்டை கொத்தளங்கள் ஒருபோதும் ஜெயம் பெறாது. ஆனால், மூன்றாம் தூதனின் தூது ஜெயம் பெறும். கர்த்தருடைய சேனையின் அதிபதியானவர் எரிகோவின் மதில்களைத் தகர்த்துப் போட்டதுபோல, கர்த்தருடைய கற்பனையைக் கைக்கொள்ளுகின்ற ஜனத்தார் ஜெயம்பெறுவார்கள். அவர்களை எதிர்க்கும் அனைத்து இயற்கை சக்திகளும் (மூலப்பொருட்களும்) தோற்கடிக்கப்படும்.—TM 410 (1898).

### பொறுப்புப் பகிர்ந்தளித்தலை வலியுறுத்தல்

தற்போது நமக்கு வேண்டியது, ஒரு மறு ஒழுங்கமைப்பே ஆகும். நாம் அஸ்திபாரத்திலே துவக்கி, ஒரு மாறுபட்ட கொள்கையின்மீது கட்டவேண்டியிருக்கின்றது...

வெவ்வேறு இடங்களிலும் வெவ்வேறு மாகாணங்களிலுமிருக்கின்ற, கல்வி மற்றும் பகுதி அலுவலகங்கள் சார்ந்த, நமது பலதரப்பட்ட நிறுவனங்களின் தலைமைப்பீடத்தில் நின்று கொண்டிருக்கின்ற மனிதர்கள் இங்கே இருக்கின்றார்கள். செயல்படுத்துவதற்கான திட்டங்களை வனைவதிலும் உருவாக்குவதிலும் உரிமையுடைய இவர்கள் அனைவரும், பிரதிநிதியான மனிதர்களாக நிற்க வேண்டியதிருக்கின்றது. முழுதும் பரந்துவிரிந்துள்ள பணித்தளத்தைக் கருத்திற்கொண்டால், ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்றுக்கும் மேற்பட்ட மனிதர்கள் அங்கே இருக்கவேண்டியுள்ளது. ஊழியம் பெரியதாயிருக்கின்றது. செய்யப்படவேண்டிய ஊழியத்தைத் திட்டமிடுவதற்கு, ஒரு மனித மூளையால் மாத்திரம் இயலாது.

இப்பொழுது நான் கூறிக்கொள்ள விரும்புவது: “ஊழியத்தின் இந்தப் பிரிவு அல்லது அந்தப் பிரிவு என்று கட்டுப்பாடு செய்யக்கூடிய எந்த ராஜாங்க வல்லமையையும், நமது பதவி நிலைகளில் தேவன் வைக்கவில்லை. ஒவ்வொரு ஒழுங்குமுறையிலும் அதைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சிகளினால், ஊழியம் பெரிதும் தடை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு

மறுசீரமைப்பு, ஒரு மறு ஒழுங்கமைப்பு கட்டாயம் அவசியமாயிருக்கின்றது. இன்றியமையாத தேவையான ஒரு வல்லமையும் பெலனும், செயற்குழு கூட்டங்களுக்குள்ளாக கட்டாயம் கொண்டுவரப்படவேண்டும்”[6]—GCB April 3, 1901, pp. 25, 26.

புதிய பகுதி அலுவலகங்கள், கட்டாயமாக உருவாக்கப்படவேண்டும். ஆஸ்திரேலியாவில், ஒன்றியப் பகுதி அலுவலகம் (யூனியன் கான்.ஃ.பரன்ஸ்) ஒருங்கிணைக்கப்பட்ட காரியம், தேவனுடைய ஒழுங்கின்படியானதாக இருந்தது… அறிவுரைக்காக ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள பேட்டில் கிரீக்கிற்கு கடிதத்தை அனுப்புவதும், பின்பு ஒரு பதிலைப் பெறுவதற்காக பல வாரங்கள் காத்திருப்பதும் அவசியமற்றதாக இருக்கின்றது. அதற்குப் பதிலாக, அந்த சமயத்தில் அங்கு பொறுப்பில் இருக்கக்கூடியவர்களே, என்ன செய்யப்படலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.—GCB April 5, 1901, pp. 69, 70.

### 1901–ம் ஆண்டு ஜெனரல் கான்.ஃ.பரன்ஸ் கூட்டத்தின் மறுமொழி

இந்த கான்.ஃ.பரன்ஸ் கூட்டம் துவங்கியதுமுதல், நம் மத்தியில் இருந்தது யார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இத்தகைய கூட்டத்தில் பொதுவாக காணப்படும் ஆட்சேபணைக்குரிய அம்சங்களை அப்புறப்படுத்தினவர் யார்? இக்கூடாரத்தின் நடைபாதைகளில் மேலும் கீழுமாக நடந்திருந்தவர் யார்? பரலோகத்தின் தேவனும் அவரது தூதர்களுமே ஆவர். உங்களை கிழித்து துண்டுதுண்டாக்குவதற்காக அவர்கள் இங்கே வரவில்லை. மாறாக, சரியான மற்றும் சமாதானம் நிறைந்த மனதை உங்களுக்குக் கொடுப்பதற்காகவே வந்திருந்தனர். தேவன் திட்டமிட்டிருக்கின்ற ஊழியம் தடைபடாமல் செய்யப்படுவதற்காக, அந்தகாரத்தின் வல்லமைகளை பின்னுக்குத் தள்ளி, தேவனுடைய கிரியைகளை நடப்பிப்பதற்காகவே, அவர்கள் நம் மத்தியில் இருந்தனர். தேவதூதர்கள் நம் மத்தியில் கிரியை நடப்பித்துக்கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஏற்பட்ட திருப்பங்களைக் கண்டு ஆச்சரியமடைந்தது போல, நான் ஒருபோதும் என் வாழ்வில் அதிக ஆச்சரியமடைந்ததில்லை. இது நம்முடைய கிரியை அல்ல, தேவனே இதைச் செய்தார். இது சம்பந்தமான அறிவுரை எனக்கு அளிக்கப்பட்டது. ஆயினும், இக்கூட்டத்தின் சாராம்சம் நிறைவேறித் தீருமட்டும், அவ்வறிவுரையை என்னால் முழுமையாகப் புரிந்துகொள்ளமுடியவில்லை. தேவதூதர்கள் இந்த கூட்டத்தில், மேலும் கீழுமாக நடந்து வந்திருக்கின்றார்கள். இதை நீங்கள் ஒவ்வொருவரும் நினைவிற்கொள்ளவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவர் தமது ஜனத்தின் காயங்களை சொஸ்தமாக்குவார் என்று, தேவன்

கூறியிருக்கின்றதை நீங்கள் நினைவிற்கொள்ளவேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்.—GCB April 25, 1901, pp. 463, 464.

ஜெனரல் கான்.ஃ.பரன்ஸ் கூட்டத்தின்போது, கர்த்தர் தமது ஜனத்திற்காக வல்லமையாய் கிரியை நடப்பித்தார். அந்த கூட்டத்தைக் குறித்து ஒவ்வொருமுறை நான் சிந்திக்கும்போதும், இனிமையான பக்திவிநயமான ஒரு உணர்வு என்மேல் படர்ந்து, என் ஆத்துமாவுக்கு ஒரு நன்றியுணர்வின் ஒளியை அனுப்புகின்றது. நமது மீட்பராகிய கர்த்தருடைய மதிப்பு வாய்ந்த செயல்களை நாம் கண்டிருக்கின்றோம். அவர் தமது ஜனத்திற்கு விடுதலையை அருளியிருக்கின்றபடியால், அவரது பரிசுத்த நாமத்தை நாம் துதிக்கின்றோம்.—RH Nov. 26, 1901.

ஜெனரல் கான்.ஃ.பரன்ஸ், எல்லா தனிப்பட்ட பகுதி அலுவலகங்களின் மீதும் அதிகாரம் செலுத்தாதிருக்கும்படியாக, ஒன்றியப்பகுதி அலுவலகங்களை (யூனியன் கான்.ஃ.பரன்ஸ்) ஒழுங்குபடுத்தும் காரியம் அவசியமானதாக இருந்திருக்கின்றது. பகுதி அலுவலகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம், ஒரு மனிதன்மீதோ அல்லது இரண்டு மனிதர் அல்லது ஆறு மனிதர் மீதோ மையங்கொண்டிருக்க வேண்டும் என்பதல்ல; மாறாக, வெவ்வேறான பகுதிகளில் மனிதர்களின் ஒரு ஆலோசனைக் குழு இருக்க வேண்டியுள்ளது.[7]—Ms 26, April 3, 1903.

## எஸ்.டி.ஏ ஸ்தாபனத்தின் மீதுள்ள நம்பிக்கை மறு உறுதிசெய்யப்படுதல்

தேவன் ஸ்தாபித்திருக்கின்ற அஸ்திபாரத்தை, நாம் இப்பொழுது அடிகளால் அளக்க இயலாது. நாம் இப்பொழுது, எந்தவொரு புதிய ஸ்தாபனத்திற்குள்ளும் நுழையலாகாது. அப்படி நுழைவதென்பது சத்தியத்திலிருந்து மருளவிழுந்து போவதாக அர்த்தமாகும்.—2SM 390 (1905).

ஒரு ஜனக்கூட்டமாகிய நம்மை, தேவன் தமக்கென்று ஒரு விசேஷித்த சம்பத்தாயிருக்கும்படி அழைத்திருக்கின்றார் என்று உலகம் முழுவதிலுமுள்ள ஏழாம் நாள் அட்வெண்டிஸ்ட் மக்களிடம் சொல்லுவதற்கு நான் அறிவுறுத்தப்பட்டேன். பூமியின்மீதுள்ள தேவனுடைய சபை காலத்தின் முடிவு மட்டும் சேனைகளின் கர்த்தருடைய ஆலோசனையிலும் ஆவியிலும் ஒருமித்து பூரணமாக நிற்கவேண்டுமென்று அவர் நியமித்திருக்கின்றார்.—2SM 397 (1908).

சில நேரங்களில், ஊழியத்தின் பொதுவான நிர்வாகப் பொறுப்பை யுடைய ஒரு சிறு கூட்ட மனிதர்கள், ஜெனரல் கான்.ஃ.பரன்ஸ் என்ற

பெயரில், தேவனுடைய ஊழியம் தடைபடும் விதத்தில் ஞானமற்ற திட்டங்களை செயல்படுத்த முயற்சித்தபோது, இத்தகைய சில மனிதர்களால் எடுத்துக்கூறக்கூடிய ஜெனரல் கான்.`.பரன்ஸின் குரலை, தேவனுடைய குரலாக நான் இனிமேல் கருதமுடியாது என்று கூறியிருக்கின்றேன். ஆனால், ஊழியக்களத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகளாயிருக்கும்படி, முறையாக நியமிக்கப்பட்டுள்ள ஒரு கூட்ட மனிதரராலான ஜெனரல் கான்.`. பரன்ஸின் தீர்மானங்கள் மதிக்கப்படக்கூடாது என்று நான் கூறவில்லை.

உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் தேவனுடைய சபையின் பிரதிநிதிகள் ஜெனரல் கான்.`.பரன்ஸில் கூடும்போது, அதிகாரம் உடையவர்களாயிருக்க வேண்டும் என தேவன் வகுத்திருக்கின்றார். தேவன் தமது ஊழியத்தின் செழிப்பு மற்றும் வளர்ச்சிக்காகத் திட்டஞ்செய்யக் கூடுகின்ற ஜெனரல் கான்.`.பரன்ஸின் அபிப்பிராயத்தையும் நிதானிப்பையும், சபைக்கே உரித்தான செல்வாக்கு மற்றும் அதிகாரத்தின் முழுநிறைவாகக் கொடுத்திருக்கின்றார். சிலரோ, ஒரு மனிதனுடைய அல்லது ஒரு சிறு கூட்ட மனிதருடைய கருத்திற்கும் நிதானிப்பிற்கும் இசைந்துபோய், தவறிழைக்கக்கூடிய அபாயத்தில் இருக்கின்றார்கள்.—9T 260, 261 (1909).

சிறப்பான அதிகாரத்தையும் வல்லமையையும், தேவன் தமது திருச்சபைக்குக் கொடுத்திருக்கின்றார் என்பதனைக் கருதாமல் அவமதிக்கிற எவரும் நியாயமானவராக நிரூபிக்கப்பட முடியாது. ஏனெனில், அப்படிச் செய்பவன் தேவனுடைய குரலை அவமதிக்கிறான்.—AA 164 (1911).

இஸ்ரவேலின் தேவன் தமது ஜனத்தை இன்னும் நடத்திக் கொண்டிருக்கின்றார்; முடிவுபரியந்தம் தொடர்ந்து அவர்களோடிருப்பார் என்பதை உணரும்பொழுது நான் உற்சாகமடைகின்றேன்; ஆசீர்வாதம் பெறுகின்றேன்.[8]—2SM 406 (1913).

### W. C. உவைட்டின் கருத்து

இன்னொரு திருச்சபை உருவாகுமளவுக்கு, இந்த ஸ்தாபனத்தை முற்றிலுமாக மருளவிழுந்துவிட தேவன் அனுமதிக்கமாட்டார் என்ற, அம்மையாரின் (எலன் உவைட்) உண்மையான உபதேசத்தையும், மீதமான திருச்சபையின் அனுபவத்தையும், அவர் எவ்வளவு உயர்வாக மதிப்பிட்டிருந்தார் என்பதையும் நான் திருமதி. லிடா ஸ்காட்டிடம் கூறினேன். —W. C. White to E. E. Andross, May 23, 1915, White Estate Correspondence File.

### ஆவிக்குரிய எழுப்புதல் இன்னமும் அவசியம்

(ஜெனரல் கான்.`.பரன்ஸின்) நம்பகமான பதவியில் இருக்கின்ற

மனிதர்கள், தேவசித்தத்தையும் வழியையும் பின்பற்றியிருந்திருப்பார் களானால், கடந்த ஜெனரல் கான்.ஃபரன்ஸ் கூட்டத்தில் (1910) என்னென்ன வேலைகள் செய்து முடித்திருக்கமுடியும் என்று ஒரு நாள் மதிய நேரத்திலே அமர்ந்து எழுதிக்கொண்டிருந்தேன். பெரிய வெளிச்சத்தைப் பெற்றிருந்தவர்கள் அவ்வெளிச்சத்திலே நடக்கவில்லை. கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தவேண்டியவிதத்தில் மனிதர்கள் தங்களைத் தாழ்த்தவில்லை. எனவே, பரிசுத்த ஆவி அவர்களுக்கு அருளப்படாதிருந்தது.

நான் நினைவிழந்தபோது, இதுவரைக்கும்தான் எழுதியிருந் தேன். அப்போது பேட்டில் கிரீக்கில், நான் ஒரு காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பதுபோன்று ஒரு தரிசனத்தில் காணப்பட்டேன்.

அங்கேயிருந்த கூடாரத்தின் அரங்கத்திலே கூடியிருந்தோம். ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பின்பு, ஒரு பாடல் பாடப்பட்டது. மீண்டுமாக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. மிகவும் ஊக்கமான விண்ணப்பங்கள் தேவனிடத்தில் ஏறெடுக்கப்பட்டன. அக்கூட்டம் ஆவியானவரின் பிரசன்னத்தால் அடையாளப் படுத்தப்பட்டது…

மனமார்ந்த பாவ அறிக்கைபண்ணுவதற்கு, யாதொருவரும் அதிக பெருமையுடையவர்களாக காணப்படவில்லை. செல்வாக்கு பெற்றிருந்தவர்களும், ஆனால் முன்பு தங்களது பாவங்களை அறிக்கை செய்வதற்கு தைரியம் இல்லாதவர்களாய் இருந்தவர்களுமே, இந்த வேலையை முன்னின்று நடத்தியவர்களாயிருந்தார்கள்.

அக்கூடாரத்தில் முன்பு ஒருபோதும் கேட்டிராத அளவு, மிகுந்த சந்தோஷம் கேட்கப்பட்டிருந்தது.

அதன்பின்பு, நான் தரிசனத்திலிருந்து எழும்பினேன். சில மணித்துளிகள், எங்கே இருக்கின்றேன் என்று என்னால் யூகிக்க முடியாமல் போயிற்று. என் எழுதுகோல் இன்னும் என்னுடைய கரத்திலேயே இருந்தது. “இப்படி நடக்கலாம். கர்த்தர் இவைகளையெல்லாம் தமது ஜனங்களுக்காகச் செய்ய காத்துக்கொண்டிருக்கிறார். பரலோகம் முழுவதுமே தயைபாராட்ட காத்துக்கொண்டிருக்கிறது” என்ற வார்த்தைகள் என்னிடம் சொல்லப்பட்டன. ஒரு வேளை கடந்த ஜெனரல் கான்.ஃபரன்ஸில் முழு நிறைவான வேலை செய்யப்பட்டிருக்குமானால், நாம் இந்நேரம் எங்கே இருந்திருப்போம் என்று யோசித்துப் பார்த்தேன்.—8T 104-106 (Jan. 5, 1903).

இராக்காலங்களிலே, என் முன்னதாக கடந்துசென்ற தரிசனங்களால் நான் மிகவும் ஆழமாக உணர்த்தப்பட்டேன். அநேக இடங்களிலே ஒரு மாபெரும் இயக்கம்—எழுப்புதலான ஒரு வேலை—முன்னேறிச்

சென்றுகொண்டிருப்பதைப்போல அங்கு காணப்பட்டது. நம்முடைய ஜனங்கள் தேவனுடைய அழைப்பிற்கு செவிகொடுத்தவர்களாக சரியான வரிசையில் சென்றுகொண்டிருந்தார்கள்.[9]—TM 515 (1913).

### தமது ஜனங்களிடத்தில் தேவனுடைய பொறுமை

சபை தோற்றுப்போய் இருக்கின்றது. தனது மீட்பரின் எதிர்பார்ப்பு களை நிறைவேற்றாமல், வருந்தத்தக்க விதத்தில் தோற்றுப்போய் இருக்கின்றது. இருந்தபோதும், கர்த்தர் தமது ஜனங்களிடமிருந்து தாமாக விலகிப்போய்விடவில்லை. அவர், தம் பிள்ளைகளின் தவறுகளை பொறுத்துக்கொண்டிருக்கின்றார். அவர்களிடம் ஏதோ நன்மையான காரியங்கள் காணப்படுவதால் அல்ல, சத்தியத்திற்கும் நீதிக்கும் எதிராக இருக்கின்ற ஜனங்களுக்கு முன்பாக, தேவனுடைய நாமம் கனவீனம் பண்ணப்படாதிருக்கவும், தேவனுடைய ஜனங்கள் அழிந்துபோவதில் சாத்தானின் ஏதுகரங்கள் வெற்றிக் களிப்படையாதிருக்கவும், அவர் இன்னமும் அவர்களிடம் பொறுமையாக இருந்துகொண்டிருக்கின்றார். அவர்களது அவிசுவாசத்தையும், அறிவின்மையையும், வழிவிலகிப்போகின்ற காரியங்களையும் அவர் நீண்டகாலமாக பொறுத்துக்கொண்டிருக்கின்றார். வியக்கத்தக்க பொறுமையோடும் கனிவோடும், அவர்களை நல்வழிப் படுத்தியிருக்கின்றார். அவரது அறிவுரைகளுக்கு அவர்கள் செவிகொடுப்பார் களானால், இப்படிப்பட்ட தவறான போக்கை மேற்கொள்கின்ற அவர்களது மனப்பாங்குகளை அவர் சுத்தப்படுத்தி, நித்திய இரட்சிப்புக்கென்று அவர்களைக் காத்துக் கொள்வார்; தமது கிருபையின் வல்லமையின் நித்திய நினைவுச் சின்னங்களாக அவர்களை நிலைநிறுத்துவார்.—ST Nov. 13, 1901.

நாம் நினைவுகூர வேண்டியது: சபை பெலவீனமானதாகவும் குறைபாடு நிறைந்ததாகவும் இருக்கின்றபோதிலும், அது பூமியின்மீது கிறிஸ்துவானவர் தமது மேலான கவனத்தைச் செலுத்தக்கூடிய ஒரே பொருளாக இருக்கின்றது. உள்ளார்ந்த அக்கறையுடன், அவர் தொடர்ச்சியாக அதைக் கண் காணித்துக்கொண்டும், தமது பரிசுத்த ஆவியானவரால் பெலப்படுத்திக் கொண்டும் இருக்கின்றார்.—2SM 396 (1902).

### தமக்கு உண்மையாய் இருப்பவர்களுடன் தேவன் கிரியை செய்கின்றார்

தமக்கு ஊழியஞ்செய்வதற்கென்று கர்த்தராகிய இயேசுவுக்கு எப்பொழுதுமே தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் இருக்கின்றனர். யூத ஜனங்கள் ஜீவாதிபதியாகிய கிறிஸ்துவை புறக்கணித்தபோது, அவர்

தேவனுடைய ராஜ்யத்தை அவர்களிடத்திலிருந்து எடுத்து அதைப் புறஜாதிகளிடத்தில் கொடுத்தார். இந்தக் கொள்கையின் அடிப்படையில், தேவன் தமது ஊழியத்தின் ஒவ்வொரு துறையிலும் தொடர்ந்து கிரியைசெய்வார்.

ஒரு சபை கர்த்தருடைய வார்த்தைக்கு உண்மையற்று இருப்பதை நிரூபிக்கும்போது, அவர்கள் என்ன பதவியிலிருந்தாலும், அவர்களது அழைப்பு எந்த அளவில் உயர்ந்ததாகவோ பரிசுத்தமானதாகவோ இருந்தாலும், கர்த்தர் இனி எவ்விதத்திலும் அவர்களுடன் கிரியை செய்ய இயலாது. ஆதலால், முக்கியமான பொறுப்புகளை வகிப்பதற்கு மற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் தங்களது வாழ்க்கையின் எல்லா தவறான செயல்களிலிருந்து மனந்திரும்பி, தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளாவிட்டால், தங்களது அனைத்து எல்லைகளிலும் அவர்கள் சுத்தமும் பரிசுத்தமுமான கொள்கைகளை உருவாக்கிக்கொள்ளாவிட்டால், தேவன் அவர்களை வருத்தத்துடன் சிறுமைப்படுத்தி, தாழ்மைப்படுத்துவார். அப்படிச்செய்தும் அவர்கள் மனந்திரும்பாவிட்டால், அவர்களை அவர்களது இடத்திலிருந்து நீக்கிவிட்டு, அவர்களை ஒரு நிந்தையாக வைப்பார்.—14MR 102 (1903).

### அருளப்பட்ட வெளிச்சத்தின்படி நியாயந்தீர்க்கப்படுதல்

ஆசரிப்புக்கூடாரத்திலிருக்கின்ற தராசுகளின் மூலமாக, ஏழாம் நாள் அட்வெண்டிஸ்ட் சபை நிறுக்கப்படவேண்டியதிருக்கின்றது. சபைக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களைப் பொறுத்தும் அனுகூலமான காரியங்களைப் பொறுத்தும், அது நியாயந்தீர்க்கப்படவிருக்கின்றது. விலைமதிக்க முடியாத தியாகத்தினாலே கிறிஸ்து சம்பாதித்துக் கொடுத்த நன்மைகளுக்கேற்றபடி சபையினுடைய ஆவிக்குரிய அனுபவம் ஒத்திராவிட்டால், ஊழியம் செய்வதற்கென்று கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் சபையைத் தகுதிப்படுத்தாவிட்டால், “குறையக் காணப்பட்டாய்” என்கின்ற தீர்ப்பு அதன்மீது கூறப்படும். சபைக்கு அளிக்கப்பட்டிருந்த வெளிச்சத்தினாலும், கொடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களினாலும் அது நியாயந்தீர்க்கப்படும்...

அன்போடு நெஞ்சார நேசித்து, ஊழியத்திற்காக வைத்திருந்த வசதிகளான இடங்களின் அழிவு கொடுக்கும் பக்திவிநயமான எச்சரிப்பின் கண்டனங்கள் நமக்குக் கூறுவது: “ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக” (வெளி. 2:5)[10]...

சபை தற்போது தனது சொந்த மருளவிழுகையினாலே புளித்துப் போயிருக்கின்ற நிலையிலிருந்து, தனது தவறுக்காக வருந்தி

மனந்திரும்பாவிட்டால், தன்னைத்தானே அருவருக்கும் வரை, தன் சொந்தக் கிரியைகளின் பலனையே புசிக்கும். மாறாக, தீமையை எதிர்த்து, நன்மையைத் தெரிந்துகொண்டு, அனைத்து தாழ்மையோடும் தேவனைத் தேடி, கிறிஸ்து தன்னை அழைத்திருக்கின்ற உன்னதமான அழைப்பை அடைந்து, நித்திய சத்தியத்தின் அஸ்திபாரத்தின்மீது நின்றுகொண்டு, அவளுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறவைகளை விசுவாசத்தோடே பற்றிக்கொள்வாளானால், அவள் நிச்சயமாய் குணப்படுவாள். உலகத்தின் கண்ணிகளிலிருந்து பிரிந்துசென்று, தேவன் தனக்கு அளித்திருக்கின்ற சுத்தத்திலும் எளிமையிலும் அவள் தோற்றமளித்து, மெய்யாகவே சத்தியம்தான் தன்னை விடுதலையாக்கிற்று என்பதை தெளிவுபடுத்திக் காட்டுவாள். அப்போது அவளது அங்கத்தினர்கள், மெய்யாகவே தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட அவரது பிரதிநிதிகளாய் இருப்பார்கள்.—14MR 102 (1903).

### இஸ்ரவேலரின் சரித்திரம் நமக்கு ஒரு எச்சரிப்பு

ஆதி காலத்து இஸ்ரவேலர்கள் சந்தித்த அதே ஆபத்துக்களை, இந்தக் கடைசி நாட்களிலே தேவனுடைய ஜனங்களும் சந்திக்கும்படியாக உட்படுத்தப்படுவார்கள். ஆதி இஸ்ரவேலர்கள் இடர்களில் விழுந்து அவிசுவாசத்தினாலே இளைப்பாறுதலில் பிரவேசியாமற்போனதுபோல, தேவன் தருகின்ற எச்சரிப்புகளை ஏற்றுக்கொள்ளாதவர்களும், அதேபோன்ற இடர்களில் விழுந்து போவார்கள். ஆதி இஸ்ரவேலர்கள், பரிசுத்தமடையாத இருதயங்களாலும், ஒப்புக்கொடுக்காத தங்களது சுயசித்தங்களாலுமே அநேக பெருந்துன்பங்களை அனுபவித்தார்கள். அவர்களது அவிசுவாசம், தன்னம்பிக்கை, பாவத்தைக்குறித்து வருந்தாத மனநிலை, குருட்டாட்டமான மனம் மற்றும் இருதயக்கடினத்தின் விளைவாக, இஸ்ரவேல் தேசமே இறுதியாகப் புறக்கணிக்கப்பட்டது. அவர்களது சரித்திரத்தின்மூலமாக ஒரு அபாய அடையாளம் நம்முன்பாக உயர்த்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

“சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்… நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்” (எபி. 3:12,14).—Letter 30, 1895.

### போராடுகின்ற சபை குறைபாடுள்ளது

ஆவிக்குரிய போராட்டம் போராடிக்கொண்டிருக்கின்ற சபை

வெற்றிபெற்ற சபையாக இல்லை. இந்த பூமியும் பரலோகமல்ல. தவறுசெய்கின்ற மற்றும் குறைபாடுடைய ஆண்களைக்கொண்டும் பெண்களைக்கொண்டும், சபை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், அவர்கள் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திலே பழக்குவிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப் பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு, இந்த வாழ்க்கைக்கும் இதற்குப் பின்வரும் அழியாத ஜீவனுக்கென்றும் கற்றுக்கொண்டு வருகின்றார்கள்.—ST Jan. 4, 1883.

ஒரு சிலர் சபைக்குள் நுழைந்ததுமே தங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும், தாங்கள் சந்திக்கிறவர்கள் அனைவருமே பரிசுத்தமும் பூரணமும் அடைந்தவர்களாய் இருப்பார்கள் என்றும் நினைக்கிறார்கள். ஆகவே, அவர்கள் சபை அங்கத்தினரிடம் குறைகளைக் காணும்போது, "தீயகுணம் கொண்டவர்களிடம் பழகக்கூடாது என்பதற்காகவே, உலகத்தை விட்டுவிட்டு இங்கே வந்தோம். ஆனால், இங்கேயும் தீமை இருக்கின்றது" என்று கூறுகின்றனர். மேலும் உவமையில் கூறப்பட்டுள்ள வேலைக்காரன்: "பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது?" என்று கேட்டது போன்று அவர்கள் கேட்கின்றார்கள். ஆனால், நாம் அப்படி நம்பிக்கை இழக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், சபை முழு நிறைவானதாயிருக்கின்றது என்ற முடிவுக்கு வரத்தக்கதாக, கர்த்தர் நமக்கு ஒருபோதும் உத்தரவாதம் கொடுக்கவில்லை. நம்முடைய அனைத்து வைராக்கியமும் போராடிக் கொண்டிருக்கும் சபையை பரிசுத்தமான ஜெயம்பெற்ற சபையாக உருவாக்குவதில் வெற்றியுடைதாய் இராது.—TM 47 (1893).

## ஜெயங்கொள்ளும் சபை உண்மையாயும் கிறிஸ்துவைப் போன்றும் இருக்கும்

வேலை சீக்கிரமாய் முடிவுபெறப்போகின்றது. தங்களை உண்மை யுள்ளவர்களென்று நிரூபித்த ஆவிக்குரிய போராட்டம் போராடுகின்ற சபை அங்கத்தினர்கள்தான், வெற்றிபெறுகின்ற சபையாக மாறுவார்கள்.—Ev 707 (1892).

கிறிஸ்துவின் வாழ்க்கை, தேவனுடைய அன்பின் ஒரு தெய்வீக தூதினைக்கொண்டு நிரப்பப்பட்டிருந்த, கடமை நிறைந்த ஒரு வாழ்க்கையாக இருந்தது. அந்த அன்பை அளவில்லாமல் மற்றவர்களுக்கு அளிப்பதற்கு அவர் தீவிரமான வாஞ்சையோடிருந்தார். அவரது முகத்திலிருந்து எப்பொழுதும் இரக்க உணர்ச்சி பிரகாசித்தது. அவரது நடத்தை கிருபையும் தாழ்மையும் உண்மையும் அன்பும் போன்ற குணவியல்புகளைக் கொண்டதாக இருந்தது. ஜெயம்பெறும் சபையில் இணைய விரும்புகின்ற

ஒவ்வொரு அங்கத்தினரும், முதலாவது ஆவிக்குரிய போராட்டம் போராடிக் கொண்டிருக்கின்ற தேவனுடைய சபையில், இதேபோன்ற குணங்களை கட்டாயம் வெளிக்காட்ட வேண்டும்.—FE 179 (1891). ★

[1] வெளிப்படுத்தின விசேஷ புத்தகம்—காணக்கூடிய மீதமானோர் (12:17) மற்றும் பாபிலோனில் "என் ஜனங்கள்" (18:4) என்று இருவகையான தேவனுடைய ஜனங்களைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. இந்த அதிகாரம் முதலாம் வகையினரைக் குறித்தும், "உரத்த சத்தம்," என்ற 14 ஆம் அதிகாரம் இரண்டாம் வகையினரைக் குறித்தும் விவரிக்கின்றது.

[2] மே 30, 1909 அன்று, வாஷிங்டன் D.C.யில் நடைபெற்ற ஜெனரல் கான்.ஃபரன்ஸ் கூட்டத்தில், பிரதிநிதிகளுக்கு முன்பாக Manuscript—லிருந்து வாசிக்கப்பட்டது.

[3] எலன் உவைட் அவர்களின் எழுத்திலிருந்து, ஏழாம்நாள் அட்வென்டிஸ்ட் திருச்சபை ஸ்தாபனத்தின்மீதான நம்பிக்கையைத் தான் இழக்க நேரிட்டிருக்கலாம் என்று குறிப்பிடும் நன்கு அறிமுகமான வாக்கியம் இது ஒன்று மாத்திரமேயாகும். இங்கே அம்மையார் வெளிக்காட்டியிருந்த சந்தேகம் அதற்கும் பிற்பாடு எஞ்சியிருந்த அவரது 26 ஆண்டுகால வாழ்க்கையில் ஒருபோதும் திருப்பிக் கூறப்படவில்லை.

[4] அடைப்புக்குறிகளிடப்பட்ட வாக்கியங்கள் எலன் உவைட் அவர்களால் சேர்க்கப்பட்டது.

[5] 3500 அங்கத்தினர்களும், ஆறு உள்பகுதி அலுவலகங்களும், ஏறக்குறைய முப்பது ஊழிய வேலையாட்களும், மூவர் அடங்கிய ஜெனரல் கான்.ஃபரன்ஸ் செயற்குழுவையும் கொண்ட ஏழாம்நாள் அட்வென்டிஸ்ட் திருச்சபை 1863—ல் ஒழுங்குபடுத்தப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு சிறிய ஸ்தாபனத்தைத் தலைமைதாங்கி, ஆலோசனையளித்து, நடத்துவதற்கு ஜெனரல் கான்.ஃபரன்ஸ் தலைவர் நன்கு திறம்படைத்தவராகவே இருந்தார். ஒவ்வொரு முக்கியமான கூட்டத்திலும் தனிப்பட்ட முறையில் கலந்துகொள்ளவும், கூடுதலாக அச்சகப்பணியுடன் தொடர்புடையதாயிருந்த அதிகமான வேலையில் தனது தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துவதற்கும் அவரால் முடிந்தது. இருப்பினும், 1896—ல் திருச்சபையின் ஊழியம், ஐக்கிய நாடுகளில் பெருமளவுக்குப் பரம்பி, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் ஆப்பிரிக்காவரையிலும்கூட விரிவடைந்திருந்தது. இப்படிப் பரந்து விரிவடைந்து வருகின்ற பணியை மேற்பார்வையிட்டு, வழிநடத்துவது ஒரு மனிதனால் இனிமேலும் கூடாததாக இருந்தது. உலகம் முழுவதிலும்

இருக்கின்ற நமது சபை அங்கத்தினர்கள் ஆலோசனைக்காக ஒரு மனிதனை மாத்திரம் எதிர்நோக்கியிராதபடி, பணிக்களம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதை எலன் உவைட் வலியுறுத்தினார். ஒன்றிய கான்.ஃ.பரன்ஸ் அலுவலகங்களும், உலகளாவிய மண்டலங்களும் உருவாக்கப்பட்டதன் மூலம் இது நிறைவடைந்தது.

[6] ஏப்ரல் 2, 1901–ம் ஆண்டு பேட்டில் கிரீக்கில் நடந்த ஜெனரல் கான்ப.ஃ.ரன்ஸ் கூட்டத்தில், எலன் உவைட் அவர்கள் பேசிய துவக்கமான பேச்சிலிருந்து எடுக்கப்பட்டது.

[7] 1901–ல் நடந்த ஜெனரல் கான்.ஃ.பரன்ஸ் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட ஸ்தாபனரீதியான மாற்றங்கள்குறித்த அதிகப்படியான விவரங்கட்கு SDA Encyclopedia vol. 10 of the Commentary Reference Series), revised edition. p. 1050–1053 –ஐப் பார்க்கவும்.

[8] ஜெனரல் கான்.ஃ.பரன்ஸ் கூட்டத்தில் ஏழாம் நாள் அட்வெண்டிஸ்ட் சபைக்கு, எலன் உவைட் அவர்கள் கொடுத்த கடைசியான தூதிலிருந்து எடுக்கப்பட்டது. நம்பிக்கையூட்டும் இந்த வார்த்தைகள், மே மாதம் 27, 1913–ம் ஆண்டு நடந்த கூட்டத்தில், ஜெனரல் கான்ப.ஃ.ரன்ஸ் தலைவர் A.G.டேனியல்ஸ் அவர்களால் வாசிக்கப்பட்டன.

[9] 1913–ம் ஆண்டு நடந்த ஜெனரல் கான்.ஃ.பரன்ஸ் கூட்டத்திற்கு எலன் உவைட் அவர்களின் முதலாவது தூதிலிருந்து எடுக்கப்பட்டது.

[10] உலகிலேயே மிகப்பெரியதும், மிகவும் அறியப்பட்டதுமான அட்வெண்டிஸ்ட் ஸ்தாபனமாகிய, பேட்டில் கிரீக் சுகாதார மையம், 1902–ம் ஆண்டு பிப்ரவரி 18–ம் தேதி எரிந்து தரைமட்டமானது. இதைத் தொடர்ந்து, ரிவியூ அண்ட் ஹெரால்ட் அச்சக சங்கமும்கூட 1902–ம் ஆண்டு, டிசம்பர் 30–ம் தேதி நெருப்பினால் அழிந்தது.

# 5

# மீதமானவர்களின் பக்திவாழ்க்கை

## இருமடங்கான வாழ்க்கை

வானத்தின் மேகங்களிலே இரண்டாம் முறையாக வரும் கிறிஸ்துவின் வருகைக்கு சற்று முன்னர் உள்ள இந்த யுகத்தில், யோவான் ஸ்நானகன் செய்த வேலையைப் போன்ற ஒரு வேலை செய்யப்படவேண்டும். கர்த்தரின் மாபெரும் நாளில் நிற்பதற்கென்று, மக்களை ஆயத்தப்படுத்தக்கூடிய மனிதர்களை தேவன் அழைக்கின்றார்... யோவான் கொடுத்த தூதினைப்போல நாம் கொடுக்கவேண்டுமானால், அவரைப்போன்ற ஆவிக்குரிய அனுபவம் நமக்கும் இருக்க வேண்டும். நமக்குள்ளும் அதே போன்ற வேலை கண்டிப்பாக செய்யப்படவேண்டும். நாம் தேவனை நோக்கிப்பார்க்க வேண்டும். அவ்வாறு அவரை நோக்கிப் பார்ப்பதினால் சுயத்தை விட்டு விடுவோம்.—8T 332, 333 (1904).

தேவனுடன் உள்ள தொடர்பு குணத்தையும் வாழ்க்கையையும் மேம்படுத்தும். கிறிஸ்துவின் முதல் சீடர்களைப்போல நாமும் கிறிஸ்துவுடன் இருந்திருக்கின்றோம் என்று, நம்மைக் குறித்த அறிவை மனிதர்கள் அறிந்துகொள்வார்கள். ஊழியர்களுக்கு வேறு ஒன்றும் அளிக்க முடியாத வல்லமையை இது அளிக்கும். இந்த வல்லமையை இழக்கச்செய்யும்படி அவன் தன்னை அனுமதிக்கக்கூடாது. நாம் இருமடங்கான வாழ்க்கையை வாழ வேண்டும்—அதாவது, சிந்தனை மற்றும் செயல் நிறைந்த வாழ்க்கை, அமைதியான ஜெபம் மற்றும் ஊக்கமான வேலை நிறைந்த வாழ்க்கையை வாழ வேண்டும்.—MH 512 (1905).

ஜெபமும் முயற்சியும், முயற்சியும் ஜெபமும் உங்களது வாழ்க்கை யின் வேலையாக இருக்கும். செயல்திறனும் புகழ்ச்சியுமாகிய அனைத்தும், தேவனுக்கு மாத்திரமே கொடுக்கப்படவேண்டியதுபோல் நீங்கள் ஜெபிக்க வேண்டும். கடமைகள் அனைத்தும் உங்களுக்கு மாத்திரமே சொந்தமானதுபோல் உழைக்க வேண்டும்.—4T 538 (1881).

ஒரு மனிதனும் ஜெபமின்றி ஒரு நாளோ அல்லது ஒரு மணி நேரமோ பாதுகாப்பாக இருப்பதில்லை.—GC 530 (1911).

ஜெபம் மட்டுமே செய்து, மற்ற எதுவுமே செய்யாமல் இருக்கும் ஒரு நபர் சீக்கிரத்தில் ஜெபிப்பதையும் விட்டுவிடுவார்.—SC 101 (1892).

### கிறிஸ்துவில் உறுதியாக வேரூன்றப்படல்

புயல் வந்துகொண்டிருக்கின்றது; ஒவ்வொரு மனிதனுடைய விசுவாசமும் எப்படிப்பட்டது என்பதை சோதிக்கத்தக்கதான புயல் வந்துகொண்டிருக்கின்றது.—Ev 361, 362 (1905).

ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவின் வாழ்க்கையைக்குறித்து ஒருமணிநேரம் தியானிப்பது நமக்கு நன்மையாக இருக்கும். பகுதி பகுதியாக எடுத்துக்கொள்ளவேண்டும்; நமது கற்பனை ஒவ்வொரு காட்சியையும், குறிப்பாக கடைசி நேரத்தின் காட்சிகளை தியானிக்கட்டும்.—DA 83 (1898).

கிறிஸ்துவினுடைய நீதியின்மீதான விசுவாசத்தின்மூலம் கிறிஸ்து நம் இருதயத்தில் வாசம் செய்வதென்பதே, தீமைக்கு எதிராக உள்ள ஒரே பாதுகாப்பாகும். தேவனோடு உயிருள்ள தொடர்புக்குள் நாம் இல்லையென்றால், பாவச் சோதனைகளையும், சுயநேசம் மற்றும் சுயத்தைத் திருப்திப்படுத்தும் பரிசுத்தமற்ற விளைவுகளை ஒருபோதும் எதிர்க்கமுடியாது. சில காலத்திற்கு சாத்தானோடுள்ள தொடர்பை விட்டுவிலகியதால், நாம் அநேக கெட்ட பழக்கங்களை விட்டிருக்கலாம். ஆனால், ஒவ்வொரு கணப்பொழுதும் ஆண்டவருக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுப்பதின் மூலம் தேவனோடு உயிருள்ள தொடர்பினை பெறாதவர்களாக இருந்தால், சாத்தானால் ஜெயிக்கப்படுவோம். கிறிஸ்துவுடன் நமக்கு ஒரு தனிப்பட்ட பழக்கமோ நீடித்த ஒரு தொடர்போ இல்லாவிட்டால், நமது எதிரிக்கு கீழ்ப்பட்டவர்களாக இருந்து, முடிவினில் அவனது உத்தரவை நிறைவேற்றுவோம்.—DA 324 (1898).

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவே நமது தியானத்தின் முக்கியப்பொருளாகவும், நமது உரையாடலாகவும், மிகுந்த மகிழ்ச்சியான உணர்வாகவும் இருக்க வேண்டும்.—SC 103, 104 (1892).

### பரிசுத்த ஆவியினால் வனையப்படுதல்

தேவ ஆவியானவர்மூலமாக வனையப்படத்தக்கதாக ஒப்புக் கொடுக்கப்படும்வரை, மனித இருதயம் மகிழ்ச்சியை அறியாது. ஆவியானவர் மனமாற்றமடைந்த ஆத்துமாவை, இயேசு கிறிஸ்து என்ற முன்மாதிரிக்கு ஏற்றவிதத்தில் ஒத்திருக்கச் செய்வார். ஆவியானவரது ஆதிக்கத்தின் மூலமாக தேவனுக்கு விரோதமான பகை, அன்பு மற்றும் விசுவாசத்திற்குள்ளாகவும், பெருமை, தாழ்மைக்குள்ளாகவும் மாற்றப்படும். சத்தியத்தின் அழகை,

ஆத்துமா அறிந்துகொள்ளும். குணத்தின் பூரணத்தினாலும், நேர்த்தியினாலும் கிறிஸ்துவானவர் மகிமைப்படுத்தப்படுவார்.—OHC 152 (1896).

நமது சுபாவத்தின் ஒரு உணர்ச்சியோ, மனதின் ஒரு வலிமையோ, அல்லது இருதயத்தின் ஒரு விருப்பமோ நம் கட்டுப்பாட்டின் கீழாக அல்ல, மாறாக, இவை அனைத்தும் ஒவ்வொரு கணப்பொழுதும், கண்டிப்பாக தேவ ஆவியின் கட்டுப்பாட்டின் கீழாக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது.—PP 421 (1890).

ஆவியானவர் நமது இருளை பிரகாசிக்கச்செய்து, நமது அறியாமையை நமக்கு அறிவித்து, நமது எண்ணற்ற இன்றியமையாத தேவைகளில் நமக்கு உதவிசெய்கின்றார். ஆயினும், மனம் தொடர்ந்து தேவனுக்குப் பின்னாகச் சென்றுகொண்டிருக்க வேண்டும். உலகப்பற்று உள்ளே வர அனுமதிக்கப்பட்டால், ஜெபிப்பதற்கு நமக்கு விருப்பம் இல்லையென்றால், ஞானத்திற்கும் பெலத்திற்கும் ஊற்றாக இருக்கின்ற ஆண்டவருடன் ஐக்கியப்பட நமக்கு விருப்பம் இல்லையென்றால், ஆவியானவர் நம்முடன் நிலைத்திருக்கமாட்டார்.—OHC 154 (1904).

### வேத ஆராய்ச்சியின் முக்கியத்துவம்

தேவனுடைய வார்த்தையை அனுதினமும் அப்பியாசிப்பதின் சாரத்தன்மை இல்லாமல், எந்த ஒரு மனமாற்றமடைந்த இருதயமும் இனிமையான ஒரு நிலையில் வைக்கப்பட இயலாது. தெய்வீக கிருபை அனுதினமும் கட்டாயமாக கிடைக்கப்பெற வேண்டும். இல்லையென்றால், ஒரு மனிதனும் மனமாற்றமடைந்ததில் நிலைத்திருக்கமாட்டான்.—OHC 215 (1897).

உங்களது விசுவாசம் தேவனுடைய வார்த்தையினால் நிலை நிறுத்தப்படட்டும். சத்தியத்தின் உயிருள்ள சாட்சியை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். சொந்த இரட்சகரான கிறிஸ்துவில் விசுவாசம் உள்ளவர்களாக இருங்கள். அவர் நமது கன்மலையாக இருந்து வருகின்றார், நித்திய கன்மலையாக இனியும் இருப்பார்.—Ev 362 (1905).

தவிர்க்க இயலாத ஒரு அதிர்ச்சியைப் போன்ற அழிவிற்கு—இந்த உலகத்தின்மீது விரைவில் உண்டாக்கப்போகும் காரியத்திற்கு, கிறிஸ்தவர்கள் கண்டிப்பாக ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும். தேவனுடைய வார்த்தையை கருத்தோடு படிப்பதின்மூலமாகவும், அதனுடைய வார்த்தைகளுக்கேற்றபடி தங்களது வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போராடுவதின்மூலமாகவும், அவர்கள் இந்த ஆயத்தத்தைச் செய்யவேண்டும்.—PK 626 (c. 1914).

வேதத்தின் சத்தியங்களால் எவர்கள் தங்கள் மனதை கோட்டை போல் வலுவாக காத்துக்கொள்கின்றார்களோ, அவர்கள் மாத்திரமே இறுதியான மாபெரும் போராட்டத்தின் வழியாகக் கடந்து சென்று நிற்பார்களே அல்லாமல், வேறு எவரும் நிற்கமாட்டார்கள்.—GC 593, 594 (1911).

வேத வார்த்தைகளைக் கவனமாகக்கேட்டு அதன்படி செய்கின்ற மாணவர்களாக இருப்பவர்களும், சத்தியத்தில் வாஞ்சையைப் பெற்றி ருக்கிறவர்களும் மாத்திரமே, உலகத்தைச் சிறைப்படுத்தக்கூடிய வல்லமையான வஞ்சகத்திலிருந்து பாதுகாக்கப்படுவார்கள்.—GC 625 (1911).

வேத வாக்கியங்களை நமது மக்கள் அவசியம் புரிந்திருக்க வேண்டும். பூமியின்மீது வந்துகொண்டிருக்கும் காரியத்திற்கு தகுதிப்படுத்தக்கூடியதும், தவறான உபதேசத்தின் ஒவ்வொரு காற்றினாலும் கொண்டுசெல்லப்படக்கூடிய காரியத்திலிருந்து பாதுகாக்கக்கூடியதுமான, வெளிப்படுத்தப்பட்ட சத்தியக் கொள்கைகளின் ஒரு ஒழுங்கு முறையான அறிவை அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.—5T 273 (1885).

**வேதவாக்கியங்களை மனப்பாடம் செய்தல்**

ஒவ்வொரு நாளும் விலையேறப்பெற்ற பொன்னான நேரங்கள், வேதவாக்கியங்களை அநேக முறை படிப்பதற்கும் ஜெபிப்பதற்கும் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆத்துமாவில் ஆவிக்குரிய வாழ்க்கையை நிலைத்திருக்கச் செய்வதற்கான காரியம், ஒரு வசனத்தை நினைவில் வைத்துக்கொண்டு அதனை மனப்பாடம் செய்வதில் மாத்திரமே இருக்கின்றது. —4T 459 (1880).

பரலோக ராஜாவுக்கு விசுவாசமுள்ளவர்களாய் இருக்கும் வாலிபர்களுக்கு, தேவனுடைய விலையேறப்பெற்ற வார்த்தை, ஒரு அளவுகோலாக இருக்கின்றது. அவர்கள் வேதவாக்கியங்களைப் படிக்கட்டும். அவர்கள் ஒவ்வொரு வசனங்களாக நினைவில் வைத்து மனப்பாடம் செய்து, கர்த்தர் சொல்லியிருப்பதின் ஒரு அறிவைப் பெற்றுக்கொள்ளட்டும்.—ML 315 (1887).

உன்னைச் சுற்றிலும் வேதவாக்கியங்களின் ஒரு சுவரைக் கட்டு. அப்பொழுது உலகம் அதைத் தகர்க்க இயலாததை நீ காணலாம். வேதவாக்கியங்களை நினைவில் வைத்து அதை மனப்பாடம் செய்தால், சாத்தான் அவனுடைய சோதனைகளுடன் வரும்பொழுது, "எழுதியிருக்கிறதே" என்ற வார்த்தையை சரியாகத் திரும்பவும் அவனுக்கு எதிராக நீ சொல்ல முடியும். இந்த வகையாகவே நம்முடைய கர்த்தரானவர், சாத்தானின்

சோதனைகளைச் சந்தித்து, அவைகளை எதிர்த்து நின்றார்.—RH April 10, 1888.

ஞாபகம் என்ற கூடத்தை விலையுயர்ந்த கிறிஸ்துவின் வார்த்தை களைக்கொண்டு அலங்கரியுங்கள். அவைகள் பொன் அல்லது வெள்ளியைக் காட்டிலும், மிகவும் மேலானதாக மதிக்கப்பட வேண்டும்.—6T 81 (1900).

நீ வேலை செய்யும்பொழுது, சட்டைப்பையில் வைத்துக் கொள்ளக்கூடிய சிறிய அளவிலான ஒரு வேதாகமத்தை உன்னுடன் வைத்திரு. அதனுடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நினைவில் வைத்து, மனப்பாடம் செய்யும்படியான ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் மேம்படுத்து.—RH April 27, 1905.

அநேகர், எழுதப்பட்ட வார்த்தையை இழக்கக்கூடிய நேரம் வரும். ஆனால், இந்த வேதவார்த்தைகள் மனதில் பதிக்கப்பட்டிருந்தால், நம்மிடமிருந்து எவரும் அதனை எடுத்துக் கொள்ளஇயலாது.—20MR 64 (1906).

தேவனுடைய வார்த்தையைப் படியுங்கள். அதனுடைய விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களை நினைவில் வைத்து மனப்பாடம் செய்யுங்கள். அப்படிச் செய்வதனால், வேதாகமங்களை நாம் இழக்க நேரிடும்பொழுதும், தேவனுடைய வார்த்தையை நம் மனதில் பெற்றிருப்பவர்களாக நாம் இருக்க முடியும்.—10MR 298 (1909).

## வெளிப்படுத்தல் 14—ம் அதிகாரம்
## தேவனுடைய மக்களுக்கு ஓர் நங்கூரம்

இந்தக் கடைசிநாட்களில், முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தூதனுடைய தூதுகளின் முழுமையான பொருளை ஆராய்ந்து அறிந்து கொள்வது நம்முடைய கடமையாக இருக்கின்றது. நமது அனைத்து நடவடிக்கைகளும், தேவனுடைய வார்த்தையுடன் இசைவானதாக இருக்க வேண்டும். முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தூதனுடைய தூதுகள் அனைத்தும், ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. வெளி. 14–ம் அதிகாரத்தின் 6–ம் வசனத்திலிருந்து கடைசி வரையிலும் அவைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.—13MR 68 (1896).

மூன்றாம் தூதினை ஆர்வமாக ஏற்றுக்கொண்ட அநேகர், முதல் இரண்டு தூதுகளில் அனுபவம் பெற்றிருக்கவில்லை. சாத்தான் இதை நன்கு அறிந்துள்ளான். அவர்களை அழிக்கத்தக்கதாக, அவனுடைய தீமை பயக்கின்ற கண் அவர்கள்மீது பதிந்திருக்கின்றது. ஆனால் மூன்றாம்

தூதன், அவர்களை மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு சுட்டிக்காட்டுகின்றான். கடந்த (இரண்டு) தூதுகளில் அனுபவம் பெற்றிருந்தவர்கள், பரலோக ஆசரிப்புக்கூடாரத்திற்குச் செல்லவேண்டிய வழியை சுட்டிக்காட்டுகின்றார்கள். அநேகர், தூதர்களின் தூதுகளில் சத்தியத்தின் முழுமையான சங்கிலியைக் கண்டார்கள். அதனுடைய ஒழுங்கில் அதனை, அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, பரலோக ஆசரிப்புக்கூடாரத்திற்குள்ளாக விசுவாசத்துடன் இயேசுவைப் பின்பற்றினார்கள். தேவனுடைய மக்களுக்கு இந்தத் தூதுகள் நங்கூரம் போல் இருப்பது எனக்குக் காட்டப்பட்டது. அவைகளைப் புரிந்துகொண்டு ஏற்றுக் கொள்கின்றவர்கள், சாத்தானுடைய அநேக தந்திரங்களால் அடித்துச் செல்லப்படுவதிலிருந்து காப்பாற்றப்படுவார்கள்.—EW 256 (1858).

### தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க மனதைப் பயிற்றுவித்தல்

தங்களுக்கு சுதந்திரம் இருப்பதாக நினைத்து, தேவனுடைய வார்த்தையைக் குறித்து தாராளமாக கேள்விகேட்பவர்களும், நம்பாமலிருப்பதற்கு ஏதாகிலும் சந்தர்ப்பம் எங்காவது இருக்கின்றதா என்று அனைத்தையும் சந்தேகிப்பவர்களும், உபத்திரவம் வரும்பொழுது விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு பயங்கரமான போராட்டம் அவசியமாக இருக்கும் என்பதை கண்டுகொள்வார்கள். அவிசுவாசத்தின் வழியினிலே பயிற்றுவிக்கப்பட்டிருக்கும் மனதைக் கட்டியிருக்கின்ற செல்வாக்கை மேற்கொள்வது ஏறக்குறைய இயலாததொன்றாகும். ஏனெனில், இப்படிப்பட்ட வழியினைப் பின்பற்றியதன்மூலம், ஆத்துமா சாத்தானுடைய கண்ணியிலே கட்டப்பட்டிருந்து, ஆத்துமாவைச் சுற்றிலும் மிகமிக நெருக்கமாக பின்னப்பட்டிருக்கும் பயங்கரமான வலையைத் தறித்துப்போடுவதற்கு வல்லமையற்றதாக மாறிவிடும்.

மனிதன் சந்தேகத்தின் ஒரு மனப்பாங்கை எடுத்துக்கொள்ளும் போது, சாத்தானது ஏதுகரங்களை தனது உதவிக்கு அழைக்கின்றான். அவிசுவாசத்தின் வழியிலே பயிற்றுவிக்கப்பட்ட ஒருவரின் ஒரே நம்பிக்கை, அந்தகாரத்தினின்று கிறிஸ்துவின் ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கும்படியாக தனது சித்தத்தையும் தனது வழியையும் கிறிஸ்துவிடம் ஒப்படைத்து, அனைத்து உதவிகளும் அற்றவனாக ஒரு குழந்தையைப் போன்று இரட்சகரின்மீது விழுவதே ஆகும். சாத்தானுடைய கண்ணியிலிருந்து தன்னைத்தானே விடுவித்துக்கொள்வதற்குரிய வல்லமை மனிதனுக்குக் கிடையாது. கேள்வி, சந்தேகம் மற்றும் குற்றம் கண்டுபிடித்தல் என்ற வழியினில் தன்னைத்தானே பயிற்றுவிக்கும் ஒருவன், உண்மையற்ற தன்மையில், தன்னைத்தானே உறுதிப்படுத்திக்கொள்கின்றான்.—Ms 3, 1895.

## எதிர்கால உபத்திரவங்களுக்கு ஆயத்தமாகுதல்

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் தங்களது விசுவாசத்திற்காக பரீட்சிக்கப்பட கொண்டுவரப்படும்பொழுது, திட்டவட்டமான பேச்சை அளிக்க வேண்டும் என்று ஆயத்தப்படக்கூடாது. தங்களது விசுவாசத்தை ஜெபத்தைக்கொண்டு பெலப்படுத்துவதன்மூலமாகவும், கிறிஸ்துவின் போதனைகளைக்கொண்டு மனதிற்கு உணவளிப்பதின்மூலமாகவும், தேவனுடைய வார்த்தையின் விலையேறப்பெற்ற சத்தியங்களைத் தங்களது இருதயங்களில் பொக்கிஷமாக சேர்த்து வைப்பதின்மூலமாகவும், அவர்களது ஆயத்தம் ஒவ்வொரு நாளும் செய்யப்படவேண்டும். அதன்பிறகு, பரீட்சிக்கப்பட கொண்டு வரப்படும்பொழுது, கேட்பதற்காக வருகின்ற இருதயங்களைச் சென்றடையத்தக்கதாக சரியான சத்தியங்களை அவர்களது நினைவிற்கு பரிசுத்த ஆவியானவர் கொண்டுவருவார். வேதவாக்கியங்களை ஊக்கமாக தேடினதினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சத்திய அறிவை, அது தேவைப்படக் கூடிய சரியான நேரத்திலே, ஒரு வினாடியில் தேவன் அவர்களது நினைவிற்கு உடனடியாகக் கொண்டு வருவார்.—CSW 40, 41 (1900).

சோதிக்கப்படுகின்ற நேரம் வருகையில், மற்றவர்களுக்கு தற்போது பிரசங்கிக்கின்ற மனிதர்கள் தாங்கள் பற்றிக்கொண்டிருந்த நிலைப்பாட்டினை ஆராய்ந்து பார்க்கும்போது, தங்களால் திருப்திகரமான பதிலளிக்க முடியாத அநேகக் காரியங்கள் இருப்பதை அப்போது கண்டுகொள்வார்கள். அப்படியாக சோதிக்கப்படும்வரை, தங்களது மாபெரும் அறியாமையை அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். தாங்கள் நம்புவதை புரிந்துவைத்திருக்கின்றோம் என்று எண்ணிக்கொண்டு, உய்த்துணராது உண்மையென ஒப்புக்கொண்டிருக்கின்ற அநேகர் சபையில் இருக்கின்றார்கள். கருத்து மாறுபாடுகள் எழும்பும்வரை, தங்களது சொந்த பெலவீனத்தை அவர்கள் அறிய மாட்டார்கள். ஒத்த விசுவாசத்தை உடையவர்களிடமிருந்து அவர்கள் பிரிக்கப்பட்டு, தங்களது நம்பிக்கையைக் குறித்து விளக்கம் கொடுப்பதற்கு தனியாக நிற்கக் கட்டாயப்படுத்தப்படும்பொழுது, சத்தியம் என்று தாங்கள் ஏற்றுக்கொண்ட தங்களது கருத்துக்கள் எப்படி குழப்பமானதாக இருக்கின்றன என்று கண்டு அவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.—5T 707 (1889).

## ஒழுக்க வல்லமைகளை கட்டுக்குள் வைத்தல்

நம்முடைய விசுவாசத்திற்கான ஒரு காரணத்தைக் கொடுக்கக் கூடிய திறமை, ஒரு நல்ல சாதனையான காரியமாகும். ஆயினும், சத்தியம் இதைக்காட்டிலும் ஆழமாக ஊடுருவிச் செல்லாவிட்டால், ஆத்துமா ஒருபோதும் இரட்சிக்கப்பட முடியாது. ஆகையால், அனைத்து ஒழுக்கக்கேடுகளினின்றும் இருதயம் கண்டிப்பாகச் சுத்தம் செய்யப்படவேண்டும்.—OHC 142 (1893).

தங்களது எண்ணங்களின் மற்றும் கற்பனைகளின் மீதான கட்டுப்பாட்டை பயிற்சி செய்யவேண்டியது என்பது ஒரு கடமை என்று ஒரு சிலரே உணர்கின்றனர். ஒழுங்குபடுத்தப்படாத மனதை, பயனுள்ள விஷயங்களின்மீது நிலையாக வைப்பதென்பது கடினமான காரியமாகும். ஆனால், எண்ணங்கள் சரியான விதத்தில் பயன்படுத்தப்படாவிட்டால், சமயம் சார்ந்த காரியங்கள் ஆத்துமாவில் வளர்ச்சியடையாது. பரிசுத்தமானதும் நித்தியமானதுமான காரியங்களினால், மனம் முன்கூட்டியே ஈடுபடுத்தப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால், அற்பமானதும் மேலோட்டமானதுமான எண்ணங்களை அது வளர்த்துவிடும். அறிவுத்திறன் மற்றும் ஒழுக்க வல்லமை ஆகிய இரண்டுமே கட்டாயமாக பயிற்றுவிக்கப்படவேண்டும். அப்படிப் பயிற்சி செய்வதினால், அவைகள் பெலப்பட்டு முன்னேற்றமடையும்.—OHC 142 (1893).

இழிநிலையான மற்றும் சிற்றின்ப நாட்டமுள்ள வல்லமைகளைக் காட்டிலும், நாம் மிகவும் அதிகமாக ஒழுக்க வல்லமைகளை பெலப்படுத்தவும், தூய்மையான கற்புடைய சிந்தனைகளை ஊக்கப்படுத்தி மேம்படுத்தவும் வேண்டும். தேவனே, எங்களது சுயவிருப்பத்திற்குப் பணிந்துசெல்கின்ற ஆவல்களிலிருந்து நாங்கள் விழிப்படைய எங்களுக்கு உதவி செய்யும்.—MM 278 (1896).

## ஏனோக்கின் முன்மாதிரி

ஏனோக்கு, மறுரூபமடைந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுவதற்கு முன்னதாக, முன்னூறு வருடங்கள் தேவனோடு நடந்தான். கிறிஸ்தவ குணம் பரிபூரணமடைவதற்கு, இன்றைக்கு இருப்பதைக்காட்டிலும் அன்றைய உலகத்தின் நிலை அதிக அனுகூலம் இல்லாமல் இருந்தது. ஏனோக்கு எவ்வாறு தேவனோடு நடந்தார்? அவர், தேவனுடைய பிரசன்னத்திலே தான் எப்பொழுதும் இருப்பதாக உணரக்கூடிய விதத்தில், மனதையும் இருதயத்தையும் பயிற்றுவித்திருந்தார். மேலும் குழப்பமான வேலைகளில் தேவன் அவரை காத்துக்கொள்ளத்தக்கதாக, அவரது விண்ணப்பங்கள் மேலெழும்பும்.

தன்னுடைய தேவனை துக்கப்படுத்தக்கூடிய எந்த ஒரு பாதையையும், அவர் எடுக்க மறுத்துவிட்டார். கர்த்தரைத் தனக்கு முன்பாக எப்பொழுதும் தொடர்ச்சியாக வைத்திருந்தார். "நான் தவறு செய்யாதபடிக்கு, உமது வழியை எனக்குப் போதியும். என்னைக்குறித்த உமது விருப்பம் என்னவாக இருக்கின்றது? என் தேவனே, உம்மை மகிமைப்படுத்த நான் என்ன செய்யவேண்டும்?" என்று ஜெபிப்பார். இப்படியாக அவர், தனது வழியையும் போக்கையும் தேவனுடைய பிரமாணங்களுக்கு ஏற்றவாறு, தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருந்தார். ஆண்டவர் தனக்கு உதவி செய்வார் என்று,

தனது பரலோகத் தகப்பனிடத்தில் பரிபூரண விசுவாசமும் உறுதியான நம்பிக்கையும் அவருக்கு இருந்தது. தனக்கென்று சொந்த சித்தமோ அல்லது சிந்தையோ அவருக்கு இல்லாதிருந்தது. அவையனைத்துமே தனது பரம தகப்பனின் சித்தத்திலே மூழ்கடிக்கப்பட்டிருந்தது.

கிறிஸ்து வரும்போது பூமியின்மீது இருக்கின்றவர்களுக்கும், மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்படியாக மறுரூபமாக்கப்படுபவர்களுக்கும், ஏனோக்கு இப்பொழுது ஒரு பிரதிநிதியாக இருக்கின்றார்.—1SAT 32 (1886).

நமக்கு இருப்பதுபோலவே, ஏனோக்கிற்கும் சோதனைகள் இருந்தன. நம்மைச் சுற்றியிருக்கின்ற சமுதாயத்தைக்காட்டிலும், ஒருபோதும் நீதிக்கு நண்பனாக இல்லாத சமுதாயத்துடன் அவரும் சூழப்பட்டிருந்தார். அவர் சுவாசித்த சுற்றுச் சூழல் நம்முடையதைப்போலவே பாவத்தாலும் ஒழுக்கக்கேடுகளாலும் கறைப்படுத்தப்பட்டிருந்தது. இருந்தபோதும், அவர் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலத்தில், நடைமுறையில் இருந்த பாவங்களினால் அவர் கறைப்படுத்தப்படவில்லை. அதைப்போலவே, நாமும்கூட தூய்மையாகவும் கறைப்படுத்தப்படாதவர்களாகவும் தொடர்ந்து நிலைத்திருக்க முடியும்.—2T 122 (1868).

### தேவனுடைய கடந்தகால ஆசீர்வாதங்களை நினைவிற்கொள்

நமது தற்போதைய நின்றுகொண்டிருக்கின்ற நிலைக்கு, ஒவ்வொரு முன்னேற்றமான அடியிலும் பிரயாணித்து வந்திருக்கின்ற நாம், நம்முடைய கடந்த கால வரலாற்றினை திரும்பிப்பார்க்கும்போது, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்றுதான் சொல்ல இயலும். கர்த்தர் செய்திருக்கின்ற காரியத்தை நான் காணும்போது, கிறிஸ்துவைத் தலைவராக வைத்திருக்கின்ற ஆச்சரியத்தாலும் நம்பிக்கையாலும் நிரப்பப்படுகின்றேன். நமது கடந்த கால சரித்திரத்தில், ஆண்டவருடைய போதனையையும், கர்த்தர் நம்மை நடத்தி வந்த விதத்தையும் மறந்தாலொழிய, எதிர்காலத்தைக்குறித்து பயப்படுவதற்கு நமக்கு ஒன்றுமே இல்லை.—LS 196 (1902).

### தீவிரமாக சிந்திக்கும் காலம்

தேவனுக்குப் பயப்படுகின்ற ஒவ்வொருவரும், தேவனைத் தீவிரமாக பிரதிபலிக்கவேண்டிய நேரமும், தனிப்பட்ட பக்தியுணர்வு கொண்டிருக்கவேண்டிய நேரமும் ஒன்று உண்டென்றால், அது இந்த நேரமே. "நான் யார்? இந்த நேரத்தில் செய்யப்பட வேண்டிய என்னுடைய வேலையும் ஊழியமும் என்ன? நான் வேலைசெய்து கொண்டிருப்பது கிறிஸ்துவினுடைய பக்கமா

அல்லது எதிரியினுடைய பக்கமா?”—இப்படிப்பட்ட கேள்விகள் கண்டிப்பாக கேட்கப்படவேண்டும். தற்போது நாம் நிச்சயமாக பாவநிவாரணத்தின் மாபெரும் நாளில் வாழ்ந்துகொண்டிருப்பதால், ஒவ்வொரு ஆத்துமாவும், அது ஆணோ அல்லது பெண்ணோ, தற்போது தேவனுக்கு முன்பாக தன்னைத்தானே தாழ்மைப்படுத்தட்டும். ஒரு சிறிதளவு காலத்திற்கு தங்களது கல்லறைகளில் அவர்கள் உறங்கத்தக்கததாக, தற்போதுகூட அநேகருடைய வழக்குகள் மீண்டும் பார்க்கப்படும்படியாக தேவனுக்கு முன்பாகக் கடந்து சென்றுகொண்டிருக்கின்றன. உங்களது விருப்பங்களின் நிலை மாத்திரமே உத்தரவாதம் அளிக்குமே ஒழிய, விசுவாசத்தை கடைபிடிக்கின்றோம் என்ற உங்களது உரிமை கோருதல் அந்த நாளில் உத்தரவாதம் அளிக்காது. ஆத்தும ஆலயம் அதனுடைய தூய்மைக் கேட்டிலிருந்து சுத்தப்படுத்தப் பட்டிருக்கின்றதா? என்னுடைய பாவங்கள் அறிக்கைசெய்யப்பட்டி ருக்கின்றனவா? அவைகள் முற்றிலும் நீக்கப்படத்தக்கதாக தேவனுக்கு முன்பாக அவைகளுக்காக நான் மனம் வருந்துகின்றேனா? என்னை நானே மிகவும் அற்பமாக மதிப்பிட்டுக்கொள்கின்றேனா? இயேசு கிறிஸ்துவை அறிகின்ற அறிவின் உயர்விற்காக நான் எந்த ஒரு தியாகத்தையோ அல்லது அனைத்தையும் தியாகம் செய்வதற்கு விருப்பமுள்ளவனாய் இருக்கின்றேனா? ஒவ்வொரு கணப்பொழுதும் நான் எனக்கு சொந்தமானவன் அல்ல, மாறாக கிறிஸ்துவினுடைய சொத்தாக இருக்கின்றேன் என்பதை உணர்கின்றேனா? என்னுடைய ஊழியம், நான் யாருடையவனாக இருக்கின்றேனோ அந்த தேவனுக்கே உரியது என்று சொல்லக்கூடியதாக இருக்கின்றதா?—Ms 87, 1886.

“எதற்காக நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்? எதற்காக வேலை செய்துகொண்டிருக்கின்றோம்? அவை அனைத்தின் விளைவு என்னவாக இருக்கும்?” என்று நம்மைநாமே நாம் கேட்க வேண்டும்.—ST Nov. 21, 1892.

**நியாயத்தீர்ப்பு நாளை நினைவிற்கொண்டு வாழ்தல்**

நமது பட்டணங்களிலே மக்கள் வேலைகாரியமாக இங்கும் அங்கும் விரைவாக சென்றுகொண்டிருப்பதை நான் காணும்போது, நம்மீது சீக்கிரமே வரவிருக்கின்ற தேவனுடைய நாளைக் குறித்து எப்பொழுதாவது அவர்கள் சிந்திக்கின்றனரா இல்லையா என்று என்னுடைய மனதில் கேள்வி கேட்டிருக்கின்றேன். சீக்கிரத்தில் நம்மீது வர இருக்கின்ற அந்த மாபெரும் நாளை குறிப்பில் வைத்தவர்களாக நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்துகொண்டிருக்க வேண்டும்.—1SAT 25 (1886).

நியாயத்தீர்ப்பின் அந்த நாளைக் குறிப்பில் வைக்காமல் நம் வாழ்க்கையை வாழ இயலாது. நீண்டகாலமாக அது தாமதித்தாலும், அது தற்போது மிகவும் அருகில், வாசற்படியருகில், மிகவும் தீவிரித்து வருகின்றது. தலைமைத் தூதனின் எக்காளம் அதிசீக்கிரத்தில் உயிரோடிருப்பவர்களைத் திடுக்கிடவும் மரித்தோரை எழுப்பவும் செய்யும்.—CG 560, 561 (1892).

### கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருத்தல்

பரலோகத்திற்கடுத்த காரியங்களைக்குறித்து ஆழ்ந்து தியானிப்பதில் தற்போது நாம் மகிழ்ச்சி காணாவிட்டால், தேவனைப்பற்றிய அறிவைத் தேடுவதில் நமக்கு ஆர்வம் இல்லையென்றால், கிறிஸ்துவின் குணத்தை நோக்கிப்பார்ப்பதில் மகிழ்ச்சி இல்லையென்றால், பரிசுத்தம் நமக்கு கவர்ச்சியான காரியமாகத் தோன்றவில்லையென்றால்—நமது பரலோகத்தின் நம்பிக்கை வீணாக இருக்கும் என்பதில் நாம் நிச்சயமுள்ளவர்களாக இருக்கலாம். தேவனுடைய சித்தத்திற்கு முழு உடன்படுவது, கிறிஸ்தவனுக்கு முன்பாக தொடர்ச்சியான உயர்ந்த நோக்கமாக இருக்கவேண்டும். அவன் தேவனைக்குறித்தும், இயேசுவைக்குறித்தும், தன்னை நேசிப்பவர்களுக்காக கிறிஸ்து ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் மகிழ்ச்சியான தூய்மையான இல்லத்தைக்குறித்தும் பேசுவதற்கு விருப்பப்படுவான். தேவனுடைய பாக்கியமான நம்பிக்கைகளின்மீது ஆத்துமா திளைத்து மகிழ்ந்து இந்த பொருள்களைக்குறித்துத் தியானிப்பது, “வரப்போகும் உலகத்தின் வல்லமைகளை” ருசிபார்ப்பதற்கு ஒத்தது என்று அப்போஸ்தலர் எடுத்துரைக்கின்றார்.—5T 745 (1889).

இன்றைக்கு நீ தேவனுடன் சரியாக இருந்தால், கிறிஸ்து இன்றைக்கு வந்தாலும் நீ ஆயத்தமாக இருப்பாய்.—HP 227 (1891). ★

# 6

# மீதமானவர்களின் வாழ்க்கை முறையும் செயல்பாடுகளும்

## சேவையும் தற்தியாகமும் செய்யும் சிந்தை

ஒவ்வொருவரும் அவரவரது திறமைக்கு ஏற்ப தேவனுக்கு ஊழியஞ்செய்யும்படியாக, தொண்டுசெய்கின்ற சிந்தையை சபை முழுதும் உண்மையாய்க் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் நீண்ட காலமாகக் காத்திருக்கின்றார். தேவனுடைய சபையின் அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்ட தங்களது பொறுப்பை, இல்லம் மற்றும் வெளியிடங்கள் போன்ற தேவையுள்ள இடங்களில் செய்து சுவிசேஷ அழைப்பை நிறைவேற்றும்பொழுது, இந்த முழு உலகமும் வெகுசீக்கிரத்தில் எச்சரிக்கப்பட்டுவிடும்; கர்த்தராகிய இயேசுவும் வெகுசீக்கிரத்தில் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் திரும்ப வந்திடுவார்.—AA 111 (1911).

தனிநபர் முயற்சிக்குப் பதிலாக, ஸ்தாபனங்கள் செய்து கொள்ளட்டும் என்னும் போக்கு எங்கணும் காணப்படுகிறது. மாபெரும் சபைகள் மற்றும் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு, ஒரு குடையின்கீழ் இயங்குதலே நலமென மனித ஞானம் எண்ணிக்கொள்கிறது. திரளான ஜனங்கள் இரக்க மனப்பான்மை கொண்ட செயல்கள் செய்வதை, ஸ்தாபனங்களிடமும் நிறுவனங்களிடமும் விட்டுவிடுகின்றனர். அவர்கள் உலகத்தாருடன் உள்ள தொடர்பைத் துண்டித்துக்கொள்ள, தாங்களே சாக்குபோக்குகள் சொல்லிக்கொள்கின்றார்கள். ஆதலால், அவர்களது இருதயம் உணர்வற்றதாகிவிடுகின்றது. அவர்கள் தங்களது காரியங்களிலேயே மூழ்கிப்போனவர்களாகவும், உணர்த்தப்படக்கூடாதவர்களாகவும் மாறிவிடுகின்றனர். தேவனுக்கும் மனிதனுக்குமான அன்பு அவர்களது ஆத்துமாவிலிருந்து பட்டுப்போய்விடுகின்றது.

ஒரு தனிப்பட்ட ஊழியத்தை—மற்றவரால் செய்யமுடியாத ஒரு ஊழியத்தை—கிறிஸ்து தனது பின்னடியார்களுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். நோயாளிகள் மற்றும் ஏழைகளுக்கு ஊழியஞ் செய்வதும்,

தொலைந்துபோனவர்களுக்கு சுவிசேஷத்தை அளிக்கிறதுமான காரியங்கள் நிர்வாகத்திடமோ, ஒழுங்குபடுத்தப்பட்ட தொண்டு நிறுவனங்களிடமோ விட்டுவிடப்படக்கூடாது. தனிப்பட்ட பொறுப்பு, தனிப்பட்ட முயற்சி, தனிப்பட்ட தியாகம் போன்றவைகள்தான் சுவிசேஷத்தின் தேவையாக இருக்கின்றன.—MH 147 (1905).

**"நான் வருமளவும் ஈடுபடுங்கள்"**

கிறிஸ்து, "நான் திரும்பி வருமளவும்… வியாபாரம்பண்ணுங்கள்." (லூக். 19:13) என்று கூறுகிறார். வேலையில் ஈடுபடுவது ஒரு சில வருடங்களுக்கு, நமது வாழ்க்கையின் சரித்திரம் முடிவு பெறும்வரை இருக்கலாம். அது வரையிலும் நாம் கண்டிப்பாக வேலையில் ஈடுபடவேண்டும்.—RH April 21, 1896.

நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அமைதியாக தியானிப்பதற்கு, நம்மை நாமே பயிற்றுவித்துக்கொள்ள வேண்டும் என்று கிறிஸ்து விரும்புகின்றார். அனைவரும் தேவனுடைய வார்த்தைகளை நாள்தோறும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதே சமயம், நம்முடைய அனுதின கடமைகளையும் நாம் புறக்கணிக்கக்கூடாது.—Letter 28, 1897.

கிறிஸ்து வரும்பொழுது, அவருக்காக காத்துக்கொண்டிருக்கும் அவரது மக்களில் சிலர், தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பார்கள் என்று கிறிஸ்து அறிவிக்கின்றார். சிலர் நிலத்தில் விதைத்துக்கொண்டும், வேறு சிலர் அறுவடையை அறுத்து சேர்த்துக்கொண்டும், வேறு சிலர் ஆலையில் அரைத்துக்கொண்டும் இருப்பார்கள். அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள், வாழ்க்கையின் கடமைகளையும் பொறுப்புகளையும் விட்டுவிட்டு, வீணான தியானத்தில் தங்களை ஈடுபடுத்தி, மதம் சார்ந்த காரியம் பற்றின கனவில் வாழ்ந்து கொண்டிருப்பது என்பது தேவனுடைய சித்தமல்ல.—Ms 18a, 1901.

இயன்றவரையில் உங்களால் செய்ய முடிந்த அனைத்து நன்மையான வேலைகளையும், இந்த வாழ்க்கை முடிவதற்குள்ளாக செய்யுங்கள்.—5T 488 (1889).

**ஒவ்வொரு நாளும் நமது வாழ்வின் கடைசிநாள் என்பதுபோன்று…**

இந்த நாள்தான் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற கடைசி நாள் என்பதுபோல, நாம் விழிப்புடனிருந்து வேலை செய்து ஜெபிக்க வேண்டும். —5T 200 (1882).

ஒவ்வொருநாளும் நமது வேலையை, அது வரக்கூடிய விதத்தில் அதை அப்படியே செய்வதிலேயே நம்முடைய ஒரே பாதுகாப்பு இருக்கின்றது. அதாவது, நமக்காக மரித்து, மீண்டும் உயிரோடிருக்கின்ற, நித்தியமாக ஜீவித்திருக்கின்ற தேவனுடைய பெலத்தை ஒவ்வொரு மணித்துளியும் நம்பி சார்ந்து, நமது வேலையை செய்வதிலும் விழித்திருப்பதிலும் காத்திருப்பதிலுமே, நம்முடைய ஒரே பாதுகாப்பு இருக்கின்றது.—Letter 66, 1894.

ஒவ்வொரு நாள் காலையிலும் அந்த நாளுக்காக, உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தேவனிடத்தில் அர்ப்பணியுங்கள். மாதங்களையோ வருடங்களையோ கணக்கிடாதீர்கள்; அவைகள் உங்களுடையவைகள் அல்ல. குறுகிய ஒரு நாளே, உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. பூமியிலே இதுதான் உங்களுடைய கடைசி நாளைப்போல எண்ணி, அந்தக் குறிப்பிட்ட காலத்திலே எஜமானுக்காக வேலை செய்யுங்கள். உங்கள் திட்டங்களையெல்லாம், தேவனுடைய வழிநடத்துதல் தெரிவிப்பதுபோல நிறைவேற்றப்படவோ அல்லது விட்டுவிடப்படவோ, அவர் முன்பாக வைத்துவிடுங்கள்.—7T 44 (1902).

### கவனமான ஓய்வுநாள் ஆசரிப்பு[1]

ஓய்வுநாள் ஆசரிப்பின்மூலமாக தம்மைப்பற்றின ஒரு அறிவை மனிதர்கள் மத்தியிலே பாதுகாக்கும்படியாக, நம்முடைய பரலோகப் பிதா வாஞ்சையோடிருக்கின்றார். ஓய்வுநாள் நமது மனங்களை உண்மையான மற்றும் ஜீவனுள்ள தேவனிடத்தில் திருப்பவேண்டும் என்றும், அவரை அறிந்துகொள்வதன்மூலம் நாம் சமாதானத்தையும் நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவர் வாஞ்சிக்கின்றார்.—6T 349 (1900).

நியாயப்பிரமாணத்தின்படி ஓய்வுநாளை ஆசரிப்பதற்கும், எப்பொழுதும் அதனை நினைவில் வைத்துக்கொள்வதற்குமான ஆயத்தத்தை வாரம் முழுவதிலும் நாம் செய்யவேண்டும். வெறும் சட்டரீதியான ஒரு காரியம்போல மாத்திரம் ஓய்வுநாளை நாம் ஆசரிக்கக் கூடாது. வாழ்க்கையின் அனைத்து நடவடிக்கைகளின்மீதும், அதனுடைய ஆவிக்குரிய அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு ஓய்வுநாள் நினைவுக்கூரப்படும்பொழுது, இம்மைக்குரிய காரியங்கள் ஆவிக்குரிய காரியங்களை ஆக்கிரமிக்கும்படி விட்டுவிட முடியாது. ஆறு வேலை நாட்களுக்குரிய எந்த வேலையும் ஓய்வுநாளில் செய்யப்படும்படி விட்டுவைக்கப்படக் கூடாது.—6T 353, 354 (1900).

வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகள் கண்டிப்பாக சந்திக்கப்பட வேண்டும். நோயாளிகள் கவனிக்கப்பட வேண்டும். ஏழைகளுடைய தேவைகள்

வழங்கப்பட வேண்டும். துன்புறுவோரை ஓய்வுநாளில் விடுவிப்பதைப் புறக்கணிக்கும் ஒருவன் குற்றமற்றவனாக விடப்படமாட்டான். தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது. எனவே, அந்நாளிலே செய்யப்படுகின்ற இரக்கமுள்ள கிரியைகள் அதனுடைய நோக்கத்தோடு பரிபூரண ஒத்திசைவாக இருக்கும். ஓய்வுநாளிலோ அல்லது வேறு எந்த நாளிலோ, விடுவிக்கப்படக்கூடிய தமது சிருஷ்டிகள் வேதனை யினால் ஒரு மணிநேரம் துன்புறுவதைக்கூட தேவன் வாஞ்சிப்பதில்லை.—DA 207 (1898).

**தசமபாகத்திலும் காணிக்கையிலும் உண்மையாயிருத்தல்**

தேவன் தமக்கென்று ஒதுக்கிவைத்துள்ள தசமபாகம் பரிசுத்தமானதாகும். அது சுவிசேஷ ஊழியர்களை அவர்களது ஊழியத்தில் தாங்குவதற்குப் பயன்படுத்தப்படத்தக்கதாக, தேவனுடைய பொக்கிஷ சாலைக்குள் கொண்டுவரப்பட வேண்டும்… மல்கியா 3–ம் அதிகாரத்தை கவனமாய் வாசித்துப் பார்த்து, தசமபாகத்தைக்குறித்து தேவன் என்ன சொல்கின்றார் என்று பாருங்கள்.—9T 249 (1909).

ஓய்வுநாளைப்போலவே, தசமபாகம்பற்றிய பிரமாணத்துக்கும் புதிய ஏற்பாட்டில் அதிகப்படியான அழுத்தம் அளிக்கப்படவில்லை; ஏனெனில், அவை இரண்டின் செல்லுபடியாகும் நிலையும் உண்மையென ஏற்கப்பட்டிருக்கிறது, அவற்றின் ஆழமான ஆவிக்குரிய முக்கியத்துவமும் விளக்கப்பட்டிருக்கிறது.—CS 66 (1882).

ஒவ்வொரு இடத்திலும் இருக்கின்ற ஏழாம்நாள் அட்வெந்து பிள்ளைகள், தேவனுக்குத் தங்களை அர்ப்பணம்செய்து தங்களால் முடிந்ததை மிகச் சிறப்பாக செய்வதற்காகவும், தங்களது சூழ்நிலைகளுக்கேற்றவாறு தேவனுடைய ஊழியத்தில் உதவி செய்வதற்காகவும் கர்த்தர் அவர்களுக்கு அறைகூவல் விடுக்கின்றார். அவர்களது உதாரத்துவமான காணிக்கைகள் மூலமாகவும், அன்பளிப்புகள்மூலமாகவும், தேவன் தங்களுக்கு அளித்திருக்கின்ற ஆசீர்வாதங்களுக்காக அவருக்குத் தங்களது பாராட்டையும், அவரது இரக்கத்திற்காக தங்களது நன்றியையும், அவர்கள் வெளிப்படுத்த வேண்டுமென்று அவர் விரும்புகின்றார்.—9T 132 (1909).

தணிந்துபோகின்ற அன்பு உயிருள்ள இரக்க சிந்தைக்கு ஒரு தரந்தாழ்ந்த மாற்றாகும்.—5T 155 (1882).

காலத்தின் முடிவை நெருங்க நெருங்க, தேவைகளுக்கான காரணகாரியங்கள் தொடர்ந்து பெருகிக்கொண்டேபோகும்.—5T 156 (1882).

எதிர்கால வாழ்க்கைக்கு நாம் தகுதியுள்ளவர்களா என்பதனைத் தீர்மானிப்பதற்கு, இவ்வுலகத்தின் போராட்டங்களிலே நாம் வைக்கப்

பட்டிருக்கின்றோம். சுயநலத்தினுடைய வெறுக்கத்தக்க களங்கத்தின் மூலம் மாசுபடுத்தப்பட்டிருக்கின்ற குணங்களை உடைய எந்த நபரும், பரலோகத்திற்குள் நுழைய முடியாது. ஆதலால், தேவன் நமக்கு தற்காலிக ஆஸ்திகளை அளிப்பதின்மூலம் இங்கு அவர் நம்மை சோதிக்கின்றார். அதாவது, அவைகளை தற்போது நாம் பயன்படுத்தும் நம்முடைய பயன்பாடு, நித்தியமான ஐசுவரியத்தைப் பெற்றுக் கொள்ள நாம் நம்பிக்கைக்குரியவர்களாய் இருப்போமா இல்லையா என்பதைக் காட்டும்படியாக தேவன் இப்போது நம்மை சோதிக்கின்றார்.—CS 22 (1893).

## புதிய ஸ்தாபனங்களை நிறுவுங்கள்

ஒரு சிலர், “கர்த்தர் அதிசீக்கிரம் வருகின்றதால் பள்ளிகளையும், சுகாதார மையங்களையும், உணவு தொழிற்சாலைகளையும் நிறுவ வேண்டியதின் அவசியம் என்ன? நம்முடைய வாலிபர்கள் தொழில்களைக் கற்றுக்கொள்ள வேண்டியதின் அவசியம் என்ன?” என்று கேட்கலாம்.

கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கின்ற தாலந்துகளைத் தொடர்ந்து மேம்படுத்திக்கொண்டிருக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாக இருக்கின்றது. அவைகளை உபயோகப்படுத்தாத பட்சத்தில், நாம் இதைச் செய்ய இயலாது. இயேசுகிறிஸ்து அதிசீக்கிரம் வரப்போகின்றார் என்கின்ற எதிர்பார்ப்பு நம்மை சோம்பலுக்குள் வழிநடத்திவிடக்கூடாது. மாறாக, மனிதகுலத்திற்கு உபயோகமாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கும்படியாக, நம்மால் இயன்றளவு எல்லாவற்றையும் செய்வதற்கு அது நம்மை வழிநடத்த வேண்டும்.—MM 268 (1902).

உலகம் முழுவதிலும் ஒரு மாபெரும் வேலை செய்யப்படவேண்டும். முடிவு சமீபமாயிருக்கின்றபடியால், தேவையின் காரணத்திற்கேற்ப பலதரப்பட்ட நிறுவனங்களை ஸ்தாபிக்க எந்த ஒரு விசேஷித்த முயற்சியும் அவசியமில்லை என்று ஒருவரும் முடிவுசெய்ய வேண்டாம்... ஜெபவீடுகள் கட்டுவதற்கும், புத்தகம் வெளியிடும் நிறுவனங்கள், சுகாதார மையங்கள் மற்றும் பள்ளிகள் நிறுவுவதற்கும், மேற்கொண்டு இனி எந்த ஒரு முயற்சியும் எடுக்க வேண்டாம் என்று தேவன் சொல்லும் நேரமே, தேவன் வேலையை முடிக்கட்டும் என்று நம்முடைய கரங்களை நாம் கட்டிக்கொண்டிருப்பதற்கான நேரமாகும். ஆனால் இப்பொழுதோ, தேவனுக்காக நம்முடைய அதிக ஆர்வத்தையும், மனித இனத்திற்கு நம்முடைய அன்பையும் காட்டுவதற்கான நம்முடைய தருணமாகும்.—6T 440 (1900).

## மருத்துவ மிஷனெரி ஊழியம்

மார்க்க சம்பந்தமான கெடுபிடிகள் நம் நாட்டின் சுதந்திரங்களை கவிழ்த்துப்போடும்போது, மனசாட்சியின் சுதந்திரத்திற்காக நிற்பவர்கள்

சாதகமற்ற நிலைகளில் வைக்கப்படுவார்கள். அவர்களுக்கு சந்தர்ப்பம் இருக்கும்போது, தங்களின் சொந்த நன்மையைக் கருதி நோய்களைக் குறித்தும், அதனுடைய காரணங்கள்குறித்தும், நோய்த்தடுப்பு மற்றும் நோய்க்கு சிகிச்சை அளிக்கும் முறை போன்றவை குறித்தும் அறிவுத்திறன் பெற்றிருக்க வேண்டும். மேலும் இப்படிக் கற்றுக்கொள்பவர்கள், எங்கு வேண்டுமானாலும் வேலை செய்யக் கூடிய ஒரு இடத்தைக் கண்டு கொள்வார்கள். நம்முடைய சொந்த விசுவாசத்தின் மத்தியில் மாத்திரம் அல்ல, சத்தியம் அறியாதவர்கள் மத்தியிலும்கூட உதவி தேவைப்படக்கூடிய துயருற்றோர் திரளானபேர் இருப்பார்கள்.—CH 506 (1892).

வெகு சீக்கிரத்தில் ஊழிய ரீதியிலான வேலைகள் செய்யப் படாமல்போகும். ஆனால், மருத்துவ ஊழிய வேலை தொடர்ந்து செய்யப்படும் என்பதை உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.—CH 533 (1901).

**தேவனுடைய மக்கள் தங்களது ஆரோக்கியத்தை மதித்தல்**

ஆரோக்கிய சீர்திருத்தம், மூன்றாம் தூதனுடைய தூதின் ஒரு பகுதியாக இருக்கின்றது என்று எனக்குக் காட்டப்பட்டது. மேலும், மனித சரீரத்தோடு எப்படி கரங்களும் கால்களும் மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதுபோல இந்த ஆரோக்கிய சீர்திருத்த சத்தியமும் மூன்றாம் தூதனின் தூதோடு மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கின்றது.—1T 486 (1867).

டீ, காபி, புகையிலை மற்றும் மதுபானம் போன்றவற்றைப் பாவமான பழக்கங்களாக நாம் காண்பிக்க வேண்டும். உணவு மேசையில் வைக்கப்படுகின்ற மாமிசம், முட்டை, வெண்ணை, பாலாடைக்கட்டி போன்ற அப்படிப்பட்ட உணவுப் பொருள்களை அதே அடிப்படையில் வைக்க முடியாது. நமது ஊழியத்தினை பாரம் என்பதுபோல் இவைகளை முன் நிறுத்தவும் கூடாது. ஆனால், மேற்கூறப்பட்ட—தேநீர், காபி, புகையிலை மற்றும் மதுபான வகைகளை அளவோடும்கூட சேர்த்துக்கொள்ளக் கூடாது, அவைகள் முற்றிலுமாக ஒதுக்கப்பட வேண்டும்.—3SM 287 (1881).

உண்மையான இச்சையடக்கம் தீமைபயக்கக்கூடிய அனைத்தையும் முற்றிலுமாக விலக்கிவிடும்படியாகவும், ஆரோக்கியத்தை அளிக்கக்கூடிய காரியங்களை விவேகமாக பயன்படுத்தும்படியாகவும் நமக்கு போதிக்கின்றது.—PP 562 (1890).

சுத்தமான காற்று, சூரிய ஒளி, இச்சையடக்கம், ஓய்வு, உடற் பயிற்சி, சரியான உணவு, தண்ணீரின் பயன்பாடு, தெய்வீக வல்லமையில் நம்பிக்கை போன்ற இவைகளே உண்மையான நோய்தீர்க்கும் வழிகள் ஆகும்.—MH 127 (1905).

ஆரோக்கியத்தைப் பாதிக்கின்ற எந்த ஒன்றும், சரீர வல்லமையை மாத்திரம் குறைப்பதில்லை, மனம் மற்றும் ஒழுக்க சம்பந்தமான வல்லமைகளையும் பெலவீனப்படுத்த வழிவகுக்கும். எந்த ஒரு ஆரோக்கியமற்ற பழக்கத்தின் ஈடுபாடும் ஒருவருக்கு நன்மைக்கும் தீமைக்கும் இடையே இருக்கின்ற வித்தியாசத்தைக் கண்டுகொள்ள மிகவும் கடினமாக்கிவிடும். அதனால் தீமையை எதிர்த்து நிற்பதும் மிகவும் கடினமாகிவிடும்.—MH 128 (1905).

## ஆதி உணவுத்திட்டத்திற்குத் திரும்புங்கள்

பூமியில் இயற்கையாக உற்பத்தியாகும் ஆகாரப் பொருள்களினால் மனிதன் பிழைத்திருக்க வேண்டுமென்று, தேவன் ஆதியில் கொடுத்த அவரது திட்டத்திற்குப் படிப்படியாக நம்மைத் திருப்பிக் கொண்டுவர முயற்சித்துக் கொண்டிருக்கின்றார். கர்த்தரின் வருகைக்கு காத்துக்கொண்டிருக்கின்ற மக்கள் மத்தியில், மாமிசம் உண்ணுதல் இறுதியாக முற்றிலும் விடப்படும்; அவர்களது உணவுப்பட்டியலில், மாமிசம் ஒரு பகுதியாக இருப்பது நிறுத்தப்படும். இந்த முடிவினை எப்பொழுதும் நம் கண்முன் வைத்து, அதனை அடையும்படியாக நாம் தொடர்ந்து நிலையாக முயற்சிக்க வேண்டும்.—CH 450 (1890).

கிறிஸ்துவின் அதி சீக்கிர வருகைக்காக காத்திருக்கின்றோம் என்று உரிமைபாராட்டுகின்ற மக்களின் மத்தியில் மாபெரும் சீர்திருத்தம் காணப்பட வேண்டும். ஆரோக்கிய சீர்திருத்தம் நமது மக்களின் மத்தியில் இதுவரை செய்திராத ஒரு மாபெரும் வேலையைச் செய்யும். மாமிச உணவை சாப்பிட்டுக்கொண்டு, அதனால் இன்னும் தங்கள் சரீரம், மனம் மற்றும் ஆவிக்குரிய ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொண்டிருப்பவர்கள், மாமிசம் உண்பதின் ஆபத்தைக்குறித்து இன்னமும் விழிப்படைய வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். மாமிச உணவு உண்ணுதல்குறித்த காரியத்தில், தற்போது அரைகுறையாக மனமாற்றமடைந்துள்ள அநேகர், தேவனுடைய மக்களோடு இனி என்றுமே நடவாதபடிக்கு அவர்களைவிட்டுப் பிரிந்து சென்றுவிடுவார்கள்.—RH May 27, 1902.

## உபவாசித்து ஜெபிப்பதற்கான நேரம்

இப்பொழுதிலிருந்து காலத்தின் முடிவு வரையிலும், தேவனுடைய மக்கள் மிகவும் ஊக்கமாகவும், அதிக விழிப்போடும், தங்களது சொந்த ஞானத்தை நம்பாமல் தங்களது அதிபதியின் ஞானத்தையே நம்பியிருக்க வேண்டும். அவர்கள் உபவாசித்து ஜெபிப்பதற்கான நாட்களை ஒதுக்க வேண்டும். ஆகாரத்தை முழுமையாகத் தவிர்ப்பது அவசியமற்றதாக

இருக்கலாம். மிகவும் எளிமையான உணவை அளவாக உண்ண வேண்டும்.—CD 188, 189 (1904).

அனைவருக்கும் பரிந்துரைக்கப்பட வேண்டிய உண்மையான உபவாசம் என்பது, நம் உணர்வுகளைத் தூண்டிவிடக்கூடிய அனைத்து வகை உணவுகளைத் தவிர்த்து, தேவன் ஏராளமாய் அளித்திருக்கின்ற முழு சத்தும் அடங்கிய எளிமையான உணவை சரியான விதத்தில் உபயோகிப்பதே ஆகும். என்னத்தைக் குடிப்போம், என்னத்தைப் புசிப்போம் என்று அநித்தியமான உணவைக்குறித்து மனிதன் குறைவாகவே சிந்திக்க வேண்டும். மாறாக, முழுமையான ஆவிக்குரிய அனுபவத்திற்கு மனவுறுதியையும் பலத்தையும் அளிக்கக்கூடிய பரலோக மன்னாவைக் குறித்து மிகவும் அதிகமாக சிந்திக்க வேண்டும்.—MM 283 (1896).

தேவபக்தியின் புளித்தமா அதனுடைய வல்லமையை முழுமையாக இழந்துவிடவில்லை. சபையின் ஆபத்தும் சோர்வும் அதிகரிக்கும் அந்த நேரத்திலே, சத்திய வெளிச்சத்திலே நின்று கொண்டிருக்கின்ற சிறு கூட்டத்தார், தேசத்திலே செய்யப்படுகின்ற அருவருப்புகளுக்காகப் பெருமூச்சுவிட்டு அழுவார்கள். சபையின் விசுவாசிகள் உலகத்தின் வழக்கங்களைப் பின்பற்றி அவைகளைச் செய்துகொண்டிருப்பதால், அந்தச் சிறுகூட்டத்தினரின் அதிகமான ஜெபங்கள் விசேஷமாக சபையின் சார்பாக மேலெழும்பும்.—5T 209, 210 (1882).

## தேவன்மீது முழு நம்பிக்கை

உண்மையாய்த் தங்களை அர்ப்பணிக்காத ஊழியர்களால், சில நேரங்களில் காரியங்கள் தவறாகப் போகும். மற்றவர்களது அப்படிப்பட்ட தவறான போக்கின் விளைவைக் கண்டு நீங்கள் அழலாம், ஆனால் வருத்தப்படாதீர்கள். இந்த வேலை, ஆசீர்வாதமான பரலோக அதிபதியினுடைய மேற்பார்வையின்கீழ் இருக்கின்றது. தேவன் நம்மிடம் கேட்பதெல்லாம், ஊழியர்கள் அவரிடம் வந்து தங்களுக்குரிய கட்டளையை பெற்றுக்கொண்டு, அவரது வழிகாட்டுதல்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதே ஆகும். வேலையின் அனைத்துப் பகுதிகளாகிய—நம்முடைய சபைகள், ஊழியங்கள், ஓய்வுநாள் பள்ளிகள், நிறுவனங்கள்—ஆகிய அனைத்தும் அவரது இருதயத்தில் சுமந்து செல்லப்படுகின்றன. பிறகு ஏன் வருந்துகிறீர்கள்? சபை ஜீவனுடன் ஊக்குவிக்கப்படுவதைக் காணவேண்டும் என்ற தீவிரமான பேராவல், தேவனில் வைக்கின்ற முழு நம்பிக்கையினாலே மென்மையாக்கப்பட வேண்டும்…

தேவனுடைய வேலையை மிகவும் துரிதமாய் முன்னேற்ற வேண்டும் என்று தேவனால் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வல்லமைகளை,

ஒருவரும் அளவுக்கு மீறி சுமையேற்றி வீணாக்கிட முயற்சிக்க வேண்டாம். மனிதனின் வல்லமைகள் தேவனுடைய வேலையைத் துரிதப்படுத்த முடியாது. பரலோக அறிவுத்திறன்களின் வல்லமை மனித வல்லமையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்... ஒருவேளை தற்போது ஊழியத்தில் மிகவும் பளுவான பாரங்களைச் சுமந்துகொண்டிருக்கின்ற அனைத்து ஊழியர்களும், தங்களது வேலையைக் கைவிட்டால்கூட தேவனுடைய வேலை முன்னேறிச் செல்லும்.—7T 298 (1902).

## குடும்ப ஆராதனை

காலையிலும் மாலையிலும் தேவனுடைய வார்த்தைகளை வாசித்து, அவரது துதிகளைப்பாடி, உங்களது குழந்தைகளுடன் இணைந்து தேவனை ஆராதியுங்கள். தேவனுடைய பிரமாணங்களை திருப்பிச்சொல்ல அவர்களுக்குக் கற்றுத்தாருங்கள்.—Ev 499 (1904).

குடும்ப ஆராதனை செய்கின்ற நேரங்கள் சுருக்கமானதாகவும், அனலுள்ளதாகவும் இருப்பதாக. அதிக நேரம் ஆராதிப்பதினால் அவர்களுக்கு உண்டாகக்கூடிய சோர்வு அல்லது உற்சாகக் குறைவினிமித்தம், உங்கள் குழந்தைகளுக்கோ அல்லது குடும்ப அங்கத்தினர்களுக்கோ ஒருவித அச்சம் உண்டாக அனுமதிக்க வேண்டாம். வேதப்புத்தகத்திலிருந்து நீண்ட அதிகாரம் வாசிக்கப்பட்டு, விளக்கம் சொல்லப்பட்டு, நீண்டஜெபம் ஏறெடுக்கப்படும் போது, மதிப்புமிக்க இந்த ஆராதனை சோர்வடையச் செய்கிறதாய் மாறிவிடுகின்றது. ஆராதனை முடிந்தபின்பு ஏதோ ஒன்றிலிருந்து விடுபட்டது போன்றதாக அது இருக்கும்இ

ஆர்வமூட்டக்கூடியதாயும், எளிதில் விளங்கிக்கொள்வதற்கேதுவான தாயும் இருக்கின்ற ஒரு வேதப் பகுதியை அக்குடும்பத்தின் தகப்பன் தெரிந்துகொள்ளட்டும். அந்த நாள் முழுவதுமாகப் படித்து நடைமுறை படுத்தக்கூடிய ஒரு பாடத்தை அமைத்துக்கொடுக்கின்ற ஒரு சில வசனங்கள் போதுமானதாகும். குடும்ப ஆராதனையிலே கேள்விகள் கேட்கப்படலாம், ஒருசில ஊக்கமான மற்றும் ஆர்வமான குறிப்புகள் தரப்படலாம். அல்லது மிக சுருக்கமாகவும் குறிப்பாகவும் படங்களைக்கொண்டு கருத்தை விளக்கிச் சொல்வதின்மூலம் ஒரு சம்பவம் கூறப்படலாம். ஒரு சில வசனங்களைக்கொண்ட எழுச்சியூட்டக்கூடிய பாடல் பாடப்படலாம். செய்யப்படும் ஜெபம் சுருக்கமானதாயும், தெளிவாய் சுட்டிக்காட்டப்பட்டதாயும் இருக்க வேண்டும். ஜெபத்தில் வழிநடத்துபவர் எல்லாவற்றைக் குறித்தும் ஜெபிக்கக்கூடாது. ஆனால், எளிய வார்த்தைகளால் தனது தேவைகளை எடுத்துக்கூறி நன்றியுடன் தேவனைத் துதிக்க வேண்டும்.—CG 521, 522 (1884).

## உலகத்தொடர்பு குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

இந்தத் தூது (வெளி. 18:1–3) ஒலித்துக்கொண்டிருக்கும்பொழுது, அறிவிக்கப்படும் சத்தியம் அதன் பிரித்தெடுக்கும் பணியைச் செய்து கொண்டிருக்கும்பொழுது, தேவனுடைய உண்மையான காவற்காரர்களாகிய நாம், நம்முடைய உண்மையான நிலை என்ன என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். உலகத்தாரின் ஆவியினால் உந்தப்படாமல் இருக்கும்படியாகவும், நமது ஆவிக்குரிய பகுத்தாராயும் தன்மை குழப்பமடைந்து சத்தியத்தைப் பெற்று கர்த்தரின் செய்தியை வைத்திருக்கும் கிறிஸ்தவ சபைகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளுகின்ற சபைகளின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்காதிருக்கும்படியாகவும் நாம் உலத்தாரோடு நம்மை பிணைத்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும். அதே சமயம் பரிசேயர்களைப் போல அவர்களிடமிருந்து ஒதுங்கியிருக்கவும் கூடாது.—EGW'88 1161 (1893).

வானத்தின் மேகங்களின்மீது கிறிஸ்து வருவதை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற மக்கள், களியாட்ட குழுக்களிலும், தங்களது சொந்த கேளிக்கைகளுக்காக கூடும் கூட்டங்களிலும் உலகத்துடன் ஒன்றிணைந்திருக்கமாட்டார்கள்.—Ms 4, 1898.

நம்முடைய விசுவாசத்தில் இல்லாதவர்களுடன் ஒப்பந்தங்கள் மூலமாகவோ அல்லது கூட்டு வணிகத்தின்மூலமாகவோ அல்லது தொழில் சங்கங்களின்மூலமாகவோ, நாம் ஒன்றாக இணைந்திருப்பது தேவனுடைய ஒழுங்குமுறையில் இல்லை.—RH Aug. 4, 1904.

நம்மால் இயன்ற அளவிற்கு மற்ற மக்களுடன் நம்முடைய கொள்கைகளைத் தியாகம் செய்யாமல் நாம் இணைந்திருக்க வேண்டும். அப்படி இணைந்திருப்பதென்பது, நாம் அவர்களது சங்கங்களில் பங்கு கொள்ளவேண்டும் என்றோ, அவர்களது தங்கும் இடங்களில் தங்கியிருக்கவேண்டும் என்றோ அர்த்தமல்ல. மாறாக, இச்சையடக்கம் பற்றின கேள்வியிலே நாம் மனமுவந்து அவர்களுக்கேற்றவாறு இணங்கமாட்டோம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளும்படியாக நாம் நடந்துகொள்ள வேண்டும்.—Te 220 (1884).

## கிறிஸ்து அங்கீகரிக்கிற பொழுதுபோக்கு

தங்களது சரீரம் மற்றும் மனதின் வல்லமைகளை தேவனுடைய மகிமைக்காக உபயோகப்படுத்தும் நோக்கத்துடன் தூய்மையான பொழுது போக்குகளினால், தங்களது சரீரங்களை ஊக்கமூட்டவும், தங்களது சிந்தையைப் புத்துணர்ச்சியூட்டவும் நாட வேண்டும் என்பது கிறிஸ்தவர்களின் கடமையும் சிறப்புரிமையுமாக இருக்கின்றது.—MYP 364 (1871).

தங்களது ஆதிக்கத்தின் கீழுள்ள மகிழ்ச்சிக்கான அநேக ஊற்றுகளை கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கின்றனர். நல்லொழுக்கமான மற்றும் வரையறைக்குட்பட்ட இன்பங்கள் எவை என்று அவர்களால் தவறிழைக்காத சரிநுட்பத்துடன் கூறமுடியும். மனதைக் கெடுக்காத, அல்லது ஆத்துமாவின் தரத்தைக் குறைக்காத அப்படிப்பட்ட பொழுதுபோக்குகளை அவர்கள் அனுபவிக்கலாம். சுய மரியாதையை அழித்து, அல்லது தங்களை உபயோகமுள்ளவர்களாக வைத்துக்கொள்ளுகின்ற வழியைக் கெடுத்து, பின்னாளில் வருத்தப்படுவதற்கு ஏதுவான ஒரு செல்வாக்கை விட்டுச்சென்று ஏமாற்றமடையச்செய்யாத அப்படிப்பட்ட பொழுதுபோக்குகளை அவர்கள் அனுபவிக்கலாம். அவர்கள் கிறிஸ்துவைத் தங்களுடன் அழைத்துச் சென்று, ஜெபம் நிறைந்த ஒரு சிந்தையை தொடர்ந்து செயலாற்றினால் முழுமையான பாதுகாப்போடு இருப்பார்கள்.—MYP 38 (1884).

நம்முடைய கூட்டங்கள் மிகவும் ஒழுங்கான முறையில் நடத்தப்பட வேண்டும். நம்முடைய நடத்தைகளும் அப்படியாகவே இருக்க வேண்டும். அப்பொழுது கூட்டங்கள் முடிந்து, நாம் நமது இல்லங்களுக்கு சென்ற பின்பு, தேவனுக்கும் மனிதனுக்கும் நேராக குற்றமற்ற மனசாட்சி உடையவர்களாகவும், யாரோடு தொடர்பு கொண்டிருந்தோமோ அவர்களை எந்த விதத்திலும் புண்படுத்தவில்லை அல்லது காயப்படுத்தவில்லை என்ற ஒரு மன உணர்வு உடையவர்களாகவும் அல்லது அவர்கள்மீது எந்தவிதத்திலும் பாதிப்பேற்படுத்தும் செல்வாக்கை உண்டுபண்ணாத ஒரு மனச்சாட்சியை உடையவர்களாகவும் நாம் இருக்கலாம்.

விசுவாசத்துடன், தேவனுடைய ஆசீர்வாதம் இருக்கும்படி கேட்டு, ஈடுபடக்கூடிய எந்த ஒரு பொழுதுபோக்கும் ஆபத்தானதாக இருக்காது. ஆனால், அந்தரங்க ஜெபத்திற்கோ, ஜெபபீடத்தண்டையில் செய்யப்படும் தியானத்திற்கோ அல்லது ஜெபக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கோ, உங்களைத் தகுதியற்றவர்களாக்கக்கூடிய எந்த ஒரு பொழுதுபோக்கும் பாதுகாப்பானதல்ல, அவை ஆபத்தானதாகும்.—MYP 386 (1913).

## மேன்மை அடையச்செய்யும் இசை

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தர வழியாகப் பிரயாணம் சென்ற போது, தங்களது வழிகளை புனிதமான பாடலின் இசையால் எப்படி உற்சாகமாக்கிக்கொண்டார்களோ, அதுபோல இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகள் அவர்களின் பரதேசப் பிரயாண வாழ்க்கையை மகிழ்ச்சியுள்ள தாக்கிக்கொள்ளுமாறு தேவன் கூறுகின்றார். தேவ னுடைய வார்த்தைகளைப் பாடலாகத் திரும்பத்திரும்பப் பாடும் வழிமுறை, அவைகளை நினைவில் ஆழமாகப் பதிய வைத்துக்கொள்வதற்கு மிகவும்

சிறந்த விளைவை உண்டுபண்ணும் வழிமுறையாகும். மேலும் அப்படிப்பட்ட பாடல் அற்புதமான வல்லமை கொண்டதாகும் முரட்டுத்தனமான மற்றும் நாகரீகமற்ற சுபாவங்களைக் கீழ்ப்படுத்தும் வல்லமை அதற்கு இருக்கின்றது. சிந்தனையைத் தூண்டவும், இரக்க குணத்தை எழும்பச்செய்யவும் அதற்கு வல்லமை உண்டு. செயலில் ஒருமைப்பாட்டை மேம்படுத்தவும், தைரியத்தை அழித்து முயற்சியை பெலவீனப்படுத்தும் மனச் சோர்வையும் கவலையையும் அகற்றவும் அதற்கு வல்லமை உண்டு.—Ed 167, 168 (1903).

பரலோக வாசஸ்தலங்களில் தேவனுக்குச் செய்கின்ற தொழுகையிலே, இசை ஒரு பங்கு வகிக்கின்றது. எனவே, நம்முடைய துதியின் பாடல்களில் (பரலோக பாடற்குழுவின் இசையோடு) ஒத்துப்போகத்தக்கதாக, எந்த அளவிற்கு நெருங்கி வரமுடியுமோ அந்த அளவிற்கு நெருங்கிவருவதற்கு முயற்சிக்க வேண்டும்.... ஜெபம் ஆராதனையிலே எப்படி ஒரு செயலாக உள்ளதோ, அதேபோல பாடல்பாடுவதும் ஆராதனைகளில் ஒரு பகுதியாக உள்ளது.—PP 594 (1890).

இசைக்கருவிகளை பயன்படுத்துவதென்பது மறுக்கப்பட வேண்டிய ஒன்று அல்ல. முற்காலங்களில் இவைகள் மத ஆராதனைகளில் பயன்படுத்தப்பட்டன. தொழுகை செய்பவர்கள் தம்புரோடும் தாளத்தோடும் தேவனைத் துதித்தார்கள். அதைப்போலவே இசை நமது ஆராதனைகளில் அதனுடைய இடத்தைப் பெற்றிருக்க வேண்டும்.—Ev 500, 501 (1898).

## தொலைக்காட்சியும், திரையரங்கும்

மிகவும் ஆபத்தான பொழுதுபோக்கு இடங்களில் ஒன்று திரை அரங்கமாகும். அது நன்னடத்தையையும் நல்லொழுக்கத்தையும் கற்றுத்தரும் பள்ளியாக இருப்பதற்குப் பதிலாக, அநேகமுறை ஒழுக்கத்தைக் கற்றுத்தரும் இடம் என்று கூறிக்கொண்டு உரிமை பாராட்டினாலும், அப்படி இல்லாத ஒரு இடமாக, ஒழுங்கீனத்தை வளர்க்கின்ற ஒரு இடமாகவே இருக்கின்றது. இப்படிப்பட்ட பொழுதுபோக்குகளின்மூலமாக ஒழுக்கக்கேடான பழக்கவழக்கங்களும், பாவம் நிறைந்த இயற்கையான மனப்பாங்குகளும் பலப்படுத்தப்பட்டு உறுதியாக்கப்படுகின்றன. கீழ்த்தரமான பாடல்கள், காமவெறிகொண்ட உடல் அசைவுகள், முகபாவனைகள் மற்றும் செய்கைகள் சிந்தனைத் திறனை சீர்கெடுத்து, ஒழுக்கமான காரியங்களைத் தரம் குறையச் செய்கின்றன.

கற்பனைத்திறனை விஷமாக்கி, மார்க்க சம்பந்தமான எண்ணங்களை அழித்து, அமைதியான மகிழ்ச்சிக்கான விருப்பத்தையும், வாழ்க்கையின் உண்மைநிலை பற்றிய தெளிந்த அறிவையும் மழுங்கச் செய்கின்றதான திரையரங்கு பொழுதுபோக்குகளைப்போல அதிக வல்லமைகொண்ட

செல்வாக்கான காரியம், நமது தேசத்தில் வேறு எதுவும் இருக்க முடியாது. இப்படிப்பட்ட இடங்களுக்கு வழக்கமாக கலந்து கொள்ளும் ஒவ்வொரு வாலிபரும் கொள்கையிலே நேர்மையற்றிருப்பார்கள். வெறியூட்டும் மதுவிற்கு உள்ள விருப்பம் அதனுடைய பயன்பாட்டால் பெலப்படுத்தப்படுவதுபோல, இந்த தவறான காட்சிகளைக் காணும் ஆவல் ஒவ்வொரு பாவ விருப்பத்தையும் அதிகரிக்கும்.—4T 652, 653 (1881).

ஆடல் அரங்குகளிலோ அல்லது திரை அரங்குகளிலோ செலவிடப்படும் நேரம், தேவனின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளமுடியாது. எந்த ஒரு கிறிஸ்தவனும் அப்படிப்பட்ட இடத்திலே தன் மரணத்தை சந்திக்க விரும்பமாட்டான். ஒருவரும் கிறிஸ்து வரும் நேரத்தில், அப்படிப்பட்ட இடத்தில் தான் காணப்பட விரும்பமாட்டார்.—MYP 398 (1882).

கருத்தூன்றிய மற்றும் ஆவிக்குரிய எண்ணங்களை அகற்றாத பொழுதுபோக்குகள் மட்டுமே பாதுகாப்பான பொழுதுப்போக்குகள் ஆகும். கிறிஸ்துவை நம்மோடு அழைத்துச் செல்லக்கூடிய இடங்களே பாதுகாப்பான பொழுதுபோக்கு இடங்களாகும்.—OHC 284 (1883).

### ஆடையும் அலங்கரிப்புகளும்

ஆடைக்கடுத்த சச்சரவை எழுப்புவது என்பது உங்களது மதத்தின் முக்கியக் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமல்ல. அதைக்காட்டிலும் மேன்மையான காரியங்கள் பேசுவதற்கு இருக்கின்றன. கிறிஸ்துவைக் குறித்து பேசுங்கள். இதயம் மாற்றப்படும்போது, வேதவாக்கியங்களுக்கு ஒத்துப்போகாத அனைத்து காரியங்களும் அகன்றுபோகும்.—Ev 272 (1889).

நாம் நடக்க வேண்டிய பாதையிலே, நமது இயற்கையான மன விருப்பங்களைக் குறுக்காக ஊடுருவிப் பிரித்தாலும்கூட நாம் உண்மையான கிறிஸ்தவர்களாக இருந்தால், கிறிஸ்துவைத் தொடர்ந்து பின்செல்வோம். நீங்கள் இதைத்தான் அணிய வேண்டும் இதை அணியக்கூடாது என்று உங்களிடத்தில் சொல்வதால் பிரயோஜனம் ஒன்றும் இல்லை. ஏனெனில், உங்கள் இருதயத்தில் இப்படிப்பட்ட மாயையான பொருள்களின்மீது நாட்டம் இருக்குமென்றால், உங்களது அலங்கரிப்புகளை நீக்கிவிடுவதென்பது ஒரு மரத்தின் இலைகளைத் தறித்துப்போடுவதைப்போல் இருக்கும். மாம்சமான இருதயத்தின் விருப்பங்கள் மீண்டுமாக தங்களுக்குத் தாங்களே தொடர்ந்து செயலாற்றிக்கொள்ளும். எனவே, உங்களைக் குறித்த ஒரு ஜாக்கிரதை உணர்வு உங்களுக்கு இருக்க வேண்டும்.—CG 429, 430 (1892).

தேவனுக்கு முன்பாக கவனமாயும் ஜாக்கிரதையாயும் நடந்து கொள்ளும்படி நம் ஜனங்களை நான் வருந்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆடை அணிவதில், ஆரோக்கிய கொள்கைகளுக்கு ஒத்து போகக்கூடிய விதத்தில் உள்ள பழக்கவழக்கங்களைப் பின்பற்றுங்கள். நம் சகோதரிகள் அநேகர் செய்வதுபோல தோற்றத்தில் பகட்டில்லாத விதத்தில் ஆடை அணியட்டும். அதாவது நல்ல தரமான, இந்தக் காலத்திற்கு ஏற்ற ஆடைகளை அணியட்டும். ஆடைகளைப் பற்றின சச்சரவு, எப்போதும் உங்கள் மனதை நிரப்ப வேண்டாம். எளிமையான முறையில் நம் சகோதரிகள் ஆடைகளை அணிய வேண்டும். தகுதியான உடையாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், அவர்கள் தங்களை அலங்கரிக்கவேண்டும். உங்கள் உள்ளத்தில் இருக்கின்ற தேவகிருபையை உலகத்துக்குக் காண்பிக்கும் விதத்தில் உடை உடுத்துங்கள். தேவனின் கிருபையினால் உண்டான உள்ளான அலங்கரிப்பின், ஒரு உயிருள்ள சாட்சியான வெளிப்பாட்டை இந்த உலகத்திற்கு அளியுங்கள்.—3SM 242 (1897).

வெளிப்புறத் தோற்றம் இருதயத்தின் பிரதிபலிப்பாகும்.—1T 136 (1856).

**பத்திரிகை வெளியீடுகளின் அவசியம்**

மிகவும் எளிதில் விளங்கக்கூடிய, மிகவும் எளிமையான மொழியில் எழுதப்பட்ட, உலகத்தின்மீது வர இருக்கின்ற காரியங்களைத் தெளிவுப்படுத்துகிற பத்திரிகை வெளியீடுகள் வெளியிடப்பட வேண்டும்.—HM Feb. 1, 1890.

முதலாம் மற்றும் இரண்டாம் தூது, முறையே 1843, 1844–ம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்டது. தற்போது நாம், மூன்றாம் தூதினைக் கூறி அறிவிக்க வேண்டிய காலத்தில் இருக்கின்றோம். என்றாலும், மூன்று தூதுகளும் இன்னமும் அறிவிக்கப்பட வேண்டும்... காரியங்கள் எப்படி நடந்து முடிந்தன, எப்படி நடக்கப்போகின்றன என்பதை தீர்க்கதரிசன சரித்திரத்தின் வரிசையில் விளக்கமாகக் காட்டி, பத்திரிகை வெளியீடுகள் மற்றும் பிரசங்கங்கள்வாயிலாக இந்த உலகிற்குக் கொடுக்கவேண்டும். —CW 26, 27 (1896).

கலப்படமற்ற உண்மையான சத்தியம் துண்டு பத்திரிகைகளிலும், துண்டு வெளியீடுகளிலும் பேசப்பட வேண்டும். மேலும் இவைகள், இலையுதிர் காலத்தில் உதிருகின்ற இலைகள்போல எல்லா இடங்களிலும் கொடுக்கப்படவேண்டும்.—9T 230 (1897).

"முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும்," "தானியேலும் வெளிப்படுத்தின விசேஷமும்," "மாபெரும் ஆன்மீகப் போராட்டம்" போன்ற புத்தகங்கள், வேறு எந்தக் காலத்திலும் தேவைப்பட்டிராத அளவு இக்காலத்திலே

தேவையாயிருக்கின்றன. ஏனெனில், அவைகள் வலியுறுத்துகின்ற சத்தியங்கள், அநேகருடைய குருடான கண்களைத் திறக்கும் என்பதால், மிகவும் பரந்த அளவில் விநியோகிக்கப்பட வேண்டும்.—CM 123 (1905).

கிருபையின் காலம் தொடரும் வரை, புத்தகங்களை விற்கும் வேலைக்கான சந்தர்ப்பமும் தொடர்ந்து இருக்கும்.—6T 478 (1900).

## நம் வெளியீடுகளிலே தாக்கி எழுதுதல் கூடாது

நம் வெளியீடுகளுக்காக எழுதுகிறவர்கள் தயையில்லாத வார்த்தை களையும், மறைமுகமாக சுட்டிக்காட்டுதலையும் உபயோகிக்க வேண்டாம். ஏனெனில், அது நிச்சயமாக பாதிப்பை உண்டாக்கும். மேலும் அது, கத்தோலிக்கர்கள் உட்பட அனைத்து வகுப்பினரையும் சென்றடைவதற்காக, நாம் செய்யவேண்டிய வேலையிலிருந்து தடைசெய்து, முன்னேற முடியாதபடி பாதையையும் அடைத்துப்போட்டுவிடும். சத்தியத்தை அன்போடு எடுத்துப்பேசுவது நம் வேலையாகுமே ஒழிய, மாம்சமான இருதயத்தினுடைய பரிசுத்தமில்லாத காரியங்களை, சத்தியத்துடன் கலந்து பேசுவது நம்முடைய வேலை அல்ல. மேலும் நமது எதிரிகளால் பெறப்பட்டிருக்கின்ற அதே சிந்தைக்கு ஒத்ததாயிருக்கக்கூடிய காரியங்களைகுறித்துப் பேசுவதும் நம் வேலை அல்ல.

கடுமையான மற்றும் இருதயங்களை உருவக் குத்துகின்ற வார்த்தை களை நாம் உபயோகிக்கக்கூடாது. எழுதப்பட்டிருக்கும் ஒவ்வொரு தலைப்பிலிருந்தும் அவைகளை வெளியேற்றுங்கள். கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு முகவரியிலிருந்தும் அவைகளை எடுத்துவிடுங்கள். தேவனுடைய வார்த்தை மாத்திரமே அந்த வேலையைச் செய்யட்டும். அதுவே உருவிச்சென்று, கண்டித்து, கடிந்து கொள்ளட்டும். அழிவுக்குரிய மனிதன் கிறிஸ்துவுக்குள் தன்னை மறைத்துக்கொண்டு அவரில் நிலைத்திருக்கட்டும். —9T 240, 241, 244 (1909).

நமது எழுத்துக்களில் எழுதப்பட்டச் சொல்லை அல்லது சொற்றொடரை தனியாக எடுத்துப் பார்த்தால், சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் எதிரிடையாகத் தோன்றுவது போன்று அதற்குத் தவறான விளக்கம் கொடுக்கப்படும் என்பதால், அப்படிப்பட்ட ஒவ்வொரு சொற்றொடரையும் நமது கூற்றுகளையும் நாம் களைந்துபோட வேண்டும். நமது நாட்டிற்கும் அதன் சட்டதிட்டங்களுக்கும் உண்மையற்றவர்களாகக் காண்பிக்கக்கூடிய விதத்தில் பத்திரிகைகளில் நம்மைப்பற்றி நாம் எழுதாதபடிக்கு, ஒவ்வொரு காரியத்தையும் கவனமாக பரிசீலிக்கவேண்டும்.—Letter 36, 1895.

குத்தக்கூடியது போன்ற குற்றச்சாட்டுகளிலும் கண்டனம் செய்வதிலும் கிறிஸ்தவம் வெளிப்படுத்தப்படுவதில்லை.—6T 397 (1900).

### முக்கியமற்ற காரியங்களைக் குறித்து கவனமாயிருத்தல்

இங்கொன்றும் அங்கொன்றுமாக தனி ஒரு மனிதனைத் தெரிந்து கொண்டு, தமது சத்தியத்தை நம்பி ஒப்படைப்பதற்கு தகுதியுள்ளவர்கள் அவர்கள் மாத்திரமே என்பதுபோல, தேவன் தம்முடைய மக்களைக் கடந்து சென்றுவிடவில்லை. சபை அமைப்பின் நிலை நிறுத்தப்பட்ட நம்பிக்கைக்கு எதிரான புதிய வெளிச்சத்தை அவர் தனிப்பட்ட ஒரு மனிதனுக்கு கொடுப்பது இல்லை. ஒவ்வொரு சீர்திருத்தத்திலும், இப்படிப்பட்ட உரிமையை எடுத்துக்கொள்ளும் மனிதர்கள் எழும்பியிருக்கிறார்கள்... தங்களது சகோதரருக்கும் மேலாக, தேவன் தங்களுக்கு விசேஷமான வெளிச்சம் கொடுத்திருப்பதாக ஒருவரும் தன்னம்பிக்கையுடன் இருக்க வேண்டாம்...

சத்தியத்திற்கு மாறாகத் தோன்றாத, சில புதிய அடிப்படையான கருத்துக்களை சிலர் ஏற்றுக்கொள்கின்றனர். அழகானதாகவும் முக்கிய மானதாகவும் ஆடையணிவிக்கப்பட்டிருப்பதாக அவனுக்கு அக்கருத்து தோன்றுமளவும் அதில் கருத்தூன்றியிருக்கின்றான். ஏனெனில், இது போன்ற பொய்யான தோற்றத்தை அளிப்பதற்கு சாத்தானுக்கு வல்லமை இருக்கின்றது. இறுதியிலே அது அனைத்தையும் கவருகின்ற தலைமைக் கருத்தாகவும், அனைத்திற்கும் மையமாக விளங்கும் மாபெரும் ஒரு காரியமாகவும் உருவாகிவிடும். அதனால், சத்தியம் இருதயத்திலிருந்து வேரோடு பிடுங்கப்பட்டு விடுகின்றது.

சத்தியத்திலிருந்து மனதைத் திசைத்திருப்பும் தன்மையுள்ள இந்த முக்கிய காரியங்களைக்குறித்து, நீங்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்று நான் உங்களை எச்சரிக்கின்றேன். தவறுகள் ஒருபோதும் கேடுவிளைவிக்காமல் இருக்காது. அது ஒருபோதும் பரிசுத்தப்படுத்துவதில்லை. மாறாக, குழப்பத்தையும் பிரிவினையையுமே கொண்டுவரும்.—5T 291, 292 (1885).

### வேற்றுமைகளை அல்ல, ஒற்றுமையை வலியுறுத்துங்கள்

சத்தியத்தின் வெளிச்சத்தைப் பெற்றிருக்கிறவர்களுக்காக, மாறு வேடத்தில் உள்ள ஆயிரக்கணக்கான சோதனைகள் ஆயத்தமாக்கப் பட்டிருக்கின்றன. வேத வார்த்தைகளின் புதிய விளக்கங்கள் மற்றும் புதிய உபதேசங்களை, முதலாவது நாம் பெற்றுக்கொள்வதைவிட, அவைகளை அனுபவம் வாய்ந்த சகோதரர்களுக்கு முன்பாக ஒப்படைப் பதிலேயே நம்முடைய ஒரே பாதுகாப்பு இருக்கிறது. எனவே, வேதவாக்கியங்களின் புதிய உபதேசத்தையோ அல்லது புதிய விளக்கங்களையோ பெற்றுக்கொள்ளும்போது, அவைகளை அவர்களுக்கு (அனுபவம் வாய்ந்த சகோதரர்களுக்கு) முன்பாக, தாழ்மையான மற்றும் கற்றுக்கொள்ளும்

ஆவியோடு, ஊக்கமான ஜெபத்துடன் வைத்து, அவர்களது தீர்ப்பிற்கு ஒப்புக்கொடுங்கள். ஏனெனில், “அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்”...

ஏதோ புதிய வெளிச்சம் அல்லது புதிய வெளிப்பாட்டைப் பெற்றுவிட்டதாகக் கூறும் ஆண்களும் பெண்களும் எழும்புவார்கள். பூர்வ சிறப்படையாளங்களான உபதேசங்களின்மீதுள்ள விசுவாசத்தை நிலை தடுமாறச் செய்வதே அவர்களின் நோக்கமாகும். அவர்களின் உபதேசங்கள் தேவனுடைய வார்த்தையின் பரீட்சையை சந்திக்க முடியாததால் ஆத்து மாக்கள் வஞ்சிக்கப்படுவார்கள். பொய்யான அறிக்கைகள் எங்கும் பரப்பப்படும். சிலர் இக்கண்ணியிலே பிடிக்கப்படுவார்கள்... சத்தியத்திலிருந்து மனிதர்களை இழுத்துச் செல்ல, சாத்தான் இடைவிடாது வகைதேடிக்கொண்டிருப்பதால், தவறான கருத்தின் ஒவ்வொரு வடிவத்திற்கு எதிராக நம்மால் மிகுந்த கவனத்துடன் இருக்கமுடியாது.—5T 293, 295, 296 (1885).

ஐக்கியப்பட்டிருப்பது மிகவும் அவசியமானது என்று நாம் தோன்றச் செய்ய வேண்டும். நமது கருத்துக்களுக்கு மற்றவர்கள் வரவேண்டும் என்பது நமக்கு அவசியமல்ல. ஆனால், அனைவருமே கிறிஸ்துவின் தாழ்மையையும் சாந்தத்தையும் நாடுவார்களானால், அவர்கள் கிறிஸ்துவின் சிந்தையைப் பெறுவார்கள். அதன்பிறகு ஆவியின் ஐக்கியம் அங்கு இருக்கும்.—Letter 15, 1892.

சத்தியத்தை நம்புவதாக உரிமைபாராட்டுகின்ற அனைவரும், தங்களது சகோதரரோடு ஒன்றுபட்டிருக்கவேண்டும் என்று நான் வேண்டுகின்றேன். நாம் தீவிரவாதிகள் என்றோ, ஒருவர் ஒரு காரியத்தையும் மற்றொருவர் வேறு காரியத்தையும் போதிக்கின்றபடியால் நாம் பிரிக்கப்பட்டு இருக்கின்றோம் என்றோ, உலகம் சொல்லும்படியாக அதற்குத் தருணம் அளிக்க நாடாதீர்கள். மேலும், பிரிவினைகளைத் தவிருங்கள்.—TM 57 (1893).

### குற்றங்காண்போரை சந்திப்பது எப்படி?

விசுவாசத்திலிருந்து விலகிப்போனவர்கள், நமது கூட்டங்களுக்கு வருகை தந்து, நாம் செய்யும்படி தேவன் நமக்கு நியமித்த வேலைகளைச் செய்யாதபடிக்கு நம் கவனத்தைத் திசைதிருப்புவார்கள். உங்கள் காதுகளை சத்தியத்திலிருந்து கட்டுக்கதைகளுக்குத் திருப்ப நீங்கள் அனுமதிக்கக் கூடாது. உங்களது ஊழியத்திற்கு எதிராகக் கண்டன வார்த்தைகளைப் பேசுகின்றவர்களை, மனமாற்றமடையச் செய்வதற்கான முயற்சியை நிறுத்த வேண்டாம். ஆனால், எதிர்ப் பவர்களின் மனங்களைச் சென்றடையத்தக்கதான வார்த்தைகளை, தேவதூதர்கள் உங்களது உதடுகளில் கொடுப்பார்கள்

என்றும், இயேசு கிறிஸ்துவின் ஆவியால் நீங்கள் ஏவப்பட்டிருக்கின்றீர்கள் என்றும் காணப்படும் விதத்தில் அது இருக்கட்டும். இந்த மனிதர்கள் தொடர்ந்து தங்களது வழியையே விடாது வற்புறுத்திக்கொண்டே இருந்தால், சபைக்கூடுகையிலுள்ள விவேகமுள்ள மனதுடையவர்கள், உங்களது காரியம் உயர்ந்த தரமானதாக இருக்கின்றது என்று புரிந்து கொள்வார்கள். எனவே, உங்கள்மூலமாய் இயேசு கிறிஸ்து பேசுகின்றார் என்று விளங்கும் விதத்தில் பேசுங்கள்.—9T 148, 149 (1909).

### தேவ வார்த்தையை உயர்த்திப்பிடியுங்கள்

கிளர்ச்சியூட்டும் ஒரு உணர்வை உண்டாக்கும்விதத்தில் நாம் வேலை செய்தால், நாம் விரும்பும் அனைத்தையும் பெறலாம். மேலும், கூடுமானவரை எப்படிச் சமாளிப்பது என்று நாம் அறிந்திருப்பதைக் காட்டிலும் அதிகமாக அறிந்துகொள்ளலாம். ஆனால் அதற்கு மாறாக, அமைதியாக அதே நேரம் தெளிவாக, "திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணுங்கள்." கிளர்ச்சியூட்டும் ஒரு உணர்வைத் தூண்டி விடுவது நம் வேலை என்பதுபோல நாம் அதை கருதக்கூடாது. தேவஆவியானவர் மாத்திரமே, அப்படிப்பட்ட ஒரு ஆரோக்கியமான உற்சாகத்தை உண்டாக்க முடியும். தேவன் கிரியை செய்யட்டும், ஆனால் மனித ஏதுகரம் விழிப்போடும் ஜெபத்தோடும் காத்திருந்து, ஒவ்வொரு கணப்பொழுதும் இயேசுவையே நோக்கிப் பார்த்து, ஒளியாயும் ஜீவனாயும் இருக்கின்ற விலையுயர்ந்த அவரது ஆவியால் கட்டுப்படுத்தப்பட்டு வழிநடத்தப்படும்படி, அவர் முன்பாக தாழ்மையாய் நடந்து கொள்ளட்டும்.—2SM 16, 17 (1894).

தேவனுடைய திடமான வார்த்தையுடன் நாம் ஜனங்களிடத்தில் செல்ல வேண்டும். அவர்கள் அந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ளும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்தில் வருவார். நான் முன்கூறியிருக்கிற வண்ணமாக, ஜனங்களின் மனங்கள் மெச்சத்தகுந்த விதத்தில் அவர் எப்பொழுதும் வருவார். தேவனுடைய ஒவ்வொரு உண்மையான பிள்ளையையும் தூண்டக்கூடிய அமைதியையும், பெருந்தன்மையையும், தெய்வபயத்தையும் நம்முடைய பேச்சிலும் நாம் பாடுகின்ற விதத்திலும் நமது அனைத்து ஆவிக்குரிய செயல்பாடுகளிலும் நாம் வெளிக்காட்ட வேண்டும்.—2SM 43 (1908).

உணர்வுகளின்மூலமாக அல்ல, கிளர்ச்சியூட்டக்கூடிய காரியத்தின் மூலமாக அல்ல—வேத வசனத்தின் மூலமாகவே—மக்களை சத்தியத்திற்கு கீழ்ப்படியத்தக்கதான பாதிப்பை உண்டுபண்ண வேண்டும். தேவனுடைய வார்த்தை என்ற தளத்தின்மீது நாம் பாதுகாப்புடன் நிற்கமுடியும்.—3SM 375 (1908). ★

[1] Testimonies for the Church, Vol. 6. pp 349–368–ல், "The Observance of the Sabbath" என்ற தலைப்பின் கீழாக பார்க்கவும்.

# 7

# நாட்டுப்புற வாழ்க்கை

## தெய்வீக இலட்சியம்

தேவன் படைத்த அனைத்தும் பரிபூரண அழகுடன் இருந்த போதிலும், ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மகிழ்ச்சி உண்டாக்கும்படிக்கு பூமியின்மீது அவர் படைத்த எதுவுமே குறைவுபடுவதாய் காணப்படாத போதிலும், தேவன் அவர்களுக்காக விசேஷமாக ஒரு தோட்டத்தை உண்டாக்கியதின்மூலமாக அவர் தமது மாபெரும் அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்களது நேரத்தின் ஒரு பகுதி தோட்டத்தைப் பண்படுத்தும் மகிழ்ச்சியான வேலையிலே ஈடுபடுத்தப்படும்படியாகவும், அதன் மற்றொரு பகுதி தங்களைச் சந்திக்க வரும் தேவதூதர்களை வரவேற்று, அவர்கள் கற்பிக்கும் ஆலோசனைகளைக் கேட்டு, அதை மகிழ்ச்சியாக தியானம் செய்வதிலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அவர்களது வேலை சோர்வளிக்கக்கூடியதாய் இராமல், மகிழ்விக்கக்கூடியதாயும் பலத்தைக் கொடுக்கக்கூடியதாயும் இருந்தது. இந்த அழகான தோட்டம் அவர்களது வீடாகவும், அவர்களது விசேஷித்த உறைவிடமாகவும் இருந்தது.—3SG 34 (1864).

நித்திய பிதா தமது குமாரனுக்காக தெரிந்துகொண்ட சூழ்நிலைகள் என்ன? கலிலேயக் குன்றுகளிலே ஒரு தனிமையான இல்லம்; தன்மானத்துடன் கூடிய நேர்மையான தொழிலால் தாங்கப்படுகின்ற குடும்பம்; எளிமையான ஒரு வாழ்க்கை; கடுந்துன்பம் மற்றும் பாடுகளுடனான அனுதின போராட்டம்; தற்தியாகம், சிக்கனம் மற்றும் பொறுமையுடன்கூடிய மகிழ்ச்சிமிக்க சேவை; திறந்த வேதாகமச் சுருளுடன் தன்னுடைய தாயின் அருகில் அமர்ந்து கற்றுக்கொள்ள செலவழிக்கின்ற நேரம்; பசுமையான பள்ளத்தாக்கில் அமைதலான அருணோதயம் அல்லது அஸ்தமனம்; இயற்கையின் பரிசுத்தமான ஊழியங்கள்; சிருஷ்டிப்பையும் தேவனுடைய வழிநடத்துதலையும் பற்றின பாடங்கள் மற்றும் தேவனோடு ஆத்துமாவின் ஐக்கிய உறவு—இவைகளே இயேசு கிறிஸ்துவின் ஆரம்பகால வாழ்க்கையின் சூழ்நிலைகளும் வாய்ப்புகளுமாக இருந்தன.—MH 365, 366 (1905).

**பட்டணங்களிலிருந்து தொலைவில்**

எவ்வளவு துரிதமாய் பட்டணங்களைவிட்டு வெளியேற முடியுமோ அவ்வளவு துரிதமாக வெளியேறி, எந்த இடத்தில் ஒரு தோட்டம் இருப்பதற்கு ஏதுவாகவும், உங்கள் குழந்தைகள் அங்கு மலரும் பூக்களைக் கவனித்து எளிமை மற்றும் சுத்தமான வாழ்க்கையின் பாடங்களை அவைகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கு ஏதுவாகவும் உள்ளதோ, அந்த இடத்தில் ஒரு சிறு பகுதி நிலத்தை வாங்குங்கள்.—2SM 356 (1903).

இக்காலத்திலே என்னுடைய செய்தி, பட்டணங்களை விட்டு வெளியேறுங்கள் என்பதாகும். மிகப்பெரிய பட்டணங்களிலிருந்து பலமைல் தூரத்திற்கு அப்பால் குடியிருப்பை அமைக்க வேண்டுமென்ற அழைப்பு, நமது மக்களுக்கு வந்திருக்கின்றது என்பதை நிச்சயித்துக்கொள்ளுங்கள். இன்றைக்கு இருக்கிறபடியே சான்பிரான்சிஸ்கோவை ஒரு பார்வை பார்த்தாலே, பட்டணங்களைவிட்டு வெளியேறுதலின் அவசியத்தை அது உங்களுக்குக் காட்டி, உங்கள் அறிவுத்திறனுள்ள மனங்களில் பேசும்.

பட்டணங்களை விட்டு வெகுதொலைவில் தங்கள் குடியிருப்பை அமைக்கவேண்டும் என்று கர்த்தர் தமது ஜனங்களை அழைக்கின்றார். ஏனெனில், நீங்கள் நினையாத அப்படிப்பட்ட ஒரு மணி வேளையிலே, வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் இந்த பட்டணங்கள்மீது பொழியப்படும். மக்களுடைய பாவங்களின் சரிசம விகிதத்திற்கேற்ற அளவின்படி அவர்களது தண்டனையும் இருக்கும். ஒரு பட்டணம் அழிக்கப்படும்போது, நமது ஜனங்கள் அதை ஒரு சாதாரண காரியமாக எடுத்துக்கொண்டு, சாதகமான ஒரு சந்தர்ப்பம் தங்களுக்கு அளிக்கப்பட்டால், அழிக்கப்பட்ட அதே பட்டணங்களிலே தங்களுக்காக வீடுகளைக் கட்டிக்கொள்ளலாம் என்று எண்ண வேண்டாம்…

இவைகளின் அர்த்தங்களைப் புரிந்துகொள்கின்ற அனைவரும் வெளி–11–ம் அதிகாரத்தைப் படியுங்கள். ஒவ்வொரு வசனத்தையும் படித்து, பட்டணங்களில் இனிமேலும் நடக்க இருக்கின்ற காரியங்களை உணர்ந்துகொள்ளுங்கள். அதே புத்தகத்தின் 18–ம் அதிகாரத்தில், விளக்கப்பட்டுள்ள காட்சிகளையும் படியுங்கள்.—MR 1518 (May 10, 1906).

ஒரு சிறு பகுதி நிலத்தையும் ஒரு சௌகரியமான இல்லத்தையும் சொந்தமாகப் பெற்றிருக்கும் தாய் தகப்பன்மார்கள், இராஜாக்கள் மற்றும் இராணிகள் ஆவர்.—AH 141 (1894).

**தொலைதூர மையங்களில் இருந்து**
**பட்டணங்களில் ஊழியம் செய்யப்படவேண்டும்**

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகின்ற மக்களாகிய நாம், கண்டிப்பாகப் பட்டணங்களை விட்டு வெளியேற வேண்டும். ஏனோக்கு செய்ததைப்போல, நாம் பட்டணங்களில் ஊழியம் செய்ய வேண்டும். ஆனால் அவைகளில் வசிக்கக்கூடாது.—Ev 77, 78 (1899).

தொலைவான பகுதிகளில் இருந்துகொண்டு பட்டணங்களில் ஊழியம் செய்யவேண்டும். “பட்டணங்கள் எச்சரிக்கப்பட வேண்டாமா? வேண்டும். தேவனுடைய ஜனங்கள் அவைகளில் வாழ்ந்து அல்ல, மாறாக பூமியின்மீது வரவிருக்கின்றதைக் குறித்து அவர்களை எச்சரிப்பதற்கு அவைகளுக்கு விஜயம் செய்து” என்று தேவனுடைய தூதுவன் கூறினான்.—2SM 358 (1902).

பட்டணங்களை மையப்படுத்தி நமது வேலைகளை ஆரம்பிக்கக் கூடாது என்ற காரியத்தில், ஒரு விசேஷித்த வெளிச்சம் பல ஆண்டுகளாக எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பட்டணங்களை நிறைக்கக் கூடிய கலவரங்களும் குழப்பங்களும், தொழிற்சங்கங்களாலும் வேலை நிறுத்தங்களாலும் கொண்டுவரப்படக்கூடிய சூழ்நிலைகளும், நமது வேலைக்கு ஒரு மாபெரும் தடங்கலாக இருக்கும் என்பதை நிரூபிக்கும். —7T 84 (1902).

ஒரு தேசத்தில் அக்கிரமம் பெருகும்போது, சோதோமிலே லோத்தின் குரல் கேட்கப்பட்டதுபோல, போதனையும் எச்சரிப்பும் கொடுக்கின்ற ஏதாவதொரு சத்தம் எப்பொழுதும் கேட்கப்பட வேண்டும். ஆயினும், லோத்து தனது இல்லத்தை இந்த துன்மார்க்கமான தூய்மைக்கேடடைந்த பட்டணத்தில் அமைக்காது இருந்திருப்பாரானால், அநேகத் தீமைகளிலிருந்து தனது குடும்பத்தை பாதுகாத்திருந்திருக்கக் கூடும். லோத்துவும் அவரது குடும்பமும் சோதோமில் செய்ததை பட்டணத்திலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள ஒரு இடத்தில் அவர்கள் வாழ்ந்துகொண்டு செய்துகொண்டிருந்திருக்கலாம்.—Ev 78 (1903).

தற்போதைக்கு, சிக்காகோ பட்டணத்தில் வேலைசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் சிலருக்கு இருக்கலாம். ஆனால் அவர்கள் நாட்டுப்புற இடங்களிலே ஊழிய மையங்களை அமைத்துக்கொண்டு, அங்கிருந்து பட்டணங்களில் ஊழியஞ்செய்ய தயார்செய்ய வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் தங்களையே ஆராய்ந்து பார்த்து, எளிமையானதும் அதிக செலவில்லாததுமான இடங்களை, தாங்கள் வேலை செய்வதற்கேற்ற ஊழிய மையங்களாக அமைத்துக்கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். அவ்வப்போது பெரிதான இடங்கள் அதிசயிக்கும் வகையில்

குறைந்த விலைக்கு அவர்களால் வாங்கிக்கொள்ள இயலும்விதத்தில் அவர்களது கவனத்திற்கு வரும்.—Ev 402 (1906).

**இயற்கையின் சூழலில் வளமான ஆசீர்வாதங்கள்**

"பட்டணங்களிலிருந்து வெளியேறுங்கள்" என்று நாங்கள் மறுபடியும் சொல்லுகின்றோம். அப்படி மலைகள் மற்றும் குன்றுகள் போன்ற இடங்களுக்குச் செல்லவேண்டியதை ஒரு மாபெரும் இழப்பாகக் கருதவேண்டாம். மாறாக, தேவனோடு தனித்திருந்து அவரது சித்தத்தையும் வழியையும் கற்றுக்கொள்வதற்கு ஏதுவான ஒதுக்கிடத்தைத் தேடுங்கள்...

ஆவிக்குரிய தன்மையை தேடுவதையே தங்களது வாழ்க்கைப் பணியாக கொள்ளவேண்டும் என நமது ஜனங்களை நான் ஊக்குவிக்கின்றேன். கிறிஸ்து வாசலண்டையில் நிற்கின்றார். எனவேதான் நமது ஜனங்களுக்கு நான் சொல்லுகிறதாவது: பட்டணங்களை விட்டு நாட்டுப்புற பகுதிகளுக்குச் செல்லும்படியாக அழைக்கப்படும்போது, அதை நீங்கள் தனிமையாகக் கருதவேண்டாம். மாறாக, அதைப் புரிந்துகொண்டு செயல்படுபவர்களுக்கு அங்கே செழிப்பான ஆசீர்வாதங்கள் காத்திருக்கின்றன. இயற்கைக் காட்சிகளையும் சிருஷ்டிகரின் கிரியைகளையும் நோக்கிப்பார்ப்பதினாலும், தேவனின் கைவேலைப்பாடுகளை ஆராய்ந்து பார்ப்பதினாலும், புலன்களால் எளிதில் உணரப்படாத அவரது சாயலாகவே நீங்கள் மாற்றப்படுவீர்கள்.—2SM 355, 356 (1908).

**நாட்டுப்புறத்தில் குணவளர்ச்சி மிக எளிது**

தங்களது பிழைப்பு மற்றும் ஜீவனத்துக்கானவைகளை நாட்டுப் புறத்தைக்காட்டிலும் பட்டணங்களில் பெற்றுக்கொள்வது எளிது என்ற கற்பனை மனோபாவம் பெற்றோர்களிடத்தில் காணப்படுவதால், அவர்கள் தங்கள் குடும்பத்துடன் நகரத்தில் வசிப்பதற்குச் சென்றுவிடுகின்றனர். பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குச் செல்லாதபோது, செய்வதற்கு ஒன்றும் இல்லாதிருப்பதால், தெருக்கல்வியை அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். தீய நண்பர்களிடமிருந்து ஒழுக்கக்கேடான பழக்கங்களையும், காலம் மற்றும் இளமை ஆகியவற்றை வீணாக்குகின்ற பல தீய பழக்கங்களையும் தேடிப் பெற்றுக்கொள்கின்றனர்.—5T 232 (1882).

பட்டணங்களில் அமைந்துள்ள பள்ளிகளுக்கு நம் பிள்ளைகளை அனுப்பும்போது, அங்கே சோதனையின் ஒவ்வொரு நிலையும் அவர்களைக் கவர்ந்துகொள்ளவும் ஒழுக்கத்தை சீர்குலைக்கவும் காத்திருக்கின்றது. எனவே, பட்டணங்களில் நல்ல குணநலன்களைக் கட்டும் பணி, பெற்றோரும் பிள்ளைகளுமாகிய இரு சாராருக்குமே பத்துமடங்கு கடினமாகிவிடுகின்றது. —FE 326 (1894).

பட்டணங்களெல்லாம் சோதனைகளால் நிறைந்திருக்கின்றன. இத்தகைய தூய்மைக்கேட்டினின்று எந்தளவிற்கு தூரமான இடத்திற்குக் கொண்டுசென்று, நம்முடைய வாலிபப் பிள்ளைகளை அச்சூழ்நிலை பாதிக்காத வகையில் நாம் வைத்துக்கொள்ள முடியுமோ, அந்த அளவிற்கு நமது வேலைகளை நாம் திட்டஞ்செய்ய வேண்டும்.—AH 136 (1902).

நமது மக்கள் தங்களது குடும்பங்களைப் பட்டணங்களிலிருந்து அதிக ஒதுக்கிடமான இடங்களுக்கு அழைத்துச் செல்லக்கூடிய காலம் இதுவே ஆகும். இல்லாவிடில், நமது வாலிபர்களில் அநேகரும், வயதில் பெரியவர்களில் அநேகருங்கூட, சத்துருவின் கண்ணிகளில் அகப்பட்டு கொண்டுசெல்லப்பட்டு விடுவார்கள்.—8T 101 (1904).

பட்டணங்களில் தங்கி வசிப்பதன்மூலம் நூற்றில் ஒரு குடும்பம் கூட சரீரரீதியாக, மனரீதியாக அல்லது ஆவிக்குரிய ரீதியாக வளர்ச்சி அடைவதில்லை. வயல்களும், குன்றுகளும், மரங்களும் நிறைந்த தனிமையான இடங்களிலே, விசுவாசம், நம்பிக்கை, அன்பு, சந்தோஷம் ஆகியவற்றை அதிக இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம். பட்டணத்தின் சப்தங்கள் மற்றும் காட்சிகளிடமிருந்தும், சாலைவாகனங்களின் ஒலியிலிருந்தும், மக்கள் கூட்டத்தின் இரைச்சலிலிருந்தும், உங்கள் பிள்ளைகளைத் தூர எடுத்துச்சென்றுவிடுங்கள். அங்கே அவர்களுடைய மனங்கள், மிகுந்த ஆரோக்கியமுடையதாக மாறும். அப்போது தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தை அவர்கள் தங்களது இருதயமாகிய இல்லத்திற்கு எடுத்துச்செல்வது மிகவும் எளிதாகக் காணப்படும்.—AH 137 (1905).

### நாட்டுப்புறச் சூழலில் சிறந்த ஆரோக்கியம்

கலவரமும் குழப்பமும் தொடர்ந்து இருக்கக்கூடிய பட்டணங்களிலே, தேவனுடைய ஜனங்கள் குடியிருப்பதென்பது ஆண்டவரின் சித்தமல்ல. பட்டணத்தினுடைய பரபரப்பினாலும் வேகத்தினாலும் கூச்சலினாலும், சரீர ஒழுங்கமைப்பு முழுவதும் சீர்குலைக்கப்படுவதால், அவர்களது பிள்ளைகள் அதினின்று காப்பாற்றப்பட வேண்டும்.—2SM 357 (1902).

தங்களது கால்களை வைப்பதற்கு பசுமையான புல்வெளி ஒரு சிறிதளவுகூட இல்லாமல், பட்டணங்களில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களில் அநேகர், வருடா வருடம் அதே அசுத்தமான விளையாட்டு மைதானங் களையும், குறுகலான சந்துகளையும், அழுக்கடைந்த செங்கற்சுவர்களையும், நடைபாதை இடங்களையும், புழுதி மற்றும் புகை நிறைந்த வானங்களையுமே பார்த்துப் பழகிப்போன அநேகர்—ஏதாவதொரு விவசாயம் செய்யப்படும் பகுதிக்கு கொண்டுசெல்லப்படுவார்களானால், அங்குள்ள பசுமையான

வயல் நிலங்கள், காடுகள், மரங்கள், குன்றுகள், ஓடைகள், தெளிவான வானங்கள் மற்றும் கிராமப்புறத்தின் புத்துணர்ச்சியூட்டும் தூய்மையான காற்றுடன் சூழப்பட்டுள்ள இடங்கள் அனைத்தும் அவர்களுக்கு ஏறக்குறைய பரலோகம்போல் காணப்படும்.—MH 191, 192 (1905).

பட்டணங்களைச் சூழ்ந்திருக்கின்ற இயல்பான சூழ்நிலைகள், அநேக வேளைகளில் ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கின்றதாய் இருக்கின்றன. தொடர்ச்சியாக வியாதியை எளிதாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய சாதக நிலை, எங்கும் நிறைந்துள்ள அசுத்தமான காற்று, அசுத்தமான தண்ணீர், அசுத்தமான உணவு, ஜனக்கூட்டம் நிறைந்த நெருக்கடியான இருளடைந்த சுகாதாரமற்ற இருப்பிடங்கள், இவைகளெல்லாம் அங்கே நாம் சந்திக்க வேண்டிய அநேக தீமைகளில் சில. நமது ஜனங்கள் பட்டணங்களுக்குப் படையெடுத்துச்சென்று அங்கே அடுக்குமாடிக் கட்டடங்களிலும், பல தனி வீடுகளைக்கொண்ட குடியிருப்பு மனைகளிலும், ஜனநெரிசலில் நெருக்கியடித்துக்கொண்டும் வாழவேண்டுமென்பது தேவனுடைய நோக்கமல்ல.—MH 365 (1905).

### உங்கள் ஆகாரத்தை நீங்களே விளைவியுங்கள்

தங்கள் பிள்ளைகள் இயற்கையில் தேவனுடைய கிரியைகளோடு நேரடி தொடர்பிற்குக் கொண்டுவரப்படக்கூடிய இடங்களில் குடியிருந்து, தங்கள் ஆகாரத்திற்கான காய்கறிகளையும் பழங்களையும் தாங்களே விளைவிக்கிற இடங்களுக்கு தமது ஜனங்கள் நகரவேண்டுமென்று கர்த்தர் விரும்புகின்றார். உங்களது குடும்பங்களை பட்டணங்களைவிட்டு வெளியே எடுத்துச் செல்லுங்கள் என்பதே என்னுடைய தூதாக இருக்கின்றது.—2SM 357, 358 (1902).

நமது ஜனங்கள் தங்களது குடும்பங்களை பட்டணங்களை விட்டு நாட்டுப்புறத்திற்கு எடுத்துச்சென்று, தங்களது ஆகாரத்துக்குத் தேவையானவற்றை தாங்களே விளைவித்துக்கொள்ள வேண்டுமென்று கர்த்தர் மறுபடியும் மறுபடியுமாக அறிவுறுத்துகின்றார். ஏனெனில், எதிர்காலத்தில் வாங்குவதும் விற்பதுமான பிரச்சனை மிகவும் ஆபத்தானக் காரியமாயிருக்கும். மீண்டும் மீண்டுமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆலோசனைகளை, இப்பொழுதே நாம் கவனிக்க ஆரம்பிக்க வேண்டும். வீடுகள் ஒன்றுக்கொன்று நெருக்கமாயிராமலும், உங்கள் சத்துருக்களின் தலையீட்டிலிருந்து விடுபெற்று சுதந்தரமாகவும் வாழக்கூடிய நாட்டுப்புறப் பகுதிகளுக்கு பட்டணங்களைவிட்டுச் செல்லுங்கள்.—2SM 141 (1904).

### "பெருநகரங்களுக்கு வெளியே" நிறுவனங்களை ஏற்படுத்துங்கள்

தங்களது நோக்கங்களை வெளியில் பிரஸ்தாபப்படுத்தாதவர்களான ஆரோக்கியமான பகுத்தறிவுள்ள மனிதர்கள் நியமிக்கப்படட்டும். ஆயினும், நாட்டுப்புறப் பகுதிகளில் அப்படிப்பட்ட உடைமைகளை (நிலத்தை) அவர்கள் தேடும்போது, நகரங்களுக்கு எளிதாக வந்து போகும் வசதியுடனும், பணியில் உள்ளவர்களுக்கு சிறிய பயிற்சிப் பள்ளிகள் நிறுவ ஏற்றதாக இருக்கவும்கூடிய இடத்தை அவர்கள் தெரிந்தெடுக்கட்டும். மேலும், சத்தியம் அறியாத இளைப்படைந்து நோயுற்ற ஆத்துமாக்களுக்கு, சிகிச்சை அளிக்கப் போதுமான வசதிகளை அளிக்கக்கூடிய விதத்திலும் அந்த இடங்கள் இருக்கட்டும். எங்கு, நமக்கு ஏற்றதான கட்டிடங்களை, நிலத்தின் சொந்தக்காரரிடம் ஒரு பரிசாகவோ அல்லது நமது ஜனங்களின் அன்பளிப்புகளைக்கொண்டு நியாயமான ஒரு விலைக்கோ வாங்கக் கூடுமானால், அப்படிப்பட்ட இடங்களைப் பெருநகரங்களுக்கு சற்று வெளியே வாங்கும்படிப் பாருங்கள். இரைச்சல் நிறைந்த பட்டணங்களிலே கட்டடங்களை எழுப்பாதீர்கள்.—Ev 77 (1909).

### கூரன்பாங், நியு சவுத் வேல்ஸ்
### (Cooranbong, New South Wales)

ஆஸ்திரேலிய வேதாகமப் பள்ளி எங்கே நிறுவப்படவேண்டும்?... பள்ளிக்கூடங்கள், பட்டணங்களிலோ அல்லது அவற்றிலிருந்து ஒரு சில மைல்கள் தள்ளியோ நிறுவப்பட்டால், விடுமுறை நாட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய குதிரைப்பந்தயம், பந்தயம் கட்டுதல், பரிசுகள் வழங்குதல் போன்ற பழக்கவழக்கங்களை, மாணவர்களுக்கு அளித்திருக்கிற முந்தைய கல்வியின் செல்வாக்கிற்கு எதிர்த்து நிற்பது மிகவும் கடினமானதாயிருக்கும்...

நமது பள்ளிக்கூடங்களை நகரங்களைவிட்டு வெளியே, சற்று தொலைவில் நாம் ஸ்தாபிப்பது அவசியமாகக் காணப்படுகின்றது. ஆயினும், துன்மார்க்க இருளின் மத்தியில் ஜீவிப்பவர்களுக்கு நம் வெளிச்சம் பிரகாசிக்கப்படவோ, நகரவாசிகளிடம் தொடர்புகொள்ளவோ, அவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்யவோ முடியாதபடிக்கு, நகரங்களை விட்டு வெகு தொலைவில் அமைக்கவேண்டாம்.—FE 310, 313 (1894).

போக்குவரத்துக்கான பொதுவழிப் பாதையிலிருந்து நாம் வெகு தொலைவில் இருப்பதால், சவப்பெட்டிபோல ஒழுக்க இருளால் மூடப்பட்டிருக்கும் பெருநகரங்களுக்கு மத்தியிலே, நம் வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யும் ஒரு தருணம் கிடையாமல் போய்விடுமே என்ற உண்மையைத்தவிர, இடத்தைக்குறித்த மற்ற எல்லா காரியங்களும் சாதகமானதாக என் மனதைத் தொட்டன. இது ஒன்று மாத்திரமே, மறுப்பு தெரிவிக்கக்கூடியதாய் என்

மனதுக்கு தோன்றுகின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், நமது எந்த ஒரு பெரிய நகரங்களிலும் நமது பள்ளிகளை ஸ்தாபிப்பது என்பது ஆலோசிக்கத் தகுந்த காரியமாய் இருக்காது.—8MR 137 (1894).

பள்ளிக்கூடம் ஸ்தாபிக்க இந்த இடம்தான் சரியான இடம் என்று, முன்பு எப்பொழுதும் இல்லாத அளவு உணர்த்தப்பட்டேன்.—8MR 360 (1894).

## ஹண்ட்ஸ்வில், அலபாமா (Huntsville, Alabama)

கிரேஸ்வில்லிலும்[1], ஹண்ட்ஸ்வில்லிலும் பள்ளி வேலைகளை பொறுப்பேற்றிருக்கின்றவர்கள், இந்த நிறுவனங்களைக்கொண்டு இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு என்ன செய்யப்படலாம் என்று யோசிக்க வேண்டும். ஏனெனில், நகரங்களைவிட்டுப் போய்விட வேண்டும் என்று விரும்புகின்ற நமது ஜனங்கள், அங்கு ஒரு அதிக செலவில்லாத எளிமையான வீடுகளை அமைத்துக்கொண்டு இப்பள்ளிகளில் வேலை வாய்ப்பைப் பெறலாம்.—Letter 25, 1902.

ஹண்ட்ஸ்வில் பள்ளியோடு வயல் நிலத்தையும் சேர்த்து வாங்கியது தேவனுடைய வழிநடத்துதலே ஆகும். அது ஒரு நல்ல அமைப்பான இடமாகும். இதன் அருகில் அநேக பெரியத் தோட்டங்களும் இருக்கின்றன. சில மாணவர்கள், ஹண்ட்ஸ்வில் பள்ளியில் தங்கள் கட்டணத்தைக் கட்டுவதற்கான பணத்தை சம்பாதிக்கும்படியாக, கோடை விடுமுறையில் இந்தத் தோட்டங்களுக்குச் சென்று வேலை செய்தனர்.—SpT-B(12) 11 (1904).

ஹண்ட்ஸ்வில் பள்ளியின் பண்ணை மிகவும் அழகான ஒரு இடமாகும். முந்நூறு ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பைக் கொண்ட இடமாக விளங்குகின்ற அதன் வயல்நிலத்தில், தொழில்துறை சார்ந்த பயிற்சிப் பிரிவுகளிலும், பயிர்கள் வளர்க்கும் பிரிவுகளிலும், அநேகப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.—SpT-B(12x) 13 (1904).

"ஹண்ட்ஸ்வில் பள்ளிக்கூட நிலத்தை விற்றுவிட்டு, சிறிதான அளவிலே நிலத்தை வாங்கினால் நலமாக இருக்காதா?" என்ற கேள்வி சமீபத்தில் என்னிடத்தில் கேட்கப்பட்டது. இந்தத் தோட்டம் விற்கப்படக்கூடாது என்றும், பெற்றிருக்கக்கூடிய அதன் சூழ்நிலைகள் பல வண்ணங்களிலும் பிரகாசிக்கக்கூடிய ஒரு பள்ளியாக பல துறைகளிலும் முன்னேறிச்செல்வதற்கான அநேக நன்மைகளால் நிறைந்துள்ளது என்றும், அறிவுரையானது எனக்கு அளிக்கப்பட்டது.—SpM 359 (1904).

## பெரியன் ஸ்பிரிங்ஸ், மிச்சிகன் (Berrien Springs, Michigan)

மிச்சிகனின் தென்மேற்கு பகுதியிலுள்ள பெரியன் ஸ்பிரிங்ஸ் என்ற இடத்தில் பள்ளிக்கூடம் நிறுவுவது என்பது சிலரது யோசனையாக இருக்கின்றது என்று கேள்விப்படுகின்றேன். இந்த இடத்தைப்பற்றிய விபரங்கள் எனக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது… பெரியன் ஸ்பிரிங்ஸ் போன்ற இடத்திலே நிறுவப்படும் பள்ளி, நமது நோக்கங்களை அறிந்துகொள்ளும் ஒரு பாடமாக அமைக்கப்படலாம். மேலும், முன்னேற்றிக் கொண்டுசெல்லக்கூடிய இந்த வேலையில், ஒருவரும் குறுக்கிடமாட்டார்கள் என நான் நம்புகின்றேன்.—4MR 407 (July 12, 1901).

பள்ளிக்கூடத்திற்கான இடத்தைத் தேர்வுசெய்யும்போது, கர்த்தருடைய நன்மைசெய்யும் கரமானது தமது மக்களோடு இருக்கின்றது. பள்ளிக்கூடம் எங்கு நிறுவப்பட வேண்டும் என்று தேவனால் எனக்குக் காண்பிக்கப்பட்ட சூழ்நிலையோடு இந்த இடம் ஒத்திருக்கின்றது. இந்த இடம் பட்டணத்தை விட்டு சற்று தொலைவில் இருக்கின்றது. விவசாயத் தொழில் நோக்கங்களுக்கும், வீடுகள் ஒன்றோடொன்று நெருக்கமாகக் கட்டப்பட அவசியமில்லாமல் தள்ளி கட்டப்படவும் ஏற்றவிதத்தில் மிகுதியான நிலப்பரப்பு அங்கே இருக்கிறது. நிலத்தைப் பண்படுத்துகின்ற வேலையை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும்படியாக அங்கு ஏராளமான நிலமும் இருக்கின்றது.—RH Jan. 28, 1902.

பேட்டில் கிரீக்கிலிருந்த கல்லூரியை பெரியன் ஸ்பிரிங்ஸ் என்ற இடத்தில் மாற்றுவதற்கு, சதர்லேண்ட் மற்றும் மேகன் என்ற சகோதரர்கள் தேவன் கொடுத்த வெளிச்சத்திற்கு ஒத்திசைவாக செயல்பட்டிருக்கிறார்கள். அதிகக் கஷ்டங்களுக்கு மத்தியில் அவர்கள் கடினமாய் உழைத்திருக்கிறார்கள்… தேவன் அவர்களோடே இருந்தார்; அவர்கள் முயற்சிகளையும் அவர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.—4MR 260, 261 (1904).

## ஸ்டோன்ஹம், மசாசுசெட்ஸ் (Stoneham, Massachusetts)

அதிக விசேஷமான வேலை செய்யப்படவேண்டிய ஒரு இடமாகிய—நியூ இங்கிலாந்தில் தமது ஊழியக்காரர்கள் முன்னேறிச் செல்லத்தக்கதான அடி எடுத்துவைப்பதற்கு, கர்த்தர் தமது கிருபையின்படியே வழியைத் திறந்திருக்கின்றார். அங்குள்ள சகோதரர்கள், சுகாதார மையத்தை சௌத்லான்கேஸ்டரிலிருந்து பாஸ்டனுக்கு மிகவும் அருகில் உள்ள “மெல்ரோஸ்” என்னும் இடத்திற்கு ஒழுங்குடன் மாற்றம் செய்வதற்கு திறமையுடையவர்களாக இருந்திருக்கின்றனர். அதிலும் பரபரப்பாக இருக்கும்

நகரத்திலிருந்து போதுமான தொலைவிற்கு மாற்றப்பட்டிருக்கின்றது. அதனால், நோயாளிகளின் உடல்நிலை விரைவில் திரும்ப குணமடைவதற்கேற்ற சாதகமான சூழ்நிலைகள் இங்கு நிலவுகின்றன. நியூ இங்கிலாந்திலுள்ள சுகாதார மையத்தை மிகவும் வசதியான இடமாகிய பாஸ்டன் எனும் நகரத்திற்கு மாற்றம் செய்வதென்பது தேவனுடைய சித்தத்துக்குட்பட்டதாக இருக்கின்றது.

நமக்கு முன்பாக வழியை ஆயத்தப்படுத்துவதற்குக் கர்த்தர் தம்முடையக் கரத்தை செயல்படுத்தும்பொழுது, நம்மில் எவரும் பின்னாக தயங்கி நின்றுகொண்டு, அவ்வழியில் முன்னோக்கி செல்வதற்கான ஞானத்தைக் குறித்து ஆண்டவரை கேள்வி கேட்பதையும், அல்லது கீழ்ப்படிய பிரயாசப்படுகிறவர்களுக்கு உதவியையும் உற்சாகத்தையும் தர மறுப்பதையும் தேவன் அனுமதிப்பதில்லை. நியூ இங்கிலாந்து சுகாதார மையத்தை சௌத்லான்கேஸ்டரிலிருந்து மெல்ரோஸ் என்னும் இடத்திற்கு மாற்றினது கர்த்தருடைய வழிநடத்துதலால் நிகழ்ந்தது என்று எனக்குக் காண்பிக்கப்பட்டது.—SpT-B(13) 3 (1902).

## தக்கோமா பார்க், வாஷிங்டன், டி.சி.
## (Takoma Park, Washington, D.C.)

நமது பள்ளிக்கும் சுகாதார மையத்திற்குமாக தெரிந்தெடுத்திருக்கின்ற இடம் அனைவரும் விரும்பப்படக்கூடியதாக இருக்கிறது. கர்த்தரால் எனக்குக் காண்பிக்கப்பட்ட இடத்தைப் போலவே அது இருக்கின்றது. எதற்காக பயன்படுத்தப்படவேண்டுமோ, அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்த ஏற்றவிதத்தில், மிகவும் பொருத்தமான இடமாக அது இருக்கின்றது. அந்த இடத்திற்கு மேலே, ஒரு பள்ளியும் சுகாதார மையமுமாகிய இரு ஸ்தாபனங்களும் நெருக்கடியின்றி கட்டப்படுவதற்கு ஏற்ப, போதுமான இடம் அங்கே இருக்கின்றது. அங்கே, சுற்றுச்சூழல் சுத்தமாகவும், தண்ணீர் சுத்தமாகவும் இருக்கின்றது. வடக்கிலிருந்து தெற்கிற்கு நமது இடத்தின் வழியாக மிக அழகான ஓடை ஒன்று ஓடுகின்றது. இந்த ஓடை மதிப்புமிக்க பொன் அல்லது வெள்ளியைக்காட்டிலும் மிகுந்த ஒரு பொக்கிஷமாக விளங்குகின்றது. கட்டடம் கட்டும் இடங்களும் நல்ல உயரமான இடத்தில், மிகச்சிறந்த கழிவுநீர்ப்போக்கு வசதியுடன் அமைந்திருக்கின்றன.

ஒரு நாள், நாங்கள் தக்கோமா பார்க்கில் உள்ள பல்வேறு பகுதிகள் வழியாக நீண்ட பிரயாணம் மேற்கொண்டோம். இங்குள்ள அநேக நகரப் பகுதிகள், ஒரு இயற்கையான காடுகளாக இருக்கின்றன. இங்குள்ள வீடுகள் ஒன்றுக்கொன்று நெருக்கமாகவோ சிறியதாகவோ

இல்லை. ஆனால் பெரியதாகவும் இடவசதியுடன் பெரிய அறைகளை உடையதாகவும் இருக்கின்றன. அவைகள் பைன், ஓக், மேப்பிள் போன்ற சிக்கனமான இரண்டாம் சிறப்பு இன மரங்களாலும் மற்றும் வேறு சில அழகிய மரங்களாலும் சூழப்பட்டிருந்தன. இந்த வீடுகளின் உரிமையாளர்களில் அநேகர் வியாபாரிகளாக இருக்கின்றனர். அவர்களில் அநேகர் வாஷிங்டனில் உள்ள அரசு அலுவலகத்தில் குமாஸ்தாக்களாகப் பணிபுரிகின்றனர். அவர்கள் தினமும் நகரத்திற்குச் சென்று வேலை செய்துவிட்டு, மாலையில் தங்களது அமைதலான வீடுகளுக்குத் திரும்பிவிடுகின்றனர்.

அஞ்சலகத்திற்கு மிக அருகிலே அச்சகத்திற்கு ஏற்ற ஒரு நல்ல இடம் தெரிந்தெடுக்கப்பட்டது. அதோடு, சபை கூடுவதற்கான ஒரு இடமும் தெரிந்தெடுக்கப்பட்டது. தக்கோமா பார்க், விசேஷமாக நமக்காகவே ஆயத்தம் பண்ணப்பட்டிருப்பதுபோலவும், நமது ஸ்தாபனங்களாலும் அவைகளின் ஊழியர்களாலும் ஆட்கொள்ளப்படும்படியாக அது காத்துக்கொண்டிருப்பது போலவும் தோன்றுகின்றது.—ST June 15, 1904.

கர்த்தர் எனக்கு இந்தக் காரியத்தைக்குறித்துத் தீர்மானமாய் வெளிப்படுத்திக் காண்பித்திருக்கின்றாார். பேட்டில் கிரீக்கில் செய்யப் பட்டுக்கொண்டிருக்கின்ற புத்தக வெளியீட்டுப் பணி, தற்போது வாஷிங்டனுக்கு அருகில் கொண்டுசெல்லப்பட வேண்டும். சிறிது காலம் கழித்து வாஷிங்டனிலிருந்து வெளியேறு என்றும், வேறு இடத்திற்குப் போ என்றும் கர்த்தர் கூறினால் நாம் போகத்தான் வேண்டும்.—RH Aug. 11, 1903.

## மேடிசன், டென்னிசி
## (Madison, Tennesse)

தென்புறத்திலே அவர்கள் செய்ய இருக்கின்ற வேலையைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது, நாஷ்வில் எனும் இடத்திலிருந்து நீண்ட தொலைவில் ஒரு பள்ளிக்கூடம் நிறுவ வேண்டும் என்று அவர்கள் சொன்னதைக் குறித்து நான் ஆச்சரியப்பட்டேன். எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெளிச்சத்தின்படி, இதைச்செய்வது சரியான காரியமல்ல என்பதை நான் அறிந்திருந்தேன், அதை அவர்களுக்கு நான் தெரியப்படுத்தினேன். இந்த இரு சகோதரர்கள் (E.A.சதர்லேண்ட, P.T.மேகன்) பெரியன் ஸ்பிரிங்ஸ் என்ற இடத்தில் பெற்றிருந்த அனுபவத்தினால் பணிபுரிந்ததுபோல, நாஷ்வில் என்னும் இடத்தை எளிதில் அடையக்கூடிய விதத்தில் வேலை செய்யப்படவேண்டும். ஏனெனில், செய்யப்படவேண்டிய விதத்தில் நாஷ்வில்லில் இன்னும் பணிசெய்யப்படவில்லை. நாஷ்வில்லிற்கு போதுமான அளவு அருகிலிருந்து அங்கிருக்கக்கூடிய பணியாளர்களுக்கு

ஆலோசனை வழங்கக்கூடுமானால், அது பள்ளியிலுள்ள பணியாளர்களுக்கு ஒரு மாபெரும் ஆசீர்வாதமாக இருக்கும்.

பள்ளிக்கான ஒரு இடத்தைத் தேடிக்கொண்டிருக்கும்போது, நாஷ்வில்லிலிருந்து ஒன்பது மைல் தொலைவில், நானூறு ஏக்கர் பரப்புள்ள ஒரு பண்ணையை இந்த சகோதரர்கள் கண்டுபிடித்தார்கள். அந்நிலத்தின் பரப்பளவு, அதன் அமைப்பு, நாஷ்வில்லிலிருந்து அது அமைந்துள்ள தூரம், நிலத்தை வாங்குவதற்கு ஏற்ற சரியான விலை, இவை அனைத்துமே பள்ளிக்கூடத்திற்கு ஏற்ற சரியான இடம் போன்று இருப்பதைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதுபோல தோன்றியது. எனவே, இந்த இடத்தை வாங்கும்படியாக நாங்கள் ஆலோசனை அளித்தோம். இந்த இடம் அனைத்துமே முற்றிலுமாக தேவைப்படும் என்பதை நான் நன்கு அறிந்திருந்தேன்.—RH Aug. 18, 1904.

### மௌன்ட்டன் வியூ, கலி∴போர்னியா (Mountain View, California)

பசிபிக் அச்சகம் ஓக்லேண்டிலிருந்து மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற ஆலோசனையும் அளிக்கப்பட்டது. வருடங்கள் செல்லச் செல்ல, அந்த நகரம் வளர்ந்தது. இந்த அச்சகத்தில் பணிபுரிபவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வண்ணம், இப்போது இந்த அச்சகத்தை இதைவிட இன்னும் ஒதுக்குப்புறமான பகுதியில் நிறுவுவதென்பது அவசியமாக இருக்கின்றது. நம்முடைய பிரசுர அலுவலகங்களுடன் தொடர்புகொண்டுள்ளவர்கள் நெரிசலான நகரங்களில் குடியிருக்கும்படி கட்டாயப்படுத்தப்படக்கூடாது. நகரங்களுக்குப் புறம்பாக, அதிகப்படியான வாடகை இல்லாத வீடுகளில் குடியிருக்க அவர்களுக்கு வாய்ப்புகள் தரப்பட வேண்டும்.—FE 492 (1904).

மௌன்ட்டன் வியூ என்ற இடம் அதிக வசதிகள் கொண்ட சிறுநகரமாகும். அது அழகான பழத்தோட்டங்களால் சூழப்பட்டிருக்கிறது. அங்கு மிதமான சீதோஷ்ண நிலை காணப்படுவதால், எல்லாவிதமான பழங்களும் காய்கறிகளும் விளைவிப்பதற்கு ஏற்ற இடமாக அது இருக்கின்றது. இந்தச் சிறு நகரம் மிகப்பெரியதல்ல என்றாலும், இங்கு மின் விளக்குகள், தபால் வசதிகள் மற்றும் பெரும் நகரங்களில் மாத்திரம் கிடைக்கக்கூடிய இன்னும் பல வசதிகள் இருக்கின்றன.—Letter 141, 1904.

நமது பிரசுர அலுவலகம், ஓக்லேண்டிலிருந்து ஏன் மௌன்ட்டன் வியூவிற்கு இடம் மாற்றப்படவேண்டும் என்று சிலர் வியப்படைந்திருக்கின்றனர். பட்டணங்களைவிட்டு வெளியேறும்படி தேவன் தமது ஜனங்களை அழைத்துக்கொண்டிருக்கின்றார். நம்முடைய ஸ்தாபனங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் வாலிபர்கள், பெரும் நகரங்களில் காணப்படக்கூடிய

சோதனைகளுக்கும், ஒழுக்ககேடுகளுமான இடர்களுக்கும் உள்ளாக்கப்படக் கூடாது. ஆதலால், மௌன்ட்டன் வியூ என்ற இடம் அச்சக அலுவலகத்திற்கு சாதகமான ஒரு இடமாகக் காணப்படுகின்றது.—CL 29 (1905).

## லோம லிண்டா, கலி∴போர்னியா (Loma Linda, California)

சேன்டியிகோ (ளுயெ னுநைபழ) என்னும் இடத்திலிருந்து ஏழுமைல் தொலைவில் உள்ள பேரடைஸ் வேலியில், (Paradise Valley) ஒரு நல்ல சுகாதார மையம் இருப்பதற்காகவும்; லாஸ் ஏஞ்சல்ஸ் (Los Angeles) என்னும் இடத்திலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள கிலென்டேலில் (Glendale) அமைந்துள்ள சுகாதார மையத்திற்காகவும் கர்த்தரைத் துதிக்கின்றோம் லாஸ் ஏஞ்சல்ஸ் (Los Angeles) என்னும் இடத்திலிருந்து கிழக்கே அறுபத்திரண்டு மைல் தொலைவிலும், ரெட்லேண்ட்ஸ் (Redlands), ரிவர் சைட் (River Side) மற்றும் சேன் பெர்நார்டினோ (San Bernardino) ஆகிய இடங்களுக்கு அருகிலுள்ள மிகப்பெரிய அழகான இடமாகத் திகழும் லோம லிண்டாவிற்காகவும், கர்த்தரைத் துதிக்கின்றோம். லோம லிண்டா உடைமை, எல்லா சுகாதார மையங்களிலும் இதுவரை நான் கண்டிராத மிகவும் அழகான ஒரு சுகாதார மையமாகத் திகழ்கின்றது.—LLM 141 (1905).

மருத்துவ ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக கர்த்தர் விசேஷ மாகத் திட்டமிட்டு நியமித்த ஒரு மையமே லோம லிண்டா என்ற ஒரு இடமாகும்.—Letter 188, 1907.

ஒரு பள்ளிக்கூடத்திற்கென்று அற்புதமான அனுகூலமான சூழ்நிலைகள் இங்கு இருக்கின்றன. இங்குள்ள பண்ணை, பழத் தோட்டம், புல்வெளி இடங்கள், பெரிய கட்டிடங்கள், போதுமான நிலங்கள், அதன் அழகு—இவை அனைத்துமே ஒரு மாபெரும் ஆசீர்வாதமாகும்.—LLM 310 (1907).

லோம லிண்டாவாகிய இந்த இடத்திலே, பல அற்புதமான அனுகூலங்கள் இருக்கின்றன. உண்மையான மருத்துவ ஊழியர்களாக மாறுவதற்கு இங்கிருக்கக்கூடிய வசதிகளை, இங்கே தங்கியிருப்பவர்கள் உண்மையுடன் தங்களுக்காகப் பயன்படுத்திக்கொண்டால், தங்களைச் சுற்றிலும் இருக்கின்றவர்களுக்கு, தங்களது வெளிச்சத்தை பிரகாசிக்கச் செய்கின்றவர்களாய் இருப்பார்கள். தேவன் தமது ஞானத்தை நமக்குத் தந்தருளும்படி நாம் அனுதினமும் அவரைத் தேடவேண்டும்.—Letter 374, 1907.

இங்கு, ஒரு பள்ளிக்கூடத்திற்கும் ஒரு சுகாதார மையத்திற்கும் மிகவும் சீரான சூழ்நிலைகள் நமக்கு இருக்கின்றன. மேலும் இங்கே மாணவர்களுக்கு நன்மைகளும், நோயாளிகளுக்கு அதிக நன்மைகளும் இருக்கின்றன. தீர்க்கதரிசிகளுக்கான ஆதிகாலத்து பள்ளிகளைப் போன்ற, அதே கொள்கையுடன் நடத்தப்பட ஒரு பள்ளிக்கூடம் நமக்கு இருக்க வேண்டும் என்று நான் அறிவுறுத்தப்பட்டேன். மருத்துவர்கள் தங்களது கல்வியை இங்கே பெற்றுக்கொள்ள வேண்டும்.—MM 75, 76 (1907).

## ஆங்வின், கலி∴போர்னியா
## (Angwin, California)

இந்த உடைமையை (நிலத்தை) நான் பார்த்தபோது, அநேக விதங்களில் இது மேலானதாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றேன். இதைக்காட்டிலும் ஒரு நல்ல இடத்தில் பள்ளிக்கூடம் நிறுவப்பட முடியாது. இந்த இடம் செயின்ட் ஹெலினாவிலிருந்து எட்டு மைல் தொலைவில் அமைந்திருப்பதால், நகரத்தின் சோதனைகளிலிருந்து விலகித் தனித்துக் காணப்படுகின்றது…

இந்நேரத்தில் மாணவர்களுக்காக அநேக சிறிய எளிய குடிசைகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். திறமையுள்ள ஆசிரியர்களது அறிவுரையின் கீழாக மாணவர்கள் தாங்களாகவே குடிசைகளை ஏற்படுத்திக்கொள்ளலாம். அவர்கள் குடிசைகளைக் கட்ட உதவும் மரங்களை இந்நிலத்திலிருந்தே எடுத்துக்கொள்ளலாம். ஆதாயமான ஒரு விதத்தில் எப்படிக் கட்டவேண்டும் என்று மாணவர்களுக்குக் கற்றுத்தரப்படலாம்.

சுத்தமில்லாத நீரைக் குடிக்கிறோமே என்ற பயம் நமக்கு வேண்டாம். கர்த்தருடைய பொக்கிஷசாலையிலிருந்து இலவசமாக தண்ணீர் நமக்குக் கொடுக்கப்படுவதால், இந்த பல நன்மைகளுக்காக நாம் எந்தளவுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை…

நமக்கு என்னென்ன தேவை என்பதைக் கர்த்தர் அறிந்திருக்கிறார் என்பதையும், அதனால்தான் இங்கே நம்மை கொண்டுவந்திருக்கின்றார் என்பதையும் நாம் உணருகின்றோம்… நாம் இங்கே இருக்கவேண்டும் என்று தேவன் விரும்பினபடியால், இங்கே நம்மை வைத்திருக்கிறார். இந்த இடங்களுக்கு நான் வந்தபோது, நிச்சயமாக இதைக்குறித்து நன்கு உணர்ந்தேன்… இந்த இடங்களின் வழியாக நடந்து நீங்கள் கடந்து செல்லும்போது, இந்த இடத்தைக் கர்த்தர் நமக்காக நியமித்து வைத்திருக்கின்றார் என்கின்ற அதே முடிவுக்கு நீங்களும் வருவீர்கள் என நம்புகின்றேன்.—1MR 340, 341, 343 (1909). ★

[1] டென்னிசியின் கிரேஸ்வில்லியிலுள்ள உடைமை, செட்டனூகாவின் வடதிசைக்கு ஐம்பது மைல்கள் தொலைவிலும், 200 மக்கள் கொண்ட ஒரு கிராமத்திற்கு அருகிலுள்ள நிலத்தில் 9 ஏக்கர்கள் கொண்டதாயும் உள்ளது. தற்போதைய இடமான காலேஜ்டேலுக்கு 1916 ஆம் ஆண்டில் பள்ளி இடமாற்றம் செய்யப்பட்டது.

# 8

# பட்டணங்கள்

### ஆதியிலே பட்டணங்களை உருவாக்கியவர்கள்

தேவனுடைய சாபத்தைப் பெற்றுக்கொண்ட காயீன் தன் தகப்பனது குடும்பத்தை விட்டு வெளியேறினான். நிலத்தை உழுது பயிரிடும் ஒரு விவசாயியாக அவன் முதலாவது தனது வாழ்க்கைத் தொழிலைத் தெரிந்துகொண்டான். ஆனால் இப்போது அவன் ஒரு பட்டணத்தை உருவாக்கி, அதற்கு தனது மூத்த குமாரனின் பெயரை வைத்தான் (ஆதி. 4:17). மீண்டுமாகப் புதுப்பிக்கப்பட்ட ஏதேனின் வாக்குத்தத்தத்தைத் தூர எறிந்துவிட்டு, பாவத்தின் சாபத்திற்குக் கீழாக தனது உடைமைகளை நாடவும், பூமியிலுள்ள இன்பத்தை அனுபவிக்கவும், கர்த்தரின் சமூகத்தைவிட்டு அவன் வெளியேறினான். இவ்வாறாக அவன் இந்த உலகத்தின் தேவனைத் தொழுது கொண்டிருக்கும் மனிதர்களின் பெரிய கூட்டத்திற்குத் தலைவனாக நின்று கொண்டிருக்கின்றான்.—PP 81 (1890).

கொஞ்சக்காலத்திற்கு நோவாவின் சந்ததியினர் பேழை தங்கின இடத்திலுள்ள மலைகளின் மத்தியில் தொடர்ந்து வசித்துக்கொண்டிருந்தனர். அவர்களது எண்ணிக்கை பெருகியபோது, மருள விழுகை விரைவில் பிரிவினைக்கு வழிநடத்தியது. தங்களைத் தடைசெய்கின்ற தேவனுடைய பிரமாணத்தை உதறித்தள்ளவும், தங்களது சிருஷ்டிகரை மறக்கவும் விருப்பம் கொண்டிருந்தோருக்கு, தேவனுக்குப் பயந்த தங்களோடு சேர்ந்து பழகிய, தங்களது தோழர்களின் முன்மாதிரியும் போதனையும் ஒரு தொடர்ச்சியான எரிச்சல்மூட்டுதலாய் இருந்தது. எனவே ஒரு காலத்திற்குப் பிற்பாடு, தேவனைத் தொழுதுகொள்ளுகிறவர்களிடமிருந்து தங்களைப் பிரித்துக்கொள்ள அவர்கள் தீர்மானித்தார்கள். அப்படியாக, ஐபிராத்து நதியின் கரைகளிலே இருந்த சிநேயாரின் சமவெளிக்கு அவர்கள் பிரயாணம் பண்ணினார்கள்...

அந்த இடத்திலே ஒரு பட்டணத்தையும், அதிலே உலக அதிசயம் என்று சொல்லத்தகும் வியக்கத்தக்க உயரமான ஒரு கோபுரத்தையும் கட்டத் தீர்மானித்தார்கள். (ஆதி. 11:2–4).—PP 118, 119 (1890).

### தீமையின் பிறப்பிடங்களான பட்டணங்கள்

இன்பமளிக்கின்ற பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை மையங்கள் பட்டணங்களில் உள்ளன. தங்களது பிள்ளைகளுக்கு அதிக லாபகரமான சந்தர்ப்பங்களை அளிப்பதாக நினைத்துக்கொண்டு, அவர்களுக்காக பட்டணத்திலுள்ள ஒரு இல்லத்தைத் தெரிந்து கொள்ளும் அநேக பெற்றோர்கள், ஏமாற்றத்தைச் சந்தித்து, மிகவும் தாமதமாக தங்களது பயங்கரமான தவறுக்காக மனம் வருந்துவார்கள். இன்றைய பட்டணங்கள் விரைவாக சோதோம் கொமோராவைப்போல மாறிக்கொண்டிருக்கின்றன. ஏராளமான விடுமுறை நாட்கள், மக்களை சோம்பலுக்கு ஊக்கமூட்டுகின்றன. கிளர்ச்சியூட்டும் விளையாட்டுகளான—திரை அரங்குகள், குதிரைப் பந்தயங்கள், சூதாட்டம், மது அருந்துதல், கேளிக்கையில் பெரிதும் ஈடுபடுதல் ஆகியவை—தீவிரமான செயலைச் செய்வதற்கு ஒவ்வொரு தீவிர காம உணர்ச்சிகளையும் தூண்டிவிடுகின்றன. இப்படிப்பட்ட மலிவான மனப்பாங்கினால் வாலிபர்கள் அடித்துச்செல்லப்படுகின்றனர்.—COL 54 (1900).

பட்டணங்கள் குழப்பங்களாலும் கொடுமைகளாலும் குற்றங்களாலும் நிறைந்திருக்கும் என்றும், உலக வரலாற்றின் முடிவு மட்டும் இவைகள் அதிகரிக்கும் என்ற வெளிச்சம் எனக்குக் கொடுக்கப்பட்டது.—7T 84 (1902).

உலகம் முழுவதிலும் பட்டணங்கள் தீய செயல்களின் பிறப்பிடங்களாக மாறிக்கொண்டு வருகின்றன. எப்பக்கமும் தீமையின் கோரக்காட்சிகளும், சத்தங்களுமே நிறைந்து இருக்கின்றன. ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையையும் காமவெறியையும், கவர்ச்சியூட்டி இழுக்கக்கூடிய மிகுதியான காரியங்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன.—MH 363 (1905).

### பட்டணங்கள்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்புகள்

பயங்கரமான அதிர்ச்சிகள் பூமியின் மீது வரும். அதிக பொருட் செலவில் எழுப்பப்பட்ட கம்பீரமான அரண்மனைகள் நிச்சயமாக இடிபாடுகளின் குவியல்களாக மாறிவிடும்.—3MR 312 (1891).

தேவனுடைய பாதுகாக்கும் கரம் விலக்கிக்கொள்ளப்படும்போது, அழிவுண்டாக்குகிறவன் தன் வேலையைத் துவங்குவான். அப்போது பேரழிவுகள் நம்முடைய பட்டணங்களில் வரும்.—3MR 314 (1897).

சிக்காகோ பட்டணத்தில் ஏற்பட்ட தீ விபத்தைக்குறித்தும், மெல்போன், லண்டன் மற்றும் நியூயார்க் பட்டணங்களிலே ஏற்பட்ட தீ விபத்துகளைக் குறித்தும் எச்சரிக்கைக் கொடுத்ததுபோல, பூமியின் குடிகளுக்கு கர்த்தர் எச்சரிப்புகளைக் கொடுக்கின்றார்.—Ms 127, 1897.

முடிவு சமீபமாயிருக்கின்றது. எல்லா வகையிலும் அனைத்து பட்டணங்களும் தலைகீழாகக் கவிழ்க்கப்பட இருக்கின்றன. குழப்பம் ஒவ்வொரு பட்டணத்திலும் இருக்கும். அசைக்கப்படக்கூடிய அனைத்தும் அசைக்கப்பட வேண்டும். அடுத்து என்ன சம்பவிக்கும் என்று நமக்குத் தெரியாது. மக்களின் துன்மார்க்கத்தைப் பொறுத்தும், அவர்கள் பெற்றிருந்த சத்திய வெளிச்சத்தைப் பொறுத்தும் நியாயத்தீர்ப்புகள் அவர்களுக்கு இருக்கும்.—1MR 248 (1902).

தற்போது, ஏறக்குறைய முழுமையாக விக்கிரகாராதனைக்கு ஒப்புக்கொடுத்துவிட்ட ஆயிரக்கணக்கான பட்டணங்களின்மீது விரைவில் வரக்காத்திருக்கின்ற அழிவினைக் குறித்த ஒரு உணர்வினை, தேவனுடைய மக்கள் பெற்றிருந்தால் நலமாயிருக்கும்.—Ev 29 (1903).

மிகப்பெரிய பட்டணங்களெல்லாம் அடித்துசெல்லப்பட்டுப் போகக் கூடிய காலம் சமீபத்தில் இருக்கின்றது. வர இருக்கின்ற இந்த நியாயத் தீர்ப்புகளைக்குறித்து அனைவரும் எச்சரிக்கப்படவேண்டும்.—Ev 29 (1910).

### பேரழிவையும் தாங்கும் கட்டிடங்கள் சாம்பலாகும்

கட்டிடங்களிலேயே மிகவும் மதிப்புள்ள அமைப்புகளாக எழுப்பப்பட்டு, நெருப்பையும் தாங்கும் என்று கருதப்பட்ட இத்தகைய பகட்டான கட்டிடங்கள் தேவனுடைய கோபாக்கினையின் அக்கினியில் சோதோம் அழிந்ததுபோல, எரிந்தழிந்து சாம்பலாக மாறும் என்பதை நான் கண்டேன்... மனிதனுடைய பெருமைகளைப் பறைசாற்றுகின்ற, போலிப்புகழ்ச்சியான நினைவுச் சின்னங்களெல்லாம் உலகத்தின்மீது வர இருக்கின்ற கடைசி மாபெரும் அழிவுக்கு முன்னதாகவே சுக்கு நூறாக உடைந்து நொறுங்கிவிடும்.—3SM 418 (1901).

ஜலப்பிரளயத்திற்கு முன்னான உலகத்தின் பட்டணங்களைப் போலவும், சோதோம்கொமோராவைப் போலவும் மாறியிருக்கிற துன்மார்க்கப் பட்டணங்களிலிருந்துதேவன்தமது ஆவியைப்பின்னிழுத்துக்கொண்டிருக்கிறார். உரிமையாளர்கள் மன்னிப்பின் எல்லைகளைக் கடந்துவிட்டதைக் கர்த்தர் காணும்போது, விலையுயர்ந்த மாளிகைகளும், கட்டிடக் கலைத்துறையின் அதிசயங்களும் ஒரு கணப்பொழுது பார்வைக்குள்ளாகவே அழிக்கப் பட்டுவிடும். நெருப்பையும் தாங்கும் எனக் கருதப்பட்ட மாபெரும் கட்டிடங்கள் அக்கினியால் அழிவது, பூமியின் கட்டிட அமைப்பு யாவும் ஒரு குறுகிய நேரத்தில் எப்படித் தரைமட்டமாகப் போகிறது என்பதற்கு ஒரு உதாரணமாக இருக்கிறது.—TDG 152 (1902).

கோடிக்கணக்கான பணத்தைச் செலவுசெய்து, விலையுயர்ந்த கட்டிடங்களை மனிதர்கள் தொடர்ந்து எழுப்பிக்கொண்டே இருப்பார்கள்.

எவைகளைக்கொண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன என்று, அவர்களது கட்டிடக்கலை அழகிற்கும் உறுதிக்கும் திடத்தன்மைக்கும், விசேஷ கவனம் கொடுக்கப்படும். ஆயினும் இப்படிப்பட்ட கட்டிடங்கள், அசாதாரணமான உறுதியும் விலையுயர்ந்த பகட்டான தோற்றமும் கொண்டிருந்தாலும், எருசலேம் ஆலயத்தின் அழிவில் இவைகளும் பங்கடையும் என்று கர்த்தர் எனக்கு அறிவுறுத்தினார்.—5BC 1098 (1906).

**நியூயார்க் பட்டணம்**

இரக்கமில்லாமல் தேவன் தமது கோபத்தை நிறைவேற்றுவதில்லை. அவரது கரம் இன்னமும் நீட்டப்பட்டிருக்கின்றது. மாபெரும் நியூயார்க் பட்டணத்திற்கு தேவனுடைய தூது கொடுக்கப்படவேண்டும். மாபெரும் இறுதி நாளுக்கு எதிராக, மக்கள் சேர்த்துக் குவித்துவைத்திருக்கின்ற சொத்துக்களை தேவன் தமது கரத்தின் தொடுதலினால் எப்படி அழித்துவிட முடியும் என்ற காரியம் மக்களுக்குக் காட்டப்படவேண்டும்.—3MR 310, 311 (1902).

நியூயார்க் பட்டணத்தின்மீது என்ன வரவிருக்கின்றது என்பதைக் குறித்து குறிப்பிட்ட வெளிச்சம் என்னிடம் கிடையாது. ஆயினும், ஒருநாள் இந்த மிகப்பெரிய கட்டிடங்கள் தேவனுடைய வல்லமையினால் கவிழ்க்கப்பட்டு, வீழ்த்தப்பட்டு, அழிக்கப்படும் என்பதை மாத்திரம் நான் அறிந்திருக்கின்றேன்... மரணம் எல்லா இடங்களிலும் உண்டாகும். இதனால்தான் பட்டணங்கள் எச்சரிக்கப்பட வேண்டும் என்று நான் மிகவும் கவலைப்படுகின்றேன்.—RH July 5, 1906.

ஒரு சமயத்தில், நியூயார்க் பட்டணத்திலே நான் இருந்தபோது, அங்கிருந்த வானபரியந்தம் உயரமாக எழும்பியிருக்கின்ற அடுக்கு மாடிக் கட்டிடங்களை இராத்தரிசனத்திலே காணும்படியாக அழைக்கப் பட்டேன். இந்த கட்டிடங்கள் நெருப்பினால் பாதிக்கப்படாது என்று சான்று பெற்றவையாயிருந்தன. மேலும் இவைகள், இந்த கட்டிடங்களினுடைய கட்டிடக் கலைஞர்கள் மற்றும் உரிமையாளர்களை மகிமைப்படுத்துவதற்காய் எழுப்பப்பட்டிருந்தன...

எனக்கு முன்பாகக் கடந்துசென்ற அடுத்த காட்சி தீயைப்பற்றின ஒரு ஆபத்து எச்சரிக்கையாகும். மிக உயர்ந்ததும், நெருப்பினால் பாதிக்கப்படாது என்று யூகிக்கப்பட்டதுமான கட்டிடங்களைப் பார்த்து மனிதர்கள், "அவைகள் பரிபூரண பாதுகாப்பில் இருக்கின்றன" என்று கூறினர். ஆனால், சாதாரண கொட்டகையைப் போல இந்தக் கட்டிடங்கள் அழிக்கப்பட்டன. தீயணைப்பு இயந்திரங்களால் இந்த அழிவை நிறுத்த எதுவுமே செய்ய இயலவில்லை.

தீயணைப்புப் படையினரும்கூட தங்களது எந்திரங்களை இயக்க இயலாதவராயிருந்தனர்.—9T 12, 13 (1909).

## சிக்காகோ மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ்

சிக்காகோ மற்றும் மற்ற பெரிய பட்டணங்களிலே, விரைவில் நடக்க இருக்கின்ற காட்சிகள்கூட எனக்கு முன்பாகக் கடந்து சென்றன. துன்மார்க்கம் அதிகரித்து, தேவனுடைய பாதுகாக்கும் வல்லமை விலக்கப்பட்டபோது, அங்கே அழிவுண்டாக்கும் காற்றுகளும் சூறாவளிகளும் உண்டாயின. அங்கிருந்த கட்டிடங்கள் அக்கினியினால் அழிக்கப்பட்டன, பூமியதிர்ச்சியினால் தரைமட்டமாக்கப்பட்டன…

இதற்குச் சற்றுநேரத்திற்குப் பின், சிக்காகோவிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அவைகளைக் கட்டியெழுப்ப நமது ஜனங்களுடைய பணத்திற்குரிய காசோலையைக் குறித்த தரிசனம் எனக்குக் காட்டப்பட்டது. அவைகளின் அழிவு—சிக்காகோவிலோ அல்லது வேறு எந்த பட்டணத்திலோ நமது ஜனங்கள் சொத்துடையவர்களாகும் விதத்தில் தங்களது பணத்தைப் பெருமளவில் முதலீடு செய்யக்கூடாது என்றும், எச்சரிப்பின் தொனியைக் கொடுப்பதற்கேதுவாகக் கட்டவோ அல்லது வாங்கவோ வேண்டிய கடமையை தேவகிருபை தெளிவாய் உணர்த்தி, சாதகமான வழியைத் திறக்கும்போது மட்டுமே முதலீடு செய்ய வேண்டும் என்ற எச்சரிப்பையளிக்கும் ஒரு பொருட்பாடமாக இருந்தது. லாஸ் ஏஞ்சல்ஸ் பட்டணத்திலே கட்டிடங்களைக் கட்டுவதைக்குறித்தும் இதேபோன்ற ஒரு எச்சரிப்பு எனக்குக் கொடுக்கப்பட்டது. விலையுயர்ந்த கட்டிடங்களை பட்டணங்களிலே கட்டுவதில் நம்முடைய பொருட்களை முதலீடு செய்யக்கூடாது என்று மறுபடியும் மறுபடியுமாக நான் அறிவுறுத்தப்பட்டேன்.—PC 50 (1906).

## சான் பிரான்சிஸ்கோ மற்றும் ஓக்லேண்ட்

சான்பிரான்சிஸ்கோவும் ஓக்லேண்டும், சோதோம் கொமோராவைப் போல மாறிவருகின்றன. அதனால் கர்த்தர் அவற்றைச் சந்திப்பார். தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் கீழாக, இந்தப் பட்டணங்கள் துன்புறப்போகும் காரியம் வெகு தொலைவில் இல்லை.—Ms 30, 1903.

சான்பிரான்சிஸ்கோவைச்[1] சந்தித்த பயங்கரமான பூமியதிர்ச்சி, தேவனுடைய வல்லமையின் மற்ற வெளிப்பாடுகளால் தொடரப்படும். தேவனுடைய பிரமாணம் மீறப்பட்டுள்ளது. பட்டணங்கள் பாவங்களால் கறைப்படுத்தப்பட்டு மாறிவருகின்றன. நினிவேயின் சரித்திரத்தைப் படித்துப் பாருங்கள். தேவன் அந்தத் துன்மார்க்கமான பட்டணத்திற்கு யோனாவின் மூலமாக விசேஷமான தூதினை அனுப்பினார்… அன்றைய நினிவே பட்டணம்

மனந்திரும்பியதுபோன்று, இன்றைய துன்மார்க்கமான பட்டணங்களும் மனந்திரும்புமானால், அவர் கொடுத்த அதேபோன்ற அநேக எச்சரிப்பின் தூதுகள் நம்முடைய காலத்திலும் கொடுக்கப்படும்.—Ms 61a, June 3, 1906.

அப்படிப்பட்ட மீறுதலின் விளைவாக, தேவனுடைய நியாயத் தீர்ப்புகள் இந்தப் பட்டணங்களில் விழுந்தாலும்கூட, அங்கு மனந்திரும்புதலின் அடையாளம் காணப்படவில்லை. மது விற்பனைக்கூடங்கள் இன்னமும் திறந்தே இருக்கின்றன. அநேக சோதனைகள் மக்கள் முன்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.—Letter 268, Aug. 20, 1906.

### மற்ற துன்மார்க்கமான பட்டணங்கள்

உலக சரித்திரத்தின் முடிவை நாம் நெருங்கிக்கொண்டிருக்கும் போது, சான்பிரான்சிஸ்கோவினுடைய அழிவின் காட்சிகள் மற்ற இடங்களிலும் மீண்டுமாக நடைபெறும் என்பதை நாம் காணலாம்… நியாயத்தீர்ப்பு நாள் சரியாக நம்மீது வந்திருக்கின்றது என்பதை நான் அறிந்திருப்பதால், இப்படிப்பட்ட காரியங்கள் என்னை மிகவும் பக்திவிநயமாக இருக்கவேண்டும் என்று உணரச் செய்கின்றது. இதுவரை ஏற்கனவே வந்த நியாயத்தீர்ப்புகள் ஒரு எச்சரிப்பாகும். ஆனால் அவை, துன்மார்க்கமான பட்டணங்களின்மீது வர இருக்கின்ற தண்டனையின் முடிவு அல்ல…

ஆப. 2:1–20; செப். 1:1–3:20; சக. 1:1–4:14; மல். 1:1–4—இவ்வசனங்களில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறதுபோல, இந்தக் காட்சிகள் வெகு சீக்கிரத்தில் சாட்சியாக நிரூபணமாக்கப்படும். ஒவ்வொருவரையும் என் கருத்தில் கொண்டு, வேதவார்த்தையிலிருந்து இந்த அற்புதமான வாக்கியங்களை அளிக்கின்றேன். பழைய ஏற்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் கடைசி காலத்திற்கான கர்த்தருடைய வார்த்தையாகும். சான்பிரான்சிஸ்கோவில் நிகழ்ந்த அழிவை நாம் கண்டதுபோலவே, அத்தீர்க்கதரிசனங்களெல்லாம் நிச்சயமாகவே நிறைவேறும்.—Letter 154, May 26, 1906.

மீறுதலும் பாவமும் உச்சநிலைக்கு நிறைந்துபோன பட்டணங்கள் பூமியதிர்ச்சிகளாலும், அக்கினியாலும், வெள்ளத்தாலும் அழிக்கப்பட்டுப் போகும் என்ற தூதினை அறிவிக்கும்படியாக நான் கட்டளையிடப்பட்டேன்.—Ev 27 (April 27, 1906).

இந்த உலக சரித்திரத்தினுடைய முடிவில் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளைக்குறித்த கிறிஸ்துவின் அனைத்து எச்சரிப்புகளும் இப்போது நமது பெரிய பட்டணங்களிலே நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி இவைகளெல்லாம் வெளிச்சத்திற்குக்

கொண்டுவரப்படத்தக்கதாக தேவன் இவைகளை அனுமதித்திருக்கின்றார். முழு உலகமும் எப்படி மாறிக்கொண்டிருக்கிறது என்பதற்கு சான்பிரான்சிஸ்கோ பட்டணம் ஓர் உதாரணமாகும். துன்மார்க்கமாய் வாங்கப்படும் லஞ்சம், பணத்தை அல்லது பொருளை மோசடிசெய்தல், குற்றமற்றவனைத் தண்டித்துக் குற்றவாளியை விடுவிப்பதற்கு அதிகாரம் பெற்ற மனிதர்கள் மத்தியில் காணப்படும் முறைகேடான ஆதாயத் தொழில் நடவடிக்கைகள்போன்ற இவையனைத்து அக்கிரமமும் பூமியிலுள்ள மற்ற பெரிய பட்டணங்களை நிறைத்து, ஜலப்பிரளயத்திற்கு முன்னான நாட்களிலிருந்ததுபோன்ற உலகத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறது.—Letter 230, 1907.

## பட்டணங்களிலுள்ள தொழிற்சங்கங்கள்

நம்முடைய நெரிசலான பட்டணங்களிலே, சாத்தான் வெகு சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருக்கின்றான். அவனது வேலை குழப்பம் உண்டாக்குவதிலும், போராட்டம் உண்டு பண்ணுவதிலும், அதிகாரிகளுக்கும் உழைப்பாளிகளுக்கும் இடையில் பிரிவினை உண்டாக்கு வதிலும், சபைகளுக்குள்ளாக வந்திருக்கின்ற மாய்மாலங்களிலும் காணும்படியாக இருக்கின்றன… மாம்சத்தின் இச்சை, கண்களின் பெருமை, சுயநலத்தின் பகட்டு, அதிகார துஷ்பிரயோகம், நேசக் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் மனிதர்கள் இணைக்கப்படவேண்டி பயன்படுத்தப்படும் கொடுமை மற்றும் வன்முறை காரியங்கள்—இவைகள் மூலமாக, கடைசிநாட்களில் எரியப்போகின்ற மாபெரும் அக்கினிக்கு அவர்கள் தங்களைத் தாங்களே கட்டுகளாக கட்டிக்கொள்கின்றனர்—இவைகளெல்லாம் சாத்தானிய ஏதுகரங்களின் கிரியைகளாகும்.—Ev 26 (1903).

துன்மார்க்கர், அறக்கட்டளை அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் குழுக்களுடன் சேர்ந்து கட்டுகளாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட ஸ்தாபனங்களுடன் நாம் எவ்விதத் திலும் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளாதிருப்போமாக. தேவனே நமது அதிபதி; நமது அதிகாரி. உலகத்தைவிட்டு வெளியே வந்து பிரிந்திருக்கும்படியாக நம்மை அவர் அழைக்கின்றார். “நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகின்றார்” (2 கொரி. 6:17). நாம் இதைச்செய்ய மறுப்போமானால், உலகத்துடனேயே தொடர்ந்து நம்மை இணைத்துக் கொண்டிருப்போமானால், உலகம் பார்க்கின்றபடி நாமும் எல்லாக் காரியத்தையும் பார்த்துக்கொண்டிருப்போமானால், நாமும் உலகத்தாரைப்போல் மாறிவிடுவோம். உலகக் கொள்கைகளும், உலகக்

கருத்துகளும் நம்முடைய நடவடிக்கைகளை ஆட்சிசெய்யும்போது, நித்திய சத்தியத்தின் உயர்ந்த பரிசுத்தமான மேடையின்மீது நாம் நிற்க இயலாது. —4BC 1142 (1903).

**அட்வெண்டிஸ்டுகளின் உபத்திரவத்திற்கு**
**தொழிற்சங்கங்கள் ஒரு மூலகாரணம்**

உலகம் தோன்றியதுமுதல் இதுவரையிலும் இல்லாத ஒரு உபத்திரவ காலத்தை, இந்தப் பூமியின்மீது கொண்டுவருவதற்கான ஏதுகரங்களில் ஒன்றாக தொழிற்சங்கங்கள் இருக்கும்…

சில குறிப்பிட்ட தொழில்முறைகள்மூலம் நல்ல வருமானத்தைப் பற்றிக்கொள்ள சில மனிதர்கள் ஒன்றுகூடுவார்கள். வர்த்தக சங்கங்கள் உருவாக்கப்படும். இந்த சங்கங்களுடன் இணைய மறுப்பவர்கள்மீது குறிவைக்கப்படும்…

வெகு சீக்கிரத்தில், இப்படிப்பட்ட சங்கங்களினாலும் அரசியல் குழுக்களினாலும், நமது ஸ்தாபனங்கள் தங்களது பணியைப் பட்டணங்களில் எடுத்துச்செல்வதென்பது மிகக் கடினமாகிவிடும். "பட்டணங்களை விட்டு வெளியேறுங்கள். பட்டணங்களில் சுகாதார மையங்களை நிறுவாதிருங்கள்" என்பதே என்னுடைய எச்சரிப்பாகும்.—2SM 142 (1903).

தொழிற்சங்கங்களின் கட்டுப்படுத்தும் வல்லமை மிகவும் கடுமையாக அடக்கியாளப்போகிற காலம் விரைவில் வந்துகொண்டிருக்கிறது.—2SM 141 (1904).

**பட்டணங்களில் அநேகர்**
**சத்தியத்திற்கும் வெளிச்சத்திற்கும் ஏங்குவர்**

தேசங்களிலுள்ள பட்டணங்கள்மீது கண்டிப்பான விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். இருந்தபோதும் அவைகள் தேவனுடைய உச்சக்கட்ட கோபாக்கினையால் சந்திக்கப்படாது. ஏனெனில், அங்கிருக்கின்ற இன்னும் சில ஆத்துமாக்கள், எதிரியின் தந்திரங்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு, மனஸ்தாபப்பட்டு மனந்திரும்புவார்கள்.—Ev 27 (1906).

உலகம் முழுவதையும் கவ்விக்கொண்டிருக்கின்ற ஆவிக்குரிய இருள் ஜனத்தொகை மிகுந்திருக்கின்ற மையங்களிலே கடுமையாக இருக்கின்றது. தேசங்களிலுள்ள பட்டணங்களில்தான், தவறை உணர்ந்து வருந்தாத மாபெரும் நிலையையும், மிகப்பெரிய தேவையையும் நற்செய்தி ஊழியர்கள் காண்கின்றனர். எனவே இப்படிப்பட்ட பட்டணங்களிலேதான், ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு அதிகமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றது.

தேவனையும் பரலோகத்தையும்குறித்த நினைவே இல்லாத திரளான கூட்டத்துடன் இணைந்திருக்கும் அநேகர், சத்திய வெளிச்சத்திற்காகவும், சுத்தமான இருதயத்திற்காகவும் ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். கவலையீனமாய் அக்கறையற்றிருப்போர் மத்தியிலும்கூட, மனித ஆத்துமாவிற்கான தேவ அன்பின் ஒரு வெளிப்பாட்டினால் கவர்ந்திழுக்கக்கூடியவர்கள் அநேகர் இருக்கின்றார்கள்.—RH Nov. 17, 1910.

### பட்டணங்களில் ஊக்கமான முயற்சிகள் அவசியம்

நம்முடைய கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படுவதில், மாபெரும் பட்டணங்களிலே நாம் ஒரு மாபெரும் வேலையை செய்தாக வேண்டும். இவ்வகையான மாபெரும் மையங்களிலே கொடுக்கவேண்டிய, பக்தி விநயமான ஒரு சாட்சி நம்மிடம் இருக்கின்றது.—Words of Encouragement to Self-supporting Workers (Ph 113) 5 (1909).

மாபெரும் வியாபார உலகத்திற்கு, இந்தக் காலத்திற்கான எச்சரிப்பின் தூது ஊக்கத்துடன் அளிக்கப்படாமல் இருக்கின்றது. ஒவ்வொரு நாளும் வர்த்தகம் மற்றும் பொருளாதார மையங்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் கூட்டத்தால் நிரம்பியிருக்கின்றன. இந்தக் காலத்திற்குரிய சத்தியம் அவர்களுக்குத் தேவையாக இருக்கின்றது. ஆனால் அதனுடைய உன்னதமான கொள்கைகளின் இரட்சிக்கின்ற அறிவை அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட வகுப்பினர் எங்கு இருக்கின்றார்களோ, அங்கு அவர்களை சென்றடையத்தக்க விதத்தில் ஆர்வமிக்க மற்றும் ஊக்கத்துடன் கூடிய முயற்சிகள் எடுக்கப்படவில்லை. —CW 14 (1909).

மூன்றாம் தூதனின் தூது தற்போது அறிவிக்கப்படவேண்டும். வெகுதூரத்திலுள்ள இடங்களில் மாத்திரம் அல்ல, அருகிலுள்ள புறக்கணிக்கப்பட்ட இடங்களிலும், எச்சரிக்கப்படாமலும் இரட்சிக்கப்படாமலு மிருக்கின்ற திரளான கூட்டம் வசித்துக்கொண்டிருக்கின்ற இடங்களிலும் அறிவிக்கப்படவேண்டும். எங்குமுள்ள நம்முடைய பட்டணங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களை, ஊக்கமான மற்றும் முழு மனதோடு கூடிய ஊழியத்தைச் செய்யும்படியாக அழைக்கின்றன.—RH Nov. 17, 1910.

### பட்டணங்களைவிட்டு அனைவரும் வெளியேறமுடியாது

சாத்தியமாகும் வேளையில் கிராமப்புறத்திலே தங்கள் பிள்ளை களுக்கு வீடுகளை அமைத்துத்தருவது என்பது பெற்றோர்களின் கடமையாகும்.—AH 141 (1906).

காலம் செல்லச்செல்ல, அதிகமதிகமாக நமது மக்கள் பட்டணங்களை விட்டு வெளியேறிச் செல்லவேண்டியதிருக்கும். நமது சகோதரரும் சகோதரிகளும், விசேஷமாக பிள்ளைகள் கொண்ட குடும்பங்களும், தங்களுக்கு முன்பாக வழிதிறக்கும்போது, பட்டணங்களை விட்டுச்செல்ல திட்டமிட வேண்டும் என்று வருடக்கணக்காக நமக்கு அறிவுறுத்தப் பட்டிருக்கிறது. அப்படி வழிதிறக்கும்படி அநேகர் ஊக்கமாக உழைக்க வேண்டும். அதே நேரம், அப்படி பட்டணத்தை விட்டுச்செல்வதற்குரிய வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கும் வரையிலும், அங்கே தங்கியிருக்கும் நாட்களில் தங்களது செல்வாக்கின் எல்லை குறுகினதாயிருந்தாலும் கூட, தேவனுடைய ஊழியத்தை செய்துகொண்டிருப்பதில் அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்.—2SM 360 (1906).

நம்முடைய பட்டணங்கள் துன்மார்க்கத்தில் வளர்ந்துகொண்டே யிருக்கின்றன. அவைகளில் அவசியமின்றித் தங்கியிருப்பவர்கள் தங்களது ஆத்தும இரட்சிப்பு அபாயத்துக்குள்ளாகும்விதத்திலேயே அப்படிச் செய்கின்றனர் என்பது மிகமிகத் தெளிவாகத் தெரிகின்றது.—CL 9 (1907).

பெரும் பட்டணங்களும் சிறு நகரங்களும், குணக்கேட்டிலும் பாவத்திலும் மூழ்கித் திளைத்திருக்கின்றன. என்றாலும் ஒவ்வொரு சோதோமிலும்கூட லோத்துக்கள் இருக்கின்றனர்.—6T 136 (1900).

## பட்டணங்களில் பள்ளிகளும், சபைகளும், உணவகங்களும் அவசியம்

பட்டணங்களிலிருந்து தற்போது வெளியேறமுடியாமல் இருக்கின்றவர்களின் பிள்ளைகள் இரட்சிக்கப்படுவதற்கும், பயிற்றுவிக்கப் படுவதற்கும் வேண்டிய அநேக காரியங்கள் செய்யப்படலாம். இது நம்முடைய சிறப்பான முயற்சிகளிலேயே போற்றத்தக்க ஒரு காரியமாகும். சபைப்பள்ளிகள் பிள்ளைகளுக்காகப் பட்டணங்களிலே நிறுவப்படவேண்டும். இப்படிப்பட்ட பள்ளிகளில் அவசியத்திற்கேற்ப உயர்கல்வியைக் கற்றுத்தருவதற்கான தகுந்த ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும்.—CG 306 (1903).

நம்முடைய உணவகங்கள் பட்டணங்களிலே அமைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால், இப்படிப்பட்ட உணவகங்களில் வேலை செய்கின்றவர்கள் மக்களைச் சென்றடைந்து, சரியான வாழ்க்கை முறையின் கொள்கைகள் பற்றி அவர்களுக்குக் கற்றுத்தர இயலாது.—2SM 142 (1903).

பட்டணங்களுக்கு வெளியிலுள்ள மையங்களில் இருந்துகொண்டு, பட்டணங்களிலே வேலை செய்ய வேண்டும் என்று கர்த்தர் நம்மை மீண்டும் மீண்டுமாக வலியுறுத்தியிருக்கின்றார். இந்தப் பட்டணங்களிலே தேவனுடைய

நினைவுச்சின்னங்களைப்போன்ற தொழுகைக்கான வீடுகள் நமக்கு இருக்க வேண்டும். ஆனால், நம்முடைய புத்தக வெளியீடுகளுக்கான அச்சக ஸ்தாபனங்கள், நோயுற்றோரைக் குணப்படுத்த சுகாதார மையங்கள், ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கான கல்லூரிகள் ஆகிய இவையனைத்தும், பட்டணங்களுக்கு வெளியே நிறுவப்படவேண்டும். விசேஷமாக நமது வாலிபர்கள், பட்டண வாழ்க்கையின் சோதனைகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியது மிக முக்கியமாகும்.—2SM 358 (1907).

## நாட்டுப்புறத்திற்கு அவசரகதியில் செல்ல ஆலோசனை இல்லை

ஒவ்வொருவரும் ஞானமாய்த் தீர்மானிக்க நேரம் எடுத்துக் கொள்ளவேண்டும். உவமையில் சொல்லப்பட்டுள்ளபடி, கட்ட ஆரம்பித்து முடிக்க இயலாமற்போன அந்த மனுஷனைப்போல இருக்கவேண்டாம். இடம்பெயருதல் மற்றும் அத்துடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து அசௌகரியங்களும் கவனமாய்ப் பரிசீலிக்கப்பட்டு, நிறுத்துப்பார்க்கப்படாத பட்சத்தில் ஒரு அடிகூட எடுத்துவைக்கலாகாது.

தங்களுக்கு ஒன்றுமே தெரியாத சில காரியங்களைச் செய்யும் படியாக அதனுள் நுழைந்து, எதையாவது துரிதமாக செய்துவிடக்கூடிய சில தனிநபர்கள் அங்கு இருக்கலாம். ஆனால், இப்படிச் செய்வதை தேவன் விரும்புவதில்லை…

ஒழுங்கற்ற முறையில் எதுவுமே செய்யப்பட வேண்டாம். ஆர்வத்தைத் தூண்டுகின்ற உத்வேகமிக்க சொற்பொழிவுகள் உற்சாகத்தைக் கிளர்ந்தெழச் செய்யும்; அதனால் மாபெரும் இழப்பு அல்லது உடைமையை தியாகம் செய்யும் நிலை உண்டாகலாம், அது தேவனுடைய ஒழுங்கின்படியானதல்ல. நிதானம், ஒழுங்கான முன்யோசனை, ஆரோக்கியமான கொள்கைகள் மற்றும் நோக்கங்களின் குறைபாட்டினால், அவசியமாகப் பெற்றிருக்க வேண்டிய வெற்றி ஒரு தோல்வியாக மாறிவிடுகின்றது.[2]—2SM 362, 363 (1893).

## பட்டணங்களிலிருந்து ஓடுவதற்கான அடையாளம்

ஆதிகால சீஷர்களைப்போல, நாமும் பாழான இடங்களிலும் தனிமையான இடங்களிலும் ஒரு புகலிடம் தேடும்படி கட்டாயப்படுத்தப் படப்போகின்ற காலம் வெகு தொலைவிலில்லை. ரோமச் சேனைகளால் எருசலேம் முற்றுகை போடப்பட்டது, யூதேய கிறிஸ்தவர்கள் ஓடிப்போவதற் கான அடையாளமாக இருந்ததைப்போன்று, நமது நாடு (ஐக்கிய அமெரிக்கா) தன் சார்பிலே அதிகாரத்தைப் பெற்றிருப்பதாக நினைத்துக்கொண்டு

போப்புமார்க்க ஓய்வுநாளைச் சட்டமாகக் கட்டாயப்படுத்துவது நமக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும். பெரிய பட்டணங்களைவிட்டு வெளியேறுவதற்கும், மலைகளின் நடுவே ஒதுக்குப்புறமான இடங்களில் தனிமையான இடங்களுக்குச் செல்லும்வண்ணம் சிறிய பட்டணங்களைவிட்டு வெளியேற ஆயத்தமாவதற்கும் அதுவே சரியான நேரமாக இருக்கும்.—5T 464, 465 (1885).

**மரணச்சட்டம் பிறப்பித்த பிறகு நீதிமான்கள் துன்மார்க்கரால் துரத்தப்படுதல்**

இக்கட்டுக்காலத்திலே நாங்கள் அனைவரும் பட்டணங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் உயிர்தப்ப ஓடினோம். துன்மார்க்கரோ உருவிய வாளோடு எங்களது வீடுகளில் நுழைந்து எங்களைப் பின்தொடர்ந்தார்கள். —EW 34 (1851).

பரிசுத்தவான்கள் பட்டணங்களையும் கிராமங்களையும் விட்டுப் போனபோது, அவர்களைக் கொலைசெய்யத்தக்கதாக தேடிவந்த துன்மார்க்கரால் தொடரப்பட்டார்கள். ஆனால், தேவனுடைய மக்களை கொல்லத்தக்கதாக உயர்த்தப்பட்ட பட்டயங்கள் ஒரு வைக்கோலைப்போல வல்லமையின்றி உடைந்து விழுந்தன. தேவனுடைய தூதர்கள் பரிசுத்தவான்களைச் சூழக் காத்துக்கொண்டனர்.—EW 284, 285 (1858).

கற்பனைகளைக் கைக்கொள்பவர்கள் எப்போது கொல்லப்படலாம் என்ற நேரத்தை பொதுவான ஒரு சட்டம் நிர்ணயித்திருந்தாலும், சில வேளைகளில் அச்சட்டத்தை எதிர்பார்த்திருந்த அவர்களது எதிரிகள், குறிப்பிட்ட நேரம் வருவதற்கு முன்பாகவே அவர்களது உயிர்களைப் பறிக்க முயற்சிப்பார்கள். ஆனால் ஒவ்வொரு உண்மையான ஆத்துமாவைச் சுற்றிலும், நியமிக்கப்பட்டிருந்த வல்லமையான பாதுகாவலர்களான தூதர்களைக் கடந்து ஒருவராலும் செல்ல இயலாது. கிராமங்களிலிருந்தும் பட்டணங்களிலிருந்தும் ஓடிப்போகும்போது, ஒரு சிலர் கடுமையாகத் தாக்கப்பட்டனர். ஆயினும், அவர்களுக்கு விரோதமாய் உயர்த்தப்பட்ட பட்டயங்கள் ஒரு வைக்கோலைப்போல உடைந்து விழுந்தன. மற்றவர்கள், யுத்த மனிதரைப் போல காணப்பட்ட தேவதூதர்களால் காக்கப்பட்டனர். —GC 631 (1911). ★

[1] ஏப்ரல் 18–19, 1906–ல் நடந்த சான்பிரான்சிஸ்கோவின் பூமியதிர்ச்சி மற்றும் தீ விபத்தினால் 503 பேர் மரித்தனர். மேலும் 350 மில்லியன் டாலர் மதிப்புள்ள சொத்து சேதமடைந்ததாகக் கணக்கிடப்பட்டது.

[2] திருமதி. உவைட் அவர்களின் வலியுறுத்தலுக்கு மாறுத்தரமாக, "கிட்டத்தட்ட 100–லிருந்து 200–க்கு உட்பட்ட மக்கள்" "எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக" பட்டணத்தை விட்டு நாட்டுப்புற இடத்திற்குச் செல்ல ஆயத்தமாகியிருந்தனர் என்பதைக்குறித்து திருமதி. உவைட்டிற்கு தகவல் அளிக்கும்படியாக, முன்னணியிலிருந்த பேட்டில் கிரீக்கின் ஊழியரிடமிருந்து வந்த கடிதத்திற்கு திருமதி. உவைட் டிசம்பர் 22இ 1893–ல் பதில் அளித்து எழுதிய கடிதத்திலிருந்து எடுக்கப்பட்டது. பார்க்க: 2SM. pp 361–364.

# 9

# ஞாயிறு ஆசரிப்புச் சட்டங்கள்

## தேவனின் அதிகாரத்திற்கு எதிரான சாத்தானின் சவால!

"தனது வேசித்தனமாகிய மதுவை சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்ததினால்" பாபிலோனை தேவன் வெளிப்படையாகக் கடிந்துரைக்கின்றார்…

தேவன் ஆறு நாட்களுக்குள் உலகத்தை உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். இந்த நாளை அவர் பரிசுத்தப்படுத்தி, தமது மக்களால் தங்களது தலைமுறைதோறும் ஆசரிக்கப்படும்படியாக, மற்ற நாட்களிலிருந்து அதைத் தமக்கென்று பரிசுத்தமானதாகப் பிரித்தெடுத்தார். ஆனால் பாவமனுஷனோ, தேவனுக்கும் மேலாகத் தன்னை உயர்த்தி, தேவனுடைய ஆலயத்தில் உட்கார்ந்து, தன்னைத் தேவனாகக் காண்பித்துக்கொண்டு, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைத்தான். இந்த வல்லமை தன்னை தேவனுக்குச் சமமாக மாத்திரமல்ல, தேவனுக்கு மேலாகவும் தன்னை உயர்த்திக் காண்பித்து, ஏழாவது நாள் இருக்கவேண்டிய இடத்திலே வாரத்தின் முதலாம் நாளை வைத்து, ஓய்வுநாளை மாற்றி, அதன் வல்லமையை நிரூபிக்க நினைத்தது. புராட்டஸ்டண்டு உலகம், போப்பு மார்க்கத்தின் இந்தக் குழந்தையை (ஞாயிற்றுக் கிழமையை) பரிசுத்தமானதாக எடுத்துக்கொண்டது. தேவனுடைய வார்த்தை இதனை, அவளுடைய வேசித்தனம் (வெளி. 14:8) என்று அழைக்கிறது.—7BC 979 (1900).

கிறிஸ்தவர்கள் பெருகிவந்த காலகட்டத்தின்போது, மனிதனுடைய மகிழ்ச்சிக்கு மாபெரும் எதிரியானவன், நான்காம் கற்பனையாகிய ஏழாம்நாள் ஓய்வுநாளை விசேஷ தாக்குதலுக்குரிய ஒரு பொருளாக ஆக்கினான். சாத்தான் சொல்வதாவது: "தேவனுடைய நோக்கங்களுக்கு எதிராக நான் செயல்படுவேன். தேவனுடைய சிருஷ்டிப்பின் சின்னமாகிய ஏழாம்நாள் ஓய்வுநாளைப் புறக்கணிப்பதற்கான வல்லமையை என்னுடைய

பின்னடியார்களுக்கு அளிப்பேன். அப்படியாக தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட ஓய்வுநாள் மாற்றப்பட்டுவிட்டது என்று உலகத்திற்குக் காண்பிப்பேன். மக்களுடைய மனதில் அந்த நாள் இல்லாதவாறு செய்வேன். அதைப்பற்றிய நினைவையே அழித்துவிடுவேன். அந்த நாளுக்குப் பதிலாக, அதன் இடத்திலே தேவனுடைய நம்பிக்கைக்கு ஆதாரச் சான்றுகளைப் பெற்றிராத, அவருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் நடுவில் அடையாளமாக இல்லாத ஒரு நாளை வைப்பேன். ஏழாம் நாளுக்கு தேவன் நியமித்த பரிசுத்தத்தை இந்த நாளுக்கு மாற்றும்படியாக, இந்த நாளை ஏற்றுக்கொண்டவர்களை நான் வழிநடத்துவேன்.—7BC 979 (1900).

### சர்ச்சைக்குரிய மாபெரும் கருத்தாகிய ஓய்வுநாள்

கடைசிநாட்களில் தொடர்ந்து நடத்தப்படப்போகின்ற யுத்தத்தில், யேகோவாவின் சட்டத்திற்குரிய கடமையிலிருந்து விலகி, எதிர்த்து நிற்கின்ற தீமை விளைவிக்கும் வல்லமைகள் அனைத்தும், தேவனுடைய மக்களுக்கு எதிராக யுத்தம் செய்யும்படியாக ஒன்றுசேரும். இந்த யுத்தத்திலே, நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாள், வாத அடிப்படையிலான மிக முக்கியமான கருத்தாயிருக்கும். ஏனெனில், பிரமாணத்தைத் தந்த உன்னதமான தேவன், இந்த ஓய்வுநாள் கற்பனையின்மூலமாகவே, வானங்களையும் பூமியையும் படைத்த சிருஷ்டிகராகத் தம்மை அடையாளப்படுத்திக் காட்டுகின்றார்.—3SM 392 (1891).

“நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும், உங்களைப் பரிசுத்தப்படுத்துகின்ற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்” (யாத். 31:13) என்று கர்த்தர் கூறுகின்றார். “எந்த நாள் ஓய்வுநாள் என்பது உங்களுக்குத் தெரியாது” என்று கூறி, ஓய்வுநாளை ஆசரிக்கத் தடைகளை உண்டாக்க சிலர் முற்படுவர். ஆனால், ஞாயிற்றுக்கிழமை எப்பொழுது வருகிறதென அவர்கள் அறிந்திருப்பர். அதன் ஆசரிப்பைக் கட்டாயப்படுத்தும் சட்டங்களை இயற்றுவதில் மாபெரும் வைராக்கியத்தை காண்பிப்பர்.—KC 148 (1900).

### 1880–களில் நடந்த ஞாயிறு ஆசரிப்புச் சட்ட இயக்கம்[1]

நமது தேசத்திலே ஞாயிறு ஆசரிப்பின் சட்டமானது இயற்றப்படும் என்று அநேக வருடங்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த இயக்கம் இப்பொழுது சரியாக நம்மேல் வந்திருக்கின்றது. இந்த விஷயத்திலே, நமது மக்கள் என்ன செய்யப்போகிறார்கள்?... என்று நாம் கேட்கின்றோம். தேவனுடைய மக்களுக்கு கிருபையும் வல்லமையும் கொடுக்கப்படும்படியாக, விசேஷமாக இப்பொழுது நாம் தேவனைத் தேடவேண்டும். தேவன்

ஜீவிக்கிறார். அவர் நமது செயலுரிமையைத் தடுத்துப்போடக்கூடிய காலம் முழுமையாக வந்துவிட்டது என்பதை நாம் நம்புகிறதில்லை.

"பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று கொண்டு, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது காற்று அடிக்காதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருப்பதை" தீர்க்கதரிசி கண்டார். வேறொரு தூதன், சூரியன் உதிக்கும் திசையிலிருந்து ஏறி வந்து, அந்த நான்கு தூதரையும் நோக்கி, "நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைப்போட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமாய் கூப்பிட்டுச்" சொன்னான். தேவனுடைய ஊழியக்காரர்கள் உலகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டு, யேகோவாவின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதிருப்பதற்கு எதிராக அறிவிக்கப்படவேண்டிய எச்சரிப்பைக் கொடுக்கும்வரை, தேவதூதர்கள் அந்த நான்கு காற்றுகளையும் விட்டு விடாமல் பிடித்திருக்கத்தக்கதாக, தேவனிடத்தில் மன்றாட வேண்டிய வேலையே நாம் இப்பொழுது செய்யவேண்டிய வேலையாக உள்ளது என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது.—RH Extra, Dec. 11, 1888.

## ஞாயிறு ஆசரிப்புச் சட்ட ஆதரவாளர்கள் தாங்கள் செய்கிறதை உணராதிருத்தல்

ஞாயிறு ஆசரிப்பு இயக்கம் தற்போது இருளிலே அதனுடைய வழியை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. தலைவர்கள் அதன் உண்மையான விஷயத்தை மூடி மறைத்துக்கொண்டிருக்கின்றனர். அந்த இயக்கத்துடன் இணைந்திருப்பவர்களில்கூட அநேகர், அதன் உள்நோக்கம் எவ்விடத்திற்கு குறிப்பிட்ட ஒரு வழியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதனை அறியாதிருக்கின்றனர்… அவர்கள் குருட்டுத்தனத்தில் வேலை செய்துகொண்டிருக்கின்றனர். தங்களை, சுதந்தரமும் சுயாதீனமுமான ஒரு தேசமாக ஆக்கியிருக்கிற கொள்கைகளை புராட்டஸ்டண்ட் அரசாங்கம் தியாகம் செய்து, போப்பாதிக்க போலிக்கொள்கைகளையும் போப்பாதிக்க வஞ்சகங்களையும், பிரபலப்படுத்துகிற நியதிகளை சட்டமியற்றுதலின்மூலம் அரசியலமைப்புக்குள் கொண்டுவருமானால், இருண்ட யுகங்களின் ரோம அருவருப்புக்குள் தாங்கள் மறுபடியும் மூழ்குகிறதை அவர்கள் காணாதிருக்கிறார்கள்—RH Extra, Dec. 11, 1888.

ஞாயிறு ஆசரிப்பை அமலாக்குவதற்காக, இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களில் அநேகர் கூட, இந்தச் செயலைத்தொடர்ந்து வரக்கூடிய விளைவுகளுக்குக் குருடாக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் மத சுதந்திரத்திற்கெதிராக நேரடியாக மோதிக்கொண்டிருக்கின்றார்கள் என்று

அறியாதிருக்கின்றனர். வேதாகம ஓய்வுநாள் வலியுறுத்தும் காரியங்களையும், ஞாயிறு ஆசரிப்பு அமைப்பு எந்தப் பொய்யான அஸ்திபாரத்தின்மேல் போடப்பட்டிருக்கின்றது என்பதையும் ஒருபோதும் உணராதிருக்கின்ற அநேகர் இருக்கின்றார்கள்...

அரசியலமைப்புச் சாசனத்தை மாற்றி, ஞாயிறு ஆசரிப்பை வலியுறுத்தக்கூடிய ஒரு சட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு முயற்சியை எடுப்பவர்கள், அதனுடைய விளைவு என்னவாய் இருக்குமென்பதை சிறிதளவே உணர்ந்திருக்கின்றனர். ஒரு மாபெரும் நெருக்கடி இப்போதே நம்மீது வந்திருக்கின்றது.—5T 711, 753 (1889).

**ஒன்றும் செய்யாமல் அமைதியாக இருக்கலாகாது**

வரப்போகின்ற ஆபத்தைத் தவிர்ப்பதற்காக, நமது வல்லமைக்குட்பட்ட அனைத்தையும் செய்வது நமது கடமையாக இருக்கின்றது... இந்த தீமையின் மேகத்தை தேவன் பின்னுக்குத் தள்ளவும், எஜமானுக்காக வேலை செய்ய இன்னும் சில கிருபையின் ஆண்டுகளைக் கூட்டித்தரவும் வேண்டும் என்று, விண்ணப்பிக்க வேண்டியது உலகெங்கிலுமுள்ள ஜெபிக்கிற ஆண்கள் மற்றும் பெண்கள்மீது விழுந்த ஒரு பெரும் பொறுப்பாக இருக்கிறது.—RH Extra, Dec. 11, 1888.

தேவனுடைய கற்பனைகளை இப்பொழுது கைக்கொள்பவர்கள், தேவன் மாத்திரமே கொடுக்கக்கூடிய விசேஷ உதவியைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாகத் தங்களை ஊக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். பயமுறுத்தக்கூடிய பேராபத்தை எவ்வளவுக்கெவ்வளவு தாமதிக்க வைக்க முடியுமோ, அவ்வளவு நாட்கள் தாமதிக்க வைக்கத்தக்கதாக அவர்கள் மிகவும் ஊக்கமாக உழைக்க வேண்டும்.—RH Dec. 18, 1888.

பிரமாணத்தைக் கைக்கொள்ளுகின்ற தேவனுடைய ஜனங்கள், இந்த சூழ்நிலையைத் தாங்கள் நற்பாங்குடன் ஏற்றுக்கொண்டதுபோல, இந்த நேரத்திலே அமைதியாக இருக்கவேண்டாம்.—7BC 975 (1889).

மனச்சாட்சியின் சுதந்திரத்தை காத்துக்கொள்வதற்கு நாம் எந்த ஒரு முயற்சியும் எடுக்காமல் அமைதியாக உட்கார்ந்திருந்தால், நாம் தேவனுடைய சித்தத்தை செய்யாமல் இருக்கின்றோம். இத்தனை நீண்ட காலமாக அலட்சியப்படுத்தப்பட்ட ஊழியத்தை நாம் நிறைவேற்றி முடிக்கும்வரை, இந்த பேராபத்துக்கள் ஒருவேளை தாமதப்படுத்தப்படும்படியாக, ஊக்கமான மற்றும் கருத்துமிக்க ஜெபங்கள் பரலோகத்திற்கு எழும்பிக்கொண்டிருக்க வேண்டும். மிகவும் ஊக்கமான ஜெபங்கள் முதலாவதாக எழும்பட்டும். அதன்பின்பு நம்முடைய ஜெபத்துடன்கூட, நாமும் இணைந்து வேலை

செய்வோமாக.—5T 714 (1889).

தூங்கிகொண்டிருப்பதுபோல் இருக்கும் அநேகர், மிக சாவதானமாய் இருந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள்: "ஞாயிறு ஆசரிப்பு வலியுறுத்தப்படும் என்று தீர்க்கதரிசனம் முன்னுரைத்திருந்தால், கண்டிப்பாக அந்த சட்டமானது இயற்றப்படும்" என்று கூறுகின்றார்கள். இந்த முடிவிற்கு வந்தபின்பு, அவர்கள் அந்த நிகழ்ச்சியை அமைதியான ஒரு எதிர்பார்ப்புடன், அப்படிப்பட்ட இக்கட்டு நாளிலே தேவன் தமது மக்களைக் காப்பாற்றுவார் என்ற எண்ணத்துடன், தங்களைத் தாங்களே ஆறுதல்படுத்திக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றார்கள். ஆனால் தேவன் நமது பொறுப்பில் ஒப்படைத்திருக்கின்ற வேலையைச் செய்வதற்கு, எந்த முயற்சியும் நாம் எடுக்காதிருந்தால் அவர் நம்மைக் காப்பாற்றமாட்டார்…

உண்மையுள்ள ஜாமக்காரராக, பட்டயம் வருகிறதை நீங்கள் காண வேண்டும்; ஆண்களும், பெண்களும் அறியாமையின்மூலம் ஒரு பாதையைத் தொடராதபடி எச்சரிப்பை அளிக்கவேண்டும். அவர்கள் சத்தியத்தை அறிந்திருந்தார்களானால் அப்பாதையைத் தவிர்த்திருந்திருப்பார்கள்.—RH Extra, Dec. 24, 1889.

## ஞாயிறு ஆசரிப்பாளர்களுக்கு ஆதரவளியாமல் தேவப்பிரமாணத்தை உயர்த்துங்கள்

மதச்சுதந்தரத்தை அடக்கும்படியாகவும், தங்களது சக மனிதர்களை ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிப்பதற்கு வழிநடத்துவதற்கும் அல்லது கட்டாயப்படுத்துவதற்கும், அடக்குமுறை அளவுகளை நடைமுறைப்படுத்தும்படியாகவும், தங்களது செல்வாக்கைப் பயன்படுத்துகிறவர்களை பிரியப்படுத்துவதற்காக நாம் வேலை செய்யக் கூடாது. வாரத்தின் முதல் நாள் பயபக்திக்குரிய ஒரு பரிசுத்த நாள் கிடையாது. அது ஒரு போலியான ஓய்வுநாள் ஆகும். எனவே, கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினர்கள், இந்த நாளை மேன்மைப் படுத்தி தேவனுடைய ஓய்வுநாளை மிதித்துப்போடுவதின்மூலமாக, தேவனுடைய பிரமாணத்தை மீறுகின்ற ஜனங்களோடு பங்குகொள்ள முடியாது. அப்படிப்பட்ட மனிதர்களை பதவியில் வைப்பதற்காக தேவனுடைய மக்கள் வாக்களிக்கக்கூடாது. ஏனெனில் அப்படி இவர்கள் வாக்களிக்கின்றபோது, பதவிக்கு வந்தபின்பு அவர்கள் செய்யவிருக்கிற பாவங்களில் அவர்களுடன் சேர்ந்து இவர்களும் பங்கெடுக்கிறார்கள்.—FE 475 (1899).

இந்த ஞாயிறு ஆசரிப்புச் சட்ட இயக்கத்தைக்குறித்து, எக்காளம் நிச்சயமான ஒரு முழக்கத்தைக் கொடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

நமது பத்திரிகைகளிலே, தேவனுடைய பிரமாணத்தின் நித்தியத் தன்மையின் கருத்து, ஒரு விசேஷமானதாக ஆக்கப்பட்டிருக்குமானால், அது சிறந்த நன்மையாக இருந்திருக்கும் என்று எண்ணுகின்றேன்… இந்த ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்தை வீழ்த்திட நம்மால் முடிந்த அனைத்தையும் நாம் இப்போதே செய்துகொண்டிருக்கவேண்டும்.—CW 97, 98 (1906).

**அமெரிக்க ஐக்கியநாடுகள்**
**ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்தை அமல்படுத்தும்**

நமது நாடு ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்தைக் கொண்டுவரும்படி அதனுடைய அரசாங்கத்தின் கொள்கைகளை விட்டுக்கொடுக்கும்போது, புராட்டஸ்டண்ட் மார்க்கம் இந்த சட்டத்திலே போப்பு மார்க்கத்தோடு கைகோர்த்துக்கொள்ளும்.—5T 712 (1889).

புராட்டஸ்டண்ட் மக்கள் தங்களது முழு செல்வாக்கையும் பலத்தையும் போப்புமார்க்கத்திற்கு ஆதரவாகத் திருப்புவர். நாடு தழுவிய ஒரு சட்டத்தின் மூலம் பொய்யான ஓய்வுநாளை வலியுறுத்தும்போது ரோம அரசாங்கத்தின் சீர்கெட்டுப்போன நம்பிக்கைக்கு, அவர்கள் ஜீவனையும் வல்லமையையும் அளிப்பர். இதன் மூலமாக, அவளது (ரோம்) கொடுங்கோலாட்சிக்கும், மனச்சாட்சியின் அடக்குமுறைக்கும் மறுஉயிரூட்டுவர்.—Mar 179 (1893).

வெகு சீக்கிரத்திலோ அல்லது சற்றுத் தாமதமாகவோ, ஞாயிறு ஆசரிப்புச் சட்டங்கள் அமலுக்குக் கொண்டுவரப்படும்.—RH Feb. 16, 1905.

ஞாயிறு ஆசரிப்புச் சட்டங்கள் வெகு சீக்கிரத்தில் வலியுறுத்தப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். அப்போது நம்பகமான பதவிகளில் இருப்பவர்கள், தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளுகின்ற, சிறிதளவு எண்ணிக்கையுள்ள கூட்டத்திற்கு எதிராக வெறுப்புடையவர்களாக இருப்பர்.—4MR 278 (1909).

ஆட்டுக்குட்டிக்கொப்பான கொம்புகளை உடைய மிருகத்தினால் சுட்டிக்காட்டப்பட்ட வல்லமை பூமியும் அதன் குடிகளும், "சிறுத்தையைப் போன்ற மிருகத்தினால்" அடையாளப்படுத்தப்பட்ட போப்பு மார்க்கத்தை வணங்கும்படி செய்யும் என்பதை வெளிப்படுத்தல் 13–ம் அதிகாரத்தின் தீர்க்கதரிசனம் அறிவிக்கின்றது. ரோமன் கத்தோலிக்க சபை தன்னுடைய மேலாதிக்கத்தின் விசேஷமான அங்கீகரிப்பு என்று உரிமைபாராட்டும் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும்படியான சட்டத்தை அமெரிக்க ஐக்கிய நாடு வலியுறுத்தும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்…

நியாயத்தின் மீதான அன்பையும், சத்தியத்தின் மீதான பற்றையும்,

அரசியல் சீர்கேடு அழித்துக்கொண்டிருக்கிறது. சுதந்திர அமெரிக்காவிலும்கூட, ஆட்சியாளர்களும் சட்டமியற்றுபவர்களும், பொது ஜன ஆதரவைப் பெறவேண்டி, ஞாயிறு ஆசரிப்பை வலியுறுத்துகின்ற ஒரு சட்டத்திற்கான ஏகோபித்த வேண்டுகோளுக்கு இணங்கிப்போவார்கள்.—GC 578, 579, 592 (1911).

## ஞாயிறு ஆசரிப்புச் சட்ட ஆதரவாளர்கள் பயன்படுத்தும் விவாதங்கள்

நிகழ்கின்ற சம்பவங்களுக்கு சாத்தான் தனது சொந்த வியாக்கி யானங்களை அளித்து, நாட்டிலே நடக்கின்ற பேரழிவுகளெல்லாம் ஞாயிறு ஆசரிப்பை மீறுவதின் ஒரு விளைவே ஆகும் என்று, தான் விரும்புகின்றபடியே அவர்களை நினைக்கவைப்பான். செல்வாக்குள்ள இந்த மனிதர்கள், தேவனுடைய உக்கிரக் கோபத்தை ஆற்றவேண்டும் என்று எண்ணி, ஞாயிறு ஆசரிப்பை வலியுறுத்துகின்ற சட்டங்களை இயற்றுவார்கள்.—10MR 239 (1899).

“கிறஸ்தவ ஓய்வுநாள்” (ஞாயிற்றுக்கிழமை) என்று அழைக்கப்படும் நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவதே விரைவாகப் பரவிவரும் சீர்கேட்டுக்குப் பெரும் காரணமாக உள்ளது, ஞாயிறு ஆசரிப்பை வலியுறுத்தினால் சமுதாயத்தின் ஒழுக்கநிலை பெருமளவிற்கு மேம்படும் என்ற விவாதத்தை இதே பிரிவினர் முன்வைப்பர். மெய்யான ஓய்வுநாளைப்பற்றிய உபதேசம் மிகவும் பரவலாகப் பிரசங்கிக்கப்பட்ட அதே அமெரிக்காவில் இந்த விவாதம் விசேஷ விதத்தில் வலியுறுத்தப்படுகிறது.—GC 587 (1911).

## புராட்டஸ்டண்ட் மார்க்கமும் கத்தோலிக்கமும் இணைந்து செயல்படுதல்

புராட்டஸ்டண்ட் மார்க்கம் ரோம வல்லமைக்கு நேராகத் தனது ஐக்கியத்தின் கரத்தை நீட்டும். அப்போது தேவனுடைய சிருஷ்டிப்பின் ஓய்வுநாளுக்கு விரோதமாக ஒரு சட்டமியற்றப்படும். அதன் பிறகு தேவன் தமது “அபூர்வமான கிரியை”யை பூமியிலே நடப்பிப்பார்.—7BC 910 (1886).

விக்கிரகாராதனை என்ற குற்றச்சாட்டிலிருந்து, ரோம சபை எப்படித் தன்னை விடுவித்துக்கொள்ளும் என்பதை நம்மால் காண முடியாது… முடிவினிலே தங்களோடு ஒருங்கிணையக்கூடிய இப்படிப்பட்ட மதத்தைத்தான் புராட்டஸ்டண்ட் சபையார் பரிவுடன் நோக்கிப்பார்க்க ஆரம்பித்திருக்கின்றனர். ஆயினும் இந்த ஒருங்கிணைப்பு கத்தோலிக்கத்தில் ஏற்படுத்தப்படும் ஒரு மாறுதலினால் உண்டாக்கப்பட்டதல்ல, ஏனென்றால் ரோம் ஒருபோதும் மாறுவதில்லை. அவள் (ரோம்) தவறிழைக்காத தன்மையை உரிமை

பாராட்டுகின்றாள். புராட்டஸ்டண்ட் மார்க்கம்தான் மாறக்கூடியதாகும். தனது பங்காக அது (புராட்டஸ்டண்ட்) கையாளுகின்ற தாராளக் கொள்கைகள்தான், கத்தோலிக்கத்தின் கரத்தைப் பற்றிக்கொள்ளவேண்டிய இடத்திற்கு அதனைக் கொண்டுவரும்.—RH June 1, 1886.

தாங்கள்தான் புராட்டஸ்டண்டுகள் என்று வெளிப்படையாக உரிமை பாராட்டிக்கொள்ளும் புராட்டஸ்டண்ட் உலகம் பாவ மனுஷனோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளும். அப்போது, சபையும் உலகமும் சீர்கேடான ஐக்கியத்திற்குள்ளாக இருக்கும்.—7BC 975 (1891).

முந்தின உலகத்தின் ரோம மார்க்கமும், இன்றைய உலகத்தின் மருளவிழுந்த புராட்டஸ்டண்ட் மார்க்கமும், தெய்வீகக் கட்டளைகள் அனைத்தையும் கனப்படுத்துகிறவர்களுக்கு எதிராக ஒரே விதமான காரியத்தையே நடப்பிக்கும்.—GC 616 (1911).

**ஞாயிறு ஆசரிப்புச் சட்டங்கள் ரோமாபுரியைக் கனப்படுத்தும்**

அமெரிக்க ஐக்கிய நாட்டின் முன்னணியில் இருக்கின்ற சபைகள் தங்களால் பொதுவாக வைக்கப்பட்டிருக்கும் ஒரே மாதிரியான உபதேசத்தினுடைய கருத்துகளின் அடிப்படையில் ஒன்றிணைந்து, தங்களது சட்டங்களை வலியுறுத்தும்படியாகவும், தங்களது நிறுவனங்களைத் தாங்கும்படியாகவும் நாட்டிலே செல்வாக்கை உண்டாக்கும். அப்போது புராட்டஸ்டண்ட் அமெரிக்கா ரோம ஆட்சிமுறைக்கேதுவான ஒரு சொரூபத்தை உண்டுபண்ணியிருக்கும். அதற்கு இணங்காதவர்கள்மீது, கொண்டுவரப்படுகின்ற சமூகத் தண்டனைகள் தவிர்க்க இயலாத முடிவாக இருக்கும்...

புராட்டஸ்டண்ட் சபைகளின் சார்பாக ஞாயிறு ஆசரிப்பின் வலியுறுத்துதல், போப்புமார்க்க அதிகாரத்தின் ஆராதனையை வலியுறுத்துவதாகும்...

உலகப்பிரகாரமான வல்லமையினால், மத சம்பந்தமான ஒரு கடமையைச் செய்ய வலியுறுத்தும் செயல், சபைகள் தாங்களாகவே மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டுபண்ணுவதாகும். எனவே, ஞாயிறு ஆசரிப்பை அமெரிக்க ஐக்கிய நாட்டில் வலியுறுத்துவது, மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கும்படி வலியுறுத்தும் ஒரு காரியமாகும். —GC 445, 448, 449 (1911).

புராட்டஸ்டண்ட் மார்க்கம் ரோம வல்லமையின் கரத்தைப் பற்றிப்பிடிக்கத்தக்கதாக, பெரும் பிளவிற்கு அப்பாலும் தனது கரத்தை நீட்டும்;

புராட்டஸ்டண்டுகள் ஆவிமார்க்கத்தின் கரங்களைப் பற்றிப்பிடிப்பதற்காக, அந்தப் படுகுழிக்கு அப்பாலும் கரங்களை நீட்டுவார்கள். இந்த முக்கூட்டு ஐக்கியத்தின் செல்வாக்கின்கீழ், புராட்டஸ்டண்ட் மற்றும் குடியரசு நாடான நமது நாடு (அமெரிக்கா) அதன் அரசியலமைப்பின் ஒவ்வொரு கொள்கையையும் மறுத்துப்போடும்பொழுதும், போப்பாதிக்கப் பொய் உபதேசங்களையும் வஞ்சகங்களையும் பரப்புவதற்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்யும்பொழுதும், சாத்தான் தனது அற்புதக் கிரியைகளை நடப்பிக்கும் நேரமும், உலகத்தின் முடிவும் சமீபித்துவிட்டது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.—5T 451 (1885).

**ரோம் தனது இழந்துபோன வல்லமையை மீண்டும் பெறும்**

நாம் கடைசி இக்கட்டை நெருங்கும்போது, கர்த்தருடைய கருவிகளாகிய அவரது மக்கள் மத்தியில், ஒருமைப்பாடும் ஐக்கியமும் இருக்கவேண்டிய அந்த நேரம் மிக முக்கியமான நேரமாகும். உலகம் புயலாலும் யுத்தத்தாலும் வேற்றுமை உணர்வுகளாலும் நிறைந்திருக்கின்றது. இருப்பினும் போப்பு வல்லமை என்னும் ஒரு தலைமையின் கீழாக, தேவனுடைய சாட்சிகளாகிய அவரது பிள்ளைகளுக்கு எதிர்த்துநிற்பதன் மூலம், அவரையே எதிர்த்து நிற்க மனிதர்கள் ஒன்றுபடுவார்கள். இந்த ஐக்கியம் மாபெரும் மருள விழுகைக்காரனால் உறுதியாக்கப்பட்டிருக்கும். —7T 182 (1902).

குடியரசுக் கொள்கைகளின்மீது (அமெரிக்கா) அரசாங்கத்தின் அஸ்திபாரம் போடப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிக்கக் கட்டாயப்படுத்தும் சட்டங்கள் அக்கொள்கைகளிலிருந்து தேசிய அளவில் மருளவிழும் நிலையைக் கொண்டுவரும். போப்பு மார்க்கத்தின் மதம் ஆட்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். தேவனுடைய பிரமாணம் பயனற்றதாக ஆக்கப்படும்.—7MR 192 (1906).

போப்புமார்க்கத்தின் வெற்றிக்குப் பெரும் அறிவின் அடர்த்தியான இருண்ட நாள் மிகச் சாதகமானது என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அப்படியிருந்தபோதிலும், பெரும் அறிவின் ஒளிமிக்க நாளும் அதற்குச் சமமாக, அதன் வெற்றிக்குச் சாதகமாக உள்ளது என்பதற்கான நடைமுறை விளக்கம் தரப்பட்டுள்ளது.—4SP 390 (1884).

ரோமன் கத்தோலிக்க சபைக்கும் அதன் பயனைப் பெறும் அமைப்புகளுக்கும் அரசாங்கத்தின் ஆதரவு தேவை என்று கோரும் இயக்கங்கள் இப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாட்டில் முன்னேறி வருகின்றன. இக்காரியங்களில் புராட்டஸ்டண்டுகள், போப்புமார்க்க வாதிகளின்

அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றனர். அதுமட்டுமல்ல, பழைய உலகத்தில் போப்புமார்க்கம் இழந்து விட்ட மேலாதிக்கத்தை புராட்டஸ்டண்ட் அமெரிக்காவில் மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி புராட்டஸ்டண்டுகள் போப்புமார்க்கத்துக்கென்று கதவைத் திறந்துகொண்டிருக்கின்றனர்.—GC 573 (1911).

**தேசிய ஞாயிறு ஆசரிப்புச் சட்டம் என்றால்**
**தேசிய மருளவிழுகை என்று பொருள்**

சட்டமியற்றுபவர்கள், பொதுமக்களிடையே மதிப்பையும் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும்படியாக, ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்திற்கான கோரிக்கைக்கு இணங்குவார்கள்… தேவனுடைய பிரமாணத்தின் மீறுதலாக, போப்புமார்க்கத்தின் அமைப்பை சட்டத்தின்மூலம் நடைமுறைப் படுத்துவதிலே, நமது நாடு (USA) நீதியினின்று முற்றிலுமாகத் தனது தொடர்பைத் துண்டித்துக்கொள்ளும்…

எருசலேமிற்கு வரப்போகின்ற அழிவைச் சுட்டிக்காட்டத்தக்கதாக, ரோம சேனை எருசலேமை நெருங்கிவரும் சம்பவம் சீடர்களுக்கு ஒரு அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அதைப்போன்று, தேவனுடைய பொறுமை எல்லையை எட்டிவிட்டது என்பதை இந்த மருளவிழுகை ஒரு அடையாளமாக நமக்குக் காட்டுகிறது.—5T 451 (1885).

வாரத்தின் முதலாம் நாளை பரிசுத்த ஓய்வுநாளாக ஆசரிக்க மாட்டோம் என்று நாம் உறுதியான ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். ஏனெனில் அது யேகோவா தேவனால் ஆசிர்வதிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட நாளல்ல. ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்தமாக ஆசரிப்பதின்மூலம், நம்மை நாமே மாபெரும் வஞ்சகனின் பக்கத்தில் வைத்துக்கொள்கின்றோம்…

தேவனுடைய பிரமாணம் பயனற்றதாய் ஆக்கப்படும்போதும், மருளவிழுகை ஒரு நாடுதழுவிய பாவமாக மாறும்போதும், கர்த்தர் தமது ஜனங்கள் சார்பாகக் கிரியைசெய்வார்.—3SM 388 (1889).

அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்கள் தயவுபெற்ற மக்களாவர். ஆனால் அவர்கள், மத சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி, புராட்டஸ்டண்ட் கொள்கைகளை விட்டுக்கொடுத்து, போப்பு மார்க்கத்திற்கு உடன்பாட்டைத் தெரிவிக்கும்போது, அவர்களது அக்கிரமத்தின் அளவு நிறைவை அடையும். அப்போது, “நாடு தழுவிய மருளவிழுகை” பரலோகத்தின் புத்தகங்களிலே பதிவுசெய்யப்படும்.—RH May 2, 1893.

**தேசிய மருளவிழுகையைப் பின்தொடரும் தேசிய அழிவு**

மனிதரின் மார்க்க சம்பந்தமான உரிமைகளிலே நமது நாடு (அமெரிக்கா) அவர்களது மனச்சாட்சியைக் கட்டுப்படுத்துவதற்கு, தனது சட்டமன்றங்களிலே சட்டங்களை இயற்றி, ஞாயிறு ஆசரிப்பை வலியுறுத்தி, ஏழாம்நாளை ஓய்வுநாளாக ஆசரிப்பவர்களுக்கு எதிராக ஒடுக்கும் வல்லமையைக் கொண்டுவரும்போதும், நமது தேசத்திலே தேவனுடைய பிரமாணம் அனைத்துக் குறிக்கோள்களிலும் நோக்கங்களிலும் பயனற்றதாக ஆக்கப்படும்போதும், நாடு தழுவிய மருள விழுகை ஏற்படும்; அதைத் தொடர்ந்து நாடு தழுவிய அழிவு வரும்.—7BC 977 (1888).

நாடு தழுவிய மருளவிழுகையின்பொழுது, நாட்டின் அதிகாரிகள் அனைவரும் பாவ மனுஷனின் பக்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டு சாத்தானின் திட்டப்படி செயல்படுவார்கள். அப்போது அவர்களது அக்கிரமத்தின் அளவு நிரம்பியிருக்கும். இப்படிப்பட்ட நாடு தழுவிய மருள விழுகை, நாடு தழுவிய அழிவிற்கு அடையாளமாகும்.—2SM 373 (1891).

ரோமன் கத்தோலிக்கக் கொள்கைகள், நாட்டின் பாதுகாப்பு மற்றும் கவனிப்பிற்கு ஏற்ற வகையில் எடுத்துக்கொள்ளப்படும். இந்த நாடு தழுவிய மருளவிழுகை, நாடுதழுவிய அழிவினால் வெகு விரைவாகத் தொடரப்படும். —RH June 15, 1897.

தங்களது முன்னோர்கள் எதற்காக எதிர்த்து, கொடிய உபத்திர வங்களை சகித்து, போப்பு மார்க்கத்திலிருந்து வெளியே வந்தார்களோ, அதே கொள்கைகளை புராட்டஸ்டண்ட் சபைகள் விட்டுக்கொடுத்து, ஒரு பொய்யான மார்க்கத்தை நிலைநிறுத்த உலக வல்லமையோடு ஒன்று சேரும். அப்போது நாடும் சபையும் ஒன்றிணைந்த அதிகாரத்தினால், போப்புமார்க்கத்தின் ஓய்வுநாள வலியுறுத்தப்படும். அப்போது நாடுதழுவிய அழிவில் மாத்திரமே முடிவடையக்கூடிய, நாடுதழுவிய ஒரு மருளவிழுகை ஏற்படும்.—Ev 235 (1899).

சபையின் நிறுவனங்களை நிலைநிறுத்தவும், சட்டங்களை வலியுறுத்தவும், அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தும்— அப்போது புராட்டஸ்டண்ட் அமெரிக்கா, போப்புமார்க்கத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டுபண்ணியிருந்திருக்கும். நாடுதழுவிய ஒரு மருளவிழுகை உண்டாகும்; நாடுதழுவிய அழிவிலேதான் அது முடிவடையும்.—7BC 976 (1910).

## உலகளாவிய ஞாயிறு சட்டம்

வரலாறு மீண்டும் திரும்பும்; பொய்யான மார்க்கம் உயர்த்தப்படும். பொதுவான ஒரு வேலைநாளான, எந்த ஒரு பரிசுத்தத்தையும் பெற்றிராத வாரத்தின் முதலாம் நாள் பாபிலோனிலே நிறுத்தப்பட்ட சிலையைப்போல

நிலைநிறுத்தப்படும். எல்லா நாடுகளும், எல்லா பாஷைக்காரரும், எல்லா ஜனக்கூட்டத்தாரும், இந்தப் போலியான ஓய்வுநாளை ஆராதிக்கும்படியாக கட்டளை கொடுக்கப்படுவர்… இந்த நாளை ஆராதிக்க வேண்டுமென்று வலியுறுத்தப்படும் சட்டம், உலகம் முழுவதற்கும் சென்றடைய இருக்கின்றது. —7BC 976 (1897).

மத சுதந்திரத்தைப் பெற்றிருக்கும் நாடாகிய அமெரிக்கா, போப்பு மார்க்கத்தோடு இணைந்து பொய்யான ஓய்வுநாளை கனப்படுத்தும்படி மக்களைக் கட்டாயப்படுத்தி அவர்கள் மனச்சாட்சியை வற்புறுத்தும்போது, இந்த பூமியின் மீதிருக்கின்ற ஒவ்வொரு தேசத்தின் மக்களும், அவளது முன்மாதிரியைப் பின்பற்றத்தக்கதாக வழிநடத்தப்படுவார்கள்.—6T 18 (1900).

உலகம் முழுவதும் பங்கு வகிக்கக்கூடிய இந்த மாபெரும் கடைசிப் போராட்டத்தில், ஓய்வுநாளைப் பற்றின சர்ச்சைக்குரிய ஒரு கேள்வி முக்கிய விஷயமாக இருக்கும்.—6T 352 (1900).

வெளிநாடுகளான மற்ற நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாதிரியைப் பின்பற்றும். அமெரிக்கா முன்நின்று நடத்திச் சென்றாலும், உலகத்தின் எல்லாப் பகுதியிலும் இருக்கின்ற நமது மக்கள்மீது, மேலும் இதேபோன்ற இக்கட்டு வரும்.—6T 395 (1900).

உண்மைக்குப் பதிலாகப் பொய்யை நிலைநாட்டுவதே நாடகத்தின் கடைசிக் காட்சியாக இருக்கும். உண்மைக்குப் பதிலாக நிலைநாட்டப்பட்ட பொய்யான இந்தச் செயல் உலகளாவியதாக மாறும்போது, தேவன் தம்மை வெளிப்படுத்துவார். மனிதனுடைய சட்டதிட்டங்கள் தேவனுடைய பிரமாணங்களுக்கு மேலாக உயர்த்தப்படும்போதும், இந்த உலகத்தின் வல்லமைகள் வாரத்தின் முதல்நாளை கைக்கொள்ளவேண்டுமென்று மனிதர்களைக் கட்டாயப்படுத்த முயற்சிக்கும்போதும், தேவன் கிரியை செய்யவேண்டிய நேரம் வந்துவிட்டதென்று அறிந்துகொள்ளுங்கள்.—7BC 980 (1901).

தேவனுடைய பிரமாணத்திற்குப்பதிலாக மனிதனுடைய சட்டங்களையும், வேதாகம ஓய்வுநாளின் இடத்திலே ஞாயிற்றுக் கிழமையை, மானிட அதிகாரத்தின்மூலமாக மாத்திரம் உயர்த்திப் பிடித்தல் இந்த நாடகத்தின் கடைசி காட்சியாக இருக்கும். தேவனுடைய பிரமாணத்திற்குப் பதிலாக வைக்கப்பட்ட இந்தச் சட்டம் உலகளாவியதாகும்போது தேவன் தம்மை வெளிப்படுத்துவார். பூமியைக் கடுமையாக அசைக்கும்படியாக, தேவன் தமது மாட்சிமையில் எழும்புவார்.—7T 141 (1902).

### ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்தை முழு உலகமும் ஆதரிக்கும்

துன்மார்க்கர்… தங்களிடம் சத்தியம் இருப்பதாகவும், அற்புதங்கள் தங்களுக்குள்ளே நடப்பதாகவும், பரலோகத்திலிருந்து வந்த தேவதூதர்கள் தங்களோடு பேசுவதாகவும் நடப்பதாகவும், அதினிமித்தமே பெரிய அடையாளங்களும் வல்லமையும் அற்புதங்களும் அவர்கள் மத்தியில் நடைபெறுவதாகவும், இதுதான் தாங்கள் அநேக நாட்களாக எதிர்பார்த்திருந்த தற்காலிக ஆயிர வருட அரசாட்சி என்பதாகவும் அறிவிப்பார்கள். முழு உலகமும் மனமாற்றமடைந்து, ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்திற்கு இசைவாய் இருந்தது.—3SM 427, 428 (1884).

உலகம் முழுவதும் ஏழாம்நாள் அட்வென்டிஸ்ட்டுகளுக்கு விரோதமாகத் தூண்டப்பட்டு, பகைநிறைந்து காணப்படும். இந்த அந்திக் கிறிஸ்துவினுடைய வல்லமையின் அமைப்பாகிய, ஞாயிறு ஆசரிப்பு என்ற அமைப்பை மதிக்காமலும், போப்பாதிக்கத்துக்குத் தலைவணங்காமலும் இருப்பதால் இவ்வாறு நடக்கும்.—TM 37 (1893).

தேவனுடைய பிரமாணத்தைக் காலின்கீழ் மிதிப்பவர்கள், மனிதச் சட்டங்களை ஏற்படுத்தி, அதை மக்கள் ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்துவார்கள். மனிதர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து, என்ன செய்ய வேண்டும் என்பதைத் திட்டம்பண்ணுவார்கள். உலகம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கின்றது. அப்படியிருக்கும்போது, சொற்பப்பேராயிருக்கின்ற இந்த மக்கள் மட்டும் ஏன் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செய்யக்கூடாது? என்று அவர்கள் கேட்பார்கள்.—Ms 163, 1897.

### போராட்டம் கிறிஸ்தவத்தில் மையம் கொண்டிருக்கும்

கிறிஸ்தவ உலகம் என்றழைக்கப்படுகின்ற உலகமே, தீர்மானிக்கின்ற மாபெரும் செயல்களுக்கான அரங்கமாக இருக்கப்போகின்றது. அதிகாரத்தில் இருக்கும் மனிதர்கள், போப்புமார்க்கத்தின் மாதிரியைப் பின்பற்றி, மக்களின் மனச்சாட்சியை கட்டுப்படுத்தும்படியாக சட்டங்களை இயற்றுவார்கள். பாபிலோன் தனது வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை சகல ஜாதிகளும் குடிக்கும்படிச் செய்யும். எல்லா நாடுகளும் இதிலே பங்கேற்கும். இந்த நேரத்தைக் குறித்து, வெளி. 18:3–7 17:13,14–ல் “இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்” என்று யோவான் கூறுகின்றார். அப்போது, உலகளாவிய ஒன்றுபட்ட ஒரு ஒப்பந்தமும், சாத்தானிய வல்லமைகளின் அரசியல் கூட்டாகிய மாபெரும் ஒரு ஒற்றுமையும் அங்கு இருக்கும். மேலும், “இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்.” கடந்த காலத்திலே, ரோமானியத்துவத்தின் மத ஆராதனைகளையும் சடங்குகளையும், அனுசரித்து நடக்க மறுத்தவர்களை,

போப்புமார்க்கமானது எப்படி உபத்திரவப்படுத்தி செயல்பட்டதோ, அதேபோன்ற அதிகாரமிக்க அடக்குமுறை வல்லமை—மனச்சாட்சியினுடைய அதிகார ஆணையின்படி தேவனைத் தொழுதுகொள்ள ஏற்றவாறு இருக்கின்ற—மத சுதந்திரத்திற்கு எதிராகச் செயல்படும்.—3SM 392 (1891).

விசுவாசத்திற்கும் அவிசுவாசத்திற்கும் இடையே நடக்கின்ற இந்த மாபெரும் போராட்டத்திலே, கிறிஸ்தவ உலகம் முழுவதும் ஈடுபடுத்தப்படும். —RH Feb. 7, 1893.

கிறிஸ்தவ உலகம் முழுவதும் இரு பெரும் பிரிவுகளாக, அதாவது தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொண்டு இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தை உடையவர்களாகயிருக்கும் ஒரு பிரிவாகவும், மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கி அதன் முத்திரையைத் தரித்துக்கொள்ளும் மற்றொரு பிரிவாகவும் பிரிக்கப்படும்.—GC 450 (1911).

பரிசுத்த ஓய்வுநாளைக் குறித்த விஷயம் கிறிஸ்தவ உலகமெங்கும் விவாதத்திற்குரிய விஷயமாக ஆகும்போது, மதத்தலைவர்களும் அரசாங்க அதிகாரிகளும் ஒன்றுசேர்ந்து ஞாயிறு ஆசரிப்பைக் கட்டாயமாக்கும்போது, ஜனங்களிலே சிறுகூட்டத்தினராகிய ஒரு சாரார் இந்த விஷயத்தில் உலகத்தோடு ஒத்துப்போகப் பிடிவாதமாய் மறுப்பதால், அவர்களை உலகமே ஒட்டுமொத்தமாக சபிக்கும்.—GC 615 (1911).

கிறிஸ்தவ உலகத்தின் வெவ்வேறு அதிகாரிகளால் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு எதிராக உத்தரவு கொடுக்கப்படும்போதும், அரசாங்கத்தின் பாதுகாப்பை அவர்களுக்கு விலக்கி, அவர்களை அழித்துப் போடுபவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அவர்களை ஒப்புக்கொடுக்கும்போதும், தேவனுடைய மக்கள் பட்டணங்களிலிருந்தும் கிராமங்களிலுமிருந்தும் ஓடிப்போய், சிறுசிறு கூட்டங்களாக ஒன்று சேர்ந்து, பாழடைந்த ஒதுக்குப்புறமான இடங்களிலே வாசம்பண்ணுவார்கள்.—GC 626 (1911).

## எதிர்ப்பைக் காட்டாதிருங்கள்

நமது திருச்சபைகளில் இருப்பவர்கள் மிகவும் கவனமாயிரா விட்டால், சினமடைவதற்கு வழிநடத்துகிற குணக்கூறுகளை உடைய வர்களாயிருப்பார்கள். ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்வதற்கான அவர்களது சுதந்திரம் எடுத்துப்போடப்பட்டது என்று திரித்துக் கூறுவதன்மூலம் அவர்களுக்கு சினமூட்டப்படலாம். இந்த விஷயத்தில் நீங்கள் ஒரு தீவிர உணர்ச்சிக்குள்ளாக பறக்கவேண்டாம். மாறாக, எல்லாவற்றையும் ஜெபத்திலே தேவனிடம் எடுத்துச்செல்லுங்கள். ஆட்சியாளர்களின் வல்லமையை அவர் மாத்திரமே தடுக்க முடியும்.

எந்தவொரு முன்யோசனையுமின்றி நடந்துகொள்ள வேண்டாம். ஒருவரும் தங்களது சுதந்திரத்தை துர்க்குணத்திற்கு மூடலாக பயன்படுத்தாதபடி, அதைக் குறித்து ஞானமில்லாமல் பெருமைபாராட்டவேண்டாம். மாறாக, தேவனுடைய ஊழியக்காரரைப்போல, “எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள். ராஜாவைக் கனம்பண்ணுங்கள்” (1பேதுரு 2:17).

இந்த ஆலோசனை, நெருக்கடியான சூழ்நிலைகளுக்குள் கொண்டுவரப்பட இருக்கின்ற அனைவருக்கும் உண்மையிலேயே மிகவும் அவசியமானதாகும். எதிர்ப்பை வெளிப்படுத்துகிற அல்லது தீமையானது எனப் பொருள்கொள்ளக்கூடிய அளவில் எக்காரியமும் காட்டப்படக்கூடாது. —2MR 193, 194 (1898).

**ஞாயிற்றுக்கிழமையில் வேலையிலிருந்து விலகியிருங்கள்**

அமெரிக்காவின் தென்பகுதியைக்[2] குறித்த காரியத்தில், இயன்ற வரை அங்கு ஊழியம் மிக ஞானமாகவும் ஜாக்கிரதையாகவும் செய்யப்பட வேண்டும். கிறிஸ்து எப்படி வேலை செய்திருந்தாரோ, அதேபோன்ற விதத்தில் வேலை செய்யப்பட வேண்டும். மக்கள் உங்களிடத்தில் கேள்விகளைக் கேட்பதனால், ஓய்வுநாளையும் ஞாயிற்றுக் கிழமையையுங்குறித்த உங்கள் நம்பிக்கையை அவர்கள் விரைவாக கண்டுகொள்வார்கள். அப்பொழுது நீங்கள், அவர்களுக்கு சத்தியத்தைச் சொல்லி புரியவைக்கலாமே ஒழிய, நீங்கள் செய்யக்கூடிய உங்கள் வேலையிலே அவர்களது கவனத்தை ஈர்க்கும்விதத்தில் அதைச் சொல்லக்கூடாது. ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்வதன் மூலம், உங்கள் ஊழியத்தை நீங்களாகவே குறைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை…

ஞாயிற்றுக்கிழமையில் வேலையிலிருந்து விலகியிருத்தல் என்பது மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வது என்று அர்த்தம் அல்ல… உபத்திரவம் எழும்புவது போன்ற எதிர்ப்பு எங்கு மிகவும் கடுமையாக இருக்கின்றதோ, அந்த இடங்களிலே வேலை ஞாயிற்றுக்கிழமையில் செய்யப்படவேண்டியது இருக்குமானால், நமது சகோதரர்கள் உண்மையான மிஷனெரி ஊழியம் செய்வதற்கு ஒரு நல்ல தருணமாக அந்த நாளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.—SW 69, 70 (1895).

அவர்கள் உங்களிடத்தில் வந்து, “நீங்கள், ஞாயிற்றுக் கிழமைகளில் உங்கள் வேலையை நிறுத்த வேண்டும், உங்களது அச்சகங்களை மூடவேண்டும்” என்று சொல்வார்களானால், “உங்கள் அச்சகங்களில் வேலை தொடர்ந்து நடக்கட்டும்”… என்று நான் உங்களுக்குச் சொல்லமாட்டேன்.

ஏனெனில் போராட்டம் உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் இடையில் உள்ளதல்ல.—Ms 163, 1898.

ஞாயிற்றுக்கிழமையை விக்கிரகமாக்கிக் கொண்டிருக்கிற நமது அயலகத்தாரை, தீர்மானிக்கப்பட்ட முயற்சிகளினால் எரிச்சலூட்ட நம்மீது கட்டளையிடப்பட்டிருக்கிறது என்பதுபோல் நாம் எண்ணிக்கொள்ளவும் கூடாது. அந்த நாளில் (ஞாயிற்றுக்கிழமையில்) நம்மீது பணியை வருவித்துக்கொண்டு, அவர்களுக்கு முன்பாக வேண்டுமென்றே பணிசெய்ய சுதந்திரம் பெற்றிருக்கிறோம் என்று காட்டிக்கொள்ளவும்கூடாது. நம்முடைய சகோதரிகள், தங்கள் துணிகளைத் துவைப்பதாக வெளிக்காட்டிக்கொள்ள, ஞாயிற்றுக்கிழமையைத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.—3SM 399 (1889).

**ஞாயிற்றுக்கிழமையில் ஆவிக்குரிய செயல்களில் ஈடுபடுங்கள்**

ஞாயிறு ஆசரிப்புச் சட்டம் வலியுறுத்தப்படும்போது, நீங்கள் என்ன செய்யவேண்டும் என்ற உங்களது கேள்விக்கு நான் பதில் கொடுக்க முயற்சிக்கின்றேன்.

ஒரு சமயத்தில், நெருங்கிக்கொண்டிருக்கிற ஒரு உபத்திரவத்தை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுபோலவே நாங்கள் எதிர்பார்த்திருந்தபோது கர்த்தரால் எனக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சம் என்னவெனில், கீழிருந்து வரக்கூடிய ஒரு வல்லமையால் ஞாயிறு ஆசரிப்பை வலியுறுத்துவதற்கென்று மக்கள் ஏவப்படும்பொழுது, ஏழாம்நாள் அட்வெண்டிஸ்ட் மக்கள் அந்த நாளில் தங்களது சாதாரண வேலையைச் செய்யாதபடிக்கு விலகியிருந்து, அந்த நாளை மிஷனெரி வேலைக்கான முயற்சிஎடுப்பதற்காக தத்தம் செய்வதின் மூலம் தங்களது ஞானத்தைக் காட்ட வேண்டும் என்பதாகும்.

ஞாயிறு ஆசரிப்புச் சட்டங்களை வெளிப்படையாக எதிர்த்து நிற்பதென்பது, அந்தச் சட்டத்தை வலியுறுத்தும் மதவெறியர்களின் உபத்திரவப்படுத்துகின்ற காரியத்திலே அவர்களை இன்னும் உறுதிப் படுத்தும். நீங்கள் சட்டத்தை மீறுபவர்கள் என்று உங்களை அவர்கள் அழைக்கும்விதமாக, எவ்விதத்திலும் நீங்கள் அவர்களுக்கு இடமளிக்க வேண்டாம்... குற்றமாகக் கருதப்படக்கூடிய வேலையைச் செய்யாமல் தன்னை விலக்கிக்கொண்டு, சமாதானத்தைக் காத்துக்கொள்ளக்கூடிய ஞானத்தை உணர்ந்தவனாயிருக்கின்றேன் என்று வெளிக்காட்டுவதினால் ஒருவன் மிருகத்தின் முத்திரையைப் பெறுவதில்லை...

கர்த்தருக்காக செய்து முடிக்கக்கூடிய அதிகமான வேலையை, பல்வேறு வழிகளில் கொண்டுசெல்லும்படியாக ஞாயிற்றுக்கிழமையைப்

பயன்படுத்திக்கொள்ளலாம். அந்நாளிலே திறந்தவெளிக் கூட்டங்கள், வீட்டுக்கூட்டங்கள் போன்றவை நடத்தப்படலாம். வீடுவீடாகச் சென்று ஊழியம் செய்யலாம். எழுதக்கூடியவர்கள், தங்களது கட்டுரைகளை எழுதுவதற்காக இந்த நாளை ஒதுக்கலாம். எப்பொழுதெல்லாம் முடியுமோ அப்பொழுதெல்லாம், மதசம்பந்தப்பட்ட ஆராதனைகளை ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தலாம். இப்படிப்பட்ட கூட்டங்களை மிகவும் சுவாரஸ்யமானதாக ஆக்குங்கள். உண்மையான எழுப்புதல் பாடல்களைப் பாடுங்கள். நமது இரட்சகருடைய அன்பைக்குறித்து வல்லமையோடும் நிச்சயத்தோடும் பேசுங்கள்.—9T 232, 233 (1909).

வெவ்வேறு இடங்களில் கூட்டங்கள் நடத்துவதற்காகவும், மருத்துவ மிஷனெரி வேலை செய்வதற்காகவும், மாணவர்களை வெளியே அழைத்துச் செல்லுங்கள். அந்நாளிலே அவர்கள் மக்களை அவர்களது இல்லங்களில் கண்டு, சத்தியத்தைக் கொடுப்பதற்கான மிகச்சிறந்த ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இவ்விதமாக, ஞாயிற்றுக்கிழமையை செலவழித்தல் கர்த்தருக்கு எப்பொழுதுமே ஏற்றதாகும்.—9T 238 (1909).

### எதிர்ப்பினால் சத்தியத்தின் அழகு தெளிவாகக் காட்டப்படும்

பிரமாணத்தை ஒன்றுமில்லாமல் ஆக்க சபையும் உலகமும் ஒன்றுசேரும்போது, கர்த்தருக்குக் கீழ்ப்படிகின்றவர்களின் வைராக்கியம் அதிகமாகும். தேவனுடைய பிரமாணங்களுக்கு எதிராக எழும்பும் அனைத்து எதிர்ப்புகளும் சத்தியத்தின் முன்னேற்றத்திற்கான வழியை உண்டுபண்ணும். மேலும் சத்தியத்தைச் சொல்பவர்கள், மனிதர்களுக்கு முன்பாக அதனுடைய மதிப்பைக்குறித்து எடுத்துச் சொல்வதற்கான வல்லமையை அது அளிக்கும். எதிர்ப்பும் உபத்திரவமும் மிகத்தெளிவாக வெளிப்படுத்திக்காட்டுவதுபோல, சத்தியத்திலிருக்கின்ற அழகையும் வல்லமையையும் வேறு எதுவும் வெளிப் படுத்திக்காட்ட முடியாது.—13MR 71, 72 (1896).

ஞாயிறு ஆசரிப்பை வலியுறுத்துவதற்காக அப்படிப்பட்ட ஒரு முயற்சி எடுக்கப்படுகின்ற இந்தக் காலம், போலியான ஓய்வுநாளுக்கு எதிராக உண்மையான ஓய்வுநாளைக்குறித்து உலகிற்கு அறிவிக்கின்ற மிகச்சரியான சந்தர்ப்பமாகும். கர்த்தர் தமது அநுக்கிரகத்தின்படி நமக்கு முந்திச் சென்றுகொண்டிருக்கிறார். நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாளைக் குறித்த சத்தியம் சட்டசபைக் கூட்டங்களுக்கு முன்னிலையில் கொண்டுவரப்படத்தக்கதாக, தேவன் இந்த ஞாயிற்றுக்கிழமையைக் குறித்த சர்ச்சைக்குரிய கேள்வி முன்னுக்குக் கொண்டுவரப்படுவதை அனுமதித்திருக்கின்றார். இப்படியாக, தேசத்தின் தலைவர்களாய் செயலாற்றுகின்ற முதன்மையான மனிதர்கள், தங்களது கவனத்தை

தேவனுடைய வார்த்தையின் உண்மையான ஓய்வுநாளைப் பற்றிச் சாதகமாகச் சொல்லப்படும் சாட்சியைக் கேட்கும்படியாக கொண்டுவரப்படுவர்.—2MR 197 (1890).

**மனுஷருக்குக் கீழ்ப்படிவதைக்காட்டிலும்**
**நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்**

சத்தியத்தின் ஆதரவாளர்கள், தேவனுடைய வார்த்தையின் வெளிப்படையான ஒரு எதிர்பார்ப்பை அலட்சியப்படுத்துவதா அல்லது தங்களது சுதந்தரத்தை விட்டுக்கொடுப்பதா என்பதைக்குறித்து தெரிந்தெடுக்கும்படியாக இப்பொழுது அழைக்கப்பட்டிருக்கின்றனர். நாம் தேவனுடைய வார்த்தையை விட்டுக்கொடுத்து, மனிதனுடைய பழக்கவழக்கங்களையும் சமுதாய கலாச்சாரங்களையும் ஏற்றுக்கொள்வோமானால், மற்ற மனிதர்கள் மத்தியில் சேர்ந்து வாழ்வதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும், அனுமதிக்கப்படுவோம், நமது உரிமைகளும் மதிக்கப்பட்டிருக்கும். மாறாக, தேவனுக்கு உண்மையாயிருக்கும் காரியத்தில் நாம் தொடர்ந்து இருப்போமானால், அது மனிதர்கள் மத்தியில் நமது உரிமைகளைத் தியாகம் செய்வதாகவே இருக்கும். ஏனெனில், தேவனுடைய பிரமாணத்தின் விரோதிகள், மார்க்க சம்பந்தமான விசுவாசக் காரியங்களிலும், மனிதர் களுடைய மனச்சாட்சியைக் கட்டுப்படுத்தும் காரியங்களிலும், நாம் தனித்து முடிவெடுப்பதை நசுக்கிப்போடும்படியாக ஒன்றாக இணைந்திருக்கின்றனர்…

தேவனுடைய மக்கள், மானிட அரசாங்கத்தை தெய்வீக நியமத்தின் ஒரு மதச்சடங்காக அங்கீகரித்து, அதன் அதிகாரம் அதனுடைய சட்டப்பூர்வமான எல்லைக்குள்ளாக எவ்வளவு காலம் உபயோகப் படுத்தப்படுமோ அதுவரைக்கும், அதனை (அரசியல் சட்டத்தை) ஒரு பரிசுத்தமான கடமையாக, எழுத்தினாலும் மாதிரியினாலும் அதற்குக் கீழ்ப்படியும்படியாக போதிப்பர். ஆனால் தேவன் உரிமைகோரும் காரியத்துக்கு எதிராக அதனுடைய உரிமைகோருதல் இருக்கும்போது, மனிதனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தை மானிடச் சட்டங்கள் அனைத்திற்கும் மேலாக, ஒரு அதிகாரமானதாக அங்கீகரிக்கப்பட்டு கீழ்ப்படியச் செய்யப்பட வேண்டும். "கர்த்தர் இப்படிச் சொல்லுகின்றார்" என்ற ஒரு கூற்று, "சபையும் அரசாங்கமும் இப்படிச் சொல்கின்றது" என்ற கூற்றிற்காக ஒதுக்கிவைக்கப்படக்கூடாது. உலகின் பெரும் அதிகாரம் கொண்டவர்களின் அனைத்து மகுடங்களுக்கும்மேலாக, கிறிஸ்துவின் கிரீடம் உயர்த்திப் பிடிக்கப்படவேண்டும்.—HM Nov. 1, 1893.

சாத்தானுக்கு முதன்மையான நிலையை மனிதர்கள் கொடுக்கச்

சம்மதித்தால், அவன் அவர்களுக்கு உலகத்தின் இராஜ்யங்களையெல்லாம் தருகின்றான். அநேகர் இப்படிச் செய்து பரலோகத்தைத் தியாகம் செய்கின்றனர். ஆனால், பாவம் செய்வதைக்காட்டிலும் மரித்துப்போவது நலமாகும்; ஏமாற்றுவதைக்காட்டிலும் குறைவுபடுவது (வறுமையிலிருப்பது) நலமாகும்; பொய் சொல்வதைக்காட்டிலும் பசியோடு இருப்பது நலமாகும். —4T 495 (1880). ★

[1] உதவக்கூடிய பின்னனித் தகவல் மற்றும் எலன் உவைட் அவர்களின் மிக விரிவான மேற்கோள்களுக்காக பார்க்கவும்: 3SM. pp. 380–402; TC. Vol. 5, pp. 711–718.

[2] பார்க்கவும்: அமெரிக்காவின் தென்பகுதியில், 1880 மற்றும் 1890–ம் வருடங்களில், ஞாயிறு ஆசரிப்புச் சட்டம் மிகத் தீவிரமாயிருந்தது; பார்க்கவும்: American State Papers (Review & Herald, 1943), pp. 517–562.

# 10

# குறுகிய இக்கட்டுக்காலம்

## கிருபையின் காலம் முடியும் முன்பாக ஒரு இக்கட்டுக்காலம்

"பரம தரிசனங்கள்"—என்ற புத்தகத்தின் (ஆங்கிலப் பதிப்பில்) 33–ம் பக்கத்தில்: "இக்கட்டுக்காலம் துவங்கியபோது, நாங்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு புறப்பட்டுச் சென்று, ஓய்வுநாள் சத்தியத்தை முற்றிலுமாகக் கூறியறிவித்தோம்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

இந்தத் தரிசனம், 1847–ம் வருடத்தில் கொடுக்கப்பட்டபோது, வெகு சில அட்வெந்து சகோதரர்களே ஓய்வுநாளை ஆசரித்து வந்தார்கள். அவர்களிலும் வெகு சிலர் மாத்திரமே, இந்த ஓய்வுநாள் ஆசரிப்பு தேவனுடைய மக்களையும் அவிசுவாசிகளையும் பிரித்துக் காட்டும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நம்பினார்கள். இப்போது அந்தக் கருத்தின் நிறைவேறுதல் காணப்பட ஆரம்பித்திருக்கின்றது. "இக்கட்டுக்காலம் துவங்கியபோது" என்று இங்கே கூறப்படுவது, வாதைகள் ஊற்றப்படுவதற்குத் துவங்கும் காலத்தைக் குறிப்பதல்ல; கிறிஸ்து ஆசரிப்புக் கூடாரத்திற்குள் இருக்கும்போது, வாதைகள் ஊற்றப்படுவதற்கு சற்று முன்பாக உள்ள குறுகிய ஒரு காலத்தைக் குறிப்பதாகும். இரட்சிப்பின் வேலை முடிவடையக்கூடிய அந்த நேரத்தில், இக்கட்டு பூமியின்மீது வந்துகொண்டிருக்கும், ஜாதிகள் கோபமடைவார்கள். எனினும், மூன்றாம் தூதனின் வேலை தடைபடாதபடிக்கு அவைகள் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டிருக்கும்.—EW 85, 86 (1854).

## அமெரிக்க ஐக்கிய நாட்டிலே மத சுதந்திரத்தின் முடிவு

சாத்தானுடைய ஏதுகரத்தின்மூலமாக, தேவனுடைய பிரமாணம் பயனற்றதாக ஆக்கப்படும். சுதந்திரத்தைக்குறித்து மேன்மைபாராட்டிக் கொண்டிருக்கின்ற நமது தேசத்திலே (USA), மதச் சுதந்திரம் ஒரு முடிவுக்கு வரும். ஓய்வுநாள் பற்றின சர்ச்சைக்குரிய கேள்வியைக்கொண்டு தீர்மானிக்கப்படும் இந்த போராட்டம், முழு உலகத்திலும் கிளர்ச்சி உண்டாக்குவதாக இருக்கும்.—Ev 236 (1875).

தேவனுடைய மக்களுக்கு பெரிய ஒரு நெருக்கடி காத்திருக்கின்றது. நமது நாடு வெகு சீக்கிரத்தில் வாரத்தின் முதல்நாளை ஒரு பரிசுத்த நாளாக ஆசரிக்கும்படி அனைவர்மீதும் திணிக்க முயற்சிக்கும். இப்படிச் செய்வதினால், ஓய்வுநாளாக ஆசரிக்கும்படிக்கு தங்கள் நாடு அறிவித்திருக்கின்ற அந்த நாளை (ஞாயிற்றுக்கிழமையை), மனிதர்கள் தங்களது சொந்த மனச்சாட்சியின் சத்தத்துக்கு விரோதமாய் செய்யக் கட்டாயப்படுத்தும் காரியத்தில் மனவுறுத்தல் இல்லாமல் இருப்பார்கள்.—RH Extra, Dec. 11, 1888.

ஏழாம்நாள் அட்வெண்டிஸ்ட் பிள்ளைகள், ஏழாம்நாள் ஓய்வுநாளின் காரியத்தைக்குறித்த யுத்தத்தை நடத்துவார்கள். ஐக்கிய நாடுகளிலும், இன்னும் மற்ற நாடுகளிலும் இருக்கின்ற அதிகாரிகள், தங்களது பெருமை யிலும் அதிகாரத்திலும் எழும்பிநின்று மத சுதந்திரத்தைத் தடுக்கும்படிக்கு சட்டங்களை இயற்றுவார்கள்.—Ms 78, 1897.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் புராட்டஸ்டண்ட் மக்கள், ஆவிமார்க்கத்தின் கரத்தை பற்றிப்பிடிக்கும்படிக்கு, இடைவெளியைக் கடந்து தங்களது கரங்களை நீட்டுவதில் முன்னணியில் இருப்பார்கள். ரோம வல்லமையோடு தங்கள் கைகளை இறுகப்பற்றிக்கொள்ள அவர்கள் இடைவெளியைக் கடந்து செல்லுவார்கள். ஒருங்கிணைந்த இந்த மூன்று வல்லமைகளின் செல்வாக்கின்கீழ், இந்த தேசம் (அமெரிக்கா) மனச்சாட்சியின் உரிமைகளைக் காலின்கீழ் மிதிக்கும்படியாக, ரோம அரசின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும். —GC 588 (1911).

**சபையும் அரசாங்கமும் தேவனுடைய மக்களை எதிர்க்கும்**

தேவனுடைய பரிசுத்த நாளைப் புறக்கணித்து, பாவ மனுஷனால் ஏற்படுத்தப்பட்ட ஓய்வுநாளை உயர்த்தும்படி போடப்படுகிற தேசிய சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல், தேசிய ஆலோசனைச் சங்கங்களின் ஆணைக்குத் தலைவணங்காத அனைவரும் போப்புமார்க்கத்தின் ஒடுக்கும் வல்லமையை மட்டுமல்ல, மிருகத்தின் சொரூபமாகிய புராட்டஸ்டண்டு உலகத்தின் ஒடுக்கும் வல்லமையையும் உணர்வார்கள்.—2SM 380 (1886).

தேவனுடைய எச்சரிப்பின் தூதுகளைக் கேட்க மறுக்கின்ற மார்க்க சம்பந்தமான அமைப்புகள் கடுமையான வஞ்சகத்திற்குள்ளாகி, பரிசுத்த வான்களை உபத்திரவப்படுத்துவதற்கு அரசாங்க வல்லமையுடன் இணைந்துகொள்ளும். புராட்டஸ்டண்ட் சபைகள் பிரமாணத்தைக் கைக்கொள்ளுகின்ற தேவனுடைய மக்களை உபத்திரவப்படுத்துவதில், போப்பு மார்க்க வல்லமையுடன் இணைந்துகொள்ளும்…

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு இயேசு கிறிஸ்துவைக் குறித்தச் சாட்சியை உடையவர்கள்மீது யுத்தம் பண்ணுவதில், வலுசர்ப்பத்துடன் இந்த ஆட்டுக்குட்டிக்கொப்பான வல்லமை இணைந்து கொள்ளும்.—14MR 162 (1899).

சபை, அரசாங்க அதிகாரம் என்னும் பலத்த கரத்தின் உதவிக்காக வேண்டுகோள் விடுக்கும். இந்தச் செயலில் போப்புமார்க்கத்தாரும், புராட்டஸ்டண்ட் சபைகளும் ஒன்று சேர்ந்துகொள்ளும்.—GC 607 (1911).

## நீதிமன்றங்களுக்கு முன்பாக

உலக சரித்திரத்தின் கடைசி நாட்களிலே வாழ்கின்றவர்கள், சத்தியத்தினிமித்தம் உபத்திரவப்படுவதென்றால் என்ன என்பதை நன்கு அறிந்திருப்பர். நீதிமன்றங்களிலும் அநீதியே மிஞ்சியிருக்கும். நீதிபதிகளும் தேவனுடைய கற்பனைகளுக்கு உண்மையாய் இருப்பவர்களின் காரணங்களைக் கேட்க மறுப்பார்கள். ஏனெனில் நான்காவது கற்பனைக்கு ஆதரவான வாக்குவாதங்கள், பதிலளிக்கப்பட முடியாதவை என்று அவர்களுக்குத் தெரியும். அவர்கள், "நமக்கென்று ஒரு சட்டமுண்டு, நம்முடைய அந்தச் சட்டத்தின்படி அவன் சாகவேண்டும்" என்பார்கள். தேவனுடைய பிரமாணம் அவர்களுக்கு ஒன்றுமில்லாததாய் இருக்கும். ஆனால், "நம்முடைய சட்டம்" என்ற அவர்களது காரியம் அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும். இந்த மானிட சட்டத்தை மதிப்ப வர்கள் ஆதரவளிக்கப்படுவார்கள். விக்கிரக ஓய்வுநாளுக்கு தலைவணங்காதவர்களுக்கு எந்த சலுகையும் காட்டப்படமாட்டாது.—ST May 26, 1898.

வழக்குகளுக்காக நாம் நீதிமன்றங்களுக்குமுன்பாக கொண்டுவரப் படும்போது, தேவனுடன் எந்த ஒரு முரண்பாட்டையும் அது கொண்டுவராத பட்சத்தில், நமது உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்கவேண்டும். நமது உரிமைகளுக்காக நாம் மன்றாடுவதில்லை, மாறாக, நமது சேவைக்கான தேவனுடைய உரிமையை நாம் மன்றாடுகின்றோம்.—5MR 69 (1895).

## அட்வென்டிஸ்ட்டுகள் இழிவாக நடத்தப்படுவர்

கடந்துபோனயுகங்களிலே, தேவனுக்கு உண்மையாயிருந்தவர்களுக்கு எதிராக, திட்டம் தீட்டின தேர்ச்சிவாய்ந்த அதே சிந்தைதான் தேவனுக்குப் பயந்து அவரது பிரமாணத்திற்கு கீழ்ப்படிகின்றவர்களை, பூமியிலிருந்து அழித்துப்போட, இன்னமும் வகைதேடிக் கொண்டிருக்கின்றது...

இகழ்ச்சியினால் அவர்களை மூடும்படியாக ஐசுவரியம், நுண்ணறிவு, கல்வி போன்றவைகள் ஒன்றிணையும். உபத்திரவப்படுத்துகின்ற அதிகாரிகள்,

அமைச்சர்கள் மற்றும் சபை அங்கத்தினர்கள் ஒன்றுகூடி அவர்களுக்கு விரோதமாக இரகசிய உடன்படிக்கைப் பண்ணுவார்கள். குரலாலும், எழுத்தாலும், தற்பெருமையான பேச்சுக்களாலும், ஏளனத்தாலும் மற்றும் அச்சுறுத்தல்களாலும், அவர்களது விசுவாசத்தை கவிழ்த்துப்போடும்படியாக அவர்கள் முயற்சிப்பார்கள்.—5T 450 (1885).

வேதாகம சத்தியத்திற்கு நமது ஆதரவை அளிப்பதினாலே, நாம் துரோகிகள் போன்று நடத்தப்படக்கூடிய ஒரு காலம் வரும்.—6T 394 (1900).

வேதாகம ஓய்வுநாளைக் கனப்படுத்துபவர்கள், சட்டம் ஒழுங்கு ஆகியவைகளின் எதிரிகளைப்போன்று வெளிப்படையாகக் குற்றம் சுமத்தப்படுவர். அவர்கள் சமுதாயத்தின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை முறித்துப்போடுபவர்கள் என்றும், ஒழுக்கச் சீர்கேடுகளையும் நாட்டில் குழப்ப நிலையையும் உண்டுபண்ணுபவர்கள் என்றும், பூமியின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை வரவழைப்பவர்கள் என்றும் குற்றப்படுத்தப்படுவர். அவர்களது மனச்சாட்சியின் மனவுறுத்தல் வளைந்துகொடுக்காத பிடிவாதத்தன்மை என்றும், அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிற குணம் என்றும் கூறப்படும். அரசாங்கத்திடம் நன்மதிப்பில்லாதவர்கள் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டப்படுவர்.—GC 592 (1911).

அந்தத் தீங்கான நாளில், மனச்சாட்சியின் ஆளுகைக்கு ஏற்றவாறு பயமின்றி தேவனுக்கு சேவைசெய்யக்கூடிய அனைவருக்கும் தைரியமும், உறுதியும், தேவனையும் அவரது வார்த்தையையும் குறித்ததான ஒரு அறிவும் அவசியமாகும். ஏனெனில், தேவனுக்கு உண்மையாய் இருப்பவர்கள் உபத்திரவப்படுத்தப்படுவார்கள்; அவர்களது நோக்கங்கள் தவறென்று தர்க்கம் செய்யப்படும்; அவர்களது சிறந்த முயற்சிகள் தவறாகச் சித்தரிக்கப்படும்; அவர்களது பெயர்கள் தீமையாகக் கருதப்பட்டுத் தூக்கியெறியப்படும்.—AA 431, 432 (1911).

### எல்லாவிதமான உபத்திரவமும்

ரோமன் கத்தோலிக்க சபையால் புராட்டஸ்டண்ட் மார்க்கம் உபத்திரவப்படுத்தப்பட்டபோது, இயேசுகிறிஸ்துவின் மார்க்கம் ஏறக்குறைய முற்றிலும் நிர்மூலமாகிவிட்டது. புராட்டஸ்டண்ட் மார்க்கமும் போப்புமார்க்கமும் இணைந்து செயல்படும்பொழுது, உபத்திரவங்கள் மேலும் கடுமையாக இருக்கும்.—3SM 387 (1889).

கற்பனைகளைக் கைக்கொள்ளுகின்ற உண்மையான தேவனுடைய ஜனங்களின் மனச்சாட்சியைக் கெடுப்பதற்கு அவர்களை வற்புறுத்தத்தக்கதாக, மறைவான ஆயுதப் படையை ஆயிரக்கணக்கில்

அவர்கள்மீது பிரயோகப்படுத்துவதற்காக சாத்தான் வைத்திருக்கின்றான். —Letter 30a, 1892.

இப்பொழுது நடக்கக்கூடிய எதைக்குறித்தும் நாம் ஆச்சரியப்பட வேண்டிய அவசியமில்லை. பேரச்சமூட்டக்கூடிய எந்த வளர்ச்சிகளைக் குறித்தும் நாம் அதிசயிக்க வேண்டிய அவசியமுமில்லை. தேவனுடைய பிரமாணத்தை தங்களது அசுத்தமான கால்களுக்குக் கீழாக மிதித்துக் கொண்டிருப்பவர்கள், இயேசுகிறிஸ்துவை அவமானப்படுத்தி காட்டிக் கொடுத்த மனிதர்கள் பெற்றிருந்த அதே ஆவியையே பெற்றிருக்கின்றனர். தாங்கள் இப்படிச் செய்கின்றோமே என்ற எந்த ஒரு மனச்சாட்சியின் உறுத்தலும் இல்லாமல், தங்களது பிதாவாகிய பிசாசின் கிரியைகளையே அவர்கள் செய்வார்கள்.—3SM 416 (1897).

தங்கள் மனம் புதுப்பிக்கப்படவும் சத்தியத்திலே ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் விரும்புகிறவர்கள், பெந்தேகொஸ்தே நாளிலும் உடனடியாக அதற்குப் பின்பாகவும் நிகழ்ந்த ஆதிகாலத் திருச்சபை சரித்திரத்தைப் படித்துப்பாருங்கள். பவுலின் அனுபவங்களையும், மற்ற அப்போஸ்தலரின் அனுபவங்களையும் அப்போஸ்தலருடைய புஸ்தகத்தில் கவனமாகப் படியுங்கள். ஏனெனில், நமது நாட்களில் உள்ள தேவனுடைய மக்களும் அதேபோன்ற அனுபவங்களுக்குள்ளாகக் கடந்து செல்ல வேண்டும்.—PC 118 (1907).

### பூமிக்குரிய அனைத்து ஆதரவும் துண்டிக்கப்படும்

சேமித்துவைக்கப்பட்ட விலைமதிப்புமிக்க சொத்துக்களனைத்தும் விரைவில் பயனற்றதாகிவிடும். மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக் கொண்டவர்கள் தவிர, வேறு எவரும் வாங்கவும் விற்கவும் கூடாது என்ற சட்டம் பிறப்பிக்கப்படும்போது, சேர்த்துவைத்த மிகுந்த பொருள்களினால் ஒரு பிரயோஜனமுமிருக்காது. ஆனால், உலகத்திற்கு எச்சரிப்பைக் கொடுக்கத்தக்கதாக, இப்போது நம் பலத்தால் எல்லாவற்றையும் செய்யும்படியாக தேவன் நம்மை அழைக்கின்றார்.—RH March 21, 1878.

நாம் எந்த ஒரு விலைக்கும், எதையுமே விற்க முடியாத காலம் வந்துகொண்டிருக்கின்றது. மிருகத்தின் முத்திரையைப் பெற்றிருக்கும் மனிதன் தவிர, வேறு ஒருவரும் வாங்கவோ அல்லது விற்கவோ முடியாதபடி தடைசெய்யும் சட்டம் விரைவில் கொண்டுவரப்படும். கலிபோர்னியாவில், ஒரு குறுகிய காலத்திற்கு இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு அருகில் வந்திருப்பதாக நாங்கள் உணர்ந்தோம். ஆனால் இது, நான்கு காற்றுகள் அடிப்பதைப் பற்றியதான அச்சுறுத்தலாக மட்டுமே இருந்தது. நாம் தற்போது

ஆயத்தப்படாமலிருப்பதால், இன்னமும் அவைகள், நான்கு தூதர்களால் பிடித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் செய்யப்படவேண்டிய ஒரு வேலை இருக்கின்றது. அதன்பின்பு, நான்கு காற்றுகளும் பூமியின்மீது வீசும்படியாக அவைகளை விட்டுவிடும்படி தூதர்களுக்குக் கட்டளையிடப்படும்.—5T 152 (1882).

தேவனுக்கு உண்மையாயிருப்பவர்கள், சாத்தானுடன் நடக்கின்ற இந்தப் போராட்டத்தின் கடைசி மாபெரும் யுத்தத்திலே, தங்களது அனைத்துப் பூவுலக ஆதரவுகளும் துண்டிக்கப்படும் என்பதைக் காண்பார்கள். உலக வல்லமைகளுக்குக் கீழ்ப்படியும் காரியத்தில் அவர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறுவதற்கு மறுப்பதனால், வாங்கவும் விற்கவும் முடியாதபடி தடை செய்யப்படுவார்கள்.—DA 121, 122 (1898).

"உணவும் உடையும் கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயத்தினால், தேவனுடைய பிரமாணத்தை மீறுவதிலே உலகத்தாரோடு அவர்கள் (தேவனுடைய பிள்ளைகள்) சேர்ந்துகொள்வார்கள். மேலும், இந்த உலகம் முழுவதும் என்னுடைய ஆதிக்கத்திலேயே இருக்கும்"... என்று சாத்தான் கூறுகின்றான்.—PK 183, 184 (c. 1914).

### தங்களது விசுவாசத்திற்காக சிலர் சிறைபடுத்தப்படுவர்

கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்தக் குலைச்சலாக்க மறுப்பதினாலே, சிலர் சிறையில் அடைக்கப்படுவார்கள்.—PC 118 (1907).

சத்தியத்தின் பாதுகாவலர்கள் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளைக் கனப்படுத்த மறுக்கும்போது, அவர்களில் சிலர் சிறையில் அடைக்கப் படுவார்கள்; சிலர் நாடுகடத்தப்படுவார்கள்; சிலர் அடிமைகளாக நடத்தப்படுவார்கள். மானிட ஞானத்துக்கு, இவையனைத்தும் இப்போது நடக்கக்கூடியது அல்ல என்று தோன்றும். ஆனால், இப்போது அனைத்தையும் தடைசெய்துகொண்டிருக்கின்ற தேவ ஆவியானவர் மனிதர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்படும்போது, அவர்கள் தெய்வீகக் கோட்பாடுகளை வெறுக்கின்ற சாத்தானின் கட்டுப்பாட்டின் கீழாக இருப்பார்கள். அப்போது, விநோதமான முன்னேற்றங்கள் அங்கு இருக்கும். தேவனுக்குப் பயப்படும் பயமும், அவர்மேல் இருக்கின்ற அன்பும் நீக்கப்படும்போது, இருதயம்மிகவும் கொடூரமானதாக மாறும்.—GC 608 (1911).

கிறிஸ்துவினிமித்தம்உபத்திரவப்படும்படிநாம்அழைக்கப்படும்பொழுது, ஒரு சிறு குழந்தை தனது பெற்றோரை நம்புவதுபோல, நாம் ஆண்டவரில் நம்பிக்கைக்கொண்டிருந்து, சிறைக்குச் செல்வதற்கும் ஆயத்தம் உள்ளவர்களாயிருப்போம். நாம் தேவனிடத்தில் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள இதுவே சரியான நேரமாகும்.—OHC 357 (1892).

### அநேகர் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுவர்

தேவனிடத்தில் மிகவும் நெருங்கிவருவதே, நாம் செய்கின்ற மிக உன்னதமான காரியமாகும். ஒருவேளை, சத்தியத்திற்காக இரத்த சாட்சிகளாய் நாம் மரிக்கவேண்டுமென்று ஆண்டவர் நம்மை வைத்திருப்பாரானால், அதுவே அநேகரை சத்தியத்திற்குள் கொண்டுவருவதற்கு வழியாயிருக்கும். —3SM 420 (1886).

அநேகர் சிறையில் அடைக்கப்படுவார்கள், அநேகர் தங்கள் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள பட்டணங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் தப்பியோடிவிடுவார்கள். இன்னும் அநேகர் சத்தியத்தைப் பாதுகாக்கவேண்டி, கிறிஸ்துவிற்காக நிற்பதினால் இரத்தசாட்சிகளாய் மரிப்பார்கள்.—3SM 397 (1889).

சிறைதண்டனை மற்றும் சொத்துக்களையும் உயிரையும்கூட இழக்கக்கூடிய அபாயகரமான நிலையில், தேவனுடைய பிரமாணத்தைப் மெய்ப்பித்துக்காட்டுவதற்காகத் தொடர் போராட்டமான ஒரு காரியம் நமக்கு முன்பாக இருக்கின்றது.—5T 712 (1889).

தெய்வீகச் சட்டத்தை மீறி, மானிடச் சட்டங்களுக்குப் பணிந்துபோக வேண்டும் என்று மனிதர்கள் கட்டாயப்படுத்தப்படுவார்கள். தேவனுக்கு உண்மையாயிருப்பவர்கள் பயமுறுத்தப்படுவார்கள், வெளிப்படையாக குற்றஞ்சுமத்தப்படுவார்கள், ஆபத்தானவர்கள் என்று வெளிப்படையாக அறிவிக்கப்படுவார்கள். அவர்கள், “பெற்றோராலும், சகோதரராலும், உற்றாராலும், நண்பர்களாலும் மரணத்தைச் சந்திக்கும்படியாகக்கூட காட்டிக்கொடுக்கப்படுவார்கள்.”—PK 588 (c. 1914).

முந்தைய காலத்தின் இரத்தசாட்சிகளாகிய அவர்கள் இருந்த நிலைக்குள்ளாக நாம் கொண்டுவரப்படும்வரையிலும், அவர்களுடைய தைரியமும், துன்பத்தைத் தாங்கும் மனபலமும், இப்பொழுது நமக்கு இருக்க வேண்டிய அவசியமில்லை… மீண்டுமாக ஒரு உபத்திரவம் வருமானால், உண்மையான ஒரு வீரச்செயலைக் காட்டுவதற்கு, ஆத்துமாவின் ஒவ்வொரு வல்லமையையும் எழுப்பத்தக்கத் தேவையான கிருபை அளிக்கப்படும்.— OHC 125 (1889).

அப்படிப்பட்ட கிருபை அவசியப்படும்வரைக்கும், இரத்த சாட்சிகளின் தைரியமும் மனபலமும் சீஷர்களுக்கு அளிக்கப்படவில்லை.—DA 354 (1898).

### உபத்திரவத்தின் கீழாக எப்படி உறுதியாய் நிற்பது

இயேசுகிறிஸ்துவின் கரங்களைத் தவிர, மற்ற அனைத்துக்

கரங்களையும் நாம் விட்டுவிடவேண்டும் என்பதை நாம் கண்டு கொள்வோம். சிநேகிதர்கள் தங்களது நம்பிக்கை துரோகத்தை நிரூபித்து நம்மைக் காட்டிக்கொடுப்பார்கள். சத்துருவினால் வஞ்சிக்கப்பட்ட உறவினர்களும், நமது விசுவாசத்தை நாம் மறுதலித்துவிடுவோம் என்று எதிர்பார்த்து, கடினமான இடங்களுக்குள்ளாக நம்மைக் கொண்டுவரத்தக்கதாக, அனைத்து வழிகளிலும் மிக அதிகமான முயற்சிகளை எடுப்பார்கள். இப்படி நம்மை எதிர்ப்பதால், தேவனுக்குத் தொண்டுசெய்கின்றோம் என்றும் அவர்கள் நினைத்துக் கொள்வார்கள். ஆனால் நாமோ, ஆபத்திலும் இருளிலும்கூட நம்முடைய கரங்களை கிறிஸ்துவின் கரங்களுக்குள்ளாக வைத்து நம்பிக்கைக் கொள்ளலாம்.—Mar 197 (1889).

போராட்டத்தில் உறுதியாக நிற்பதற்குத் தகுதியடையக்கூடிய மனிதர்களுக்கு இருக்கின்ற ஒரே வழி, கிறிஸ்துவில் ஆழமாக வேரூன்றப்படுவதும் உறுதியாக நிலைநாட்டப்பெறுவதுமே ஆகும். கிறிஸ்து இயேசுவிலிருக்கக்கூடிய அதே சத்தியத்தை, கண்டிப்பாக அவர்கள் பெற்றிருக்க வேண்டும். சத்தியம் இப்படியாக கொடுக்கப்பட்டால் மாத்திரமே, அது ஆத்துமாவின் தேவைகளைச் சந்திக்கமுடியும். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை, நமது நீதியாயிருக்கின்ற கிறிஸ்துவைப்பற்றிய போதனையே, ஆத்துமாவின் பசியைத் திருப்திபடுத்தக்கூடிய காரியமாக இருக்கின்றது. இந்த மாபெரும் மையமான சத்தியத்தில், மக்களது ஆர்வத்தை நாம் பெறும்போது, நம்பிக்கையும் விசுவாசமும் தைரியமும் இருதயத்திற்குள்ளாக வரும்.—GCDB Jan. 28, 1893.

அநேகர் தங்களது விசுவாசத்திற்காக இங்கிருக்கும் வீடுகளை விட்டும், சொந்தபந்தங்களை விட்டும் துண்டிக்கப்படுவார்கள். ஆயினும் கிறிஸ்துவினுடைய கிருபையின் தூதைப் பெற்றுக்கொண்டு, தங்களது பதிலாளியும் பிணையாளியுமாயிருக்கின்ற தேவ குமாரனாகிய அவர்மீது சார்ந்துகொண்டவர்களாகத் தங்களது இருதயத்தைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பார்களானால், அந்த நிலையிலும்கூட அவர்கள் மகிழ்ச்சியால் நிரப்பப்படுவார்கள்.—ST June 2, 1898.

**உபத்திரவம் தேவனுடைய மக்களைச் சிதறடிக்கும்**

கர்த்தருடைய ஓய்வுநாளைக் கடைபிடிப்பவர்களுக்கு எதிராக வெவ்வேறு இடங்களில் பகைமை எழும்பும்போது, அந்த இடங்களிலிருந்து அதிக கடுமையான எதிர்ப்புகள் இல்லாத வேறு இடங்களுக்கு, அவர்கள் நகர்ந்துபோய்விட வேண்டும் என்பது தேவனுடைய மக்களுக்கு அவசியமாக மாறிவிடும்.

துன்மார்க்கமான மனிதர்களின் நடத்தையினால் தேவனுடைய பிள்ளைகளுடைய செல்வாக்கு பயனற்றதாக ஆக்கப்பட்டிருப்பதாலும், அவர்களது ஜீவன் ஆபத்துக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாலும், அப்படிப்பட்ட இடங்களில் அவர்கள் தங்கியிருப்பதை தேவன் விரும்புவதில்லை. வாழ்க்கையும் சுதந்தரமும் ஆபத்துக்குள்ளாக்கப்படும்பொழுது, ஜீவனுள்ள வார்த்தையைக் கேட்க விரும்புகின்ற மக்கள் இருக்கும் இடத்திற்கு செல்வதென்பது நமது வெறும் சிறப்புரிமை மாத்திரம் அல்ல, அது நமது ஆக்கப்பூர்வமான கடமையும்கூட ஆகும். மேலும், தேவனுடைய வார்த்தையை போதிப்பதற்கு எங்கு சந்தர்ப்பம் உள்ளதோ, அங்கு சென்று போதிப்பதென்பது மிகவும் சாதகமான தாகும்.—Ms 26, 1904.

உபத்திரவத்தின் நிமித்தமாக, தேவனுடைய மக்கள் அநேக நாடுகளில் சிதறுண்டு போகக்கூடிய காலம் விரைவாக வந்து கொண்டிருக்கின்றது. எல்லாக் காரியங்களையும் குறித்த முழுமையான கல்வி அறிவைப் பெற்றிருப்பவர்கள், எங்கு இருக்கின்றனரோ அங்கு அனு கூலத்தைப் பெறுவார்கள்.—5MR 280 (1908).

## உபத்திரவம் தேவனுடைய மக்களை ஒன்றுபட வழிநடத்தும்

உபத்திரவத்தின் புயல் உண்மையாகவே நம்மீது தாக்கும்போது, உண்மையான ஆடுகள் உண்மையான மேய்ப்பனின் குரலைக் கேட்கும். தொலைந்துபோனவர்களை இரட்சிக்கும்படியாக சுயத்தை மறுக்கும் முயற்சிகள் எடுக்கப்படும். தொழுவத்திலிருந்து வழிதவறிச் சென்ற அநேகர், பெரிய மேய்ப்பனைத் தொடர்ந்து வரும்படியாக மீண்டும் திரும்பி வருவர். தேவனுடைய மக்கள் ஒன்றாக நெருங்கிச் சேர்ந்து சத்துருவுக்கு ஒரு ஒருங்கிணைந்த எதிர்ப்பை வெளிப்படையாகக் காண்பிப்பார்கள். மிக உயர்ந்த அதிகாரத்தைப் பெறுவதிலே இருந்த ஆபத்தான போராட்டத்தின் பொதுவான கண்ணோட்டம் முடிவுக்கு வரும். அப்போது, யார் பெரியவராகக் கருதப்படுவர் என்பதற்கான விவாதமே அங்கு இல்லாமற்போகும்.—6T 401 (1900).

## இக்கட்டு தேவனின் தலையீட்டை வெளியரங்கமாக்கும்

ஒவ்வொரு காலகட்டத்திலும், கர்த்தர் தமது கிரியைசெய்யும் விதத்தைக் காண்பித்திருக்கின்றார். பூமியின்மீது என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைக் குறித்து அவர் கவனம் உள்ளவராய் இருக்கின்றார். ஒரு இக்கட்டு வரும்போது, சாத்தானுடைய திட்டங்களின் கிரியையைத் தடைசெய்யும்படிக்கு, தேவன் குறுக்கிட்டுத் தம்மை

வெளிப்படுத்தியிருக்கின்றார். தேவன் தமது தலையீட்டைத் தனிச்சிறப்புள்ளதாய் ஆக்கும்படிக்கு, அநேக வேளைகளில் தேசங்களும், குடும்பங்களும் மற்றும் தனிப்பட்ட நபர்களும் ஒரு இக்கட்டுக்குள்ளாக வரும்படியான காரியங்களை அனுமதித்திருக்கின்றார். அதன் பின்பு, தமது ஜனங்களைத் தாங்கி, நியாயத்தை நிலைநாட்டுகின்ற தேவன் ஒருவர் இஸ்ரவேலிலே உண்டு என்ற உண்மையை அவர் விளங்கப்பண்ணுகிறார்.

யேகோவாவின் சட்டத்தை எதிர்க்கின்ற காரியம் ஏறக்குறைய உலகளாவியதாய் இருக்கும்போதும், தங்களது சகமனிதர்களால் தேவனுடைய மக்கள் துன்புறுத்தப்படும்படியாக நெருக்கப்படும்போதும் தேவன் தலையிடுவார். அவரது ஜனங்களின் ஊக்கமான ஜெபங்களுக்குப் பதிலளிக்கப்படும். ஏனெனில், அவர் தமது மக்கள் தங்களது முழு மனதோடும் தம்மைத் தேடி, தங்களது விடுதலை நாயகனான அவர்மீது சார்ந்திருப்பதை அவர் விரும்புகின்றார்.—RH June 15, 1897.

தேவனுடைய பரிசுத்தக் கற்பனைகளை அறிந்திருப்பவர்கள்மீது கொடுங்கோலர்கள் ஜெயங்கொள்ளும்படி ஒரு குறுகிய காலத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்… கடைசியாக, சாத்தான் தன்னை ஒரு பொய்யனாக, ஒரு குற்றஞ்சாட்டுபவனாக, ஒரு கொலைபாதகனாக, தன்னுடைய குணத்தை வெளிப்படுத்தும்படி தேவன் அவனை அனுமதிப்பார். இப்படியாக, தேவனுடைய மக்களின் கடைசி வெற்றி மிகவும் குறிப்பிடப்படும் விதத்திலும், மிகவும் மகிமையானதாகவும், மிகவும் முழுமையானதாகவும், பரிபூரணமானதாகவும் ஆக்கப்படும்.—3SM 414 (1904).

## உபத்திரவம் தேவனுடைய மக்களை சுத்திகரிக்கும்

வெகுசீக்கிரத்தில் உலகம் முழுவதிலும் இக்கட்டு வரவிருக்கின்றது. ஒவ்வொருவரும் தேவனைத் தேடி அறிந்துகொள்வதற்கு அது சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. தாமதிப்பதற்கு நமக்கு நேரம் கிடையாது…

தேவன் தமது சபையின்மேல் வைத்திருக்கும் அன்பு அளவிட முடியாததாகும். அவரது சொந்த சம்பத்தின்மேல் அவருக்குள்ள அக்கறை முடிவில்லாததாக இருக்கின்றது. சபையினுடைய நிகழ்காலம் மற்றும் நித்தியத்திற்கான நன்மைக்கும், தூய்மைக்கும் அவசியமான அப்படிப்பட்ட உபத்திரவத்தைத் தவிர, வேறு எந்த உபத்திரவமும் அவரது சபையின்மீது வரும்படியாக தேவன் அனுமதிப்பதில்லை. பூமியிலே தமது ஊழியத்தின் துவக்கத்திலும் முடிவிலும் அவர் ஆலயத்தை சுத்தம் செய்தது போன்று, தமது சபையை சுத்தம் செய்வார். சபையின்மீது தேவன் அனுமதிக்கின்ற சோதனைகள் மற்றும் போராட்டங்கள் அனைத்தும், சிலுவையின்

வெற்றிகளை உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கொண்டுசெல்வதற்குரிய ஆழமான பக்தியையும், அதிகமான வல்லமையையும் அவரது மக்கள் பெற்றுக் கொள்வதற்காகவே அனுமதிக்கப்படுகின்றன.—9T 228 (1909).

உபத்திரவங்கள், சிலுவைகள், சோதனைகள், துன்பங்கள் மற்றும் நமது பல்வேறுபட்ட வருத்தங்கள் அனைத்தும் நம்மைச் சுத்திகரிப்பதற்காகவும், நம்மைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவும், பரலோகக் களஞ்சியத்திற்கு நம்மைத் தகுதிப்படுத்துவதற்காகவும் தேவன் பயன்படுத்தக்கூடிய அவரது பணியாட்களாகும்.—3T 115 (1872). ★

# 11

# சாத்தானுடைய கடைசிக்கால வஞ்சகங்கள்

### கிறிஸ்தவம் என்ற போர்வையின் கீழாக

இந்த பூமியினுடைய சரித்திரத்தின் முடிவை நாம் நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். சாத்தானும், இதற்குமுன் ஒருபோதும் இல்லாத அளவு கிரியை செய்துகொண்டிருக்கின்றான். கிறிஸ்தவ உலகத்தின் இயக்குனர்போல நடிப்பதற்கு அவன் மிகவும் கடுமையாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றான். தன்னுடைய பொய்யான வியக்கத்தகும் அற்புதங் களைக்கொண்டு, அவன் மிகவும் தீவிரமாகக் கிரியை செய்து கொண்டிருக் கின்றான். கெர்ச்சிக்கின்ற ஒரு சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று, வகைதேடிச் சுற்றிக்கொண்டிருக்கிறவனாக அவன் விவரிக்கப்பட்டிருக்கிறான். அவன் தன்னுடைய ஐக்கியத்திற்குள்ளாக முழு உலகத்தையும் அணைத்துக் கொள்ள விரும்புகின்றான். தனது விகாரமான தோற்றத்தை கிறிஸ்தவம் என்ற போர்வைக்குள் மறைத்துக்கொண்டு, ஒரு கிறிஸ்தவனின் அடிப்படையான நற்பண்புகள் தனக்கிருப்பதாக பாவனை செய்துகொண்டு, தான் கிறிஸ்துவாகவே இருப்பதாக உரிமைபாராட்டிக் கொள்கின்றான்.—8MR 346 (1901).

சத்துருவினுடைய நோக்கம் ஏற்றதாயிருக்கும்போது, தன்னுடைய பிரதிநிதிகள்மூலமாக, கிறிஸ்தவம் என்ற ஒரு வேஷத்தின்கீழ் மாபெரும் ஒரு வல்லமையை வெளிப்படையாய்க் காண்பித்து "கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பான்" (மத். 24:24) என்று தேவனுடைய வார்த்தை தெரிவிக்கின்றது.—Ms 125, 1901.

இந்த ஆவிகள் வேதத்தை விசுவாசிப்பதாகக் கூறும்போதும், சபை அமைப்புகளின்மீது மரியாதையைக் வெளிக்காட்டும்போதும், அவை களுடைய கிரியை தெய்வீக வல்லமையின் ஒரு வெளிப்பாடு என்பதுபோல ஏற்றுக்கொள்ளப்படும்.—GC 588 (1911).

இந்த நமது உலகத்திலே, இழிந்த ஒழுக்கநிலைக்கு உறுதியான அரண்போன்றிருப்பது, கைவிடப்பட்ட பாவியின் அநீதியான வாழ்க்கையோ அல்லது சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட மனிதனோ அல்ல; மாறாக, ஒழுக்க நிலையோடு மேன்மையாகவும் மதிப்பு வாய்ந்ததாகவும் காணப்படுகின்ற வாழ்க்கையிலே, சீராட்டி வளர்க்கப்படும் ஒரு பாவமே.... நுண்ணறிவு, தாலந்து, இரக்கம், பெருந்தன்மையான அன்பான செயல்கள்கூட ஆத்துமாக் களை வசீகரித்து, அழிவின் விளிம்பிற்குக் கொண்டுசெல்ல, சாத்தான் உபயோகிக்கின்ற மறைவான கண்ணிகளாக மாறலாம்.—Ed 150 (1903).

**அட்வென்டிஸ்ட் சபையிலும்கூட**

வெளியிலிருந்து வருகின்ற காரியங்களைக்காட்டிலும், உள்ளே இருந்து வருகின்ற காரியங்களுக்குத்தான் நாம் அதிகம் பயப்படவேண்டியதா யிருக்கிறது. நமது பெலத்திற்கும் வெற்றிக்கும் வருகின்ற தடங்கல்கள் வெளி உலகத்திலிருந்து வருவதைக் காட்டிலும் நமது சபைக்குள்ளிருந்து வருவதுதான் மிகுதியாக இருக்கின்றன. தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, இயேசுவின் விசுவாசத்தைக் கொண்டிருக்கின்றோம் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள், தாங்கள் வெளிக்காட்டுகின்ற செயல் நோக்கத்தை மற்ற எந்த வகுப்பினரைக் காட்டிலும், கொள்கைமாறாத தங்களது உறுதியான வாழ்க்கையாலும், தெய்வீக முன்மாதிரியாலும், தங்களது ஊக்கமான செல்வாக்கினாலும் அதிகமாய் விருத்தியடையச் செய்து கனப்படுத்துவார்கள் என்று அவிசுவாசிகள் எதிர்பார்ப்பதற்கு உரிமை உள்ளது. ஆனால், சத்தியத்தை ஆதரிக்கின்றோம் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள், அதனுடைய முன்னேற்றத்திற்கு மாபெரும் தடைகளாக இருந்திருப்பதை எத்தனைமுறை நிரூபித்திருக்கின்றார்கள். அவிசுவாசத்திற்கு இடமளிப்பதும், சந்தேகங்களை வெளிப்படுத்துவதும், இருளை வாஞ்சித்து வளர்ப்பதும் தீய தூதர்களின் பிரசன்னத்தை ஊக்கப்படுத்தி சாத்தானின் உபாய தந்திரங்கள் நிறைவேறத்தக்கதாக வழிதிறக்கும்.—1SM 122 (1887).

**பொய்யின் ஆவிகள் வேதவாக்கியங்களுக்கு முரண்பாடாகப் பேசும்**

நிகழ்கால சத்தியத்தைக்குறித்த பூரண அறிவைப் பரிசுத்தவான்கள் பெற்றிருக்கவேண்டும். அவர்கள் வேதவாக்கியங்களின்மூலமாக அதை நிலைநிறுத்தும்படி கடமைப்பட்டிருக்கின்றார்கள். பிசாசுகளின் ஆவிகள், மரித்துப்போன அவர்களது அன்பான நண்பர்கள் அல்லது உறவினர்கள் என்று சொல்லிக்கொண்டு, அவர்களைப் போலத் தோற்றமளித்து, ஓய்வுநாள் மாற்றப்பட்டுவிட்டது என்ற உபதேசம் உட்பட மற்ற வேத ஆதாரமற்ற உபதேசங்களையும் அவர்களுக்கு அறிவிப்பார்கள் என்பதால், அவர்கள் மரித்தவர்களின் நிலைபற்றி அறிந்திருக்க வேண்டும்.—EW 87 (1854).

இந்தப் பொய்யின் ஆவிகள் அப்போஸ்தலர்கள் உருவில் தோன்றி, அவர்கள் இவ்வுலகத்திலிருந்தபோது பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எழுதின காரியங்களுக்கு முரண்பாட்டை உண்டாக்கும். அவைகள் வேதாகமத்தின் தெய்வீக ஆரம்பத்தை மறுதலிக்கும்.—GC 557 (1911).

“ஆத்துமா அழியாதது” மற்றும் “ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தமானது” என்ற இரண்டு பெரும் தவறுகளின்மூலமாக, சாத்தான் மக்களை தன் வஞ்சகத்தின்கீழ் கொண்டுவருவான். முதலாவது காரியம் ஆவிமார்க்கத்திற்கு அடித்தளம் நாட்டுகின்றது; பின்னான காரியம் ரோம மார்க்கத்தோடு ஒரு அனுதாபப் பிணைப்பை உண்டாக்குகின்றது.—GC 588 (1911).

மனிதர்கள், தங்களைக் கிறிஸ்துவாகவே பாவனைசெய்துகொண்டு எழும்புவார்கள். அவர்கள் உலகத்தின் மீட்பருக்கு மட்டுமே உரிய திருப்பெயருக்கும் ஆராதனைக்கும் உரிமை கொண்டாடுவார்கள். அவர்கள் அதிசயமான குணமாக்கும் அற்புதங்களைச் செய்வார்கள்; வேதவாக்கியங்களின் சாட்சிக்கு, முரண்படுகின்ற காரியங்களைக் கூறி, பரலோகத்திலிருந்து வெளிப்பாடுகளைப் பெற்றிருப்பதாகச் சொல்லிக் கொள்வார்கள்…

ஆனால் தேவனுடைய மக்கள் தவறான வழியில் நடத்தப்பட மாட்டார்கள். கள்ளக்கிறிஸ்துவின் இந்தப் போதனைகள் வேதவாக்கியங்களுக்கு ஒத்திருக்கவில்லை. மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குபவர்கள்மீது அவனுடைய ஆசீர்வாதம் கூறப்படுகின்றது. வேதாகமம் கூறுகின்ற அந்தக் கூட்டத்தார் மீதுதான், தேவனுடைய கலப்பில்லாத கோபம் ஊற்றப்படும்.—GC 624, 625 (1911).

## பொய்யான எழுப்புதல்கள்

பெயரளவிலுள்ள அட்வெண்டிஸ்ட் மக்களின் மத்தியிலும், விழுந்து போன சபைகளிலும், தேவனுக்கு உண்மையான மக்கள் இருப்பதை நான் கண்டேன். வாதைகள் ஊற்றப்படுமுன்பாக, ஊழியக்காரர்களும் மக்களும் இப்படிப்பட்ட சபைகளிலிருந்து வெளியே அழைக்கப்பட்டு, மகிழ்ச்சியுடன் சத்தியத்தைப் பெற்றுக்கொள்வார்கள். சாத்தானும் இதை அறிந்திருப்பதால், மூன்றாம் தூதனின் உரத்த சத்தம் கொடுக்கப்படுவதற்கு முன்னதாகவே, அவன் மத அமைப்புகளில் ஒரு எழுச்சியை உண்டாக்குவான். அப்போது சத்தியத்தை நிராகரித்தவர்கள், தேவன் தங்களோடு இருப்பதாக நினைத்துக் கொள்வார்கள்.—EW 261 (1858).

தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் முடிவான சந்திப்பிற்குமுன், பூமியின்மீது கர்த்தருடைய மக்கள் மத்தியிலே, அப்போஸ்தலர்கள் காலத்தி

லிருந்து இதுவரையிலும் கண்டிராத—ஆரம்பகாலத்தில் இருந்தது போன்ற தேவபக்தியின் ஒரு மாபெரும் எழுப்புதல் உண்டாகும்... ஆத்துமாக்களின் எதிரியானவன் இந்த எழுப்புதலைத் தடுக்க விரும்புகின்றான். அதற்காக அவன், அப்படிப்பட்ட ஒரு இயக்கத்திற்கான காலம் வருமுன்னதாக ஒரு போலியான எழுப்புதலை அறிமுகப்படுத்துவதால், அதைத் தடுக்க முயலுவான். தன்னுடைய வஞ்சக வல்லமைக்குள் கொண்டுவரக்கூடிய அந்த சபைகளில், தேவனுடைய விசேஷித்த ஆசீர்வாதம் ஊற்றப்படுவதுபோன்று அவன் தோன்றச் செய்வான்; மாபெரும் சமய ஆர்வம் என்று கருதப்படக் கூடிய காரியங்கள் அங்கு வெளிக்காட்டப்படும்...

ஜனங்களை தவறான வழியில் நடத்திச்செல்வதற்கு மிகவும் பொருந்தக்கூடியவிதத்தில், உண்மையோடு பொய் கலக்கப்பட்ட உணர்ச்சிப் பூர்வமான எழுச்சி ஒன்று உண்டாயிருக்கும். ஆனாலும் ஒருவரும் வஞ்சிக்கப்படவேண்டிய அவசியமில்லை. தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில், இதுபோன்ற இயக்கங்களின் தன்மையை முடிவுசெய்வது கடினமல்ல. சுய மறுப்பையும், உலகப்பிரகாரமான தன்மையை மறுப்பதையும் அவசியமானதாக்குகிற, வெளிப்படையான, ஆத்துமாவைச் சோதிக்கின்ற சத்தியங்களிலிருந்து விலகிச்சென்று, வேதாகமத்தின் சாட்சியை எங்கெல்லாம் மக்கள் அலட்சியம் செய்கின்றார்களோ, அங்கெல்லாம் தேவனுடைய ஆசீர்வாதம் பொழியப்படாது என்பதைக்குறித்து நாம் உறுதியாக இருக்கலாம்.—GC 464 (1911).

## இசை ஒரு கண்ணியாக ஆக்கப்படும்

இந்தியானாவில்[1] நடப்பதாக நீங்கள் விவரித்த காரியங்களெல்லாம் தவணையின் காலம் முடிவதற்கு சற்று முன்னதாக நடந்தேறும் என்று கர்த்தர் எனக்குக் காண்பித்திருக்கின்றார். ஒவ்வொரு அருவருப்பான காரியமும், செயல்முறையில் தெளிவாக எடுத்துக்காட்டப்படும். நடனம், இசை, மத்தளங்களுடனான உரத்த கூச்சலிடுதல் அங்கு இருக்கும். சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு, அவர்கள் நம்பத்தகுந்தவர்களாய் இருக்க முடியாது என்ற விதத்தில், பகுத்தறிவுள்ள மனிதர்களின் புலன்கள் மிகவும் குழம்பினதாய் மாறிவிடும்...

ஒரு பைத்தியக்கார விடுதியின் கூச்சலைப்போன்ற இசை, புலன்களை அதிர்ச்சியடைய செய்கிறது. நல்ல முறையில் நடத்தப்பட்டால் ஒரு ஆசீர்வாதமாக அமைய வேண்டியதைத் தாறுமாறாக்கிப்போடுகின்றது. இத்தகைய சத்தத்தோடும் கூச்சலோடும் சாத்தானிய கூட்டங்களின் வல்லமைகள் ஒரு கொண்டாட்டத்தை உண்டாக்கிச் சேர்ந்துகொள்ளுகின்றன. இது பரிசுத்த ஆவியானவரின் கிரியை என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது... கடந்த

காலத்தில் எவையெல்லாம் இருந்ததோ, அவையெல்லாம் எதிர்காலத்திலும் இருக்கும். இசை, நடத்தப்படுகின்ற விதத்தின்மூலமாக சாத்தான் அதை ஒரு கண்ணியாக உருவாக்குவான்.—2SM 36, 38 (1900).

பரிசுத்த ஆவியானவரின் ஆழமான அசைவுகளிலிருந்து, உண்மையாகவே நம் மனதை விலக்கக்கூடிய விநோதமான பயிற்சிகளுக்கு நாம் இடங்கொடாதிருப்போமாக. தேவனுடைய கிரியை எப்பொழுதும் அமைதலும் கனத்துக்குரியதுமான முறையில் நிறைவேறுவது குறிப்பிடத்தக்கது.—2SM 42 (1908).

## பொய்யான அந்நிய பாஷையில் பேசுதல்

மதவெறி, பொய்யான பரபரப்பு, பொய்யான அந்நிய பாஷைகளில் பேசுதல், மற்றும் கூச்சலிடுகின்ற வழிபாட்டுச் செயல்கள் போன்றவை தேவன் சபைகளுக்கு அளித்துள்ள வரங்களாகக் கருதப்பட்டிருக்கின்றன. சிலர் இந்நிலையில் வஞ்சிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த அனைத்துக் கனிகளும், நல்ல கனிகளாக இருந்ததில்லை. “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.” மதவெறியும் கூச்சலும், விசுவாசத்திற்கான விசேஷமான அடையாளங்களாக கருதப்பட்டிருக்கின்றன. ஜெபக்கூட்டத்தின் ஆராதனை நேரம் ஒரு வல்லமை நிறைந்த மற்றும் மகிழ்ச்சியான நேரமாக இல்லையென்றால், சிலர் அப்படிப்பட்ட கூட்டத்தால் திருப்தியடைவதில்லை. அப்படிப்பட்ட மகிழ்ச்சியைப் பெறுவதற்காக, ஏதாவது கிரியைசெய்து, கிளர்ச்சியூட்டக்கூடிய ஒரு உணர்வை உண்டுபண்ணுவார்கள். ஆனால் அப்படிப்பட்ட கூட்டங்களின் செல்வாக்கு நன்மைபயக்கக்கூடியதாக இல்லை. அவர்களின் மகிழ்ச்சி உண்மையான மூலாதாரத்தினின்று வராததால், சந்தோஷமான உற்சாகத்தில் மிதக்கின்ற உணர்வு கடந்துசென்றபின்பு, கூட்டத்திற்கு வருவதற்கு முன்பிருந்த நிலையைக் காட்டிலும் கீழான நிலைக்கு அவர்கள் அமிழ்ந்துபோய் விடுகின்றனர்.

மிகுந்த அக்கறையுடன் இருதயத்தை ஆழமாக ஆராய்கிற தன்மையுள்ள, ஒவ்வொருவரும் தன்னைக்குறித்து சரியானபடி நிதானித்து அறியவும், ஊக்கமாகவும் மிகுந்த தாழ்மையுடனும் கிறிஸ்துவினிடத்தில் கற்றுக்கொள்ளவும் வழிநடத்துகின்ற கூட்டங்களே, தனிச் சிறப்புடையதாகக் கருதப்படக்கூடிய ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு மிகவும் பிரயோஜனமுள்ள கூட்டங்களாகும்.—1T 412 (1864).

## தீயதூதர்கள் மனிதர்களைப்போலத் தோற்றமளிப்பர்

தேவன்மீதுள்ள தங்களது விசுவாச பக்தியினின்று மனிதர்களை வசீகரித்து இழுத்துச் செல்ல சாத்தான் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும்

உபயோகித்துக்கொள்வான். அவனும் அவனோடுகூட விழுந்துபோன தூதர்களும், பூமியிலே மனிதர்களைப்போல் தோன்றி வஞ்சிக்க முயற்சிப் பார்கள். தேவதூதர்களுங்கூட மனிதர்கள்போலத் தோன்றி, எதிரியின் நோக்கங்களை முறியடிப்பதற்காக தங்களது வல்லமையின்கீழ் உள்ள ஒவ்வொரு வழிவகையையும் உபயோகிப்பார்கள்.—8MR 399 (1903).

மனிதர்களின் சாயலில் உள்ள தீயதூதர்கள், சத்தியத்தை அறிந்தவர்களுடன் பேசுவார்கள். தேவனுடைய தூதுவர்களின் வார்த்தை களுக்குத் தவறான விளக்கங்கொடுத்து, தவறான எண்ணங்கொள்ளச் செய்வார்கள்… ஏழாம்நாள் அட்வெண்டிஸ்டுகள் எபேசியர் ஆறாம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற எச்சரிப்புகளை மறந்து விட்டார்களா? அந்தகார லோகாதிபதியின் ஆவிகளுக்கு எதிராக, நாம் ஒரு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம். நம்முடைய தலைவராகிய கிறிஸ்துவை நாம் நெருக்கமாக பின்தொடராவிட்டால், சாத்தான் நம்மீது வெற்றிகொண்டுவிடுவான்.—3SM 411 (1903).

அவிசுவாசத்தின் ஒரு வல்லமையான ஆவியை, விசுவாசிகளின் உருவத்தில் நம் அணிவரிசைகளுக்குள் கொண்டுவரும்படியாக தீய தூதர்கள் கிரியைசெய்வார்கள். இந்தக் காரியம்கூட உங்களை அதைரியப் படுத்திவிடவேண்டாம். மாறாக, சாத்தானுடைய ஏதுகரங்களின் வல்லமைகளுக்கு எதிராக, கர்த்தருக்கு உதவியாக ஒரு மெய்யான உள்ளத்தைக் கொண்டுவருவீர்களாக. இந்தத் தீமையின் வல்லமைகள் நமது கூட்டங்களிலே ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அல்ல, மாறாக, தேவனுடைய ஆவியின் செல்வாக்குகளுக்கு எதிராக கிரியை செய்வதற்காக கூட்டங்கூடுகின்றன.—2MCP 504, 505 (1909).

### மரித்தவர்களைப்போலத் தோற்றமளித்தல்

மரித்த பரிசுத்தவான்களைப்போலவும் மரித்த பாவிகளைப்போலவும் தோற்றமெடுப்பதும், அவற்றை மனிதர்கள் காணும்படியாக தோன்றவைப்பதும் தீயதூதர்களுக்குக் கடினமானதல்ல. இப்படிப்பட்ட வெளிப்பாடுகள் அடிக்கடி நடக்கும். காலத்தின் முடிவை நாம் நெருங்குகின்றபோது மிகவும் திடுக்கிடச் செய்கின்ற, மனித உருவத்தின் தோற்றங்களின் இப்படிப்பட்ட வெளிப்பாடுகள் தோன்றும்.—Ev 604 (1875).

தங்களுக்கு அன்பானவர்களைக் கல்லறையிலே கிடத்தியிருப் பவர்களது அனுதாபத்தைச் சம்பாதிக்க சாத்தான் கையாளப்போகின்ற கணக்கிடப்பட்ட தந்திரம், மிகவும் வெற்றிகரமானதும் வசீகரிக்கக் கூடியது மான ஒரு ஏமாற்று வேலையாகும். மிகவும் நேசிக்கப்பட்ட இறந்து போனவர்களது தோற்றத்தில் தீயதூதர்கள் வந்து, அவர்களது வாழ்க்கை

யோடு தொடர்புடைய சம்பவங்களைச் சம்பந்தப்படுத்திச் சொல்லி, அவர்கள் உயிரோடு வாழ்ந்தபோது செய்த செயல்களைச் செய்வார்கள். இவ்விதமாக, மரித்த அவர்களது நண்பர்கள் தூதர்களாக தங்களுக்கு மேலாக ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்றும், தங்களோடு அவர்கள் தொடர்புகொள்கின்றார்கள் என்றும், மனிதர்கள் நம்பும்படியாக அவைகள் வழிநடத்தும். மரித்துப்போன நண்பர்களாக பாவனை செய்யும் இந்தத் தீயதூதர்கள், ஒருவிதத்தில் வழிபாட்டு சிலையாகவே சிலரால் கருதப்படுகின்றன. தேவனுடைய வார்த்தையைக்காட்டிலும் மரித்துப்போனவர்களின் தோற்றத்தில் வரும் தீயதூதர்களின் வார்த்தை அநேகருக்கு அதிமுக்கியமானதாகக் கருதப்படும்.—ST Aug. 26, 1889.

மனிதர்களுடைய மரித்துப்போன நண்பர்களின் தோற்றத்தை அவர்களுக்கு முன்பாகக் கொண்டுவரும்படிக்கு சாத்தானுக்கு வல்லமை இருக்கின்றது. போலியானது தத்ரூபமாக இருக்கும்; பழக்கப்பட்ட பார்வை, வார்த்தைகள், குரல் ஆகிய அனைத்தும் ஆச்சரிப்படத்தக்கவிதத்தில் நிகழ்த்திக்காட்டப்படும்…, தங்களால் நேசிக்கப்படும் உறவினர்கள் அல்லது நண்பர்களின் வடிவில் தோன்றி, மிகப் பயங்கரமான மதப்புரட்டுகளை அறிவிக்கும் பிசாசுகளின் ஆவிகளுடன் மனிதர்கள் எதிர்த்துநிற்கும்படி கொண்டுவரப்படுவார்கள். இப்படிச் சந்திக்கும் இவர்கள், நமது மென்மையான அனுதாபங்களைத் தூண்டி, அவர்கள் கூறும் போலியானவைகளை ஆதரிப்பதற்காக அற்புதங்களைச் செய்வார்கள்.—GC 552, 560 (1911).

**சாத்தான் கிறிஸ்துவைப்போன்று தோற்றமளித்தல்**

உலகம் முழுவதையும் தனது அற்புதம் செய்யும் வல்லமையால் வஞ்சிக்க சத்துரு ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றான். ஆதலால் அவன் இயேசு கிறிஸ்துவைப்போல் தோற்றமளிப்பதற்கு, ஒளியின் தூதர்களுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான்.—2SM 96 (1894).

மனிதர்கள் தற்பொழுது, வெகுசுலபமாகத் தவறாக வழிநடத்தப் படுவார்களென்றால், சாத்தான் கிறிஸ்துவைப்போல் தோற்றத்தைத் தரித்துக் கொண்டு, அற்புதங்களைச் செய்யும்போது அவர்கள் எவ்வாறு நிலை நிற்பார்கள்? தான்தான் கிறிஸ்து என்று கூறிக்கொண்டு, கிறிஸ்துவைப் போன்று பாவனை செய்பவனாய், கிறிஸ்துவின் கிரியைகளை அனைவரும் பார்க்கக்கூடிய விதத்தில் தவறாக வெளிப்படுத்திக்காட்டும் காரியங்களினால் யார் அசையாமல் நிற்கக்கூடும்?—2SM 394 (1897).

கிறிஸ்துவின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு சாத்தானே களத்தில் இறங்குவான். அவன் தன்னால் முடிந்த அளவு எல்லாவற்றையும் தவறாக

எடுத்துக்கூறுவான், தவறாக அர்த்தப்படுத்துவான், இழிவாக திரித்துக் கூறுவான்.—TM 411 (1898).

கீழிருந்து வரும் ஒரு வல்லமை, நாடகத்தின் மாபெரும் இறுதிக் காட்சிகளை அரங்கேற்ற செயல்பட்டு வருகின்றது. அக்காட்சிகளில் சாத்தான் கிறிஸ்துவைப்போல் வருவான். மேலும் இரகசிய சங்கங்களில் தங்களை ஒன்றாக இணைத்துக்கொண்டிருப்பவர்கள்மூலம், அநீதியின் எல்லா வஞ்சகங்களோடும் கிரியை செய்வான்.—8T 28 (1904).

## ஒவ்வொரு தனிப்பட்ட விதத்திலும் சாத்தான் கிறிஸ்துவைப்போலவே இருப்பான்

ஒரு குறிப்பிட்ட எல்லைக்குமேல் சாத்தானால் செல்ல இயலாது. ஆகவே, இங்குதான் அவன் வஞ்சகத்தின் துணையோடு, உண்மையிலேயே தன்னிடத்தில் இல்லாத வல்லமையைக்கொண்டு, போலியான கிரியையைச் செய்துகாட்டுவான். இரண்டாம் முறையாகக் கிறிஸ்துவே உலகத்திற்கு வந்திருப்பதுபோல, மனிதர்கள் நம்பக்கூடியவிதத்தில், கடைசி நாட்களில் அவன் தோற்றமளிப்பான். உண்மையாகவே அவன் தன்னை ஒரு ஒளியின் தூதனாக மாற்றிக்கொள்வான். ஒவ்வொரு குறிப்பின்படியும் கிறிஸ்துவின் தோற்றத்தையே அவன் தாங்கிநிற்பான். வெறுமனே வெளித்தோற்றத்தின்படி பார்த்தால் அது ஒருவரையும் வஞ்சிக்காது. ஆனால் பார்வோனைப்போல சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்கள் எளிதில் வஞ்சிக்கப்படுவார்கள்.—5T 698 (1889).

இந்த மாபெரும் வஞ்சக நாடகத்தின் உச்சக்கட்ட காட்சியாக, சாத்தானே கிறிஸ்துவைப்போல் வேடமணிந்து வருவான். சபை தனது நம்பிக்கைகள் நிறைவேற்றப்படும்படியாக, இரட்சகரின் வருகைக்கு நீண்டகாலமாக எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டிருக்கின்றது. இப்போது இந்த மாபெரும் வஞ்சகன், கிறிஸ்துதாமே வந்து விட்டதுபோல் காண்பிப்பான். பூமியின் வெவ்வேறு பகுதிகளில், வெளியாகமத்தில் யோவான் வர்ணித்துள்ள தேவகுமாரனுடைய தோற்றத்தில், பிரகாசிக்கின்ற வெளிச்சத்தில் ஒரு கெம்பீரமான சிருஷ்டியைப்போல, மனிதர்கள் மத்தியிலே அவன் தன்னை வெளிப்படுத்துவான் (வெளி. 1:13–15). இதுவரையிலும், எந்தவொரு மனிதக் கண்களும் கண்டிராத மிகச்சிறந்த மகிமை அவனைச் சுற்றிலும் இருக்கும். “கிறிஸ்து வந்துவிட்டார்! கிறிஸ்து வந்துவிட்டார்!” என்ற வெற்றி ஆர்ப்பரிப்பு காற்றிலே தொனிக்கும்.

கிறிஸ்து இந்த பூமியில் இருந்தபோது, தமது கைகளை உயர்த்தி சீஷர்கள்மீது ஆசீர்வாதத்தைக் கூறியதுபோலவே, அவனும் தன் கைகளை

உயர்த்தி அவர்கள்மீது ஆசீர்வாதத்தைக் கூறும்போது, மக்கள் அவனை வணங்கும்படி அவன் முன்பாகத் தாழவிழுந்து, பணிவார்கள். அவனது குரலானது மென்மையாகவும், தாழ்மையாகவும், இன்னும் இனிமை நிறைந்த தாகவும் இருக்கும். மிகவும் இதமான கருணை நிறைந்த குரலில், நமது இரட்சகர் கூறிய கிருபை நிறைந்த அதே பரலோக சத்தியங்கள் சிலதைக் கூறுவான். மக்களின் வியாதிகளைக் குணமாக்குவான். பின்பு கிறிஸ்துவின் குணத்தைப்போன்ற பாவனையில், ஓய்வுநாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றிவிட்டதாகக்கூறி, தான் ஆசீர்வதித்த அந்த நாளை அனைவரும் பரிசுத்தப்படுத்தும்படி கட்டளையிடுவான்.—GC 624 (1911).

## பரிசுத்தவான்களின் ஜெபங்களுக்கு பதில் அளிப்பதுபோல சாத்தான் பாவனை செய்வான்

சாத்தான் தனது வழக்கில் விரைவில் தோற்றுப்போகவிருப்பதைக் காண்கின்றான். இந்த உலகம் முழுவதையும் அவனால் துடைத்துப் போட முடியாது. அவன் உண்மையான தேவப்பிள்ளைகளை வஞ்சகத்தினால் மேற்கொள்வதற்கு, ஆபத்தைப் பொருட்படுத்தாத கடைசி முயற்சியை எடுப்பான். அவன், கிறிஸ்துவைப்போல் தோற்றமெடுப்பதன்மூலம் இதைச் செய்வான். யோவானின் தரிசனத்திலே துல்லியமாக விவரிக்கப்பட்டுள்ள ராஜரீக வஸ்திரங்களைக்கொண்டு அவன் தன்னை உடுத்திக்கொள்வான். இப்படிச் செய்வதற்கு அவனுக்கு வல்லமை இருக்கின்றது. சத்தியத்தின் மேலுள்ள அன்பை ஏற்றுக் கொள்ளாமல், அநீதியில் (பிரமாணத்தை மீறுவதில்) பிரியப்படுகின்ற கிறிஸ்தவ உலகமாகிய, தனது வஞ்சிக்கப்பட்ட பின்னடியார்களுக்கு கிறிஸ்து இரண்டாம் முறை வருவதுபோல அவன் தோற்றமளிப்பான்.

அவன் தன்னைக் கிறிஸ்து என்று அறிவிப்பான். கெம்பீர உடை அணிந்திருக்கும் அழகான கெம்பீரத் தோற்றமுள்ள ஒரு நபராகவும், மென்மையான குரல் மற்றும் இனிமையான வார்த்தைகளுடனும், இதுவரையில் எந்த ஒரு மனிதக் கண்களுமே கண்டிராத மிகச்சிறந்த மகிமையுடனும், அவன் கிறிஸ்துவாகவே நம்பப்படுவான். பின்பு, வஞ்சிக்கப்பட்டு ஏமாந்துபோயிருக்கின்ற அவனது பின்னடியார்கள், “கிறிஸ்து வந்துவிட்டார்! இரண்டாம் முறையாகக் கிறிஸ்து வந்துவிட்டார்! அவர் இந்த உலகில் இருந்தபோது, எப்படித் தமது கரங்களை உயர்த்தி ஆசீர்வதித்தாரோ, அப்படியே எங்களை ஆசீர்வதித்தார்” என்று கூறி, ஒரு ஜெயதொனியோடு ஆர்ப்பரிப்பார்கள்…

ஆனால் பரிசுத்தவான்களோ இதை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண் டிருப்பார்கள். அவர்களும் வஞ்சிக்கப்படுவார்களா? சாத்தானை அவர்கள்

தொழுதுகொள்வார்களா? தூதர்கள் அவர்களைச் சுற்றிலும் இருக்கிறார்கள். “மேல்நோக்கிப் பாருங்கள்” என்ற தெளிவான, உறுதியான, இனிமையான ஒரு குரல் கேட்கப்படும்.

ஜெபித்துக்கொண்டிருக்கின்ற பிள்ளைகளுக்குமுன்பாக தங்கள் ஆத்துமா, கடைசியாக—நித்தியமாக இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற ஒரு நோக்கம் மட்டுமே அவர்களுக்கு இருந்தது. முடிவுபரியந்தம் நிலைநின்று இரட்சிக்கப்படுபவர்களுக்கு, அழிவில்லாத நித்திய வாழ்க்கை வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது—என்கின்ற இந்த நோக்கமே தொடர்ந்து அவர்களமுன் இருந்தது. ஆ! அவர்களது விருப்பங்கள் எத்தனை ஊக்கமும் ஆர்வமும் மிக்கவைகளாய் இருந்தன! நித்தியமும் நியாயத்தீர்ப்புமே எப்போதும் அவர்கள் பார்வையிலே இருந்தன. அவர்களது கண்கள் விசுவாசத்தினாலே, வெள்ளை அங்கி தரித்து பிரகாசிக்கின்ற சிங்காசனத்திற்கு முன்பாக நின்றுகொண்டிருந்தவர்கள்மீது இருந்தது. இதுவே பாவத்திற்கு இடமளித்து, அதை அனுபவிப்பதிலிருந்து அவர்களைத் தடைசெய்தது…

இன்னும் ஒரு அதிகப்படியான முயற்சி எடுக்கவேண்டியுள்ளது. அதன் பின்பு, சாத்தானுடைய கடைசி திட்டம் உபயோகப்படுத்தப்படும். தங்களை விடுவிப்பதற்காகக் கிறிஸ்து வரவேண்டும் என்ற இடைவிடாத கூக்குரலை அவன் கேட்டுக்கொண்டிருக்கின்றான். தங்களது ஜெபங்கள் கேட்கப்பட்டது என்று அவர்களை நினைக்கச்செய்யும்படி, கிறிஸ்துவைப்போல தோற்றமெடுத்து வருவதே அவனது இறுதியான தந்திரமுள்ள திட்டமாகும். —Ms 16, 1884.

**உண்மையிலிருந்து இந்த போலி எவ்விதத்தில் மாறுபட்டிருக்கும்**

கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின் விதத்தைப் போலியாகக் காட்டுவதற்குச் சாத்தான் அனுமதிக்கப்படவில்லை.—GC 625 (1911).

சாத்தான்… பெரிய வல்லமையான அற்புதங்களைச் செய்து, கிறிஸ்துவைப்போலத் தோற்றமளித்து வருவான். இயேசு கிறிஸ்துவை வணங்குவதுபோல நினைத்து, மனிதர்கள் அவன்முன் விழுந்து அவனை வணங்குவார்கள். உலகம் கிறிஸ்துவை மகிமைப்படுத்தக்கூடிய விதத்தில், நாம் அவனை வணங்கவேண்டுமென கட்டளையிடப்படுவோம். நாம் என்ன செய்ய வேண்டும்? தன்னை தேவனென்று சொல்லிக்கொண்டு உரிமைகோரும் மனிதனின் மோசமான எதிரியான அப்படிப்பட்ட சத்துருவைக்குறித்து, கிறிஸ்து நம்மை எச்சரித்திருக்கின்றார் என்றும், கிறிஸ்து வரும்போது அவரது வருகை மிகுந்த மகிமையுடனும் வல்லமையுடனும் இருக்கும் என்றும், ஆயிரமாயிரமும் பதினாயிரம் பதினாயிரமுமான தூதர்களுடன்

அவர் வருவார் என்றும், அப்படி அவர் வரும்போது அவர் சத்தத்தை நாம் அறிந்து கொள்வோம் என்றும் அவர்களிடம் கூறுங்கள்.—6BC 1106 (1888).

தனக்குச் சாதகமான அனைத்தையும் அடைந்துகொள்ள சாத்தான் போராடுகின்றான்... ஒளியின் தூதனுடைய வேஷத்தில், அதிசயங்களைச் செய்பவனாக இப்பூமியிலே நடந்து திரிவான். மிக அழகான மொழியில், ஆரவாரமான மன உணர்ச்சிகளை அருளுவான். அவனால் நல்ல வார்த்தைகள் பேசப்படும்; நல்ல செயல்கள் செய்யப்படும். இப்படிச் செய்வதால், கிறிஸ்துவே தோற்றமளிப்பதுபோல் இருக்கும். இருந்தபோதும், ஒரு காரியத்திலே ஒரு பெரிய வித்தியாசம் காணப்படும். சாத்தான் தேவனுடைய பிரமாணத்திலிருந்து மக்களைத் திருப்புவான். அதோடு நில்லாது, நீதியைக் குறித்து நன்முறையில் அவன் காட்டுகின்ற போலியான காரியம், கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கிறதா யிருக்கும். முடிசூட்டப்பட்ட தலைவர்கள், அதிபர்கள், இன்னும் மேலிடங்களில் இருக்கின்ற ஆட்சியாளர்கள், அவனது பொய்யான கோட்பாடுகளுக்குத் தலைவணங்குவார்கள்.—FE 471, 472 (1897).

### அற்புதங்கள் நடத்தப்படும்

நமக்கு முன்பாக வியாதியஸ்தர்கள் குணப்படுத்தப்படுவார்கள். நம் கண்களுக்கு முன்பாக அற்புதங்கள் செய்யப்படும். சாத்தானுடைய பொய்யான அற்புதங்கள் முழு வீச்சில் நடத்தப்படும்போது, நமக்காகக் காத்துக்கொண்டிருக்கும் சோதனையைச் சந்திக்க நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா?—1T 302 (1862).

தீய ஆவிகளுடைய செல்வாக்கின்கீழ் உள்ள மனிதர்கள் அற்புதங் களைச் செய்வார்கள். அவர்கள் தங்களது மந்திரங்களை மக்கள்மீது செலுத்தி சுகவீனமாக்குவார்கள். பின்பு அந்த மந்திரங்களை நீக்கி, சுகவீனமாக இருந்தவர்கள் அதிசயமான முறையில் குணமடைந்தார்கள் என்று மற்றவர்கள் சொல்லும்படி வழிநடத்துவார்கள். சாத்தான் மீண்டும் மீண்டுமாக இதைச் செய்திருக்கின்றான்.—2SM 53 (1903).

சாத்தான் சம்பந்தப்பட்டிருக்கின்ற அதிசயமான காட்சிகள் வெகு சீக்கிரத்தில் சம்பவிக்கும். சாத்தான் அதிசயங்களைச் செய்வான் என்று தேவனுடைய வார்த்தை அறிவிக்கின்றது. அவன் மனிதரை வியாதியஸ்தராக்கி, பின்பு அவர்களிடமிருந்து சடுதியில் தனது சாத்தானிய வல்லமையை விலக்கிவிடுவான். அதன்பிறகு, அவர்கள் சுகப்படுத்தப்பட்டதாக கருதப்படுவார்கள். இப்படிப்பட்ட தெளிவான குணமாக்கும் கிரியைகள், ஏழாம்நாள் அட்வென்டிஸ்ட் மக்களை சோதனைக்குள்ளாகக் கொண்டுவரும். —2SM 53 (1904).

உண்மையான அற்புதங்கள்போன்று தோற்றமளிக்கும் விதத்தில், சாத்தான் தனது வகைவகையான வஞ்சகங்கள்மூலமாக அற்புதங்களைச் செய்யமுடியும். இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்படும் நேரத்தில், அவர்களுக்கு முன்பாக ஒரு சோதனைக் கேள்வியாக வைப்பதற்கு சாத்தான் இதைத்தான் நம்பியிருந்தான்.—2SM 52 (1907).

### வானத்திலிருந்து அக்கினி

மனிதர்களின் உரிமைகோருதல்களை நாம் நம்பக்கூடாது. கிறிஸ்து செய்துகாட்டியதுபோலவே, வியாதியஸ்தர்களை குணமாக்குவதில் தாங்கள் அற்புதங்கள் செய்கிறதாக அவர்கள் சொல்லிக்கொள்ளலாம். மனிதர்களின் கண்களுக்கு முன்பாக வானத்திலிருந்து அக்கினியைக்கூட வரவழைக்கப்போகின்ற இந்த அதிசயத்தில், மாய வித்தைக்காரனாகிய பெரிய வஞ்சகனைத் தங்கள் பின்னால் வைத்துக்கொண்டு இந்த ஜனங்கள் செய்வதில் ஆச்சரியம் என்ன இருக்கின்றது?—2SM 49 (1887).

பிசாசின் இந்தப் பொய் அற்புதங்களே உலகம் முழுவதையும் சிறைபிடிக்கப்போகின்றன. மனிதரின் கண்களுக்கு முன்பாக, வானத்திலிருந்து அக்கினியையும் அவன் வரச்செய்வான். அற்புதங்களை அவன் செய்யவிருக்கின்றான். இந்த ஆச்சரியமான அற்புதங்கள் செய்யும் அவனுடைய வல்லமை முழு உலகையும் அவன் பக்கமாகத் துடைத்து எடுத்துச்செல்லும் வல்லமையாகும்.—2SM 51 (1890).

கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக சாத்தான் வருவான். தன்னைக் கிறிஸ்து என்று உரிமை கோருவான். அப்படியாகச் சொல்லி தன்னை மாபெரும் மருத்துவ ஊழியக்காரனாகக் காண்பித்துக்கொண்டு அவன் உள்ளே வருவான். தன்னை தேவனென்று நிரூபிக்கும்படியாக, அவன் வானத்திலிருந்து அக்கினியை வரும்படிச் செய்வான்.—MM 87, 88 (1903).

விசுவாசத்திலிருந்து விலகிப்போன தனது பிரதிநிதிகள்மூலமாக, சத்துரு கிரியை செய்வான் என்று வேதவாக்கியத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் மனிதர்களின் கண்களுக்கு முன்பாக, வானத்திலிருந்து அக்கினியைக்கூட வரவழைக்கத்தக்கதான அற்புதத்தை மனிதர் காணும்படியாக செய்வார்கள்.—2SM 54 (1907).

“அன்றியும் அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின் மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்தது” (வெளி. 13:13,14). இங்கு வெறும் ஏமாற்றுவேலைகளைப்பற்றி மாத்திரம் முன்னறிவிக்கப்படவில்லை. மனிதர்களால் செய்யப்படும்

அற்புதங்களினால் அல்லாமல், சாத்தானின் பிரதிநிதிகளால் செய்யப்படும் அற்புதங்களினாலேயே மனிதர்கள் வஞ்சிக்கப்படுகின்றனர்.—GC 553 (1911).

### சாத்தான் தெய்வமாக்கப்படுவான்

இந்த யுகத்தில் அந்திக்கிறிஸ்து உண்மையான கிறிஸ்துவைப்போலவே தோற்றமளிப்பான். அப்போது நமது உலகத்திலுள்ள தேசங்களிலே, தேவனுடைய பிரமாணம் முழுவதுமாக ஒன்றுமில்லாததாக ஆக்கப்படும். தேவனுடைய பரிசுத்தப் பிரமாணத்திற்கு விரோதமான கலகம் முழுமையான உச்சநிலைக்கு வரும். ஆனால் இந்தக் கலகத்திற்கெல்லாம் உண்மையான தலைவன், ஒளியின் தூதனுடைய ஒரு வேஷத்தைத் தரித்திருக்கின்ற சாத்தானே. மனிதர்கள் வஞ்சிக்கப்பட்டு, தேவனுடைய இடத்திற்குச் சாத்தானை உயர்த்தி, அவனைத் தெய்வமாக்குவார்கள். ஆனால் சர்வ வல்லமையுள்ளவர் அப்போது குறுக்கிடுவார். சாத்தானை உயர்த்திப்பிடிக்கத்தக்கதாக ஒன்றுகூடிக்கொண்ட மருளவிழுந்த அனைத்து சபைகள்மீதும், “ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்” (வெளி. 18:8) என்ற தீர்ப்பு கூறப்படும்.—TM 62 (1893).

நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை நெருங்கும்போது, சாத்தானின் ஏதுகரங்கள் அடிமட்டத்தினின்று எழும்பு கின்றன. சாத்தான் ஒரு மனிதனைப்போலத் தோன்றுவது மாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவைப்போலவும் தோன்றுவான். அப்போது சத்தியத்தை ஏற்க மறுத்த உலகம், அவனை ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் ஏற்றுக்கொள்ளும்.—5BC 1105, 1106 (1900).

### அற்புதங்கள் ஒன்றையும் நிரூபிப்பதில்லை

அற்புத அதிசயங்களைச் செய்யும் வல்லமை வெளிக்காட்டப்பட்டு, எதிரியானவன் ஒரு ஒளியின் தூதனைப்போல வரும்போது, தேவனுடைய உண்மையான கிரியையையும், அந்தகார வல்லமைகளின் போலியான கிரியையையும், நீங்கள் வேறுபடுத்தி இனங்கண்டுகொண்டு, சத்தியம் என்றால் என்ன என்பதை அறியும்படிக்கு, உங்களுக்காகத் தேவனிடம் சென்று, தெய்வீக அறிவிற்காக (தெளிவிற்காக) ஜெபியுங்கள்.—3SM 389 (1888).

கிறிஸ்து ஊழியஞ்செய்த விதமெல்லாம் வேதவாக்கியங்களைப் போதிப்பதும், குணமாக்கும் அற்புதமான கிரியைகள்மூலமாக வேதனைப்

படுவோரை விடுவிப்பதுமே. ஆனால் அற்புதங்களைச் செய்வதின்மூலம், சாத்தான் தனது வல்லமையைப் பயன்படுத்துவான். ஆதலால் இப்போது நாம் இந்த முறையிலே[2] ஊழியம் செய்ய முடியாது என்று நான் வலியுறுத்தப் பட்டேன். தெய்வீக வல்லமை என்று சொல்லிக்கொண்டு போலியான சுகமளிக்கும் அற்புதங்கள் செய்யப்படுகின்றபடியால், தேவனுடைய ஊழியக் காரர்கள் இன்று அற்புதங்களின் வழியாக ஊழியஞ்செய்ய இயலாது.—2SM 54 (1904).

சாத்தான் போலியான அற்புதங்களைச் செய்துகாட்டுவதால், அற்புதங்கள் செய்வதில் தேவனுடைய மக்கள் தங்களது பாதுகாப்பைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.—9T 16 (1909).

**அற்புதங்கள் வேதாகமத்தின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது**

வியாதிகளைக் குணமாக்குகிறவர்கள் இத்தகைய வெளிப்பாடுகளின் அடிப்படையில், தேவனுடைய பிரமாணத்தைப் புறக்கணிக்கச் சாக்குப் போக்குகளை ஏற்படுத்திக்கொண்டு கீழ்ப்படியாமையில் நிலைத்திருப்பார் களெனில், எப்படிப்பட்ட வல்லமையை எந்த அளவுக்கு உடையவர்களா யிருந்தாலும், அவர்கள் தேவனுடைய மாபெரும் வல்லமையைப் பெற்றிருக்க வில்லை என்பது புலனாகிறது. மாறாக, அது மாபெரும் வஞ்சகனின் அற்புதங்களை நடப்பிக்கும் வல்லமையே ஆகும்.—2SM 50, 51 (1885).

அற்புத வெளிப்பாடுகளால், ஒருபோதும் வேதம் ஒதுக்கித்தள்ளப்பட முடியாது. சத்தியம் படிக்கப்படவேண்டும், புதையுண்டிருக்கின்ற பொக்கிஷத்தைப்போல அது தேடப்படவேண்டும். வேதவாக்கியங்களைத் தவிர்த்து வேறு எதன் மூலமாகவும், அற்புத சத்திய வெளிப்பாடுகள் கொடுக்கப்படமாட்டாது அல்லது வேதவாக்கியங்களின் இடத்தை வேறு எதுவும் எடுத்துக் கொள்ளவும் முடியாது. வேத வார்த்தையைப் பிடித்துக்கொள்ளுங்கள், மனிதரை இரட்சிப்புக்கேற்ற ஞானவான்களாக்கக்கூடிய, மனதில் ஊன்ற வைக்கும் வேத வார்த்தையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.—2SM 48 (1894).

கடைசி மாபெரும் வஞ்சகம் விரைவில் நம்முன் திறக்க இருக்கின்றது. நம் கண்களுக்கு முன்பாக அந்திக்கிறிஸ்து தனது அதிசயமான கிரியைகளைச் செய்யவிருக்கின்றான். ஏறக்குறைய உண்மையைப் போன்றே அந்தப் போலியும் மிக நெருக்கமாக ஒத்திருக்கப்போவதினால், பரிசுத்த வேத எழுத்துக்களைத் தவிர வேறு எதைக்கொண்டும் அவைகளுக்கு நடுவிலுள்ள வித்தியாசத்தைக் கண்டறிய முடியாது. அவைகளின் சாட்சியைக் கொண்டு, ஒவ்வொரு கூற்றும் ஒவ்வொரு அற்புதமும் சோதித்துப் பார்க்கப்பட வேண்டும்.—GC 593 (1911).

**இந்த வஞ்சகம் ஏறக்குறைய உலகளாவியதாய் இருக்கும்**

ஆத்துமாக்களின் இரட்சிப்பைத் தேடக்கூடிய, ஊக்கமாக உழைக்கின்ற, உண்மையான ஆண்களும் பெண்களுமே தற்போதைய தேவையாக உள்ளது; ஏனென்றால், சாத்தானானவன் வல்லமையுள்ள ஒரு படைத்தளபதியாக போர்க்களத்திற்குள் வந்து, இந்தக் கடைசி மீதியான நேரத்திலே தேவன் தமது ஜனங்களிடத்திற்கு வரத்தக்கதாகக் கொடுக்கும் வெளிச்சத்திற்கு எதிராகக் கதவை மூடும்படியாக, தான் நினைத்துப்பார்க்கக்கூடிய அனைத்து வழிமுறைகளின் மூலமாகவும் கிரியை செய்துகொண்டிருக்கின்றான். அவன் முழு உலகத்தையும், தனது அணிவரிசைகளில் வாரிக்கொண்டிருக்கின்றான்; தேவனுடைய எதிர்பார்ப்புகளை உணர்ந்து உண்மையாக இருப்பவர்கள் மாத்திரமே, அவனை எப்போதும் எதிர்த்து நிற்கக்கூடியவர்களாய் இருப்பார்கள். ஆயினும் அவர்களையும்கூட மேற்கொள்வதற்கு அவன் முயற்சித்துக் கொண்டிருக்கின்றான்.—3SM 389 (1889).

சாத்தானுடைய தந்திரமான சூழ்ச்சியின்மூலம், மரித்துப்போனவர் களைப்போன்ற உருவங்கள் தோற்றமளிக்கும். பொய்யை நேசிப்பவனும் உருவாக்குபவனுமான அவனோடு அநேகர் ஒன்று சேர்ந்து கொள்வார்கள். நம் நடுவில் இருக்கின்ற சிலர் விசுவாசத்தை விட்டுவிலகி வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுப்பார்கள். அவர்கள்மூலமாக சத்தியம் தூஷிக்கப்படும் என்பதால், நமது மக்களை நான் எச்சரிக்கின்றேன்.

ஒரு அற்புதமான வேலை நடைபெறும். தங்களது பகுத்தறியும் சிந்தையை இப்படிப்பட்ட பொய்யான வஞ்சகங்கள் மேற்கொள்ளும்படியாக அனுமதித்துவிட்ட ஊழியக்காரர்களும், வழக்கறிஞர்களும், மருத்துவர்களும் வஞ்சிக்கப்பட்டவர்களோடு இணைந்து, தாங்களும் வஞ்சிக்கிறவர் களாவார்கள். ஆவிக்குரிய ஒரு மதுமயக்கம் அவர்களை ஆட்கொள்ளும். —UL 317 (1905). ★

[1] இந்தக் குறிப்புகள் 1890–ம் ஆண்டு, இந்தியானா முகாம் கூட்டத்தில் "பரிசுத்த மாமிசம்" என்ற இயக்கத்துடன் தொடர்புபடுத்திக் கொடுக்கப்பட்டன. மேலும் விவரங்களுக்கு பார்க்கவும்: 2SM 31–39.

[2] உரத்த சத்தத்தின்போது தேவனுடைய மக்களின் ஊழியத்தில் அற்புதங்கள் நிகழும். (14–ம் அதிகாரத்தைப் பார்க்கவும்). ஆயினும்,

கிறிஸ்துவின் நாட்களில் இருந்த முக்கியத்துவம் அவைகளுக்கு இருக்காது. அற்புதங்கள் செய்யப்படுகின்ற காரியம் இனி ஒருபோதும் தெய்வீக சம்மதத்தின் அடையாளமாக இருக்காது.

# 12

# அசைக்கப்படுதல்

### சபை உறுப்பினராயிருப்பது இரட்சிப்பின் உத்தரவாதமல்ல

சபைப்பதிவேடுகளில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்திருக்கின்ற இருபதுபேரில் ஒருவர்கூட, தங்களது பூமிக்குரிய வாழ்க்கையை முடிக்க ஆயத்தமாக இல்லை. மெய்யாகவே அவர்கள் தேவனில்லாமலும், இவ்வுலகிலே சாதாரண பாவியைப்போல நம்பிக்கையில்லாமலும் இருக்கின்றார்கள் என்பதே சபைக்கு நான் கொடுக்கின்ற பக்திவிநயமான ஒரு செய்தியாகும்.—ChS 41 (1893).

சத்தியத்தைக் கேட்கவும் ஏற்றுக்கொள்ளவும் நல்ல சந்தர்ப்பங் களைப் பெற்று, ஏழாம்நாள் அட்வெண்டிஸ்ட் சபையுடன் தங்களை இணைத்துக்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளு கிறதாகத் தங்களைச் சொல்லிக்கொள்பவர்கள், பெயரளவிலுள்ள மற்ற சாதாரண சபைகளைவிட, இன்னும் அதிக பெலனைப் பெற்றிராதவர்களாகவும், தேவனிடம் தங்களைப் பிரதிஷ்டை செய்யாதவர்களாகவும் இருப்பதால், தேவனுடைய கற்பனைகளை எதிர்க்கின்ற மற்ற சபைகள் தேவனுடைய வாதைகளைப் பெற்றுக்கொள்ளப்போவது போலவே மெய்யாகவே இவர்களும் பெற்றுக்கொள்வார்கள்.—19MR 176 (1898).

### கோதுமையிலிருந்து பதர் பிரிக்கப்படுதல்

சபையில் பிரிவினைகள் வரும். இரண்டு பிரிவுகள் வளர்ச்சியடையும். கோதுமையும் களைகளும் அறுவடை வரையில் ஒன்றாகவே வளர்ந்து வரும்.—2SM 114 (1896).

சல்லடையால் சலித்தெடுக்கப்படுதலான ஒரு அசைக்கப்படுதல் நடைபெற இருக்கின்றது. சரியான நேரத்தில் கோதுமையிலிருந்து பதர் பிரிக்கப்பட வேண்டும். ஏனெனில், அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோகின்றது. உண்மையானவர்கள் அதிக பெலமுள்ளவர்களாக இருப்பதற்கு, இதுவே சரியான காலமாக இருக் கின்றது.—Letter 46, 1887.

தாத்தான், அபிராமுடைய கலகத்தின் சரித்திரம் மீண்டும் மீண்டுமாக நிகழ்கின்றது. அது காலத்தின் முடிவுவரை மீண்டுமாக நிகழ இருக்கின்றது. யார் கர்த்தர் பக்கமாக இருக்கப் போகின்றார்? யார் வஞ்சிக்கப்பட்டு, பின்பு தாங்களே வஞ்சிக்கிறவர்களாக மாறப்போகின்றார்?—Letter 15, 1892.

கர்த்தர் வெகுசீக்கிரத்தில் வர இருக்கின்றார். சத்தியத்தை நேசிக்காத, தேவனைக் கனப்படுத்தாத துன்மார்க்கர் நம் மத்தியிலே இருப்பதால் சுத்திகரிப்பின் வேலையும், பதரைப் பிரித்தெடுத்து நீக்கும் வேலையும், ஒவ்வொரு சபையிலும் கண்டிப்பாக நடந்தாக வேண்டும்.—RH March 19, 1895.

அசைக்கப்படக்கூடிய அனைத்தும் அசைக்கப்படுவதற்கேதுவான அசைக்கப்படுகின்ற காலத்தில் நாம் இருக்கின்றோம். சத்தியத்தை அறிந்தவர்கள் வார்த்தையிலும் செய்கையிலும் தேவனுடைய கட்டளை களுக்குக் கீழ்ப்படியாவிட்டால், கர்த்தர் அவர்களை மன்னிக்கமாட்டார்.—6T 332 (1900).

### உபத்திரவம் சபையைச் சுத்திகரிக்கும்

சுகபோகங்களோடுகூடிய செழிப்பு, பெயர்க் கிறிஸ்தவர்களை பெரும் எண்ணிக்கையில் அதிகரிக்கச் செய்யும். உபத்திரவம் அவர்களை சபையிலிருந்து வெளியேற்றி தூய்மைப்படுத்தும்.—4T 89 (1876).

ஒவ்வொரு ஆத்துமாவிற்கும் வரப்போகின்ற சோதனைக் காலம் வெகு தொலைவிலில்லை. மிருகத்தின் முத்திரை நம்மீது திணிக்கப்படும். உலகப்பிரகாரமான கோரிக்கைகளுக்கு படிப்படியாக இணங்கி, உலகப் பிரகாரமான பழக்க வழக்கங்களுக்கு ஒத்துப்போனவர்கள், ஏளனம், இகழ்ச்சி, அச்சுறுத்துகின்ற சிறைவாசம் மற்றும் மரணத்துக்குத் தங்களை உட்படுத்திகொள்வதைவிட, ஆட்சியிலிருக்கும் அதிகாரங்களுக்குப் பணிந்துபோவதை ஒரு கடினமான காரியமாக கருதமாட்டார்கள். போராட்டம் தேவனுடைய கற்பனைகளுக்கும் மனிதருடைய கற்பனைகளுக்கும் இடையில் இருக்கின்றது. இந்த நேரத்தில்தான் சபையிலிருக்கின்ற களிம்பிலிருந்து பொன்னானது பிரிக்கப்படும்.—5T 81 (1882).

ஆரோக்கியமான மற்றும் கேள்விகேட்கப்படக்கூடாத கிறிஸ்த வத்தைத் தங்களிடத்தே கொண்டிருப்பதாகத் காணப்படுகின்ற மனிதர்கள், உபத்திரவம் இல்லாத வேளையில் நமது அணி வரிசைகளில் வந்து இணைந்திருக்கின்றனர். ஆனால், உபத்திரவம் எழும்புமானால், அவர்கள் நம்மிடமிருந்து வெளியேறிவிடுவார்கள்.—Ev 360 (1890).

தேவனுடைய பிரமாணம் ஒன்றுமில்லாததாக ஆக்கப்படும்போது, சபை கட்டுப்படுத்துவதற்குக் கடினமான உபத்திரவங்களால் சலித்தெடுக்கப்படும். இப்போது நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகளவு எண்ணிக்கையில் நமது சபையிலுள்ளவர்கள், வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுப்பார்கள்.—2SM 368 (1891).

### மேற்போக்கான கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டுவிடுவார்கள்

சமாதானமும் செழிப்புமான காலத்தில் செய்யத்தவறிய ஊழியத்தை சபை ஒரு பயங்கரமான உபத்திரவ காலத்தில், மிகவும் சோர்வுண்டாக்குகின்ற, தடை செய்யப்படுகின்ற சூழ்நிலைகளின்கீழாக செய்யவேண்டியிருக்கும். உலகப்பிரகாரமான சமரசம் அமைதிப்படுத்திவிட்ட அல்லது தடுத்து நிறுத்திவிட்ட எச்சரிப்புகள், விசுவாசத்தின் பகைஞர்களிடமிருந்து வரக்கூடிய மிகவும் கடுமையான எதிர்ப்பின்கீழாகக் கொடுக்கப்படவேண்டும். அந்த நேரத்தில், ஊழியத்தின் முன்னேற்றத்திற்குத் தொடர்ந்து தடங்கலை உண்டுபண்ணும் செல்வாக்கை உடையவர்களாயிருக்கின்ற, மேற்போக்கான, மாறுதல் விரும்பாத[1] வகுப்பினர் (பழமைவாதிகள்) விசுவாசத்தை விட்டுவிடுவார்கள்.—5T 463 (1885).

கர்த்தர் தமது ஜனங்களை ஆசீர்வதித்து, சாத்தானின் வஞ்சகங்களை இனங்கண்டுகொள்ள அவர்களை ஆயத்தப்படுத்துகின்றார் என்பதை அவன் காணும்போது, தனிச்சிறப்பு வாய்ந்த தனது வல்லமையை உபயோகப்படுத்தி, ஆத்துமாக்களின் அறுவடையில் ஒருபுறம் மதவெறியையும், மறுபுறம் உயிரற்ற சடங்குகளையும் கொண்டுவந்து, அநேகரைத் தன்பக்கமாக சேகரிக்கும்படி கிரியைசெய்வான்.—2SM 19 (1890).

சத்தியத்தை அறிந்து விவேகமுள்ளவர்களாவதற்கு வாய்ப்புகளையும் சந்தர்ப்பங்களையும் பெற்றிருந்தும், தேவன் நிறைவேற்றி முடித்திருக்கக்கூடிய வேலைக்கு எதிரிடையாகத் தொடர்ந்து வேலை செய்பவர்களை அவர் வெளியேற்றித் தூய்மைப்படுத்துவார். ஏனெனில், இரு மனதோடுள்ள ஆர்வத்துடன் ஊழியம் செய்கின்ற எந்த ஒரு மனிதனின் சேவையையும் தேவன் ஏற்பதில்லை.—Ms 64, 1898.

நம்மைச் சுற்றிலும் சோதனைகள் தீவிரமாகும்போது, பிரிவினைகளும் ஐக்கியமுமாகிய இரண்டுமே நமது அணிவரிசைகளில் காணப்படும். யுத்த ஆயுதங்களைக் கைகளில் எடுப்பதற்கு இப்பொழுது ஆயத்தமாயிருக்கும் சிலர், உண்மையான ஆபத்து வரும் நேரங்களில் திடமான கற்பாறையின்மீது தாங்கள் கட்டவில்லை என்பதை வெளிப்படுத்துவார்கள். அவர்கள், சோதனைகளுக்கு இணங்கிப்போய்விடுவார்கள். அதிக வெளிச்சத்தையும்

அருமையான சலுகைகளையும் பெற்றிருந்தபோதிலும் அதனை நன்கு பயன்படுத்திகொள்ளாததினால், ஏதாவது ஒரு அல்லது மற்றுமொரு சாக்குப்போக்கைச் சொல்லி, நம் மத்தியிலிருந்து பிரிந்து சென்றுவிடுவர். —6T 400 (1900).

### நேரடியான சாட்சி அசைவை உண்டுபண்ணும்

நான் கண்ட அசைக்கப்படுதலின் அர்த்தம் என்ன என்று கேட்டேன். லவோதிக்கேயா சபைக்கு சத்தியமுள்ள சாட்சியின் (கிறிஸ்துவின்) ஆலோசனையினால் அருளப்பட்ட நேரடி சாட்சியினால் அந்த அசைவு உண்டாக்கப்படும் என்று எனக்குக் காண்பிக்கப்பட்டது. இந்தச் சாட்சி, அதைப் பெற்றுக்கொள்கிறவர்களின் மனதில் தனது தாக்கத்தை ஏற்படுத்தி, சத்தியத்தின் தரத்தை உயர்த்தி, நேரடியான சத்தியத்தைப் பொழியத் தக்கதாக அந்த நபரை வழிநடத்தும். சிலர் இந்த நேரடி சாட்சியைப் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் அதற்கு எதிராக எழும்புவார்கள்; மேலும் இதுவே, தேவனுடைய ஜனங்களின் மத்தியிலே ஒரு அசைவை உண்டுபண்ணும்.—1T 181 (1857).

ஆகானைப்போல இரட்சிக்கப்படுவதற்கான காலம் கடந்தபின், மிகவும் தாமதமாகப் பாவ அறிக்கை செய்யக்கூடியவர்கள் நம் மத்தியில் இருக்கின்றனர்... சரியான காரியங்களுடன் அவர்கள் ஒத்திசைவாக இல்லை. இருதயத்தைச் சென்றடையக்கூடிய நேரடி சாட்சியை அவர்கள் அலட்சியப்படுத்துவதுமன்றி, கடிந்துகொள்ளுதலை அளிப்பவர் அனைவரும் அமைதிப்படுத்தப்படுவதையும் பார்த்து அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். —3T 272 (1873).

கடந்த வருடங்களில் கொடுக்கப்பட்ட ஒரு நேரடி சாட்சியின் புதுப்பித்தலுக்காக கர்த்தர் மீண்டும் அழைக்கின்றார். அவர் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட ஒரு ஆவிக்குரிய வாழ்க்கைக்காக நம்மை அழைக்கின்றார். அவரது ஜனங்களின் ஆவிக்குரிய திறன்கள் வெகுநாட்களாக மந்த நிலையில் உள்ளது. எனவே, இப்படிப்பட்ட வெளிப்படையான மரணத்திலிருந்து அங்கு ஒரு உயிர்த்தெழுதல் உண்டாக வேண்டும். நாம் ஜெபத்தினாலும் பாவ அறிக்கையினாலும், ராஜாவின் (கிறிஸ்துவின்) 2—ம் வருகைக்கு நேர்ப்பாதையைச் செவ்வையாக்க வேண்டும்.—8T 297 (1904).

### நியாயமற்ற விமர்சனம் ஆத்துமாக்களின் இழப்பை ஏற்படுத்தும்

ஒரு காலத்தில் சத்தியத்தில் களிகூர்ந்திருந்த முழு குடும்பங்கள், தாங்கள் நேசித்திருந்தவர்கள்மீதும் யாரிடம் இனிமையான ஆலோசனையைப்

பெற்றிருந்தார்களோ அவர்கள்மீதும் கொண்டுவரப்பட்ட பொய்யான குற்றச் சாட்டுகளையும் தூஷணங்களையுங்குறித்துக் கேள்விப்படும்போது விசுவா சத்தை இழந்துவிடுவார்கள். அப்படிப்பட்ட காரியங்கள் நமது காலத்திலும் நடந்திருக்கின்றன; இனியும் அப்படியே தொடர்ந்து நடக்கும். களைகள் விதைக்கப்படத்தக்கதாக, அவர்கள் தங்கள் இருதயங்களைத் திறந்திருக் கின்றனர். அக்களைகள், கோதுமைப் பயிருக்கு மத்தியில் வளர்ந்து பலங்கொண்டபடியால், கோதுமைப் பயிர் மிகவும் குறைந்துபோனது. இவ்வாறாக விலைமதிப்புள்ள சத்தியம் அவர்கள்மீதான வல்லமையை இழந்து போனது.—TM 411 (1898).

## கள்ள உபதேசங்கள் சிலரை வெளியே கொண்டு செல்லும்

மதம் மற்றும் அறிவியல் என்று அழைக்கப்படும் இரண்டும் ஒன்றுக் கொன்று எதிரிடையாக வைக்கப்படும். ஏனெனில், வரையறைக்குட்பட்ட மனிதர் தேவனுடைய மகத்துவத்தையும், வல்லமையையும் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. "உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத் தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள்" (அப். 20:30) என்கின்ற பரிசுத்த எழுத்துக்கள் எனக்கு வெளிப்படையாகக் காண்பிக்கப்பட்டது. தேவனுடைய ஜனங்களின் மத்தியில் இந்த காரியம் நிச்சயமாகக் காணப்படும்.—Ev 593 (1890).

தவறான உபதேசங்களின் அறிமுகத்தினால் அசைக்கப்படுதல் ஏற்படும்போது, சத்தியத்தை மேலோட்டமாய் படித்திருந்தவர்கள், எங்குமே நங்கூரம் இடாமல் நிலையற்றிருக்கின்ற மணலைப்போல் இருப்பார்கள். தங்களது கசப்பான உணர்வுகளின் போக்கிற்கேற்ப, ஏதாவதொரு பக்கத்தில் அவர்கள் சாய்ந்துவிடுவார்கள்.—TM 112 (1897).

சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் பெற்றிராதபடியால், சத்துருவின் வஞ்சகங்களிலே அகப்படுவார்கள். அவர்கள் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்.—6T 401 (1900).

பொய்யான கோட்பாடுகளையும் சத்துரு கொண்டுவருவான். ஆசரிப்புக்கூடாரம் போன்ற உபதேசமென்பது கிடையாது என்றும் கூறுவான். இந்த ஒரு கருத்தினால், விசுவாசத்திலிருந்து வழுவிப்போகும் ஒரு நிலை ஏற்படும்.—Ev 224 (1905).

## சாட்சியாகமங்களை புறக்கணித்தல் மருளவிழுகையை ஏற்படுத்தும்

சாத்தானுடைய கொடியின்கீழ் நிற்கின்ற ஏழாம்நாள் அட்வெண்டிஸ்ட் மக்கள், தேவ ஆவியானவரின் சாட்சியாகமங்களில் அடங்கியுள்ளதான

கடிந்துகொள்ளுதல்கள், எச்சரிப்புகள் ஆகியவற்றின்மீதுள்ள தங்களது விசுவாசத்தை முதலாவதாக விட்டுவிடுவார்கள் என்கிற ஒரு காரியம் மட்டும் நிச்சயம்.—3SM 84 (1903).

தேவ ஆவியானவரின் சாட்சியாகமத்தைப் பயனற்றதாக ஆக்குவதே சாத்தானுடைய மிகக் கடைசியான (மாபெரும்) வஞ்சகமாகும். "தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்" (நீதி. 29:18). மெய்யான சாட்சியில் (சாட்சியாகமத்தில்) தேவனுடைய மீதமான ஜனத்தின் நம்பிக்கையை நிலைகுலையச் செய்ய வெவ்வேறு வழிகளிலும், வெவ்வேறு ஏதுகரங்கள்மூலமும், சாத்தான் சூழ்ச்சித் திறமையுடன் செயலாற்றுவான்.—1SM 48 (1890).

சாட்சியாகமங்களில் நமது சொந்த ஜனங்களின் விசுவாசத்தை நிலைகுலையச்செய்வதற்கு, சத்துரு தனது மிகவும் கைதேர்ந்த முயற்சிகளை எடுத்துள்ளான்... இது, சாத்தான் திட்டமிட்டதுபோலவே இருக்க வேண்டும் என்பதுதான் அவனது எண்ணமாகும். தேவ ஆவியின் சாட்சியாகமங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற, எச்சரிப்புகளுக்கும் கண்டனங்களுக்கும் செவி மடுக்காமல் இருக்கும்படி ஜனங்களுக்கு வழியை ஆயத்தம் செய்து கொண்டிருப்போர், தங்கள் வாழ்க்கையிலே ஒரு வெள்ளம் போன்ற எல்லாவிதமான தவறுகளும் நுழைவதைக் காண்பார்கள்.—3SM 83 (1890).

சாட்சியாகமங்களில் தேவனுடைய ஜனங்கள் கொண்டுள்ள விசுவாசத்தைப் பெலவீனப்படுத்துவதே சாத்தானின் திட்டமாகும். நமது விசுவாசத்தின் மூல உபதேசங்களாகிய நிலைத் தூண்களைக்குறித்த முக்கியமான காரியங்களில், அடுத்ததாக ஐயப்பாடு தொடரும். பின்பு, பரிசுத்த வேத வார்த்தைகளைக்குறித்த சந்தேகமும், அதன் பின்பு அழிவுக்கேதுவான கீழ்நோக்கிய அணிவகுப்பும் தொடரும். ஒரு காலத்தில் நம்பப்பட்ட சாட்சியாகமங்கள், சந்தேகிக்கப்பட்டு கைக்கொள் ளாமல் விட்டுவிடப்படும்பொழுது, வஞ்சிக்கப்பட்டவர்கள் அதோடு நின்று விடமாட்டார்கள் என்பதைச் சாத்தான் அறிந்திருக்கின்றான். எனவே, ஒருபோதும் குணப்படுத்த இயலாத அழிவிலே முடியக்கூடியதான வெளிப்படையான கலகத்திற்கு அவர்களைக் கொண்டுசென்று நிறுத்தும் வரைக்கும், அவன் தனது முயற்சிகளை இரு மடங்காக்குகிறான்.—4T 211.

## சபைத்தலைவர்கள் மத்தியில் குறைபாடுகள்

நம்மை ஆச்சரியப்படச்செய்த பிரகாசமான நட்சத்திரங்களில் பல அப்பொழுது இருளில் மறைந்துபோகும்.—PK 188 (c. 1914).

ஆண்டவர்தாமே மிகவும் கனம்பண்ணின மனிதர்கள், இப்பூமியின் சரித்திரத்தின் கடைசிக் காட்சிகளிலே ஆதி இஸ்ரவேலரைப்போலவே

நடந்துகொள்வார்கள்... கிறிஸ்துவானவர் தமது போதனைகளில் முன்வைத் திருந்த மாபெரும் கொள்கைகளிலிருந்து ஒரு வழிவிலகல் மனிதத் திட்டங்களைச் செயல்படுத்துவதும், லூசிபருடைய மாறுபாடான கிரியையின்கீழாக ஒரு தவறான செயலின் போக்கை நியாயப்படுத்துவதற்கு வேதவாக்கியங்களைப் பயன்படுத்துவதும், மனிதர்கள் சத்தியத்தைத் தவறாகப் புரிந்துகொள்வதில் அவர்களை உறுதிப்படுத்தும். மேலும், தவறான செயல்பாடுகளிலிருந்து அவர்களைக் காப்பதற்கு அவசியமான சத்தியம், ஓட்டையுள்ள ஒரு பாத்திரத்திலிருந்து வெளியேறும் நீரைப்போன்று ஆத்துமாவிலிருந்து வெளியேறிவிடும்.—13MR 379, 381 (1904).

அநேகர் தாங்கள் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டவர்களல்ல என்றும், அவரோடுகூட பிழைத்திருக்கும்படிக்கு உலகத்திற்கு மரித்தவர்கள் அல்ல என்றும் காண்பிப்பார்கள். பொறுப்பான பதவிகளில் இருக்கின்ற மனிதர்களின் மருளவிழுகைகள் அடிக்கடி நிகழக்கூடியதாயிருக்கும்.—RH Sept. 11, 1888.

**பரிசுத்தமடையாத ஊழியக்காரர்கள் களைபிடுங்கப்படுவார்கள்**

நமக்கு மிக அருகிலிருக்கின்ற மாபெரும் பிரச்சனை, (ஞாயிறு ஆசரிப்புச்சட்ட வலியுறுத்தல்) தேவன் நியமிக்காத அனைவரையும் களைந்து நீக்கிப்போடும். அதற்குப் பின்பாக, பின்மாரியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாயிருக்கின்ற தூய்மையான, உண்மையான, பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு ஊழியத்தை தேவன் பெற்றிருப்பார்.—3SM 385 (1886).

சாத்தானுடைய மிகவும் மோசமான தீவட்டியிலிருந்து தூண்டப் பெற்றதான, பொய்யான தீர்க்கதரிசன தீவட்டியைத் தங்கள் கரங்களில் பிடித்தவர்களாக அநேகர் நமது பிரசங்க மேடைகளில் நிற்பார்கள்...

இனி ஒருபோதும் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து செல்லாத சிலர் நம் மத்தியிலிருந்து வெளியேறிவிடுவார்கள். ஆனால், சத்தியம் பரவுவதைத் தடுக்கும்வண்ணம் இவர்களால் சுவர்களை எழுப்பமுடியாது. ஏனெனில், சத்தியம் முடிவுபரியந்தமும் முன்நோக்கியும், மேல்நோக்கியும் சென்றுகொண்டே இருக்கும்.—TM 409, 411 (1898).

வேதவாக்கியம் சொல்லுகின்றபடியும், தமது ஊழியக்காரிக்கு (எலன் உவைட்) தேவன் அளித்துள்ள தூதுகள் அறிவிக்கின்றபடியும், அநேக ஊழியக்காரர்களும் மருத்துவர்களும், விசுவாசத்தைவிட்டு விலகிப்போகக் கூடும்.—7MR 192 (1906).

**சபை விழுந்துபோவது போலத் தோன்றலாம்**

தேவனிடத்திலிருந்து உண்டாகின்ற அசைக்கப்படுதல் திரள்கூட்டமான மக்களைக் காய்ந்த இலைகளைப்போல பறக்கடிக்கும்.—4T 89 (1876).

மிகச்சிறந்த கோதுமைமணி மட்டுமே உள்ள தளங்கள் என்று நாம் காணக்கூடிய இடங்களிலிருந்துகூட, ஒரு மேகம் போன்ற திரளான பதர் காற்றால் பறக்கடிக்கப்படும்.—5T 81 (1882).

வெகுசீக்கிரத்தில் தேவனுடைய ஜனங்கள் கொடிய சோதனைகளால் சோதிக்கப்படுவார்கள். நேர்மையாயும் உண்மையாயும் இப்பொழுது தோற்றமளிப்பவர்களில் பெரும்பகுதியினர், தாங்கள் தரம் தாழ்ந்த உலோகமாக இருப்பதை நிரூபிப்பார்கள்...

கிறிஸ்துவினுடைய மார்க்கம் மிகுந்த வெறுப்புணர்ச்சியில் வைக்கப்படும்போதும், அவருடைய பிரமாணம் மிகவும் அலட்சியப்படுத்தப் படும்போதும், நமது வைராக்கியம் எழுச்சிமிக்கதாயும் நமது தைரியமும் உறுதியும் ஒருபோதும் பின்வாங்காததாயும் இருக்க வேண்டும். பெரும் பான்மையோர் நம்மைக் கைவிடும்போது சத்தியத்திற்கும் நீதிக்கும் பக்கபலமாக நிற்பதும், வெகு குறைவானவர்களே சாதனையாளர்களாக இருக்கும்போது கர்த்தருடைய யுத்தங்களைச் செய்வதுமே, நம்முடைய பரீட்சையாக இருக்கும். இப்படிப்பட்ட நேரங்களிலே, மற்றவர்களுடைய அவிந்துபோன குளிர்ந்த நிலையிலிருந்து அனலையும், அவர்களது கோழைத் தனத்திலிருந்து தைரியத்தையும், அவர்களது நம்பிக்கைதுரோகத்திலிருந்து உண்மையாயிருப்பதையும் நாம் சேகரித்துக்கொள்ள வேண்டும்.—5T 136 (1882).

சபை விழுவதுபோல் தோன்றலாம்; ஆனால் அது விழாது. சீயோனி லிருக்கின்ற பாவிகள் பதர்போல பறக்கடிக்கப்பட்டு, விலையேறப்பெற்ற கோதுமை மணிகளிலிருந்து பதர் பிரிக்கப்படும் வரையிலும்—அது நிலை நிற்கும். இது கடுமையான சோதனையாகும். இருந்தபோதும் இது நடைபெற வேண்டிய ஒன்றாகும்.—2SM 380 (1886).

புயல் நெருங்கிவந்துகொண்டிருக்கும்போது, மூன்றாம் தூதனுடைய தூதை பெயரளவில் விசுவாசித்து, அந்த சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலமாகத் தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளாத ஒரு பெரும் வகுப்பினர், தங்களது நிலையிலிருந்து விலகி, எதிரியின் அணிவரிசையில் இணைந்துகொள்வார்கள்.—GC 608 (1911).

**தேவனுக்கு உண்மையானவர்கள் வெளிப்படுத்தப்படுவார்கள்**

அசைக்கப்படுகின்ற சோதனையின் நேரத்திலே, கர்த்தருக்கென்று இருக்கக்கூடிய உண்மையான ஊழியக்காரர்கள் காணக்கூடிய விதத்தில் வெளிப்படுத்தப்படுவர். பாகாலுக்குத் தங்கள் முழங்காலை முடக்காத விலையேறப்பெற்ற அநேகர், இப்பொழுது மறைக்கப்பட்டிருக்கின்றனர்.

உங்கள்மீது பிரகாசித்ததான, வீரியம் மிகுந்த ஜுவாலையாக பிரகாசிக்கின்ற ஒரு ஒளியை அவர்கள் பெற்றிருக்கவில்லை. ஆனாலும் ஒரு கடுமையான, கவர்ச்சியற்ற வெளிப்புற சூழ்நிலையின்கீழாக, உண்மையான ஒரு கிறிஸ்தவ குணத்தின் சுத்தப்பிரகாசமானது வெளிப்படுத்தப்படும். பகல் நேரத்திலே வானத்தை நாம் பார்க்கின்றோம். ஆனால், அங்கிருக்கின்ற நட்சத்திரங்களை நாம் பார்க்க முடிவதில்லை. அவைகள் அங்கேதான் ஆகாயமண்டலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நம் கண்களால் அவைகளை அடையாளம் காண முடிவதில்லை. இரவிலே தான் அவைகளின் மெய்யான பளபளப்பை நாம் காண்கின்றோம்.—5T 80, 81 (1882).

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உபத்திரவம் நேரிடும்போது, சாட்சிகளா யிருப்பவர்கள் கிறிஸ்துவிற்காகவோ அல்லது அவருக்கு எதிராகவோ நிற்கத் தீர்மானம் எடுக்கின்றார்கள். தவறான விதத்தில் பழிசுமத்தப்பட்ட மனிதர்மேல் அனுதாபம் காட்டுகிறவர்களும், அவர்களுக்கு விரோதமாகக் கசப்புணர்ச்சி இல்லாதவர்களும், கிறிஸ்துவிற்காகத் தங்களது அன்பைக் காண்பிக்கின்றார்கள்.—ST Feb. 20, 1901.

எதிர்ப்புகள் எழும்பட்டும்; மீண்டும் மதவெறியும் சகிக்க இயலா மையும் ஆட்சி செய்யட்டும்; உபத்திரவம் தூண்டப்படட்டும்; அப்போது அரைமனமுள்ளவர்களும் மாய்மாலக்காரர்களும் தடுமாற்றமடைந்து தங்கள் விசுவாசத்தை விட்டுவிடுவார்கள். ஆனால், உண்மையான கிறிஸ்தவனோ ஒரு கற்பாறையைப்போல, செழிப்பான காலங்களில் இருந்ததைப்பார்க்கிலும், இப்போது தனது பிரகாசமான நம்பிக்கையுடனும் தனது பலமான விசுவாசத்துடனும் உறுதியாக நிற்பான்.—GC 602 (1911).

## விசுவாசத்தை விட்டுவிலகிப் போனவர்களின் இடத்தைப் புதிய விசுவாசிகள் நிரப்புவார்கள்

சிலர் அசைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டு வழியிலே விட்டுவிடப் பட்டனர். பரிசாகப் பெறப்பட்ட வெற்றியையும் இரட்சிப்பையும் போதுமானதாக எண்ணி, அதற்காக இடைவிடாது வேதனையோடு கெஞ்சிமன்றாடி பெற்றுக்கொண்டவர்களுடன் தங்களை இணைத்துக்கொள்ளாமல், கவனக் குறைவாகவும் அலட்சியமாகவும் இருந்தவர்கள் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை, அவர்கள் இருளில் பின்னாக விட்டுவிடப்பட்டார்கள். அவர்களது இடங்கள் சத்தியத்தைப் பிடித்துக்கொண்டு அணிவரிசைகளில் சேர்ந்துகொண்ட மற்றவர்களால் உடனடியாக நிரப்பப்பட்டன.—EW 271 (1858).

தொடர்ச்சி விட்டுப்போயிருக்கின்ற அணிவரிசைகள், கிறிஸ்து குறிப்பிடுகின்ற பதினோராம் மணிநேரத்திலே வந்து சேருகிறவர்களான

கூட்டத்தாரால் நிரப்பப்படும். தேவனுடைய ஆவியானவர் அநேகருடன் போராடிக்கொண்டிருக்கிறார். சத்தியம் எது என்பதைக் கற்றுக்கொள்ள வாய்ப்பை இப்பொழுது பெறாதவர்களுக்கு, தேவனின் அழிக்கக்கூடியதான நியாயத்தீர்ப்புகளின் காலம் கிருபையின் காலமாக இருக்கின்றது. கர்த்தர் அவர்களைக் கனிவோடு நோக்கிப் பார்க்கின்றார். உள்ளே பிரவேசிக்க விரும்பாதவர்களுக்கு கதவு அடைக்கப்பட்டிருக்கும் அதேநேரம், அவருடைய கிருபை நிறைந்த இதயம் தொடப்பட்டு, அவர்களை இரட்சிக்கப்படும்படிக்கு அவருடைய கரம் இன்னமும் நீட்டப்பட்டிருக்கின்றது. இந்தக் கடைசி நாட்களிலே, சத்தியத்தை முதன் முதலாகக் கேட்கின்ற பெருந்திரளான கூட்டத்தார் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.—Letter 103, 1903.

கொடிகள் ஒவ்வொன்றாக புழுதியில் விழும்படி திரள்திரளான ஜனங்கள் கர்த்தருடைய சேனையிலிருந்து விலகி சத்துருவினுடைய சேனையில் சேரும்போது, கோத்திரம் கோத்திரமாக ஜனங்கள் சத்துருவின் அணிகளிலிருந்து பிரிந்து கற்பனைகளைக் கைக்கொள்கின்ற தேவனுடைய ஜனங்களோடு இணைந்து கொள்ளுவார்கள்.—8T 41 (1904). ★

[1] நவீனநோக்கு இறையியலாளர்களிடமிருந்து பழமைவாத இறையியலாளர்களை இங்கு எலன் உவைட் வேறுபடுத்திக் காட்டவில்லை; மாறாக, "உலகப்பிரகாரமான சமரசத்தை" முதலாவதாக வைத்து, தேவனுடைய காரியத்தை இரண்டாம் நிலைக்குத் தள்ளுவோரைப்பற்றியே இங்கு விளக்குகிறார்.

# 13

# பின்மாரி

## ஆவியானவரின் வேலை மழைக்கு ஒப்பானது

“அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும், பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார்.” கிழக்கத்திய நாடுகளிலே முன்மாரி விதைப்பின் காலத்திலே பெய்யும். விதைத்திருக்கின்ற விதை முளைப்பதற்கு அது அவசியமாயிருக்கின்றது. இப்படிப்பட்ட வளப்படுத்தும் மழையினுடைய செல்வாக்கின்கீழ் இளஞ் செடிகள் முளைவிட ஆரம்பிக்கும். அந்தப் பருவ காலத்தின் முடிவினில் பெய்கின்ற பின்மாரி, கதிர்களை முற்றச்செய்து அறுவடைக்குப் பயிரை ஆயத்தமாக்குகின்றது. பரிசுத்த ஆவியானவரின் வேலையை[1] நமக்கு விளக்கிச் சொல்ல, கர்த்தர் இயற்கையின் இந்தச் செயல்பாடுகளை உபயோகிக்கின்றார்.

விதையை முளைக்கச் செய்ய பனியும் முன்மாரியும், பயிரை அறுவடைக்கு ஆயத்தப்படுத்த பின்மாரியும் எப்படிக் கொடுக்கப்படுகின்றதோ, அதேபோல ஆவிக்குரிய இயல்பான வளர்ச்சியின் செயல்முறையில் நாம் ஒரு கட்டத்திலிருந்து அடுத்தக் கட்டத்திற்கு வளர்ந்தேற பரிசுத்த ஆவியானவரும் கொடுக்கப்படுகின்றார். விதை முதிர்ந்துவருவது, ஆத்துமாவில் தேவ கிருபையினுடைய வேலையின் முழுமையைக் குறிக்கின்றது. தேவனுடைய நீதி ஒழுக்க சாயல் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நம் குணங்களில் பூரணமாக்கப்பட வேண்டும். நாம் முற்றிலுமாக கிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்துவராக மாற்றப்பட வேண்டும்.

பூமியின் அறுவடைக்கு விளைச்சலை முற்றச்செய்கின்ற பின்மாரி, மனுஷகுமாரனின் வருகைக்கு சபையை ஆயத்தப்படுத்துகின்ற ஆவிக்குரிய கிருபையைக் குறிக்கின்றது. ஆனால், முன்மாரி பெய்யாவிட்டால் (விதையில்) உயிர் இருக்காது; பச்சையான கதிர் அதில் முளைக்காது; முன்மாரி தன்னுடைய வேலையைச் செய்திராத பட்சத்தில், பின்மாரியால் எந்த ஒரு விதையையும் முழுமையடையச் செய்ய முடியாது.—TM 506 (1897).

## A. திருச்சபை முழுவதற்குமான சரித்திரப்பூர்வமான ஒரு அப்பியாசம்

### கி.பி. 31–ல்—பெந்தெகொஸ்தே நாளில் முன்மாரி பொழிந்தது

கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த அவர்கள் (சீஷர்கள்), பிதாவின் வாக்குத்தத்தமான—ஆவியானவரின் பொழிவிற்காக எருசலேமிலே காத்திருந்தார்கள். ஒன்றுமே செய்யாமல் அவர்கள் காத்திருக்க வில்லை. அவர்கள், "நாடோறும் தேவாலயத்தில் தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள்" என்று (லூக். 24:53) வேதம் கூறுகின்றது…

சீஷர்கள்வாக்குத்தத்தம்நிறைவேறக்காத்திருந்தபோது, உண்மையான மனவருத்தத்துடன் தங்களது இருதயங்களைத் தாழ்த்தி, தங்களது அவிசுவாசத்தை அறிக்கை செய்தார்கள்… தங்களது அன்றாட ஜீவியத்தில், மனிதர்களைச் சந்திப்பதினால் ஏற்படும் தொடர்பிலே, உரையாடல்கள்மூலம் பாவிகளைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தக்கூடிய சரியான வார்த்தைகளைப் பேசுவதற்கு ஏற்ற ஒரு தகுதியைப் பெற்றுக்கொள்வதற்காக ஆழ்ந்த ஊக்கத்துடன் சீஷர்கள் ஜெபித்தனர். எல்லா வேறுபாடுகளையும், தன்னை உயர்த்த வேண்டும் என்ற எல்லா விருப்பத்தையும் அப்புறப்படுத்திவிட்டு, கிறிஸ்தவ ஐக்கியத்தில் ஒருவருக்கொருவர் நெருங்கி வந்தனர்.—AA 35–37 (1911).

சீஷர்கள் பூரணமான ஐக்கியத்திற்குள் வந்து, மேலான இடத்தைப் பிடிக்கும் போட்டி அவர்களில் மறைந்தபிறகே ஆவியானவர் பொழியப்பட்டார். —8T 20 (1904).

அப்போஸ்தலர்களின் நாட்களில் நிகழ்ந்த ஆவியின் அருள்மாரி—முன்மாரியின் ஆரம்பமாக இருந்தது. அதனுடைய பலனும் மகிமைமிக்கதாக இருந்தது. காலத்தின் முடிவுவரையிலும், ஆவியானவரின் பிரசன்னம் அவரது உண்மையான சபையோடு நிலைத்திருக்க வேண்டியதாக இருக்கின்றது. —AA 54, 55 (1911).

### பெந்தெகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்ட முன்மாரியின் விளைவுகள்

ஆவியானவரின் செல்வாக்கின்கீழ் பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கான துதியின் பாடல்களுடன், மனந்திரும்புதல் மற்றும் பாவ அறிக்கையின் வார்த்தைகள் ஒன்றரக் கலந்தன… ஒரே நாளிலே, ஆயிரக்கணக்கானோர் மனந்திரும்பினர்…

பரிசுத்த ஆவியானவர்… இதுவரை அவர்களுக்குப் பழக்கமில்லாத மொழிகளைச் சரளமாய்ப் பேசத்தக்கதாக வல்லமையை அவர்களுக்கு

அளித்தார்... அவர்கள் தாங்களாகவே வாழ்நாள் முழுவதும் செய்து முடிக்க முடியாததை, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்காகச் செய்தார். —AA 38–40 (1911).

அவர்கள் இருதயங்கள் அளவுக்கு மிஞ்சி, மிகவும் முழுமையான, மிகவும் ஆழமான, பற்பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதான, ஒரு தாராள சிந்தையால் நிறைக்கப்பட்டிருந்தது. எனவே அது பூமியின் கடைமுனைவரைக்கும் சென்று, கிறிஸ்துவின் வல்லமையைக்குறித்து சாட்சிகூறும்படிக்கு அவர்களைத் தூண்டியது.—AA 46 (1911).

பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் பொழியப்பட்டதன் விளைவு என்ன? உயிர்த்தெழுந்த ஒரு இரட்சகரைப்பற்றின நற்செய்தி, மனிதர்கள் குடியிருக்கும் இவ்வுலகின் எல்லா மூலைகளுக்கும் கொண்டுசெல்லப்பட்டது... சபை, எல்லாத் திசைகளிலிருந்தும் மனந்திரும்பிய ஜனங்கள் தன்னிடத்தில் ஒன்றுசேர்க்கப்படுவதைக் கண்டது. பின்வாங்கிப்போனவர்கள் மீண்டும் மனந்திரும்புதலுக்குள் நடத்தப்பட்டனர்... கிறிஸ்துவின் குணங்களுக்கு ஒத்த குணங்களை வெளிப்படுத்துவதும், அவரது ராஜ்யம் விரிவடையப் பாடுபடுவதுமே விசுவாசிகளின் இலட்சியமாக இருந்தது.—AA 48 (1911).

### பின்மாரிக்கான வாக்குத்தத்தம்

ஆவியானவர் அப்போஸ்தலர்களின் நாட்களில் பொழியப்பட்டது "முன்மாரி" ஆகும். அதன் விளைவு மகிமையாயிருந்தது. ஆனால் பின்மாரி, அதைக்காட்டிலும் இன்னும் மிகுதியானதாய் இருக்கும்.—8T 21 (1904).

பூமியினுடைய அறுவடையின் முடிவுவேளையில் ஒரு விசேஷித்த ஆவிக்குரிய கிருபையின் அனுக்கிரக பொழிவு, மனுஷகுமாரனின் வருகைக்கு சபையை ஆயத்தப்படுத்தும்படிக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கின்றது. ஆவியானவரின் இந்தப் பொழிவு, பின்மாரிக்காலத்து மழைக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றது.—AA 55 (1911).

தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் இந்தப் பூமியை முடிவாகச் சந்திப்பதற்கு முன்னதாக, அப்போஸ்தலர்கள் காலத்திலிருந்து இதுவரைக் கண்டிராத, ஆரம்ப காலத்தில் கொண்டிருந்த தேவபக்தியின் ஒரு எழுப்புதல், கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலே காணப்படும். தேவனுடைய ஆவியும் வல்லமையும் அவரது ஜனங்கள்மீது ஊற்றப்படும்.—GC 464 (1911).

இந்த ஊழியம், பெந்தெகொஸ்தே நாளில் நடந்ததற்கு ஒத்ததாக இருக்கும். சுவிசேஷம் முதலாவது சொல்லப்பட்ட நாட்களில், விலைமதிப்புள்ள விதைகள் முளைத்தெழும்பத்தக்கதாக பரிசுத்த ஆவியானவரின் பொழிவு

"முன்மாரியாகக்" கொடுக்கப்பட்டதைப்போல, அறுவடைக்குப் பயிரை முற்றச்செய்யத்தக்கதாக அதன் முடிவில் "பின்மாரிப் பொழிவாகக்" கொடுக்கப்படும்.—GC 611 (1911).

**பின்மாரி உரத்தசத்த ஊழியத்தை உண்டுபண்ணும்**

மூன்றாம் தூதனின் உரத்த சத்தத்திற்கு வல்லமை அளிக்கவும், கடைசி ஏழு வாதைகள் ஊற்றப்படும் அந்தக் காலகட்டத்தில் நிற்கத்தக்கதாக பரிசுத்தவான்களை ஆயத்தப்படுத்தவும், "பின்மாரி" அல்லது இளைப்பாறுதல், கர்த்தருடைய சமூகத்திலிருந்து வரும்.—EW 86 (1854).

சர்வாயுதங்களைத் தரித்திருந்தவர்கள், மிகுந்த வல்லமையோடு சத்தியத்தைப் பேசக்கேட்டேன்... அது பலனுள்ளதாயிருந்தது... எது இந்தப் பெரிய மாற்றத்தை உண்டாக்கிற்று என்று நான் கேட்டேன். ஒரு தூதன்: "அது பின்மாரி, கர்த்தருடைய சமூகத்திலிருந்து வருகின்ற இளைப்பாறுதல், மூன்றாம் தூதனின் உரத்த சத்தம்" என்று கூறினான்.—EW 271 (1858).

## B. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கு அடுத்ததான தனிப்பட்ட அப்பியாசம்.

**முன்மாரி மனமாற்றத்தை உண்டுபண்ணும்; பின்மாரி கிறிஸ்துவைப் போன்ற ஒரு குணத்தை முதிர்ச்சியடையச்செய்யும்!**

நமது கிறிஸ்தவ வாழ்க்கையை துவங்குவதற்கு வல்லமை அளித்து முதலாவது துணைபுரிந்ததான முன்மாரியை, நமது அனுபவத்தின் எந்தக் காலகட்டத்திலும் தள்ளிவிடக்கூடாது. முன்மாரியின்கீழ் நாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வதங்கள் கடைசிவரையிலும் நமக்கு அவசியமாயிருக்கின்றது... பரிசுத்த ஆவியானவருக்காக நாம் தேவனைத் தேடும்போது, அது நம்மில் சாந்தகுணத்தையும், தாழ்மையான மனதையும், பூரணப்படுத்தும் பின்மாரிக்காக விழிப்போடு தேவனை சார்ந்திருப்பதையும் நம்மில் உண்டுபண்ணும்.—TM 507, 509 (1897).

பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு ஆத்துமாவிலும் தங்கியிருக்க வாஞ்சிக்கின்றார். அவரை ஒரு மதிப்புள்ள விருந்தாளியாக வரவேற்று, பெற்றுக்கொள்பவர்கள் கிறிஸ்துவில் முழுமையடைவர். நம்மில் துவங்கப்பட்ட நற்கிரியை நிறைவடையும். தூய்மையற்ற சிந்தனைகள், வக்கிரமான மன உணர்ச்சிகள், கலகச்செயல்கள் போன்றவை இருந்த இடங்களை, பரிசுத்த சிந்தனைகள், பரலோக வாஞ்சைகள் மற்றும் கிறிஸ்துவைப் போன்ற செயல்கள் எடுத்துக்கொள்ளும்.—CH 561 (1896).

தேவனுடைய ஆவியானவரை நாம் ஓரளவு பெற்றிருக்கலாம். ஆனால் ஜெபத்தினாலும், விசுவாசத்தினாலும் தொடர்ந்து அவரை அதிகமாகத்

தேடவேண்டும். அது நம்முடைய முயற்சிகளை நிறுத்திவிடுவதற்கு ஒருபோதும் இடமளிக்காது. நாம் முன்னேற்றம் அடையாதிருப்போமானால், முன்மாரி மற்றும் பின்மாரி ஆகிய இரண்டையும் பெற்றுக்கொள்வதற்கான ஒரு மனப்பான்மையில் நம்மை நாமே வைத்துக் கொள்ளாதிருப்போமானால், நம் ஆத்துமாக்களை நாம் இழந்து விடுவோம், அதற்கான பொறுப்பு நம் வாசற்படியிலேயே கிடக்கும்...

முகாம் கூட்டங்களில் கூடுகின்றது போன்ற சபைக் கூட்டங்கள், சபையாக வீடுகளில் கூடுகின்ற கூட்டங்கள், ஆத்துமாக்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஊழியம் செய்யக்கூடிய வாய்ப்புகள் ஆகியவை அனைத்தும் முன்மாரி மற்றும் பின்மாரி கொடுக்கப்படுவதற்கு தேவனால் நியமிக்கப்பட்ட சந்தர்ப்பங்களாகும்.—TM 508 (1897).

தேவ ஆவியானவருக்கு வழி ஆயத்தம் செய்யப்படும்போது ஆசீர்வாதம் வந்துசேரும். பூமியின்மீது மழை பொழியாதபடிக்கு வானத்தின் பலகணிகளைச் சாத்தானால் அடைக்க முடியுமென்றால்கூட, தேவனுடைய ஜனங்களின்மீது ஆசீர்வாதமான ஒரு பொழிவு இறங்கி வருவதை அவனால் ஒருபோதும் தடைசெய்ய முடியாது.—1SM 124 (1887).

### பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கத்தக்கதாக நாம் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்

பரிசுத்த ஆவியானவர் வந்திறங்க வேண்டுமென்பதற்காக சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளிலே ஜெபித்ததுபோல, நாமும் பரிசுத்த ஆவியானவர் இறங்கும்படிக்கு மிக ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். அந்தக் காலத்திலே அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அவ்வளவு தேவையாயிருந்தாரானால், இப்போது நமக்கு இன்னும் அதிகமாய் தேவைப்படுகின்றார்.—5T 158 (1882).

திருச்சபைமீது பரிசுத்த ஆவியானவர் இறங்குவது, ஏதோ எதிர்காலத்தில் நடக்கப்போகின்ற சம்பவமாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இப்போதே அவரைப் பெற்றுக்கொள்வதுதான் சபையின் சிலாக் கியமாக இருக்கிறது. எனவே, அதற்காக நாடுங்கள்; அதற்காக ஜெபியுங்கள்; அதை நம்புங்கள். நாம் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதை அளிப்பதற்கு பரலோகமும் காத்துக் கொண்டிருக்கின்றது.—Ev 701 (1895).

பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள நாம் கொண்டிருக்கும் வாஞ்சையையும், அதற்காக நாம் செயல்படுத்தும் விசுவாசத்தையும், நமக்குத் தரப்பட்டிருக்கின்ற வெளிச்சத்தையும் அறிவையும் நாம் பயன் படுத்தும் அளவையும் பொறுத்தே, பரிசுத்த ஆவியானவரை நாம் பெற்றுக் கொள்ளுகின்ற அளவும் இருக்கும்.—RH May 5, 1896.

பரிசுத்த ஆவியின் வரத்தைக் கர்த்தரிடம் கேட்கவும், நமது விண்ணப்பங்களுடன் அவரைத் தொந்தரவு செய்யவும், நாம் போதுமான விருப்பமில்லாமல் இருக்கின்றோம். இந்தக் காரியத்தில் நாம் அவரைத் தொந்தரவு செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார். அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக, நமது விண்ணப்பங்களை நாம் வற்புறுத்திக் கேட்கவேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.—FE 537 (1909).

## உண்மையான மனந்திரும்புதலுடன் நமது இருதயங்களை நாம் தாழ்த்த வேண்டும்

நமது மத்தியில் வரவேண்டிய உண்மையான தேவபக்தியின் ஒரு எழுப்புதல், நமது தேவைகள் அனைத்திலும் மிகவும் பெரிதானதும் மிகவும் அவசரமானதுமாக இருக்கின்றது. நமது முழு முதல் வேலையே, அதைத் தேடுவதாகத்தான் இருக்க வேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள ஊக்கமான முயற்சி இருக்க வேண்டும். தேவன் தமது ஆசீர்வாதத்தை நம்மீது பொழிய விருப்பமில்லாதிருப்பதால் அல்ல, அதைப் பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாக இல்லாததால் அதைப் பெற்றுக் கொள்வதில்லை. உலகப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு மனமுவந்து நல்ல ஈவுகளைக் கொடுக்க எப்படி ஆயத்தமாக இருக்கிறார்களோ, அதற்கும் மேலாக தம்மிடத்தில் கேட்பவர்களுக்கு தமது பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்க நம் பரலோகப் பிதா அதிக விருப்பமுள்ளவராக இருக்கிறார். ஆனால், பாவ அறிக்கையினாலும், தாழ்மையினாலும், மன வருந்துதலினாலும், ஊக்கமான ஜெபத்தினாலும், நமக்கு அளிப்பதற்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கின்ற ஆசீர்வாதத்தின்மீதுள்ள நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டியது நமது வேலையாகும். ஜெபத்திற்குக் கிடைக்கும் பதிலாகமட்டுமே ஒரு எழுப்புதல் எதிர்பார்க்கப்பட வேண்டும்.—1SM 121 (1887).

நம் மத்தியிலே முழுமையான ஒரு எழுப்புதல் உண்டாக வேண்டும் என்று நான் உங்களுக்குக் கூறுகின்றேன். மனமாற்றம்பெற்ற ஒரு ஊழியம் செய்யப்படவேண்டும். அங்கு பாவ அறிக்கைகளும், பாவத்திற்கான மனவருத்தமும், மனமாற்றங்களும் கண்டிப்பாக ஏற்படவேண்டும். தேவனுடைய வார்த்தையைப் போதிக்கின்ற அநேகர், குணங்களை மாற்றமடையச் செய்யும் கிறிஸ்துவின் கிருபையைத் தங்கள் இருதயங்களிலே பெற்றிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. மிகவும் நிரந்தர தாமதமாகப் போய்விடுவதற்கு முன்னதாக, முழுமையான வேலையைச் செய்வதற்கான அவர்களது பாதையில், தடையாய் நிற்பதற்கான எதையும் அவர்கள் அனுமதிக்கக் கூடாது.—Letter 51, 1886.

### எழுப்புதலோடு சீர்திருத்தமும் இணைந்துகொள்ள வேண்டும்

பரிசுத்த ஆவியானவரது ஊழியத்தின்கீழ் ஒரு எழுப்புதலும், ஒரு சீர்திருத்தமும் உண்டாகவேண்டும். எழுப்புதலும், சீர்திருத்தமும் இரண்டு வெவ்வேறான காரியங்களாகும். ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு புதுப்பித்தலையும், மனம் மற்றும் இருதயத்தினுடைய வல்லமைகளை எழுச்சியூட்டும் ஒரு இயல்பையும், ஆவிக்குரிய மரணத்திலிருந்து ஒரு உயிர்த்தெழுதலையும் எழுப்புதல் குறிக்கின்றது. மீண்டும் ஒழுங்கான ஒரு மறுசீரமைப்பையும், நமது எண்ணங்கள் மற்றும் கொள்கைகளிலும், வழக்கமாக செய்யும் செயல்கள் மற்றும் பழக்கவழக்கங்களிலும் உண்டாகும் ஒரு மாற்றத்தையும் சீர்திருத்தம் குறிக்கின்றது. சீர்திருத்தம் ஆவியின் எழுப்புதலுடன் இணைக்கப்படாவிட்டால், நீதியின் நற்கனியை கொண்டுவரமாட்டாது. எழுப்புதலும் சீர்திருத்தமும், தங்களது நியமிக்கப்பட்ட வேலையைச் செய்யவேண்டும். அப்படிச்செய்வதற்கு, இரண்டுமே ஒன்றோடொன்று கண்டிப்பாக ஒருங்கிணைந்திருக்க வேண்டும்.—RH Feb. 25, 1902.

### அனைத்துச் சண்டைகளையும் கருத்துவேறுபாடுகளையும் நாம் ஒதுக்கித்தள்ள வேண்டும்

வேலையாட்கள் தங்களது சொந்த ஆத்துமாக்களில் கிறிஸ்துவை நிலைத்திருக்கச் செய்யும்போதும், அனைத்து சுயநலமும் மரித்துபோகும் போதும், மிக உயர்ந்த அதிகாரத்திற்காக போராட்டமோ போட்டிமனப் பான்மையோ இல்லாமல் இருக்கும்போதும், ஒருமனப்பாடு தொடர்ந்து இருக்கும்போதும், ஒருவருக்கொருவர் காட்டும் அன்பு காணப்பட்டு உணரப்படுவதற்காக அவர்கள் தங்களையே பரிசுத்தம் செய்துகொள்ளும் போதும் மாத்திரமே, தேவனுடைய வாக்குத்தத்தத்தின் ஒரு எழுத்தும் ஒரு எழுத்தின் உறுப்பும் ஒருபோதும் ஒழிந்துபோகாது என்பது எப்படி நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாய் பரிசுத்த ஆவியானவரின் கிருபையின் பொழிவு அவர்கள்மீது பொழியும். ஆனால் ஊழியர்கள் தங்களது சொந்த மேம்பட்ட நிலையைக் காட்டிக்கொள்ளும்படியாக மற்றவர்களின் வேலையைக் குறைத்து மதிப்பிடும்போது, தங்களது சொந்தவேலை பெற்றிருக்க வேண்டிய முத்திரையைப் பெற்றிருக்கவில்லை என்பதை நிரூபிப்பார்கள். தேவன் அவர்களை ஆசீர்வதிக்க முடியாது.—1SM 175 (1896).

கர்த்தருடைய மகா நாளிலே கிறிஸ்துவை நமது உயர்ந்த கோட்டையாக, நமது அடைக்கலமாகக்கொண்டு நாம் நிற்கவேண்டுமானால், எல்லாப் பொறாமையையும், சுயத்தை உயர்த்திக் காண்பிக்கத் தூண்டுகின்ற எல்லாப் போட்டிகளையும் நாம் உதறித்தள்ளவேண்டும். பரிசுத்தமில்லாத

இந்தக் காரியங்களின் வேர்கள் மீண்டும் நமது வாழ்க்கையில் முளைத்து விடாதபடிக்கு, முழுவதுமாய் அவைகளை நாம் அழிக்க வேண்டும். நாம் முழுவதுமாக நம்மைக் கர்த்தரின் பக்கமாக நிறுத்த வேண்டும்.—TDG 258 (1903).

கிறிஸ்தவர்கள் தங்களிடத்தில் காணப்படுகின்ற எல்லா வேறுபாட்டையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, தொலைந்துபோன ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக, தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கட்டும். அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை விசுவாசத்தோடு கேட்கக்கடவர்கள், அப்போது அது அவர்களுக்கு வரும்.—8T 21 (1904).

## ஒருவரை ஒருவர் நேசியுங்கள்

கிறிஸ்தவம் என்பதே ஒருவருக்கொருவர் மிகவும் மென்மையான அன்புணர்வை வெளிப்படுத்துவதாகும்... கிறிஸ்துவானவர் தாம் உண்டாக்கின சிருஷ்டிகளிடமிருந்து, எல்லாவற்றிற்கும் மேலான அன்பைப் பெற்றுக்கொள்ள வேண்டியவராய் இருக்கின்றார். மனிதன் தனது சக மனிதர்களுக்காகக்கூட, ஒரு புனிதமான மதிப்பை நினைவில் வைத்துப்பேண வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகின்றார். தேவனிடத்திலிருந்து பிறக்கின்ற அன்பினாலேயே, இரட்சிக்கப்படுகின்ற ஒவ்வொரு ஆத்துமாவும் இரட்சிக்கப்படும். மெய்யான மனமாற்றம் என்பது சுயநலத்தலிருந்து விடுபட்டு, தேவனிடமும் ஒருவரோடொருவரிடமும் பரிசுத்தமாக்கப்பட்ட அன்புணர்வைக் காட்டுவதற்கான ஒரு மாற்றமே ஆகும்.—1SM 114, 115 (1901).

அன்பும், தூய்மையும் தேவன் மிகவும் உயர்வாக மதிக்கின்ற குறிப்பிடத்தக்க பண்புகள் ஆகும். இந்தக் குறிப்பிடத்தக்க பண்புகள் ஒவ்வொரு கிறிஸ்தவனாலும் போற்றி வளர்க்கப்படவேண்டும்.—5T 85 (1882).

நேசிக்கிற நேசிக்கப்படுவதற்கேதுவான கிறிஸ்தவனே, சுவிசேஷத்திற்கு ஆதரவாகப் பேசப்படுகின்ற மிக வலிமையான வாதம் ஆகும்.—MH 470 (1905).

## முழுமையான ஒப்படைத்தல் அவசியம்

சிறிதளவுகூட தனக்கென்று ஒதுக்கிவைத்துக்கொள்ளாத முழுமையான ஒப்படைத்தலைத் தவிர வேறொன்றையும் தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார். அரைமனதும் பாவமும் நிறைந்த கிறிஸ்தவர்கள் ஒருபோதும் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. இராஜரீகக் குடும்பத்தினுடைய அங்கத்தினர்களை ஆளுகின்ற, உன்னதமான பரிசுத்த கொள்கைகளைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்பதால், அங்கே அவர்கள் எந்த சந்தோஷத்தையும் கண்டுகொள்ள முடியாது. உண்மையான கிறிஸ்தவன் தனது ஆத்துமாவின்

பலகணிகளைப் பரலோகத்தை நோக்கித் திறந்து வைத்திருப்பான். அவன், கிறிஸ்துவினுடனான ஐக்கியத்தில் ஜீவிக்கின்றான். அவனுடைய சித்தம் கிறிஸ்துவின் சித்தத்தோடு ஏற்புடையதாய் இருக்கின்றது. அவனது உயரிய வாஞ்சையெல்லாம் இன்னும் அதிகமதிகமாய் கிறிஸ்துவைப்போல மாறவேண்டுமென்பதே ஆகும்.—RH May 16, 1907.

நாம் பரிசுத்த ஆவியைப் பயன்படுத்த முடியாது. மாறாக, ஆவியானவர் நம்மை பயன்படுத்த வேண்டும். தேவன், "தம்முடைய விருப்பத்தையும் செய்கையையும்" (பிலி. 2:13), தம்முடைய மக்களில் உண்டாக்கும்படியாக, பரிசுத்த ஆவியின் மூலமாகக் கிரியைசெய்கிறார். ஆனால் அநேகர் இதற்கு ஒப்புக்கொடுக்கமாட்டார்கள். அவர்கள் தாங்களாகவே சமாளித்துக்கொள்ள விரும்புகின்றனர். இதனால்தான் அவர்கள் பரலோக ஈவைப் பெற்றுக் கொள்வதில்லை. தேவனுக்காகத் தாழ்மையோடு காத்திருந்து, அவரது வழிநடத்துதலுக்காகவும் கிருபைக்காகவும் விழித்திருப்பவர்களுக்கு மாத்திரமே பரிசுத்த ஆவி கொடுக்கப்படும்.—DA 672 (1898).

### பின்மாரிக்காக வழியை ஆயத்தப்படுத்தல்

சூழ்ந்து நெருக்குகின்ற ஒவ்வொரு பாவத்தின்மீதும், பெருமை, சுயநலம், உலக ஆசைமீதும், ஒவ்வொரு தவறான வார்த்தை மற்றும் செய்கைமீதும், அவர்கள் வெற்றிபெறாத வரை, ஒருவரும் பின்மாரி என்னும் "இளைப்பாறுதலைப்" பெற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை நான் கண்டேன். எனவே நாம் இன்னும் அதிகமாகக் கர்த்தரின் பக்கம் நெருங்கி வந்து, கர்த்தருடைய மகா நாளிலே நடக்கப்போகின்ற யுத்தத்திலே நிற்க தகுதியடையும்படியான ஆயத்தத்தை மிகவும் ஊக்கமாகத் தேடவேண்டும். —EW 71 (1851).

நமது குணங்களில் இருக்கின்ற குறைபாடுகளைச் சரிசெய்து, எல்லா அசுத்தமும் நீங்க நமது ஆத்துமாவைச் சுத்தம்செய்வது நம்மிடம்தான் விடப்பட்டிருக்கின்றது. அப்போது, பெந்தெகொஸ்தே நாளிலே சீஷர்களின்மீது முன்மாரி பொழிந்ததைப்போல நம்மீது பின்மாரி பொழியும்.—5T 214 (1882).

ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கின்ற சபையின்மீது கர்த்தர் தமது ஆவியை ஊற்றும்படிக்கு, எல்லாத் தடைகளையும் அகற்றுவதன்மூலமாக தேவனுடைய ஜனங்கள் வழியை ஆயத்தம் செய்வதைப் பார்த்துப் பயப்படுவதைப் போல, வேறு எதைப் பார்த்தும் சாத்தான் அதிகமாகப் பயப்படுவதில்லை... ஒவ்வொரு சோதனையும், ஒவ்வொரு எதிர்க்கின்ற செல்வாக்கும், அவைகள் மறைவானவையாய் இருந்தாலும், வெளியரங்க மானவையாக இருந்தாலும் வெற்றிகரமாக எதிர்த்து நிறுத்தப்பட முடியும்

—"பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சக. 4:6).—1SM 124 (1887).

பின்மாரி வரும்; ஒவ்வொரு அசுத்தமும் நீங்க சுத்திகரிக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவையும் தேவனுடைய ஆசீர்வாதம் நிரப்பும். பரிசுத்த ஆவியானவரின் ஞானமுழுக்கிற்காக—கர்த்தருடைய சமூகத்திலிருந்து வரப்போகின்ற இளைப்பாறுதலின் காலத்திற்குள் பிரவேசிப்பதற்கு நாம் தகுதியடையும்படியாக, நம்முடைய ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்கு ஒப்படைப்பதே இன்றைய நம்முடைய வேலையாக இருக்கின்றது.—1SM 191 (1892).

## கிறிஸ்துவின் சேவையில் சுறுசுறுப்புள்ள வேலையாட்களாய் மாறுங்கள்

சபைகள் உயிருள்ள கிரியைசெய்கின்ற சபைகளாக மாறும்போது, அவர்களது ஊக்கமான வேண்டுதலுக்குப் பலனாக பரிசுத்த ஆவியானவர் அளிக்கப்படுவார்... அப்போது, பின்மாரி பொழிவதற்கேதுவாக வானத்தின் பலகணிகள் திறக்கப்படும்.—RH Feb. 25, 1890.

தேவனோடு இணைந்து வேலைசெய்வதின் அர்த்தம் என்னவென்பதை அனுபவத்தின்மூலம் அறிந்துகொண்டு, தெளிவுபெற்ற ஒரு ஜனங்கள் நம்மில் எழும்பும்வரை, பூமி அனைத்தையும் தமது மகிமையால் பிரகாசிப்பிக்கின்ற தேவ ஆவியானவரின் மாபெரும் பொழிவு வராது. கிறிஸ்துவின் சேவைக்கென்று முழுமையான மனப்பூர்வமான அர்ப்பணிப்பை நாம் கொண்டிருப்போமானால், அப்பொழுது அளவில்லாதபடி தமது ஆவியின் பொழிவின்மூலம் தேவன் அவ்வுண்மையை அங்கீகரிப்பார். ஆனால் சபையிலுள்ள பெரும்பான்மையினர், தேவனுடன் இணைந்து வேலைசெய்யாதபொழுது இது நடைபெறாது.—ChS 253 (1896).

சபை சோம்பேறித்தனமாகவும் தூங்கிக்கொண்டும் இருக்கிறது என்கிற அவமானம் சபையிலிருந்து முற்றிலுமாக நீக்கப்படும்போது, கர்த்தருடைய ஆவியானவர் கிருபையாய் வெளிப்படுவார்; தெய்வீக வல்லமை வெளிப்படும். அப்போது சபை சேனைகளின் கர்த்தருடைய தெய்வீக வழிநடத்துதலின் கிரியையைக் காணும்.—9T 46 (1909).

## "பாத்திரத்தை சுத்தமாயும், சரியான பக்கத்தை மேற்புறமாகவும் வையுங்கள்"

பின்மாரியைக்குறித்து நாம் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நாம் செய்யவேண்டியதெல்லாம், நம் பாத்திரத்தை சுத்தமாகவும்,

சரியான பக்கத்தை மேற்புறமாகவும் வைத்து, பரலோகப் பின்மாரியைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தப்பட வேண்டியதே ஆகும். அதோடுகூட, "பின்மாரி மழை என்னுடைய பாத்திரத்தில் பெய்யட்டும்; மூன்றாம் தூதனோடுகூட இணையப்போகின்ற மகிமையான தூதனுடைய வெளிச்சம் என்மீது பிரகாசிக்கட்டும் உம்முடைய ஊழியத்தில் எனக்கும் ஒரு பங்கைத் தாரும்; அறிவிப்புச் செய்தியை நானும் முழங்கட்டும்; இயேசு கிறிஸ்துவுடன் நானும் ஓர் உடன் வேலையாளாக இருக்கட்டும்" என்று தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். இப்படியாக தேவனைத் தேடுவீர்களானால், அவர் உங்களை தகுதியுள்ளவர்களாக்கி, தமது கிருபையை உங்களுக்கு எந்நேரமும் அளித்துக்கொண்டே இருப்பார் என்று நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன்.—UL 283 (1891).

பதில் திடீர் வேகத்துடனும், மிகுந்த ஆற்றல் வாய்ந்ததாகவும் வரலாம். அல்லது நமது விசுவாசம் சோதனைக்குட்படும்படியாக சிலநாட்களோ அல்லது சில வாரங்களோ தாமதிக்கலாம். ஆனால் நமது ஜெபத்திற்கு எப்படிப் பதிலளிக்க வேண்டும், எப்பொழுது பதிலளிக்க வேண்டும் என்பது தேவனுக்குத் தெரியும். தெய்வீக வாய்க்காலோடு நம்மை நாமே தொடர்புபடுத்திக்கொள்ளுவதே நம்முடைய வேலையின் பங்காக இருக்கின்றது. தமது வேலையின் பங்கைச் செய்வதற்கு தேவன் பொறுப்பாக இருக்கின்றார். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கின்றார். ஏக இருதயத்தோடும், ஏக சிந்தையோடும், எல்லாப் பொறாமையையும், எல்லாக் குரோதத்தையும் புறம்பே தள்ளிவிட்டுத் தாழ்மையுடன் மன்றாடுகிறவர்களாக, விழித்திருந்து காத்திருக்க வேண்டியதே நமக்குரிய பெரிதும் முக்கியம் வாய்ந்ததுமான காரியமாகும். பெந்தெகொஸ்தே நாளில் ஜெபத்திலே தரித்திருந்து காத்திருந்தவர்களுக்கு எதைச் செய்தாரோ, அதை நமக்கும் செய்ய நமது பிரதிநிதியும் தலைவருமாகிய இயேசு ஆயத்தமாயிருக்கின்றார்.—3SP 272 (1878).

பரிசுத்த ஆவியின் பின்மாரி எப்போது ஊற்றப்படும் என்பதற்கும், வல்லமையான தூதன் பரலோத்திலிருந்து இறங்கி வந்து மூன்றாம் தூதுனுடன் இணைந்து இந்த உலகத்திற்கான கடைசி வேலையை எப்போது முடிவுக்குக்கொண்டுவருவார் என்பதற்கும், குறிப்பிடும்படியான நேரம்பற்றி பேசுவதற்கு எதுவும் என்னிடமில்லை. பரலோக இளைப்பாறுதலுக்கு(பின்மாரி) நாம் ஆயத்தமாக இருப்பதிலும், நம்முடைய விளக்குகளைத் தூண்டிவிட்டு எரிகிறதாக வைத்துக்கொண்டிருப்பதிலும் மட்டுமே, நமது ஒரே பாதுகாப்பு இருக்கின்றது என்பதே என்னுடைய தூது ஆகும்.—1SM 192 (1892).

## அனைவரும் பின்மாரியைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள்

தேவனுடைய ஜனங்கள் தங்களது பங்காக உள்ள முயற்சிகளைச் செய்யாமல், இளைப்பாறுதல்(பின்மாரி) தங்கள்மீது வந்து, பிழைகள் நீங்க தங்கள் தவறுகளைச் சரிசெய்யும் என்று காத்திருப்பார்களானால், தங்களது மாம்சத்திலும் ஆவியிலும் உள்ள அசுத்தத்தை சுத்தம் செய்து பின்பு மூன்றாம் தூதனின் உரத்த சத்தத்தை அளிக்கத் தங்களைத் தகுதிப்படுத்தும் என்று அவர்கள் அதைச் சார்ந்திருப்பார்களானால், குறைவாய்க் காணப்படுவார்கள் என்று எனக்குக் காண்பிக்கப்பட்டது.—1T 619 (1867).

முழு சபையும் எழுப்புதல் அடைவதைக் காணும்படியாக நம்பிக் கொண்டிருக்கின்றோமா? அப்படிப்பட்ட காலம் ஒருபோதும் வராது. மனந்திரும்பாமலும், ஊக்கமான மற்றும் அன்றாட ஜெபத்தில் தங்களை இணைத்துக்கொள்ளாமலும் இருக்கிற அநேக நபர்கள் சபையில் இருக்கின்றார்கள். நாம் தனிப்பட்ட முறையிலேதான், இந்த ஊழியத்தில் ஈடுபடவேண்டும். நாம் அதிகமாக ஜெபிக்கவேண்டும், குறைவாகப் பேசவேண்டும்.—1SM 122 (1887).

பரிசுத்த ஆவியானவர் பொழியப்படும்போது, முன்மாரியைப் பாராட்டி அதைப்பெற்றுக்கொள்ளாதவர்கள், பின்மாரியின் மதிப்பைப் புரிந்து கொள்ளவும், அதைக் காணவும் முடியாது என்பதை நாம் நிச்சயமாக அறியலாம்.—1SM 122 (1887).

தங்களிடத்தில் கிடைக்கப்பெற்றிருக்கின்ற வெளிச்சத்தின்படி, முழுமையாக வாழ்கின்றவர்கள் மாத்திரமே, இன்னும் அதிகமான வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வார்கள். செயலாற்றுகின்ற கிறிஸ்தவ நற்பண்புகளின் எடுத்துக்காட்டுகளில் நாம் அனுதினமும் முன்னேறிச் சென்று கொண்டிராவிட்டால், பின்மாரியில் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடுகளை உணர்ந்துகொள்ளமாட்டோம். நம்மைச் சுற்றிலும் இருக்கின்ற இருதயங்களின்மீது பின்மாரி ஊற்றப்படலாம். ஆனால் நாமோ அதை அறிந்துகொள்ளவோ அல்லது பெற்றுக்கொள்ளவோமாட்டோம்.—TM 399 (1896).

தீர்மானமான முயற்சி எடுக்காமல், பரிசுத்த ஆவியானவர் வந்து கிரியைச்செய்யும்படி தங்களைத் தூண்டுவார் என்று வெறுமனே காத்திருக் கிறவர்கள் இருளிலே அழிந்துபோவார்கள். தேவனுடைய வேலையிலே நீங்கள் ஒன்றுமே செய்யாமல் அமைதலாய் உட்கார்ந்திருக்கக் கூடாது.—ChS 228 (1903). ★

[1] பார்க்கவும்: சகரியா 10:1; ஓசியா 6:3; யோவேல் 2:23,28.

# 14

# உரத்த சத்தம்

## எல்லா சபைகளிலும் தேவன் முத்துக்களை வைத்திருக்கின்றார்

எல்லா சபைகளிலும் தேவனுக்காக முத்துக்கள் இருக்கின்றது. ஆகவே, வெளிப்படையான மார்க்க உலகத்தைக்குறித்து விரிவான கண்டனத்தைக் கூறுவதென்பது நமக்குரியதல்ல.—4BC 1184 (1893).

எல்லா சபைகளிலும் கர்த்தருக்காக அவரது பிரதிநிதிகள் இருக்கின்றனர். இத்தகைய நபர்கள், இருதயத்திலும் மனதிலும் உணர்த்துதலை உண்டாக்குகிற சந்தர்ப்பங்களின்கீழ் கடைசி நாட்களுக்குரிய, விசேஷித்த பரிசோதிக்கும் சத்தியங்களைப் பெறும் வாய்ப்பை பெற்றிருக்கவில்லை. ஆகையால் வெளிச்சத்தை அசட்டை செய்யாத இவர்கள், தேவனோடுள்ள தங்கள் இணைப்பிலிருந்து பிரிந்துபோய்விடவில்லை.—6T 70, 71 (1900).

தங்கள்மீது பிரகாசித்த எல்லா வெளிச்சத்திலும் நடக்கின்ற, மனச்சாட்சிக்கு மிகவும் கட்டுப்பட்டிருக்கின்ற கிறிஸ்தவர்கள் அநேகர், கத்தோலிக்க மார்க்கத்தார் மத்தியிலும் இருக்கின்றார்கள். தேவன் அவர்கள் சார்பாகவும் கிரியைசெய்வார்.—9T 243 (1909).

வெளிப்படுத்தல் 18–ம் அதிகாரத்தில், பாபிலோனை விட்டு வெளியே வரும்படி தேவனுடைய மக்கள் அழைக்கப்படுகின்றனர். இந்த வேதவாக்கியத்தின்படி, அநேக தேவனுடைய மக்கள் கண்டிப்பாக இன்னமும் பாபிலோனிலே இருக்கத்தான் வேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்களில் பெரும்பகுதியினர் தற்போது எந்த மார்க்க அமைப்புகளில் காணப்படுகின்றனர்? சந்தேகமின்றி, அவர்கள் புராட்டஸ்டண்டு விசுவாசத்தை அறிக்கைபண்ணுகின்ற பல்வேறுப்பட்ட சபைகளில்தான் காணப்படுகின்றனர். —GC 383 (1911).

ஆவிக்குரிய இருளும் தேவனைவிட்டுத் தூரப்பட்டிருக்கும் நிலையும், பாபிலோனிய அமைப்பை உருவாக்கும் திருச்சபைகளில் இருந்தபோதிலும்கூட, கிறிஸ்துவின் உண்மையான பின்னடியார்களில் பெருந்திரளானவர்கள் அவர்களது ஐக்கியத்தில் இன்னும் காணப்படுகின்றனர். —GC 390 (1911).

## பாபிலோனின் விழுகை இன்னும் முழுமையடையவில்லை

அவள், “தனது வேசித்தனமாகிய உக்கிரமான மதுவை சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே” (வெளி. 14:6–8). இது எப்படி நடைபெறுகின்றது? ஒரு போலியான ஓய்வுநாளை ஏற்றுக்கொள்ள மனிதர்களைக் கட்டாயப்படுத்துவதின்மூலம் நடைபெறுகின்றது.—8T 94 (1904).

இருப்பினும்…, “தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவை சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே,” என்று நாம் இந்நேரம் வரை கூறமுடியாது. ஏனெனில் அவள், சகல ஜாதிகளும் குடிக்கும்படியாக இன்னமும் (முழுமையாகச்) செய்யவில்லை…

இந்த நிபந்தனை நிறைவேறும்வரையிலும், உலகத்துடனான சபையின் ஒருங்கிணைப்பு கிறிஸ்தவ உலகம் முழுவதிலும் முற்றிலுமாக நிறைவேறும்வரையிலும், பாபிலோனின் விழுகை முழுமையடையாது. இந்த மாற்றம் முன்னேற்றமடைகின்ற ஒரு காரியமாகும். வெளிப்படுத்தல் 14:8–ன் முழுமையான நிறைவேறுதல் இன்னும் எதிர் காலத்திலேயே நடக்கவிருக்கின்றது.—GC 389, 390 (1911).

எப்போது அவளுடைய பாவங்கள் வானபரியந்தம் எட்டும்? (வெளி. 18:2–5). சட்டமியற்றப்படுதலின்மூலம், தேவனுடைய பிரமாணம் ஒன்றுமில்லாமல் ஆக்கப்படும்போதுதான் அப்படி நடக்கும்.—ST June 12, 1893.

## தேவனுடைய கடைசி எச்சரிப்பின் செய்தி

தீர்க்கதரிசன வரிசையில், வெளிப்படுத்தல் 14–ம் அதிகாரத்தின் தூதுகளுக்கான இடத்தை தேவன் கொடுத்திருக்கின்றார். அவைகளின் பணி, இந்த பூமிக்குரிய சரித்திரத்தின் முடிவுமட்டும் நிறுத்தப்படமாட்டாது. —EGW'88 804 (1890).

வெளி. 14:6–12–ல் உள்ள மும்மடங்கான எச்சரிப்பை நிராகரிப்பதின் விளைவாக, இரண்டாம் தூதனால் முன்னறிவிக்கப்பட்ட நிலையை சபை முழுமையாக அடைந்திருக்கும்போது, இன்னும் பாபிலோனிலுள்ள தேவனுடைய ஜனங்கள் அவளுடனுள்ள தொடர்பைவிட்டுப் பிரிந்துவரும்படி அழைக்கப்படுவார்கள் என்ற நேரத்தைக் குறித்து வெளிப்படுத்தல் 18–ம் அதிகாரம் சுட்டிக்காட்டுகின்றது. எப்பொழுதும் உலகத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய தூதுகளில் இந்த தூதே கடைசியானதாக இருக்கின்றது.—GC 390 (1911).

“இவைகளுக்குப் பின்பு, வேறொரு தூதன் அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று… பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்” (வெளி. 18:1,2,4) என்று கூறினான். வெளி. 14:8–ல் உள்ள இரண்டாம் தூதனால் அறிவிக்கப்பட்டபடி, பாபிலோனின் விழுகையைப்பற்றிய அறிவிப்பு மீண்டுமாகக் கொடுக்கப்பட வேண்டிய எதிர்நோக்கியுள்ள ஒரு காலத்தையே இந்த வேதவாக்கியம் சுட்டிக்காட்டுகின்றது. அதனோடு சேர்த்து, 1844–ம் வருடத்தின் கோடை காலத்தில் அந்தத் தூது முதலாவதாகக் கொடுக்கப்பட்டதிலிருந்து, பாபிலோனை இணைந்து உருவாக்கும் பல்வேறு அமைப்புகளுக்குள் நுழைந்திருக்கக்கூடிய அக்கிரமங்களைக்குறித்தும், இது தெரிவிக்கின்றது… இத்தகைய அறிவிப்புகள் மூன்றாம் தூதனின் தூதுடன் இணைந்து, பூமியின் குடிகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய கடைசி எச்சரிப்பை உருவாக்குகின்றது…

பாபிலோனின் பாவங்கள் வெட்டவெளிச்சமாக்கப்படும். சபையின் பாரம்பரியங்களை அரசாங்கத்தின் துணையோடு வலியுறுத்துவதால் உண்டாகும் பயங்கரமான விளைவுகள், ஆவிமார்க்கத்தின் திடீர் பிரவேசம், போப்புமார்க்க அதிகாரத்தின் இரகசியமான ஆனால் அதிவேகமான வளர்ச்சி—ஆகிய அனைத்தின் முகமூடியும் அகற்றப்படும். இத்தகைய பக்திவிநயமான எச்சரிப்புகளால் ஜனங்கள் அசைக்கப்படுவார்கள். இதுபோன்ற வார்த்தைகளை ஒருபோதும் கேட்டிராத ஆயிரமாயிரம் பேர் கவனித்துக் கேட்பார்கள்.—GC 603, 604, 606 (1911).

## தேவனுடைய கடைசி செய்தியின் மையம்

விசுவாசத்தினால் நீதிமானாகுதலைப் பற்றின தூதுதான் மூன்றாம் தூதனின் தூதாக இருக்குமா? என்று விசாரித்துக் கேட்டு அநேகர் எனக்கு எழுதியிருக்கின்றனர். அதற்கு நான், “உண்மையிலேயே இது மூன்றாம் தூதனின் தூதாக இருக்கின்றது” என்று பதில் எழுதியிருக்கின்றேன். —1SM 372 (1890).

கர்த்தர் தமது மிகுந்த இரக்கத்தினாலே, மூப்பர்கள் (E.J.) வேகனர் மூலமாகவும், (A.T.) ஜோன்ஸ் மூலமாகவும் மிகவும் விலையேறப்பெற்ற

ஒரு தூதைத் தமது ஜனங்களுக்கு அனுப்பினார். இத்தூது முழு உலகத்தினுடைய பாவத்திற்காகப் பலியான உயர்த்தப்பட்ட இரட்சகரை, உலகத்திற்கு முன்பாக மிகவும் சிறப்பு வாய்ந்த விதத்தில் கொண்டுவரப்பட வேண்டியதாயிருந்தது. அது பிணையாளியானவரிடத்தில் (கிறிஸ்துவில்) வைக்கும் விசுவாசத்தினாலே நீதிமானாகுதல் என்பதை அளித்தது; அது, தேவனுடைய கற்பனைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிவதால் வெளிப்படும் கிறிஸ்துவின் நீதியைப் பெற்றுக்கொள்ளும்படியாக மக்களை அழைத்தது.

அநேகர் இயேசுவின்மீதுள்ள கவனத்தை இழந்திருந்தனர். அவர்கள் தங்களது கண்களை அவரது தெய்வீகத் தன்மைக்கும், அவரது புண்ணியங்களுக்கும், மனிதக் குடும்பத்துக்கான அவரது மாறாத அன்புக்கும் நேராகத் திருப்பவேண்டிய அவசியத்தில் இருந்தனர். மனிதருக்கு வளமான ஈவுகளை அவர் பகிர்ந்தளிக்கும்படியாகவும், உதவியற்ற மனித ஏதுகரத்திற்கு தம்முடைய சொந்த நீதி என்னும் விலைமதிப்பற்ற ஈவைக் கொடுக்கும்படியாகவும், சகல அதிகாரமும் அவருடைய கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தூதுதான் உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய, தேவன் கட்டளையிட்டிருந்த தூதாக இருக்கின்றது. உரத்த சத்தத்துடன் அறிவிக்கப்படவேண்டியதும், பெருமளவிலான தேவ ஆவியினுடைய பொழிவில் கலந்துகொள்ளப்பட வேண்டியதுமான தூதே, இந்த மூன்றாம் தூதனின் தூதாக இருக்கின்றது.—TM 91, 92 (1895).

கிறிஸ்துவின் நீதியைப்பற்றின இத்தூது கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தத்தக்கதாக பூமியின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரைக்கும் முழங்கப்படவேண்டும். இது மூன்றாம் தூதனுடைய வேலையை முடிவுக்குக் கொண்டுவருகின்ற தேவனுடைய மகிமையாயிருக்கின்றது.—6T 19 (1900).

உலகத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய கிருபையின் கடைசி தூது என்பது ஆண்டவருடைய அன்பின் குணத்தை வெளிப்படுத்துவதே ஆகும். தேவனுடைய பிள்ளைகள் அவரது மகிமையை வெளிக்காட்டவேண்டும். தேவனுடைய கிருபை அவர்களுக்கு என்ன செய்திருக்கின்றது என்பதை, அவர்கள் தங்களது சொந்த வாழ்க்கையிலும் குணத்திலும் வெளிக்காட்ட வேண்டும்.—COL 415, 416 (1900).

## மிகுந்த வல்லமையுடன் தூது செல்லும்

மூன்றாம் தூதனின் தூது ஒரு உரத்த சத்தமாக எழும்பும் போதும், மிகுந்த வல்லமையும் மகிமையும் அந்த முடிவான வேலையைக் கவனத்துடன் செய்துமுடிக்கும்போதும், தேவனுடைய உண்மையான ஜனங்கள் அந்த மகிமையில் பங்கெடுப்பார்கள். அவர்கள் இக்கட்டுக்காலத்தின் வழியாகக்

கடந்துசெல்வதற்கு, பின்மாரி அவர்களை மீண்டும் உயிர்ப்பித்து பலப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.—7BC 984 (1862).

முடிவு நெருங்க நெருங்க தேவனுடைய ஊழியக்காரர்களின் சாட்சிகள், மிகுந்த வல்லமையானதாகவும் அதிகத் தீர்மானமிக்கதாகவும் மாறியிருக்கும்.—3SM 407 (1892).

இந்தத் தூது (வெளி. 14:9–12), அதற்கு முந்தைய இரு தூதுகளையும் தழுவியே வரும். அது ஒரு உரத்த சத்தத்துடன், அதாவது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் கொடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. —7BC 980 (1900).

மூன்றாம் தூதனின் தூது ஒரு உரத்த சத்தமாகப் பெருக்கமடையும் போது, மாபெரும் வல்லமையும் மிகுந்த மகிமையும் அதன் அறிவிப்புடன் சேர்ந்துகொள்ளும். தேவனுடைய ஜனங்களின் முகங்கள் பரலோகத்தின் வெளிச்சத்தால் பிரகாசிக்கும்.—7T 17 (1902).

பூமியின் கடைசி மாபெரும் உபத்திரவத்தின் ஆழமான நிழல்களின் மத்தியிலும், தேவனுடைய வெளிச்சம் மிகவும் அதிகமதிகமாகப் பிரகாசிக்கும். அப்போது விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் பாடல், தெளிவாகவும் உன்னதமான இசையிலும் கேட்கப்படும்.—Ed 166 (1903).

வெளி.18–ல் முன்னறிவிக்கப்பட்டபடி, மிருகத்திற்கும் அதன் சொரூபத்திற்கும் எதிராக, மூன்றாம் தூதனின் தூது கடைசி எச்சரிப்பைக் கொடுக்க இருக்கின்ற ஜனங்களால் மிகுந்த வல்லமையுடன் அறிவிக்கப்பட வேண்டும்.—8T 118 (1904).

### 1844–ம் ஆண்டின் இயக்கத்தைப்போல

1844–ம் ஆண்டின் இயக்கத்திலே ஜனங்களை எழுப்பின அதே மாபெரும் வல்லமை மீண்டுமாக வெளிப்படுத்தப்படும். மூன்றாம் தூதனின் தூது இரகசிய குரலில் அல்ல, ஒரு உரத்த தொனியுடன் முன் செல்லும். —5T 252 (1885).

நடுராத்திரியின் சத்தத்தையும் மிஞ்சும் விதத்தில், இந்தத் தூது ஆற்றலுடனும் வல்லமையுடனும் முடிவடையும் என்பதை நான் கண்டேன். —EW 278 (1858).

### பெந்தெகொஸ்தே நாளைப்போல

பெந்தெகொஸ்தே நாளின் சம்பவங்கள் அன்றைக்கு நடந்ததைக் காட்டிலும் இன்னும் அதிக வல்லமையோடு மீண்டும் எப்போது நடக்கும் என்று, அந்த நேரத்தைக் காணும்படியாக ஒரு ஊக்கமான ஏக்கத்துடன்

நான் முன்னோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். “பின்பு வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று” (வெளி. 18:1) என்று யோவான் கூறுகின்றார். அப்போது பெந்தெகொஸ்தே காலத்தில் நடந்ததுபோல, ஒவ்வொருவரும் அவரவர் பாஷையிலே சத்தியம் பேசப்படக் கேட்பார்கள்.—6BC 1055 (1886).

தேவனுடைய ஜனங்கள் மத்தியிலே, ஒரு மாபெரும் சீர்திருத்த இயக்கத்தைச் சுட்டிக்காட்டின காட்சிகள் இராத்தரிசனங்களிலே என் முன்பாகக் கடந்துசென்றது. அநேகர் தேவனைத் துதித்தார்கள், வியாதியஸ்தர்கள் குணமாக்கப்பட்டார்கள். இன்னும் அநேக அற்புதங்களும் செய்யப்பட்டன. மாபெரும் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னான நாட்களில் வெளிப்பட்ட, அதே பரிந்துபேசுகின்ற ஒரு சிந்தை (அவர்கள் மத்தியில்) காணப்பட்டது. —9T 126 (1909).

சுவிசேஷத்தின் மாபெரும் பணி, அதின் ஆரம்பக் கட்டத்தில் காணப்பட்ட தேவனுடைய வல்லமையைவிட, அது முடிவு பெறும் வேளையில் எத்தகைய குறைந்த வல்லமையோடும் இருக்காது. சுவிசேஷம் ஆரம்பமான காலக்கட்டத்திலே பெய்த முன்மாரியின் பெருமழையின்போது தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதலை அடைந்ததுபோல, சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுதலின் முடிவுவேளை வரும்பொழுது பெய்யும் பின்மாரியின் பெருமழையிலே, மீண்டும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதலை அடையும்…

தேவனுடைய ஊழியக்காரர்கள், ஒளியேற்றப்பெற்ற பிரகாசிக்கின்ற பரிசுத்த ஒப்படைப்புடனும், பிரகாசிக்கப்பட்ட முகங்களுடனும், பரலோகத்திலிருந்து வருகின்ற தூதை அளிப்பதற்குத் துரிதமாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வார்கள். உலகம் முழுவதிலுமாக ஆயிரக்கணக்கான குரல்கள்மூலம் எச்சரிப்பு கொடுக்கப்படும்; அற்புதங்கள் செய்யப்படும்; வியாதியஸ்தர்கள் குணமாக்கப்படுவர்; அற்புதங்களும் அடையாளங்களும் விசுவாசிகளை பின்தொடரும்.—GC 611, 612 (1911).

## நம்மை ஆச்சரியப்படுத்தும் ஏதுகரங்களை தேவன் உபயோகிப்பார்

காரியங்களின் பொதுவான ஒழுங்கின்படியில்லாமல், எந்த ஒரு மனிதத் திட்டத்திற்கும் நேர்மாறாக இருக்கக்கூடிய ஒரு வழியிலும், மிக அதிகமான விதத்திலும், கர்த்தர் இந்தக் கடைசி வேலையைச் செய்வார் என்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். உலகத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய தூதிலே, மூன்றாம் தூதனுடன் இணைந்துகொள்ளும்

தூதனுடைய வழிநடத்துதலின்கீழாக வேலை முன்னேறிச் செல்லும்போது, எப்பொழுதுமே அந்த வேலையைக் கட்டுப்படுத்த விரும்புகிறவர்களும், தேவனுடைய வேலையிலே என்னவிதமான நிலைமாற்றங்கள் செய்யப்படலாம் என்று கட்டளையிடுவதற்கு விரும்புகிறவர்கள்கூட, நம் மத்தியிலே அங்கு இருப்பார்கள். தேவன் தமது சொந்தக் கரங்களிலே கடிவாளங்களை எடுத்துக்கொள்கிறார் என்பது விளங்கும் விதத்தில், அவர் வழிகளையும் வாய்ப்புவளங்களையும் உபயோகப்படுத்துவார். தேவன் தமது நீதியின் கிரியைகளைப் பூரணப்படுத்தி நிறைவேற்றும்படியாக, அவர் உபயோகிக்கப்போகின்ற எளிமையான வழிவகைகளைக் குறித்து ஊழியக்காரர்கள் ஆச்சரியப்படுவார்கள்.—TM 300 (1885).

எதிர்காலத்திற்கான திட்டமிடுதல் சாத்தியமானதாக இருக்கும் என்று கற்பனை செய்யவேண்டாம். தேவன் எல்லாக் காலங்களிலும், ஒவ்வொரு சூழ்நிலையின் கீழாகவும் சுக்கான்பிடித்து நிற்கிறவராக ஒப்புக்கொள்ளப்படவேண்டும். பொருத்தமான வழிவகைகளின்மூலம் தேவன் கிரியை செய்வார்; மேலும் அவர் தமது சொந்த ஜனங்களைத் தொடர்ந்து நடத்தி, பெருகச் செய்து, படிப்படியாக உருவாக்குவார்.—CW 71 (1895).

மனிதன் குறிப்பிடும்படியாக, எந்த ஒரு திட்டவட்டமான வரையறுக்கப் பட்ட வழியில் அல்ல, மாறாக, தேவனுடைய ஒழுங்கின்படி—எதிர்பாராத நேரங்களில் மற்றும் வழிகளில், தமது சொந்த நாமத்துக்கு மகிமை உண்டாகும் விதத்தில், தேற்றரவாளன் தம்மைத்தாமே வெளிப்படுத்துவார். —EGW'88 1478 (1896).

முந்தைய நாட்களில் மீன்பிடிக்கிறவர்களைத் தமது சீஷர்களாகத் தெரிந்துகொண்டதுபோலவே, அவர் சாதாரண ஜனங்கள் மத்தியிலிருந்து ஆண்களையும் பெண்களையும் தமது ஊழியத்துக்காக எழுப்புவார். அநேகரை ஆச்சரியப்படுத்துகின்ற ஒரு எழுப்புதல் வெகுசீக்கிரத்தில் உண்டாகும். என்ன செய்யப்பட வேண்டும் என்ற அவசியத்தை உணராதிருக்கின்ற ஜனங்கள் விட்டுவிடப்படுவர். சாதாரண மக்கள் என்றழைக்கப்படுகிறவர்களுடன் பரலோகத் தூதர்கள் வேலைசெய்து, சத்தியத்தை அநேக இடங்களுக்கு எடுத்துச் செல்ல அவர்களைத் தகுதியாக்குவார்கள்.—15MR 312 (1905).

## பரிசுத்த ஆவியானவர் மூலம் ஊழியக்காரர்கள் தகுதியாக்கப்படுவர்

பக்திவிநயமான கடைசி ஊழியத்திலே, மாபெரும் மனிதர்கள் சிலரே ஈடுபடுவார்கள்... சிலர் மாத்திரமே எதிர்பார்க்கின்ற ஒரு வேலையை, தேவன் நமது காலத்திலே செய்வார். அறிவியல் சம்பந்தமான நிறுவனங்கள்மூலம் வெளிப்படையாகப் பயிற்றுவிக்கப்படுவதைக்காட்டிலும், தேவனுடைய

ஆவியானவரின் அபிஷேகத்தால் பயிற்றுவிக்கப்படக்கூடிய ஜனங்களை நம் மத்தியிலிருந்து அவர் எழுப்பி உயர்த்துவார். இந்த வசதிகள் (அறிவியல் நிறுவனங்கள்) அலட்சியப்படுத்தப்படவோ அல்லது குற்றஞ்சாட்டப்படவோ வேண்டியதில்லை; அவைகளும் தேவனால் நியமிக்கப்பட்டவைகளே. ஆனால் அவைகள் வெளிப்புறத் தகுதிகளை மாத்திரமே பக்குவப்படுத்த முடியும். தேவன் படித்தவர்களையும், தங்களைப் பெரிதாகக் கருதுகின்ற மனிதர்களையும் சார்ந்திருக்கவில்லை என்பதை வெளிப்படுத்துவார்.—5T 80, 82 (1882).

சத்திய வெளிச்சத்தை மிகுந்த ஆர்வத்துடன் தேடுகின்ற ஆத்துமாக் களுக்கும், தேவனுடைய பரிசுத்த எழுத்துக்களிலிருந்து பிரகாசிக்கிற ஒவ்வொரு தெய்வீக ஒளிக்கதிரையும் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறவர் களுக்கும் மாத்திரமே கூடுதலான வெளிச்சம் கொடுக்கப்படும். இந்த ஆத்துமாக்களின் மூலமாகவே, இந்தப் பூமி முழுவதையும் தமது மகிமையால் பிரகாசிக்கச் செய்யக்கூடியதான வல்லமையையும், வெளிச்சத்தையும் தேவன் வெளிப்படுத்துவார்.—5T 729 (1889).

சிந்தையின் கட்டுப்பாடும், இருதயம் மற்றும் எண்ணத்தின் சுத்தமுமே அவசியமாக இருக்கின்றது. மிகச்சிறந்த தாலந்துகள், சாமர்த்தியம் அல்லது அறிவைக் காட்டிலும் இவையே மிகவும் விலையேறப்பெற்றவையாகும். அதிகத் திறமைகள் இருந்தும் அவைகளைச் சரியாக உபயோகப்படுத்தாதவர்களைக் காட்டிலும், “கர்த்தர் இப்படிச் சொல்லுகிறார்” என்கின்ற வார்த்தைக்குக் கீழ்ப்படிய பயிற்றுவிக்கப்பட்ட சாதாரண மனமே, தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு அதிகத் தகுதி பெற்றதாகும்.—RH Nov. 27, 1900.

ஸ்தாபன கல்வி அறிவின் மூலம் பயிற்சி பெறுவதைக்காட்டிலும், தேவ ஆவியானவரின் அபிஷேகத்தால் ஊழியக்காரர்கள் தகுதியாக்கப்படுவர். விசுவாசமும் ஜெபமுமிக்க மனிதர்கள் தேவன் தங்களுக்குக் கொடுக்கும் வார்த்தைகளை அறிவிப்பதற்குப் பரிசுத்தமான வைராக்கியத்துடன் முன்செல்ல நெருக்கி ஏவப்படுவர்.—GC 606 (1911).

## கல்வி அறிவில்லாதவர்களையும் தேவன் உபயோகிப்பார்

கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்கள், இந்தக் கடைசி நாட்களின் பரீட்சையிலும் சோதனையிலும் நின்று ஜெயிப்பார்கள். கேள்விகேட்கப்படாத விசுவாசத்தினால் கிறிஸ்துவில் பெலப்படுத்தப்பட்டிருக்கின்ற, கல்வியறிவில்லாத சீஷன்கூட, இல்லைவாதம் கொண்டுவரக்கூடிய சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு எதிர்த்துநின்று,

பரியாசக்காரர்களின் குதர்க்கவாதங்களை வெட்கமடையச்செய்ய முடியும்.

தங்களது எதிராளிகள் மறுத்துப்பேசவோ எதிர்த்து நிற்கவோ முடியாத ஞானத்தையும், வல்லமையான ஒரு நாவையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குக் கொடுப்பார். தங்களது விவாதத்தினாலே சாத்தானுடைய வஞ்சகங்களை ஜெயிக்க முடியாதவர்களும்கூட, கற்றறிந்த ஞானிகளாக தங்களை நினைத்துக்கொள்ளுகின்ற மனிதர்கள் குழம்புவதற்கேதுவான திட்டமான ஒரு சாட்சியை அளிப்பார்கள். கல்லாதவர்களின் உதடுகளிலிருந்து சத்தியத்திற்காக மனமாற்றத்தை உண்டுபண்ணக்கூடியதான, அப்படிப்பட்ட வல்லமையுடனும் ஞானத்துடனும் ஏற்றுக்கொள்ளச் செய்கின்ற வார்த்தைகள் வெளிவரும். அவர்களது சாட்சியினிமித்தம் ஆயிரக்கணக்கானோர் மனமாற்றமடைவர்.

கற்றறிந்த ஞானிகளுக்கில்லாத இந்த வல்லமையை ஏன் கல்லாத மனிதன் பெற்றிருக்க வேண்டும்? ஏனெனில் கல்லாதவர், கிறிஸ்துவின்மேல் வைத்திருக்கின்ற விசுவாசத்தினாலே, தூய்மையான தெளிவான சத்தியத்தின் சூழ்நிலைக்குள்ளாக வந்திருக்கின்றார். அதே நேரம் கற்றறிந்த மனிதனோ, சத்தியத்தை விட்டுவிலகிச் சென்றிருக்கின்றார். (ஆவியில்) எளிமையான மனிதன் கிறிஸ்துவின் சாட்சியாக இருக்கின்றான். சரித்திரங்களிலிருந்தோ அல்லது உயர்ந்த விஞ்ஞானம் என்று அழைக்கப்படுவதிலிருந்தோ, அவனால் ஈர்க்கத்தக்க விதத்தில் பேசமுடியாது. ஆனால், தேவனுடைய வார்த்தையிலிருந்து வல்லமையான ஆதாரத்தை அவன் திரட்டி வைத்திருக்கின்றான். ஆவியானவருடைய ஏவுதலின் கீழாக அவன் பேசுகின்ற சத்தியம் மிகவும் தூய்மையானதாயும் குறிப்பிடத்தக்கதாயும் இருக்கின்றது. மேலும், அவனுடைய சாட்சி மறுத்து பேசப்பட முடியாததாயும், எதிர்க்க முடியாத மிகுந்த ஒரு வல்லமையை அதனுடன் கொண்டுச்செல்லக் கூடியதாயும் இருக்கின்றது.—8MR 187, 188 (1905).

## சிறுபிள்ளைகள் தூதை அறிவிப்பர்

இப்போது கல்வியறிவில்லாதவர் மத்தியிலும்கூட அநேகர் கர்த்தருடைய வார்த்தைகளை அறிவிக்கின்றனர். பரலோகத்திலிருந்து வருகின்ற தூதை முன்சென்று அறிவிக்கத்தக்கதாக, சிறுபிள்ளைகள் ஆவியானவரால் தூண்டப்படுவர். மனிதனுடைய இயந்திரச் சாதனங்கள், அவனது கட்டுப்படுத்தும் சட்டங்கள் மற்றும் ஜாக்கிரதையான வழிமுறைகளையெல்லாம் புறம்பே தள்ளிவிட்டு, ஆவியானவரின் தூண்டுதல்களுக்கு இணங்குகின்ற அனைவர்மீதும் ஆவியானவர் ஊற்றப்படுவார். அப்போது அவர்கள், அவரது வல்லமையின் பராக்கிரமத்துடன் சத்தியத்தை அறிவிப்பார்கள்.—Ev 700 (1895).

சத்தியத்தை அதன் எளிமையில் இயேசு வழங்கியதைப்போல, மனிதர்கள் இன்னமும் வழங்காமலிருக்கின்றதை பரலோக அறிவு ஜீவிகள் காணும்பொழுது, தேவனுடைய ஆவியினால் சாதாரண சிறுபிள்ளைகள் அசைக்கப்பட்டு, இக்காலத்திற்குரிய சத்தியத்தை அறிவித்துக்கொண்டு முன்செல்வார்கள்.—SW 66 (1895).

### தூதர்களின் ஊழியம்

வேதாகமத்தின் உட்பொருளை ஆராய்ச்சி செய்யும்படித் தூண்டுவதற்கு, பரலோகத்தின் தூதர்கள் மனித மனங்களை அசைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதுவரை செய்யப்பட்டிருந்ததை விட ஒரு மகா உன்னதமான பணி இனிமேல் செய்யப்படும். அதன் மகிமையில் ஒரு சிறிதளவுகூட மனிதருக்குச் செல்லாது; ஏனெனில் இரட்சிப்பைச் சுதந்தரித்துக்கொள்ளப் போகிறவர்களுக்காக தூதர்கள் இரவும் பகலும் பணிவிடை செய்துகொண்டிருக்கிறார்கள்.—CW 140 (1875).

கொர்நேலியுவைப் போன்ற அநேக மனிதர்கள் நமது உலகத்திலே இருக்கின்றார்கள்... கொர்நேலியுவுக்காக தேவன் கிரியை செய்தது போலவே, உண்மையான தரத்தை உயர்த்திப்பிடிக்கின்ற இவர்களுக்காகவும் அவர் கிரியை செய்கின்றார்... கொர்நேலியு தேவனைப்பற்றின ஒரு அறிவை, பரலோகத்திலிருந்து வந்த தூதர்களின் சந்திப்பின் மூலமாகப் பெற்றுக்கொண்டதுபோலவே இவர்களும் பெற்றுக்கொள்வார்கள்.—Letter 197, 1904.

தெய்வீக வல்லமை மனித முயற்சிகளோடு இணையும்போது, சருகுகளிடையே நெருப்பு பரவுவதுபோல ஊழியமும் மிக வேகமாகப் பரவும். மனிதனால் பகுத்தாராய முடியாத துவக்கங்களைக்கொண்ட ஏதுகரங்களை தேவன் பயன்படுத்துவார். தேவனுடைய கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதை மனிதர்கள் புறக்கணியாமல் இருந்திருந்தால் நிறைவேற்றியிருந்திருக்கக்கூடிய, ஆசீர்வாதத்தை பெற்றிருக்கும் ஒரு வேலையை தூதர்கள் செய்வார்கள்.—1SM 118 (1885).

### பிரகடன ஊழியத்தின் உலகளாவிய விரிவாக்கம்

மூன்றாம் தூதனின் தூதை அறிவிப்பதில் இணைந்துகொள்ளப் போகின்ற தூதனின் தூது, தனது மகிமையால் பூமி முழுவதையும் பிரகாசிப்பிக்கச் செய்வதாக இருக்கின்றது. உலகளாவிய விரிவாக்கத்தின் மற்றும் வழக்கத்திற்கு மாறான வல்லமையின் ஒரு வேலை இங்கு முன்னறிவிக்கப்பட்டிருக்கின்றது... தேவனுடைய ஊழியக்காரர்கள் ஒளியேற்றப்பெற்ற பிரகாசிக்கின்ற பரிசுத்த ஒப்படைப்புடனும், பிரகாசிக்கப்பட்ட

தங்கள் முகங்களுடனும், பரலோகத்திலிருந்து வருகின்ற தூதை அளிப்பதற்குத் துரிதமாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வார்கள். உலகம் முழுவதிலும் ஆயிரக்கணக்கான குரல்களால் எச்சரிப்பு கொடுக்கப்படும்.—GC 611, 612 (1911).

மூன்றாம் தூதனைப் பின்தொடருகின்ற தூதனுடைய தூது இப்போது உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் கொடுக்கப்படவேண்டும். அது அறுவடையைக் குறித்த தூதாக இருக்க வேண்டும். அப்போது தேவனுடைய மகிமையால் பூமி முழுவதும் பிரகாசிக்கப்படும்.—Letter 86, 1900.

உபத்திரவத்தின் புயல் உண்மையாகவே நம்மீது மோதியடிக்கும்…, அதன் பிறகே, மூன்றாம் தூதனின் தூது உரத்த சத்தமாக எழும்பும். பின்பு, கர்த்தருடைய மகிமையால் பூமி முழுவதும் பிரகாசமடையும்.—6T 401 (1900).

அமெரிக்காவின் ஒவ்வொரு பட்டணத்திலும் சத்தியம் பிரசங்கிக்கப்பட வேண்டும். உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும் இந்த எச்சரிப்பின் தூது கொடுக்கப்படவேண்டும்.—GCB March 30, 1903.

உரத்த சத்தத்தின்போது திருச்சபை, அவளது உயர்த்தப்பட்ட கர்த்தரின் தெய்வீகக் குறுக்கீடுகளின் உதவியினால், இரட்சிப்பின் அறிவை மிகவும் அபரிமிதமாக பரவச்செய்வதின்மூலம், ஒவ்வொரு பட்டணத்திற்கும் ஒவ்வொரு நகரத்திற்கும் வெளிச்சம் கொடுக்கப்படும்.—Ev 694 (1904).

ஒரு நெருக்கடி நேரிடையாக நம்மீது வந்திருக்கின்றது. இப்போது நாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே, இந்தக் கடைசி காலத்திற்குரிய மாபெரும் சத்தியங்களை அறிவிக்க வேண்டும். வெகுசீக்கிரம் ஒவ்வொருவரும் எச்சரிப்பைக் கேட்டு, தீர்மானம் எடுப்பார்கள். அப்பொழுது முடிவு வரும்.—6T 24 (1900).

## ராஜாக்கள், சட்டவல்லுநர்கள், ஆலோசனைச் சங்கங்கள் அனைத்தும் அத்தூதினைக் கேட்கும்

எவரேனும் தனியாக சாட்சிப்பகர வேண்டும் என்ற காரியம் தற்போது நமக்குச் சாத்தியமாகக் காணப்படவில்லை. ஆனால், அவருடைய நாமத்தினிமித்தம் ஆலோசனை மன்றங்களுக்கு முன்பாகவும், ஆயிரமாயிரம் மக்களுக்கு முன்பாகவும் நாம் நிற்கவேண்டிய வேளை வரும். அப்பொழுது ஒவ்வொருவரும் தங்களுடைய விசுவாசத்திற்கான காரணத்தைச் சொல்ல வேண்டியதிருக்கும். அதன் பிறகு, சத்தியத்திற்காக எடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நிலைப்பாடுகளின்மீதும் கடுமையான

கண்டனம் வரும். அப்படியானால் நாம் ஆதரிக்கின்ற இந்த உபதேசங்களை நாம் ஏன் நம்புகின்றோம் என்று அறிந்துகொள்ளும்படிக்கு தேவனுடைய வார்த்தையைப் படிக்க வேண்டியது அவசியமாயிருக்கின்றது.—RH Dec. 18, 1888.

அநேகர் நீதிமன்றங்களில் நிற்க வேண்டியிருக்கும். சிலர் ராஜாக்களுக்கு முன்பாகவும், பூமியிலே கற்றுத் தேர்ந்தவர்கள்முன்பாகவும், தங்கள் விசுவாசத்திற்கான காரணத்தைச் சொல்ல வேண்டியிருக்கும். சத்தியத்திலே ஒரு மேலோட்டமான அறிவை மாத்திரம் பெற்றிருப்பவர்கள், வேதவாக்கியங்களைத் தெளிவாக விளக்கி எடுத்துக் கூறவும், தங்களது விசுவாசத்திற்கான சரியான காரணங்களைக் கொடுக்கவும் முடியாது. அவர்கள் குழப்பமடைவர். மேலும் அவர்கள் வெட்கப்படாத ஊழியக்காரராகவும் இருக்க முடியாது. பரிசுத்தமான பிரசங்க மேடையில் தான் ஏறி பேசப்போவதில்லை என்பதால், வேதவாக்கியங்களைப் படிக்கவேண்டிய அவசியமில்லை என்று ஒருவரும் கற்பனைப் பண்ணிக்கொள்ளவேண்டாம். உங்களிடம் தேவன் என்ன எதிர்பார்க்கின்றார் என்பது உங்களுக்குத் தெரியாது.—FE 217 (1893).

### அநேக அட்வெண்டிஸ்ட் மக்கள் வெளிச்சத்துக்கு விரோதமாக இடைக்கட்டிக்கொள்வர்

சபைகளிலே (ஏழாம்நாள் அட்வெண்டிஸ்ட் சபைகளிலே), தேவனுடைய வல்லமையின் ஒரு அற்புதமான வெளிப்பாடு இருக்க வேண்டியதா யிருக்கின்றது. ஆனால் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தாத, பாவ அறிக்கை செய்து, மனம் வருந்தி, தங்களது இதயக் கதவைத் திறக்காத ஜனங்களின்மீது அந்த வல்லமை அசைவை உண்டுபண்ணாது. பூமி முழுவதையும் தேவனுடைய மகிமையால் பிரகாசிப்பிக்கப்போகின்ற அந்த வல்லமையின் வெளிப்பாட்டினை தங்களது குருட்டாட்டமான கண்களால் ஆபத்தான ஏதோ ஒரு காரியமாகவும், தங்களது பயங்களை எழுப்புகின்ற ஒரு காரியமாகவும் பார்த்து, அதை எதிர்ப்பதற்கு அவர்கள் தங்களைத் தாங்களே இடைக்கட்டிக்கொள்வர். அவர்களது எதிர்பார்ப்புகளின்படியும் கருத்துகளின்படியும் கர்த்தர் கிரியைசெய்யாதபடியால், அவ்வேலையை அவர்கள் எதிர்ப்பார்கள். “ஏன், இத்தனை வருட காலமாக இந்த ஊழியத்தில் நாங்கள் இருக்கும்போது, எங்களுக்கு தேவனுடைய ஆவியைத் தெரியாதா?” என்று அவர்கள் கேட்பார்கள்.—RH Extra, Dec. 23, 1890.

மூன்றாம் தூதனின் தூது புரிந்துகொள்ளப்படாது. பூமி முழுவதையும் பிரகாசிப்பிக்கின்ற அதனுடைய மகிமையின் வெளிச்சம், வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கின்ற அதன் மகிமையில் நடக்க மறுக்கிறவர்களால் பொய்யான வெளிச்சமென்று அழைக்கப்படும்.—RH May 27, 1890.

### அட்வென்டிஸ்ட்டுகள் அல்லாத பெரும்பகுதியினர் எச்சரிப்பைப் புறக்கணிப்பர்

செய்தியைக் கேட்கின்ற அநேகர்—எண்ணிக்கையில் மிகவும் அதிகமானோர்—பக்திவிநயமான அந்த எச்சரிப்பை நம்பி ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். குணங்களை சோதிக்கின்ற தேவனுடைய கற்பனைகளுக்கு, அநேகர் உண்மையில்லாதவர்களாகக் காணப்படுவர். கர்த்தருடைய (உண்மையான) ஊழியக்காரர்கள், கொள்கை வெறியர் என்று அழைக்கப்படுவர். ஆதலால், அவர்களுக்குச் செவிகொடுக்கவேண்டாம் என்று போதகர்கள் ஜனங்களை எச்சரிப்பார்கள். மனிதர் கேட்டாலும் அல்லது கேட்காமல் விட்டுவிட்டாலும், தூதைக் கொடுக்கும்படியாக தேவனுடைய ஆவி ஏவினபோது, இதே போன்றுதான் நோவாவும் நடத்தப்பட்டார்.—TM 233 (1895).

இவ்விதமான எச்சரிப்புகளைச் சிலர் கவனித்துக் கேட்பார்கள். ஆனாலும் பெரும்பான்மையினரால் அவைகள் நிராகரிக்கப்படும்.—HP 343 (1897).

மிகவும் புகழ்பெற்று விளங்கும் போதகர்கள் தங்களது அதிகாரம் பற்றி கேள்வியெழுப்பப்பட்டதால், பூர்வ காலத்துப் பரிசேயர்களைப்போலக் கோபத்தால் நிறைந்து, தூதினை சாத்தானிடமிருந்து வருவதாகக் கண்டனம் தெரிவிப்பர்; அதை அறிவிப்போரைப் பரியாசம் செய்து, உபத்திரவப்படுத்தும்படி பாவத்தை நேசிக்கும் திரள்கூட்டத்தாரையும் தூண்டிவிடுவர்.—GC 607 (1911).

### பெருந்திரள்கூட்டத்தார் அழைப்பிற்குச் செவிகொடுப்பர்

மதம் சார்ந்த மற்ற அமைப்புகளிலே சிதறியிருக்கும் ஆத்துமாக்கள் அழைப்புக்குச் செவிசாய்த்தார்கள். சோதோமின் அழிவிற்கு முன்னதாக லோத்து அதிலிருந்து துரிதமாக வெளியேற்றப்பட்டதுபோல், அழிவிற்காக நியமிக்கப்பட்ட சபைகளிலிருந்து அருமையானவர்கள் துரிதமாக வெளியேற்றப்பட்டார்கள்.—EW 279 (1858).

இறுதிச் சோதனையின் வழியாகச் சென்று, ஒரு மலையைப் போல நிலையாய் நிற்கப்போகின்ற, உறுதியான விசுவாசிகளின் சேனை ஒன்று இருக்கும்.—3SM 390 (1888).

உலகத்தின் அணிவரிசைகளிலிருந்தும், திருச்சபைகளிலிருந்தும்—கத்தோலிக்கத் திருச்சபைகளிலிருந்துங்கூட—வெளியே வரவிருக்கின்ற அநேக ஆத்துமாக்கள் இருக்கின்றனர். சத்தியத்தை அறிவிப்பதற்காக, இதுவரையில் பதவியிலும் பதிவேடுகளிலும் நின்றிருந்தோரின் (அட்வென்டிஸ்ட்

மக்களின்) வைராக்கியத்தைவிட, அவர்களது வைராக்கியம் அளவில் மிஞ்சக்கூடியதாயிக்கும்.—3SM 386, 387 (1889).

திரள்கூட்டமான ஜனங்கள் விசுவாசத்தைப் பெற்று, கர்த்தருடைய சேனைகளில் வந்துசேருவார்கள்.—Ev 700 (1895).

இந்த மந்தையிலிருந்து விலகிப்போன அநேகர் பெரிய மேய்ப்பனைப் பின்தொடர்ந்து செல்லும்படியாகத் திரும்பி வருவார்கள்.—6T 401 (1900).

அஞ்ஞான ஆப்பிரிக்காவிலும், கத்தோலிக்க நாடுகளான ஐரோப்பாவிலும், தென் அமெரிக்காவிலும், சீனாவிலும், இந்தியாவிலும், கடலிலுள்ள தீவுகளிலும், பூமியின் இருண்ட மூலைகளிலும்கூட தெரிந்து கொள்ளப்பட்ட மேகம் போன்ற ஒரு திரளான ஜனங்களை, அதாவது, இருளின் மத்தியிலே பிரகாசித்து, தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதனால் கிடைக்கக்கூடிய மறுரூபமடையச் செய்யும் வல்லமையை, மருளவிழுந்துபோன ஒரு உலகிற்குத் தெளிவாகக் காண்பிக்கக்கூடிய இப்படிப்பட்ட ஜனங்களை, தேவன் தமக்கென்று ஆயத்தமாக வைத்துவைத்திருக்கின்றார். இப்பொழுதுகூட, ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு பாஷைக்காரர் மற்றும் மக்கள் மத்தியிலும் அவர்கள் காணப்படுகின்றனர்; மருளவிழுகையின் மிகவும் இருண்ட மணிவேளையிலே, "சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள்" போன்ற அனைவரையும், மரண தண்டனையின் அச்சுறுத்தலின் கீழாக, பொய்யான ஒரு ஓய்வுநாளின் பற்றுறுதியின் அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக சாத்தானுடைய மாபெரும் முயற்சி எடுக்கப்படும்போது, "தேவனுடைய குமாரர்களாகிய கறைதிரையற்றவர்கள், கபடற்றவர்கள், கடிந்து கொள்ளப்படாதவர்கள்" ஆகிய உண்மையுள்ள இந்த மக்கள், உலகத்திலே விளக்குகளைப்போல பிரகாசிப்பார்கள்.—PK 188, 189 (c. 1914).

## ஆயிரக்கணக்கானோர் ஒரே நாளில் மனமாற்றமடைவர்

பதினோராம் மணி நேரத்திலே, ஆயிரக்கணக்கானோர் சத்தியத்தைக் கேட்டு ஏற்றுக்கொள்வர்… சத்தியத்திற்கான இந்த மனமாற்றங்கள் சபையை ஆச்சரியப்படுத்தும் விதத்தில் மிகுந்த வேகத்தில் நடைபெறும். அதனால் தேவனுடைய நாமம் மாத்திரம் மகிமைப்படும்.—2SM 16 (1890).

பதினோராம் மணி நேரத்திலே சத்தியத்தைக் கேட்டு, தேவஆவியானவருடைய அசைவாடுதல்களைக் கண்டு, ஒரேநாளில் சத்தியத்திற்காக மனம்மாறுகின்ற ஆயிரக்கணக்கானோர் இருக்கின்றனர்.—EGW'88 755 (1890).

பெந்தெகொஸ்தே நாளிலே சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டபின்பு, எப்படி ஜனங்கள் மனமாற்றம் அடைந்தார்களோ அதேபோல, ஒரேநாளில் அநேகர் மனம் மாறப்போகின்ற காலம் வந்துகொண்டிருக்கின்றது.—Ev 692 (1905).

## இருதயத்தில் உண்மையுள்ளோர் நீண்டகாலம் தயக்கம் காட்டுவதில்லை

நல்லவர்கள் அநேகர் தங்களது நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்வதற்கான காரியத்தை இப்பொழுது காணாதிருக்கின்றனர். ஆனால் இக்காரியங்கள் அவர்களது ஜீவியங்களில் செல்வாக்கினை ஏற்படுத்திக்கொண்டேயிருக்கும். இந்தத் தூது உரத்த சத்தத்துடன் செல்லும்போது. அதை ஏற்றுக்கொள்ள அவர்கள் ஆயத்தமாய் இருப்பார்கள். நீண்ட காலத்திற்கு அவர்கள் தயக்கங்காட்டமாட்டார்கள்; அவர்கள் வெளியே வந்து, தங்களது நிலைப்பாட்டைத் தெரிந்துகொள்வார்கள்.—Ev 300, 301 (1890).

பூமியின்மீது குடியிருக்கின்ற அனைவர்மீதும், கடைசி சோதனை வெகுசீக்கிரமாக வர இருக்கின்றது. அந்நேரத்திலே செயல்புரிவதற்கு ஆயத்தமான தீர்மானங்கள் எடுக்கப்படும். வேத வார்த்தைகளைக் கேட்டு மனந்திரும்புகின்ற அனைவரும், தாங்களாகவே இம்மானுவேலாகிய இளவரசரின் இரத்தக்கறைபடிந்த கொடியின் கீழாக அணிவகுத்து வந்தடைவார்கள்.—9T 149 (1909).

உண்மையும் நேர்மையுமான ஆத்துமா ஒவ்வொன்றும் சத்திய ஒளியினிடத்திற்கு வந்தடையும்.—GC 522 (1911).

தேவ ஆவியானவரின் ஆழமான உணர்த்துதலாலேயே தூது கொண்டுசெல்லப்படுமே ஒழிய, அதிகமான வாக்குவாதத்தினால் அல்ல. வாக்குவாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்திருக்கின்றன. விதை விதைக்கப்பட்டிருக்கின்றது; இப்போது அது முளைத்தெழும்பி கனிகளைக் கொடுக்கும். மிஷனெரி ஊழியம் செய்தவர்களால் விநியோகிக்கப்பட்ட புத்தகங்கள் தங்களது வேலையைச் செய்திருந்தபோதும், அதனால் உணர்த்தப்பட்ட அநேக மனங்கள் சத்தியத்தை முழுவதுமாகப் புரிந்துகொள்வதிலிருந்தும் அல்லது அதற்குக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுப் பதிலிருந்தும் தடுக்கப்பட்டிருந்தன. வெளிச்சத்தின் ஒளிக்கதிர்கள் தற்போது எல்லா இடத்திலும் ஊடுருவிச் சென்று, சத்தியம் அதனுடைய தெளிவில் காணப்படுகின்றது. தேவனுடைய நேர்மையான பிள்ளைகள், தங்களைக் கட்டியிருந்த கயிறுகளை அறுத்தெறிந்து அதிலிருந்து விடுபடுவார்கள். குடும்ப

பந்தங்கள் மற்றும் சபை பிணைப்புகளெல்லாம் இப்பொழுது அவர்களைப் பிடித்து வைக்க வல்லமையற்றதாகிவிட்டன. மற்ற எல்லாவற்றைவிடவும் சத்தியம் அவர்களுக்கு விலையுயர்ந்ததாயிருக்கும். சத்தியத்திற்கெதிரான சக்திகள் ஒன்றுதிரண்டிருந்தாலும்கூட, ஒரு திரள்கூட்டமான ஜனங்கள் கர்த்தரின் பக்கமாகத் தங்களது நிலைப்பாட்டைத் தெரிந்தெடுப்பார்கள்.—GC 612 (1911).

**அச்சடிக்கப்பட்ட பக்கத்தின் செல்வாக்கு**

ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஒரே நாளில் விரைவாக மனமாற்றமடைவார்கள். அவர்களில் அநேகர் நமது வெளியீடுகளை வாசித்ததினிமித்தமாகவே தங்களது முதல் உணர்த்துதல்களைப் பெற்றதாகக் கூறுவார்கள்.—Ev 693 (1885).

இந்தப் புத்தகத்தை (மாபெரும் போராட்டம்) விநியோகம் செய்ததால் உண்டான பலன்களை இப்பொழுது காணப்படுபவைகளால் தீர்மானிக்க முடியாது. இதை வாசிப்பதன்மூலம் சில ஆத்துமாக்கள் எழுப்பப்பட்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகின்ற மக்களோடு உடனடியாகத் தங்களை இணைத்துக்கொள்ளத் தைரியங்கொள்வர். ஆனால், இதை (மாபெரும் ஆன்மீக போராட்டம் என்ற புத்தகத்தை) வாசிக்கின்ற ஒரு திரள்கூட்டத்தினர், இந்தப் புத்தகத்திலே முன்னுரைக்கப்பட்டிருக்கின்ற அதே நிகழ்வுகள் நிறைவேறுவதை காண்கின்றவரைக்கும், தங்களது நிலைப் பாட்டைத் தீர்மானிக்கமாட்டார்கள். இதிலே முன்னுரைக்கப்பட்டவை களில் நிறைவேறின சில தீர்க்கதரிசனங்கள், மற்ற தீர்க்கதரிசனங்களும் அதைப்போலவே நிறைவேறும் என்ற விசுவாத்தை உண்டுபண்ணும். முடிவான ஊழியத்தில் கர்த்தருடைய மகிமையினால் பூமி பிரகாசமடையும் போது, இந்த ஏதுகரத்தின்(வெளியீடுகளின்) பலனாக அநேக ஆத்துமாக்கள் தேவனுடைய கற்பனைகளுக்காகத் தங்கள் நிலைப்பாட்டைத் தெரிந்தெடுப்பார்கள்.—CM 128, 129 (1890).

மாபெரும் வல்லமையோடு பரலோகத்திலிருந்து இறங்கிவந்து, (வெளி. 18:1) பூமி முழுவதையும் தன்னுடைய மகிமையால் பிரகாசிப்பிக்கின்ற வேறொரு தூதனுடைய ஊழியம், நமது அச்சகங்களிலிருந்து வெளியாகும் புத்தகங்களின் வழியாகவே மிகவும் அதிக அளவில் நிறைவேற்றப்பட வேண்டும்.—7T 140 (1902). ★

15

# தேவனுடைய முத்திரையும் மிருகத்தின் முத்திரையும்

### இரண்டு வகுப்பினர் மட்டுமே

இரண்டு கூட்டத்தார் மட்டுமே அங்கு இருக்கமுடியும். ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையினாலோ, அல்லது மிருகத்தின் சொரூபம் அல்லது மிருகத்தின் முத்திரையினாலோ, இந்த ஒவ்வொரு பிரிவினரும் தெளிவாக முத்திரையிடப்படுவர்.—RH Jan. 30, 1900.

விசுவாசத்திற்கும் அவிசுவாசத்திற்கும் இடையே நடக்கின்ற மாபெரும் போராட்டத்திலே, கிறிஸ்தவ உலகம் முழுவதும் ஈடுபடும். அனைவரும் இதில் ஏதாவது ஒரு பக்கத்தைத் தெரிந்துகொள்வர். சிலர் இந்தப் போராட்டத்தின் எந்தப் பக்கத்துடனும் வெளிப்படையாக ஈடுபடாதிருக்கலாம். அவர்கள் சத்தியத்திற்கு விரோதமான பக்கத்தை தெரிந்தெடுக்காததுபோல காணப்படலாம். ஆயினும், நிந்தையை சகிக்கவோ அல்லது சொத்துக்களை இழக்கவோ பயப்படுவதால் அவர்கள் கிறிஸ்துவிற்காகத் தைரியமாக வெளியே வரமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்கு எதிரிகளாகவே எண்ணப்படுவர்.—RH Feb. 7, 1893.

முடிவுகாலத்தை நாம் நெருங்கும்போது, ஒளியின் பிள்ளைகளுக்கும் இருளின் பிள்ளைகளுக்கும் இடையே இருக்கின்ற எல்லைக்கோடு மிகமிகத் தெளிவானதாக இருக்கும். அவர்கள் மிகவும் அதிகமாக, மாறுபட்ட நிலையில் இருப்பார்கள். இந்த வேறுபாடு, "மறுபிறப்பு" என்று, கிறிஸ்துவின் வார்த்தைகளில் விவரிக்கப்பட்டுள்ளது—அதாவது கிறிஸ்துவுக்குள் புதிதாக சிருஷ்டிக்கப்படல், உலகத்திற்கு மரித்தல், தேவனுக்கென்று பிழைத்திருத்தல் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இவைகள்தான் பரலோகத்துக்குரியவர்களிலிருந்து பூலோகத்துக்குரியவர்களைப் பிரிக்கின்ற பிரிவினைச் சுவர்களாகும். இவைகளே உலகத்துக்குரியவர்கள் யாரென்றும், அதிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் யாரென்றும், அதாவது தேவனுடைய பார்வையில் அருமையானவர்களாய்

பிரித்தெடுக்கப்பட்டவர்கள் யாரென்றும், இவை இரண்டிற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை விளக்கும்.—Special Testimony to the Battle Creek Church (Ph 155) 3 (1882).

## குடும்ப அங்கத்தினர்கள் பிரிக்கப்படுவர்

ஒரே குடும்பத்தின் அங்கத்தினராயிருந்தவர்கள் பிரிக்கப்படுவர். நீதிமான்களின்மீது ஒரு அடையாளம் போடப்படும். "என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்" (மல். 3:17). தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்கள், வெளிச்சத்திலுள்ள பிள்ளைகளின் கூட்டத்துடன் இணைந்துகொள்வார்கள். அவர்கள் வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசித்து, ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரம் பெற்றுக்கொள்வார்கள்.

"ஒருவன் எடுத்துக்கொள்ளப்படுவான்." அவனுடைய பெயர் ஜீவபுஸ்தகத்தில் நிலைத்திருக்கப்போகும் அதே நேரத்தில், அவன் யாருடன் ஒருங்கிணைந்திருந்தானோ, அவர்கள் தேவனிடமிருந்து நித்தியமான பிரிவின் அடையாளத்தைப் பெற்றிருப்பார்கள்.—TM 234, 235 (1895).

## பெற்றுக்கொண்ட வெளிச்சத்தின்படியே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம்

நமக்குக் கிடைத்திருக்கின்ற இந்த சிலாக்கியத்தைப் பெற்றிராத அநேகர், பெரிய வெளிச்சத்தைப் பெற்றிருந்தும் அதன்படி நடந்திராத அநேகருக்குமுன்பாக பரலோகத்தில் பிரவேசிப்பார்கள். அநேகர் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த வெளிச்சத்தின்படியே வாழ்ந்து அதன்படியே நியாயந்தீர்க்கப்படுவார்கள்.—Letter 36, 1895.

எச்சரிப்பின் செய்தி உலகத்தின் எல்லா பகுதிகளுக்கும் செல்லும் வரைக்கும், போதுமான வெளிச்சமும் ஆதாரமும் ஒவ்வொரு ஆத்துமா விற்கும் கொடுக்கப்படும்வரைக்கும், அனைவரும் நியமிக்கப்பட்ட காலத்திற் காகக் காத்திருக்கவேண்டும். ஒருசிலர் மற்றவரைக்காட்டிலும் குறைவான வெளிச்சத்தைப் பெற்றிருக்கலாம். என்றாலும், தாங்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்தின்படியே ஒவ்வொருவரும் நியாயந்தீர்க்கப்படுவர்.—Ms 77, 1899.

தேவனுடைய பிரமாணத்தைக்குறித்த பெரிய வெளிச்சம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பிரமாணம் குணத்தினுடைய தரத்தின்

அளவாகும். இதற்கேற்ப மனிதன் இப்பொழுதே தனது குணத்தை மாற்றிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றான். இந்தச் சட்டங்களாலேயே, கடைசி மாபெரும் நாளிலே அவன் நியாயந்தீர்க்கப்படப்போகின்றான். அந்நாளிலே மனிதர்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுவர்.—GH Jan., 1901 (Supp.).

மாபெரும் வெளிச்சத்தைப் பெற்றிருந்தும் அதைப் புறக்கணித்தவர்கள், மிகவும் அநேக நற்பயன்கள் கொடுக்கப்படாதிருந்தவர்களைக்காட்டிலும், மிகவும் மோசமான ஒரு நிலையிலே நிற்பார்கள். அவர்கள் கர்த்தரை அல்ல, தங்களையே உயர்த்திக்கொண்டார்கள். ஒவ்வொரு தருணத்திலும் தேவன்மீது மனிதர் கொண்டுவந்த அவகீர்த்தியின் அளவுக்குத்தக்கதாக, அவர்கள் சுமக்கப்போகும் தண்டனையின் அளவும் இருக்கும்.—8MR 168 (1901).

தனது தீர்மானத்தை ஞானமாய்ச் செய்திட, போதுமான வெளிச்சத்தை ஒவ்வொருவரும் பெற்றிருக்கவேண்டும்.—GC 605 (1911).

## மனப்பூர்வமாய் கண்களை மூடிக்கொள்பவர்களுக்கு மன்னிப்பு கிடையாது

யாதொருவரும், தாங்கள் இதுவரை பெற்றிராததும், பெற்றுக் கொள்ள முடியாததுமான, கவனம்செலுத்தாத வெளிச்சத்திற்காகவும் சத்திய அறிவிற்காகவும் நியாயந்தீர்க்கப்படமாட்டார்கள். ஆனால் அநேகர், உலகத்தினுடைய தரத்தினை பின்பற்ற விரும்புவதால், கிறிஸ்துவின் பிரதிநிதியான தூதுவர்களால் தங்களுக்கு அளிக்கப்பட்ட சத்தியத்திற்குக் கீழ்ப்படிய மறுக்கின்றார்கள். தங்களது ஆத்துமாவிலே பிரகாசித்த வெளிச்சமும் தங்களது அறிவைச் சென்றடைந்த சத்தியமும் நியாயத்தீர்ப்பிலே அவர்களை நியாயந்தீர்க்கும்.—5BC 1145 (1884).

சத்தியத்தைக் கேட்பதற்கான ஒரு சந்தர்ப்பம் இருந்தும், அதைக் கேட்கவோ அல்லது புரிந்துகொள்ளவோ எந்த ஒரு முயற்சியும் எடுக்காமல், அந்தச் சத்தியத்தை கேட்காத பட்சத்தில் தாங்கள் அதற்குக் கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை என்று நினைத்துக்கொண்டு இருந்தால், சத்தியத்தைக் கேட்டு அதை நிராகரித்ததற்கு ஒப்பாக, அவர்கள் தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளவர்களாகத் தீர்க்கப்படுவார்கள். சத்தியம் என்ன என்று அறிந்துகொள்ளும் அறிவைப் பெற்றிருந்தும், தவறைச் செய்வதற்குத் தீர்மானிக்கின்றவர்களுக்கு மன்னிப்பே கிடையாது. கிறிஸ்துவானவர் தமது பாடுமரணத்தின் மூலமாக, அறியாமையினால் செய்கின்ற அனைத்துப் பாவங்களுக்கும் நிவாரணம் உண்டுபண்ணியிருக்கின்றார். ஆனால்,

வேண்டுமென்றே குருட்டுத்தனமாக வலிய தவறு செய்வதற்கு, அங்கு எந்தவிதப் பரிகாரமும் இல்லை.

நமது அறிவிற்கு எட்டாத சத்திய வெளிச்சத்திற்கு, நாம் கணக்கொப்புவிக்க வேண்டியதில்லை. ஆனால், நாம் எதிர்த்ததும் புறக்கணித்ததுமான சத்தியங்களுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும். ஒரு மனிதன் தனக்கு ஒருபோதும் வழங்கப்படாத சத்தியத்தைப் புரிந்துகொள்ள முடியாது. ஆதலால் அவன் ஒரு போதும் தான் பெற்றிராத சத்திய வெளிச்சத்திற்காக நியாயந்தீர்க்கப்பட முடியாது.—5BC 1145 (1893).

**நடைமுறைக்கு உகந்த இரக்கமனப்பான்மையின் முக்கியத்துவம்**

நமது நடைமுறைக்கு உகந்த இரக்கமனப்பான்மையைப் பொறுத்தே, கடைசிநாளின் தீர்மானங்கள் அமையவிருக்கின்றன. அன்புடன் செய்யப்பட்ட அனைத்து நன்மையான செயலையும், தமக்கே செய்யப்பட்டதுபோல கிறிஸ்து அங்கீகரிக்கின்றார்.—TM 400 (1896).

நாடுகள் அனைத்தும் தேவனுக்கு முன்பாக ஒன்றுதிரட்டப்படும் போது, அங்கே இரண்டே இரண்டு பிரிவுகள்தான் இருக்கும். ஏழைகள் மற்றும் துன்பப்படுகின்றவர்களின் உருவத்திலிருக்கும் அவருக்கு (இயேசுவிற்கு), அவர்கள் எதைச் செய்தார்களோ அல்லது எதைச் செய்யாமல் புறக்கணித்தார்களோ, அதைவைத்து அவர்களுடைய நித்திய முடிவு தீர்மானிக்கப்படும்…

புறஜாதிகள் மத்தியிலும்கூட அறியாமலே ஆண்டவரைத் தொழுது கொள்பவர்களும், மனித ஏதுகரங்களின்மூலமாக சத்திய வெளிச்சம் ஒருபோதும் கிடைக்கப்பெற்றிராதவர்களும் இருக்கின்றனர். இருப்பினும் அவர்கள் அழிந்துபோகமாட்டார்கள். எழுதப்பட்டிருந்த தேவனுடைய பிரமாணத்தைக்குறித்து அறிவில்லாதவர்களாக இருந்தபோதும், இயற்கையின் வழியாக அவர்களிடத்தில் பேசிய ஆண்டவரின் சத்தத்தை அவர்கள் கேட்டிருக்கின்றனர், பிரமாணம் எதை எதிர்பார்த்ததோ அதற்குக் கீழ்ப்படிந்திருக்கின்றனர். அவர்களுடைய கிரியைகள் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் இருதயங்களைத் தொட்டிருக்கின்றார் என்பதற்குச் சான்றாக இருக்கின்றது. மேலும் அவர்கள், தேவனுடைய பிள்ளைகளாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

ஜாதிகளுக்கு மத்தியிலும் அஞ்ஞானிகளுக்கு மத்தியிலும் உள்ள எளிமையானவர்கள், இரட்சகரின் உதடுகளிலிருந்து கூறப்பட்ட, “மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்” என்ற வார்த்தையைக்

கேட்பதற்கு, எப்படிப்பட்ட ஆச்சரியமும் மகிழ்ச்சியும் பெற்றவர்களாக இருப்பார்கள்! எல்லையற்ற அன்பை உடையவரின் அங்கீகாரமான வார்த்தைகளை, அவரது பின்னடியார்கள் ஆச்சரியத்துடனும் மகிழ்ச்சியுடனும் நோக்கிப்பார்க்கும்போது, அவரது இருதயம் எவ்வித மகிழ்ச்சியுடையதாக இருக்கும்!—DA 637, 638 (1898).

### உள்நோக்கம் செயல்களுக்கான குணத்தை அளிக்கும்

நியாயத்தீர்ப்புநாளிலே சிலர், கண்டிப்பாக சலுகையைப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு, தங்களது நற்கிரியைகளை ஒரு காரணமாகக் காட்டி இரக்கத்திற்காகக் கெஞ்சுவார்கள். அவர்கள்: "வாலிபர்களுக்குத் தொழிலை அமைத்துக் கொடுத்தேன்; மருத்துவமனைகளை உருவாக்க நிதி உதவி அளித்தேன்; விதவைகளின் தேவைகளை விசாரித்து ஏழை ஜனங்களை என் வீட்டிலே சேர்த்துக்கொண்டேன்" என்பார்கள். ஆம், அனைத்தையும் நீங்கள் செய்தீர்கள் என்றாலும், உங்களுடைய உள்நோக்கங்களெல்லாம் சுயநலத்தால் மிகவும் கறைபடுத்தப்பட்டிருந்ததால், உங்கள் கிரியைகள் கர்த்தரின் பார்வையில் அங்கீகரிக்கப்படவில்லை. நீங்கள் செய்தவை எல்லாவற்றிலும், சுயம் முதன்மை வாய்ந்ததாக அனைவரும் பார்க்கும்படி கொண்டுவரப்பட்டிருந்தது.—Ms 53, 1906.

நமது செயல்களின்மீது அவமானம் அல்லது உயர்வான சன்மார்க்க மதிப்பு ஆகிய குணத்தின் தன்மையை முத்திரையாகப் பதிப்பது உள்ளத்தின் நோக்கமே ஆகும்.—DA 615 (1898).

### தேவனுடைய முத்திரை என்பது என்ன?

தேவனுடைய மக்கள் அவர்களது நெற்றிகளிலே முத்திரையிடப் படுகின்றனர்; அதாவது இது காணப்படத்தக்கதான முத்திரையோ அல்லது அடையாளமோ அல்ல. மாறாக, அறிவுப்பூர்வமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் சத்தியத்திலே நிலைப்படுத்தப்படுவதாகும். அதனால் தேவனுடைய ஜனங்கள் அசைக்கப்பட இயலாது—தேவனுடைய ஜனங்கள் முத்திரையிடப்பட்டு, அசைக்கப்படுதலிற்கு ஆயத்தமாக்கப்பட்டபின்பு அந்தக் காரியம் நடைபெறும். உண்மையில் அது ஏற்கனவே துவங்கிவிட்டது.—4BC 1161 (1902).

கர்த்தருடைய ஓய்வுநாளை[1] நேர்மையாக ஆசரிக்கிறவர்கள்மீது ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை போடப்படும்.—7BC 980 (1897).

தேவனுடைய முத்திரையைத் தங்கள் நெற்றிகளில் பெற்றுக் கொள்கிறவர்கள், கண்டிப்பாக நான்காம் கற்பனையின் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டும்.—7BC 970 (1899).

ஓய்வுநாளை உண்மையாய் ஆசரிப்பதே, தேவனுக்கு உண்மையாயிருப்பதற்கான அடையாளமாகும்.—7BC 981 (1899).

வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தவராகிய மாபெரும் நியாயப்பிரமாணிகரின் முத்திரை, பத்து கற்பனைகளில் நான்காம் கற்பனையில் மட்டுமே அடங்கியுள்ளது.—6T 350 (1900).

கர்த்தருடைய ஞாபகச்சின்னமும் ஏதேனில் ஸ்தாபிக்கப்பட்ட ஓய்வுநாளுமான ஏழாம்நாளாகிய ஓய்வுநாளை ஆசரிப்பதே, நாம் தேவனுக்கு உண்மையாயிருப்பதின் பரீட்சையாக இருக்கின்றது.—Letter 94, 1900.

பொதுப்படையான அழிவிலிருந்து ஜனங்களைக் காப்பதற்காக, எபிரெய வீடுகளின் கதவுகளின் மேலாகப் போடப்பட்ட ஒரு அடையாளத்தைப் போலவே, தேவனுடைய ஜனங்கள் ஒவ்வொருவர்மீதும் ஒரு அடையாளம் போடப்படும். "நான் தங்களைப் பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்பதை அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்" (எசே. 20:12) என்று தேவன் அறிவிக்கின்றார்.—7BC 969 (1900).

### குணத்திலே கிறிஸ்துவிற்கு ஒத்த ஒரு தன்மை

குணத்தில் கிறிஸ்துவிற்கு ஒத்த ஒரு தன்மையைக் கொண்டிருப்பவர்கள் மீது மாத்திரமே, ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை போடப்படும்.—7BC 970 (1895).

ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையைப் பெற்றிருப்பவர்களும், இக்கட்டுக்காலத்திலே பாதுகாக்கப்படுபவர்களும், இயேசுவின் சாயலை முழுமையாகப் பிரதிபலிக்க வேண்டும்.—EW 71 (1851).

தேவனுடைய முத்திரை பரிசுத்தமில்லாத ஒரு ஆண் அல்லது பெண்ணின் நெற்றியின்மீது ஒருபோதும் போடப்படமாட்டாது. உலகப்பற்றுள்ள, உலகக் காரியங்களைக்குறித்து கவலையோடிருக்கின்ற ஆண் அல்லது பெண்ணின் நெற்றியின்மீது அது ஒருபோதும் போடப்படாது. பொய் நாவுகள் அல்லது வஞ்சக எண்ணங்களைக் கொண்ட ஆண்கள் அல்லது பெண்களின் நெற்றிகளின்மீதும் அது ஒருபோதும் போடப்படாது. முத்திரையைப் பெற்றுக்கொள்ளுகின்ற அனைவரும், தேவனுக்கு முன்பாகக் கறையற்றவர்களாக—பரலோகத்திற்குச் செல்லும் பிரஜைகளாக இருக்க வேண்டும்.—5T 216 (1882).

கீழ்ப்படிதலின்மூலமே அன்பு வெளிப்படுத்தப்படும்; பூரண அன்பு எல்லா பயத்தையும் புறம்பே தள்ளும். தேவனை நேசிக்கிறவர்கள், தேவனுடைய

முத்திரையைத் தங்கள் நெற்றிகளில் பெற்றுக்கொண்டு, தேவனுக்கேற்ற கிரியைகளைச் செய்வார்கள்.—SD 51 (1894).

உலகத்தையும் மாம்சத்தையும் பிசாசையும் ஜெயிப்பவர்கள் மாத்திரமே, ஜீவனுள்ள தேவனின் முத்திரையைப் பெறுவதற்கு சலுகை பெற்றவர்களாக இருப்பார்கள்.—TM 445 (c. 1886).

தேவனால் கொடுக்கப்பட்ட நமது அனைத்து வல்லமைகளையும் உபயோகித்து, கிறிஸ்துவுக்குள்ளாக நிறைவான வளர்ச் சியின் அளவுக்குத்தக்க, பூரண புருஷர்களாயும் ஸ்திரீகளாயும் மாறும் நிலையை அடைய நாம் கடினமாகப் போராடுகின்றோமா? அவரது முழுமையை நாடுகின்றோமா? எப்போதும் உயர்வுக்கு மேலாக உயர்வை அடையக்கூடிய, அவரது குணத்தின் பரிபூரணத்தைப் பெற்றுக்கொள்வதற்குப் பிரயாசப்படுகின்றோமா? தேவனுடைய ஊழியக்காரர்கள் இந்த நிலையை அடையும்போது, தங்களது நெற்றிகளிலே முத்திரையிடப்படுவார்கள், பதிவுசெய்கின்ற தூதன் "முடிந்தது" என்று அறிக்கையிடுவார். சிருஷ்டிப்பினாலும் மீட்பினாலும், அவருக்குச் சொந்தமானவர்களான அவர்கள் அவருக்குள்ளாக முழுமையடைவார்கள். —3SM 427 (1899).

## முத்திரையிடுகின்ற இந்தக் காலத்தில்

இயேசு பரிசுத்த ஸ்தலத்திலே தமது பரிந்துபேசுகின்ற ஊழியத்தை முடித்து, இரண்டாம் திரைக்குள்ளாக—(மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்) பிரவேசிக்கும்வரை, இப்பொழுதிருக்கும் ஓய்வுநாள்பற்றிய சோதனை வந்திருக்க முடியாது என்பதை நான் கண்டேன். எனவே, 1844–ம் ஆண்டு ஏழாம் மாதத்தில் நடு இராத்திரியின் சத்தம் முடிவடைந்தபோது, மகா பரிசுத்த ஸ்தலத்தின் கதவுகள் திறக்கப்படுவதற்கு முன்னதாக மரித்துப்போன கிறிஸ்தவர்கள், உண்மையான ஓய்வுநாளை ஆசரிக்காவிட்டாலுங்கூட, தற்போது நம்பிக்கையோடு நித்திரை செய்கின்றார்கள். ஏனென்றால், மகா பரிசுத்த ஸ்தலத்தின் கதவு திறக்கப்பட்டதிலிருந்து நமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கும் இந்த ஓய்வுநாள் சத்தியத்தின் வெளிச்சத்தையும், அதற்கான பரீட்சையையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை; இந்தக் காரியத்தில், தேவனுடைய ஜனங்கள் சிலரை சாத்தான் சோதிப்பதை நான் கண்டேன். ஏனெனில், உண்மையான ஓய்வுநாளை ஆசரிக்காமலே அநேக நல்ல கிறிஸ்தவர்கள் விசுவாச வீரர்களாக தங்கள் ஓட்டத்தை முடித்திருப்பதால், இந்த ஓய்வுநாள் தற்போது நமக்கு ஒரு சோதனையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்று அநேகர் சந்தேகித்துக்கொண்டிருந்தார்கள்...

முத்திரையிடுதலின் இந்தக் காலத்திலே, தேவனுடைய ஜனங்களின் மனங்களை நிகழ்கால சத்தியத்திலிருந்து பிரித்து, அவர்களைத் தடுமாறச்

செய்ய, சாத்தான் இப்போது எல்லா சூழ்ச்சிகளையும் உபயோகித்துக் கொண்டிருக்கின்றான்.—EW 42, 43 (1851).

திருமதி. ஹேஸ்டிங்ஸ் அவர்கள் முத்திரையிடப்பட்டதை நான் கண்டேன். தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அவர்கள் உயிர்த்தெழுந்து, 1,44,000 பேரோடுகூட பூமியின்மீது நிற்பார்கள். எனவே, அவர்களுக்காக நாம் துக்கிக்க வேண்டியதில்லை என்றும், அவர்கள் இக்கட்டுக்காலத்திலே இளைப்பாறுவார்கள் என்றும் நான் கண்டேன்.—2SM 263 (1850).

நமது பூமியில் நூறு வயதைக் கடந்த மனிதர்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். முதிர்வயதின் இயற்கையான விளைவுகள் அவர்களது பெலவீனங்களிலே காணப்படுகின்றன. ஆனாலும் அவர்கள் தேவனை நம்புகின்றனர், தேவனும் அவர்களை நேசிக்கின்றார். தேவனுடைய முத்திரை அவர்கள் மீது இருக்கின்றது, "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கர்த்தர் சொல்லுகின்ற கூட்டத்தின் மத்தியிலே அவர்களும் இருப்பார்கள்.—7BC 982 (1899).

**ஓ! தேவனுடைய முத்திரை நம்மீது இடப்படலாம்!**

இன்னும் சிறிது காலத்தில், தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்ற ஒவ்வொருவரும், அவருடைய முத்திரையைத் தங்கள்மீது பெற்றிருப்பர். ஆ! அது நம்முடைய நெற்றியின்மீது போடப்படுமா! தேவனுடைய ஊழியக்காரர்களின் நெற்றிகளிலே முத்திரையைப் போடுகின்ற தூதன், தங்களைக் கடந்து சென்றுகொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தை யாரால் தாங்கிக்கொள்ளக் கூடும்?—7BC 969, 970 (1889).

ஒப்பிட்டுப்பார்க்கப்படும் வகையில் உள்ள இந்த சமாதான நாட்களில், சத்தியத்திலிருக்கும் விசுவாசிகள் தங்களது விசுவாசத்திலே தொடர்ந்து செயலாற்றவில்லையென்றால் மாபெரும் பரீட்சை வரும்போதும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காமலும் அதன் முத்திரையைத் தங்கள் நெற்றிகளிலாவது அல்லது தங்கள் கைகளிலாவது பெற்றுக்கொள்ளாமலும் இருக்கப்போகின்ற அனைவர்க்கும் எதிராகச் சட்டம் கொண்டுவரப்படும்போதும், வேறு என்ன காரியம் அவர்களைத் தாங்கி நிலைநிறுத்தும்? இந்த பக்திவிநயமான காலம் வெகு தொலைவிலில்லை. தேவனுடைய ஜனங்கள் பெலவீனராயும் மனவுறுதியற்றவராயும் மாறுவதற்குப்பதிலாக, உபத்திரவகாலத்திற்கென்று பெலத்தையும் தைரியத்தையும் ஒன்றுதிரட்டிக்கொண்டிருக்கவேண்டும்.—4T 251 (1876).

**மிருகத்தின் முத்திரை என்பது என்ன?**

வாரத்தின் முதலாம் நாளை ஆசரிப்பதின்மூலம் மிருகத்தையோ அல்லது அதன் சொரூபத்தையோ வணங்கக்கூடியவர்களிடமிருந்து

வேறுபட்டிருக்கின்ற ஒரு மக்கள் கூட்டத்தை நோக்கிப்பார்க்கும்படிக்கு யோவான் அழைக்கப்பட்டார். இந்த நாளை (முதலாம் நாளை) ஆசரிப்பதே மிருகத்தின் முத்திரையாகும்.—TM 133 (1898).

மிருகத்தின் முத்திரை என்பது போப்புமார்க்கத்தின் ஓய்வுநாளாகும். —Ev 234 (1899).

பரீட்சை வரும்போது மிருகத்தின் முத்திரை என்ன என்பது தெளிவாகக் காட்டப்படும். அது ஞாயிற்றுக்கிழமையைக் கைக்கொள்வதாகும்.—7BC 980 (1900).

தேவனுடைய முத்திரை அல்லது அடையாளம், கர்த்தருடைய சிருஷ்டிப்பின் நினைவுச்சின்னமான ஏழாம்நாளாகிய ஓய்வுநாள் ஆசரிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது... மிருகத்தின் முத்திரை என்பது இதற்கு எதிரான—வாரத்தின் முதலாம் நாளின் ஆசரிப்பாகும்.—8T 117 (1904).

"சிறியோர், பெரியோர்... யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது, நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்குச்" செய்தது (வெளி. 13:16). ஞாயிற்றுக்கிழமையில் மனிதர்கள் தங்கள் கைகளினால் வேலை செய்யாமலிருப்பது மாத்திரமல்ல, அதை ஓய்வுநாளாக தங்கள் மனங்களில் அவர்கள் ஏற்றுக்கொள்ளவும் வேண்டியதிருக்கின்றது.—Special Testimony to Battle Creek Church (Ph 86) 6, 7 (1897).

**மிருகத்தின் முத்திரை எப்போது பெற்றுக்கொள்ளப்படுகின்றது**

இதுவரையில் எவரும் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்ளே வில்லை.—Ev 234 (1899).

ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பு, இன்னும் மிருகத்தின் முத்திரையாக வில்லை. இந்த விக்கிரகமாகிய ஓய்வுநாளை மனிதர் வணங்கும்படி சட்டம் இயற்றப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும்வரை, அது மிருகத்தின் முத்திரை யாக இருக்காது. அந்த நாள் பரீட்சையாக வரப்போகின்ற ஒரு நேரம் வரும்; ஆனால் அந்த நேரம் இன்னமும் வரவில்லை.—7BC 977 (1899).

தேவன் ஓய்வுநாளை மனிதர்களது விசுவாசத்தைச் சோதிக்கின்ற ஒரு பரீட்சையாக, அவர்களுக்கும் தமக்கும் இடையில் ஒரு அடையாளமாகக் கொடுத்திருக்கின்றார். தேவனுடைய பிரமாணத்தைக்குறித்த வெளிச்சம் தங்களிடத்தில் வந்த பின்பும் அதற்குக் கீழ்ப்படியாமல், தேவனுடைய பிரமாணத்திற்கு மேலாக தொடர்ந்து மானிடச் சட்டங்களை உயர்த்திப்பிடிக்கும் மனிதர்கள், தங்களுக்கு முன்னிருக்கும் மாபெரும் இக்கட்டுக்காலத்திலே மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள்.—Ev 235 (1900).

ஓய்வுநாள் சத்தியம் விசேஷமாகச் சர்ச்சைக்குரிய காரியமாக இருப்பதால், அது விசுவாசத்தின் மாபெரும் பரீட்சையாக இருக்கும். இந்தக் கடைசி பரீட்சை மனிதர்கள்மீது கொண்டுவரப்படும்பொழுது, யார் தேவன் பக்கம் நின்று அவரைச் சேவிப்பார்கள், யார் அவரைச் சேவிக்கமாட்டார்கள் என்று, அவர்களுக்கு மத்தியில் வேறுபாட்டின் கோடு தெளிவாக வரையப்படும்.

நான்காம் கற்பனைக்கு விரோதமாகச் சட்டம் இயற்றியிருக்கும் அரசாங்கத்திற்குப் பணிந்து போலியான ஓய்வுநாளைக் கைக்கொள்ளுதல் என்பது தேவனுக்கு எதிராக இருக்கின்ற ஒரு வல்லமைக்கு உண்மையாயிருக்கக் கடமைப்பட்டிருப்பதின் ஒரு உறுதிமொழியாக இருக்கும்போது, தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து மெய்யான ஓய்வுநாளைக் கைக்கொள்ளுதல் என்பது சிருஷ்டிகருக்கு உண்மையாயிருப்பதின் ஆதாரமாக இருக்கும். ஒரு சாரார் உலக அதிகாரங்களுக்கு அடிபணிவதின் அடையாளத்தை ஏற்றுக்கொள்வதின்மூலமாக மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்ளும்பொழுது, மற்றொரு சாரார் தெய்வீக அதிகாரத்திற்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்டிருப்பதின் அடையாளத்தைத் தெரிந்தெடுப்பதின் மூலமாக தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்வர்.—GC 605 (1911).

### ஞாயிறு ஆசரிப்பு கட்டாயமாக்கப்படுவது ஒரு சோதனையாகும்

வெளிச்சத்தைப் பெற்றிருந்து, நான்காம் கற்பனையைக் கடமை யுணர்வாக அவர்கள் காணும்வரைக்கும், யாதொருவரும் குற்றவாளியாகத் தீர்க்கப்படமாட்டார்கள். ஆனால் போலியான ஓய்வுநாளை வலியுறுத்தும் சட்டம் பிறப்பிக்கப்படும்பொழுதும், மூன்றாம் தூதனின் உரத்த சத்தம் மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குவதற்கு எதிராக மக்களை எச்சரிக்கும்பொழுதும், உண்மைக்கும் பொய்க்கும் இடையிலுள்ள கோடு தெளிவாக வரையப்படும். அப்போது இன்னமும் மீறுதலில் தொடர்ந்து நிலைத்திருப்பவர்கள், மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்வார்கள். —Ev 234, 235 (1899).

ஞாயிறு ஆசரிப்பு சட்டத்தின்மூலமாக நடைமுறைப்படுத்தப்படும் பொழுது, உண்மையான ஓய்வுநாள்பற்றிய கடமை உணர்வைக்குறித்து உலகம் தெளிவாக அறிந்துகொள்ளும். ரோமைவிட வேறு எந்த உயர்மட்ட அதிகாரத்தையும் பெற்றிராத ஒரு சட்டத்திற்குக் கீழ்ப்படிவதற்காக, எவர் ஒருவர் தேவனுடைய கட்டளைகளை மீறுவாரோ அவர் தேவனுக்கும் மேலாக போப்பு மார்க்கத்தைக் கனம்பண்ணுவார். அந்த நபர், ரோமுக்கும் ரோம சபையால் நியமிக்கப்பட்ட அமைப்பை (ஞாயிறு ஆசரிப்பு) வலியுறுத்துகிற வல்லமைக்கும் மரியாதை செலுத்துகின்றார். அவர், மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகின்றார்.

தமது அதிகாரத்தின் அடையாளமாக இருக்க வேண்டும் என்று தேவன் அறிவித்துள்ள அமைப்பை (ஏழாம்நாள் ஓய்வுநாள்) உதறித்தள்ளிவிட்டு, அதற்குப் பதிலாக ரோமாபுரி தனது மிக உயர்ந்த அதிகாரத்திற்கு அடையாளமாகத் தெரிந்துகொண்ட நாளை மனிதர்கள் கனப்படுத்தும்பொழுது, அதன்மூலம் அவர்கள் ரோமாபுரிக்கு உண்மையாக இருப்பதின் அடையாளமாகிய—“மிருகத்தின் முத்திரை”யை ஏற்றுக்கொள்ளுகின்றனர். இந்தக் காரியம் மக்களுக்கு முன்பாக இவ்வாறு தெளிவாக வைக்கப்படும்வரை அது முக்கியக் காரியமாக இருக்காது. மேலும் அவர்கள் மீறுதலில் தொடர்ந்து இருந்துகொண்டு, “மிருகத்தின் முத்திரையைப்” பெற்றுக்கொள்ளக்கூடிய மனிதர்களுடைய கட்டளைகளுக்கும், தேவனுடைய கட்டளைகளுக்கும் மத்தியில் சரியானதைத் தெரிந்துகொள்வதற்காகக் கொண்டுவரப்படுகின்றனர்.—GC 449 (1911). ★

[1] தாங்கள் பெற்றிருக்கின்ற அல்லது தாங்கள் பெற்றுக்கொள்ள முடிந்த சத்திய அறிவைக்குறித்து மட்டுமே, தேவன் மக்களிடம் கணக்கு கேட்பார் என்று தெரிவிக்கின்ற இந்த வாக்கியமும், இதைப்போன்ற மற்ற வாக்கியங்களும் இந்த அதிகாரத்தில் மேற்கோள்காட்டப்பட்டுள்ள முந்தின பத்திகளின் வெளிச்சத்திலே புரிந்துகொள்ளப்படவேண்டும்.

# 16

# கிருபையின் கால முடிவு

### கிருபையின் காலம் எப்போது முடியுமென்று ஒருவரும் அறியார்

எப்பொழுது இந்த தூது முடிவடையும் அல்லது எப்பொழுது கிருபையின் காலம் முடிவிற்கு வரும் என்புதை தேவன் நமக்கு வெளிப்படுத்த வில்லை. வெளிப்படுத்தப்பட்ட காரியங்களை நமக்காகவும், நமது பிள்ளை களுக்காகவும் நாம் ஏற்றுக்கொள்வது அவசியமாகும். அதேசமயம் சர்வவல்லவரின் பரலோக ஆலோசனை மன்றங்களில் மறைவாக வைக்கப் பட்டிருக்கிறவைகளை அறிந்து கொள்ள முயற்சிக்காமலும் இருப்போமாக...

கிருபையின் காலம் எப்பொழுது முடிவடையும் என்பதைக்குறித்து, என்னிடத்தில் ஏதாவது விசேஷித்த வெளிச்சம் உள்ளதா என்று கேட்கின்ற அநேக கடிதங்கள் எனக்கு வந்துகொண்டிருக்கின்றன. அவர்களுக்கு நான் கொடுக்கின்ற பதில்: ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகின்றபடியால், பகற்காலமாகிய இதுவே நாம் கிரியை செய்யவேண்டிய நேரம் என்ற இந்தத் தூது மாத்திரமே, அளிப்பதற்கு என்னிடத்தில் இருக்கின்றது என்பதே.—1SM 191 (1894).

### கிருபையின் கால முடிவிற்கு முன்னதாக ஞாயிறு ஆசரிப்புச் சட்டம் அமலாக்கப்படும்

கிருபையின் கால முடிவிற்கு முன்னதாக, மிருகத்திற்குச் சொரூபம் உண்டுபண்ணப்படும் என்பதைக் கர்த்தர் எனக்குத் தெளிவாகக் காண்பித் திருக்கின்றார். ஏனெனில், அதுவே தேவனுடைய பிள்ளைகளுக்கு அவர்களது நித்தியமான முடிவைத் தீர்மானிக்கக்கூடிய மாபெரும் பரீட்சையாக இருக்கின்றது.[1]—2SM 81 (1890).

“மிருகத்திற்கான சொரூபம்” என்றால் என்ன? அது எவ்வாறு உண்டுபண்ணப்படவேண்டும்? அந்தச் சொரூபம் இரண்டு கொம்புள்ள மிருகத்தால் உருவாக்கப்படும். மேலும், அது மிருகத்துக்காக உருவாக்கப் படுகின்ற சொரூபமாகும். அது மிருகத்தின் சொரூபமாகவும்கூட அழைக்கப் படுகின்றது.[2] பின்னர் அந்தச் சொரூபம் எதற்கொத்ததாய் இருக்கின்றது என்பதையும், எவ்விதமாய் உருவாக்கப்படுகின்றது என்பதையும் அறிந்து

கொள்ள, போப்பு மார்க்கமான அம்மிருகத்தினுடைய குணாதிசயங்களையே நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

ஆரம்பகால சபை எப்போது சுவிசேஷத்தின் எளிமையை விட்டு விலகி, புறஜாதிகளுடைய பழக்கவழக்கங்களையும் சடங்குகளையும் ஏற்றுக்கொண்டதன் மூலம் கறைபட்டதோ, அப்போதே அது தேவனுடைய ஆவியையும் வல்லமையையும் இழந்துபோனது. எனவே மக்களுடைய மனச்சாட்சியைக் கட்டுப்படுத்த அது மதசார்பற்ற வல்லமையின் ஆதரவை நாடியது. அதன் விளைவாக வந்ததே நாட்டினுடைய அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்திய, தன் சொந்த முடிவுகளை செயல்படுத்துவதற்கு, விசேஷமாக, தங்கள் "மதத்திற்கு எதிரான கொள்கை"யை உடையவர்களைத் தண்டிப்பதற்கு தனது சொந்த முடிவுகளையே செயல்படுத்திய போப்பு மார்க்கம் என்ற ஒரு சபை. மிருகத்திற்கு ஒரு சொருபத்தை அமெரிக்கா உண்டுபண்ண வேண்டுமெனில், தனது நோக்கங்களை நிறைவேற்ற அரசின் அதிகாரத்தையும் பயன்படுத்துவதற்கேதுவாக மதவல்லமை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தியாக வேண்டும்.

"மிருகத்தின் சொரூபம்" என்பது, புராட்டஸ்டண்ட் சபைகள் தங்களது பிடிவாதமான கொள்கைகளை வலியுறுத்துவதற்காக, அரசாங்க வல்லமையின் உதவியை நாடும்போது உண்டாக்கப்படக்கூடிய மருளவிழுந்துபோன புராட்டஸ்டண்ட் மார்க்கத்தின் அமைப்பைக் குறிக்கின்றது.—GC 443, 445 (1911).

**முத்திரையிடுதல் முடியும்போது கிருபையின் காலம் முடிவடையும்**

இக்கட்டுக்காலத்திற்குள் பிரவேசிப்பதற்கு சற்றுமுன்னதாக, நாம் அனைவரும் ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையைப் பெற்றிருப்போம். அதன் பின்பு, தங்கள் கையிலுள்ள நான்கு காற்றுகளை விட்டுவிட இருந்த நான்கு தூதர்களை நான் கண்டேன். அப்பொழுது பஞ்சங்களையும், கொள்ளைநோய்களையும், பட்டயங்களையும், ராஜ்யங்களுக்கு விரோதமாக ராஜ்யங்கள் எழும்பினதையும், முழு உலகமும் குழப்பத்தில் ஆழ்ந்திருப்பதையும் நான் கண்டேன்.—7BC 968 (1846).

பரலோகத்தில் தூதர்கள் அங்கும் இங்கும் விரைவாக சென்று கொண்டிருப்பதை நான் கண்டேன். தனது கையில் கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருந்த ஒரு தூதன் பூமியிலிருந்து திரும்பி வந்து தன்னுடைய வேலை முடிந்துவிட்டதாகவும், பரிசுத்தவான்கள் எண்ணப்பட்டு முத்திரையிடப்பட்டுவிட்டதாகவும் இயேசுவிடம் தெரிவித்தான். அப்போது பத்துக் கற்பனைகளடங்கிய பெட்டிக்கு முன்பாக ஊழியம் செய்துகொண்டிருந்த இயேசு கிறிஸ்து, தமது கைகளிலிருந்த தூபகலசத்தைக் கீழே போட்டு,

தமது கைகளை உயர்த்தி உரத்த சத்தத்துடன்: "முடிந்தது" எனக் கூறியதை நான் கண்டேன்.—EW 279 (1858).

ஒரு கணப்பொழுதைப்போன்ற நேரமே இன்னும் மீந்திருக்கின்றது. ஆனால் இராஜ்யத்துக்கு விரோதமாக இராஜ்யமும் ஜாதிக்கு விரோதமாக ஜாதியும் ஏற்கனவே எழும்பிக்கொண்டிருக்கின்றபடியால், இந்த நேரத்தில் ஈடுபட வேண்டிய பொதுவான வேலை ஒன்றுமில்லை. தேவனுடைய ஊழியக்காரர்களுடைய நெற்றிகளில் முத்திரை போடப்பட்டுத் தீருமளவும், நான்கு காற்றுகள் இன்னமும் பிடித்துவைக்கப்பட்டிருக்கின்றன. அதன் பின்பு, பூமியின் வல்லமைகளெல்லாம் தங்களது படைகளைக் கடைசி மாபெரும் யுத்தத்திற்கு அணிவகுக்கும்.—6T 14 (1900).

பூமியிலிருந்து திரும்பிவருகின்ற ஒரு தூதன், தனது வேலை முடிந்துவிட்டதாக அறிவிக்கின்றான். கடைசி சோதனை இவ்வுலகத்தின்மீது கொண்டுவரப்பட்டிருக்கின்றது. தெய்வீக நியமங்களுக்கு உண்மையா யிருந்ததை நிரூபித்த அனைவரும், "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை யைப்" பெற்றிருந்தனர். அதன்பின்பு, பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில், இயேசுகிறிஸ்து தமது மத்தியஸ்த வேலையை நிறுத்துகின்றார். பின்னர் தமது கரங்களை உயர்த்தி ஒரு உரத்த சத்தத்துடன்: "முடிந்தது" என்று கூறுகின்றார்.—GC 613 (1911).

**கிருபையின் காலம் சடுதியில்—எதிர்பாராத நேரத்தில் முடிவடையும்**

இயேசுகிறிஸ்து மனிதனுக்காகப் பரிந்துபேசுவதை நிறுத்தும்போது, அனைவரது வழக்குகளும் நித்தியமாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கும்... கிருபை யின் காலம் முடியும்; பரலோகத்தில் கிறிஸ்து பரிந்துபேசுவது முடிவுக்கு வரும். இந்த நேரம் கடைசியாக அனைவர்மீதும் சடுதியாக வருகின்றது. சத்தியத்துக்குக் கீழ்ப்படிந்து, தங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரித்துக் கொள்ளத் தவறின அனைவரும் தூங்கிக்கொண்டிருப்பவர்களாக காணப்படுவர்.—2T 191 (1868).

கிருபையின் காலம் முடியும்போது, சடுதியாக, எதிர்பாராதவிதமாக —நாம் அதை மிகக்குறைவாக எதிர்பார்க்கின்ற ஒரு நேரத்தில் வரும். ஆனால் இன்றைக்கு, நாம் ஒரு சுத்தமான பதிவேட்டைப் பரலோகத்தில் பெற்றிருக்க முடியும். தேவன் நம்மை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என்கின்ற நிச்சயத்தையும் நாம் அறிந்துகொள்ள முடியும்.—7BC 989 (1906).

நுட்ப நியாய விசாரணையின் வேலை முடிவடையும்பொழுது, அனைவரது நித்தியமும் ஜீவனுக்காக அல்லது மரணத்திற்காக என்று தீர்மானிக்கப்பட்டிருக்கும். வானத்தின் மேகங்களின்மீது கர்த்தர் தோன்று

வதற்கும் ஒரு குறுகின காலத்திற்கு முன்பாகவே கிருபையின் காலம் முடிவடைகின்றது…

ஜலப்பிரளயத்திற்கு முன்பு நோவா பேழைக்குள் பிரவேசித்த பிற்பாடு, நோவாவை உள்ளே வைத்தும், தேவபக்தி இல்லாதவர்களை வெளியே வைத்தும் தேவன் அடைத்தார். ஆனால், அடுத்த ஏழு நாட்களும், தங்களது அழிவு நிச்சயிக்கப்பட்டுவிட்டது என்பதை அறியாத மக்கள், அஜாக்கிரதையான களியாட்டத்தை விரும்புகின்ற தங்களது வாழ்க்கையைத் தொடர்ந்தது மட்டுமின்றி, சடுதியாய் நடக்க இருக்கின்ற நியாயத்தீர்ப்பின் எச்சரிப்புகளைக் குறித்தும் பரிகசித்துக்கொண்டிருந்தார்கள். ஆகவேதான் நமது இரட்சகரும், "அப்படியே" "மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" (மத். 24:39) என்று கூறுகின்றார். அமைதியான நடுஇரவில், திருடனைப்போல, எவரும் அறியாவண்ணம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் தீர்மானிக்கின்ற மணிவேளையானது கடந்துபோகும்; பாவிகளுக்கு அளிக்கப்பட்ட இரக்கத்தின் சலுகை முடிவாக எடுபட்டுப்போகும்…

வியாபாரம் செய்கின்றவர்கள் தங்களது லாபத்தைச் சம்பாதிப்பதி லேயே தொடர்ந்து மூழ்கியிருக்கும்போது, களியாட்டத்தை விரும்புகின்றவர் கள் அதை அனுபவிக்க நாடிக்கொண்டிருக்கும்போது, நாகரீக மோகம் கொண்ட பெண் அழகுப்பிரியராய் தன்னை வீணாய் அலங்கரித்துக் கொண்டிருக்கும்போது— ஒரு வேளை இப்படிப்பட்ட அந்த மணி வேளையிலே, சர்வ பூமியின் நியாயாதிபதி, "நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய்" (தானி. 5:27) என்கின்ற வாக்கியத்தின் தீர்ப்பைக் கூறுவார்.—GC 490, 491 (1911).

**கிருபையின் காலம் முடிந்த பின்பு மானிட நடவடிக்கைகள்!**

பூமியின் மீதாக, நீதிமான்களும் துன்மார்க்கரும் தங்களது சாவுக்கேது வான தன்மையிலேயே இன்னமும் வாழ்ந்துகொண்டிருப்பர்— அதாவது, மாற்ற இயலாத இறுதியான தீர்மானம் பரலோக ஆசரிப்புக் கூடாரத்திலே தீர்ப்பாகக் கூறப்பட்டாயிற்று என்பதை அறியாமல், மனிதர்கள் அனைவரும் புசித்தும், குடித்தும், நட்டுக்கொண்டும், கட்டிக்கொண்டும் இருப்பார்கள்.—GC 491 (1911).

ஆசரிப்புக்கூடாரத்தின் மாற்ற இயலாத தீர்மானம் அறிவிக்கப்பட்ட தையும், உலகத்தினுடைய நித்தியம் நிரந்தரமாகத் தீர்மானிக்கப்பட்டுவிட்ட தையும் பூமியின் குடிகள் அறியாதிருப்பார்கள். தேவ ஆவியானவர் முடிவாக மக்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையிலும்கூட, மதசம்பந்தமான சடங்குகள் அவர்களால் தொடர்ந்து செய்யப்படும். கொடூரமான ஆர்வத்துடன் தீமையின் பிரபுவானவன், தனது தீய திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளத்

தக்கதாக அவர்களை ஊக்கப்படுத்துவான். ஆர்வத்துடன் செய்யப்படும் அவர்களின் செயல்கள், தேவனுக்கான பக்திவைராக்கியத்தின் போலித் தோற்றத்தைக் கொண்டிருக்கும்.—GC 615 (1911).

கோதுமையும் களைகளும் "அறுப்புக்காலம் வரையிலும் ஒன்றாகவே வளரும்." வாழ்க்கையின் கடமைகளை நிறைவேற்றுவதில், நீதிமான்கள் தேவபக்தியற்றவர்களோடே கடைசிவரையிலும் போராடும்படியாக, அவர்களு டனான தொடர்புக்குள் கொண்டுவரப்படுவார்கள். இருளுக்கும் வெளிச்சத் துக்கும் இடையே இருக்கின்ற வித்தியாசத்தை அனைவரும் தெளிவாகக் காணும்பொருட்டாக, ஒளியின் பிள்ளைகள் இருளின் பிள்ளைகள் மத்தியிலே சிதறப்பட்டிருக்கிறார்கள்.—5T 100 (1882).

தேவனுக்குக் காத்திருப்பவர்களில் சிலர், கிறிஸ்து வரும்வேளையில் தங்களது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பார்கள் என்பதை, சிலர் வயலில் விதைத்துக்கொண்டிருப்பார்கள், வேறு சிலர் அறுவடைசெய்து அதைச் சேர்த்துக்கொண்டிருப்பார்கள், இன்னும் சிலர் ஏந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள் என்று கிறிஸ்துதாமே அறிவித்தார்.—Ms 26, 1901.

### அவிசுவாசமும் விலக்கப்பட்ட கேளிக்கைகளும் தொடரும்

விஞ்ஞானம் என்றழைக்கப்படும் நாத்திகம், வேதாகமத்தின்மீதுள்ள கிறிஸ்தவ உலகத்தின் விசுவாசத்தை அதிக அளவில் அழித்திருக்கின்றது. சுய இன்பத் தோய்வின் வழியை பின்தொடரவும், எச்சரிக்கப்படாதிருக்கவுந்தக்கதாக தவறான கருத்துகளும் கட்டுக்கதைகளும் மிகவும் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஏனெனில் தேவனை தங்களுடைய அறிவில் வைத்துக்கொள்ளாதிருக்க அவர்கள் போராடுகின்றனர். "நாளைய தினம் இன்றைய தினம் போலவும், இதற்கு அதிகமாகவும் இருக்கும்" என்று சொல்லிக் கொள்கின்றனர். அவர்களது அவிசுவாசத்தின் மத்தியிலும், தேவனற்ற கேளிக்கைகளின் மத்தியிலும், பிரதான தூதனுடைய சத்தமும் தேவனுடைய எக்காள சத்தமும் கேட்கப்படுகின்றது…

நமது உலகத்தில் இருப்பவைகளெல்லாம் சுறுசுறுப்பான செயலில் ஈடுபட்டிருக்கும்போதும், லாபத்திற்காக சுயநல நோக்கத்தில் மூழ்கியிருக்கும் போதும், ஒரு திருடனைப்போல எதிர்பாராத நேரத்தில் இயேசு வருவார்.—Ms 15b, 1886.

தேவனுடைய பிள்ளைகளென்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள், உலகத்தோடு ஒன்றுபட்டு அவர்களைப்போலவே வாழ்ந்துகொண்டிருக்கும் போது, தடைசெய்யப்பட்ட கேளிக்கைகளில் அவர்களுடன் இணைந்துகொண் டிருக்கும்போது, உலகத்தின் ஆடம்பரம் சபையின் ஆடம்பரமாக மாறும்போது, திருமண மணி ஓசைகள் இசை எழுப்பும்போது, உலகப்பிரகாரமான அநேக

வருடங்களின் செல்வச் செழிப்பிற்காக அனைவரும் நோக்கிப்பார்த்துக் கொண்டிருக்கும்போது—அந்த வேளையில், வானங்களிலிருந்து மின்னல் பளிச்சிடுவதுபோல, அவர்களது பிரகாசமான எதிர்பார்ப்புகளும் பொய்யான நம்பிக்கைகளும் சடுதியிலே முடிவை அடையும்.—GC 338, 339 (1911).

**மனிதர்கள் முழுநேரமும் தொழிலில் ஈடுபட்டிருப்பர்**

லோத்து சோதோமின் அழிவைக்குறித்து தனது குடும்ப அங்கத்தினருக்கு எச்சரித்தபோது, அவர்கள் அவன் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கவில்லை. மாறாக அவனை, தீவிர ஆர்வமுள்ள ஒரு மத வெறியனாகப் பார்த்தார்கள். எனவே அப்போது வந்த அந்த அழிவு, அவர்களை ஆயத்தமற்றவர்களாகக் கண்டது. அப்படியாகவே, கிறிஸ்து வரும்போதும் இருக்கும். விவசாயிகளும், வியாபாரிகளும், வழக்கறிஞர்களும், வாணிபர்களும் முழுநேரமும் தங்களது தொழிலிலே மும்முரமாய் ஈடுபட்டிருப்பார்கள். அப்பொழுது கர்த்தருடைய நாள் அவர்கள்மீது ஒரு கண்ணியைப் போல வரும்.—RH March 10, 1904.

ஊழியக்காரர்களும், விவசாயிகளும், வியாபாரிகளும், வழக்கறிஞர்களும், பெரிய மனிதர்களும், வெளித்தோற்றத்தில் நல்ல மனிதர்களாக இருப்பவர்களும், "சமாதானமும் சவுக்கியமும்" என்று உரத்துக் கூறும்போது சடுதியான அழிவு வரும். கிறிஸ்துவின் இந்த வார்த்தைகளை, தேவனுடைய நாள் ஒரு கண்ணியைப் போல வரும் என லூக்கா குறிப்பிடுகின்றார்—அதாவது, காடுகளில் இரைதேடிப் போய்க்கொண்டிருந்த ஒரு விலங்கு ஐயோ! திடீரென வேடனுடைய மறைவான கண்ணியில் மாட்டி இரையாவதைப்போல அது இருக்கும்.—10MR 266 (1876).

மனிதர்கள் நிர்விசாரமாய் பொழுதுபோக்குகளில் முழுமையாக ஈடுபட்டிருக்கும்போது, வாங்குவதிலும் விற்பதிலுமே அவர்களது கவனம் முழுவதும் மூழ்கியிருக்கும்போது, யாரும் எதிர்பாராதவிதத்தில் திருடன் அணுகுவான். அப்படிப்போலவே, மனுஷகுமாரனுடைய வருகையிலும் இருக்கும்.—Letter 21, 1897.

**நேர்மறையான மனநிலை கொண்டிருக்கும் மதத்தலைவர்கள்**

உலகம் சார்ந்த தத்துவத்தின் விவாதம், தேவனுடைய நியாயத்தீர்ப்புகளைக்குறித்த பயத்தை மக்கள் மனதிலிருந்து அகற்றிக் கொண்டிருக்கும்பொழுது, மத போதகர்கள் சமாதானமான—செழிப்பான—முன்னோக்கியுள்ள நீண்ட யுகத்தைச் சுட்டிக்காட்டி போதித்துக் கொண்டிருக்கும்பொழுது, உலகம் முழுவதும் வியாபாரத்திலும், உலக இன்பங்களிலும், நடுவதிலும், கட்டுவதிலும், புசிப்பதிலும், குடிப்பதிலும், களியாட்டங்களில் பங்கெடுப்பதிலும் மூழ்கியிருக்கும்பொழுது, தேவனுடைய

எச்சரிப்புகளை உதறித்தள்ளி, அவரது ஊழியக்காரர்களை பரியாசம்பண்ணிக் கொண்டிருக்கும் பொழுதும்—"அழிவு சடுதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை."—PP 104 (1890).

தேவனுடைய நாள் எப்பொழுது வந்தாலும், தேவபக்தி இல்லாதவர்கள் எதிர்பாராத நேரத்திலேயே அது வரும். எவ்வித மாற்றமுமின்றி வாழ்க்கை அதன் சுழற்சியில் சென்றுகொண்டிருக்கும்போதும் மனிதர்கள் கேளிக்கை களிலும், தொழிலிலும், வியாபாரப் போக்குவரத்திலும், பணம் சம்பாதிப் பதிலும் மும்முரமாய் ஈடுபட்டிருக்கும்போதும் மதத்தலைவர்கள் உலகத் தினுடைய அறிவுப் பெருக்கத்தையும் முன்னேற்றத்தையுங்குறித்து மிகைப் படுத்திக் காண்பித்துக்கொண்டிருக்கும்போதும் மக்கள் ஒரு பொய்யான பாதுகாப்பில் தாலாட்டப்பட்டுக்கொண்டிருக்கும்போதும்—அந்த நேரத்திலே, பாதுகாப்பில்லாத வீட்டில் திருடன் நடு இரவில் நுழைந்து கொள்ளையடிப் பதைப்போல, தேவபக்தியில்லாத அலட்சியப்போக்குள்ள மனிதர்கள்மீது, சடுதியான அழிவு வரும், "அவர்கள் தப்பிப்போவதில்லை."—GC 38 (1911).

### கிருபையின் காலம் முடிவடைந்துவிட்டதாக சாத்தான் யூகிப்பான்

சாத்தான் இக்கட்டுக்காலத்திலே துன்மார்க்கரைத் தூண்டிவிடுவான். அவர்கள் தேவ மக்களை வளைந்துகொண்டு, அவர்களை அழிக்க முயல்வார்கள். ஆனால், "மன்னிக்கப்பட்டாயிற்று" என்ற வார்த்தை, பரலோகப் புத்தகங்களில் அவரது மக்களின் பெயர்களுக்கெதிராக எழுதப்பட் டிருக்கின்றது என்பதை அவன் அறியாதிருப்பான்.—RH Nov. 19, 1908.

யாக்கோபுக்கு எதிராக ஏசாவைப் புறப்படத் தூண்டுவதற்கு சாத்தான் எவ்வாறு தனது செல்வாக்கைப் பயன்படுத்தினானோ, அதேபோல இக்கட்டுக் காலத்திலே தேவனுடைய மக்களை அழிக்கும்படிக்குத் துன்மார்க்கரைத் தூண்டிவிடுவான்… பரிசுத்த தூதர்கள் அவர்களுக்குப் பாதுகாவலர்களாக நிற்பதை அவன் காண்பான். அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன என்பதை யூகிப்பான். ஆனால் பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலே, அவர்களது வழக்குகள் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்பதை அவன் அறியாதிருப்பான்.—GC 618 (1911).

### வேத வசனத்திற்கான ஒரு பஞ்சம்

தேவனுடைய ஊழியக்காரர்களால் பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையை இப்பொழுது பாராட்டாமலும், அதைப் படித்து ஆராய்ந்து தியானிக்காமலும், அருமையானதாக உயர்வாக மதிக்காமலும் இருப்பவர்கள் கடுந்துயருடன் இனிமேல் புலம்பி அழுவதற்கான காரணத்தை உடையவர்களாயிருப்பர். நியாயத்தீர்ப்பின் முடிவான நேரத்தில், கர்த்தர் பூமியின்மீது கடந்துசெல்வார் என்பதை நான் கண்டேன். அப்போது,

நடுங்க வைக்கும் பயங்கரமான வாதைகள் விழ ஆரம்பிக்கும். அப்போது தேவனுடைய வார்த்தையை இகழ்ந்து உதாசினப்படுத்தினவர்களும், அதை வெகு அற்பமாக மதிப்பிட்டவர்களும், கர்த்தருடைய வசனத்தைத் தேட "ஒரு சமுத்தரம் தொடங்கி மறு சமுத்திரமட்டும், வடதிசை தொடங்கி கீழ்த்திசைமட்டும் அலைந்து திரிந்தும், அதைக் கண்டடையாமற் போவார்கள்"–ஆமோ. 8:12. வேத வசனம் கேட்கக் கிடையாத ஒரு பஞ்சம் தேசத்திலே வந்திருக்கின்றது.—Ms 1, 1857.

**துன்மார்க்கருக்காக இனி எந்த ஜெபங்களும் ஏறெடுக்கப்படுவதில்லை**

தேவனுடைய ஊழியக்காரர்கள் தெய்வபயமில்லாத ஒரு மக்கள் கூட்டத்திற்காகவும், கலகவீட்டாரான ஒரு சபைக்காகவும், தங்களது கடைசி ஜெபங்களை ஏறெடுத்தும், மனக்கிலேசமடைந்து கடைசிச் சொட்டுக் கண்ணீரைச் சிந்தியும், தங்களது கடைசி வேலையினைச் செய்து முடித்திருப்பார்கள். அவர்களுக்கான பக்திவிநயமான கடைசி எச்சரிப்பும் கொடுக்கப்பட்டாயிற்று. அதன் பின்பு, சத்தியத்தை அறிந்திருக்கிறோம் என்று பெருமைபாராட்டிக்கொண்டு, ஆனால் அதன்படி வாழாத மக்களால், தங்களுடைய ஊழியக்காரர்களிடமிருந்து கொஞ்சம் ஆறுதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், தங்களுக்கு இரட்சிப்பின் வழி விளக்கிக் காண்பிக்கப்படுவதற்காகவும், அல்லது நம்பிக்கையான ஒரு வார்த்தையையோ அல்லது ஒரு ஜெபத்தையோ கேட்பதற்காகவும் அல்லது ஒரு அறிவுரையைப் பெற்றுக்கொள்வதற்காகவும், வீடுகளும் நிலங்களும் மற்றும் கஞ்சத்தனமாய் வாஞ்சையுடன் போற்றிச் சேமிக்கப்பட்டு இறுக்கமாகப் பிடித்துவைக்கப்பட்ட பணமும் (டாலர்), ஆ! எத்தனைச் சீக்கிரமாய் ஊழியக்காரர்களிடத்தில் கொடுக்கப்படும். ஆனால் அப்படி இல்லை, அவை எல்லாவற்றாலும் அப்போது பிரயோஜனமில்லை. இப்போது அவர்கள் சத்தியம் கிடைக்காத பசியாலும், தாகத்தாலும், பயனற்றவிதத்தில் கண்டிப்பாகத் தவிக்க வேண்டும்; அவர்களது தாகம் ஒருபோதும் தணிக்கப்படமாட்டாது; எந்த ஒரு ஆறுதலையும் இப்போது அவர்கள் கண்டடையமாட்டார்கள். அவர்களது வழக்குகள் தீர்மானிக்கப் பட்டு நித்தியத்திற்காய் முடிவுகட்டப்பட்டுவிட்டது. அது அச்சம் நிறைந்த பயங்கரமான ஒரு நேரமாகும்.—Ms 1, 1857.

தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் இரக்கமில்லாமல் பூமியின்மீது ஊற்றப்படும் இந்த நேரத்தில், "உன்னதமானவரின் மறைவிலிருக்கின்ற" தேவனுடைய மக்களை—அதாவது தம்மை நேசித்து தமது கற்பனைகளைக் கைக்கொண்டவர்களை, கர்த்தர் தம்முடைய கூடாரத்தில் மறைத்து வைத்திருக்கிறதைப் பார்க்கும்போது, ஆ! துன்மார்க்கருக்கு அது எத்தனைப் பொறாமையாயிருக்கும்! அப்படிப்பட்ட ஒரு காலத்திலே,

தங்களது பாவங்களினிமித்தம் வேதனைப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு, நீதிமான்களின் பங்கு உண்மையில் பொறாமையூட்டுகின்ற ஒன்றாக இருக்கும். ஆனால் இரக்கத்தின் கதவு துன்மார்க்கருக்கு மூடப்பட்டுவிட்டது. கிருபையின் காலம் முடிந்தபின்பு, அவர்கள் சார்பாக எந்த ஒரு ஜெபமும் ஏறெடுக்கப்படமாட்டாது.—3BC 1150 (1901).

### குணத்தின் மாற்றம் சாத்தியமல்ல

கர்த்தர் மகா வல்லமையோடும் மகிமையோடும் வரவிருக்கிறார். அப்போது நீதிமான்களுக்கும் துன்மார்க்கருக்கும் இடையே, முழுவதுமான ஒரு பிரிவினையை உண்டாக்குவதே அவரது வேலையாக இருக்கும். ஆனால் அந்த நேரத்திலே, தங்களது பாத்திரங்களில் எண்ணெய் இல்லாதவர்களுக்கு (எண்ணெய் வைத்திருப்பவர்களிடமிருந்து) எண்ணெய் மாற்றப்பட இயலாது. அப்போது, "இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்; இரண்டுபேர் வயலில் இருப்பார்கள் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான்" என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் நிறைவேறும். நீதிமான்களும் துன்மார்க்கரும் இவ்வுலக வாழ்க்கையின் வேலையில் ஒன்றுசேர்ந்தே ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால், கர்த்தரோ குணங்களை வாசிக்கிறவராயிருக்கின்றார். அவர், கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள் யார் என்பதையும், அவரது கற்பனைகளை நேசித்து மதிக்கின்றவர்கள் யார் என்பதையும் கண்டறிகின்றார்.—TM 234 (1895).

மரிப்பதென்பது பக்திவிநயமான ஒரு காரியம்தான். ஆனால் உயிரோடிருப்பதென்பது அதைக்காட்டிலும் பக்திவிநயமான ஒரு காரியம். நமது வாழ்க்கையின் ஒவ்வொரு எண்ணமும், வார்த்தையும், செய்கையும் நம்மை மீண்டும் வந்து சந்திக்கும். கிருபையின் காலத்தில் நாம் எதனை உண்டுபண்ணுகின்றோமோ, அதே நிலையில் நித்தியத்திற்கெல்லாம் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். மரணம் சரீரத்திற்கு முடிவைக் கொண்டுவருகின்றது. ஆனால் குணத்தில் எந்த ஒரு மாறுதலையும் உண்டுபண்ணுவதில்லை. கிறிஸ்துவின் வருகை நமது குணங்களை மாற்றாது. ஆனால் இனிமேல் எந்த ஒரு மாற்றத்தையும் உண்டுபண்ண முடியாத அளவிற்கு அது நித்தியமாக அவைகளைத் (குணங்களை) தீர்மானம் மட்டுமே செய்யும்.—5T 466 (1885).

### மற்றுமொரு கிருபையின் காலம் துன்மார்க்கரை உணர்த்தமாட்டாது

நமது தற்போதைய சந்தர்ப்பங்களையெல்லாம் நாம் முழுவதுமாக உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். பரலோகத்திற்கு ஆயத்தப்படக்கூடிய இன்னுமொரு கிருபையின் காலம் நமக்குக் கொடுக்கப்படமாட்டாது. தமது

கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்திருக்கின்ற அனைவருக்காகவும் கர்த்தர் ஆயத்தம் செய்துவைத்திருக்கின்ற, வர இருக்கின்ற பரம வீட்டில் வசிக்கத் தகுதியான குணங்களை உருவாக்கத்தக்கதாக, நமக்கு இருக்கின்ற இந்த சந்தர்ப்பமே நம்முடைய ஒரே ஒரு கடைசி சந்தர்ப்பமாகும்.—Letter 20, 1899.

கர்த்தருடைய வருகைக்குப் பின்பு கிருபையின் காலம் இராது. அப்படி இருக்கும் என்று சொல்லுகிறவர்கள் வஞ்சிக்கப்பட்டவர்களும், தவறான வழியில் நடத்தப்பட்டவர்களுமாவர். பூமியில் ஜலப்பிரளயம் வருவதற்கு முன்பிருந்த அதேபோன்ற ஒரு நிலைமையே, கிறிஸ்து வருவதற்கு முன்பும் இருக்கும். நமது இரட்சகர் வானத்தின் மேகங்கள்மீது வந்தபின்பு, இரட்சிப்படைவதற்கான மற்றொரு சந்தர்ப்பம் ஒருவருக்கும் கொடுக்கப்படமாட்டாது. ஏனெனில், அனைவரும் தங்களது தீர்மானங்களை எடுத்து முடித்திருப்பார்கள்.—Letter 45, 1891.

அவரவர்க்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சத்தின்படியே அனைவரும் சோதிக்கப்பட்டுப் பரீட்சிக்கப்படுவார்கள். சத்தியத்தை விட்டுவிலகிக் கட்டுக்கதைகளுக்குச் செவிகொடுப்பவர்கள், மற்றுமொரு கிருபையின் காலத்தை எதிர்பார்க்க முடியாது. தற்காலிக ஆயிரவருட அரசாட்சி என்பது கிடையாது. பரிசுத்த ஆவியானவர் தங்களது இருதயங்களில் உணர்வைக் கொண்டுவந்த பின்பும், சத்தியத்தை எதிர்த்து, தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தி, அதனால் மற்றவர்களும் அதைப் பெற்றுக்கொள்ளாதபடிக்கு வழியைத் தடைசெய்கின்றவர்கள் ஒருபோதும் உணர்வடையமாட்டார்கள். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின் காலத்திலேயே தங்கள் குணத்தை மாற்றிக்கொள்ள அவர்கள் முயற்சி செய்யாததினிமித்தம், மீண்டுமாக அதே பரீட்சையில் வெற்றி பெறுவதற்கான மற்றொரு சந்தர்ப்பத்தைக் கிறிஸ்து அவர்களுக்கு அளிக்கமாட்டார். தீர்மானம் முடிவானதாய் இருக்கும்.—Letter 25, 1900. ★

[1] ஞாயிறு ஆசரிப்புச்சட்ட வலியுறுத்தல் தேவனுடைய பிள்ளைகளுக்கு மாபெரும் பரீட்சையாக இருக்கப்போகின்றது என்று காட்டப்பட்டுள்ள முந்தைய (15—ம்) அதிகாரத்தைப் பார்க்கவும்.

[2] வெளி. 13:11—17 வரையில் சொல்லப்பட்டுள்ள இரண்டு கொம்புள்ள மிருகம் வெளி. 13:1—10 வரையில் கொடுக்கப்பட்டுள்ள மிருகத்துக்கு ஒரு சொரூபத்தை உண்டாக்குகின்றது.

# 17

# கடைசி ஏழு வாதைகளும் துன்மார்க்கரும்

## (மாபெரும் இக்கட்டுக்காலம், பகுதி—1)

### தேவனுடைய கோப கலசங்கள் ஊற்றப்படும்

பக்திவிநயமான சம்பவங்கள் நம்முன் இனிமேல் நிகழவிருக்கின்றன. எக்காளங்கள் ஒன்றன்பின் ஒன்றாக முழங்கப்படவிருக்கின்றன; பூமியின் குடிகள்மீது கலசங்கள் ஒவ்வொன்றும், ஒன்றன்பின் ஒன்றாக ஊற்றப்பட இருக்கின்றன.—3SM 426 (1890).

உலகம் இரக்கத்தின் தூதனால் விரைவில் கைவிடப்படவிருக்கின்றது; கடைசி ஏழு வாதைகளும் ஊற்றப்படவிருக்கின்றன... தேவனுடைய கோபாக்கினையின் அம்புகள் விரைவில் வரவிருக்கின்றன. தமது கற்பனைகளை மீறினவர்களை அவர் தண்டிக்க ஆரம்பித்தபின்பு, இறுதிவரை ஓய்வே இராது.—TM 182 (1894).

### போராட்டத்தின் மத்தியில் நாடுகள்

வல்லமைபொருந்திய நான்கு தூதர்களும், தேவனுடைய ஊழியக் காரர்களது நெற்றிகளில் முத்திரைபோடப்படும்வரையிலும், பூமியின் வல்லமைகளைப் பிடித்துவைத்திருக்கின்றனர். உலகத்திலுள்ள நாடுகள் யுத்தத்திற்கு ஆவலாகக் காத்திருக்கின்றன. ஆனால் தூதர்களால் தடை செய்யப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. கட்டுப்படுத்துகின்ற இந்த வல்லமை நீக்கப்படும்பொழுது, இக்கட்டும் வேதனையுமான ஒரு காலம் வரும்; சாவுக்கேதுவான போர் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படும்; கப்பல்கள் அவைகளிலிருக்கின்ற சரக்குகள் மற்றும் மக்களோடுங்கூட மகா ஆழத்தில் புதையுண்டுபோகும்; சத்திய ஆவியைக் கொண்டிராத அனைவரும், சாத்தானின் குணத்தையுடைய ஏதுகரங்களின் தலைமையின்கீழ் ஒன்றுபடுவர்; என்றாலும், அர்மகெதோனின் மாபெரும் யுத்தத்திற்கான

காலம் வரும்வரையில், அவர்கள் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டிருப்பர்.—7BC 967 (1900).

**உலகமனைத்தும் அழிவில் ஈடுபட்டிருக்கும்**

உலகம் முழுவதும் வரப்போகின்ற அதன் அழிவைக்குறித்து எச்சரிக்கப்படும்வரைக்கும், யுத்தத்தின் காற்றுகள் வீசாதபடிக்கு, தற்போது தூதர்கள் அவைகளை கட்டுப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். என்றபோதும், பூமியின்மீது மோதத்தக்கதாக ஆயத்தமான நிலையில் ஒரு புயல் உருவாகிக்கொண்டு இருக்கின்றது தமது தூதர்கள் பிடித்திருக்கின்ற காற்றுகளை விடும்படியாக தேவன் அவர்களுக்குக் கட்டளையிடும்பொழுது எழுதுகோலால் விவரிக்கப்படமுடியாத, அத்தகைய போராட்டமான ஒரு காட்சி நிகழும்.—Ed 179, 180 (1903).

எருசலேமின்மேல் வரும் நியாயத்தீர்ப்புகளைக்குறித்த இரட்சகரின் தீர்க்கத்தரிசனம் மற்றுமொரு நிறைவேறுதலை அடையவேண்டியதாக இருக்கின்றது; நடந்து முடிந்த அந்த பயங்கர பாழ்க்கடிப்பு, சாதாரண ஒரு நிழலாட்டமே. தெரிந்துகொள்ளப்பட்ட அந்தப் பட்டணத்திற்கு நேரிட்ட முடிவிலிருந்து, தேவனுடைய இரக்கத்தைப் புறக்கணித்து அவரது கற்பனைகளைக் காலின் கீழாக மிதித்துப்போடும் ஒரு உலகத்திற்கு வரப்போகின்ற அழிவை நாம் காணமுடியும்.—GC 36 (1911).

அப்பொழுது சாத்தான் இந்த பூமியின் குடிகள் அனைவரையும் ஒரு மாபெரும் கடைசிப் போராட்டத்திற்குள்ளாக ஆர்வத்தோடு ஈடுபடுத்துவான். மனிதர்களுடைய தீவிர உணர்ச்சிகளின் பயங்கரமான காற்றுகளை, தேவதூதர்கள் தடுத்துக் கட்டுப்படுத்தாமல் விடும்பொழுது, யுத்தத்திற்கு ஏதுவான அனைத்து மூலப்பொருள்களும் கட்டவிழ்த்துவிடப்படும். பழைய எருசலேம்மீது வந்த அழிவைக்காட்டிலும், மிகவும் பயங்கரமான அழிவில் அப்பொழுது உலகம் முழுவதும் ஈடுபட்டிருக்கும்.—GC 614 (1911).

**தேவன் நீதிபரர், அதேபோன்று இரக்கமுள்ளவர்**

இரக்கமுள்ளவராயும், பொறுமை நிறைந்தவராயும், அன்புள்ள வராயும், தயவுள்ளவராயும், சத்தியம் நிறைந்தவராயும் இருப்பதென்பது தேவனுடைய மகிமையாகும் (குணமாகும்). இருப்பினும், கர்த்தர் தமது இரக்கத்தை வெளிக்காட்டுவது அவரது மகிமையாக இருப்பது போலவே பாவியை தண்டிப்பதில் காட்டப்படுகிற நீதியும் மெய்யாகவே கர்த்தருடைய மகிமையாக இருக்கின்றது.—RH March 10, 1904.

இஸ்ரவேலின் கர்த்தராகிய தேவன், எகிப்தின் தேவர்கள்மீது நியாயத்தீர்ப்பை நிறைவேற்றியதுபோலவே, இந்த உலகத்தின் அனைத்து

தேவர்கள்மீதும் நியாயத்தீர்ப்பை நிறைவேற்றவிருக்கிறார். அவர் அக்கினியாலும், வெள்ளத்தாலும், வாதைகளாலும், பூமியதிர்ச்சிகளாலும் பூமி முழுவதையும் சேதப்படுத்துவார். அப்போது மீட்கப்பட்ட மக்கள் அவரது நாமத்தை உயர்த்தி, இப்பூமியிலே அதை மகிமையுள்ளதாக்குவார்கள். இந்த பூமியினுடைய சரித்திரத்தின் கடைசி மீதமான நேரத்தில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள், தேவன் கற்றுக்கொடுத்தப் பாடங்களைக்குறித்து ஞானமடைய மாட்டார்களா?—10MR 240, 241 (1899).

நமது பரிந்துரையாளராக நின்றுகொண்டிருக்கின்ற தேவன், எல்லாப் பாவ அறிக்கைகளையும் உருக்கமான ஜெபங்களையும் கேட்கின்ற கிருபை மற்றும் அன்பின் அடையாளமான வானவில்லை தமது தலையில் அணிந்தவராக சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்ற தேவன், பரலோக ஆசரிப்புக்கூடாரத்திலே தமது வேலையை விரைவில் முடிக்கவிருக்கின்றார். அப்போது கிருபையும், இரக்கமும் அவரது சிங்காசனத்திலிருந்து இறங்கும், நியாயமும் நீதியும் அவைகளின் இடத்தைப் பிடித்துக்கொள்ளும். யாருக்காக அவரது ஜனங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்களோ, அவரை முதன்மை நீதிபதியின் ஸ்தானத்திலேயே அவர்கள் காண்பார்கள்.—RH Jan. 1, 1889.

வேதாகமம் முழுவதிலும் இரக்கம் நிறைந்த தயை நிறைந்த ஒரு நபராக மாத்திரம் நம் தேவன் சுட்டிக்காட்டப்படவில்லை; கண்டிப்புள்ள, பட்சபாதமற்ற, நீதியுள்ள ஒரு தேவனாகவும் அவர் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றார்.—ST March 24, 1881.

## தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் உறுதிப்பாடு

பாவியை தேவன் அழிப்பதில்லை என்பதுபோன்ற கோணத்தில், தேவனுடைய அன்பு நமது காலத்தில் எடுத்துக்காட்டப்படுகிறது. மனிதர்கள் தங்களது குறைந்த தரத்திலிருந்து, நீதி மற்றும் நியாயத்திற்கடுத்த காரியத்தில் வாதிடுகின்றனர். “உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவுகொண்டாய்”–சங். 50:21. அவர்கள், தங்களைக்கொண்டே தேவனைக் கணக்கிடுகின்றனர். சந்தர்ப்ப சூழ்நிலைகளின்கீழ், அவர்கள் எப்படி தங்கள் மனதின்படியே செயல்படுவார்களோ தீர்மானிப்பார்களோ, அதுபோலவே தேவனும் செயல்படுவார் என்று அவர்கள் வாதிடுகின்றனர்…

எந்த ஒரு ராஜ்யமும் அரசாங்கமும், சட்டத்தை மீறினவர்களுக்கெதிராக என்ன தண்டனை தரப்படவேண்டும் என்பதைக்குறித்து, சட்டத்தை மீறினவர்களே கூறும்படியாக விடுவதில்லை. நம்மிடம் இருக்கின்ற அனைத்திற்காகவும், நாம் பெற்றிருக்கின்ற அவருடைய கிருபையின் நிறைவுகள் அனைத்திற்காகவும், நாம் தேவனுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட ஒரு தேவனுக்கு விரோதமான

பாவத்தின் கேடுண்டாக்கும் குணத்தைக் கணக்கிடுவதைக்காட்டிலும் வானங்களை ஒரு அளவுகோல்கொண்டு அளந்துவிடலாம். ஏனெனில், தேவன் ஒரு பிதாவாகவும், அதேபோல நீதி சம்பந்தமான ஒரு ஆளுநராகவும் இருக்கின்றார். அவரே பிரமாணத்தைக் கொடுத்தவர். அவரே சட்டங்களை ஏற்படுத்தி, தனது சட்டங்களை நிறைவேற்றவும் செய்கின்றவர். தண்டனை இல்லாத சட்டம் வல்லமையற்றதாகும்.

அன்புள்ள பிதாவானவர் தமது பிள்ளைகளை விடுவிக்கும் வல்லமை யுடையவராயிருக்கையில், அக்கினியினாலுண்டாகும் தேவ தண்டனையை அவர்கள் அடைவதைக் காண விரும்பமாட்டார் என்று முறையீடு செய்யப்படலாம். ஆனால் தேவன் தமது ஆளுகைக்குட்பட்டவர்களின் நன்மைக்காகவும், அவர்களின் பாதுகாப்புக்காகவும் பாவிகளைத் தண்டிப்பார். மனிதத் திட்டத்தின்படி தேவன் கிரியை நடப்பிப்பவர் அல்ல. மனிதன் தன் சகமனிதனுக்குமுன்பாக அளவற்ற நீதியைச் செலுத்துவதற்கு உரிமை பெற்றிருக்கவில்லை; அதைத் தேவன் செய்ய முடியும். தனக்குத் தொல்லைக் கொடுத்த பரியாசக்காரர்களில் ஒருவனை நோவா தண்ணீரில் அமிழ்த்தியிருந்தால் தேவன் பிரியப்பட்டிருக்கமாட்டார், ஆனால் தேவன் முழு உலகத்தையும் தண்ணீரில் மூழ்கடித்தார். லோத்து தனது மருமகன்கள்மீது தண்டனையைத் திணிக்க உரிமை பெற்றிருந்திருக்கவில்லை, ஆனால் தேவன் கண்டிப்பான நீதியைச் செலுத்துவார்.

தேவன், தாம் செய்யப்போவதாகச் சொல்லியிருப்பவைகளை செய்ய மாட்டார் என்று யார் சொல்லக்கூடும்?—12MR 207–209; 10MR 265 (1876).

## தேவன் தமது பாதுகாப்பை விலக்கிக்கொள்ளும் பொழுது நியாயத்தீர்ப்புகள் வரும்

தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் கர்த்தரிடமிருந்து நேரடியாக வருவதில்லை. மாறாக, எந்தவிதமாக அவர்கள்மீது வரும் என்று எனக்குக் காண்பிக்கப்பட்டது. அதாவது, மக்கள் தங்களை தேவனுடைய பாதுகாப்பிற்கு அப்பால் வைத்துக்கொள்கின்றனர். அப்பொழுது ஆண்டவர் அவர்களை எச்சரிக்கின்றார்—திருத்துகின்றார்—கடிந்துகொள்கின்றார்—பாதுகாப்பான ஒரே வழியை சுட்டிக் காண்பிக்கின்றார் ஆண்டவர் இவ்வளவையும் செய்த பின்பு, அவரது விசேஷ கவனத்தின் இலக்காக இருக்கின்றவர்கள், திரும்பத் திரும்ப எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டபின்னும், தேவ ஆவியானவரைச் சார்ந்திராமல் தங்களது சொந்த வழியிலேயே சென்று, தங்களது சொந்த வழியையே பிடிவாதமாய்த் தெரிந்தெடுப்பார்களானால், அதன்பின்பு அவர்கள் மீதான சாத்தானுடைய தீர்மானமான தாக்குதல்களைத் தடுக்கும்படியாக தமது தூதர்களுக்கு அவர் அதிகாரம் அளிக்கமாட்டார்…

சமுத்திரத்திலும் நிலத்திலும் நாசமோசம் மற்றும் வருத்தத்தைக் கொண்டுவருவதும், திரளான ஜனங்களைத் துடைத்தழித்துகொண்டிருப்பது மான இந்த நிகழ்வுகள், சாத்தானுடைய இரையென்று உறுதிப்படுத்தக் கூடியவகையில், அவனது வல்லமை கிரியைசெய்து கொண்டிருக்கின்றது.—14MR 3 (1883).

தங்களது சொந்த அழிவின் வழிகளையே பின்பற்றினவர்களின் மூலமாக, தேவனுடைய சத்தியம் தவறாகக் காண்பிக்கப்பட்டு, தவறாக நிதானிக்கப்பட்டு அவமதிக்கப்படுவதனால், அவர்களைத் தண்டிப்பதற்கு தேவன் தமது சத்துருக்களைக் கருவிகளாக உபயோகிப்பார்.—PC 136 (1894).

ஏற்கனவே தேவ ஆவியானவர் அவமதிக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டு தவறாக பயன்படுத்தப்படுவதால், அவர் பூமியிலிருந்து திரும்ப எடுத்துக் கெ ாள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றார். எவ்வளவு சீக்கிரமாய் தேவ ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படுகின்றாரோ, அவ்வளவு சீக்கிரமாய் சாத்தானின் கொடூரமான வேலை நிலத்திலும் கடலிலும் நடப்பிக்கப்படும்.—Ms 134, 1898.

துன்மார்க்கர் தங்களது கிருபையின் காலத்தின் எல்லையைக் கடந்துவிட்டனர் இதுவரை தொடர்ந்து பிடிவாதமாய் எதிர்க்கப்பட்ட தேவ ஆவியானவர், கடைசியாக எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் தெய்வீகக் கிருபையினால் பாதுகாக்கப்படாதிருப்பதால், பொல்லாங்கனிடமிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு கிடையாது.—GC 614 (1911).

சில வேளைகளில் பரிசுத்த தூதர்கள் அழிவின் வல்லமையை நடப்பிப்பர். [1]

எரிகோவிற்கு எதிராக தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் எழுப்பப்பட்டன. அது ஒரு அரணிப்பான பட்டணமாகும். ஆனால் அப்பட்டணத்திற்கு எதிராக யுத்தம் செய்யும்படிக்கு, பரலோகத்தின் சேனைகளை வழிநடத்தி கர்த்தருடைய சேனையின் அதிபதிதாமே பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார். தேவதூதர்கள் அந்த மாபெரும் சுவர்களைத் தகர்த்து தரையில் விழத்தள்ளினார்கள்.—3T 264 (1873).

தேவனுக்குக் கட்டுப்பட்ட நிலையில் உள்ள தூதர்கள் சர்வ வல்லமை பொருந்தியவர்கள். ஒரு சமயத்தில் அவர்கள் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அசீரியரின் சேனையிலிருந்த ஒரு லட்சத்து எண்பத்தைந்தாயிரம் பேரை ஒரே இராத்திரியிலே கொன்றுபோட்டார்கள். —DA 700 (1898).

ராஜரீக பிராகாரங்களிலிருந்து பேதுருவை மீட்கத்தக்கதாக வந்த அதே தூதன்தான், ஏரோதிற்குக் கோபாக்கினையையும் நியாயத்தீர்ப்பையும் கொண்டுவந்தவன். நித்திரையிலிருந்து பேதுருவை எழுப்பும்படியாக அந்த தேவதூதன் அவனைத் தட்டினான். ஆனால், துன்மார்க்கமான அரசனின் அகந்தை தாழவிழவும், சர்வவல்லவருடைய தண்டனையை கொண்டுவரவும், ஏரோதுவை அவன் வேறுவிதமாகத் தட்டினான். தேவ கோபத்தினாலுண்டான நியாயத்தீர்ப்பின்கீழ், ஏரோது மிகுந்த மனவேதனை யுடனும் உடல் வேதனையுடனும் மரித்தான்.—AA 152 (1911).

அன்று எகிப்தியரின் தலைப்பிள்ளைகள் அனைவரையும் சங்கரித்து, அந்நாட்டையே துக்கத்தால் நிரப்பினது ஒரு தூதன்தான். தாவீது ஜனங்களைத் தொகைப்பார்த்தபோது, தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்ததினால் அவனது பாவம் தண்டிக்கப்படும்படியாக, பயங்கரமான அழிவை உண்டாக்கியது ஒரே ஒரு தேவதூதன்தான். தேவன் கட்டளையிடும்பொழுது இப்படிப்பட்ட பெரும் அழிவுகளை உண்டாக்கப் பரிசுத்த தூதர்களால் பயன்படுத்தப்படும் அதே அழிக்கும் வல்லமை, அவர் அனுமதிக்கும்பொழுது தீய தூதர்களாலும் பயன்படுத்தப்படும். எவ்விடத்திலும் பாழ்க்கடிப்பை உண்டாக்கும்படி தேவ அனுமதிக்காக, பிசாசுகளின் அந்த வல்லமைகள் இப்போதும் ஆயத்தமாக இருக்கின்றன.—GC 614 (1911).

## முதல் இரண்டு வாதைகள்

கிறிஸ்து ஆசரிப்புக் கூடாரத்திலே தமது பரிந்துபேசுகின்ற ஊழியத்தை முடிக்கும்பொழுது, மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கி, அதனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்பவர்களை அச்சுறுத்தும்படியாக அவர்களுக்கு எதிராக (வெளி. 14:9,10) கலப்பில்லாத உக்கிரம் ஊற்றப்படும். வரப்போகின்ற வாதைகள், தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவிப்பதற்குச் சற்றுமுன்பாக எகிப்தின்மீது ஊற்றப்பட்ட வாதைகளுக்கு ஒத்ததாக இருந்தன. ஆனால் தேவனுடைய ஜனங்கள், இவ்வுலகத்திலிருந்து கடைசியாக பரலோகத்திற்கு மீட்டுக்கொள்ளப்படுவதற்குச் சற்றுமுன்னதாக, உலகத்தின்மீது ஊற்றப்படவிருக்கின்ற வாதைகள் மிகப்பயங்கரமான மற்றும் மிகப் பெரிதான நியாயத்தீர்ப்புகளாக இருக்கப்போகின்றன. அச்சம் விளைவிக்கின்ற அந்த கொள்ளை நோய்களைக்குறித்து யோவான் விவரிக்கும்போது, “மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும், அதன் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்கு பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று.” “சமுத்திரம் செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று. சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின” (வெளி. 16:2,3) என்று கூறுகின்றார்.—GC 627, 628 (1911).

வாதைகள் பூமியின் குடிகளின்மீது ஊற்றப்பட்டுக்கொண்டிருந்தன. சிலர், தேவனை வெளிப்படையாகக் கண்டனஞ்செய்துகொண்டும் சபித்துக் கொண்டும் இருந்தார்கள். வேறு சிலர், தேவனுடைய மக்களிடத்தில் ஓடி, தேவனுடைய நியாயத்தீர்ப்புகளிலிருந்து தாங்கள் எப்படித் தப்பித்துக்கொள்வது என்பதைக்குறித்து கற்றுத்தரும்படியாகக் கெஞ்சினார்கள். ஆனால் பரிசுத்தவான்கள் அவர்களுக்காக எதையும் செய்ய முடியாது. பாவிகளுக்காகக் கடைசிச் சொட்டுக் கண்ணீரும் சிந்தப்பட்டாயிற்று, கடுந்துயரோடு கடைசி ஜெபமும் ஏறெடுக்கப்பட்டாயிற்று, கடைசி பாரத்தையும் சகித்தாகிவிட்டது; கடைசி எச்சரிப்பும் கொடுத்தாகிவிட்டது.—EW 281 (1858).

## மூன்றாவது வாதை

கிறிஸ்துவின் வேலை ஆசரிப்புக் கூடாரத்தில் முடியும்வரை நான்கு தூதர்களும் பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருப்பதையும், அதன் பின்னரே கடைசி ஏழு வாதைகளும் ஊற்றப்படுவதையும் நான் கண்டேன். இந்த வாதைகளோவெனில், துன்மார்க்கரை நீதிமான்களுக்கெதிராக மேலும் கோபமடையச் செய்தது. நாங்கள்தான் தேவனுடைய நியாயத் தீர்ப்புகளை அவர்கள்மீது வரப்பண்ணினோம் எனவும், எங்களை இந்தப் பூமியிலிருந்து ஒழித்துவிட்டால் வாதைகள் நின்று போய்விடும் எனவும் அவர்கள் எண்ணினார்கள். எனவே அவர்களைக் கொன்றுபோடத்தக்கதாக ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இது, விடுதலைக்காக தேவனிடம் இரவும் பகலும் பரிசுத்தவான்களை கதற வைத்தது.—EW 36, 37 (1851).

"ஆறுகளிலும் நீரூற்றுகளிலும்... ஊற்றினான் உடனே அவைகள் இரத்தமாயின." இத்தகைய வாதைகள் பயங்கரமானதாக இருக்கின்ற அதே வேளையில், தேவனுடைய நீதி முழுமையாக நிலைநிறுத்தப்பட்டிருக்கும். "தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர்." "அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர் அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக்கேட்டேன்" (வெளி. 16:2–6) என்று தேவதூதன் அறிவிக்கின்றான். மரணத்திற்கென்று தேவனுடைய மக்களைத் தண்டிப்பதன்மூலம் தங்கள் சொந்தக் கைகளினாலே இரத்தத்தைத் சிந்தியதுபோல, அவர்களது இரத்தப்பழியைப்பற்றிய குற்றத்தைத் தங்கள்மேல் வருவித்துக்கொண்டிருக்கின்றனர்.—GC 628 (1911).

## நான்காவது வாதை

அடுத்து பின்தொடர்ந்த வாதையில், "தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி" சூரியனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. "அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்படுவார்கள்" (வெளி.

16:8,9). இந்த பயங்கரமான நேரத்தில் பூமியின் நிலையை தீர்க்கதரிசிகள்: “பூமி துக்கங்கொண்டாடுகிறது,… ஏனென்றால் வயல்வெளியின் அறுப்பு அழிந்துபோயிற்று… வயல்வெளியின் மரங்களெல்லாம் வாடிப்போயின: ஏனென்றால் சந்தோஷம் மனுபுத்திரை விட்டு ஒழிந்துபோயிற்று.” “விதையானது, மண்கட்டிகளின் கீழ் மக்கிப்போயிற்று. பயிர் தீய்ந்து போகிறதினால் பண்டசாலைகள் பாழாகிக் களஞ்சியங்கள் இடிந்து போயின… மிருகங்கள் எவ்வளவாய்த் தவிக்கிறது! மாட்டுமந்தைகள் தங்களுக்கு மேய்ச்சல் இல்லாததினால் கலங்குகிறது… நதிகளில் தண்ணீரெல்லாம் வற்றிப்போயிற்று. அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்துப்போட்டது.” “அந்நாளிலே தேவாலயப் பாட்டுகள் அலறுதலாக மாறும் எல்லா இடத்திலும் திரளான பிரேதங்கள் புலம்பலில்லாமல் எறிந்துவிடப்படும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்” (யோவேல் 1:10–12,17–20; ஆமோஸ் 8:3) என்று விளக்குகிறார்கள்..

இந்த வாதைகள் உலகளாவியதாயில்லை. அப்படியிருந்தால் பூமியின் குடிகள் அனைவரும் அழிந்துபோவார்கள். என்றாலும், இதுவரையிலும் மனிதர்கள் அறிந்திராத, மிகவும் பயங்கரமான கொள்ளைநோய்களாக அவைகள் இருக்கும்.—GC 628, 629 (1911).

### ஐந்தாவது வாதை

வெற்றிக்கூச்சலோடும், பரியாசப்பேச்சுகளோடும், சாபவார்த்தை களைச் சொல்லிக்கொண்டும் ஆரவாரிக்கின்ற, தீய மனிதர்களின் கூட்டங்கள் தங்களது இரையின்மீது பாய ஆயத்தமாகின்ற அந்த நேரத்தில் தானே, இதோ, இரவின் இருளைக்காட்டிலும் அடர்த்தியான ஒரு காரிருள் பூமியின்மீது படிகின்றது; பின்பு, தேவனுடைய சிங்காசனத்திலிருந்து மகிமையுடன் பிரகாசிக்கின்ற ஒரு வானவில் வானம் முழுவதும் பரவிநின்று, ஜெபித்துக்கொண்டிருந்த ஒவ்வொரு கூட்டத்தையும் சூழ்ந்துகொண்டதுபோல் காணப்பட்டது. அப்போது, மூர்க்கங்கொண்டிருந்த திரள்கூட்டத்தார், திடீரென தடைசெய்யப்பட்டவர்கள்போன்று அப்படியே நின்றனர். அவர்களது ஏளனக் கூச்சல்கள் நொடியில் அடங்கிப்போயின. யாரைக் கொலைவெறியோடு தாக்க வந்தார்களோ, அவர்களை மறந்துவிடுகின்றனர். பயங்கரமான அசம்பாவிதங்கள் தங்களுக்கு நேரிடப்போகின்றன என்கிற பயத்தோடு தேவனுடைய உடன்படிக்கையின் அடையாளத்தை உற்றுநோக்குகின்றனர். தங்களால் ஏறெடுத்தும் பார்க்கக்கூடாதிருந்த அந்தப் பிரகாசத்தினின்று பாதுகாக்கப்பட வேண்டுமென்று ஏக்கம்கொள்கின்றனர்…

தமது மக்களை விடுவிப்பதற்காக, தேவன் நள்ளிரவில் தமது வல்லமையை வெளிப்படுத்துகின்றார். அந்நேரத்திலே சூரியன் தன் முழு

வல்லமையில் பிரகாசிக்கின்றது. அடையாளங்களும், அற்புதங்களும் அடுத்தடுத்து விரைவாகப் பின்தொடர்கின்றன. துன்மார்க்கர் பயத்தோடும், ஆச்சரியத்தோடும் இக்காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற அதே நேரம், நீதிமான்கள் தங்களது விடுதலைக்கான அடையாளத்தைப் பக்திவிநயமான மகிழ்ச்சியுடன் நோக்கிப்பார்க்கின்றனர்.—GC 635, 636 (1911).

## தேவனுடைய பிரமாணம் வானத்தில் தோன்றும்

மடிக்கப்பட்ட இரண்டு கற்பலகைகளைப் பிடித்திருக்கின்ற ஒரு கரம் வானத்திலே காணப்படுகின்றது. "வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கும்; தேவனே நியாயாதிபதி" (சங். 50:6) என்று தீர்க்கதரிசி கூறுகின்றார். இடிமுழக்கத்திற்கும் அக்கினியின் சீற்றத்திற்கும் நடுவே, வாழ்க்கையின் வழிகாட்டியாக சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட தேவனுடைய நீதியாகிய அந்தப் பரிசுத்தப் பிரமாணம் இப்போது நியாயத்தீர்ப்பின் சட்டமாக மனிதர்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றது. அந்தக் கரம் அந்தக் கற்பலகைகளைத் திறக்க, அக்கினியின் எழுதுகோலால் எழுதப்பட்ட பத்துக்கற்பனையின் வார்த்தைகள் அங்கே காணப்படுகின்றன. அனைவரும் வாசிக்கத்தகுந்தவிதத்தில், அதன் வார்த்தைகள் மிகவும் தெளிவாக இருக்கின்றன. அவர்கள் நினைவுகள் எழுச்சியடைகின்றன. முரணான சமயக் கருத்துக்களும், மூட நம்பிக்கைகளுமாகிய இருள் அவர்கள் ஒவ்வொருவர் மனதிலிருந்தும் அகன்றுபோகின்றன. தேவனுடைய பத்துப்பிரமாணங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும், அதிகாரத்தோடும் பூமியின் குடிகள் அனைவருக்கு முன்பாகவும் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.—GC 639 (1911).

## (நித்தியத்தை) இழந்தவர்கள் தங்களது கள்ள மேய்ப்பர்களை குற்றப்படுத்துவர்

சத்திய வெளிச்சத்தைக் கண்டும், அதனால் உணர்த்தப்பட்டிருந்தும், தங்களது ஆத்துமாக்களின் இரட்சிப்பை ஊழியக்காரர்களின் கைகளில் ஒப்புக்கொடுத்திருந்த சபை அங்கத்தினர்கள், ஆண்டவரின் நாளிலே தங்களது மீறுதலுக்காக மற்ற எந்த ஒரு ஆத்துமாவும் பரிகாரம் செலுத்தமுடியாது என்பதை அறிந்துகொள்வார்கள். அப்பொழுது, "நான் இழந்துவிட்டேன், நித்தியமாக இழந்துவிட்டேன்" என்கின்ற பயங்கரமான அழுகையின் கூக்குரல் எழுப்பப்படும். தங்களுக்குப் பொய்யான காரியங்களைப் பிரசங்கித்து, சத்தியத்தைக் குற்றப்படுத்தின ஊழியக்காரர்களை மனிதர்கள் துண்டுகளாகக் கிழிக்கவேண்டும் என்பதுபோல எண்ணுவார்கள்.—4BC 1157 (1900).

அனைவரும் ஒன்றுகூடி, தங்கள் கசப்பான கண்டனங்களை ஊழியக்காரர்கள்மீது குவிக்கின்றார்கள். உண்மையற்ற போதகர்கள் இதமான காரியங்களைத் தீர்க்கதரிசனமாக உரைத்தனர். தேவனுடைய கற்பனைகளை ஒன்றுமில்லாமல் ஆக்கும்படியாகவும், அவைகளைப் பரிசுத்தமாகக் கடைபிடிப்பவர்களை உபத்திரவப்படுத்தும்படியாகவும் தங்களுக்குச் செவிகொடுத்தவர்களை அவர்கள் வழிநடத்தினர். இப்பொழுதோ, இந்தப் போதகர்கள் தங்களது நம்பிக்கையற்ற வேதனை நிறைந்த நிலையில், தாங்கள் செய்த ஏமாற்று வேலையை இந்த உலகத்திற்குமுன்பாக அறிக்கையிடுகின்றனர். திரள்கூட்டமாகிய மக்கள் வெறிகொண்டவர்களாக, "நாங்கள் நித்தியத்தை இழந்துவிட்டோம்!" "எங்களுடைய அழிவிற்கு நீங்கள்தான் காரணம்" என்று கூக்குரலிட்டு அந்தக் கள்ள மேய்ப்பர்களுக்கு எதிராகத் திரும்புவார்கள். ஒரு காலத்தில் அவர்களை மிகவும் போற்றின அதே நபர்கள், இப்போது அவர்கள்மேல் பயங்கரமான சாபங்களைக் கூறுகிறார்கள். முன்னொருமுறை அவர்களுக்குப் புகழ்மாலை சூட்டிச் சிறப்பித்த அதே கரங்கள் இப்போது அவர்களை அழிக்கத்தக்கதாக உயர்த்தப்படுகின்றன. தேவனுடைய மக்களைக் கொலைசெய்யும்படி உயர்த்தப்பட்ட பட்டயங்கள் தற்போது அவர்களது சத்துருக்களை அழிப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன.—GC 655, 656 (1911).

இங்கே, கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரமாகிய சபை, தேவனுடைய கோபாக்கினையின் அடியை உணர்வதில் முதலாவதாக இருந்தது என்பதை நாம் காண்கின்றோம். தேவன் யாருக்கு மாபெரும் வெளிச்சத்தைக் கொடுத்திருந்தாரோ, யார் மக்களின் ஆவிக்குரிய நலன்களில் பாதுகாவலர்களைப்போல் நின்றிருந்தார்களோ, அந்த மூப்பர்கள் (எசே. 9:6) தங்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த பொறுப்பில் உண்மையற்றவர்களாய் இருந்தார்கள். —5T 211 (1882).

தேவனுடைய வார்த்தை கள்ள மேய்ப்பர்களால் பயனற்றதாக ஆக்கப்பட்டிருந்தது… அவர்களது கிரியை வெகுவிரைவில் அவர்கள்மீதே எதிர்ச்செயலை உண்டுபண்ணும். அதன் பின்பு, ஆவிக்குரிய பாபிலோனின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் விழும்போது, வெளி. 18–ல் விவரிக்கப்பட்டுள்ள காட்சிகள் வெளியரங்கமாகக் காணப்படும்.—Ms 60, 1900.

**ஆறாவது வாதை**

பிசாசுகளின் ஆவிகள் பூமியின் ராஜாக்களிடத்திற்கும் முழு உலகத்திற்கும் சென்று, அவர்களை வஞ்சகத்தில் சிக்கச்செய்யவும், பரலோக அரசாங்கத்துக்கு விரோதமான சாத்தானுடைய கடைசி யுத்தத்தில் அவனுடன் இணைந்துகொள்ள வற்புறுத்தவும் செய்கின்றன.—GC 624 (1911).

தேவ ஆவியானவர் உலகத்திலிருந்து படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படுகின்றார். சாத்தான் "பூமியின் ராஜாக்களினிடத்திற்கும் உலகம் முழுவதற்கும்" சென்று, அவர்களைத் தனது கொடியின்கீழாக ஒன்றுசேர்த்து, "சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்கு" அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, தனது பயங்கரமான படைகளை ஒன்றுதிரட்டிக் கொண்டிருக்கின்றான் (வெளி. 16:14).—7BC 983 (1890).

கடைசி மாபெரும் யுத்தத்திற்கு உலகமனைத்தையும் சேர்க்கக் கூடியதான, அற்புதம் செய்கின்ற அந்த வல்லமையைப்பற்றி வெளி. 16–ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள யோவானுடைய விளக்கவுரைக்குப் பிற்பாடு, அடையாளங்கள் விழுகின்றன; "இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்" (வெளி. 16:15) என்று ஒரு நிச்சயமான தொனியை எக்காளம் மீண்டும் ஒரு முறை கொடுக்கிறது. மீறுதலுக்குப் பிற்பாடு, பாதுகாப்பின் மற்றும் ஒளியின் வஸ்திரம் ஆதாம் ஏவாளை விட்டு நீங்கினபடியால், அவர்கள் நிர்வாணிகளாய் இருந்தார்கள்.

நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்களைப்போலவும், சோதோமில் குடியிருந்த மக்களைப்போலவும், உலகம் தேவனுடைய அறிவுரைகளையும் எச்சரிப்புகளையும் மறந்துவிட்டிருக்கும். அவர்கள் தங்களது அக்கிரமத்தின் அனைத்துக் கண்டுபிடிப்புகளுடனும் திட்டங்களுடனும் எழும்பினார்கள். ஆனால் சடுதியிலே வானத்திலிருந்து வந்த அக்கினியின் பொழிவு தேவபக்தியில்லாத அந்தக் குடிகளைப் பட்சித்துப்போட்டது. "மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்." (லூக். 17:30).—14MR 96, 97 (1896).

## நன்மைக்கும் தீமைக்கும் இடையேயான கடைசி மாபெரும் யுத்தம்

ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு மாபெரும் வல்லமைகள் கடைசி மாபெரும் யுத்தத்திலே வெளிப்படுத்தப்படும். ஒரு பக்கத்தில் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சிருஷ்டிகர் நிற்பார். அவர் பக்கம் நிற்பவர்களெல்லாரும், அவரது முத்திரையைப் பெற்றிருப்பர். அவர்கள் அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருப்பார்கள். மறுபக்கத்தில் அந்தகாரத்தின் அதிபதியுடன் மருளவிழுகையையும் கலகத்தையும் தெரிந்துகொண்டவர்கள் நிற்பார்கள்.—7BC 982, 983 (1901).

பயங்கரமான போராட்டம் ஒன்று நம்முன்பாக இருக்கின்றது. சர்வவல்லவராகிய தேவனுடைய மகாநாளின் யுத்தத்தை நாம்

நெருங்கிக்கொண்டிருக்கின்றோம். இதுவரைக் கட்டுப்படுத்தப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தவை அனைத்தும் அவிழ்த்துவிடப்படும். இரக்கத்தின் தூதன் தமது செட்டைகளை மடக்கிக்கொண்டு இவ்வுலகை சாத்தானுடைய கட்டுப்பாட்டிற்குள் விடத்தக்கதாக, சிங்காசனத்திலிருந்து இறங்க ஆயத்த மாகிக்கொண்டிருக்கின்றார். இப்பிரபஞ்சத்தின் துரைத்தனங்கள் மற்றும் அதிகாரங்கள் ஒவ்வொன்றும் பரலோக தேவனுக்கு விரோதமாகக் கசப்பான வெறுப்பினால் நிறைந்திருக்கின்றன. தேவனை சேவிக்கிறவர்களுக்கு விரோதமாகவும் அவைகள் வெறுப்பினால் நிறைந்திருக்கின்றன. எனவே விரைவில், வெகு விரைவில், நன்மைக்கும் தீமைக்கும் இடையேயான கடைசி மாபெரும் யுத்தம் நடத்தப்படும். இந்த பூமி—இறுதியான போராட்டம் மற்றும் இறுதியான வெற்றியின் காட்சிகள் நடந்தேறும் யுத்தக்களமாக இருக்கப்போகின்றது. இங்குதான், சாத்தான் வெகு நாட்களாக மனிதர்களை தேவனுக்கு எதிராக நடத்தி வந்த கலகம் நித்தியமாக அடக்கப்பட இருக்கின்றது.—RH May 13, 1902.

இவ்வுலகப் படைகளுக்கு மத்தியில் நடக்கும் யுத்தம்போலவே, அவ்விரண்டு ஆவிக்குரிய சேனைகளுக்கும் இடையே நிஜமான யுத்தம் நடைபெற்று வருகின்றது. ஆனால், ஆவிக்குரிய யுத்தத்தில்தான் மனிதனின் எதிர்கால நித்தியம் சம்பந்தப்பட்டுள்ளது.—PK 176 (c. 1914).

## முழு உலகமும் ஒரு பக்கத்திலோ அல்லது மறு பக்கத்திலோ சேர்க்கப்படும்

முழு உலகமும் சர்ச்சைக்குரிய கேள்வியின் ஒரு பக்கத்திலோ அல்லது அதன் மறுபக்கத்திலோ காணப்படும். அர்மகெதோன் யுத்தம் நடத்தப்படும். அந்த நாள் நம் ஒருவரையும் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடிக்காதபடிக்கு, தங்கள் விளக்கிலே எண்ணெயை வைத்திருந்த புத்தியுள்ள கன்னிகைகளைப்போல, நாம் நமது விளக்குகளில் எண்ணெயை வைத்துக்கொண்டு அதிக விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை நாம் கண்டிப்பாகப் பெற்றிருக்கவேண்டும். கர்த்தருடைய சேனையின் அதிபதியானவர், யுத்தத்தை நடத்துவதற்குப் பரலோகத் தூதர்களின்முன் தலைமையேற்று நிற்பார்.—3SM 426 (1890).

சாத்தான் தனது கலகத்தின் கடைசி வேலையில், தனது படைகளை யுத்தத்திற்குக் கொண்டுவரும்பொழுது, நன்மைக்கு எதிரான அவனது பகைமை மிகவும் அதிகமாக வெளிப்படுத்திக் காண்பிக்கப்படும். தேவனுக்குத் தன்னை முழுமையாக ஒப்படைக்காத, தெய்வீக வல்லமைக்குள்ளாகத் தன்னை வைத்துக்கொள்ளாத ஒவ்வொரு ஆத்துமாவும், பரலோகத்திற்கு எதிராக சாத்தானோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, அண்டசராசரத்தின்

அதிபதியாகிய தேவனுக்கு எதிரான யுத்தத்தில் இணைந்துகொள்ளும்.—TM 465 (1892).

வெகுவிரைவில் பூமியின் குடிகள் அனைவரும், பரலோகத்தின் அரசாங்கத்திற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ நிற்க, ஏதாவதொரு பக்கத்தைத் தெரிந்தெடுத்திருப்பார்கள்.—7T 141 (1902).

## ஏழாவது வாதை

ஏழாவது கலசத்திலிருந்து ஊற்றப்படுவதைக்குறித்து நாம் படிக்க வேண்டும் (வெளி. 16:17—21). தீமையின் வல்லமைகள் ஒரு போராட்டம் இல்லாமல் யுத்தத்தைக் கைவிடுவதில்லை. ஆனால், அர்மகெதோன் யுத்தத்திலே, ஆண்டவர் செய்யவேண்டிய காரியம் ஒன்று இருக்கின்றது. வெளி. 18–ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற தூதனுடைய மகிமையினால் பூமி பிரகாசிக்கப்படுகின்றபோது, மதம் சார்ந்த நன்மை தீமையான அனைத்து அடிப்படைக் கூறுகளும் உறக்கத்திலிருந்து விழித்தெழும்; அதன்பின்பு, ஜீவனுள்ள தேவனுடைய சேனைகள் யுத்தக்களத்தினுள் பிரவேசிக்கும்.—7BC 983 (1899).

அர்மகெதோன் யுத்தம் வெகு சீக்கிரம் நடக்கவிருக்கின்றது. ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்ற நாமத்தைத் தமது வஸ்திரத்தின் மேல் தரித்திருந்த அவர், வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய் வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறிவருகின்ற பரலோக சேனையை நடத்திச் செல்வார் (வெளி 19:11–16).—7BC 982 (1899).

பூமி முழுவதும் சமுத்திரத்தின் அலைகளைப்போல மேலே துள்ளி எழும்பும். அதன் மேற்பரப்பு பிளவுபடுகிறது. அதன் அஸ்திபாரங்கள் பிளந்து வழி உண்டாக்குவதுபோல் தோற்றமளித்தன. மலைத்தொடர்கள் பூமிக்குள் புதைந்துகொண்டிருந்தன. ஜனங்கள் குடியிருந்த தீவுகள் காணப்படாமற்போயின. துன்மார்க்கத்தினால் சோதோமைப்போல் மாறிப் போயிருந்த கடல் துறைமுகங்கள் மூர்க்கமான கடல் அலைகளால் விழுங்கப்பட்டன… உலகின் பெருமையான பட்டணங்கள் தாழ்த்தப்பட்டன. உலகின் பெரிய பெரிய மனிதர்கள் தங்களை மகிமைப்படுத்தும்படிக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்திருந்த கெம்பீரமான அரண்மனைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக நொறுங்கி அழிந்துபோயின. சிறைச்சாலையின் சுவர்கள் பிளந்துபோக, தங்களது விசுவாசத்தினிமித்தம் சிறைவைக்கப்பட்டிருந்த தேவனுடைய ஜனங்கள் விடுவிக்கப்பட்டனர்.—GC 637 (1911). ★

[1] பாவிக்கென்று அளந்து பங்கிட்டு அளிக்கப்பட்டிருக்கின்ற தண்டனைக்கு அவனே முழு பொறுப்பு ஏற்க வேண்டும். “ஆண்டவர் ஒருவனையும் அழிப்பதில்லை. பாவி தன்னுடைய சொந்தத் தவறிலிருந்து மனந்திரும்பாததால் தன்னைத்தான் அழித்துக் கொள்கின்றான்” என்று எலன் உவைட் குறிப்பிடுகின்றார். பார்க்கவும்:— 5T 120; GC PP. 25–37.

# 18

# கடைசி ஏழு வாதைகளும் நீதிமான்களும்

## (மாபெரும் இக்கட்டுக்காலம், பகுதி —2)

### கிருபையின் காலம் முடிந்தபின்பு மாபெரும் இக்கட்டுக்காலம் ஆரம்பமாகும்

மனிதனின் சார்பாக தாம் செய்யும் மத்தியஸ்த வேலையை கிறிஸ்து நிறுத்தும்போது, இந்த இக்கட்டுக் காலம் ஆரம்பமாகும். அப்போது ஒவ்வொரு ஆத்துமாவின் வழக்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கும். அதன்பின்பு, பாவத்திலிருந்து சுத்திகரிப்பதற்கான நிவர்த்திசெய்கின்ற இரத்தம் அங்கு இருக்காது. தேவனுக்கு முன்பாக, மனிதனின் மத்தியஸ்தராக, இயேசு தமது நிலையை விடும்பொழுது, "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" (வெளி. 22:11) என்ற பக்திவிநயமான அறிவிப்பு கொடுக்கப்படும். பின்பு, பாவத்தைக் கட்டுப்படுத்தகூடிய தேவ ஆவியானவர் பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார்.—PP 201 (1890).

### தங்கள் முன்பாக இருக்கின்ற சோதனை நேரத்துக்கு தேவனுடைய ஜனங்கள் ஆயத்தப்பட்டிருப்பர்

மூன்றாம் தூதனின் தூது முடிவடையும்போது, பாவம் நிறைந்த பூமியின் குடிகளுக்காக, இரக்கம் இனி ஒருபோதும் பரிந்துபேசாது. தேவனுடைய ஜனங்கள் தங்களது வேலையை நிறைவேற்றி முடித்திருந்தனர். அவர்கள் "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலையும்" "பின்மாரியையும்" பெற்றுத் தங்களுக்கு முன்பாக உள்ள சோதனை நேரத்திற்கு ஆயத்தப்பட்டிருந்தனர்.

பரலோகத்தில் தேவதூதர்கள் இங்கும் அங்குமாகத் துரிதமாக சென்றுகொண்டிருக்கின்றனர். ஒரு தூதன் பூமியிலிருந்து திரும்பி வந்து

தனது வேலை முடிந்துவிட்டதாக அறிவிக்கின்றான்; முடிவான சோதனை உலகத்தின்மீது கொண்டுவரப்பட்டிருக்கின்றது. தெய்வீக வார்த்தைகளுக்கு உண்மையாயிருந்ததாகத் தங்களை நிரூபித்த அனைவரும் "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரையைப்" பெற்றுக்கொண்டனர். அப்போது கிறிஸ்து, பரலோக ஆசரிப்புக் கூடாரத்தில் தமது மத்தியஸ்த வேலையை நிறுத்துகின்றார்... கிறிஸ்து தமது ஜனங்களுக்காக பாவநிவாரணம் செய்துமுடித்து, அவர்களது பாவங்களை முற்றிலுமாக நீக்கிவிட்டார். அவரது ராஜ்யத்தின் குடிமக்களுடைய தொகை பூர்த்திசெய்யப்பட்டுவிட்டது. "ராஜ்யமும், அதிகாரமும், வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யத்தின் மேன்மையும்" இரட்சிப்பைப் பெறப்போகின்றவர்களுக்குக் கொடுக்கப்பட இருக்கின்றது. கிறிஸ்து இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தா வாகவும் அவர்கள்மேல் அரசாளவிருக்கின்றார்.—GC 613, 614 (1911).

### விவரிக்க இயலாத அளவிற்கு பயங்கரம்

நமக்கு முன்பாக இருக்கின்ற கடுந்துயரமும், வருத்தமும் நிறைந்த காலத்தைக் கடந்து வருவதற்கு, சோர்வையும், தாமதத்தையும், பசியையும் சகித்துக்கொள்ளக்கூடிய ஒரு விசுவாசம்—எவ்வளவுதான் கடுமையாக சோதிக்கப்பட்டாலும் துவண்டுபோகாத ஒரு விசுவாசம் நமக்கு அவசியமாக இருக்கின்றது...

"இதுவரைக்கும் உண்டாயிராத இக்கட்டுக்காலம்" நம்மீது விரைவில் வரவிருக்கின்றது; அச்சமயத்தில், இப்பொழுது நாம் பெற்றிராததும் பெற்றுக் கொள்ள அநேகர் மிகவும் சோம்பலாயிருக்கிறதுமான ஒரு அனுபவத்தை நாம் கொண்டிருக்கவேண்டியது அவசியமாக இருக்கின்றது. உபத்திரவம் நடைபெறுவதைவிட, அதற்காக எதிர்பார்த்துக் காத்திருப்பது உண்மையிலேயே அதிக உபத்திரவமாக இருக்கும்; ஆனால் நமக்கு முன்பாக இருக்கும் நெருக்கடியைக்குறித்த காரியத்தில் அது உண்மையல்ல. மிகத் தெளிவாகக் கொடுக்கப்படும் விளக்கங்கூட, அந்த கடுமையான உபத்திரவத்தை முழுவதுமாக விளக்க முடியாது.—GC 621, 622 (1911).

இயேசு கிறிஸ்து மகா பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு வெளியேறும்போது, இதுவரை அதிகாரிகளிடமும் மக்களிடமுமிருந்த, கட்டுப்படுத்துகின்ற அவரது ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படுகின்றார். எனவே அதிகாரிகளும், மக்களும் தீய தூதர்களின் கட்டுப்பாட்டிற்குள்ளாக விட்டுவிடப்படுவார்கள். அப்போது, சாத்தானுடைய ஆலோசனை மற்றும் வழிமுறைகளின்மூலமாக, பயங்கரமான சட்டங்கள் இயற்றப்படுகின்றன. காலம் மாத்திரம் குறைக்கப்படா திருக்குமானால், ஒருவருமே உயிரோடிருக்கக்கூடாதபடிக்கு அழிக்கப்பட்டுப் போவார்கள்.—1T 204 (1859).

## இக்கட்டுக்காலத்திற்கு முன்பாக அநேகர் இளைப்பாறுதலுக்கு உட்படுவர்

நிபந்தனையில்லாத குணமாக்கப்படுதலுக்காக வேண்டுதல் எப்போதுமே பாதுகாப்பானதாக இருப்பதில்லை… யாருக்காக விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்பட்டதோ அவர் உயிரோடு இருந்திருந்தால், தன்மீது வரப்போகின்ற உபத்திரவத்தையும், பரீட்சையையும் தாங்கிக்கொள்வாரா மாட்டாரா என்பதை ஆண்டவர் அறிந்திருக்கின்றார். அவர் முடிவை ஆரம்பத்திலிருந்தே பார்த்து அறிந்திருக்கின்றார். நம்முடைய உலகத்தின்மீது வரவிருக்கும் உபத்திரவ காலத்தின் உக்கிரமான கடுஞ்சோதனைக்குமுன்பாக அநேகர் நித்திரைக்கு உட்படுத்தப்படுவார்கள்.—CH 375 (1897).

உபத்திரவ காலத்திற்கு முன்னதாக, அநேக சிறு குழந்தைகள் நித்திரைக்குட்படுத்தப்படவேண்டும் என்பதைக் கர்த்தர் எனக்குப் பலமுறை அறிவுறுத்தி இருக்கின்றார். நம்முடைய பிள்ளைகளை நாம் மீண்டும் காண்போம். பரலோக வாசஸ்தலங்களிலே அவர்களை சந்தித்து அவர்களை அறிந்துகொள்வோம்.—2SM 259 (1899).

## ஓய்வுநாளை ஆசரிக்கின்ற அனைவரையும் அழிப்பதே சாத்தானுடைய இலக்கு

“ஓய்வுநாளைக் கைக்கொள்ளும் இந்தத் தனிப்பட்ட சமயப் பிரிவினரை அமைதிப்படுத்துவதே நமது முதன்மையான அக்கறை என்றும், நம்முடைய அதிகாரத்திற்கு அடிபணியாத அனைவரையும் இறுதியாக ஒரு சட்டத்தின் மூலமாக அழித்து விடுவோம்” என்றும் மாபெரும் வஞ்சகன் கூறுகின்றான்.—TM 472, 473 (1884).

இவ்வுலகில் தனது அதிகாரம் யாராலும் எதிர்க்கப்படக்கூடாது என்பதற்காக, அவர்களை முற்றிலுமாக பூமியிலிருந்து அழித்துப்போட வேண்டும் என்பதே சாத்தானுடைய நோக்கமாக இருக்கின்றது.—TM 37 (1893).

மீதமான சபை, மாபெரும் சோதனைக்குள்ளாகவும் கடுந்துன்பத்திற் குள்ளாகவும் கொண்டுவரப்படும். தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, இயேசுவின் விசுவாசத்தைக் காத்துக்கொள்பவர்கள், வலுசர்ப் பத்தின் கோபத்தையும் அவனுடைய சேனைகளின் கோபத்தையும் உணரு வார்கள். உலகத்தின் ஜனங்களை சாத்தான் தனது பிரஜைகளாக எண்ணு கிறான். அவன் மருளவிழுந்துபோன சபைகளையெல்லாம், தனது ஆளுகை யின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டான். ஆனால் இங்கே ஒரு சிறு கூட்டம் மட்டும் அவனது ஆளுகையை எதிர்க்கின்றது. எனவே அவர்களை

இந்த பூமியிலிருந்து முற்றிலுமாக அழித்துவிட்டால், அவனது வெற்றி முழுமையடைந்துவிடும். இஸ்ரவேலரை அழிப்பதற்கு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி புறஜாதி நாடுகளைத் தூண்டிவிட்டதுபோலவே, அருகிலுள்ள எதிர்காலத்தில் தேவனுடைய ஜனங்களை அழிப்பதற்கு, சாத்தான் பூமியின் துன்மார்க்க வல்லமைகளைத் தூண்டிவிடுவான்.—9T 231 (1909).

## தேவனுடைய ஜனங்களுக்கு விரோதமாக உபயோகப்படுத்தப்படும் விவாதங்கள்

கிறிஸ்துவின் வேலை ஆசரிப்புக் கூடாரத்தில் முடிக்கப்படும்வரை நான்கு தூதர்களும் பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருப்பதையும், அதன் பின்னரே கடைசி ஏழு வாதைகளும் ஊற்றப்படுவதையும் நான் கண்டேன். இந்த வாதைகளோவெனில், துன்மார்க்கரை நீதிமான்களுக்கெதிராக மேலும் கோபமடையச் செய்தது. நாங்கள்தான் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை அவர்கள் மீது வரப்பண்ணினோம் எனவும், எங்களை இந்த பூமியிலிருந்து ஒழித்துவிட்டால் வாதைகள் நின்று போய்விடும் எனவும் அவர்கள் எண்ணினார்கள்.—EW 36 (1851).

இரக்கத்தின் தூதன் தனது செட்டைகளை மடித்து விலகிச்செல்லும் போது, நீண்டகாலமாய் தான் விரும்பியிருந்த தீமையான காரியங்களை சாத்தான் செய்யத்துவங்குவான். புயலும் கொந்தளிப்பும் யுத்தமும் இரத்தஞ்சிந்துதலும் —ஆகிய இந்தக் காரியங்களில்தான் அவன் பெருமகிழ்ச்சியடைகின்றான். இப்படியாக அவன் தனது அறுவடையில் மக்களைச் சேகரிக்கின்றான். மனிதர்கள் சாத்தானால் முழுவதுமாக வஞ்சிக்கப்பட்டு, வாரத்தின் முதல் நாளை பரிசுத்தக் குலைச்சலாக்கியதின் விளைவினால்தான் இந்த அழிவுகள் வந்திருக்கின்றன என்று அறிவிப்பார்கள். புகழ்பெற்ற சபைகளின் மேடைகளிலிருந்து: “ஞாயிற்றுக்கிழமை ஆசரிக்கப்பட வேண்டியவிதத்தில் ஆசரிக்கப்படாததால்தான், உலகம் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது” என்ற கூற்று முழங்கப்படும்.—RH Sept. 17, 1901.

ஒரு சபையின் அமைப்பிற்கும், ஒரு நாட்டின் சட்டத்திற்கும் எதிராக நிற்கிற சிலரை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளமுடியாது என்ற காரியம் வற்புறுத்தப்படும். உலகம் முழுவதும் அக்கிரமத்திலும் குழப்பத்திலும் மூழ்குவதைக்காட்டிலும், அது அழியாமல் காக்கப்படும்படியாக இந்தச் சிறு கூட்டத்தார் அழிக்கப்பட்டாலும் பரவாயில்லை என்றும் வலியுறுத்தப்படும். ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்கு முன்பாக, இதேபோன்ற வாதம்தான் “ஜனங்களின் அதிகாரிகளினாலே” கிறிஸ்துவிற்கு எதிராகக் கொண்டுவரப் பட்டது… அப்பொழுதுபோலவே இப்பொழுதும் இந்த வாதம் தீர்க்கமானதாக இருக்கும்.—GC 615 (1911).

**ஞாயிற்றுக்கிழமையை கனம்பண்ணாத அனைவருக்கும் மரணம்**

பரிசுத்தவான்களைக் கொலைசெய்யும்படியாக பிறப்பிக்கப்பட்ட ஒரு மரணச்சட்டம், விடுதலைக்காக இரவும்பகலும் அவர்களைக் கதறச்செய்தது. —EW 36, 37 (1851).

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், தான் நிறுத்தின சிலையைத் தாழவிழுந்து வணங்காத அனைவரும் கொலைசெய்யப்படக் கடவர்கள் என்ற சட்டத்தைப் பிறப்பித்ததுபோலவே, ஞாயிறு நியமனத்தை பயபக்தியாய் ஆசரிக்காத ஜனங்கள் அனைவரும் சிறைவாசத்தாலும், மரண தண்டனையினாலும் தண்டிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு கொடுக்கப்படும்... பெரியவர், சிறியவர் என்று ஒவ்வொருவரும் அதில் சம்பந்தப்பட்டிருக்கின்றபடியால், வெளி.13–ம் அதிகாரத்தை அனைவரும் மிகுந்த ஜாக்கிரதையுடன் வாசிக்க வேண்டும்.—14MR 91 (1896).

இக்கட்டுக்காலம் தேவனுடைய ஜனங்கள்மீது விரைவில் வரவிருக் கின்றது. அப்பொழுது கர்த்தருடைய ஓய்வுநாளை கைக்கொள்ளுபவர்கள் வாங்கவோ விற்கவோ கூடாதபடிக்கு அவர்களைத் தடைசெய்கின்ற சட்டம் பிறப்பிக்கப்படும். பின்பு அவர்கள் வாரத்தின் முதல்நாளை ஓய்வுநாளாக ஆசரிக்காவிட்டால் தண்டிக்கப்படுவார்கள் என்றும், மரணத்திற்குக்கூட ஒப்புவிக்கப்படுவார்கள் என்றும் அச்சுறுத்தப்படுவார்கள்.—HP 344 (1908).

தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமாக யுத்தம் செய்வதற்கு ஒன்றுசேர்கின்ற பூமியின் வல்லமைகள், "சிறியோர், பெரியோர், ஐசுவரிய வான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள்" (வெளி. 13:16) யாவரும் பொய்யான ஓய்வுநாளை ஆசரிப்பதின்மூலம், சபையின் பழக்கவழக்கங் களுக்கு ஒத்திசைவாக நடக்கவேண்டும் என்ற சட்டத்தை இயற்றும். அதற்கு உடன்பட மறுக்கின்ற அனைவருக்கும் சட்டரீதியான நாட்டின் தண்டனைகள் வழங்கப்படும். இறுதியிலே அவர்கள் மரண தண்டனையைப் பெற வேண்டியவர்கள் என்று அறிவிக்கப்படும்.—GC 604 (1911).

விசேஷமாக, நான்காம் கற்பனையின் ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கின்றவர்களுக்கு எதிராக, மனிதர் கடுங்கோபம் கொள்வார்கள்; கடைசியில் இவர்கள் மரணத்திற்குப் பாத்திரவான்கள் என்று தீர்ப்பளிக்கின்ற ஒரு உலகளாவிய சட்டம் கொண்டுவரப்படும்.—PK 512 (c. 1914).

**அகாஸ்வேரு ராஜாவால் இயற்றப்பட்டதைப் போன்ற மரணச் சட்டம்**

தேவனுடைய மீதமான ஜனங்களுக்கு எதிராக, கொண்டுவரப் படப்போகின்ற கடைசிச் சட்டம் யூதர்களுக்கு எதிராக அகாஸ்வேரு ராஜாவால்

பிறப்பிக்கப்பட்ட சட்டத்திற்கு ஒத்ததாக இருக்கும். அன்று அரண்மனை வாசலில் நின்றிருந்த மொர்தெகாயை அவனது எதிரிகள் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்ததுபோல, இன்றுங்கூட ஓய்வுநாள் கட்டளையைக் கடைபிடித்துவருகின்ற சிறு கூட்டத்தாரை, மெய்ச்சபையின் எதிரிகள் கவனித்துக்கொண்டிருக்கின்றார்கள். தேவனுடைய பிரமாணத்தை அவரது ஜனங்கள் பயபக்தியாகக் கைக்கொள்ளுவது, கர்த்தருக்குப் பயப்படுதலை புறம்பேதள்ளி, தேவனுடைய ஓய்வுநாளைக் காலின்கீழ் மிதித்துக்கொண்டிருக்கின்ற ஜனங்களுக்கு ஒரு தொடர்ச்சியான கடிந்துகொள்ளுதலாக இருக்கின்றது.—PK 605 (c. 1914).

பூமியின் தலைமைப்பீடத்திலிருக்கும் மனிதர்கள் ஒன்றாகக்கூடி கலந்தாலோசித்ததையும், சாத்தானும் அவனுடைய தூதர்களும் அவர்களைச் சுற்றிலும் மிக சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்ததையும், எழுதப்பட்ட அறிவிப்பு ஒன்றையும் நான் கண்டேன். அதன் பிரதிகள் உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டன. அதில் பரிசுத்தவான்கள் தங்களது தனிச்சிறப்பு வாய்ந்த விசுவாசத்தை விட்டுவிட்டு, ஓய்வுநாள் ஆசரிப்பையும் கைவிட்டு, வாரத்தின் முதல்நாளை ஆசரிக்காவிடில், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பின்பு அவர்களைக் கொன்றுபோட பொதுமக்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று எழுதப்பட்டிருந்ததை நான் கண்டேன்.—EW 282, 283 (1858).

தேவனுடைய ஜனங்கள் தங்களது நம்பிக்கையை அவர்மீது வைத்து, விசுவாசத்தினாலே அவரது வல்லமையை நம்பி சார்ந்து கொள்வார்களானால், மொர்தெகாயின் நாட்களில் சாத்தானுடைய திட்டங்கள் வியக்கத்தக்க முறையில் தோற்கடிக்கப்பட்டதுபோலவே, நமது காலத்திலும் முறியடிக்கப்படும்.—ST Feb. 22, 1910.

### மீதமானவர்கள் தேவனைத் தங்களுக்கு அடைக்கலமாக்கிக்கொள்வர்

“உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்”–தானி. 12:1. இந்த இக்கட்டுக்காலம் வரும்போது, ஒவ்வொருவருடைய வழக்கும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருக்கும்; அதற்குப்பின்பு கிருபையின் காலம் என்பது இல்லை; பாவத்தை எண்ணி வருந்தாதவர்களுக்கு, அங்கு இனி ஒருபோதும் இரக்கம் காத்திருக்காது. ஆனால், ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை அவரது ஜனத்தின்மீது போடப்பட்டிருக்கும்.

வலுசர்ப்பத்தைத் தலைமையாகக்கொண்டு சேனையோடு வந்து கொண்டிருக்கின்ற பூமியின் வல்லமைகளுக்கு எதிரான மரணத்துக்கேதுவான இந்தப் போராட்டத்தில், தங்களைக் காத்துக்கொள்ள இயலாதவர்களான இந்தச் சிறிய மீதமான கூட்டத்தார், தேவனைத் தங்களுக்கு பாதுகாப்பாக ஆக்கிக்கொள்வர். மரணம் மற்றும் உபத்திரவத்தினுடைய வேதனையின்கீழ் அவர்கள் மிருகத்தை வணங்கி அதன் முத்திரையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற சட்டம், பூமியின் உயர்ந்த பதவியிலுள்ள அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. தேவன் தாமே அவரது ஜனங்களுக்கு இப்பொழுது உதவிசெய்வாராக. அவரது உதவியின்றி அச்சுறுத்தக்கூடிய அந்தப் போராட்டத்தில், அப்பொழுது அவர்களால் என்ன செய்யமுடியும்!—5T 212, 213 (1882).

## தேவனுடைய ஜனங்கள் பட்டணங்களை விட்டு ஓடிவிடுவர்; அநேகர் சிறைப்படுத்தப்படுவர்!

கற்பனைகளைக் கைக்கொள்ளுகின்ற ஜனங்களுக்கு எதிராக, கிறிஸ்தவ உலகத்தின் வெவ்வேறு ஆட்சியாளர்களால் சட்டம் இயற்றப்படும் பொழுது, அந்தச் சட்டம் தேவனுடைய மக்களுக்கு இருக்கின்ற அரசாங்கப் பாதுகாப்பை விலக்கி, அவர்களை அழித்துப்போட விரும்புகிறவர்களிடத்தில் அவர்களை விட்டுவிடும்போது, தேவனுடைய ஜனங்கள் நகரங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் தப்பியோடி, மிகவும் வனாந்தரமான மற்றும் தனிமை யான இடங்களில் கூட்டங்கூட்டமாக ஒன்றிணைந்து வாசம்பண்ணுவார்கள். அநேகர், மலைகளின் கொடுமுடிகளில் போய் அடைக்கலம் தேடிக் கொள்வார்கள்... என்றாலும், அவர்களில் பலர் எந்த நாடு, எந்த வகுப்பினர் என்கிற வித்தியாசம் இல்லாமல், உயர்ந்தோர், தாழ்ந்தோர், பணக்காரர், ஏழை, கறுப்பர், வெள்ளையர் என்கிற பாகுபாடு இல்லாமல் மிகவும் அநீதியான முறையில் கொடிய சிறைச்சாலைக்குள்ளாகத் தள்ளப்படுவர். அங்கே, ஆண்டவரால் நேசிக்கப்படும் இந்த ஜனங்கள் சங்கிலிகளால் கட்டுண்டவர்களாக, சிறைக்குள் அடைக்கப்பட்டவர்களாக, கொலைசெய்யப்படும்படித் தீர்ப்பளிக்கப்பட்டவர்களாக, தவிப்போடு தங்களது சோர்வான நாட்களைக் கழிப்பார்கள். ஒரு சிலர் பட்டினியால் சாகும்படி இருளான, அருவருப்பான, காற்றுப்புகமுடியாத பாதாள அறைகளுக்குள் தள்ளி அடைக்கப்படுவார்கள்.—GC 626 (1911).

தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவதற்காக, ஒரு நேரத்தைக் குறித்து பொதுவான சட்டம்இயற்றப்பட்டிருந்தாலும், குறிப்பிடப்பட்ட அந்த நேரத்திற்கு முன்னதாகவே, இந்தச் சட்டம் நிறைவேறும்வரை காத்திருக்கப் பொறுமையில்லாத அவர்களது

எதிரிகள், அவர்களது உயிரை எடுத்துவிடும்படியாக முயற்சிப்பார்கள். ஆனால் விசுவாசமுள்ள ஒவ்வொரு ஆத்துமாவைச் சுற்றிலும் காத்துநிற்கும் வல்லமை நிறைந்த தேவதூதர்களைமீறி, எவராலும் அவர்களை நெருங்க முடியாது. நகரங்களையும் கிராமங்களையும்விட்டு ஓடும்போது, அவர்களில் சிலர் எதிரிகளால் தாக்கப்படுவர். என்றாலும், அவர்களுக்கு விரோதமாக உயர்த்தப்பட்ட பட்டயங்கள் ஒரு வைக்கோலைப்போல வல்லமையற்று உடைந்து கீழேவிழும். மற்றவர்கள் போர்வீரர்களின் உருவத்தில் உள்ள தேவதூதர்களால் காக்கப்படுவார்கள்.—GC 631 (1911).

இந்நேரத்திலே தேவனுடைய ஜனங்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. அவர்கள் பூமியின் எல்லா பகுதிகளிலும், ஆங்காங்கே குழுக்களாக இருப்பார்கள்; அவர்கள் கூட்டமாக அல்ல தனித்தனியாக சோதிக்கப்படுவார்கள். ஒவ்வொருவரும் சோதனையைச் சந்திக்க தனித்தனியாக நின்றாக வேண்டும்.—4BC 1143 (1908).

சபையின் ஒவ்வொரு விசுவாசியின் விசுவாசமும், அவரைத்தவிர இந்த உலகத்தில் வேறு ஒருவர்கூட இல்லை என்பதுபோன்ற விதத்தில் சோதிக்கப்படும்.—7BC 983 (1890).

**வீடுகளாலும் நிலங்களாலும் பிரயோஜனமிராது**

இக்கட்டுக்காலத்தின்பொழுது, சீற்றத்துடனுள்ள கூட்டத்தாருக்கு முன்பாக பரிசுத்தவான்கள் தப்பித்து ஓடவேண்டி இருப்பதால், வீடுகளாலும் நிலங்களாலும் அவர்களுக்குப் பிரயோஜனமிராது. அந்தச் சமயத்தில் நிகழ்கால சத்தியத்தை முன்னேற்றமடையச் செய்வதற்காக, அவர்களது சொத்துக்களை விற்பனை செய்யவும் முடியாது...

யாராவது தங்களது சொத்துக்களை இறுகப் பற்றிப்பிடித்தவர்களாக, அவைகளைக்குறித்துத் தாங்கள் செய்யவேண்டிய கடமை இன்னதென்று தேவனிடத்தில் விசாரிக்காமல் இருப்பார்களானால், அவர்கள் செய்யவேண்டிய காரியத்தை தேவனும் அவர்களுக்குக் தெரிவிக்கமாட்டார். மேலும் அவர்கள், தங்களது சொத்துக்களைத் தாங்களே வைத்துக்கொள்ளும்படியாக அனுமதிக்கப்படுவார்கள். ஆனால், இக்கட்டுக்காலத்தின்போது அவர்களை நசுக்கிப்போடத்தக்கதான அளவிற்கு, அவை ஒரு பெரிய மலையைப்போன்று அவர்களுக்குமுன்பாகக் காணப்படும். அப்போது அவர்கள் அதை விற்பனை செய்ய முயற்சித்தாலும், விற்க முடியாது என்பதை நான் கண்டேன்... ஆனால் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புவார்களானால், எப்பொழுது விற்க வேண்டும், எவ்வளவு விலைக்கு விற்க வேண்டும் என்று, ஏற்ற நேரத்திலே ஆண்டவர் அவர்களுக்குக் கற்றுத்தருவார்.—EW 56, 57 (1851).

உலகப்பிரகாரமான பொக்கிஷங்களை இறுக பற்றிக்கொண்டிருப்ப தென்பது தற்போது மிகவும் காலதாமதமான காரியமாகும். தேவனுடைய சாபம் அதிகமதிகமாகவும் மிகவும் கடுமையாகவும் பூமியின்மீது தொடர்ந் திருக்கப்போவதால், அவசியமில்லாத வீடுகளும், நிலங்களும் விரைவில் யாருக்கும் உபயோகமில்லாமல் போய்விடும். "உங்களுக்கு உள்ளவை களை விற்றுப் பிச்சைகொடுங்கள்" (லூக். 12:33) என்கின்ற அழைப்பு வருகின்றது. தேவனுக்குச் சொந்தமான பொக்கிஷம் உலகில் அவரது வேலையை முன்னேறச் செய்யும்படிக்குக் காணிக்கையாக அவருக்குத் திரும்பக் கொடுக்கப்படுவதற்கேதுவாக, இத்தூது உண்மையாகக் கொடுக்கப்படவேண்டும்—மக்களின் மனங்களில் பதியச்செய்யுமாறு வலியுறுத்தப்பட வேண்டும்.—16MR 348 (1901).

### யாக்கோபின் இக்கட்டுக்காலத்தைப்போல

நான்காம் பிரமாணத்தின் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிப்போ ருக்கு எதிராக ஒரு கட்டளை பிறப்பிக்கப்படும். மிகக் கடுமையான தண்டனைக்குப் பாத்திரவான்கள் என்று அவர்கள்மீது குற்றஞ்சுமத்தி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின் அவர்களைக் கொல்லுவதற்கு மக்களுக்குச் சுதந்தரத்தையும் அந்தச் சட்டம் அளிக்கும். அனைத்து தெய்வீகப் பிரமாணங்களையும் கனம்பண்ணுவோருக்கெதிராக, பழைய உலகத்தின் (ஐரோப்பா) கத்தோலிக்க மார்க்கமும், புதிய உலகத்தின் (அமெரிக்கா) விழுந்து போன புராட்டஸ்டண்ட் மார்க்கமும் ஒன்று சேர்ந்து செயல்படும். அதன்பிறகு, தேவனுடைய ஜனங்கள் யாக்கோபின் இக்கட்டுக்காலத்தைக் குறித்து, தீர்க்கதரிசியால் கூறப்பட்ட காலமாகிய துயரமும் வருத்தமும் நிறைந்த காலத்திற்குள்ளாகப் பிரவேசிப்பார்கள்.—GC 615, 616 (1911).

இதற்குமுன்பாக இரத்தசாட்சியாக மரித்தவர்களைப்போல, தேவனுடைய ஜனங்கள் தங்களது இரத்தத்தினாலே தங்களது சாட்சியை சீக்கிரத்தில் முத்திரைப் போடவேண்டும் என்பதைப்போன்று மனிதப் பார்வைக்குக் காணப்படலாம். தங்களது சத்துருக்களின் கைகளால் தாங்கள் விழும்படிக்கு, கர்த்தர் தங்களை கைவிட்டுவிட்டார் என்று அவர்களும் பயப்பட ஆரம்பிப்பார்கள். அது பயங்கரமான கடுந்துயர் நிறைந்த ஒரு நேரமாகும். இரவும் பகலும் அவர்கள் விடுதலைக்காக தேவனை நோக்கிக் கதறுவார்கள்... யாக்கோபைப் போல அவர்கள் அனைவரும் தேவனோடு போராடுவார்கள். அவர்களது முகத்தோற்றங்கள் உள்ளான போராட்டத்தை வெளிப்படுத்தும். அவர்களது ஒவ்வொரு முகமும் வெளிறிப்போயிருக்கும். என்றபோதும் அவர்கள், தங்களது ஊக்கமான விண்ணப்பங்களை நிறுத்தமாட்டார்கள்.—GC 630 (1911).

போராட்டமும் வேதனையும் நிறைந்த அந்த இரவு நேரத்திலே யாக்கோபுக்கு ஏற்பட்ட அனுபவம், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குச் சற்றுமுன் தேவனுடைய ஜனங்கள் கடக்கவேண்டிய உபத்திரவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. தீர்க்கதரிசி எரேமியாவும் இந்தக் காலத்தைக்குறித்து பரிசுத்த தரிசனத்திலே தான் கண்டதை: "…தத்தளிப்பின் சத்தத்தைக் கேட்கிறோம்; திகிலுண்டு, சமாதானமில்லை… முகங்களெல்லாம் மாறி, வெளுத்திருக்கிறதையும் நான் காண்கிறதென்ன? ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப் போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்" (எரேமியா 30:5–7) என்று விவரிக்கின்றார்.—PP 201 (1890).

**அறிக்கை செய்யப்படவேண்டிய மறைவான பாவங்களே நீதிமான்களுக்கு இருக்காது**

தேவனுடைய ஜனங்கள் இக்கட்டுக்காலத்திலே, பயத்தாலும் வேதனையாலும் அலைக்கழிக்கப்படும்போது, அறிக்கைசெய்யப்படாத பாவம் அவர்கள்முன் தோன்றுமானால், மூழ்கடிக்கப்படுவார்கள். நம்பிக்கை யின்மை அவர்களது விசுவாசத்தைத் துண்டித்துவிடும். பின்பு, விடுதலைக்காக தேவனிடத்திலே விண்ணப்பம்செய்யும்படியான நம்பிக்கை அவர்களுக்கு இல்லாமற்போய்விடும்; ஆயினும், தங்களது தகுதியற்ற நிலையைக்குறித்து ஒரு ஆழ்ந்த உணர்வு அவர்களுக்கு இருக்கும் அந்த நேரத்தில், வெளிப்படுத்தத்தக்கதான மறைக்கப்பட்ட தவறுகள் ஒன்றும் அவர்களிடத்தில் இருக்காது. அவர்களது பாவங்கள் நியாயத்தீர்ப்பிற்கு முன்னதாகச் சென்று முற்றிலுமாக நீக்கப்பட்டிருந்தன; அவைகளை அவர்கள் நினைவிற்குக்கூட கொண்டுவர முடியாது…—GC 620 (1911).

தேவனுடைய ஜனங்கள்… தங்களது தவறுகளைக்குறித்த ஒரு ஆழ்ந்த உணர்வைப் பெற்றிருப்பார்கள். தங்களது வாழ்க்கையைத் திருப்பிப் பார்க்கும்போது, அவர்களது நம்பிக்கைகள் மூழ்கிப்போய்விடும். ஆனால் தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தையும், தங்களது உண்மையான மனந்திரும்புதலையும் எண்ணிப்பார்க்கும்போது, மனந்திரும்பின உதவியற்ற பாவிக்கு கிறிஸ்துவின்மூலமாய் கொடுக்கப்பட்டிருக்கின்ற வாக்குத்தத்தங் களுக்காக அவர்கள் மன்றாடுவார்கள். அவர்களது ஜெபங்களுக்கு உடனடியாகப் பதில் அளிக்கப்படாவிட்டாலும், அதினிமித்தம் அவர்கள் விசுவாசம் ஒழிந்துபோகாது. யாக்கோபு தேவதூதனைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டதுபோலவே, அவர்கள் தேவனுடைய பெலத்தை பற்றிப்பிடித்துக்கொள்வார்கள். "நீர் என்னை ஆசீர்வதித்தால் ஒழிய உம்மைப் போகவிடேன்" என்பதே அவர்களது ஆத்துமாக்களின் மொழியாயிருக்கும். —PP 202 (1890).

### பரிசுத்தவான்கள் தங்கள் வாழ்வை இழக்கமாட்டார்கள்

மிருகத்தின் சட்டத்திற்குத் தலைவணங்காதவர்களையும், அதன் முத்திரையைப் பெற்றுக்கொள்ளாதவர்களையும், மறுரூபமாக்கப்பட காத்திருப் பவர்களையும், அழிக்கும்படியாக துன்மார்க்கரை தேவன் அனுமதிக்க மாட்டார். பரிசுத்தவான்களைக் கொலைசெய்யும்படித் துன்மார்க்கர் அனுமதிக்கப் படுவார்களானால், சாத்தானும், கேடுசெய்யும் அவனது அனைத்து சேனையும், தேவனை வெறுப்பவர்கள் அனைவரும் மனநிறைவடைவார்கள் என்று நான் கண்டேன். தாங்கள் நேசித்த ஆண்டவரைக் காணவேண்டும் என்று இத்தனை காலமாய்க் காத்திருந்த அந்தப் பரிசுத்தவான்களோடு ஏற்படும் முடிவான இந்தக் கடைசிப் போராட்டத்திலே சாத்தான் தனது வல்லமையைப் பெற்றுக்கொள்வதாக இருக்குமானால், ஆ! அவனது சாத்தானிய கெம்பீரத்திற்கு, அது எத்தகைய ஒரு ஜெயமாக இருக்கும்! பரிசுத்தவான்கள் மேலே(பரலோகம்) செல்வதைப்பற்றின கருத்தைக் கேலிசெய்தோர், தேவன் தமது ஜனங்களுக்காகக் கொண்டுள்ள அவரது அக்கறையையும், அவர்களது மகிமையான விடுதலையையும் காண்பார்கள். —EW 284 (1858).

தேவனுடைய ஜனங்கள் துன்பமற்றவர்களாக இருக்கமாட்டார்கள். உபத்திரவப்படுத்தப்பட்டு மனவேதனையையும் மிகுந்த வறுமையையும் சகித்து ஆகாரமின்றித் தவிக்கும் அதே வேளையில், அழிந்துபோகும்படியாக அவர்கள் விட்டுவிடப்பட மாட்டார்கள்.—GC 629 (1911).

கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகளின் இரத்தம் அவருக்குச் சாட்சியாக இந்தக் காலத்திலே சிந்தப்படுமானால், இரத்தசாட்சிகளின் இரத்தத்தைப்போன்று, தேவனுக்கு ஒரு பெரிய அறுவடையைத் தருவதற்காக விதைக்கப்பட்ட விதையாக அது இருக்காது.—GC 634 (1911).

### தேவன் ஆயத்தஞ்செய்வார்

இக்கட்டுக்காலத்திலே நம்முடைய தற்காலிகத் தேவைகளுக் கென்று முன்னேற்பாடாக ஆயத்தம் செய்துவைப்பதென்பது, வேதத்திற்கு எதிரிடையான காரியம் என்பதைக் கர்த்தர் எனக்கு மீண்டும் மீண்டுமாகக் காண்பித்திருக்கின்றார். பரிசுத்தவான்கள் ஒருவேளை இக்கட்டுக்காலத்திலே அப்படித் தங்களுக்கு ஆகாரம் சேர்த்து வைத்திருப்பார்களானால், அல்லது அறுவடைசெய்யப்படாமல் வயலில் விட்டிருப்பார்களானால், பட்டயமும் பஞ்சமும் வாதைகளும் நாட்டிலே பரவியிருக்கும்போது, வன்முறையாளர் களின் கரங்களால் அவைகள் அவர்களிடமிருந்து பிடுங்கப்படும். அன்னியர் அவர்களது நிலங்களை அறுவடை செய்து கொண்டுசெல்வார்கள் என்பதை நான் கண்டேன்.

அந்த நேரம்தான் நமக்கு தேவனை முழுமையாக நம்புவதற்கான நேரம். அவரே நம்மை ஆதரிப்பார். அந்நேரத்திலே அப்பமும் தண்ணீரும் நமக்குக் நிச்சயமாகக் கொடுக்கப்படும் என்றும், நாம் குறைவுபடவோ பசியினால் வருந்தவோ மாட்டோம் என்றும் நான் கண்டேன். ஏனெனில், வனாந்தரத்திலேயும் நமக்காகப் பந்தியை ஆயத்தம்பண்ண தேவன் வல்லமையுள்ளவராய் இருக்கின்றார். எலியாவைப் போஷித்ததுபோல, அவசியமிருந்தால் காகங்களை அனுப்பி அவர் நம்மையும் போஷிப்பார், அல்லது இஸ்ரவேலருக்கு வானத்திலிருந்து மன்னாவைப் பொழியச்செய்தது போலவும் பொழியச்செய்வார்.—EW 56 (1851).

அப்பத்தையும் தண்ணீரையும் மட்டுமே நம்பி வாழக்கூடிய நிர்பந்தம் தேவனுடைய மக்களைக் கட்டாயப்படுத்தும் ஒரு இக்கட்டுக்காலம் நமக்கு முன்பாக வந்திருக்கும் என்பதை நான் கண்டேன்… ஏனெனில் இக்கட்டுக் காலத்திலே ஒருவரும் தங்கள் கைகளினால் வேலை செய்யமாட்டார்கள். அவர்களது பாடுகள் மனரீதியானதாக இருக்கும். மேலும், தேவன்தாமே அவர்களுக்கு உணவளிப்பார்.—Ms 2, 1858.

இக்கட்டுக்காலம் நமக்குச் சற்றுமுன்பாக இருக்கின்றது. சுயத்தை மறுப்பதற்கும் உயிர்பிழைப்பதற்கும் மாத்திரம் போதுமான அளவு புசிக்க வேண்டிய கண்டிப்பான தேவை தேவனுடைய ஜனங்களுக்கு உண்டாகும். ஆனாலும் தேவன் அப்படிப்பட்ட காலத்திற்கென்று நம்மை ஆயத்தப் படுத்துவார். அந்த பயங்கரமான மணிவேளையில், நம்முடைய சூழ்நிலை தேவன் தமது பெலப்படுத்தும் வல்லமையை அளிப்பதற்கும், தமது மக்களை தாங்குவதற்குமான அவரின் சந்தர்ப்பமாக இருக்கும்.—1T 206 (1859).

இக்கட்டுக்காலத்தில் மீதமான தேவ ஜனத்துக்கு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருப்பதெல்லாம் அப்பமும் தண்ணீருமே.—SR 129 (1870).

கிறிஸ்துவின் வருகைக்குச் சற்றுமுன்பாக இருக்கின்ற இக்கட்டுக் காலத்தில், பரலோகத் தூதர்களுடைய ஊழியத்தின்மூலமாக நீதிமான்கள் பாதுகாக்கப்படுவார்கள்.—PP 256 (1890).

### பரிந்துபேசுகிறவர் இல்லை என்றாலும் கிறிஸ்துவோடு இடைவிடாத தொடர்பு

கிறிஸ்து தமது ஜனங்களுக்காக பாவநிவர்த்தி செய்து, அவர்களது பாவங்களை முற்றிலுமாக நீக்கிவிட்டார். அவருடைய ராஜ்யத்திற்குரிய குடிமக்களின் தொகை நிறைவடைந்துவிட்டது…

அவர் ஆசரிப்புக்கூடாரத்தைவிட்டு வெளியே வரும்பொழுது, பூமியின் குடிகளை காரிருள் மூடிக்கொள்ளும். அந்த பயங்கரமான நேரத்தில்,

பரிந்துபேசுகிறவர் ஒருவர் இல்லாத சூழ்நிலையில், நீதிமான்கள் பரிசுத்தமான தேவனின் பார்வையில் வாழ வேண்டும்.—GC 613, 614 (1911).

இந்தச் சோதனையான மணிவேளையில், கர்த்தர் தமது ஜனங்களை மறந்துவிடுவாரா?… சத்துருக்கள் அவர்களை சிறைக்குள் தள்ளி அடைத்தாலும், இருள் நிறைந்த அந்தச் சிறையின் சுவர்கள் கிறிஸ்துவிற்கும் அவர்கள் ஆத்துமாவிற்கும் இடையேயுள்ள தொடர்பைத் துண்டிக்கமுடியாது. அவர்களது பெலவீனங்களையெல்லாம் அறிந்தவராக வும், அவர்களுக்கு வருகின்ற ஒவ்வொரு சோதனைகளையும் அனுபவித்துப் பார்த்தவராகவும் இருப்பவர், இந்த உலக அதிகாரங்களுக்கெல்லாம் மேலான அதிகாரமுடையவராக இருக்கின்றாார். தேவதூதர்கள் பரலோகத் திலிருந்து வெளிச்சத்தையும் சமாதானத்தையும், அவர்களது தனிமையான சிறையறைகளுக்குள்ளாகவும் கொண்டுவருவார்கள். விசுவாசத்தில் ஐசுவரியமுள்ளவர்களாய்ச் சிறைச்சாலையில் இருப்பவர்களுக்கு அது ஒரு அரண்மனையாக இருக்கும். பிலிப்பியச் சிறையில் பவுலும் சீலாவும் நடுராத்திரியிலே ஜெபித்து, தேவனைத் துதித்துப் பாடினபோது, சிறைச்சாலை பிரகாசித்தது போல, இவர்கள் இருக்கின்ற சிறைச்சாலையின் இருளான சுவர்கள் பரலோக வெளிச்சத்தால் பிரகாசிக்கப்படும்.—GC 626, 627 (1911).

ஒருவேளை மனிதர்கள் பரலோகப் பார்வையோடு பார்க்கக் கூடுமானால், கிறிஸ்துவினுடைய வார்த்தையின் பொறுமையைக் காத்துக் கொண்ட பரிசுத்தவான்களைச் சுற்றிலும், வல்லமையான தூதர்கூட்டங்கள் நிற்பதை காணமுடியும். தேவதூதர்கள் பரிவுள்ள மென்மையோடு அவர்களது மனவேதனையைக் கண்டும், அவர்களது ஜெபங்களைக் கேட்டும் இருக்கின்றனர். அழிவிலிருந்து அவர்களைக் காப்பாற்ற, தங்களது அதிபதியின் உத்தரவிற்காக அவர்கள் காத்துக்கொண்டிருக்கின்றனர்… நமக்கு உதவித் தேவைப்படுகின்ற சரியான நேரத்தில் அன்பான இரட்சகர் உதவியை அனுப்புவார்.—GC 630, 633 (1911).

பரலோகத்தின் மகிமையும், கடந்த காலத்தில் நடைபெற்ற உபத் திரவங்களும் மீண்டும் வந்து ஒன்றாக இணையும்போது, அந்த நேரத்தில் பூமியிலே உயிரோடு இருக்கும் தேவனுடைய மக்களின் அனுபவம் எப்படி இருக்குமென்று அதைப்பற்றிக் கருத்துக் கூறுவது கூடாத காரியமாகும். அவர்கள் தேவனுடைய சிங்காசனத்திலிருந்து வருகின்ற வெளிச்சத்தில் நடப்பார்கள். பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையேயான தொடர்பு தேவதூதர்களின் உதவியினால் நிலையாக இருக்கும்…

விரைவாக வந்துகொண்டிருக்கின்ற இக்கட்டுக்காலத்தின் மத்தியிலே —யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத

ஒரு கொடிய இக்கட்டுக்காலத்திலே—தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள் அசையாமல் உறுதியாய் நிற்பார்கள். வல்லமையில் சிறந்த தேவதூதர்கள் அவர்களைப் பாதுகாப்பதால், சாத்தானும் அவனுடைய சேனையும் அவர்களை அழிக்க முடியாது.—9T 16, 17 (1909).

## தேவனுடைய ஜனங்கள் பாவமான விருப்பங்களைச் சிந்தையில் வைத்திருக்கமாட்டார்கள்

நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து நமக்காகப் பாவநிவாரணம் செய்துகொண்டிருக்கின்ற இந்த வேளையில், நாம் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவர்களாக மாறுவதற்குப் பிரயாசப்பட வேண்டும். நம்முடைய இரட்சகரை ஒரு சிறு எண்ணத்தால்கூட, சோதனையின் வல்லமைக்கு இணங்கச்செய்ய சாத்தானால் இயலவில்லை. ஆனால் மனித இருதயங்களிலே, தவறான விருப்பம் ஏதேனும் ஒன்று எங்காவது இருக்குமானால், அங்கே தனது கால்பதிக்கும்படியான ஒரு வழியைச் சாத்தான் கண்டுபிடிக்கின்றான்; அப்படியாக மனதில் போற்றி வளர்க்கப்படும் சில பாவமான விருப்பங்கள், அவனது சோதனைகள் தங்களது வல்லமையைப் பிரயோகிப்பதற்கு வழியாக அமைகின்றது. ஆனால் கிறிஸ்து: “இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை” (யோவா 14:30) என்று தன்னைக்குறித்து அறிவிக்கின்றார். வெற்றியை அடையத்தக்கதான எந்த ஒரு காரியத்தையும் சாத்தானால் தேவகுமாரனிடத்தில் காணமுடியவில்லை. அவர் தமது பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தார். சாத்தான் தனக்குச் சாதகமாக உபயோகிப்பதற்கான எந்த ஒரு பாவமும் அவரிடம் காணப்படவில்லை. இக்கட்டுக்காலத்தில் நிலைத்து நிற்கப்போகின்றவர்கள் மத்தியிலும், ஒரு சிறு பாவமுமில்லாத இப்படிப்பட்ட பரிபூரண நிலை கண்டிப்பாகக் காணப்பட வேண்டியதாய் இருக்கின்றது.—GC 623 (1911).

## சுயத்திற்கு எதிரான போராட்டம் தொடரும்

சாத்தான் ஆளுகை செய்யும்வரை, கீழ்ப்படுத்தப்படவேண்டிய சுயத்தையும், மேற்கொள்ளப்பட வேண்டிய நெருக்கிக்கொண்டிருக்கிறதான பாவங்களையும் நாம் கொண்டிருப்போம். நம்முடைய உயிர் இருக்கும் வரையிலும், நான் எல்லாவற்றையும் அடைந்தாயிற்று என்று கூறி அதை அடையக்கூடிய கட்டமோ, அதை அடையாமல் நின்று போகக்கூடிய இடமோ நமக்கு இருக்காது. வாழ்நாள் முழுவதும் உள்ள கீழ்ப்படிதலின் பலன்தான் பரிசுத்தமடைதல் என்பதாகும்.—AA 560, 561 (1911).

ஜென்ம சுபாவமான மனதிற்கு விரோதமான எப்பொழுதும் யுத்தம் தொடர்ந்து நடத்தப்படவேண்டும்; தேவனுடைய கிருபையின் புதுப்பிக்கின்ற

செல்வாக்கினால் நமக்கு உதவியளிக்கப்பட வேண்டும். அந்தக் கிருபை நமது மனதை மேல்நோக்கி ஈர்க்கச்செய்து, தூய்மையான மற்றும் பரிசுத்தமான காரியங்களைத் தியானிப்பதற்கு பழக்கப்படுத்திக்கொள்ளச் செய்கின்றது.— 2T 479 (1870).

தீமை செய்யத் தூண்டுகிற சாத்தானின் சோதனைகளே இல்லாத ஒரு கற்பனை உலகத்தை, அல்லது ஒரு சீர்மிகு சபையை நமது மனதில் நாம் உருவாக்கலாம்; ஆனால் குறைபாடின்மை என்பது நமது மனத்தோற்றத்தில் மட்டும்தான் இருக்கிறது.—RH Aug. 8, 1893.

மனிதர்கள் பரிசுத்த மாம்சத்தைப் பெற்றுக்கொண்டபிறகு, பூமியிலே தங்கியிருக்கமாட்டார்கள். மாறாக, பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுவார்கள். பாவம் இந்த வாழ்க்கையில் மன்னிக்கப்பட்டாலும், அதன் விளைவுகள் முழுவதுமாக இப்பொழுதே நீக்கப்படுவதில்லை. கிறிஸ்துவின் வருகையில்தான் அவர், "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்"—2SM 33 (1901).

## 1,44,000 பேர்

அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாக, "ஒரு புதுப்பாட்டைப்" பாடினார்கள். இரட்சிக்கப்பட்ட 1,44,000 பேர் தவிர, வேறு ஒருவரும் கற்றுக்கொள்ளக்கூடாத ஒரு பாடலாக அது இருந்தது. அதுதான் விடுதலையின் பாட்டாகிய மோசேயின் பாடலும், ஆட்டுக்குட்டியானவரின் பாடலுமாம். அது இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்களுடைய அனுபவத்தைக் குறித்த பாடலாக இருந்ததினால், அவர்கள் தவிர வேறொருவரும் அந்தப் பாடலைக் கற்றுக் கொள்ள முடியாததாயிருந்தது—அது வேறு எந்த ஒரு கூட்டத்தாரும், இதுவரையில் எப்பொழுதுமே பெற்றிராத ஒரு அனுபவத்தைக் குறிப்பதாக இருக்கின்றது. "ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே" உயிரோடிருக்கிறவர்களின் மத்தியிலிருந்து, பூமியிலிருந்து மறுரூபமாக்கப்பட்ட இவர்கள், "தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்" (வெளி. 15:2,3; 14:1–5). "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்." யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத, கொடிய இக்கட்டுக்காலத்தைக் கடந்துவந்திருந்தவர்கள்; அவர்கள் யாக்கோபின் இக்கட்டுக்காலத்தின் வேதனையை சகித்திருந்தவர்கள்; தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் பூமியின்மீது இறுதியாக ஊற்றப்படும் போது, பரிந்துபேசுகின்ற ஒரு மத்தியஸ்தர் இல்லாமலே அவர்கள் இதைக் கடந்துவந்து நின்றவர்கள் ஆவர்.—GC 648, 649 (1911).

இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்களில் யார் யார் இருப்பார்கள்? என்பது போன்ற, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பிரயோஜனப்படாத கேள்விகளில் நாம் நுழைந்து, வாக்குவாதத்தில் ஈடுபடுவது தேவனுடைய சித்தம் அல்ல. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இவர்களைக்குறித்து, ஒரு குறுகிய காலத்தில் கேள்விக்கிடமின்றி வெளியரங்கமாகும்.—1SM 174 (1901).

## தேவனுடைய ஜனங்கள் விடுவிக்கப்படுவர்

தப்பிப்பதற்கு அவர்களுக்கு வேறு வழியே இல்லாததுபோல் காணப்படுவதனால், சாத்தானின் சேனையும் துன்மார்க்கரும் அவர்களைச் சூழ்ந்துகொண்டு அவர்களைக் கண்டு வெற்றியினால் ஆர்ப்பரிப்பார்கள். அவர்களது வெற்றி ஆரவாரத்துடன் கூடிய களியாட்டத்தின் மத்தியில், பேரோசையுள்ள இடி முழக்கங்களின் பெருத்த முழக்கம் ஒன்றன்பின் ஒன்றாக அங்கு கேட்கப்படும். வானங்கள் கறுத்து சூழுகின்றன. தேவன் தமது பரிசுத்தக் கூடாரத்திலிருந்து தமது சத்தத்தை முழங்கும்போது, வானங்கள் பரலோகத்திலிருந்துண்டாகும் பயங்கரமான மகிமையினாலும் பிரகாசிக்கும் ஒளியினாலும் மாத்திரம் ஒளியூட்டம் அடைகின்றன.

பூமியின் அஸ்திபாரங்கள் அசையும், கட்டடங்கள் நிலை குலைந்து பயங்கரமான பேரோசையுடன் இடிந்து நொறுங்கிவிழும். ஒரு பானையின் நீர் கொதிப்பதுபோல சமுத்திரத்தின் தண்ணீர்கள் கொதிக்க, பூமி முழுவதும் பயங்கரமான குழப்பத்தில் இருக்கும். நீதிமான்களின் சிறையிருப்பு திருப்பப்பட்டது. அவர்கள், “நாம் விடுவிக்கப்பட்டோம், இது தேவனுடைய சத்தம்” என்று இனிமையான மற்றும் பக்திவிநயமான மெல்லிய குரலில் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வார்கள்.—1T 353, 354 (1862).

நியாயப்பிரமாணங்களைக் கனம்பண்ணின பிள்ளைகளிடமிருந்து மானிட சட்டங்களின் பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப்படும்பொழுது, வெவ்வேறு இடங்களில் ஒரே சமயத்தில் அவர்களை அழித்துப்போடுவதற்கான பொதுவான ஒரு கிளர்ச்சி எழும்பும். சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட அந்த நேரம் நெருங்கும்பொழுது, வெறுக்கத்தக்க அந்த வகுப்பினரை வேரோடு அழிக்க துன்மார்க்க ஜனங்கள் சதித்திட்டம் தீட்டுவார்கள். அவர்களைக் (துன்மார்க்கரைக்) கடிந்துகொண்டும், எச்சரித்தும்வந்த சத்தத்தை முற்றிலுமாக ஓயப்பண்ணும்விதத்தில், ஒரு குறிப்பிட்ட இரவில் ஒரேயடியாக அழித்து விடும்படி தீர்மானிக்கப்படும்.

தேவனுடைய ஜனங்களில் சிலர் சிறைச்சாலைகளில் அடைக்கப் பட்டிருப்பார்கள். சிலர் மலைகளிலும் காடுகளிலும் உள்ள தனிமையான

மறைவான இடங்களில் ஒளிந்துகொண்டிருப்பார்கள். தீய தூதர்களின் சேனைகளால் ஏவப்பட்ட ஆயுதந்தரித்த மனிதகூட்டம் அவர்களைக் கொலைசெய்யும்படிக்கு, பூமியின் ஒவ்வொரு மூலையிலும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்ற அந்த நேரத்தில், அவர்கள் தெய்வீகப் பாதுகாப்பிற்காக மன்றாடுவார்கள்.... வெற்றிக்களிப்போடும், பரியாசச்சிரிப்போடும், சாப வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு ஆரவாரிக்கின்ற தீய மனிதர்களின் கூட்டம் தங்களது இரையின்மீது பாய ஆயத்தமாகின்ற அந்த நேரத்தில்தானே, இதோ, இரவின் இருளைக்காட்டிலும் அடர்த்தியான ஒரு காரிருள் பூமியின்மீது படிகின்றது...

தமது மக்களை விடுவிப்பதற்காக, தேவன் நள்ளிரவில் தமது வல்லமையை வெளிப்படுத்துகின்றார்... சீற்றமான வானங்களின் மத்தியிலே, விவரிக்க முடியாத மகிமையோடு, தெளிவான ஒரு இடம் காணப்படுகின்றது. அங்கேயிருந்து திரளான தண்ணீர்களின் ஓசையைப்போல, "ஆயிற்று" என்கின்ற ஆண்டவரது சத்தம் தொனிக்கின்றது (வெளி. 16:17). அந்தச் சத்தம் வானங்களையும் பூமியையும் அசைக்கின்றது...

உலகின் பெருமையான பட்டணங்கள் தாழ்த்தப்பட்டன. உலகின் பெரிய பெரிய மனிதர்கள் தங்களை மகிமைப்படுத்தும்படி பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்திருந்த கெம்பீரமான அரண்மனைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக நொறுங்கி அழிந்துபோயின. சிறைச்சாலையின் சுவர்கள் பிளந்தன. தங்களது விசுவாசத்தினிமித்தம் சிறைவைக்கப்பட்டிருந்த தேவனுடைய ஜனங்கள் விடுவிக்கப்பட்டனர்.—GC 635–637 (1911). ★

# 19

# கிறிஸ்துவின் வருகை

### ஏழாம் வாதையும் விசேஷ உயிர்த்தெழுதலும்

ஒரு மாபெரும் பூமியதிர்ச்சி உண்டாகும். "பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை" (வெளி. 16:17,18). ஆகாயவிரிவு திறக்கப்படுவதைப்போலவும் மூடிக்கொள்வதைப்போலவும் காணப்பட்டது. தேவனுடைய சிங்காசனத்திலிருந்து அவருடைய மகிமை வானங்களினூடாக பிரகாசித்ததுபோலத் தோன்றியது. காற்றில் ஒரு நாணல் அசைவதைப்போல் மலைகள் அசைந்தன. கரடுமுரடான பாறைகள் எல்லாப் பக்கங்களிலும் சிதறி விழுந்தன… பூமி முழுவதும் சமுத்திரத்தின் அலைகளைப்போல மேலே எழும்பி அடங்கின. அதன் மேற்பரப்பு பிளவுபட்டது. அதன் அஸ்திபாரங்கள் பிளந்து வழி உண்டாக்குவதுபோலத் தோற்றமளித்தன. மலைத்தொடர்கள் பூமிக்குள் புதைந்து கொண்டிருந்தன. ஜனங்கள் குடியிருந்த தீவுகள் காணப்படாமற் போயின. துன்மார்க்கத்தினால் சோதோமைப்போல் மாறிப்போயிருந்த கடல் துறைமுகங்கள் மூர்க்கமான கடல் அலைகளால் விழுங்கப்பட்டன… "தாலந்து நிறையான பெரிய கல்மழை" பூமியிலே தங்களது அழிவின் வேலையைச் செய்து கொண்டிருந்தன (வசனம் 19,20)….

கல்லறைகள் திறக்கப்பட்டன. "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து" (தானி. 12:2) எழுந்தார்கள்.. மூன்றாம் தூதனுடைய தூதின் விசுவாசத்தில் மரித்தவர்கள் அனைவரும் மகிமையடைந்தவர்களாய் தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொண்டவர்களோடு, அவர் செய்யப்போகின்ற சமாதான உடன்படிக்கையைக் கேட்கத்தக்கதாக, தங்கள் கல்லறைகளிலிருந்து எழுந்துவருவார்கள். "அவரைக் குத்தினவர்களும்" (வெளி. 1:7), கிறிஸ்துவினுடைய மரணத்தின் கடுந்துயரங்களைப் பரியாசம் பண்ணினவர்களும், ஏளனம் செய்தவர்களும், அவரது ஜனங்களையும் அவரது சத்தியத்தையும் மிகவும் கோபாவேசத்தோடு எதிர்த்தவர்களும், கிறிஸ்துவின் மகிமையில் அவரைக் காணும்படியாகவும், ஆண்டவருக்கு உண்மையாயும் கீழ்ப்படிந்தும் இருந்தவர்களுக்குக்

கிடைக்கும் கனத்தைக் காணும்படியாகவும் எழுந்திருப்பார்கள்.—GC 636, 637 (1911).

**கிறிஸ்துவின் வருகையின் நேரத்தை தேவன் அறிவிக்கின்றார்**

இருண்ட கனத்த கருமேகங்கள் மேலெழும்பி ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. காற்றுமண்டலம் பிரிந்து உருண்டு ஓடிற்று. அதன் பின்னர், மிருகசீரிஷ (Orion) நட்சத்திரக் கூட்டத்திலுள்ள திறப்பான வெளியின் வழியாக தேவனுடைய சத்தம் வந்த அந்த இடத்தை நோக்கிப்பார்க்க முடிந்தது.—EW 41 (1851).

உடனடியாக, இயேசு கிறிஸ்துவினுடைய வருகையின் நாளையும் நாழிகையையும் அறிவிக்கக்கூடியதான, திரளான தண்ணீர்களின் ஓசையைப் போன்ற தேவனுடைய சத்தத்தை நாங்கள் கேட்டோம். உயிரோடிருந்த பரிசுத்தவான்களாகிய 1,44,000 பேரும், தேவனுடைய சத்தத்தை[1] அறிந்து புரிந்துகொண்ட அதே நேரம், துன்மார்க்கர் அதை ஒரு பூமியதிர்ச்சி என்றும், இடிமுழக்கம் என்றும் நினைத்தனர்.—EW 15 (1851).

இயேசுவினுடைய வருகையின் நாளையும் நாழிகையையும், தாம் செய்கிற நித்திய உடன்படிக்கையின் வார்த்தைகளையும் தேவன் தமது ஜனங்களுக்கு அறிவித்தபோது, அவர் ஒரு வாக்கியத்தைக் கூறி இடையே சிறிது நிறுத்தியபோது, அவரது வார்த்தைகள் பூமியின் எல்லா இடங்களிலும் எதிரொலித்தன. தேவனுடைய இஸ்ரவேல் மக்கள் தங்களது கண்களை மேல்நோக்கிப் பதித்தவர்களாக நின்று கொண்டு, பலத்த இடிமுழக்க ஓசைபோல பூமியெங்கும் எதிரொலித்த யேகோவாவின் வாயினின்று வந்த வார்த்தைகளைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தனர். அக்காட்சி மகா பயங்கர பக்தி விநயமாயிருந்தது. ஒவ்வொரு வாக்கியத்தையும் அவர் சொல்லிமுடித்தபோது, பரிசுத்தவான்கள் அனைவரும், “மகிமை! அல்லேலூயா!” என்று ஆர்ப்பரித்தார்கள். அவர்களது முகத்தோற்றங்கள் தேவ மகிமையால் பிரகாசமடைந்து, சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்த மோசேயின் முகம்போல மகிமையுடன் பிரகாசித்தன. அந்த மகிமையினிமித்தம் துன்மார்க்கர் அவர்களை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாதிருந்தார்கள். தேவனுடைய ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரித்து, அவரைக் கனம்பண்ணினவர்கள்மீது என்றும் முடிவில்லாத ஆசீர்வாதம் அறிவிக்கப்பட்டபொழுது மிருகத்தின்மீதும், அதன் சொரூபத்தின்மீதும் கிடைத்த வெற்றியின் வல்லமையான ஒரு ஆரவாரம் அங்கு எழும்பினது. —EW 285, 286 (1858).

தேவனுடைய குரலினால் அறிவிக்கப்பட்ட அந்த நேரத்தைக்குறித்த அறிவு எனக்குச் சிறிதளவும் இல்லை. அந்த மணிநேரம் அறிவிக்கப்படுவதை

நான் கேட்டேன். ஆனால் தரிசனத்திலிருந்து வெளிவந்தபிறகு, அதை முற்றிலும் மறந்து போனேன். எந்த ஒரு மொழியும் விவரிக்கமுடியாத அளவிற்கு, அப்படிப்பட்ட நடுங்கவைக்கின்ற—பக்திவிநயமான—கவனத்தை ஈர்க்கக்கூடிய காட்சிகள் எனக்கு முன்பாகக் கடந்துசென்றன. இந்தக் காட்சியை முடிக்கும்வண்ணமாக, மனுஷகுமாரன் வீற்றிருந்த மாபெரும் வெண்மையான மேகம் தோன்றியது. அவை அனைத்தும் எனக்கு உயிருள்ள உண்மையான ஒரு காரியம்போல் இருந்தன.—1SM 76 (1888).

## இழந்துபோனவர்களுக்கு உண்டாகும் பயங்கரம்

ஒரு குடிகாரனைப்போல பூமி தள்ளாடுகின்றபோதும், வானங்கள் அசைகின்றபோதும், கர்த்தருடைய மகாநாள் வந்திருக்கும்போதும், யாரால் நிலைநிற்கக் கூடும்? பயந்து நடுங்குகின்ற வேதனையின் மத்தியில், அவர்கள் நோக்கிப்பார்த்த ஒரு காரியத்திலிருந்து தப்பிப்பதற்காக விருதாவாக முயற்சி செய்வார்கள். “இதோ, மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும்”–வெளி. 1:7. இரட்சிக்கப்படாதவர்கள் கடுமையான சாப வார்த்தைகளைக் கூறி, அவர்களது தெய்வமாயிருக்கின்ற பேசவியலாத இயற்கையை, “பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி, நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக் குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்” என்று கதறுவார்கள் (வெளி. 6:16).—TMK 356 (1896).

தேவனுடைய குரல் தமது ஜனங்களின் சிறையிருப்பைத் திருப்பும்போது, தங்களது வாழ்க்கையின் மாபெரும் போராட்டத்தில் அனைத்தையும் இழந்தவர்களிடத்தில், மிகப் பயங்கரமான ஒரு விழிப்புணர்வு உண்டாகும்… வாழ்நாள் முழுவதும் சம்பாதித்த லாபமனைத்தும், ஒரு நொடிப்பொழுதில் அழிக்கப்பட்டுப்போகும். ஐசுவரியவான்கள் தங்களது ஆடம்பரமான வீடுகள் அழிந்து போவதையும், தங்களது வெள்ளியும் பொன்னும் சிதறடிக்கப்படு கின்றதையும் பார்த்துப் புலம்புவார்கள்… தேவனையும் தங்களது சக மனிதர்களையும் பாவத்தினால் அலட்சியப்படுத்திவிட்டதற்காக அல்ல, தேவன் வெற்றிப்பெற்றுவிட்டாரே என்பதற்காக, துன்மார்க்கர் வருத்தத்தால் நிறைந்திருப்பார்கள். முடிவு இப்படி நேர்ந்துவிட்டதே என்று புலம்பி அழுவார்களேயன்றி, தங்களது துன்மார்க்கத்தை எண்ணி மனந்திரும்பமாட்டார்கள்.—GC 654 (1911).

## இயேசு வல்லமையோடும் மகிமையோடும் இறங்கிவருவார்

கொஞ்சநேரத்தில் கிழக்குத் திசையில் கை அளவான சிறிய கருமையான மேகம் ஒன்று தோன்றும். வெகுதூரத்தில் இருக்கும்போது,

இருளில் மூடிமறைக்கப்பட்டுள்ளதுபோல் தோன்றும் அது, இரட்சகரை சூழ்ந்திருக்கின்ற மேகமாகும். மனுஷகுமாரனுடைய அடையாளம் அதுதான் என்று தேவனுடைய மக்கள் அறிந்துகொள்வார்கள். அது பூமியை நெருங்க நெருங்க பிரகாசமானதாகவும் மிகவும் மகிமையானதாகவும், அதன் அடிப்பாகம் பட்சிக்கிற அக்கினியைப்போன்றும் மாற, மிகப்பெரிய ஒரு வெண்மேகமாகக் காணப்பட்டு, அதற்கு மேலாக உடன்படிக்கையின் வானவில் தெரியும்வரை, அவர்கள் பக்திவிநயமான அமைதலோடு அதை மேல்நோக்கிப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். இயேசு, மிகவும் வல்லமை நிறைந்த ஒரு வெற்றி வீரராகப் பயணித்து வருவார்…

பரலோக இன்னிசையின் இசைப்பாடல்களுடன், எண்ணிக்கைக்கு அடங்காத, மிகப்பெரிய ஒரு திரள்கூட்டமான பரிசுத்த தேவதூதர்களும் அவரோடுகூட வருவார்கள். ஆகாயமண்டலம் "ஆயிரமாயிரமான, பதினாயிரம் பதினாயிரமான" பிரகாசமான தேவதூதர்களால் நிரம்பியதுபோலத் தோற்றமளிக்கும். அந்தக் காட்சியை எந்த ஒரு மானிட எழுதுகோலும் வர்ணிக்க முடியாது. எந்த ஒரு மானிட மனமும் அதனுடைய பிரகாசத்தின் தன்மையை போதுமான அளவிற்கு உணர முடியாது…

இராஜாதி ராஜா, எரிகின்ற அக்கினி ஜுவாலையால் சூழப்பட்ட மேகத்தின்மீது இறங்கிவருவார். வானங்கள் புத்தகச்சுருளைப்போல் சுருட்டப்படும்; பூமி அவருக்கு முன்பாக அதிரும்; ஒவ்வொரு மலையும், தீவும் தன்னுடைய இடத்தைவிட்டுப் பெயர்ந்துபோகும்.—GC 640-642 (1911).

### அவரைக் குத்தினவர்களின் எதிர்ச்செயல்

கிறிஸ்துவை மறுதலித்து, அவரது சிலுவை மரணத்தில் மிக முக்கியப் பங்காற்றியவர்கள், அவர் இருக்கின்ற வண்ணமாகவே அவரைத் தரிசிக்கத்தக்கதாக எழும்புவார்கள். கிறிஸ்துவைப் புறக்கணித்தவர்கள், பரிசுத்தவான்கள் மகிமையடைவதைக் காணும்படியாக எழும்புவார்கள். அந்த நேரத்தில் பரிசுத்தவான்கள் ஒரு இமைப் பொழுதிலே மறுரூபமடைந்து, தங்களது கர்த்தரைச் சந்திப்பதற்கு, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அன்று அவர்மீது சிவப்பங்கியை போட்டவர்களும், அவரது சிரசின்மீது முள்முடியை வைத்தவர்களும், அவரது கரங்களிலும் கால்களிலும் ஆணியடித்தவர்களுமாகிய அந்த மனிதர்கள் அவரைப் பார்த்து புலம்புவார்கள்.—9MR 252 (1886).

அவரது அன்பு எப்படியெல்லாம் அலட்சியப்படுத்தப்பட்டது, அவரது மனதுருக்கம் எப்படியெல்லாம் தவறாக உபயோகிக்கப்பட்டது என்பதெல்லாம் அவர்கள் நினைவிற்கு வரும். திருடனும் கொள்ளைக்காரனுமாய் இருந்த பரபாஸ், எப்படி கிறிஸ்துவுக்குப் பதிலாக விடுவிக்கப்படும்படி தெரிந்து

கொள்ளப்பட்டான் என்பதையும், அவர் எப்படி முள்முடி சூட்டப்பட்டு சவுக்கால் அடிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார் என்பதையும், சிலுவையின் மீது அவர் பட்ட வேதனையின் கடுந்துயர மணித்துளிகளில் எப்படி ஆசாரியர்களும் அதிகாரிகளும் "மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும். அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" என்று கடினமாக நிந்தனை செய்தார்கள் என்பதையும் அவர்கள் நினைத்துப் பார்ப்பார்கள். கிறிஸ்துவிற்குக் காட்டப்பட்ட எல்லா அவமரியாதையும் வெறுப்பும், அவரது சீஷர்களுக்கு அளிக்கப்பட்ட எல்லா உபத்திரவமுமாகிய இப்படிப்பட்ட சாத்தானிய செய்கைகள் அன்றைக்குச் செய்யப்பட்டபோது எப்படிப் பசுமையாக நினைவில் இருந்ததோ, அப்படியே மீண்டும் அவர்களது நினைவிற்கு வரும்.

அடிக்கடி அவர்களைப் பரிவோடு கெஞ்சி வருந்தியழைத்த அந்த சத்தம், அவர்களது காதுகளில் மீண்டும் தொனிக்கும். ஜெப ஆலயங்களிலும் தெருக்களிலும் இரட்சகர் பேசின கிருபையான வேண்டுதல்மிக்க ஒவ்வொரு தொனியும், மிகத் துல்லியமாக அவர்களது காதுகளில் எதிரொலிக்கும். அப்போது அவரைக் குத்தினவர்கள் பர்வதங்களையும் மலைகளையும் பார்த்து, தங்கள் மேல் விழுந்து சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்துக்கும் தங்களை மறைத்துக் கொள்ளும்படி கெஞ்சுவார்கள்.—Letter 131, 1900.

### விழித்தெழும்புங்கள், பூமியின் தூளில் நித்திரைபண்ணுகிறவர்களே, எழும்புங்கள்!

ஒரு புத்தகச்சுருளைப்போல மேகங்கள் சுருள ஆரம்பித்தன. அப்போது அங்கே, மனுஷகுமாரனுடைய அடையாளம் தெளிவாகவும் பிரகாசமாகவும் காணப்பட்டது. தேவனுடைய மக்கள் அந்த மேகம் எதைக் குறிக்கின்றது என்பதை அறிந்திருந்தார்கள். இசையின் ஓசை கேட்கப்பட்டது. அது நெருங்கி வந்தபோது, கல்லறைகள் திறக்கப்பட்டு மரித்தவர்கள் எழுப்பப்பட்டனர்.—9MR 251, 252 (1886).

"இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" (யோவான் 5:28,29). இந்தச் சத்தம் எல்லா தேசங்களிலும் அடக்கம்பண்ணப்பட்டிருந்த மரித்தவர்களின் கல்லறைகளில் விரைவாக எதிரொலிக்கவிருந்தது. அப்போது, கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்த ஒவ்வொரு பரிசுத்தவானும் எழுந்திருந்து, கல்லறை என்னும் சிறைக் கூடத்தைவிட்டு வெளியில் வருவான்.—Ms 137, 1897.

ஆதாமிலிருந்து கடைசியாக மரித்த பரிசுத்தவான்வரை, மரித்துப்போன விலையேறப்பெற்றவர்கள் ஒவ்வொருவரும் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்டு, அழியாத ஜீவனுக்கென்று கல்லறைகளிலிருந்து வெளியே வருவர். —DA 606 (1898).

நடுங்கும் பூமி, அடிக்கும் மின்னல், குமுறும் இடி—இவைகளுக்கு மத்தியில், தேவகுமாரனின் குரல் தூங்கிக்கொண்டிருக்கும் பரிசுத்தவான் களை அழைக்கிறது. அவர், நீதிமான்களின் கல்லறைகளை நோக்கிப் பார்த்து, வானத்திற்கு நேராகத் தமது கரங்களை உயர்த்தி, "விழித் தெழும்புங்கள், விழித்தெழும்புங்கள், விழித்தெழும்புங்கள், பூமியின் தூளில் நித்திரைபண்ணுகிறவர்களே விழித்தெழும்புங்கள்!" என்று உரத்த சத்தமிடுவார். பூமியின் நாலாதிசையிலும், நித்திரையிலிருக்கின்ற மரித்த பரிசுத்தவான்கள் அந்தச் சத்தத்தைக் கேட்பார்கள், அந்தச் சத்தத்தைக் கேட்பவர்கள் உயிரோடு எழும்புவார்கள். அனைத்து ஜாதிகள், கோத்திரத்தார், பாஷைக்காரர், ஜனக்கூட்டத்தார் ஆகியோரால் திடீரென்று எழும்பிய மிகப்பெரிய சேனையின் காலடியோசையால், பூமி முழுவதும் ஒலியெழுப்பப்பட்டது. மரணம் என்னும் சிறைக்கூடத்தினின்று, சாவாமை என்னும் மகிமையைத் தரித்தவர்களாக, அவர்கள் வெளியே வந்து: "ஓ மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1 கொரி. 15:55) என்று முழக்கமிடுவார்கள். பின்பு உயிரோடிருக்கிற நீதிமான்களும், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் ஒன்றாக இணைந்து, தங்களது குரலை உயர்த்தி, மகிழ்ச்சியான நீண்ட ஜெயதொனி எழுப்புவார்கள்.—GC 644 (1911).

## குகைகளிலிருந்தும், மறைவுகளிலிருந்தும், பாதாள அறைகளிலிருந்தும்

மலைகளின் அரணிப்பான இடங்களிலும், குகைகளிலும், பூமியின் தாழ்விடங்களிலும், இரட்சகர் தமது பிரசன்னத்தையும் மகிமையையும் வெளிப்படுத்துவார்.

இன்னும் கொஞ்சக்காலந்தான், வருகிறவர் சீக்கிரத்தில் வருவார், தாமதம்பண்ணார். அக்கினிஜுவாலை போன்ற அவரது கண்கள், பாதுகாப்புமிக்க சிறையறைகளையும் ஊடுருவிச்சென்று, அங்கே மறைக்கப் பட்டிருக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும். ஏனெனில், அவர்களது நாமங்கள் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இரட்சகரின் கண்கள் நம்மீது பதிந்திருக்கின்றன, நம்மைச்சுற்றிலும் இருக்கின்றன, ஒவ்வொரு கஷ்டத்தையும் கூர்ந்து கவனிக்கின்றன, ஒவ்வொரு ஆபத்தையும் பகுத்தறிகின்றன; அவரது கண்கள் ஊடுருவக்கூடாத இடமே

இல்லை, கிறிஸ்துவின் அனுதாபம் அவரது ஜனங்களை சென்றடைய முடியாத வருத்தங்களும் கடுந்துன்பங்களும் இல்லை...

இயேசு கிறிஸ்துவின் கெம்பீரத் தோற்றத்தைக் காணும்போது தேவனுடைய பிள்ளை முதலில் மிகவும் பயமடைந்தவான். தேவனுடைய பரிசுத்த பிரசன்னத்தில், தான் ஜீவிக்க முடியாது என்று உணர்கின்றான். ஆனால், யோவானிடம் சொல்லப்பட்ட "பயப்படாதே" என்ற அதே வார்த்தை அவனிடத்திற்கும் வரும். இயேசு தமது வலதுகரத்தை யோவான்மீது வைத்து, தாழ விழுந்துகிடந்த அவனது நிலையிலிருந்து அவனைத் தூக்கினார். அவ்வண்ணமே தம்மை விசுவாசிக்கின்ற உண்மையான பிள்ளைகளுக்கும் அவர் செய்வார்.—TMK 360, 361 (1886).

தேவனுடைய சுதந்தரவாளிகள் இடுக்கமான மேலறைகளிலிருந்தும், அழுக்கடைந்த தொழுவங்களிலிருந்தும், பாதாள அறைகளிலிருந்தும், தூக்குமேடைகளிலிருந்தும், மலைகளிலிருந்தும், வனாந்தரங்களிலிருந்தும், பூமியின் குகைகளிலிருந்தும், கடலுக்குள் உள்ள பொந்துகளிலிருந்தும் வந்திருப்பார்கள்.—GC 650 (1911).

### சமுத்திர ஆழங்களிலிருந்தும், சுரங்கங்களிலிருந்தும், மலைகளிலிருந்தும்

தமக்கு உண்மையாயிருந்தவர்களைத் தம்மோடு சேர்த்துக் கொள்ள கிறிஸ்து வரும்போது, கடைசி எக்காளம் தொனிக்கும். மிக உயர்ந்த மலைகளின் உச்சியிலிருந்து, பூமியின் மிக ஆழமான சுரங்கங்களின் மிகத்தாழ்வான இடங்கள்வரையுள்ள, பூமி முழுவதும் அந்தச் சத்தத்தைக் கேட்கும். மரித்த நீதிமான்கள் அந்தக் கடைசி எக்காள சத்தத்தைக் கேட்டு, அழியாமையைத் தரித்துக்கொண்டு தங்கள் கர்த்தரைச் சந்திக்கும்படியாக, தங்கள் கல்லறைகளிலிருந்து எழும்பி வருவார்கள்.—7BC 909 (1904).

பூமியின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், மலையடியிலுள்ள பெரிய குகைகளிலிருந்தும், பாதாளஅறைகளிலிருந்தும், பூமியின் குகைகளிலிருந்தும், தண்ணீர்களின் ஆழத்திலிருந்தும் வரப்போகின்ற நீதிமான்களின் உயிர்த்தெழு தலைக்குறித்து நான் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கின்றேன். ஒருவர்கூட கவனிக்கப்படாதபடி விட்டுவிடப்படமாட்டார்கள். ஒவ்வொருவரும் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள். அவர்கள் மகிழ்ச்சியில் திளைத்தவர்களாயும் ஜெயங்கொண்டவர்களாயும் எழும்பிவருவார்கள்.—Letter 113, 1886.

ஜீவனை அளிப்பவராகிய கிறிஸ்து, மரித்தோரை அழைக்கும்போது (சுவிட்சர்லாந்திலுள்ள) இந்த மலைகளும், குன்றுகளும், அவர்களை வெளிக்கொண்டுவந்து காட்டும் ஒரு காட்சி எப்படிப்பட்டதாக இருக்கும்!

அவர்களது சரீரங்கள் புதைக்கப்பட்டிருந்த பெரும் குகைகளிலிருந்தும், பாதாள அறைகளிலிருந்தும், ஆழமான கிணறுகளிலிருந்தும் அவர்கள் வருவார்கள்.—Letter 97, 1886.

**துன்மார்க்கர் கொலைசெய்யப்படுவர்**

தங்களது சொந்த மூர்க்கமான உணர்ச்சிகளின் வெறித்தனமான சண்டையினாலும், தேவனுடைய கலப்பில்லாத உக்கிரகோபம் பயங்கரமாக ஊற்றப்படுவதாலும்—ஆசாரியர்களும், அதிகாரிகளும், மக்களில் உயர்ந்தோரும், தாழ்ந்தோரும், ஐசுவரியவான்களும், ஏழைகளும் ஆகிய துன்மார்க்கமான பூமியின் குடிகள் அனைவரும் ஏகமாய் மடிகிறார்கள். "அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள். அவர்கள் புலம்பப்படாமலும், சேர்க்கப்படாமலும், அடக்கம்பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்"—எரே. 25:33.

கிறிஸ்து வரும்போது, துன்மார்க்கர் பூமியின்மீதெங்கும் இராதபடிக்கு நிர்மூலமாவார்கள். அவரது நாசியின் சுவாசத்தினாலே சுட்டெரிக்கப்பட்டு, அவரது மகிமைப்பிரகாசத்தினாலே அழிந்து போவார்கள். கிறிஸ்து தமது ஜனங்களை தேவனுடைய நகரத்திற்குக் கொண்டுசெல்வார். அதன்பின்பு பூமியானது அதனுடைய குடிகளின்றி வெறுமையாயிருக்கும்.—GC 657 (1911).

பாவம் எங்கு காணப்பட்டாலும் அங்கு "நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய்" (எபி. 12:29) இருக்கிறார். அவரது வல்லமைக்கு ஒப்புக்கொடுக்கின்ற அனைவரிடமும் உள்ள பாவங்களை தேவஆவியானவர் சுட்டெரிப்பார். ஆனால் மனிதர்கள் பாவத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டிருப்பார்களானால், அதனுடன் அடையாளமிடப்பட்டவர்களாக இருப்பார்கள். அதன்பின்பு பாவத்தை அழிக்கின்ற தேவனுடைய மகிமை அவர்களையும் அழித்துவிடும்.—DA 107 (1898).

நீதிமான்களுக்கு ஜீவனாயிருக்கும் தேவனுடைய முகத்தின் மகிமை, துன்மார்க்கருக்குப் பட்சிக்கும் அக்கினியாக இருக்கும்.—DA 600 (1898).

**துன்மார்க்கர் அழிக்கப்படுதல்—இரக்கத்தின் ஒரு செயலே**

தேவனையும் அவரது சத்தியத்தையும் பரிசுத்தத்தையும் விரும்பாத, வெறுப்பினால் நிரப்பப்பட்டிருக்கும் இருதயங்கள், பரலோகக் கூட்டத்தோடு ஒன்றிணைந்து அவர்களது துதியின் பாடல்களைப் பாட முடியுமா? அவர்களால் தேவனுடைய மகிமையையும், ஆட்டுக்குட்டியானவருடைய

மகிமையையும் தாங்கிக்கொள்ள முடியுமா? இல்லை, இல்லவே இல்லை; பரலோகத்திற்கேற்ற குணங்களை உருவாக்கும்படி வருடக்கணக்கில் கிருபையின் காலம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; ஆனால் தூய்மையை நேசிக்கும்படி அவர்கள் தங்கள் மனதை ஒருபோதும் பயிற்றுவிக்கவில்லை; பரலோகத்தின் மொழியை அவர்கள் ஒருபோதும் கற்றுக்கொள்ளவில்லை. இப்பொழுதோ அது மிகவும் தாமதமாகிவிட்டது. தேவனுக்கு விரோதமான கலகத்தின் வாழ்க்கை அவர்களைப் பரலோகத் திற்குத் தகுதியற்றவர்களாக்கிவிட்டது. அதனுடைய தூய்மையும் பரிசுத்த மும், சமாதானமும் அவர்களுக்குக் கடும் சித்திரவதையாகவே இருக்கும். தேவனுடைய மகிமை அவர்களுக்குப் பட்சிக்கின்ற அக்கினியாக இருக்கும். ஆதலால் அந்தப் பரிசுத்தமான இடத்திலிருந்து ஓடிவிடும்படியாக அவர்கள் ஏங்குவார்கள். அவர்களை மீட்பதற்காக மரித்தவரின் முகத்தினின்று தங்களை மறைத்துக்கொள்ளும்படியாக அவர்கள் அழிவை விரும்புவார்கள். துன்மார்க்கருடைய நித்தியம் அவர்களது சொந்தத் தெரிந்துகொள்ளு தலினால் முடிவுசெய்யப்பட்டது. பரலோகத்திலிருந்து வெளியேற்றப்படுவது அவர்கள் தாங்களாகவே விரும்பிப் பெற்றுக்கொண்டதும், தேவனுடைய சார்பில் நீதியும் கிருபையும் நிறைந்த செயலாக இருக்கும்.—GC 542, 543 (1911).

### வீட்டை நோக்கிச் செல்பவர்கள்

உயிரோடிருக்கின்ற நீதிமான்கள், “ஒரு நொடியிலே, ஒரு இமைப் பொழுதிலே” மறுரூபமடைவார்கள். தேவனுடைய குரலைக் கேட்டதும் அவர்கள் மகிமையடைந்தார்கள். இப்பொழுது அழியாமையையும் தரித்தவர்களாக, உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடுகூட ஆகாயத்தில் ஆண்டவரைச்சந்திப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். தூதர்கள், “அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலுதிசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்க்கிறார்கள்.” சிறு குழந்தைகள் பரிசுத்த தூதர்களால் சுமந்துவரப்பட்டு, அவர்களது தாய்மார்களின் கரங்களிலே ஒப்படைக்கப்படுகிறார்கள். மரணத்தினால் நெடுநாட்களாகப் பிரிக்கப்பட்டிருந்த நண்பர்கள், இனி ஒருபோதும் பிரியக் கூடாதபடிக்குச் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களுடைய மகிழ்ச்சியின் பாடல் களோடு அனைவரும் சேர்ந்து மேலெழும்பி, தேவனுடைய பட்டணத்தை நோக்கிச் செல்லுகிறார்கள்.—GC 645 (1911).

நாங்கள் அனைவரும் ஒன்றாக மேகத்திற்குள் பிரவேசித்து, ஏழு நாட்களாகக் கண்ணாடிக் கடலை நோக்கிப் பிரயாணித்தோம்.—EW 16 (1851).

அந்த இரதம் மேல்நோக்கி எழும்பினபோது, சக்கரங்கள், “பரிசுத்தர்” என்று சத்தமிட்டன. செட்டைகள் அசைந்தபோது, “பரிசுத்தர்” என்று சத்தமிட்டன. மேகத்தைச் சூழ்ந்திருந்த பரிசுத்த தூதர்களின் பரிவாரமும், “சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்!” என்று முழங்கினர். மேகத்திலிருந்த பரிசுத்தவான்களும், “மகிமை, அல்லேலூயா!” என்று ஆர்ப்பரித்தனர்.—EW 35 (1851).

ஆ! அவரைத் தரிசிப்பதும், தேவனுடைய மீட்கப்பட்டவர்களாக அவரால் வரவேற்கப்படுவதும், எத்தனை மகிமையுள்ளதாயிருக்கும்! நீண்டகாலமாக நாம் காத்திருந்துவிட்டோம். ஆயினும், நமது நம்பிக்கை மங்கிப்போய்விடக்கூடாது. இராஜாவை அவரது மகிமையிலே காண்போமானால், நாம் நித்தியத்திற்கும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்போம். “வீட்டை நோக்கிச் செல்கிறோம்!” என்று உரத்த சத்தமாய் சொல்லி மகிழவேண்டும் என்பதுபோல நான் உணருகின்றேன்.—8T 253 (1904).

## கிறிஸ்து வென்றுவிட்டார் என்று தேவ தூதர்கள் பாடுவர்

அந்நாளிலே மீட்கப்பட்டவர்கள் பிதாவின் மகிமையிலும், குமாரனின் மகிமையிலும் ஜொலிப்பார்கள். தேவதூதர்கள் தங்களது பொற்சுரமண்டலங்களை மீட்டி, இராஜாவையும், அவரது வெற்றிச் சின்னங்களாகிய—ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து வெளுத்தவர்களையும் வரவேற்பார்கள். வெற்றி முழக்கத்தின் ஒரு ஆரவாரம் பரலோகம் முழுவதையும் நிரப்பும். கிறிஸ்து வெற்றிச் சிறந்தார். அவரது பாடுகளும் தியாகமும் வீணாகவில்லை என்பதற்குச் சாட்சிகளாயிருக்கின்ற, தம்மால் மீட்கப்பட்டவர்களோடுங்கூட, அவர் பரலோக மன்றங்களுக்குள் பிரவேசிப்பார்.—9T 285, 286 (1909).

விவரிக்க முடியாத அன்புடன் இயேசு தமது விசுவாசமுள்ள பிள்ளைகளை, அவர்களது கர்த்தரின் சந்தோஷத்திற்குள் வரவேற்பார். தமது வியாகுலத்தாலும் அவமானத்தாலும் இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களை, மகிமையின் ராஜ்யத்தில் காண்பதே இரட்சகருடைய சந்தோஷமாயிருக்கும்.—GC 647 (1911).

கிறிஸ்து தமது கிரியையின் விளைவுகளில் அதன் பலனைக் காண்பார். எந்த மனிதனாலும் எண்ணக்கூடாத அந்த பெருந்திரளான கூட்டத்தை, அவர் “தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடு மாசற்றவர்களாய்” (யூதா 1:24) நிறுத்துவார். யாருடைய இரத்தத்தால் மீட்கப்பட்டோமோ, யாருடைய ஜீவியம் கற்றுக்கொடுத்ததோ

அவர், “தமது ஆத்தும வருத்தத்தின் பலனாகக் கண்டு திருப்தியாவார்”– ஏசாயா 53:11.—Ed 309 (1903).

## பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்படும் கிரீடங்களும் சுரமண்டலங்களும்

ஒரு மாபெரும் திரள்கூட்டமான தூதர்கள் மகிமையுள்ள கிரீடங்களை நகரத்திலிருந்து எடுத்துவருவதை நான் கண்டேன்—ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் ஒரு கிரீடம் உண்டு. அதிலே அவனுடைய பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். இயேசு கிரீடங்களைக் கேட்டபோது, தூதர்கள் அவைகளை அவரிடத்தில் கொண்டுவந்து கொடுத்தார்கள். இனிமையான இயேசு, தமது சொந்த வலது கரத்தினால் அவைகளை எடுத்து பரிசுத்தவான்களுடைய தலைகளிலே சூடினார்.—EW 288 (1858).

கண்ணாடிக் கடலிலே 1,44,000 பேரும் பூரண சதுரவடிவில் நின்றார்கள். அவர்களில் சிலர் மிகவும் பிரகாசமான கிரீடங்களைப் பெற்றிருந்தனர். மற்றவர்களது கிரீடங்கள் அவ்வளவாகப் பிரகாசிக்கவில்லை. சில கிரீடங்களில் ஏராளமான நட்சத்திரங்களும், சிலவற்றில் வெகுசில நட்சத்திரங்களுமே பதிக்கப்பட்டிருந்தன. ஆனால் அனைவரும் தங்கள் கிரீடங்களைக்குறித்து மனநிறைவுடன் இருந்தார்கள்.—EW 16, 17 (1851).

ஜீவ கிரீடம் நமது சொந்தக் கிரியைகளுக்கு ஏற்றவாறு, பிரகாச மாகவோ அல்லது மங்கலாகவோ; அநேக நட்சத்திரங்களுடன் ஜொலிக்கக் கூடியதாகவோ அல்லது ஒரு சில விலையுயர்ந்த கற்களால் ஒளி வீசக்கூடியதாகவோ இருக்கும்.—6BC 1105 (1895).

நட்சத்திரமில்லாத ஒரு கிரீடத்தோடு ஒருவரும் பரலோகத்தில் இரட்சிக்கப்பட்டிருக்கமாட்டார்கள். பரலோகத்தில் நீ நுழையும்போது, உன்னுடைய தூண்டுதலின்மூலமாக அங்கே வருவதற்கான நுழைவுரி மையைப் பெற்றிருக்கும் சில ஆத்துமாக்கள், அந்த மகிமையின் மன்றங்களில் இருப்பார்கள்.—ST June 6, 1892.

தேவனுடைய நகரத்திற்குள் நுழையும் முன்னதாக, இரட்சகர் தம்மைப் பின்பற்றினவர்களுக்கு வெற்றிச் சின்னங்களைக் கொடுத்து, இராஜரீகக் குடும்பத்தினர் என்ற அவர்களது தகுதிநிலைக்கான அதிகார விருதுகளை அளிக்கிறார். சுடர்விட்டுப் பிரகாசிக்கும் இந்தக் கூட்டம் தங்களது இராஜாவைச் சுற்றிலும் நடுவில் காலியிடமுள்ள சதுர வடிவில் வரிசையாக அணிவகுத்து நின்றது… பாவத்தின்மீது ஜெயங்கொண்ட அனைவரது தலைகள்மேலும், இயேசு தமது சொந்த வலதுகரத்தால் மகிமையின் கிரீடத்தை வைக்கிறார்… அவர்கள் ஒவ்வொருவருடைய கரத்திலும்

வெற்றிவீரருக்கான குருத்தோலையும், மின்னுகின்ற சுரமண்டலமும் கொடுக்கப்படுகின்றன. அப்பொழுது முன்னிலைவகிக்கும் தேவதூதர்கள் தங்களது சுரமண்டலத்தை வாசிக்கத் துவங்க, அவர்களோடு சேர்ந்து மற்ற அனைவரும் தங்களது சுரமண்டலத்தை மிகத்திறமையாக வாசிக்க, கேட்பதற்கு இனிமையான சிறந்த இசையாக அது ஓங்கி எழும்புகிறது… கிரயம் கொடுத்து மீட்கப்பட்ட அந்தக் கூட்டத்தாருக்கு முன்பாகப் பரிசுத்த நகரம் இப்பொழுது இருக்கிறது. இயேசு முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட அந்தக் கதவுகளைப் பெரிதாகத் திறக்க, சத்தியத்தைக் கைக்கொண்ட ஜாதிகள் பிரவேசிக்கிறார்கள்.—GC 645, 646 (1911). ★

[1] கிறிஸ்துவின் வருகைக்கு சற்று முன்னான காலகட்டத்தின்போது தேவனுடைய சத்தம் திரும்பத் திரும்ப கேட்கப்பட்டது. பார்க்கவும் : Great Controversy, pp. 632, 633, 636, 638, 640, 641.

## 20

# பரிசுத்தவான்களின்[1] சுதந்தரவீதம்

### கர்த்தரிடமிருந்து ஒரு அன்பளிப்பு

கிறிஸ்துவும் கிறிஸ்துவினுடைய நீதியும் மாத்திரமே, பரலோகத்திற்குப் போவதற்கான நுழைவுரிமையை நமக்குப் பெற்றுத்தரும்.—Letter 6b, 1890.

அகந்தைமிக்க இருதயம் இரட்சிப்பைச் சம்பாதிக்க முயலுகின்றது. ஆனால் பரலோகத்திற்கான நமது பட்டமும், அதற்கான நமது தகுதியும் கிறிஸ்துவினுடைய நீதியில் காணப்படுகின்றது.—DA 300 (1898).

நாம் பரலோகக் குடும்பத்தின் அங்கத்தினராக மாறும்படியாக, அவர் பூலோகக் குடும்பத்தின் ஒரு அங்கத்தினரானார்.—DA 638 (1898).

பூமியின்மேலுள்ள பெருமைமிகு மாளிகைக்குரியவர் என்று பெயர் பெற்றிருப்பதைவிட, கர்த்தர் ஆயத்தஞ்செய்யச் சென்றிருக்கிற வாசஸ்தலங்களுக்குரிய உரிமையைப் பெற்றிருப்பதே மேன்மையாக இருக்கும். உலகத்தின் புகழ்ச்சியான வார்த்தைகள் அனைத்தையும் காட்டிலும், "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கின்ற இராஜ்ஜியத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்ற அவரது உண்மையான ஊழியக்காரர்களுக்கான இரட்சகரின் வார்த்தைகள் மேன்மையானதாய் இருக்கும்.—COL 374 (1900).

### எதிர்கால உலகைப்பற்றி நாம் ஏன் சிந்திக்க வேண்டும்

நித்தியம் நம்முடைய நினைவிலிருந்து ஒருபோதும் விலகாதபடிக்கு, இயேசு பரலோகத்தை நம் பார்வைக்குக் கொண்டுவந்து, அதனுடைய மகிமையை நம் கண்களுக்கு முன்பாக வைக்கிறார்.—ST April 4, 1895.

நித்திய உண்மைகளைக் கருத்திற்கொள்வோமானால், நாம் தேவனுடைய பிரசன்னத்தைக்குறித்த சிந்தனைகளை இயற்கையாகவே வளர்த்துக்கொள்வோம். நமக்குள் வரப் பிரயாசப்படும் சத்துருவுக்கு எதிராக இது நமக்கு ஒரு கேடகமாயிருக்கும்; அது நமக்கு பலத்தையும் நிச்சயத்தையும் கொடுத்து, பயத்திற்கு மேலாக நம்முடைய ஆத்துமாவை

உயர்த்தும். பரலோகச் காற்றைச் சுவாசிப்போமானால், நாம் இவ்வுலகின் நோய்க்காற்றைச் சுவாசிக்க மாட்டோம்…

பரலோகத்தின் ஈர்க்கக்கூடிய காரியங்கள் நமது சிந்தைக்கு மிகவும் பழக்கமானதாக மாறும்படி, பரலோகத்தின் அழகிய கற்பனையையும் நற்பயன்களையும் நமக்கு அருளவும், நமது நினைவு என்னும் அறையில் நித்திய அழகுள்ள தெய்வீகச் சித்திரங்கள் தொங்கவிடப்படவும் இயேசு வருகின்றார்…

இனிவரும் உலகினைப்பற்றிய ஒரு கண்ணோட்டத்தை மாபெரும் ஆசிரியர் மனிதனுக்கு அளிக்கிறார். அதன் கவர்ச்சிகரமான உடைமைகளுடன், அவ்வுலகினையே அவன் கண்முன் கொண்டு வருகிறார்… இவ்வலகின் நிலையற்ற பொருட்களுடன் ஒப்பீடுசெய்து, எதிர்கால வாழ்வு மற்றும் அதன் ஆசீர்வாதத் தன்மையின்மீது மனதை அவர் நிலைத்திருக்கச் செய்வாரானால், இருதயம், ஆத்துமா மற்றும் முழு சரீரத்தையும் ஈர்க்கக்கூடிய அளவில், தெளிவான வேறுபாடு மனதின்மீது ஆழ்ந்த பதிப்பை உண்டாக்கும்.—OHC 285, 286 (1890).

### கிறிஸ்தவனுடைய நோக்கங்கள்

பலமிக்க நோக்கத்திட்டங்களும், மிகவும் வலிமைமிக்க ஏதுகரங்களும், சரியானவற்றைச் செய்வதற்கான மேலான பலன்களையும், பரலோகத்தின் மனமகிழ்ச்சியையும், தூதர்களின் சமுதாயத்தையும், தேவனோடும் அவரது குமாரனோடும் உள்ள அன்பையும் ஐக்கியத்தையும், நித்திய யுகங்கள் முழுவதுமாக நமது அனைத்து வல்லமைகளின் மேம்பாட்டையும் விரிவாக்கத்தையும்—ஒருபோதும் செயல்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது; இவைகளெல்லாம் நமது இருதயத்தின் அன்பான சேவையை, நமது சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய அன்பான ஆண்டவருக்கு கொடுப்பதற்கு, வல்லமையான தூண்டுதல்களும் ஊக்கமளிக்கும் செயல்களுமாக இல்லையா?—SC 21, 22 (1892).

கிறிஸ்துவை சமாதானத்தோடு நாம் சந்திக்கவும், இரட்சிக்கப்பட்டிருக்கவும், நித்தியத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருக்கவும் கூடுமானால், எல்லாரிலும் நாமே மிகவும் மகிழ்ச்சியான ஜீவிகளாயிருப்போம். ஓ! துன்மார்க்கரின் தொல்லை யிலிருந்து ஓய்ந்து, களைத்துப்போனவர்கள் கடைசியாக வீடு போய்சேர்ந்து இளைப்பாறுவது எவ்வளவு நன்றாயிருக்கும்!—Letter 113, 1886.

இந்த உலகத்தில், இயற்கையில் அழகாகக் காணப்படுகின்ற அனைத்தையும் நான் பார்க்க விரும்புகின்றேன். ஒருவேளை பாவத்தின்

சாபத்தால் இந்த பூமி கெடுக்கப்படாமல் இருந்திருக்குமானால், தேவனுடைய நன்மையான அத்தனை காரியங்களுடன் சூழப்பட்டவனாக, இந்த உலகிலேயே நான் பூரண திருப்தி அடைந்திருந்திருப்பேன் என்று நினைக்கின்றேன். ஆனால் நாம் புதிய வானங் களையும், ஒரு புதிய பூமியையும் பெற்றுக்கொள்வோம். இதனை யோவான் தனது பரிசுத்த தரிசனத்தில், "மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது, இதோ மனுஷ ர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" (வெளி. 21:3). என்று கூறுகின்றார். ஆ! என்ன ஆசீர்வாதமான நம்பிக்கை! என்ன மகிமையான எதிர்பார்ப்பு!—Letter 62, 1886.

## உண்மையான,
## தொட்டு உணரத்தக்கதான ஓர் இடம்

அவர்கள்சார்பாக மன்றாடுவதற்கு, பரலோகத்தில் அவர்களுக்கென்று ஒரு நண்பர் இருந்திருக்கிறார் என்பதை சீடர்கள் அறியும் போது, அவர்கள் மகிழ்ச்சிக்கு அது எப்படிப்பட்ட ஒரு மூலகாரணமாய் இருக்கும்! தங்கள் கண்களுக்கு முன்பாகக் கிறிஸ்து பரமேறிச்சென்ற காரியத்தின்மூலமாக, பரலோகத்தைக்குறித்து அவர்கள் கொண்டிருந்த பார்வையும் எண்ணமும் மாற்றப்பட்டன. இதற்கு முன்பாக, பரலோகம் என்பது எல்லையற்ற பரந்துகிடக்கின்ற ஒரு வெற்றிடம் என்றும், அங்கே சரீரமில்லாத ஆவிகள்தான் வாசமாயிருக்கின்றன என்றும் எண்ணியிருந்தனர். ஆனால் இப்பொழுதோ தாங்கள் நேசித்தவரும், எல்லாருக்கும் மேலாக கனம்பண்ணப்பட்டவரும், தாங்கள் பேசிக்களித்தவரும், உடன் பிரயாணம் சென்றவரும், அதிலும் உயிர்த்தெழுந்த சரீரத்தோடு தங்களை நடத்தினவருமான, இயேசுவைப் பற்றின சிந்தையோடு பரலோகம் இணைக்கப்பட்டிருந்தது.

அதன்பின்பு, ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியாத, நிச்சயமில்லாத, தொட்டு அறியமுடியாத ஆவிகளால் நிறைந்த இடமாக பரலோகம் அவர்களுக்குத் தோன்றவில்லை. தங்களது அன்பான மீட்பரால் தங்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிற வாசஸ்தலங்களை, தங்களது எதிர்கால வீடாகவே அவர்கள் இப்பொழுது பார்க்க ஆரம்பித்தார்கள்.—3SP 262 (1878).

எதிர்கால சுதந்தரத்தை (பரலோகத்தை) அடைவதைக்குறித்த ஒரு பயம் அநேகரிடத்தில் காணப்படுகிறது. அது சத்தியங்களை மிதமிஞ்சின விதத்தில் எண்ணச்செய்து, அந்த சுதந்தரத்தை அடைவது கூடாதகாரியம் என்பதுபோல் நினைக்க அவர்களை வழிநடத்துகிறது. மாறாக, சத்தியங்களோ

பரலோகத்தை நமது இல்லமாகக் காண்பதற்கு நம்மை நடத்துகிறது. பிதாவின் வீட்டிலே சீஷர்களுக்காக வாசஸ்தலங்களை ஆயத்தஞ்செய்ய தாம் செல்வதாக, கிறிஸ்து அவர்களுக்கு உறுதிகூறினார்.—GC 674, 675 (1911).

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஆதியில் மகிழ்ச்சியைக் கொடுத்த அந்த வேலைகளிலும் இன்பங்களிலுந்தான், புதிய பூமியில் மீட்கப்பட்டவர்கள் ஈடுபட்டிருப்பார்கள். தோட்டத்திலும் வயல்வெளியிலுமாயிருந்த ஏதேனின் வாழ்க்கையை மீண்டும் வாழ்வார்கள்.—PK 730, 731 (c. 1914).

### விவரிக்க முடியாத மகிமை

இயேசுவின் மிகையான அழகையும் மகிமையையும் நான் கண்டேன். நடுப்பகலின் சூரியப் பிரகாசத்தைக்காட்டிலும் அவருடைய முகத்தோற்றம் பிரகாசமாயிருந்தது. அவருடைய வஸ்திரம் வெண்மையிலும் வெண்மையான வெண்ணிறமாயிருந்தது. பரலோத்தின் மகிமைகளையும், பத்து நரம்புகள்கொண்ட தங்களது இசைக்கருவியை மீட்டிப் பாடுகின்ற அழகான தூதர்களையும்... பற்றி நான் உங்களுக்கு எப்படி விவரித்துக் கூறுவேன்!—Letter 3, 1851.

அங்கு நான் பார்த்த அற்புதமான காரியங்களை என்னால் விவரித்துச் சொல்ல இயலாது. ஆ! பரலோகக் கானானின் மொழியைப் பேச நான் அறிந்திருந்தேனானால், அப்பொழுது மேலான அவ்வுலகத்தின் மகிமையைக் குறித்து, ஒரு சிறிதளவு நான் சொல்ல இயலும்.—EW 19 (1851).

பரலோகத்தைக்குறித்த ஒரு விளக்கத்தைக் கொடுக்க முயல்வதற்கு, மொழி முற்றிலும் மிக அற்பமானதாக இருக்கின்றது. அக்காட்சிகள் என்முன்பாக எழும்பும்போது, நான் ஆச்சரியத்தில் மூழ்கிவிடுகின்றேன். மிகச்சிறந்த அதன் பிரகாசத்துடனும், மிக உன்னத மகிமையுடனும் நான் கொண்டுசெல்லப்படும்போது, என் எழுது கோலை கீழே வைத்துவிட்டு, “ஆ! என்ன அன்பு! என்ன ஆச்சரியமான அன்பு!” என்று வியந்து கூறுகின்றேன். மிகவும் சிறப்புவாய்ந்த மொழிகூட, பரலோகத்தின் மகிமையை அல்லது இரட்சகருடைய ஒப்பிடமுடியாத ஒரு அன்பின் ஆழத்தை விவரிப்பதில் தோற்றுப் போகின்றது.—EW 289 (1858).

நீதிமான்களின் பலனைக்குறித்து விவரிப்பதற்கு மானிட மொழி போதாது. அதை நோக்கிப் பார்க்கிறவர்களுக்கு மாத்திரமே, அதன் மேன்மை புலப்படும். தேவனுடைய பரலோக மகிமையை எல்லைக்குட்பட்ட எந்த மனமும் முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியாது.—GC 675 (1911).

பரலோகப் பட்டணத்தின் மகிமையை ஒரே ஒரு முறை நாம் பார்த்திருந்தோமானால், மீண்டுமாக இந்த பூமியில் வசிக்க ஒருபோதும் நாம் விரும்பமாட்டோம்.—ST April 8, 1889.

## ஓடைகள், மலைகள் மற்றும் மரங்கள்

அந்தப் பட்டணத்திலே நாங்கள், ஜீவவிருட்சத்தையும் தேவனுடைய சிங்காசனத்தையும் கண்டோம். அந்தச் சிங்காசனத்திலிருந்து சுத்தமான தண்ணீருள்ள ஒரு நதி புறப்பட்டு வந்தது. அந்நதியின் இரு கரைகளிலும் ஜீவவிருட்சம் காணப்பட்டது. நதியின் இரு கரைகளிலும் உள்ள ஜீவவிருட்சத்தின் அடிமரம், பளிங்குபோன்ற சுத்தப் பொன்னால் ஆகியிருந்தது. முதலில் நான் இரு மரங்களைக் கண்டதாக நினைத்தேன். மீண்டுமாக நான் பார்த்தபோது, இரு மரங்களும் மேலே ஒரே மரமாக இணைந்திருப்பதைக் கண்டேன். எனவே இதுவே, ஜீவநதியின் இரு கரைகளிலும் வளர்ந்திருக்கும் ஜீவவிருட்சமாகும். அதன் கிளைகள், நாங்கள் நின்றிருந்த இடம்வரை வளைந்து பரவியிருந்தன. அதன் கனி, பொன்னும் வெள்ளியும் கலந்து உருக்கிவிட்ட வண்ணத்தில் உள்ளதைப்போல, மிகவும் மகிமையாகக் காணப்பட்டது.—EW 17 (1851).

பளிங்கைப்போன்ற வற்றாத தெளிந்த நீரோடைகள் அங்கே இருந்தன. அதன் கரைகளில் அசைந்தாடும் மரங்கள் கர்த்தரால் மீட்கப்பட்டோர் நடந்துசெல்லும் பாதைகளில் தங்களது நிழலைப் பரப்பின. அங்கே பரந்துவிரிந்திருந்த சமவெளிகள் அழகான குன்றுகளாக எழும்பி நின்றன. அவை, உயரிய கொடுமுடிகளோடுகூடிய தேவ பர்வதங்களாக அமைந்திருந்தன. அந்த ஜீவ ஊற்றுகளண்டையில், அமைதியான சமவெளிகளில், இதுவரையில் அந்நியரும் பரதேசிகளுமாயிருந்த தேவனுடைய ஜனங்கள், தாங்கள் தங்கித் தாபரிக்கும் ஒரு வீட்டைக் கண்டடைவார்கள்.—GC 675 (1911).

## பூக்கள், பழங்கள் மற்றும் மிருகங்கள்

அனைத்துவிதமான பூக்களால் நிறைந்த மற்றொரு வயல்வெளியை நான் கண்டேன். அப்பூக்களை நான் பறித்தபோது, "இவைகள் ஒருக்காலும் வாடிப்போவதில்லை" என்று சத்தமிட்டேன். பின்னர் காண்பதற்கு மிகவும் பேரழகாயிருந்த, நீண்டபுல் நிறைந்த ஒரு வயல்வெளியைக் கண்டேன். அது, பசுமையான பச்சை நிறமுள்ளதாக இருந்தது. இயேசு ராஜாவின் மகிமைக்கு அந்த பச்சைப் புற்கள் பெருமிதத்துடன் அசைந்தாடும்போது, அது பொன்னையும் வெள்ளியையும் பிரதிபலிப்பைப்போன்று காணப்பட்டது. பின்பு, எல்லாவிதமான மிருகங்களும் நிறைந்த, ஒரு வயல் வெளிக்குள்ளாக

நாங்கள் நுழைந்தோம். அதிலே சிங்கம், ஆட்டுக்குட்டி, சிறுத்தை, ஓநாய் போன்ற அனைத்து மிருகங்களும் ஒருமித்து சமாதானமாக இருந்தன. அவைகளின் நடுவாக நாங்கள் கடந்து சென்றபோது, அவைகள் அமைதியாய் எங்களைப் பின்தொடர்ந்து வந்தன.

பின்னர் நாங்கள் ஒரு காட்டினுள் நுழைந்தோம். அவை, இங்கே நாம் பார்க்கும் இருண்ட காடுகளைப்போல் இல்லை; இல்லவே இல்லை; மாறாக, வெளிச்சமாகவும், எங்கும் பேரழகாகவும் காணப்பட்டன. அங்கிருந்த மரங்களின் கிளைகள் அங்குமிங்கும் காற்றில் ஆடியசைந்தன. “இந்த வனாந்தரத்தில் பாதுகாப்பாகத் தங்கி, இந்தக் காடுகளில் நித்திரைசெய்வோம்” என்று நாங்கள் அனைவரும் உரத்த சத்தமிட்டோம். சீயோன் மலைக்குப் போகும் வழியில் இந்தக் காடுகளைக் கடந்துசென்றோம்.

அந்த மலையின்மீது மகிமையான ஒரு ஆலயம் இருந்தது… அங்கே ஆலயத்தைச் சுற்றிலும் அந்த இடத்தை அலங்கரிப்பதற்காக வேலிச்செடிகள், தேவதாரு மரங்கள், ஊசியிலை மரங்கள், எண்ணெய் மரங்கள், நறுமண மலர்ச்செடிகள், மாதுளை மரங்கள் போன்ற அனைத்துவிதமான மரங்களும் இருந்தன. அத்திமரம் தன் காலத்திற்கேற்ற பலனைத்தரும் அதன் கனிகளின் பளுவினால் கீழ்நோக்கி தாழ்ந்திருந்தது. இந்த மரங்கள் அந்த இடத்தை மகிமையால் நிறையச்செய்திருந்தன…

அங்கு சுத்த வெள்ளியாலான ஒரு மேசையை நான் கண்டேன்; அது அநேக மைல்கள் நீண்டதாயிருந்தபோதும், எங்கள் கண்களால் அதன் கடைசி முனைவரைக் காண முடிந்தது. ஜீவவிருட்சத்தின் கனி, மன்னா, வாதுமைகள், அத்திப்பழங்கள், மாதுளைப்பழங்கள், திராட்சைப்பழங்கள் மற்றும் அநேகக் கனி வகைகளையும் நான் கண்டேன். நான் அந்தக் கனியை உண்பதற்கு என்னை அனுமதிக்குமாறு இயேசுவிடம் கேட்டேன். —EW 18, 19 (1851).

### நித்திய இளமையின் ஆற்றல்

கல்லறையிலிருந்து வெளியே வந்த அனைவரும், கல்லறை களுக்குள் சேர்ந்தபோது இருந்த அதே வளர்த்தியிலேயே இப்பொழுதும் இருந்தார்கள். உயிர்த்தெழுந்தவர்களின் கூட்டத்தின் மத்தியில் நின்ற ஆதாம், மற்ற அனைவரைக்காட்டிலும் அதிக உயரமாகவும், கெம்பீரத் தோற்றத்துடனும், அதே நேரம் தேவ குமாரனைக் காட்டிலும் உயரத்தில் சற்றுக் குறைவாகவும் காணப்பட்டான். அவனுடைய உயரமும், கெம்பீரமான தோற்றமும், அவனுக்குப் பின்பாக வந்த சந்ததியாருடையதிலிருந்து மிகவும் மாறுபட்டதாய் இருந்தது. இந்த ஒரு காரியத்திலிருந்து, மனித இனம்

பாவத்தின் காரணமாக எவ்வளவு பலங்குன்றிப் போய்விட்டிருந்தது என்று காட்டப்படுகின்றது. என்றபோதும், நித்திய இளமையின் ஆற்றலோடும், புதுமலர்ச்சியோடும் அனைவரும் உயிர்த்தெழுந்தனர்... வெகுகாலமாக இழந்துபோயிருந்த ஏதேன் தோட்டத்தின் ஜீவவிருட்சத்தை மீண்டும் கிடைக்கப்பெற்று, மானிட இனத்தின் தொடக்கக்கால மகிமையின் ஒரு முழுவளர்ச்சிக்கு ஈடாக மீட்கப்பட்டவர்கள் "வளருவார்கள்" (மல். 4:2).—GC 644, 645 (1911).

ஆதாமுக்கு சிருஷ்டிப்பின்போது இருபது மடங்கு உயிராற்றல் அருளப்பட்டிராதிருந்தால், இயற்கைப் பிரமாணங்களை மீறுகிற தற்போதைய வாழ்வுமுறைப் பழக்கவழக்கங்களுடன்கூடிய மனித இனம் இல்லாமலேபோயிருந்திருக்கும்.—3T 138 (1872).

இளைப்பாறுதலை விரும்புவோரும், இளைப்பாறுதல் தேவைப் படுவோரும் அங்கே இல்லை. தேவனுடைய சித்தத்தைச் செய்வதிலும், அவரது நாமத்தைத் துதித்துக்கொண்டிருப்பதிலும் களைப்பு என்பதே அங்கு இருக்காது. விடியற்காலையின் உற்சாகம் எப்பொழுதும் இருக்கும்; அது ஒருபோதும் ஒரு சிறிதும் குறையாது... அதிக அறிவாற்றல் பெறுவதால், நம் மனம் களைப்படைவதுமில்லை, சக்தியை இழந்து சோர்ந்துபோவதும் இல்லை.—GC 676, 677 (1911).

பரலோகம் முழுவதும் ஆரோக்கியம் நிறைந்த இடமாகும்.—3T 172 (1872).

### மகிழ்ச்சி உத்தரவாதம்பண்ணப்பட்டிருக்கிறது

எதிர்கால வாழ்க்கையிலிருந்த திரையை இயேசு உயர்த்தினார். "உயிர்த்தெழுதலில் கொள்வனையும், கொடுப்பனையும் இல்லை. அவர்கள் பரலோகத்திலே தேவதூதர்களைப்போல் இருப்பார்கள்" என்று அவர் கூறினார் (மத். 22:30).—DA 605 (1898).

புதிய பூமியில் திருமணங்களும் பிறப்புகளும் இருக்கும் என்று, தங்களது நம்பிக்கையை வெளிப்படுத்தும் மனிதர்கள் சிலர் இன்றைக்கும் இருக்கின்றனர். ஆனால் வேதவாக்கியங்களை விசுவாசிப்பவர்கள், இத்தகைய உபதேசங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. புதிய பூமியில் பிள்ளைகள் பிறக்கும் என்கிற உபதேசம், "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தின்" ஒரு பகுதி அல்ல...

தேவன் தமது வார்த்தையின்மூலம் தெரியப்படுத்தாத காரியங்களில், நம் யூகங்களையும் கொள்கைகளையும் நுழைப்பது துணிகரம் ஆகும்.

நமது எதிர்கால நிலைமையைக்குறித்து, எந்த யூகங்களுக்கும் உள்ளாக நாம் நுழைய வேண்டிய அவசியம் இல்லை.—1SM 172, 173 (1904).

புதிய பூமியில் எப்படிப்பட்ட நிலையிருக்கும் என்பதைக்குறித்து யூகம் செய்வதில், தேவனுடைய ஊழியக்காரர்கள் நேரத்தைச் செலவழிக்கக் கூடாது. கர்த்தர் வெளிப்படுத்தியிராத காரியங்களைக்குறித்த யூகங்களிலும் முக்கியத்துவமற்ற கோட்பாடுகளிலும் ஈடுபடுவது துணிகரமான செயலாகும். எதிர்கால வாழ்க்கையில் நம்முடைய சந்தோஷத்திற்காக ஆண்டவர் எல்லாவித ஆயத்தத்தையும் செய்திருக்கின்றார். எனவே, அவர் நமக்காகச் செய்திருக்கிற திட்டங்களைக்குறித்து, நாம் யூகம் செய்யவேண்டியது அவசியமில்லை. அதோடு, இவ்வுலகத்திலிருக்கிற நம்முடைய வாழ்க்கையின் நிலைமையை வைத்து, எதிர்கால வாழ்க்கையின் நிலைமையை நாம் அளந்து பார்க்கக்கூடாது.—GW 314 (1904).

**மீட்கப்பட்டோரின் தனித்தன்மை காக்கப்பட்டிருக்கும்**

இயேசுவின் உயிர்த்தெழுதல் அவருக்குள் மரித்து நித்திரை செய்துகொண்டிருக்கும் அனைவரது இறுதி உயிர்த்தெழுதலின் ஒரு மாதிரியாக இருக்கின்றது. உயிர்த்தெழுந்த இரட்சகரின் முகம், அவரது நடத்தை, அவரது பேச்சு ஆகியவை அனைத்தும் சீஷர்களுக்கு மிகவும் அறிமுகமானவைகளாக இருந்தன. மரித்தோரிலிருந்து இயேசு உயிர்த் தெழுந்ததைப்போல, அவருக்குள் நித்திரைசெய்பவர்களும் மறுபடியும் எழுந்திருக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். இயேசுவை அவரது சீஷர்கள் அறிந்திருந்ததைப்போல, நாமும் நமது நண்பர்களை அறிந்து கொள்வோம். சாவுக்கேதுவான இந்த வாழ்க்கையில், அவர்கள் சரீரம் உருக்குலைந்தவர்களாக, நோயுற்றவர்களாக, சீர்குலைந்தவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் அவர்கள் உயிரோடெழும்பும்போது, பூரண ஆரோக்கியத்துடனும், ஒரே சீரான அமைப்புடனும் எழும்புவார்கள். மகிமைப்படுத்தப்பட்ட அவர்களது சரீரத்தில் அவர்களது தனித்தன்மை முற்றிலுமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கும்.—DA 804 (1898).

மரிக்கும்போதிருந்த அதே சரீரம் எழும்பி வரும். ஆனால் அதில் வியாதியோ, ஊனமோ இருக்காது. அது மீண்டும் உயிர் பெறுகிறது. நண்பர்கள் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்வதற்கேதுவாக, அதே உருவ அமைப்பை அவர்கள் சரீரம் பெற்றிருக்கும்.—6BC 1093 (1900).

அங்கே நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்வோம். அங்கே நம் ஆத்துமாவில் தேவன் நாட்டியுள்ள அன்பு, இரக்கம் ஆகிய

குணங்கள், உண்மையான மற்றும் இனிமையான செயல் திறனைப் பெறும். —Ed 306 (1903).

### சிவந்த மேனியும் ஒளியின் வஸ்திரமும்

ஆதாம் தனது சிருஷ்டிகரின் கரத்திலிருந்து உருவானபோது, கெம்பீரமான உயரமுள்ளவனாகவும், ஒரே சீரான அமைப்புடன்கூடிய அழகான உருவமுள்ளவனாகவும் இருந்தான். அவன் இன்று உலகில் வாழுகின்ற மனிதர்களின் உயரத்தைப்போல, இருமடங்கு உயரமுள்ள வனாகவும், அதற்கேற்ற சரியான பருமனுடையவனாகவும் இருந்தான். அவனது அங்க அமைப்புகள் பூரணமாகவும் அழகாகவும் இருந்தன. அவனது நிறம் வெண்மையாகவோ வெளிரிய பழுப்பு நிறமாகவோ இராமல், சிறந்த ஆரோக்கியத்துடன் பிரகாசிக்கக்கூடிய சிவந்த நிறமுள்ளதாயிருந்தது. ஏவாள், ஆதாமுக்குச் சமமாக அவனைப் போன்ற உயரமுடையவளாக இருக்கவில்லை. அவளது தலை, அவனது தோள்களுக்கு மேலாக சற்று உயர்ந்திருந்தது. அவளும் கூட, கெம்பீரத் தோற்றமுள்ள பூரண சரீர அமைப்புடனும் மிகுந்த அழகுடனும் இருந்தாள்.—3SG 34 (1864).

இந்தப் பாவமற்ற ஜோடி செயற்கையான ஆடைகளை அணிந் திருக்கவில்லை. தேவதூதர்கள் அணிந்திருந்ததுபோன்ற ஒளியினாலும் மகிமையினாலும் மூடப்பட்டிருந்தனர். அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்திருந்த காலம் வரையிலும், இந்த ஒளியின் வஸ்திரம் அவர்களைத் தொடர்ந்து மூடியிருந்தது.—PP 45 (1890).

### பரலோகத்தில் நம் குடும்பத்தைக் காண்பதில் சந்தோஷம்

வாயிற்கதவின் இருபக்கமும் தூதர்களின் ஒரு பரிவாரம் நின்றிருப்பதை நாம் காண்போம். உள்ளே நாம் கடந்துசெல்லும்போது, “வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்” என்று இயேசு கூறுவார். தமது சந்தோஷ த்தில் பங்குடையவர்களாய் இருக்கும்படி அவர் இங்கே உங்களிடம் கூறுகிறார். அதன் அர்த்தம்தான் என்ன? தகப்பன்மார்களே, அது உங்களது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு மகிழ்வதாகும். தாய்மார்களே, அது உங்கள் முயற்சிகளானது பலனளிக்கப்பட்டதைக் கண்டு மகிழ்வதாகும். இங்கு உங்களுடைய பிள்ளைகள் இருக்கின்றனர்; ஜீவகிரீடம் அவர்கள் தலைகளின்மீது வைக்கப்பட்டிருக்கின்றது.—CG 567, 568 (1895).

கிறிஸ்து, தேவனுடைய மாபெரும் ஈவாக இருக்கின்றார். அவருடைய ஜீவன் நம்முடையது, நமக்காகக் கொடுக்கப்பட்டது.

நம்முடைய கல்லறைகளிலிருந்து நாம் வெளியே வந்து, பரலோகத் தூதர்களுடன் மகிமையான ஒரு தோழமைகொள்ளுவதற்கும், நமக்குப் பிரியமானவர்களை சந்தித்து, அவர்களது முகங்களை அடையாளம் கண்டுகொள்வதற்கும், அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுப்பப்பட்டார். ஏனெனில், கிறிஸ்துவைப்போலொத்த சாயல் அவர்களது உருவத்தை அழித்துப்போடுவதில்லை; மாறாக, அதனை அவரது மகிமையான சாயலுக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துகின்றது. இங்கே குடும்ப உறவில் இணைக்கப் பட்டிருக்கின்ற ஒவ்வொரு பரிசுத்தவானும், அங்கே ஒருவரையொருவர் அறிந்து கொள்வர்.—3SM 316 (1898).

**குழந்தைகள் மற்றும் மன வளர்ச்சியற்றவர்களின் இரட்சிப்பு**

சிறுகுழந்தைகள் சாவாமையைத் தரித்தவர்களாய், தங்களது மணரப்படுக்கைகளிலிருந்து எழும்பி, உடனடியாக தங்கள் செட்டைகளை அடித்துப் பறந்து, தங்களது தாய்மார்களின் கரங்களுக்குச் சென்றடை வார்கள். இனி ஒருபோதும் பிரியக்கூடாதபடிக்கு, அவர்கள் மீண்டும் சந்திப்பார்கள். ஆனால் அங்கு அநேக சிறு குழந்தைகளுக்குத் தாய்மார்கள் இருக்கமாட்டார்கள். நாங்கள் பெருமகிழ்ச்சியான கீதத்தைத் தாய்மார்களிடமிருந்து கேட்பதற்குக் காத்திருந்தது வீணாயிற்று. தாயில்லாத அந்தக் குழந்தைகளை தூதர்கள் பெற்றுக்கொண்டு, அவர்களை ஜீவ விருட்சத்தண்டைக்கு நடத்திச் சென்றார்கள்.—2SM 260 (1858).

எல்லோரும் பரீட்சிக்கப்பட்டு, சோதனையின் மூலம் தங்களது குணம் தீர்மானிக்கப்படவேண்டும் என்றிருக்கும்போது, குணம் பரீட்சிக்கப்படாத விசுவாசிகளான பெற்றோர்களின் சிறுபிள்ளைகள் இரட்சிக்கப்படுவார்களா? என்று சிலர் கேள்வியெழுப்பினர். “சிறுபிள்ளைகளுக்கு எப்படி இவ்வித பரீட்சையையும், சோதனையையும் வைக்கமுடியும்?” என்ற கேள்வியும் கேட்கப்படுகின்றது. எகிப்தியர்களின் தலைப்பிள்ளைகளின்மீது தேவன் தமது நியாயத்தீர்ப்புகளை அனுப்பியபோது நிகழ்ந்ததுபோல, விசுவாசிகளான பெற்றோர்களின் விசுவாசம் அவர்களது பிள்ளைகளை மூடும் என்பதே எனது பதிலாகும்…

அவிசுவாசிகளான அனைத்துப் பெற்றோர்களின் பிள்ளைகளும் இரட்சிக்கப்படுவார்களா என்பது பற்றி நாம் கூறமுடியாது; ஏனெனில், இக்காரியத்தைக்குறித்த அவரது நோக்கத்தை, தேவன் நமக்குத் தெரியப்படுத்தவில்லை. தேவன் விட்டுவிட்டதை நாமும் விட்டுவிடுவதும், அவரது வார்த்தையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள தலைப்புகளைக்குறித்து தியானமாயிருப்பதுமே நமக்குச் சாலச்சிறந்ததாகும்.—3SM 313–315 (1885).

'A' என்பவருடைய காரியத்தைப் பார்க்கும்போது, அவர் இப்பொழுது இருக்கும் நிலையையும், அவரது எளிமையான தோற்றத்தையும் கண்டு நீங்கள் வருந்துகின்றீர்கள். ஆனால் அவரோ பாவ உணர்வற்றவராக இருக்கின்றார். மரபுவழியாக வந்த அனைத்து மனவளர்ச்சியற்ற தன்மையையும் தேவகிருபையானது நீக்கிப்போடும். அவர் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் மத்தியில் ஒரு சுதந்தரத்தை அடைவார். ஆனால் உங்களுக்கோ கர்த்தர் பகுத்தறிவைக் கொடுத்திருக்கின்றார். பகுத்தாராயும் திறனைப் பொறுத்தமட்டில், 'A' என்பவர் ஒரு குழந்தையாக இருக்கின்றார்; ஆனால் ஒரு குழந்தைக்குரிய பணிவும் கீழ்ப்படிதலும் அவரிடம் இருக்கின்றது. —8MR 210 (1893).

## உண்மையுள்ள தாய்மார்களுக்கு அளிக்கப்படும் மரியாதை

நியாயசங்கம் உட்கார்ந்து, புஸ்தகங்கள் திறக்கப்பட்டு, மாபெரும் நியாயாதிபதியாகிய இயேசு, "நல்லது, உண்மையும் உத்தமமுள்ள ஊழியக்காரனே" என்ற தீர்ப்பை அறிவிக்கும்போது, அழியாத மகிமை பொருந்திய கிரீடம் ஜெயம் பெற்றவருடைய சிரசின்மீது வைக்கப்படுகின்றது. அநேகர் தங்கள் கிரீடங்களைக் கழற்றி, உயர்த்திக்காட்டி, தங்கள் தாய்மாரை சுட்டிக்காட்டி, "நான் இப்பொழுதிருக்கின்ற நிலைக்கு, தேவனுடைய கிருபையினால் என்னைக் கொண்டுவந்தவர் எனது அன்னையே; அவரது ஆலோசனைகளும், அவரது ஜெபங்களுமே என்னுடைய இந்த நித்திய இரட்சிப்பை நான் பெற்றுக்கொள்ளக் காரணமாக இருந்தன" என்று கூடியிருக்கும் அண்டசராசரத்தின் முன்பாகக் கூறுவார்கள்.—MYP 330 (1881).

தங்களது பிள்ளைகளைத் தங்களது முயற்சிகளின்மூலம் இயேசு கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் செய்த தாய்மார்களின் பெயர்களை, தேவதூதர்கள் என்றென்றும் அழியாப்புகழுடன் நிலைத்திருக்கச் செய்வார்கள். —CG 568 (1895).

## ஆத்துமாக்களை ஆதாயம் செய்தவருக்கான வெகுமதி

மீட்கப்பட்டவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, விலையேறப் பெற்ற ஆத்துமாக்கள், தங்கள் சார்பில் விசுவாசமும் பொறுமையுமிக்க முயற்சிகளை எடுத்து, அரணுக்கு ஓடும்படியாகக் கெஞ்சுதல்களையும் அக்கறைமிக்க அறிவுறுத்தல்களையும் ஏறெடுத்தவர்களின் நாமங்களைச் சுட்டிக்காட்டி, அவர்களாலேயே இங்கிருக்கிறோம் என்பார்கள். இப்படியாக, இவ்வுலகத்தில் தேவனுடன் ஒன்றாகப் பணியாளர்களாயிருந்தவர்கள் தங்களது பலனைப் பெற்றுக்கொள்வார்கள்.—8T 196, 197 (1904).

உன்னதத்திலுள்ள இந்த அழகான பட்டணத்தின் ஜொலிக்கின்ற கதவுகளின் கீல்அச்சுகள் பின்னாகத் திறக்கும்போது, சத்தியத்தைக் கைக்கொண்ட ஜாதிகள் உள்ளே பிரவேசிப்பார்கள். அவர்களது சிரசுகளின்மீது மகிமையான கிரீடங்கள் வைக்கப்படும். அவர்கள் தேவனுக்கு மகிமையையும், மரியாதையையும், கனத்தையும் செலுத்துவார்கள். அந்த நேரத்தில் சிலர் உங்களிடம் வந்து, "நீங்கள் என்னோடு அன்பான வார்த்தைகளால் பேசியிருந்திருக்காவிட்டால், உங்களுடைய கண்ணீரும் வேண்டுதல்களும் ஊக்கமான முயற்சிகளும் எனக்குக் கிடைத்திருக்காவிட்டால், நான் ராஜாவை அவருடைய அழகிலே ஒருபோதும் கண்டிருக்கவே மாட்டேன்" என்று கூறுவார்கள். இது என்ன ஒரு மேன்மையான பலனாக இருக்கிறது! இந்த பூலோக நிலையற்ற வாழ்க்கையில் மனிதர்களின் புகழ்ச்சியை, உண்மையுள்ளவர்களுக்காக எதிர்காலத்தில் காத்திருக்கின்ற அழிவில்லாத வாழ்க்கைக்கான எண்ணற்ற பலன்களுடன் ஒப்பிடும்போது, அது எத்தனை முக்கியத்துவமற்றதாக இருக்கும்!—Words of Encouragement to Self-supporting Workers (Ph113) 16 (1909).

### நம்முடைய மனநிலைகள் மாற்றப்படமாட்டாது

பரலோகத்தில் நீங்கள் ஒரு பரிசுத்தவானாயிருக்க வேண்டுமானால், பூமியிலே முதலாவது நீங்கள் ஒரு பரிசுத்தவானாயிருக்க வேண்டும். இந்த வாழ்க்கையில் நீங்கள் பேணிவைத்திருக்கின்ற குணத்தின் பண்புகள், மரணத்தாலோ அல்லது உயித்தெழுதலாலோ மாற்றப்படமாட்டாது. நீங்கள் உங்கள் குடும்பத்திலும் சமுதாயத்திலும் வெளிப்படுத்திக் காண்பித்த அதே மனநிலையோடுதான், கல்லறையிலிருந்து வெளியே வருவீர்கள். கிறிஸ்து தமது வருகையில் உங்களுடைய எந்தக் குணத்தையும் மாற்றப்போவது இல்லை. குணத்தில் மாற்றம் செய்யப்படும் வேலை இப்போதே செய்யப்பட வேண்டும். நம்முடைய அனுதின வாழ்க்கைதான் நமது நித்தியத்தைத் தீர்மானிக்கின்றது. குணங்களிலிருக்கின்ற குறைபாடுகளைக்குறித்து மனந்திரும்பி, அவைகள் கிறிஸ்துவின் கிருபையினாலே ஜெயிக்கவேண்டும். மேலோக நாட்டின் வாசஸ்தலங்களில் வாழ தகுதியடையும்படிக்கு, அதற்கு ஒத்திசைவான ஒரு குணம் இந்தக் கிருபையின் காலகட்டத்திலேயே உருவாக்கப்பட வேண்டும்.—13MR 82 (1891).

### பரலோகத்தின் சமாதானமான அன்பான சூழல்

பரலோக மன்றங்களின் சமாதானமும் ஒத்திசைவும், முரட்டுத்தன மானவர்கள் அல்லது இரக்கமற்றவர்களின் பிரசன்னத்தினால் களங்கமடை யாது.—8T 140 (1904).

பரலோகத்தில் இருக்கின்ற அனைத்தும் மேன்மையாயும் உயர்த்தப் பட்டதாயும் இருக்கின்றது. அங்கிருக்கின்ற அனைவரும் மற்றவர்களது சந்தோஷத்தையும் அக்கறையையுமே நாடுவார்கள். சுயத்தைக் கவனிக் கவோ, சுயத்திற்கு அக்கறைக்காட்டவோ ஒருவரும் தங்களை ஒப்படைக்க மாட்டார்கள். தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களுடைய சந்தோஷத்தையும் மனமகிழ்ச்சியையும் காண்பது மாத்திரமே, பரிசுத்தவான்களனைவருடைய பிரதான மகிழ்ச்சியாயிருக்கும்.—2T 239 (1869).

எங்கும் சமாதானமாயிருந்ததும், பூமியின் புயல்போன்ற போராட்டங்கள் ஒருபோதும் வராததுமான அந்த இடத்திலே நான் இருந்ததாக உணர்ந்தேன். பரலோகம்—அது பரிசுத்தமும், தூய்மையுமான, ஆசீர்வதிக்கப்பட்டோர் கூடுகின்ற ஒரு நீதியின் ராஜ்யமாகும். அங்கே ஆயிரமாயிரம்பேரும், கோடாகோடிபேரும், மகிழ்ச்சியான பரிசுத்த நெருக்கத் துடன் வாழ்வாங்கு வாழ்ந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற தேவனையும் ஆட்டுக்குட்டியானவரையும் துதித்துக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய குரல்கள் ஒன்றோடொன்று பூரண இசைவுடனிருந்தன. அவர்கள் ஒருபோதும் ஒருவருக்கொருவர் தீங்கு இழைத்துக்கொள்ள வில்லை. இந்த வல்லமையான ராஜ்யத்தின் அதிகாரிகளாகிய பரலோகத்தின் இளவரசர்களாகிய அவர்கள், ஒருவருக்கொருவர் மற்றவரின் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் நாடி, நன்மைக்கு மட்டுமே போட்டியாளர்களாக இருக்கின்றனர். பெரியவர் அங்கே சுயமதிப்பில் சிறியவராகவும், சிறியவர் தமது நன்றியுணர்விலும், அன்பின் நிறைவிலும் பெரியவராகவும் இருப்பர்.

ஞானவான்களின் ஞானத்தை மங்கச்செய்கின்ற தவறான காரியங்கள் அங்கே இருக்காது. தெளிவான, பலமான, பூரணமான சத்தியமும் அறிவும் எல்லாவித சந்தேகத்தையும் துரத்திவிடும். எனவே எவ்வித சந்தேகத்தின் மேகமும், அதன் மகிழ்ச்சியான குடிகள்மீது தனது கேடு விளைவிக்கும் காரியத்தை நிழலிடச் செய்யாது. பரலோகத்தின் பூரண சமாதானத்தையும் இனிமையையும், எந்த ஒரு வாக்குவாதக் குரல்களும் கெடுக்காது. அதன் குடிகள் வருத்தத்தையும், கவலையையும், கண்ணீரையும் அறியமாட்டார்கள். அனைத்தும் பரிபூரண ஒத்திசைவோடும், பரிபூரண ஒழுங்கோடும், பரிபூரண மகிழ்ச்சியோடும் இருக்கும்...

அனுதாபம் ஒவ்வொரு இருதயத்திலும் உயிருள்ளதாயும், ஒவ்வொரு பார்வையிலும் வெளிப்படக்கூடியதாயும் இருக்கின்ற ஒரு இல்லமே பரலோகமாகும். அன்பு அங்கே ஆளுகை செய்யும். கெடுதல் செய்கின்ற மூலக்கூறுகளும் அங்கிருக்காது; பிரிவினைகளோ அல்லது

வாக்குவாதங்களோ அல்லது போராட்டத்திற்கேதுவான வார்த்தைகளோ அங்கே இருக்காது.—9MR 104, 105 (1882).

**சோதனையுமில்லை பாவமுமில்லை**

நன்மை தீமை அறியத்தக்க எந்த ஒரு மரமும், சோதிக்கப்படு வதற்கேற்ற சூழ்நிலையை உண்டாக்காது. சோதனைக்காரன் அங்கு இல்லை. தீமை செய்வதற்கான சாத்தியக்கூறும் இல்லை.—Ed 302 (1903).

தூதர்களிடமிருந்தும் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களிடமிருந்தும், வெற்றியின் ஆரவார முழக்கத்தை நான் கேட்டேன். அது பதினாயிரமான கீதவாத்தியங்கள் இசைத்ததுபோன்று தொனித்தது. ஏனெனில் மற்ற உலகின் மக்கள், சாத்தானுடைய பிரசன்னத்தினின்றும் சோதனைகளினின்றும் விடுதலைசெய்யப்பட்டார்கள். இனி மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள், ஒருபோதும் அவனால் சோதிக்கப்படவும் தொல்லைகளை அனுபவிக்கவும்மாட்டார்கள். —SR 416 (1858).

**பிதாவோடும் குமாரனோடும் ஐக்கிய உறவு**

தேவனுடைய ஜனங்கள், பிதாவோடும் குமாரனோடும் நேரடி யான தொடர்புகொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றிருந்தனர்… நமக்கும் அவருக்கும் இடையே மங்கலான எந்த ஒரு திரையும் இல்லாத விதத்தில், நாம் அவரை முகமுகமாகத் தரிசிப்போம்.—GC 676, 677 (1911).

நாம் எப்பொழுதும் அவரோடு குடியிருந்து, அவரது அன்பான முகத்தின் ஒளியை மகிழ்ச்சியோடு அனுபவிப்போம். இப்படிப்பட்ட மகிழ்ச்சியான எதிர்பார்ப்பினால் என் இதயம் சந்தோஷத்தில் துள்ளுகின்றது. —HP 352 (1856).

கிறிஸ்து இருக்கும் இடம்தான் பரலோகம். கிறிஸ்துவை நேசிப்பவர் களுக்குக் கிறிஸ்து அங்கு இல்லையென்றால், பரலோகம் பரலோகமாக இருக்காது.—Ms 41, 1897.

தேவனுக்கும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுக்கும் இடையே, நெருக்கமான மென்மையான உறவு அங்கு இருக்கும்.—DA 606 (1898).

நமது சிரசின்மீது அவர் அன்பாக வைத்த கிரீடங்களை, மீட்பரது பாதப்படியிலே நாம் வைத்து, நம்முடைய பொற்சுரமண்டலங்களை மீட்டி, சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கிறவருக்கு துதிகளை ஏறெடுத்துப் பரலோகம் முழுவதையும் நிரப்புவோம்.—8T 254 (1904).

இந்த வாழ்க்கையில் அவர்கள் தேவனுக்கு உண்மையாக இருப்பார்களானால், கடைசியிலே, “அவருடைய முகத்தை அவர்கள்

தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்" (வெளி. 22:4). தேவனைத் தரிசிப்பதைக்காட்டிலும், வேறென்ன சந்தோஷம் பரலோகத்தில் நமக்கு இருக்க முடியும்? கிறிஸ்துவின் கிருபையினாலே இரட்சிக்கப்பட்ட பாவிக்கு, தேவனுடைய முகத்தைத் தரிசித்து அவரைத் தனது தகப்பனாக அறிந்துக்கொள்வதைக் காட்டிலும், வேறு என்ன பெரும் மகிழ்ச்சி அங்கு இருக்க முடியும்?—8T 268 (1904).

**அனைத்து யுகங்களிலும் உண்மையாயிருந்தவர்களுடனும், தேவ தூதர்களுடனும் ஐக்கியம்**

மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் சொந்த வாழ்க்கையில், தூதர்கள் செய்த ஊழியங்களைப் புரிந்துகொள்வர். தனது ஆரம்ப நாட்களிலிருந்து தன்னைப் பாதுகாத்த காவல்தூதன், தனது நடைகள் ஒவ்வொன்றையும் விழிப்போடு கவனித்த தூதன், ஆபத்து நாட்களிலே தனது தலையைப் பாதுகாத்த தூதன், மரண இருளின் பள்ளத்தாக்கிலே தன்னோடு இருந்த தூதன், தனது மரணப்படுக்கைக்கு இடத்தைக் குறித்துவைத்த தூதன், உயிர்த்தெழுதலின் அதிகாலையில் முதலாவதாகத் தன்னை வரவேற்ற தூதன்—ஆம், அந்தத் தூதனுடன் உரையாடல் நிகழ்த்தி, அவர் தனது தனிப்பட்ட வாழ்க்கையிலே இடைப்பட்ட தெய்வீகத் தலையீட்டின் சரித்திரத்தைக் கற்றுக்கொள்வதும், மனித இனத்தின் ஒவ்வொரு காரியத்திலும் பரலோகம் எவ்வளவு ஒத்துழைத்தது என்பதைக்குறித்து அறிந்துகொள்வதும் எப்படிப்பட்ட இன்பமான அனுபவமாக இருக்கும்!—Ed 305 (1903).

காணக்கூடியதும் காணமுடியாததுமான எப்படிப்பட்ட ஆபத்துக் களிலிருந்து, தேவதூதர்களின் குறுக்கீட்டினால் நாம் எப்படியெல்லாம் காக்கப்பட்டிருந்தோம் என்பதை, அந்த தெய்வீக ஏற்பாடுகளை நித்தியத்தின் வெளிச்சத்தில் நாம் காணும்வரை, அவைகளை ஒருபோதும் நாம் அறிந்துகொள்ள மாட்டோம்.—DA 240 (1898).

மனித ஆத்துமாவிலே தேவன்தாமே உருவாக்கி வைத்திருக்கும் அன்பும் இரக்கமுமாகிய மேன்மையான உணர்வுகள் அங்கே மிக உண்மையாகவும் மிக இனிமையாகவும் செயல்படும். பரிசுத்த ஜீவிகளுடன் தூய்மையான உறவு, யுகங்கள் நெடுகிலும் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்கள் அங்கிகளைத் தோய்த்து வெளுத்த உண்மைமிக்கவர்களுடனும் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட தூதர்களுடனும் கூடிய ஒத்திசைவான சமூக வாழ்வு, "பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்தையும்" (எபே. 3:14) ஒன்றாக இணைக்கின்ற பரிசுத்தமான பிணைப்புகள்—ஆகிய இவைகளே மீட்கப்பட்டோரின் மகிழ்ச்சியை முழுமையானதாக்க உதவக்கூடியவைகளாகும்.—GC 677 (1911).

### விழுந்துபோகாத சிருஷ்டிகளுக்குச் சாட்சிபகரல்

"மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்ய வந்தார்" (மத். 20:28). கிறிஸ்துவானவர் பூமியில் செய்த பணியே, பரலோகத்திலும் செய்யும் பணியாயிருக்கிறது. வரப்போகும் உலகத்தில் அவருடன் இணைந்து பணியாற்றும் பரந்த சிலாக்கியமும் உயர்ந்த அதிகாரமுமே, இவ்வுலகத்தில் அவருடன் இணைந்து பணியாற்றுவதால் நமக்குக் கிடைக்கப்போகும் பலன் ஆகும். "நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 43:12). நித்தியத்திலும் நாம் அவருக்குச் சாட்சிகளாகவே இருப்போம்.

எதற்காக யுகங்கள் நெடுகிலும் தொடரத்தக்கதாக இந்த மாபெரும் போராட்டம் அனுமதிக்கப்பட்டது? சாத்தானுடைய கலகம் வெளியான உடனேயே அவன் ஏன் அழிக்கப்படவில்லை?—தீமையோடு உள்ள தமது நடவடிக்கைகளில், தேவன் நீதியுள்ளவர் என்பதை அண்டசராசரமும் புரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே! அதாவது பாவம் நித்திய ஆக்கினையை அடைவதற்காகவே! மீட்பின் திட்டத்தில் உயரங்களும் ஆழங்களும் அநேகமுண்டு, அவைகளை நித்தியம் முழுவதுமாகக்கூட ஒருபோதும் விளக்கிச் சொல்லமுடியாது. எனவேதான் இவைகளை உற்றுப்பார்த்து ஆச்சரியப்பட, தேவதூதர்களும் ஆசையாய் இருக்கின்றனர். சிருஷ்டிக்கப்பட்ட அனைத்துச் சிருஷ்டிகளிலும், உண்மையாகவே மீட்கப் பட்டவர்கள் மாத்திரமே, பாவத்தோடு போராடுவது என்றால் என்ன என்பதை, தங்கள் அனுபவத்திலே அறிந்திருக்கின்றார்கள். தேவ தூதர்கள்கூட அடைய முடியாதவிதத்தில், அவர்கள் கிறிஸ்துவுடன்கூட பாடுகளை அடைந்து, அவருடைய பாடுகளின் ஐக்கியத்திற்குள்ளாகப் பிரவேசித்து இருக்கின்றனர்; மீட்பின் அறிவியலைப்பற்றிய சாட்சியை உடையவர்களாக அவர்கள் இருப்பார்களல்லவா? விழுந்துபோகாத ஜீவராசிகளுக்கு வேறெதைக் காட்டிலும் அதுவே அதிக மதிப்புடையதாயிருக்கும்!—Ed 308 (1903).

### நேர்த்தியான, இனிமையான இசையில் தேவனைத் துதித்தல்

தேவனுடைய தரிசனங்களில் தவிர, வேறு எங்கும், எவ்விதத்திலும், எந்த மானிட செவியும் கேட்டிராத, மனித சிந்தையிலும் தோன்றியிராத, அத்தனை சிறப்புமிகுந்த இசையும் பாடலும் அங்கு இருக்கும்…

மீட்கப்பட்டவர்கள் பாடப்போகும் பாடல்—அவர்களது அனுபவப் பாடலாகும். அது, "சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீ ருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான் களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். கர்த்தாவே யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை

மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்?" "தேவரீர் ஒருவரே பரிசுத்தர்" (வெளி. 15:3,4) என்று தேவனுடைய மகிமையை அறிவிக்கின்ற பாடலாகும்.—Ed 307-309 (1903).

அந்த இசைக்குழுவை நடத்திச்செல்ல எப்பொழுதும் ஒரு தூதன் இருந்தான். அவன், அந்தச் சுரமண்டலத்தை முதலில் வாசித்து இசை மீட்ட, அனைவரும் இணைந்துகொள்ள, ஒரு தலைசிறந்த முழுமையான பரலோக இசை உருவாயிற்று. அதை வர்ணிக்கவே முடியாது. அது இனிமையானதாக, பரலோகத்தைச் சார்ந்ததாக, தெய்வீகமானதாக இருக்கின்றது.—1T 146 (1857).

எபிரெயர்களின் அல்லேலூயாக்கள், புறஜாதியினரின் ஓசன்னாக் களுடன் ஒன்றுகலக்கும்போது, எல்லோருக்கும் ஆண்டவராகிய அவரை முடிசூட்டுங்கள் என்னும் ஒரு மகிழ்ச்சியின் ஆரவாரம், மீட்கப்பட்ட ஒரு பலத்த சேனையின் குரலாக உயர்ந்தெழும்பும்போது, துயரம் நிறைந்த ஒரு மனிதனாக இல்லாமல், மகிமை நிறைந்த வெற்றிமிகுந்த ஒரு அரசராக (கிறிஸ்து) ஒலிவமலையின்மீது நிற்பார்.—DA 830 (1898).

**அண்டசராசரத்தின் பொக்கிஷங்களை ஆராய்தல்**

நம் பார்வையை மறைக்கும் திரை நீக்கப்படும்போது, அந்த அழகிய உலகை நம் கண்கள் காணும். தற்போது அந்தக் காட்சியில், ஒரு மினுக்கொளியளவே நாம் நுண்ணோக்கியின்மூலமாக பெற்றுக்கொள்கிறோம்; வானமண்டலங்களின் மகத்துவத்தைத் தற்போது தொலைநோக்கிமூலமாக நாம் காண்கின்றோம். ஆனால், பாவத்தின் சாபம் நீக்கப்பட்டபின்பு, இந்த உலகம் "கர்த்தராகிய தேவனின் மகிமையில்" தோன்றும். நமது ஆராய்ச்சிக்காக எத்தகைய களம் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது! அங்கே அறிவியல் மாணாக்கன், சிருஷ்டிப்பின் பதிவேடுகளை வாசித்து, அதிலே தீமையின் பிரமாணத்தை நினைவூட்டும் வகையில் எதுவும் இல்லை என்பதைப் பகுத்தாராய்வான். அவன் இயற்கையினுடைய சத்தத்தைக் கவனித்து, அதிலே எந்த ஒரு வேதனையின் குரலையோ அல்லது வருத்தத்தின் முனகலையோ கேட்கமாட்டான்...

அண்டசராசரத்தின் பொக்கிஷங்கள் அனைத்தும், தேவனுடைய பிள்ளைகளின் ஆராய்ச்சிக்காகத் திறந்து வைக்கப்படும். விழுந்துபோகாத ஜீவராசிகளின் ஞானம் மற்றும் மகிழ்ச்சிக்குள்ளாக, சொல்லொண்ணா களிப்புடன் நாம் பிரவேசிப்போம். யுகங்கள் நெடுகிலும், தேவனுடைய கரத்தின் கிரியைகளைத் தியானிப்பதின் விளைவாகச் சம்பாதித்த பொக்கிஷங்களை நாம் பகிர்ந்துகொள்வோம்.—Ed 303, 307 (1903).

அவர்கள் மரணக்கட்டுகளிலிருந்து விடுதலைபெற்றவர்களாக, தூரமான உலகங்களுக்கும் களைப்பின்றி பறந்து திரிவர். இந்த உலகங்கள்தான், மனிதனின் சாபத்தைக்கண்டு வருந்தியவைகளும், ஒரு ஆத்துமா மீட்கப்பட்ட செய்தியைக்கேட்டு மகிழ்ந்து பாடியவைகளுமாம்.... தெய்வீக சிங்காசனத்தைச் சுற்றி, தங்களுக்கு குறிக்கப்பட்ட பாதையில் ஓடுகின்ற தேவனுடைய மகிமையான படைப்பாகிய சூரியன்களையும், நட்சத்திரங்களையும், அதன் அமைப்புகளையும் மங்காத பார்வையோடு பிரமித்து அவர்கள் நோக்குவார்கள். மிகச் சிறியவற்றிலிருந்து, மிகப் பெரியவை வரையுள்ள இந்தப் பிரபஞ்சத்தின் அனைத்துப் படைப்புகளின் மீதும், சிருஷ்டிகரின் நாமம் எழுதப்பட்டிருக்கும், அவை அனைத்திலும் அவரது வல்லமையின் ஐசுவரியங்கள் வெளிப்பட்டிருக்கும்.—GC 677, 678 (1911).

### புனிதமான சரித்திரம் மறுஆய்வு செய்யப்படும்

மீட்கப்பட்ட கூட்டத்தினர் ஒவ்வொரு உலகமாகச் சென்று வருவார்கள். அவர்களது பெரும்பகுதியான நேரம் மீட்பின் ரகசியங்களை ஆராய்வதிலே செலவழிக்கப்படும்.—7BC 990 (1886).

நித்திய யுகங்கள் நெடுகிலும் மீட்பைக்குறித்த ஆய்வுப் பொருளானது, மீட்கப்பட்டோரின் இருதயங்களையும் சிந்தைகளையும் நாவுகளையும் ஆட்கொள்ளும். கிறிஸ்து தமது சீஷர்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று ஏங்கிய, ஆனால் சீடர்கள் தங்கள் விசுவாசக் குறைபாட்டால் புரிந்துகொள்ளத் தவறிய சத்தியங்களை மீட்கப்பட்டோர் அறிந்துகொள்வார்கள். இனி நித்திய நித்தியமாக, கிறிஸ்துவின் பூரணமும் மகிமையும் புதிய கோணங்களில் வெளிப்படும். நித்திய யுகங்கள் நெடுகிலும், உண்மையுள்ள எஜமானர் தமது பொக்கிஷங்களிலிருந்து புதியதும் பழையதுமான அநேகக் காரியங்களை வெளிக்கொண்டு வருவார்.—COL 134 (1900).

காலம் துவங்குவதற்கு முன்பு தோன்றி, காலம் முடிவடையும்போது முடிவடையப்போகின்ற மாபெரும் போராட்டத்தின் காரியங்கள், அப்போது அவன் முன்பாக திறக்கப்படும். பாவத்தினுடைய துவக்கத்தின் சரித்திரம், சாவுக்கேதுவான பொய், அதன் நேர்மையற்ற கிரியையின் காரியம், சத்தியம் அதன் நியமிக்கப்பட்ட நேர்பாதையிலிருந்து சற்றேனும் விலகாத நிலை, அது தீமையை சந்தித்து மேற்கொண்ட விதம்—ஆகிய அனைத்தும் வெளிப்படையாகக்காட்டப்படும். காணக்கூடிய மற்றும் காணக்கூடாத உலகத்திற்கும் இடையே குறுக்கிட்டிருந்தத் திரை விலக்கப்பட்டு, அதிசயமான காரியங்கள் வெளிப்படுத்தப்படும்.—Ed 304 (1903).

இப்பூமியின் துக்கங்களும் வேதனைகளும் சோதனைகளும் முடிவுற்று அதற்கான காரணம் அகற்றப்பட்டாலும், தேவனுடைய மக்கள் தங்களது

இரட்சிப்பின் உன்னத விலையைப்பற்றிய தெளிவான விவேகமுள்ள அறிவை எப்பொழுதும் பெற்றிருப்பார்கள்…

நம் மீட்பர், சிலுவையின் தழும்புகளை என்றென்றைக்குமாக தமது சரீரத்தில் சுமந்துகொண்டிருப்பார். அவரது காயப்பட்ட சிரசின்மீதும், அவரது விலாவின்மீதும், அவரது கரங்கள் மற்றும் கால்களின்மீது மாத்திரமே பாவத்தின் கொடுமையான கிரியையின் அடையாளங்கள் இருக்கும்.—GC 651, 674 (1911).

### வாழ்க்கையின் குழப்பங்கள் விளக்கப்படும்

வாழ்க்கை அனுபவத்தின் குழப்பங்கள் அனைத்தும் அப்போது தெளிவாக்கப்படும். குழப்பமாகவும், ஏமாற்றமாகவும், முறிந்துபோன நோக்கங்களாகவும், தடைசெய்யப்பட்ட திட்டங்களாகவும் மாத்திரம் காணப்பட்டவையெல்லாம், ஒரு உன்னதமான—அதிகாரப்பூர்வமான—ஜெயமுள்ள நோக்கமாக—ஒரு தெய்வீக ஒத்திசைவுடன் காணப்படும்.—Ed 305 (1903).

அங்கே, தேவனுடைய சிங்காசனத்திலிருந்து பாய்கின்ற ஜீவ நீரூற்றண்டையில் இயேசு நம்மை நடத்திச் சென்று, இந்த பூமியில் நமது குணங்கள் பரிபூரணமடைவதற்காக, இருண்ட பாதைகளின் வழியாக அவர் நம்மை எப்படி நடத்தி வந்தார் என்பதைக் குறித்து நமக்கு விவரிப்பார்.—8T 254 (1904).

தேவனுடைய வழிநடத்துதல்களில் நம்மைக் குழப்பத்திற்குள்ளாக்கிய அனைத்தும், வரப்போகின்ற உலகத்திலே தெளிவாக்கப்படும். இப்போது புரிந்துகொள்ளக் கடினமாயிருக்கிற காரியங்கள், அப்போது தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளும். கிருபையின் இரகசியங்கள் நமக்கு முன்பாகத் திறந்துவைக்கப்படும். எல்லைக்குட்பட்ட நமது மனங்களுக்குக் குழப்பமாகவும், காப்பாற்றப்படாத வாக்குறுதிகளுமாக மாத்திரமே தோன்றினவைகளெல்லாம், மிகவும் பரிபூரணமாகவும் நமது நன்மைக் கேதுவாக இசைந்து செயல்பட்டதாகவும் இருந்ததை நாம் காண்போம். மிகவும் சோதனைபோல் தோன்றின அனுபவங்களும், எல்லையற்ற அன்பே உருவான அவர் கட்டளையிட்டவைகள்தான் என்பதை நாம் அறிந்துகொள்வோம். சகலத்தையும் நம்முடைய நன்மைக்கேதுவாகவே நடப்பித்த அவருடைய மென்மையான அக்கறையை நாம் உணரும்போது, சொல்லிமுடியாத மகிழ்ச்சியாலும் மகிமையின் நிறைவாலும் நாம் களிகூருவோம்.—9T 286 (1909).

### ஒவ்வொரு உன்னதமான செயலின் பலன்

சுயநலமற்ற ஆவியுடன் ஊழியம் செய்த அனைவரும், தங்களது கடின உழைப்பின் பலனைக் காண்பார்கள். ஒவ்வொரு சரியான கொள்கை மற்றும் உன்னதமான செயலின் முடிவான பலனும் தெரியவரும். இப்படிப்பட்ட பலாபலன்களில் சிலவற்றை நாம் இவ்வுலகிலேயே காண்கிறோம். ஆயினும் இந்த உலகத்தினுடைய உன்னதமான வேலையின் பலன், அதைச் செய்தவருக்கு எவ்வளவு குறைவாக இந்த வாழ்க்கையில் வெளிக்காட்டப்பட்டுள்ளது! தங்களுடைய எல்லைக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்ட நிலையைக் கடந்துசெல்லும் மக்களுக்காக, எத்தனை பேர் சுயநலமின்றி சோர்ந்துபோகாமல் உழைக்கின்றனர்! தங்களது வாழ்நாளின் பணி வீணாக செய்யப்பட்டதுபோன்று தோற்றமளிக்கின்றவிதத்தில், தங்கள் செய்கையின் பலனைக் காணாமலேயே, பெற்றோர்களும் ஆசிரியர்களும் தங்கள் படுக்கையை மண்ணில் போடுகின்றனர். அவர்களது நேர்மை, ஒருபோதும் வற்றிப்போகாத ஆசீர்வாதமான ஊற்றுகளைத் திறந்திருக்கின்றது என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். தாங்கள் பயிற்றுவித்த பிள்ளைகள், அவர்களது சக மனிதர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகவும் தூண்டுதலாகவும் மாறியிருக்கின்றனர் என்பதையும், அவர்களது செல்வாக்கு ஒரு ஆயிரம் மடங்காக திரும்பவுமாகச் செயல்பட்டிருக்கின்றது என்பதையும், விசுவாசத்தின் மூலமாக மாத்திரமே அவர்கள் காண்கின்றனர்.

ஊழியக்காரர் அநேகர் நம்பிக்கை அளிக்கக்கூடிய, தைரிய மூட்டுகின்ற, மற்றும் ஊக்கப்படுத்தக்கூடிய தூதுகளை உலகத்திற்கு அனுப்பி, அவ்வார்த்தைகளால் ஒவ்வொரு தேசத்திலுமுள்ள இருதயங்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுசென்றிருக்கின்றார்கள். ஆயினும் தனிமையிலும் இருளான சூழ்நிலைகளிலும் உழைத்த அவர்கள், அதன் முடிவுகளைப்பற்றி குறைவாகவே அறிந்திருக்கின்றனர். இப்படியாக, ஈவுகள் அளிக்கப்பட்டு, பாரங்கள் சுமக்கப்பட்டு, வேலை செய்யப்பட்டிருக்கின்றது. மனிதர்கள் விதை விதைத்துவிட்டுக் கல்லறைக்குட்படுகிறார்கள்; மற்றவர்கள் அதன் ஆசீர்வாதமான அறுவடையைச் செய்கின்றனர். மற்றவர்கள் கனிகளைப் புசிக்கத்தக்கதாக இவர்கள் மரங்களை நடுகின்றனர். தாங்கள் நன்மைக்கேதுவான காரியங்களை நடப்பித்திருக்கின்றோம் என்பதை அறிந்திருப்பதிலே, அவர்கள் இங்கே திருப்தியடைகின்றார்கள். இவையனைத்துக் கிரியைகளின் பலன்களும் பிரிதிபலன்களும் இனிமேல்தான் தெரியவரும்.—Ed 305, 306 (1903).

### நம்முடைய மகிழ்ச்சி தொடர்ந்து அதிகரிக்கும்

இரட்சிப்பின் திட்டத்தில் அநேக இரகசியங்கள் இருக்கின்றன— தேவகுமாரனின் தாழ்வுநிலை, மனிதரைப்போலக் காணப்படத்தக்கதாக

அவர் ஏற்றுக்கொண்ட ஒரு தோற்றம், தம்முடைய குமாரனை ஒப்புக் கொடுத்ததனால் பிதா காண்பித்த இரக்கம் நிறைந்த அற்புதமான அன்பு—இவைகளெல்லாம் பரலோக தூதர்களுக்கு தொடர்ச்சியான ஆச்சரியத்தின் ஆய்வுப்பொருள்களாக இருக்கின்றன… நித்திய யுகங் களாக, இவைகளெல்லாம் மீட்கப்பட்டவர்களின் ஆராய்ச்சிக்குரிய பாடமாக இருக்கும். சிருஷ்டிப்பிலும் மீட்பிலும் தேவனின் கிரியைகளை அவர்கள் தியானிக்கும்போது, ஆச்சரியப்படுகின்ற மகிழ்ச்சியடைகின்ற அந்த மனதுக்குப் புதிய சத்தியம் தொடர்ந்து வெளிப்படும். தேவனுடைய ஞானத்தையும் அன்பையும் வல்லமையையும் அதிகமதிகமாக அவர்கள் கற்றுக்கொள்ளும்போது, அவர்களுடைய மனது எப்பொழுதும் விரிவடைந்து கொண்டேயும், அவர்களுடைய மகிழ்ச்சி தொடர்ந்து அதிகரித்துக் கொண்டேயும் செல்லும்.—5T 702, 703 (1889).

நித்தியத்தின் வருடங்கள் ஒவ்வொன்றாக உருண்டோட, தேவனைப் பற்றியும் கிறிஸ்துவைப்பற்றியும் மேன்மையான மற்றும் இன்னும் அநேக மகிமையான வெளிப்பாடுகள் வந்துகொண்டேயிருக்கும். அறிவு பெருகிக்கொண்டே செல்வதுபோல, அன்பும், பயபக்தியும், மகிழ்ச்சியும் பெருகும். தேவனைப்பற்றி மனிதர் அதிகமாக அறிந்துகொள்ளும்போது, அவரது குணத்தைப்பற்றிய அவர்களது போற்றுதல் மிக அதிகமாய் இருக்கும். மீட்பின் ஐசுவரியங்களையும், சாத்தானுடனான மாபெரும் போராட்டத்தில் தாம் அடைந்த வியப்பூட்டும் சாதனைகளையும், அவர்களுக்கு முன்பாக இயேசுவானவர் திறந்து வெளிப்படுத்தும்பொழுது, மீட்கப்பட்டோரின் இதயங்கள் அதிக ஊக்கமான பயபக்தியுடன் ஆண்டவரை சேவிக்க வேண்டுமென்று உந்தப்பட்டு, அதிகப் பேரானந்தமான மகிழ்ச்சியுடன் அவர்கள் தங்களின் பொற்சுரமண்டலங்களை மீட்டி, ஆயிரம் பதினாயிரமான தங்கள் குரல்களை ஒருங்கிணைத்து, வல்லமையான துதியின் கீதத்தை எழும்பப்பண்ணுவார்கள்.—GC 678 (1911).

## அதற்கப்பாலும் எல்லையற்ற ஒரு நித்தியம்

நம்முடைய ஒவ்வொரு ஆற்றலும் வளர்ச்சியடையும், ஒவ்வொரு திறனும் விருத்தியடையும்; மிகவும் சிறந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்; மிகவும் உன்னதமான விருப்பங்கள் நிறைவேற்றப்படும்; மிகவும் உயர்வான குறிக்கோள்கள் தெளிவாய் அறிந்துகொள்ளப்படும். என்றபோதும், இன்னும் வெல்ல வேண்டிய உயர்வான புதிய நிலைகளும், வியந்து பாராட்டவேண்டிய புதிய அதிசயங்களும், புரிந்துகொள்ளவேண்டிய புதிய சத்தியங்களும் அங்கு எழும்பும். சரீரம், மனம் மற்றும் ஆத்துமாவினுடைய வல்லமைகளை, செயலில் ஈடுபடுத்தும்படியான புதிதான நோக்கங்கள் அங்கு எழும்பும்.—Ed 307 (1903).

தேவனுடைய ஞானத்தையும் அவரது வல்லமையையும் அறிந்து கொள்வதில் நாம் எவ்வளவு தூரம் முன்னேறிச் சென்றிருந்தாலும், அதற்கு அப்பாலுங்கூட எல்லையற்ற ஒரு நித்தியம் எப்பொழுதும் அங்கு இருக்கின்றது.—RH Sept. 14, 1886.

மானிட இதயங்கள் என்னும் வாய்க்கால்கள்மூலமாக, தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்துவருகின்ற தகப்பனின் அனைத்து அன்பும், மானிட ஆத்துமாக்களில் திறக்கப்படுகின்ற அனைத்து மென்மையான ஊற்றுகளும், வற்றாத—எல்லையற்ற—பரந்து விரிந்துகிடக்கும் சமுத்திரம் போன்ற—தேவனின் அன்போடு ஒப்பிடும் பொழுது, வெறும் சிற்றோடையே. அந்த அன்பைக்குறித்து நாவினால் விவரிக்க முடியாது; எழுதுகோலால் அதை விளக்கமாக வர்ணிக்க இயலாது. உங்களது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் அந்த அன்பைக்குறித்து நீங்கள் தியானிக் கலாம்; அதைப் புரிந்து கொள்ளத்தக்கதாக தளரா ஊக்கத்துடன் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கலாம்; பரலோகத் தகப்பனுடைய அன்பையும் மனதுருக்கத்தையும் புரிந்துகொள்ளும் முயற்சியிலே, தேவன் உங்களுக்கு அளித்திருக்கின்ற ஒவ்வொரு வல்லமையையும் திறமையையும் நீங்கள் செயலாற்றத் தூண்டலாம். எனினும், அதற்கு அப்பாலும் எல்லையற்ற ஒரு நித்தியம் இருக்கின்றது. யுகம்யுகமாக அந்த அன்பைக்குறித்து நீங்கள் படிக்கலாம்; எனினும் தமது ஒரே குமாரனை இந்த உலகத்திற்காக மரிப்பதற்கென்று தத்தஞ்செய்த, அந்த தேவனுடைய அன்பின் நீளத்தையும், அகலத்தையும், ஆழத்தையும், உயரத்தையும் ஒருபோதும் உங்களால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. நித்தியத்தாலுங்கூட அதை ஒருபோதும் முழுமையாக வெளிப்படுத்திக்காட்ட இயலாது.—5T 740.

## தேவன் அன்பானவர் என்று முழு அண்டசராசரமும் அறிவிக்கும்

மாபெரும் போராட்டம் முடிவடைந்தது. பாவமும் பாவிகளும் இனி ஒருபோதும் இருக்கமாட்டார்கள். அண்டசராசரம் முழுவதும் தூய்மையடைந்து விட்டது. பரந்து விரிந்த படைப்பு முழுவதிலும் ஒருமைப்பாடும், மகிழ்ச்சியும் நாடித்துடிப்புபோல ஒரே சீராக விளங்கும். எல்லையில்லா விண்வெளி எங்கும், சிருஷ்டி கர்த்தாவாகிய அவரிடமிருந்து, ஜீவனும் ஒளியும் மகிழ்ச்சியும் புறப்பட்டுப் பாய்ந்தோடும். மிக நுண்ணிய அணுவிலிருந்து மிகப்பிரமாண்டமான உலகம்வரை, உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்தும் தங்களது நிழலிடாத அழகிலும் பூரண மகிழ்ச்சியிலும் தேவன் அன்பாயிருக்கின்றார் என்பதைப் பறைசாற்றும்.—GC 678 (1911). ★

[1] எலன் உவைட் அவர்களுக்கு, புதிய பூமியையும் பரலோகத்தையும் குறித்து அளிக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள், நித்திய உண்மைகளின் வெளிப்பாடுகளாகும். பரலோக சம்பந்தமான காரியங்கள், மனுஷீகக் கருத்துக்களின் சொற்பாங்கின்மூலமாக அவர்களுக்கு (EGW) வெளிப்படுத்தப்பட்டது. நம்முடைய மனுஷீகத்தின் புரிந்துகொள்ளும் திறனும் மொழியும் வரையறுக்கப்பட்ட அளவோடு இருப்பதால், விவரமாக விளக்கப்பட்டுள்ள காட்சிகளின் உண்மையான தோற்றத்தை நம்மால் முழுமையாக அறிந்துகொள்ள முடியாது. “இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்” (1 கொரி. 13:12).